தமிழ்க் கல்வெட்டியல்

TAMIL EPIGRAPHY

A Four-Day International Conference

11th - 14th February 2026

PROCEEDINGS

Volume - II

Department of Archaeology

Government of Tamil Nadu

பன்னாட்டுக் கருத்தரங்கம்

தமிழ்க் கல்வெட்டியல்

ஆய்வுக் கட்டுரைகள்

International Conference

TAMIL EPIGRAPHY

Proceedings

Volume - II

Editors

K. Rajan
R. Sivanantham
V. P. Yathees Kumar
K. Bakialakshmi

Government of Tamil Nadu
Department of Archaeology
2026

Title

Tamil Epigraphy Volume I & II

First Edition : 2026

Publication No. : 376

No. of Copies : 1000

No. of Pages : 312

© Department of Archaeology
Government of Tamil Nadu

Editors

K. Rajan
R. Sivanantham
V.P. Yathees Kumar
K. Bakialakshmi

Published by

Department of Archaeology
Government of Tamil Nadu
Chennai – 600008

Book Designed by
M. Sakthivel, Department of Archaeology,
Government of Tamil Nadu

Printed by
Evershine Multipurpose Co-operative Society Ltd.,
32, Koya Arunagii 1st Street,
Royapettah,
Chennai- 600 014.

Price : Rs 750/- (Set of Two Books)

ISBN: 978-81-944246-4-2

The responsiblity for the facts stated or opinions expressed is entirely of the author(s)

THANGAM THENARASU

Honourable Minister for Finance,
Environment & Climate Change and Archaeology

Foreword

Inscriptions are always considered as a primary tool for understanding diverse facets of society. Among the Indian states, Tamil Nadu occupies a unique position due to the vastness of the epigraphical data, as the epigraphical data is on display without any chronological break since the 6th century BCE. This wealth of inscriptional data provides profound insights to draw and redraw the historical and cultural landscape of Tamil Nadu. Though the majority of inscriptions were issued by the rulers meant for dynastic imprints, the inscriptions illuminate various aspects of the contemporary society, such as local governance, political geography, land holding patterns, social stratification, technological progress, and various other facets of social and cultural development. Due to its non-invasive nature, the study of epigraphy remains one of the most trustworthy and authentic sources of historical writings, offering an unfiltered glimpse into the society of their time. It is learned that over one lakh inscriptions have been systematically documented across India, of which nearly two-third comes from South India. Among the southern states, Tamil Nadu has around thirty thousand inscriptions providing an unbroken chronological record from the 6th century BCE down to the Vijayanagara period. The content, context, palaeography, script and language echo the evolving socio-political and cultural realities of Tamil Nadu through the years.

Deciphering these inscriptions requires rigorous and scholarly efforts. The epigraphists of the Tamil Nadu State Department of Archaeology have played a pivotal role since its inception in extracting vital information from these inscriptions engraved on different media. The decisive and diversified training programmes and workshops targeting the school teachers enhanced the quality and quantity of the human resources that are reflected in discoveries and subsequent publications. These initiatives have led to the emergence of a dedicated community of epigraphists in Tamil Nadu, who have extensively explored the entire landscape, uncovering and deciphering inscriptions that were hitherto unnoticed or unstudied.

Their valuable efforts are being amplified and exchanged through sustained academic interactions. One such academic endeavour is to bring all the epigraphists on a single platform to interact with each other to get meaningful and resourceful interactions. Organizing a four-day International Conference on Tamil Epigraphy in Chennai is one such effort. I am so glad to learn that the conference attracted over fifty research papers, which are now being compiled and published as the Proceedings of Tamil Epigraphy.

I sincerely hope that this publication with new data and interpretation will prove to be a valuable resource for students and researchers worldwide. We eagerly envisage that such scholarly endeavours will foster sustained interest and active engagement in epigraphical studies, thereby contributing to a richer understanding of Tamil Nadu's illustrious history.

T. UDHAYACHANDRAN, I.A.S.,

Additional Chief Secretary to the Government of Tamil Nadu Finance Department and Commissioner of Archaeology

Foreword

The study of inscriptions of historical value has become an indispensable and irreplaceable discipline in Indian history. These epigraphs, engraved on temple walls, memorial stones, loose slabs, hydraulic devices, copper plates and other durable materials, offer vital historical insights into various dimensions of the society. The nature of political structures, social hierarchies, cultural practices, economic systems, linguistic evolution, and technological innovations is reflected in these lithic evidences. The inscriptions serve as a chronological record, reflecting the dynamic process of societal change and continuity. Tamil Nadu holds a distinguished and unparalleled position in terms of inscriptional evidences as the state boasts the highest number of inscriptions that provide anauthentic and reliable understanding of its historical evolution in a chronological sequence.The epigraphical records are considered as the expression of contemporary events and it remains without any interpolations since it engraved on a permanent material. The historians and epigraphists may differ in their interpretation, but the content and context of the inscription remain the same since its writing. They offer a genuine, unfiltered perspective on contemporary society.

The major part of Indian history has been reconstructed through analysis of these lithic evidences. The survival of epigraphical records with varied scripts, namely Tamili, Vatteluttu, Grantha and Tamil scripts in Tamil Nadu over the years demanded specialists capable of deciphering and interpreting the historical value of the records. Recognising their immense significance, the Tamil Nadu State Department of Archaeology has initiated various programmes in documenting, preserving, and publishing inscriptions for the benefit of scholars and the general public. The Department has organized several training programmes, workshops, conferences and brainstorming sessions as part of capacity-building exercises with a sole aim to increase the human resource with the necessary skills for accurate identification, recording, and interpretation of inscriptions. The continuous efforts put forth for

more than three decades met with visible changes on the ground. Several scholars emerged due to this sustained effort of the department. To maintain the momentum in a more focused way, the Department regularly organize seminars and conferences to exchange views among themselves to get meaningful and impactful results through constructive dialogue. The present four-day International Conference on Tamil Epigraphy is one such initiative. It is really heartening to see that the conference received over fifty research articles from scholars around the world, reflecting the global interest in Tamil epigraphy and its relevance to understanding regional and broader Indian history.

The scholarly papers presented at this conference, dealing with various aspects of Tamil Nadu history, have been compiled through the publication titled Proceedings of Tamil Epigraphy, and this will serve as an essential resource for the academic community and induce further research in the field of epigraphy.

.

About the Conference

Inscriptions serve as a crucial and datable primary source of historical information, particularly following the advent of writing systems. Inscriptions engraved on various materials, including stone surfaces, copper plates, wooden tablets, metal and ivory objects, ceramics, and sculptures, have been discovered throughout the Indian subcontinent. The undeciphered Indus script represents the earliest evidence of writing in the Indian subcontinent. Similarly, undeciphered graffiti marks constitute a significant early stage in the development of writing systems, particularly in South India. It was during the Colonial period that the significance of inscriptions in reconstructing the history of the Indian subcontinent was first recognised. The decipherment of the Brahmi script by James Prinsep in 1837, followed by the establishment of the Epigraphical Branch of the Archaeological Survey of India in 1886, marked significant milestones that facilitated the discovery and systematic study of inscriptional evidence across the Indian subcontinent.

The Tamil Nadu State Department of Archaeology was established in 1961, and since then, special attention has been paid to document and decipher historical documents and to date, several inscriptions have been copied and published in 57 volumes.

Numerous eminent Western and Indian scholars have made significant contributions to the field of Indian epigraphy. Through their cautious study and interpretation of inscriptions diverse perspectives on the historical development of the subcontinent have been recovered. These epigraphical records have been systematically documented, analysed, and preserved, thereby providing an invaluable foundation for ongoing and future historical research. In India, the earliest decipherable inscription is of the Tamili (Tamil-Brahmi) inscriptions datable to the 6th century BCE.

Furthermore, in the digital age, the preservation and documentation of inscriptions have advanced considerably through the adoption of technologies such as high-resolution imaging, photogrammetry, and 3D scanning, and the creation of digital archives, which enable easy accessibility and detailed analysis for future research. The past two years have witnessed another historical leap in information processing technologies. Artificial intelligence systems anchored in big data models have demonstrated explosive breakthroughs. The situation is compelling scholars to re-examine the methodology to be followed in future documentation and interpretation of historical documents.

To explore the critical role of epigraphy as a primary source for reconstructing the past, this seminar invites eminent scholars in the field to deliver lectures and share their expertise on this subject under any one of the proposed themes.

Themes

- Role of Inscriptions in the History of Tamil Nadu (Social, Political and Economic History)
- Material diversity in Epigraphic Evidence
- Evolution of Script in Tamil Nadu (Tamili, Vatteluttu and Grantha Scripts)
- Coins, and Copper Plates
- Hero Stones/Memorial Stone Inscriptions
- Script-Bearing Artefacts and Their Historical Significance
- Unearthing the Marginalised: Sub-altern Narratives in Inscriptions
- Recent advancements in Epigraphy: from recording to Digital archiving.
- Important Contributions of Scholars to Epigraphy
- Educational Institutions and Learning Traditions in Epigraphical Records
- Arts, Architecture, Astronomy, and festivals through inscriptions
- Traders and Trade Guild Inscriptions
- Weight, Measurements and Economic Standards
- Village Administration, Land Revenues and Water Management
- Multilingual records on the Tamil land and People

Preface

Epigraphy has played a significant role in advancing our understanding of the multifaceted aspects of contemporary society, including political, social, cultural, economic, linguistic, and technological dimensions. Inscriptions engraved on temple walls, hydraulic devices, memorial stones, pillars, and loose slabs over the centuries provide a comprehensive picture of societal evolution and transformation. The Tamil Nadu State occupies a distinguished position in this regard, with an abundance of inscriptions issued and engraved by both the state and its people, offering invaluable insights into its historical fabric.While many inscriptions were created at the behest of rulers, officials and by common men of elite nature, their in-depth analysis reveals much more than mere dynastic rule or political administration. These inscriptions serve as primary sources that shed light on local administration, territorial boundaries, methods of taxation, landholding patterns, societal hierarchy, religious practices, technological innovations and many more advancements. Due to its multifaceted nature, epigraphy remains one of the most authentic and reliable sources of historical data, as inscriptions are less vulnerable to interpolation or bias, thus providing a genuine reflection of contemporary societal realities.

In India, a significant portion of Indian history has been reconstructed through the study of inscriptions. Over one lakh inscriptions have been documented across India, with nearly two-thirds originating from South India. In Tamil Nadu alone, approximately thirty thousand inscriptions have been identified and documented, providing a continuous historical narrative from the 6th century BCE down to the colonial period, without any significant interruptions or interpolations. These inscriptions exhibit perceptible changes in content, context, script, and language, reflecting shifting socio-political and cultural landscapes of Tamil Nadu through the ages.

Understanding these social and cultural transformations demands intensive and critical analysis. Realising the historical significance of these primary sources, the Tamil Nadu State Department of Archaeology has played a crucial role in the systematic documentation and publication of inscriptions since its inception in 1961. The Department has organized numerous training programmes and workshops for school teachers aimed at equipping researchers with the skills necessary for the identification, documentation, and accurate interpretation of inscriptions. These initial initiatives have fostered the emergence of a new generation of dedicated epigraphists in Tamil Nadu, who have extensively explored the state's landscape, uncovering

and deciphering previously unnoticed inscriptions.Acknowledging the importance of these discoveries and their potential to deepen our historical understanding, the Tamil Nadu State Archaeology Department has initiated the task of creating a robust academic platform to facilitate meaningful discussion, dissemination, and sharing of epigraphical knowledge. This goal-oriented vision culminated in the organization of a four-day International Conference on Tamil Epigraphy at Chennai. We are pleased to note that the conference received over fifty research articles, which are now being published as the Proceedings of Tamil Epigraphy for the benefit of the academic community.

We sincerely hope that this publication will serve as a valuable resource for students, young researchers, and scholars worldwide. We believe that such efforts will inspire continued interest and engagement in epigraphical studies, ensuring that the rich cultural heritage engraved in permanent material continues to enlighten future generations and contribute to a deeper understanding of Tamil Nadu's glorious history.

Editors

K. Rajan
R. Sivanantham
V. P. Yathees Kumar
K. Bakialakshmi

Contents

Volume I

Page No

Foreward

About the Conference

Preface

1. From the Valley of the Kings to India: Indian Inscriptions in Egypt — 1
   Charlotte Schmid and Ingo Strauch
2. Social problems as revealed from Temple inscriptions of Tamil Nadu — 12
   G. Vijayavenugopal
3. Archaeology, Epigraphy, and Prehistoric Dravidian:A "Linguistic – Archaeological Perspective" — 17
   Appasamy Murugaiyan
4. Nomenclature – People, Language and Script — 31
   N. Marxiagandhi
5. பாண்டியன் சடையன்மாறன் கல்லுமடைக் கல்வெட்டுகள் — 42
   V. Vedachalam
6. பாண்டிய மன்னர்களின் மெய்க்கீர்த்திகள் – ஆய்வு — 54
   G. Pauldurai
7. Calligraphical Elements in Pallava Grantha Script — 71
   T. S. Ravishankar
8. Digital Tools and Their Application in the Analysis of Pallava Inscription — 82
   D. Dayalan
9. ஆவணச்சுவடிகளில் தொண்டை மண்டல கோட்டங்கள் நாடுகள் நத்தங்கள்-ஓர் ஆய்வு — 128
   G. Babu
10. சண்டேசுவரப் பெருவிலை ஆவணம்: தமிழக நிலவுடைமைச் சமூகத்தின் தொல்மரபு நீட்சி — 165
    G. Sasikala
11. Earliest Inscription from Gangaikondacholapuram Temple: A Historical Analysis — 181
    K. Bakialakshmi
12. Tamil Inscriptions in Karnataka state collected by mythic Society of India - A study — 193
    C. Santhalingam

13. Recent Epigraphical and Archaeological Discoveries in Nigarilicholamandalam (In and around Kolar and Chikballapur Region) 206
J. Veeramanikandan, R.N. Kumaran & N. Veeraraghavan

14. தென்னிந்திய நடுகற்கள் - ஓர் ஒப்பீட்டாய்வு 212
S. Krishnamoorthy

15. நடுகல்/ நினைவுக்கல் கல்வெட்டுகள் 248
P.G. Loganathan

16. சமணப்பள்ளிகளும் மூவேந்த எழுச்சியும் 256
R. Poongundran

17. Scripts of Faith and Space: Jainism, Society, and Early Urbanism in South India 265
V. Vinod and Sreehari K. Pillai

18. ஜகதாப்பில் புதிதாக கண்டறியப்பட்ட பௌத்தப்பள்ளிக் கல்வெட்டும் ஸ்தூபக் குறியீடும் 281
C. Govindaraj

19. Religious tolerance and harmony in the Tamil country as gleaned through epigraphs with special reference to Islam – An overview 289
J. Rajamohamad

20. கல்வெட்டுக்கள் - வரலாற்று ஆதாரங்கள் 295
K. Sridharan

21. கொங்கு நாட்டில் வீரகேரளர்களின் கல்வெட்டுகள் 304
R. Jegadeesan

22. அளவைகள் - கல்வெட்டின்வழிப் புலானாகும் தரவுகள் 324
R. Akila

Volume II

23. Studies in Metrological System of Medieval Tami Nadu (With special references from the Tamil epigraphs) 327
P. Balamurugan & D. Senthil Babu

24. கல்வெட்டுகளில் ‘கோள்’ 346
R. Anandhakumar

25. கல்வெட்டுகளில் நாள்காட்டி 365
M. Chandrakumari

26. தமிழ்நாட்டின் இடைக்காலத்து வரலாற்றில் நீர்ப்பாசனம் 370
K.R. Sankaran

27. சோழர் படைமுறையில் குடிபடை 386
Er. Komagan

28. கோயில் – நிலம்: கோயில்சார் சமூக உருவாக்கமும் சைவ நாயன்மார்களின் பங்களிப்பும் 396
Muthu V. Prakash

29. முப்பது வட்டத்து காணியுடைய சிவபிராமணர்கள் 413
M. Maruthupandian & D. Ananthy

30. புதுக்கோட்டைப் பகுதி கல்வெட்டுகளில் தெய்வப் பெயர்கள் 438
S. Rajagopal

31. பிரமதேயங்கள்- தோற்றம், வளர்ச்சி மற்றும் அவற்றின் தாக்கம் 464
S. Rajavelu

32. Land management and temple organisation in the Pūlāṅkuṟicci inscription 477
Valerie Gillet

33. இடைக்காலத் தமிழ்நாட்டில் நிலக்கிழார்களும் உழுகுடிகளும் 490
Y. Subbarayalu

34. கல்வெட்டுகளில் இடையர் சமூகம் 502
M. Bavani

35. நடுகல் கல்வெட்டுகள் : நாட்டு பிரிவுகளும் நாடாள்பவர்களும் 513
S. Balamurugan

36. சோழர் கல்வெட்டுக்களில் உழுகுடிகள் - ஒரு சிறப்பு கண்ணோட்டம் 521
A. Thulasendran

37. இலங்கையில் சோழர் கோயிற் பண்பாடு (பொலநறுவை வானவன் மாதேவி ஈஸ்வரத்துக் கல்வெட்டை ஆதாரமாகக் கொண்ட மீளாய்வு) 526
Vallipuram Maheswaran

38. சோழர்கால நீர்ப்பாசன கட்டமைப்பும் அதன் கல்வெட்டுகளும் 545
V.P. Yathees Kumar

39. நாகபட்டினமும் வணிகக் குழுக்களும் 554
P. Jayakumar

40. Merchants, Merchant Guilds and Trade Activities in Medieval Tamil Nadu 566
V. Selvakumar and R. Karthikeyan

41. தென்னக கடல் வர்த்தக நலன்கள் மற்றும் கலிங்கத்தின் மீதான அதன்தொடர் தாக்கம்: கார்வேலனின் கல்வெட்டு மூலம் தமிழ் அரசர்களின் புவிசார்அரசியல் ஆய்வு 580
Vignesh S

42. காசுகளிலும் கல்வெட்டுகளிலும் பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மன் விருதுப்பெயர்கள் (கி.பி.590-630) 587
Alakkudi Arumuga Seetharaman

43. கற்றளி செய்வித்தார் 596
P. Kaleeswaran

44. கொங்கு நாட்டுக் கல்வெட்டுளில் கூட்டமும் குலமும் 609
T. Subramaniyan

45. Ācārya Sundara Pāṇḍya 620
Padmavathy

Volume - II

Studies in Metrological System of Medieval Tami Nadu (With special references from the Tamil epigraphs)

P. Balamurugan
Asst. Epigraphist, ASI, Mysuru
archybala@gmail.com
D. Senthil Babu
Researcher,
IFP, Pondicherry
senthil.babu@ifpindia.org

Abstract

The measures played a vital role in the economic and cultural history of a society. It reflects the amount of items involved in the transactions, nature of economic activities and also the accumulation of wealth. This present study attempts to explain and analyze the various measures such as Linear, Land, Rods, Area Measure, Volume, Weight, Numerals, Symbols, and Time Measurement are found in the Tamil inscriptions between 8th century CE and 16th century CE. It is describing the distribution of Measuring terms and it variation throughout the ancient Tamil region particularly in Tondai mandalam, Chola mandalam and Pandya mandalam through the maps. Also it discusses the differences prevailed over the royal measures and local measures.

Measurement is essential in human society, particularly in the field of agriculture, trade and architecture. There are different kinds of measurements for linear, weight, volume, time and count before the metric system. History is not only reflecting the rulers of the dynasty and their chronology but also gives information about the usage of measures. The measurement details are mentioned in the inscription, copper plates and traveller accounts. The large numbers of artefacts and brick structures with specific sizes have been observed in numerous archaeological sites. The megalithic people also followed a certain measure in creating their burials. Several excavations conducted in Tamil Nadu met with a large number of brick structures with specific size as one observed in Arikamēḍu, Kāvēripūmpattinam, Kīḻaḍi etc., suggest that there was a standardized units of measurement prior to 8^{t}h century CE. The lack of sufficient data has limited us in exploring Early Historic period. The emergence of Pallavas and Pāṇḍyas in northern and southern Tamil Nadu respectively paved a way for the establishment of temples.

Tamil inscriptions register the donation of land, gold, silver, copper, pearls, money, ghee, oil, rice, millets, paddy and other consumable and non-consumable items

for the maintenance of the temple and other purposes. Generally, these gifted items were found with some measuring units to express its values. The ancient Tamiḻagam wasn't ruled by one kingdom. However, several rulers ruled the different cultural eco-zones. The measures are different according to these eco-zones. There were major differences prevailed over the royal and local measures. The local zones followed their own measure, with local material culture playing a major role in formulating it. The authority for transactions in society was based on the king's measure (Royal measure). The local measure always had to comply with it. Hence, in the Chōḻa period, it was mentioned in the inscription that while measuring the land, the local measure had to be compared with the royal measure. The study of measurement systems had been undertaken by several scholars in South India such as Venkaya and Hultzh (1892), Nilakanta sastri (1935), Subbarayalu (1981, 2012), Shanmugam (1987), Heitzman, James & Rajagopal (2004), Jagadish (2005), Karashima (2006), Selvakumar (2015, 2018), Santhi (2015, 2018) studied the measurement system and expressed their view on the nature of the system. This present study attempts to strengthen previous studies with additional inscriptional data to explain the different measuring units found in various Tamil inscriptions between 8th century CE and 16th century CE.

Linear and Land measure

The epigraphs refer that the land was measured in units known as vēli, mā, kāṇi, muntirikai. It proves that the government conducted systematic land surveys for the purpose of assessing yield or levying taxes on the land. The references to linear measurement in Tamil inscription are found in the Pallava and Pāṇḍya inscriptions from 7th-8th century CE, and later it also found in the Chōḻa inscription. The linear measures are comprised in units of *chāṇ, aḍi, muḻam* and *viral.* It varied from region to region and most of the land measurement rods (*kōl*) were found in the multiplication of span and foot. The rods are mentioned in the inscription as *nilamaḷavu-kōl* and *tiruvulakalanta-kōl, chāṇ-kōl, aḍi-kōl* (ARE. 232 of 1953 and 97 of 1926). It was differed in length as they were based on a human foot and span. The inscription records the length of the foot scale, *'aḍikōl'* ranges from 9 to *32 aḍi* and the span, *'chāṇ kōl'* ranges from 7.5 to 36 *chāṇ.* These scales were found with the name of the kings, name of villages, territories, deities, nature of the land, etc.

The measurement rods are engraved at several places on the rocks and temple walls in countryside. Periodically, it helps the people to use them as standards for ground survey in the fields (Selvakumar, 2015, p 346). A specific measuring rod was utilized

---

1. The field work was conducted by a research team under the leadership of Prof Y. Subbarayalu and Dr. Senthil Babu, from French institute of Pondicherry to check the actual length of ancient measuring rod mentioned in the inscription of Chola king Rajaraja I.

for land donations at Sīyamaṅgalam. It is difficult to understand how the measuring rod was used to measure the land according to inscription. In order to comprehend the function of this measuring rod, the land was remeasured by us using modern scale to reconstruct the ancient measuring rod (*nilam-aḷavukōl*) at Sīyamaṅgalam[1]. This rod was engraved on a rock southern side of the Tūṇaṇṭār temple. It was issued during the 19th regnal year of the Chōḻa king Rājarāja I (1004 C.E), mentions the grant of 1602 kuḻi land to the temple after purchasing it from the *ūrārs* of Sīyamaṅgalam by Veḷḷālaṉ kaṭampaṉ Veṇkāṭan from Nallūr-pudukkuḍi of Teṉkarai Tiruviḻundūrnāḍu in Chōḻa nāḍu. The purchased land was measured by the sixteen span rod engraved on the rock (SII, VII, no. 66). According to modern measure that scale length is 12 feet 10.5 inches (i.e., 3 meters 92 cm)[2]. Further, it records that the waste land was converted to a cultivable land and it was donated to the temple for lighting two perpetual lamps. The gifted land was irrigated through the newly created canal known as *Veṉkāṭaṉdēva-vāykkāl* from *Pallavāykkāl,* it contains a measure of 1 *kōl* breadth of 16 *chāṇ kōl.* A big lake called as *Pērēri* was situated adjacent to the temple. The epigraphs mentions about the sluice of this tank as *Pērunthūmbu* and *nandhimulāṉthūmbu.* At present, it is called as *nandhimulān-vāykkāl* and *peruvāykkāl.* The central sluice called as *peruvāykkāl* had sub-channels *Ambalathāṭivāykkāl* and *Pallavāykkāl.* Interestingly, both the names are still in use by the locals. It helped to measure the canal at suitable location. The inner surface of the canal measured 12 feet 9 inches and the outer surface 14 feet. Due to alternation of name over the period of time, our team was unable to locate the actual location of the donated land.

Measuring Rod

There are many references about measuring rods which are reffered in the inscriptions during medieval period in South India (Shanmugam, 1987; Subbarayalu 2001).The epigraphs described about that rods *(kōl)* were used to measure the lands. There were various types of scale used for the land survey in different regions and periods mentioned in the inscriptions. The earliest reference to *kōl* found in Tamil Nadu, was from an inscription of the Chōḻa king Parantaka I. The *kōl* (*kōl* in Tamil or *daṇḍa* in Sanskrit) was utilized to measure the land and define its boundaries in four directions. Also the Chōḻa king Rājarāja I has conducted the first systematic land survey. According to the inscriptions, it was called *Nilam aḷantu* and *Nilam naṭappittu.* The pre-rulers were aware of the fundamentals of land survey. One of the inscription of Rajendra Chōḻa I at Uttaravēdisvara temple in Kuttalam of Thanjavur district mentions a land survey made with the help of Ulagalandāṉ kōl (SII, XXIII, no. 487). Some time resurvey was also conducted,if needed. Another inscription records that

2. This measuring rod values 16 cāṇ according to the inscription. So, the rod was also measured with our hands to know whose measure is close to the scale length. The tallest of us, Ganesh's hand was the only one that measured exactly 16 span.

land was surveyed during the 16th regnal year of the Chōḻa king Kulōttuṅga III. It was evident that the resurvey was performed after two years to do the correction was made in the land survey (SII, XXVIII, no. 67).

The numerous names associated with measuring rods are mentioned in the Tamil inscription in different periods, ranging from 914 CE to 1500 CE (see table -1). Also the symbols of scale plus (+) or line marks are engraved on the temple walls and rock surfaces in Tamil Nadu. More than 270 references to measurement rods / scales have been identified in the inscription. Among them nearly 25 measuring rods are documented to understand the length of *kōl* in modern measures (Selvakumar, 2015: 345-356). These rods are in different sizes, range from 25 cm to 752 cm. The marking of the rods found in various localities in Tamil Nadu indicates a lack of accuracy. However the local people were using different types of rod/scale all over the country, till the arrival of the metric system.



The above diagram shows the period-wise occurrence of measuring rods from the inscriptions in Tamil Nadu. For study purposes it is divided into three periods; the first one is denoted from the Chōḻa king Parantaka I to pre Kulōttuṅga I (900 – 1070 CE). The second one is from Kulōttuṅga I to end of the Chōḻa's era including the other rulers in Tamil Nadu (1071-1300 CE). Third one is from the later Pāṇḍya, Vijayanagara and other local chiefs (1301-1600 CE). The line graph shows the system of kōl was more in practice in the period of 1000 to 1300 CE.

There are some references for the rods mentioned with numeric prefixes along with Chāṇ and Aḍi. The length of the rod such as 12 spans, 16 spans, 9 feet, 12 feet, 16 feet, 18 feet, 21 feet, 24 feet, and so on. According to the present available data (See table 2 and 3), the span *(Chāṇ)* measure was found in inscriptions from 9th century CE to 14th century CE. Meanwhile the foot *(Aḍi)* measure is widely found in inscriptions from 1071 CE onwards. As per the available inscriptions, there were some changes in measuring rods that occurred during the time of Kulōttuṅga I. It seems that the king introduced foot *(Aḍi)* measure instead of span *(Chāṇ)* measure. There are various types of span rods, among them 18 *Chāṇkōl* would be considered as the standard

measure as it was mostly available in all periods. In foot measures 12 *aḍi,* 14 *aḍi* and 18 *aḍi* were common as standard measures. The prominently used rod in this category is 12 feet, found throughout the Chōḻa region. The 14 feet rod was familiar in central and northern part of Tamil Nadu. The 18 feet rod was primarily in the Pāṇḍya region. The government showed some interest in measuring, standardizing and classifying the land uniformly using span or foot rods. Additionally they attempted to convert local measurements into government measures.

Table- 1 Inscriptions carrying the name of the rods

S.No.	Place	District	Name of Scale /Rod/Measurement	Period	Reference
1	Tiruvilakkudi	Thanjavur	Iru kōl	914	*SII*, XIX, no: 191
2	Uttaramallur	Chingleput	15 span, 7 ½ span	933	*SII*, VI, no: 292
3	Tirumalpuram	North Arcot	Ciriyaṟṟu kōl	972	*SII*, XXII(p.2), no: 328
4	Tirumalai	Chittoor (AP)	Kaḍigai kōl	973	*SII*, IV, no: 62,63
5	Anadanallur	Tiruchirappalli	Peruṅ kōl	992	*SII*, VIII, no: 660
6	Tennari	Chingleput	Veḷḷi kōl	996	*SII*, VII, no: 441
7	Irukkaiyur	Thanjavur	Paḻaṅ kōl	1000	*SII*, XXII(p.1), no: 27
8	Padi (Tiruvalidayam)	North Arcot	16 span	1000	*SII*, III, no: 181
9	Tiruvedikkudi	Thanjavur	10 span	1000	*SII*, V, no: 626
10	Tiruvorriyur	Chingleput	12 span, 16 span	1000	*SII*, XII, no: 105
11	Elavanasur	South Arcot	Pōṭaka kōl	1008	*SII*, XXII(p.1), no: 143
12	Jambai	South Arcot	Viḷantai kōl	1008	*SII*, XXII(p.1), no: 84
13	Tiruvadandai	Chingleput	16 span	1012	*SII*, XXXVI, no: 272
14	Tirumalpuram	North Arcot	Ulagaḷantāṉ kōl	1014	*SII*, XXII(p.2), no: 337
15	Tiruvallam	Chingleput	Chiṟṟampalakōl	1016	*SII*, III, no: 54
16	Tiruverumbur	Tiruchchirappalli	Mālikaikōl	1017	*SII*, XXXIV, no: 99
17	Virinchipuram	Vellore	16 span	1017	*SII*, I, no:127
18	Tiruvorriyur	Chingleput	16 span	1021	*SII*, XXXVIII, no: 127
19	Solapuram	North Arcot	16 span	1032	*SII*, XXXVIII, no: 344
20	Tiruvorriyur	Chingleput	16 span	1046	*SII*, XXXVIII, no: 220
21	Kuvam	Chingleput	Sripāta kōl	1055	*SII*, XXVI, no: 347
22	Srinivasanallur	Tiruchchirappalli	Paṇṭāra kōl	1070	*SII*, XVII, no: 660

23	Sivankudal	Chingleput	16 span	1071	*SII*, XXXVIII, no: 282
24	Nilakkottai	Madurai	Kaṭamai irukkum kōl	1092	*SII*, V, no: 301
25	Sholinghur	Chennai	Kal̲ani-aḷakkum kōl	1100	*SII*, V, no: 873
26	Takkolam	North Arcot	16 span	1100	*SII*, V, no: 1381
27	Tiruppanandal	Thanjavur	12 feet	1100	*SII*, XXXIV, no: 45
28	Tiruvallam	North Arcot	12 feet	1100	*SII*, VI, no: 435
29	Tiruchchunai	Madurai	Mālai kuḍi kōl	1100	*SII*, VIII, no: 409
30	Alangudi	Thanjavur	Ūr kō	1105	*SII*, VI, no: 440
31	Narasingapuram	Chingleput	16 span	1105	*SII*, XXXVI, no: 246
32	Srirangam	Tiruchchirappalli	Paḷḷikoṇṭān̲ kōl	1111	*SII*, XXIV, no: 92
33	Elavanasur	South Arcot	Vētiviṭaṅan̲ kōl	1117	*SII*, XXII, no: 164
34	Kovilangulam	Ramanathapuram	24 span	1118	*SII*, XXXIV, no: 397
35	Tiruvegavasal	Thanjavur	Nilamaḷavu kōl	1159	*SII*, XXII, no: 41
36	Alambakkam	Tiruchchirappalli	Man̲aikōl	1174	*SII*, XXVI, no: 779
37	Solamangalam	Chingleput	Kul̲i kōl	1192	*SII*, VII, no: 393
38	Tenkarai	Madurai	Ir̲ai-irukkum kōl, kaṭamai irukkum kōl	1200	*SII*, V, no: 293
39	Tirukkachchiyur	South Arcot	16 span	1200	*SII*, XII, no: 187
40	Tirumalavadi	Tiruchchirappalli	12 feet	1200	*SII*, V, no: 642
41	Tirunelvēli	Tirunelvēli	ūr-kaṭamai irukkum kōl	1200	*SII*, V, no: 432
42	Tirunelvēli	Tirunelvēli	Mēlvēmba-nāṭṭukōl, 18 feet (16 x 16 is equal to one ma)	1200	*SII,* V, no: 411
43	Tiruvennainallur	South Arcot	16 span	1200	*SII*, XII, no: 170
44	Tirunelvēli	Tirunelvēli	Ūraḷavu kō	1200	*SII*, V, no: 432
45	Aruppukkottai	Virudunagar	16 span	1205	*SII*, XXXIV, no: 414
46	Kunnandarkoyil	Pudukkottai	9 feet	1217	*SII*, XXXIV, no: 370
47	Tirupparankunram	Madurai	Malaikkuṭikōl	1223	*SII*, IV, no: 372
48	Srirangam	Tiruchchirappalli	Iḍaiyar kōl	1228	*SII*, XXIII, no: 160
49	Uttattur	Tiruchchirappalli	14 feet, 16 feet and Vilakkaḍikol	1232	*SII*, XXXVIII, no: 500, 501
50	Neyvasal	Pudukkottai	Kuṭitāṅki kōl	1235	*IPS, no.306*
51	Arumbavur	Tiruchchirappalli	Magadēsan̲ kōl	1239	*SII*, XXVIII, no: 1
52	Tirukoyilur	South Arcot	Tan̲i kōl	1243	*SII*, XXVIII, no: 863
53	Tiruvegavasal	Pudukkottai	Kāṭu aḷantān̲ kōl	1256	*IPS, no.480*
54	Tirunelvēli	Tirunelvēli	24feet, Sundarapāṇṭiyan̲kōl	1258	*SII*, V, no: 446

55	Tirunelvēli	Tirunelvēli	Vīrapāṇṭiyaṉkōl	1258	*SII*, V, no: 446
56	Chidambaram	Cuddalore	Chokkachiyaṉkōl	1261	*SII*, XII, no: 215
57	Murappanadu	Tirunelvēli	Kī̱l mēl aria kōl	1266	*SII*, XII, no: 435
58	Kudimiyanmalai	Pudukkottai	Nāṭṭukkōl	1271	*IPS, no.12*
59	Aruppukkottai	Virudunagar	16 feet	1286	*SII*, XXXIV, no: 410
60	Manimangalam	Chingleput	Nārāyaṇan Aḷavukōl	1300	*SII*, VI, no: 264
61	Peraiyur	Pudukkottai	Tirumaiyathu kōl	1300	*IPS, no.412*
62	Nagar	South Arcot	12 feet	1339	*SII*, XXXVI, no: 303
63	Nerumbur	Chingleput	Nāṭṭalavukōl	1347	*SII*, XXXVIII, no: 273
64	Tiruvadandai	Chingleput	Nāṭṭalavukōl	1356	SII, XXXVI, no: 287
65	Srirangam	Tiruchchirappalli	Tirunandavanam kōl	1300	*SII*, XXIV, no: 246
66	Tiruvengavasal	Pudukkottai	16 feet	1400	*SII*, XXXIV, no: 241
67	Gidangil	South Arcot	Maṉai aḷavu kōl	1418	*SII*, VIII, no: 856
68	Tiruvaiyaru	Thanjavur	18 feet	1428	*SII*, V, no: 554
69	Tenkasi	Tirunelvēli	21 feet, 24 feet	1462	*SII*, XXXVIII, no, 10
70	Srirangam	Tiruchchirappalli	Rājavipāṭaṉ kōl	1490	*SII*, XXIV, no: 349
71	Atti	North Arcot	18 feet	1526	*SII*, XXXVIII, no, 299
72	Srirangam	Tiruchchirappalli	Ulavaṉ kōl	1547	*SII*, XXIV, no: 462

Area Measure

A specific section or square area of the land was referred to as vēli, mā, kuḻi, kāṇi and muntirikai. Among these measurements, vēli is the largest unit, which is approximately equivalent to 2.68 hectares (6.6 acres) in modern scale (Venkatasami, 1883 pp. 315). The vēli comprised subdivisions including mā (1/20), half mā (1/40), kāṇi (1/80), half kāṇi (1/160), and muntiri (1/320), in addition to some fractions of kāl, arai, mukkāl. The measure muntiri is the basic unit when it is multiplied by half was kī̱l-arai (1/320 x ½). When muntiri multiplied by muntri was called as minor measure of kī̱l-kī̱l $(1/320)^2$ and next value was kī̱l-kī̱l-kī̱l $(1/320)^3$. Generally, a vēli consists of 2000 kuḻi and one mā is equivalent to 256 or 510 kuḻi, a kuḻi being a square of one rod (Subbarayalu, 2001, p.32). For example Sundarapāṇṭiyaṉkōl (24 feet rod), one kuḻi consists of 576 sq.ft. (24x24=576 sq.ft) and mā is equivalent to 147456 sq.ft (576x256= 147456 sq.ft. or 3.38 acre/1.36 ha (SII, V, no: 446). A 12th century CE inscription at Ulagalanda-Perumal temple in Kanchipuram refers the measurement details which were associated with certain plots of land. The length of 16-span rod (chāṇ kōl) was used to measure land in the Kanchipuram region. It was

carefully studied by James Heitzman and Rajagopal to reconstruct the measurement method and historical perspective (Heitzman, James & Rajagopal 2004: 237-268). The above inscription mentions a vēli measure was equal to 10000 kuḻi of land, which was measured by of 16-span rod in modern scale as 9.1 meters. It seems that the measure of this rod equalled to 83 hectares and therefore the usual reckoning of a vēli as equivalent to 2.68 hectares. Subbarayalu suggests that 9.1 metres must be a local rod used by the locals, therefore the vēli of 83 hectares must be a local area measure. If the vēli is reckoned as that of 2000 kuḻi, it becomes equivalent to just 16.6 hectares (Subbarayalu, 2012: 77-91).

Some inscriptions mention larger areas too. The karandai copper plate of Rājēndra chōḻa I mentions about the formation of a brahmadēya settlement by clubbing with 51 old villages of varying sizes (Krishnan, 1984). Another Chōḻa inscription of Rājādhirāja I found at òlaṅguḍi in Thanjavur district, mentions that the land extent of that brāhmin village was 4126 vēli (SII, VI, no: 438). Another inscription of the Vijayanagara ruler Achyutadēvamaharāya states that 2000 vēli of land was gifted in the village Paṉaithāṅgal in Cheṅkāṭṭu-kōṭṭam for the merit of the king (SII, XXXVI, no: 256).

Table 2: Span Measures for Linear

Period	7 ½ *chāṇ*	10 *chāṇ*	12 *chāṇ*	15 *chāṇ*	16 *chāṇ*	18 *chāṇ*	24 *chāṇ*	36 *chāṇ*
800-985	1			1				
986-1070		1	1		19	2	1	
1071-1350			3		17		1	1
1351-1600								
Total	**1**	**1**	**4**	**1**	**36**	**2**	**2**	**1**
District								
Chingleput	1		3	1	20	2		1
Ramnad					2		2	
N.Arcot			1		6			
Thanjavur		1			1			
S.Arcot					8			

The other terms of measuring units referred in the inscriptions are chey (vēli), taḍi, paṭṭi, pāṭakam and cheṟuvu. The pallava inscription of Nandivarman II (731-796 CE), found at Pilavanēsvarar temple in Thiruvaigāvūr of Thanjavur district, is considered to be the oldest inscription and it refers the word 'vēli' as land measure in Chōḻa region (SII, XXXIV, no. 48). Though the measure of paṭṭi and pāṭakam were popular in Toṇḍaimaṇḍalam, vēli was prevalently used during the Chōḻa reign. Consequently, the Chōḻa's tried to establish a unified metrological system, particularly

during the reign of Rājarāja-I. They controlled the entire landscape of Tamil Nadu and other regions in South India. A significant step was taken by Rājarāja-I to measure the land for tax assessment. In addition to the local measurements, they implemented royal measurements. The inscription of Rājarāja I at Guḍimallam, records that an area of 1000 kuḻi was equal to 1 paṭṭi of land as well as mentions 50 kuḻi was equal to 1 mā of land which was measured by 16 chāṇkōl (SII, XXII, no. 283). In case of pāṭakam, 1 vēli is equal to 6 pāṭakam (SII, VII, no. 402). In Pāṇḍya maṇḍalam, the measure vēli was in use during the reign of Chōḻa king Parantaka I. Prior to that, mā and kāṉi were considered as largest area measures in the Pāṇḍya region.

Table 3: Feet Measures for Linear

Period	**12 *aḍi***	**14 *aḍi***	**16 *aḍi***	**18 *aḍi***	**21 *aḍi***	**22 *aḍi***	**24 *aḍi***	**32 *aḍi***
800-985								
986-1070								
1071-1350	9	4	5	3		1	2	
1351-1600	1	2	2	3	2	1	2	1
Total	**10**	**6**	**7**	**6**	**2**	**2**	**4**	**1**
District								
N.Arcot	1		1	2				
Chingleput	3		1					1
Ramnad	1	1	3	1				
S.Arcot	2	4						
Coimbatore						1		
Madurai				1				
Trichy	1	1	1			1		
Tirunelvēli				1	2		1	
Salem							1	
Pudukkottai			2					
Thanjavur	2		1	1				

The land was measured on a different scale by the local bodies (sabha), temple, and the rulers. So the length of the scales differed accordingly. This difference impacted the measurement of the land. For example, in 1217 CE, while donating paddy which measured 10 nāḻi rice, 256 kuḻi of land measured by 9 feet scale was donated to a temple (SII, XXXIV, 370). So, the yield of this measured land (10 nāḻi) would be donated to the temple. If the land was measured with different scale, then there is a difference in measure of the yield and size of the land. For instance, if 16 feet scale was used to measure the above said land then the size of the land would be reduced and the measure of the yield was calculated accordingly. As said earlier, the measure of the land differs according to the scale used to calculate it. 256 kuḻi of land equals one mā is a common calculation according to the registers. However, this differs based on the scale in which the land was measured.

The following table are giving the details of kuḻi with their equivalent values.

Unit	Equivalent Unit	Rod/Scale	Dynasty/ King	Date/ CE	Reference
256 *kuḻi*	1 *mā*	Vilantaikōl	Rājarāja I	1007	*SII*, VII, no:142
1000 *kuḻi*	1*Paṭṭi*	16 span	Rājēndra chōḻa I	1012	*SII*, XXXVI, no: 272
2000 *kuḻi*	1*vēli*	16 span	Kulōttuṅga Chōḻa I	1072	*SII*, XXXVIII, no: 131
128 *kuḻi*	1 *mā*	16 feet		1100	*SII*, VI, no:439
100 *kuḻi*	1 *mā*	12 feet	Kulōttuṅga Chōḻa I	1100	*SII*, V, no: 702
512 *kuḻi*	1 *mā*	14 feet		1150	*Avanam*. 30 – 62:16
510 *kuḻi*	1*mā*	…	Rājarāja Chōḻa II	1177	*SII*, XXXVIII, no: 428
522 *kuḻi*	1*mā*		Rājēndra Chōḻa III	1217	*SII*, XXXVIII, no: 425
256 *kuḻi*	1*mā*	9 feet	Kulōttuṅga Chōḻa III	1217	*SII*, XXXIV, no: 370
160 *kuḻi*	1*mā*	…	Rājarāja Chōḻa III	1238	*SII*, XXXIV, no: 160
512 *kuḻi*	1*mā*	Chaturakōl (Square rod)	Kōpperusinga dēva	1267	*SII*, XII, no: 228
256 *kuḻi*	1*mā*		Vīrapāṇḍya	1276	*SII*, XXXIV, no: 237
256 *kuḻi*	1*mā*	16 feet	Kulasēkara pāṇḍya	1286	*SII*, XXXIV, no: 410
562 *kuḻi*	*1 mā*	18 feet		1400	Avanam. 12-20:6
256 *kuḻi*	1*mā*	24 feet	Nayakka	1504	*SII*, XXXVI, no: 168

It is difficult to balance the varying levels of practices in land measurement. These varying sizes of land measurements could not impact the locals. But it would create problems and confusion for the government while fixing and collecting taxes from the villagers. Therefore, the Chōḻa government attempted to standardize the measures for fixing the taxes based on the grade of land. For that, they tried to use government measure as well as the local measure (Subbarayalu 2012 p. 72-79). At the same time the government did not change the use of local measures. The government fixed the tax rate and collected it by comparing with local measure. In most of the places, taxes were levied based on the productivity of crops by using local measurements. For the purpose of taxation, local measures were calculated and compared with government measure. After that it was registered in government register (Pottakam). For this, they followed the method of Taram (grade of land) and maḍakku (fold). More than 50 inscriptions have been found and mentions about Taram and maḍakku in Tamil Nadu (see map 2). It shows that during the medieval time, especially the Chōḻa government attempted to standardize the land measurement.

Taram and Maḍakku

The term parappu was an ordinary land. It was divided and classified according to its resource or yielding crops. The classification of land was called as taram (grade). The land was divided according to a specific grade, actual size of the land folded measure was called as maḍakku. Based on this folded (maḍakku), land taxes were levied by the government. Generally, the government took steps to classify land grades according to the fertility of soil, irrigation facilities, wet land and yielding crops in the field. In Tamil inscription the first grade was known as 'muthal-taram' and the last grade as 'kaṭait-taram' (SII vol. V, no.489 and SII vol. VII, no.796). It is appeared in the inscriptions from 1 to 20 taram (SII vol. IV, no.508). But only few references are mentioned about the classification of land grades and difference of valuation between each grade. However, we could understand the difference between high and low grade (taram) as per the available inscriptional evidence. The graded land was known as tarampe<u>rr</u>a-nilam and ungraded land as tarami<u>l</u>i-nilam. Taram and maḍakku systems seem to be found only in wet land and Brahmadēya settlements, particularly in the agricultural field of three or two crops yielded land, per year.

The emergence of maḍakku system of land valuation and taxation were available in the inscription from 983 CE during the reign of Uttamachō<u>l</u>a. It is found at Tirukkarugavūr, in Thanjavur district records the two pieces of land belonging to a temple for the purpose of livelihood of temple servants. The total amount of land is one vēli three mā three kāṇi, out of this one mākāṇi land was given to the singers and taxed in terms of maḍakku (varipaṭi maḍakki) (SII vol. XIX, no. 326). The Chō<u>l</u>a king Rājādhirāja I, inscription from Tirumalapāḍi in Tiruchirappalli district, mentions that when the land was folded after the grading for levying tax, while the conversion to maḍakku land that 2 ¾ vēli and fractions measure was shrunk to 9 mā and minor measures of land. However, this inscription does not mention on which type of grade that land was converted to fold (maḍakku) measure.

"நிலம் இரண்டெய் முக்காலே ஒருமாவரைக்காணி முந்திரிகைக் கீழ் முக்கால் இது தரமிட்டு மடக்கி நிலம் ஒன்பதுமா அரைக்காணி முந்திரிகைக் கீழ் முக்காலே மும்மாவரை அரைக்காணியினால் செம்பாதியால் நிலம் நாந்மாவரை முந்திரிகைக் கீழ் முக்காலே நான்குமாக்காணி முந்திரிகையினால் பெருவரி எப்பேர்பட்டினதும்"

Volume Measure

A capacity of measure is known as volume. The volume measure was widely used across Tamil spoken region irrespective of the state of the people and the ruler. It can be divided into two parts as grain measure and liquid measure (mukattalaḷavai).

The inscription refers to the capacity of paddy grains. In ancient days, paddy was considered as money for exchanging commodities and taxes were paid to government. The standard unit of grain measure was kalam. Thus, cheviṭu was the lowest unit of a kalam. In inscription most of the gifts were donated with the measure of nāḻi and paḍi. Therefore, nāḻi was considered a standard measurement for oil and other liquids. The units of volumetric measure which were referred in inscriptions viz., kalam, tūṇi, kāṭi, patakku, kuṟuṇi, marakkāl, nāḻi or paḍi, uri, uḻakku, āḻākku and cheviṭu.

360 of paddies	= 1 cheviṭu
5 cheviṭu	= 1 āḻākku
2 āḻākku	= 1 uḻakku
2 uḻakku	= 1 uri
2 uri	= 1 nāḻi
8 nāḻi (paḍi)	= 1 kuṟuṇi or marakkāl
2 kuṟuṇi or marakkāl	= 1 padakku
2 padakku	= 1 tūṇi (kāṭi)
3 tūṇi	= 1 kalam

Kalam is the highest measure among the grain measures. It is used to measure paddy, salt, pepper and other dry grain items. An inscription at Alangudi in Thanjavur district during the reign of the Chōḻa king Rājādhirāja I, records the measure of 200333 (Two lakhs three hundred and thirty three) kalam of paddy from the 4126 vēli of land. It is the largest number of kalam referred to in the inscriptions in Tamil Nadu (SII, VI, no: 438). The term pothi was also considered as grain measure in the Pāṇḍya region. An inscription of Jatavarman Sundrapāṇḍya at Sinnamannur in Madurai district mentions that the measure of betel nut, rice and pepper was measured in Pothi.

Kāṭi is another volumetric measure noticed in inscriptions. The measure Kāṭi is frequently found in the Pallava region from 700 to 1000 CE. The measure of tūṇi was the equivalent to kāṭi. The earliest reference of this measure was registered in the Pallava inscription of 750 CE, registers an agreement made by the Gana of Payinūr to remove the silt annually from the big tank in the village for the interest on 6400 Kāṭi of paddy received by the standard scale of poṟkāl (SII, XII, no. 34).

Marakkāl, which is found in the inscriptions along with the royal name, temple name or place name as prefixed like òḍavallāṉ marakkāl, Sembiyaṉmādēvi marakkāl, Rājarāja siṅgaṉ marakkāl, Paḷḷikoṇṭāṉ marakkāl, Paṇṭāra marakkāl etc. Actually, one marakkāl is equal to 8 nāḻi. An inscription of Rājarāja I at Brihadesvara temple in

Thanjavur mentions paddy was measured by the òḍavallāṉ marakkāl, it is equal to the measure of Rājakēsari (SII, II, no. 67). Another inscription of the Pāṇḍya king Jaṭavarmaṉ Sundarachōḻa Pāṇḍya at Maṇṇārkōvil in Tirunelvēli district, records Aṉṉavarataṇaṉ marakkāl was used to measure paddy in the temple (SII, XIV, pp.81-82).

Kōṭṭai is the biggest measure noticed in the inscriptions after 14th century CE in Tamil Nadu. At Tenkasi, Visvanathasvamin temple inscription of Parakrama Pāṇḍya (1461CE) records about fixing certain rates and collection of taxes on various services from the granted lands at the rate of half a kōṭṭai per mā crop (SII, XXXVIII, no:13).

The supply of liquid items ghee, oil, milk and others to the temple are given by the devotees. It is measured by the measures such as nāḻi, uri, uḻakku, āḻākku. The measure nāḻi is mentioned as paḍi in some places. There are different kinds of nāḻi, which are named as narasa nāḻi, kana nāḻi, sūla nāḻi, paṇṭāra nāḻi, dēvar nāḻi. Uri is also a liquid measure, which is used to measure the items such as ghee, oil as well as other dry items. It is twice that of uḻakku. These practices are known from the epigraphs from 8th century CE.

Weight Measure

The weight measures are classified as kaḻañju, mañjāṭi, kuṉṟi, mā, palam and kaisu. It was used to weigh gold and other objects. In the early days the measure kaḻañju is the standard measure for weighing and sometimes this term was used as money (kāsu). The weight of a kaḻañju consists of twenty mañjāṭi, one mañjāṭi of two kuṉṟi and one kuṉṟi weight about two grains. One palam of two mañjāṭi, a kaisu was equal to one-fourth of a palam (SII, II, p.408). It seems that the measuring tools were mostly controlled by the rulers, trading community and temples. The weight measuring stones are called as kal, found along with the title of king, name of the god and place in the inscriptions. The earliest historical reference about the measure 'poṟkāl' was used from the 8th century CE was mentioned in the Pallava inscription (SII, IV,no: 131). The Chōḻa inscriptions of the king Rājarāja I at Thanjavur, mention the details of gifted ornaments, while each of the gifts is stated to have been weighed by 'the stone called 'Āṭavallāṉ' (SII, II, no: 1). This was evidently a standard weight for gold, or a set of such weights made of stone and preserved at the shrine of the god Āṭavallāṉ, who was also called as Dakshina-mēruviṭaṅkaṉ. Also the weight measurement unit of kaḻañju and mañjāṭi were used to measure pearls by the merchants. An 11th century CE inscription mentions the measure of 37 pearls as weight of 8 mañjāṭi (SII, II, no:43). A Chōḻa inscription from Kilappaluvur in Tiruchchirapalli district mentions a pot known as kalasapāṉai which weighed 70 niṟai by the measure of cheruviṭai. The Varaguna Pāṇḍya (862 CE) inscription at Ayyampalayam in Madurai district, refers

about a weight measure known as kāṇam, which might be considered as the next measure of mañjāṭi. Kāṇam as a weight measure was found only in the Pāṇḍya region (SII, 14, no, 22). In other areas, term kāṇam was used to denote coins. Thus, a detailed study of various units of weights will help us to understand the economic growth that happened during a particular period and region. There were various scales used by the rulers and differed according to the trading community. The traders followed unique calculation for specific commodity such as pearl. The trading community in a particular village followed a common scale named after that village, nakara kal, ūrāṭu kal, pāṭi kal, ta̱namakaṭṭaḷai kal etc., the scale bears names of the temples or religious means paṇṭāra kal, tiruveḷḷa̱rai kal, takṣiṇamēruviṭaṅka̱n kal etc., the scale bears names of the ruler viṭēlviṭuku kal.

An 8th century CE inscription of Nrupathuṅgavarma̱n found at Tirumukkūḍal in Chingleput district, records that the grant of 30 ka̱lañju of gold by a person for burning a perpetual lamp in the temple. The measure ku̱ṉri is found in the inscription of upper rockcut cave at Trichchirapalli, belongs to the Pāṇḍya king Varaguṇa I dated to his 4th regnal year, records the gift of 537 ka̱lañju of gold to the god. Ku̱ṉri and Palam is a fraction of ka̱lañju measure. There are some of the terms used to denote the weight as well as money such as tulai ni̱rai po̱n, māḍai, tulai ni̱rai kāsu. The term tulai-ni̱rai-po̱n means gold is being punctured (hole) at the centre. Māḍai (gold coins) were used for payments. It is equated to weight of a ka̱lañju. One of the inscriptions of Rajēndra II, mentions that 1 māḍai is equal to 18 ka̱lañju. There are several types of māḍai noticed in the inscriptions such as Gaṇṭakōpāla̱n māḍai, palam puḷḷi māḍai, Bhajabāla̱n māḍai etc.

Tamil Numbers and Symbols

Tamil inscriptions mention numerals and different kind of symbols. These numbers are specified in certain pattern of separate symbols such as 1 to 10 (௧, ௨, ௩, ௪, ௫, ௬, ௭, ௮, ௯, ௰), 100 (௱) and 1000 (௲). Thousand is the highest figure in Tamil epigraphs. Sometimes, symbol of numerals appear along with the text to avoid the error in understanding and interpretation. The numerous fractions were also frequently found in the Tamil inscriptions. The terms in tamil like mukkāl, arai, kāl, araikkāl, araiyē-araikkāl etc. The below table shows different fractions and their symbols identified with their specifications in the tamil inscriptions.

Symbols	Meaning	Symbols	Meaning	Symbols	Meaning
	kalam	க , †	1 one		kīḻ (fraction)
	kalam		Vēli		Ghee (நெய்)
	marakkāl		Mukkāl (¾)		Food offerings (அமுது)
	āḻākku		Aria (½)		Vaṭṭi
	nāḻi		kāl (¼)		Paddy (நெல்)
	2 nāḻi		4 mā (4/20)		Ghee offerings (நெய்யமுது)
	uḻakkū		3 mā (3/20)		Poṉ
	uri		2 mā (2/20)		Nelleṇṇai
Symbols for weight measures			1 mā 1/20		vīsam
	kaḻañju		½ mā		Kōṭṭai
	palam		kāṇi (1/80)		Rice (அரிசி)
Symbols for dates			mukkāṇi		Paṇam
	Year (வருஷம்)		araikkāṇi (1/160)		Paṇam
	Year (யாண்டு)		kāṇi- mukkāṇi		Paṇam
	8 year (எட்டாவது வருஷம்)		araiyēaraikkaṇi		Paṇam
	month		araiyē		Land (நிலம்)
	month		Muntirikai (1/320)		
	Date (தியதி)		kuḻi		

Time Measurement

In Tamil, time is called as nāligai and in other areas it is called as ghaḍika. A ghaḍika is equal to 24 minutes of English time, and palas or vināḍis are equal to 24 seconds of standard atomic time (Swamykannu pillai, 1922). The Solar and Lunar systems are the two calendar systems used in India. The solar system is followed by Tamil, Malayalam, Oriya and Bengal while others adhere to the lunar calendar. In the inscriptions time was measured by day and night, sun and moon, seasons, eclipses, dates (tithis) and stars (nakshatra). Furthermore, it pertains to the eras and cyclic years. There are several eras mentioned in the tamil inscriptions such as Kali, Saka, Kollam and others. The names of solar cyclic years (Prabhava, Vibhava, Sukla etc.,) are quoted before the tamil month. The cyclic years (Viyaḻavaṭṭam) are repeated once in sixty years. The month named in Sanskrit as well as tamil, Mēsha = Chittirai, Rishabha = Vaikāsi, Mithuna = òṇi etc., are quoted in the tamil inscriptions. Days of the solar month are 30 or 31 days, is not same every year. The duration of 15 days are called as paksa (amavasya or pournami). The days count from amavasya to paurnamai is pūrva paksa (sukla) and days from pournami to amavasya are apara paksha or Krishna (bahula). The entire duration of two paksa is considered as one month (15 x 2 = 30 days).

The occurrences of time (year, month, and days) are discussed above and the duration of lighting the lamp in the temple and time measure of water flowing to the agricultural land is mentioned in the tamil inscriptions. Inscriptions record numerous donations made to temples during the medieval period, while offerings made on specific days are described as kālai, ciṟukālai sandhi, uchiyam polutu, andhi, iravu etc., also it refers crop seasons of kār and pasanam. Some of the record states that the gifted lamp should be lit continuously day and night (iravum-pakalum). The term 'nāligai' is found in the inscription after 10th century CE. It was calculated using water flowing from the irrigation tank to agricultural field which is common in the Pudukkottai region. A 13th century CE, Pāṇḍya king Sundarapāṇḍya inscription from Neyvāsal in Pudukkottai district, mentions the time of 60 nāligai, records the usage of water in agricultural field, received from the sluice of the irrigation tank. Another inscription from Pāmbūr from the same district mentions the distribution of tank water that could flow 6 nāligai (2 hours and 24 minutes) to the fields (IPS no.479). Time measurement was a crucial part of day to day human activities. There are plenty of sources available in inscriptions and literature.

Conclusions

The epigraphs played an important role in providing information about the revenue systems during the historical period. The measures played a vital role in the

economic and cultural history of a society. It reflects the amount of items involved in the transactions, nature of economic activities and also the accumulation of wealth. The basic units of actual measurements are varied from region to region. The occurrence of different types of scales throughout the state is an interesting fact. These measurements were created for the purpose of revenue collection to the government. The value of land was calculated by using the measuring rods. To measure land by using the scale is a painstaking and time consuming job. Therefore they might have followed some formulae to measure the larger size. The Chō̱las introduced new method of calculation, it seems that productivity of land was (grades of standard) taxed through the maḍakku system. So that the graded land which was folded and converted into government measures for fixing taxes throughout the Chō̱la territories and other region found from the 10th century CE inscriptions. However, there was no attempt to introduce a uniform type of measuring system all over the territory in the medieval period. But there was a limited attempt to standardize the measuring rods during the reign of Rājarāja I and other successive rulers. Thus, the limited sources restrict our understanding about the units of measurement. However, the available data clearly suggests the prevailing measuring system and its regional and chronological variations. History needs to be restudied based on the differences in the measures prevalent in the society.

References

ARE. 232 of 1953

ARE. 97 of 1926

Avanam. 12-20:6

Avanam. 30 – 62:16

Heitzman, James & Rajagopal, S., 2004, "Urban geography and land measurement in the 12th Century: the case of Kanchipuram. The Indian economic & social history review

IPS no.479

IPS, no.12

Jagadish, 2005, Measurement System in Karnataka (A.D. 325 to 1700), Directorate of Archaeology and Museums, Bangalore.

Karashima, N., 2006, KAI in the Description of Land-extent in Chō̱la Inscriptions: Effort to Build a Centralized State by Rajaraja I, AdhAram, Vol. I, pp. 45-48

Nilakanta Sastri, K.A., 1935, The Colas, University of Madras.

Santhi, T., 2018, 'Weight and measure from Tamil epigraphs – A mathematical approch', Ph.D thesis, submitted to Sri, Chandrasekharaendra Sraraswathi Viswa Maha Vidyalaya, Enathur Kanchipuram.

Santhi, T., 2023 "A Mathematical overview of the Measuring rods of Tamils that are inscribed in the temple walls", Pranav Journal of Fine Arts (A peer reviewed Quarterly Online Journal) Spl-Vol. 2, issues 2, pp. 497-502.

Selvakumar,V., 2015, “Metrological Traditions of South India”, Indian Journal of History of Science, 50.2, pp. 345-356.

Selvakumar,V., 2018, “Measuring and Ordering the Space: Linear Measurement Rods (Kol) of Medieval Tamil Nadu”, History Today No. 19,New Delhi, pp.154-160.

Shanmugam, P., 1987, The Revenue System of the Chōḻas 850-1279, New Era Publications, Chennai, p.73.

SII vol. IV, no.508

SII vol. V, no.489

SII vol. VII, no.796

SII vol. XIX, no. 326

SII XXVI:507

SII XXXIV:370

SII, XXIII, no. 487

SII, II, no. 67

SII, II, no: 1

SII, II, p.408

SII, V, no: 446

SII, VI, no: 438

SII, VI, no: 438

SII, VII, no. 402

SII, VII, no. 66

SII, XII, no. 34

SII, XIV, pp.81-82

SII, XXII, no. 283

SII, XXVIII, no. 67

SII, XXXIV, 370

SII, XXXIV, no. 48

SII, XXXVI, no: 256

SII, XXXVIII, no:13

Subbarayalu, Y., 2001, “Land Measurement in Medieval Tamil Nadu”, Studies in Chōḻa History, Panpattu Veliyittagam, Madras, p.32

Subbarayalu, Y., 2012. South India under the Chōḻas, Oxford University, New Delhi

Swamykannu pillai, 1922, An Indian Ephemeris, vol. 1, Agam Prakahsan, Delhi. twelfth century: The case of Kanchipuram”, Indian Economic and Social History Review. 41. P.237-268.

Venkatasami, T., 1883 , Row- A manual of the District of Tanjaore in the Madras Presidency, pp. 315

Venkaya, V., and E. Hultzh., 1892 Introduction, SII, Vol. II, Parts I and II, Archaeological Survey of India, Madras, pp. 1-41

கல்வெட்டுகளில் "கோள்"

இரா. ஆனந்தகுமார்
கௌரவ உதவிப் பேராசிரியர்
கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

சுருக்கம்

மனிதச் சமூகத்தின் பண்பாட்டு வரலாற்றை ஆராயும் கூறுகளுள் மொழியும் ஒன்றாகும். பொதுவாக பண்பாட்டு ஆராய்ச்சியில் மொழியும் அதிலுள்ளபயன்பாட்டுச்சொற்களையும் ஆராய்வது மிக இன்றியமையாததாகும். அவ்வகையில் ஒவ்வொரு மொழிக் குடும்பத்திலுமுள்ள சொற்களுக்கும் அச்சொல்லுக்குரிய வேர்ச்சொல், பயன்பாடு, பொருள் ஆகியவற்றினை அத்துறைசார் ஆய்வறிஞர்கள் ஆராய்ந்து வருகின்றனர். இப்பயன்பாட்டுச் சொற்கள் குறித்த ஆய்வுகள் மொழியியல், மானுடவியல், தொல்லியல் ஆகியத் துறைகளில் மேற்கொள்ளப்பெறும் மனிதவியல் சார் ஆய்வுகளில் முக்கியப் பங்காற்றி வருகின்றன. அவ்வகையில் தமிழ் மொழியில் 'கொள்' எனும் வேர்ச்சொல்லைக் கொண்டு 'கோள்' என்னும் சொல்லாக மருவி பல சொற்களுக்கு பின்னொட்டாகப் பயின்று வரும் சொற்கள் பேச்சு மொழி, மக்கள் வழக்காறுகள், இலக்கியங்கள், கல்வெட்டுகள், செப்பேடுகள் என பல ஆவணங்களில் பயின்று வந்துள்ளன. அவற்றுள் சில சொற்கள் கல்வெட்டுகளில் இருந்து ஆராய்ந்து விளக்கப்படுகிறது. இவ்வாய்வின் நோக்கமாக 'கொள்' எனும் வேர்ச் சொல்லினையுடைய 'கோள்' என்றசொல் செவ்வியல் இலக்கியங்களில் காணப்படுவதைப் போன்று பிற ஆவணங்களான கல்வெட்டுகள் மற்றும் செப்பேடுகள் ஆகியவற்றில் இச்சொல் ஆளப்பட்டு வந்தாலும் அச்சொல் 'கோள்' எனும் சொல்லாக பெரும்பாலும் அமையப் பெறவில்லை. மாறாக 'கொள்' எனும் வேர்ச்சொல்லைத் தழுவியும், கோள், கொள்ள, கொள, கொளல், கொள்ளீ, கொள்ளல், கொண்ட ஆகியப் பதத்தில் சுட்டப்பட்டுள்ள தென்பது இங்கு நோக்கததக்கதாகும். இவ்வாறாக ஆவணங்களில் இடம் பெற்ற 'கோள்' எனும் சொல் செவ்வியல் இலக்கியங்கள் உள்ளிட்ட பிற ஆவணங்களில் பயின்று வருவதை கருப்பொருளாகக் கொண்டு அச்சொல்லுக் குரியப்பொருள் காலந்தோறும் தேடப்பட்டு அவற்றிற்கான பொருள் ஒத்ததன்மையுடையதாய் உள்ளதா அல்லது மாறுபட்டவையாக உள்ளதா என்பதை அறியும் நோக்குடன் கோள் என்னும் சொல் ஆரயப்படவிருக்கிறது.

'கோள்' பொருள்

'கோள்' எனும்சொல்செவ்வியல்இலக்கியங்கள், சமயஇலக்கியங்கள்மற்றும்இடைக்காலஆவணங்களிலும்பரவலாகபயின்றுவரும்சொல்என்பதனைஅறிந்தோம். இச்சொல்லுக்கு பொருளறியும் வண்ணம் நிகண்டுகள், பேரகராதிகள், அகராதிகள், கலைக்களஞ்சியங்கள், பொருட்களஞ்சியங்கள், பெருஞ்சொல்லகராதிகள் மற்றும் பிறமொழி வேர்ச்சொல் அகராதிகள் என

பலவற்றிலும் பலவாறு பொருள் தருகின்ற தென்பதனைக் காண்போம். ‘கோள்’ எனும் சொல்லிற்கு

• சேந்தன்திவாகரம்எனும்நிகண்டுகொழு (தி.நி:7:1259, தீது, ஊறு, (தி.நி:8:1455) , குணம்,கோட்பாடு, குறளை,(தி.நி:11:1979), அலர்கதிமுதலாம்அமரர்,நாள், கொலை, இடையூறு (தி.நி:11:2053), பரிவேடம், வட்டம், ஊர்கோள் (தி.நி:1:156) என்றும்பொருள்முழங்குகின்றது

• சூடாமணி நிகண்டில் ஊர்கோள் என்று வருமொழியாக வரும் போது பரிவேடம், வட்டம் என்றும் பொருள் உரைக்கிறது.

• பிங்கல நிகண்டிலும் ஊர் கோள் வருமொழியாக இடம் பெறும்போது (பரிதி) சூரியன் முதலான ஒன்பது கிரகங்களும், வலிமை, கோட்பாடு, இடையூறு, கொலை, புறங்கூறல், வட்டம், மண்டிலம், விசயம் என பொருள் விழைகிறது. (பி.நி:18, 474)

• கயாதரம், நாமதீபம் ஆகிய நிகண்டுகள் –(45),(84) பரிவேடம், ஊர்கோள் என்று பேசுகிறது,

• யாழ்பாண அகராதி இடையூறு, கிரகம், குணம், கொலை, கொள்ளல், கோட்பாடு, தீமை, நாள், நாள், பழிமொழி, புறங்கூறல், பொய், வலி. (ப-352) என பறைகிறது.

• சென்னை பல்கலைக்கழகம் வெளியிட்ட Tamil Lexicon (part -1- 256) கோள் என்பதற்கு நட்சத்திரம் என்று பொருள் தருகிறது.

• Dravidian Etymologlogical Dictionary - aspersion, calumny, talebearing, faksehood ஆகியப் பொருள்களை நாவுகிறது.

• சங்க இலக்கியப் பொருள் களஞ்சியம் (தொகுதி இரண்டு) காய், குலை, கொல்லுதல், முகம், கோட்பாடு, இராசி, மனத்தாற் குறித்துக் கொள்ளுதல், கடைப்பிடித்தல், செம்பாம்பு, வகை, பழுத்தல், கூற்றம், கொள்ளுதல் எனப்பொருள் இயம்புகிறது.

• பெருஞ்சொல்லகராதி (தொகுதிஇரண்டு) காய், குலை, கொல்லுதல், முகம், கோட்பாடு, இராசி, மனத்தாற்குரித்துக் கொள்ளுதல், கடைபிடித்தல், செம்பாம்பு, வகை, பழுத்தல், கூற்றம், கொள்ளுதல் போன்ற பொருளை நவில்கிறது.

• வரலாற்று முறைத்தமிழ் இலக்கியப் பேரகராதிகுலை, கொத்து, கொள்ளுதல், கொள்கை, காய், கூற்றம், ஆராய்ச்சி, குற்றம் கிரகம் துணிவு தவறு தன்மை பெருமை,மதிப்பு,இயற்கை,வலிமை,மாறுபாடு, துன்பம்வெற்றி, ஒளி, அனுபவம்,மேகம், இராகு, பரிவேடிப்பு, குறளை, கொடுமை எனபொருள் கூறுகிறது.

• கல்வெட்டு கலைச் சொல்லகராதிகோள் என்பதற்குபுறங்கூறுதல் என்றுபேசுகிறது. (முதல்தொகுதி-223)

கல்வெட்டுகளில் ‘கோள்’

பழந்தமிழ் செவ்வியல் இலக்கியங்களில் ‘கோள்’ என்னும் சொல் பயின்று வந்துள்ளதைப் போன்று கல்வெட்டுகளிலும் மக்கள் மொழியாகவும் அரசு ஆணையாகவும் இச்சொல்லை வழக்கிலிருந்துஎடுத்தாளப்பட்டுள்ளதை

கல்வெட்டுகளில் சுட்டப்பட்டுள்ளதனைக் கொண்டு அறியமுடிகிறது. செவ்வியல் இலக்கியங்களைப் போன்று பொதுவாக கல்வெட்டுகளிலும் 'கோள்', கொளல், கொள், கொள்ள, கொள, கொண்ட, மீட்ட, பட்ட என பயின்று கொள்ளப்படுதல், பெறப்படுதல், கவரப்படுதல், மீட்கப்படுதல், அழிக்கப்படுதல், புறங்கூறல் என பல பொருள்களில் மருவி சொற்றொடராகப் பயன்படுத்தப்பட்டுள்ளதை அறியமுடிகிறது. கல்வெட்டுகளை நடுகற் கல்வெட்டுகள், மெய்க்கீர்த்திக் கல்வெட்டுகள், கொடைக் கல்வெட்டுகள் என வகைப்படுத்தப்பட்டு அவற்றில் 'கோள்' என்னும் சொல்அப்பொருண்மைக்கு ஏற்ப கல்வெட்டுகளில் ஆளப்பட்டுள்ளதைக் கொண்டு ஆராயப்படுகிறது.

சான்றுகளின் அடிப்படையில் ஆவணங்களில் பயின்று வரும் ஒரு சொல்லைக் கொண்டு அச்சொல் காலந்தோறும் மற்ற ஆவணங்களில் எவ்வாறு பயின்று வந்துள்ளது என்பதனை அறிவதோடு அச்சொல்லுக்கான பொருள் ஆவணங்களுக்கேற்ப மாறுபடுவதையும் அறிய முற்படலாம். கொள் என்னும் வேர்ச்சொல்லைக் கொண்ட கோள் என்னும் சொல் பல ஆவணங்களில் பலவாறு இடத்திற்கேற்ப பொருள் கொள்ளப்படுவதை இலக்கியங்கள், கல்வெட்டுகள், மக்கள் வழக்காறுகள் என அனைத்திலும் ஒரே பொருளை கொடுப்பதை அறியலாம். மேலும் அச்சொல் கொள் என்னும் வேர்ச்சொல்லைக் கொண்ட கோள் என்னும் சொல்லைக் கொண்டு பயின்று வராமல் கொள், கொள, கொளல், கொள்ள, கோள், கோள்ளீ, கொளீ என மறுவி இடம்பெற்று அதே பொருளை தருவதை இனம் காணலாம்.

'ஆகோள்', கால்கோள், 'கடற்கோள் 'தொறுகோள் செழியரைத் தேசுகொள், மனக்கொள், ஆழிகொள், வலங்கொள் 'காடுகோள், 'ஏரிகோள்'.

மனிதச் சமூகத்தின் பண்பாட்டு வரலாற்றை ஆராயும் கூறுகளுள் மொழியும் ஒன்றாகும். பொதுவாக பண்பாட்டு ஆராய்ச்சியில் மொழியும் அதிலுள்ள பயன்பாட்டுச் சொற்களையும் ஆராய்வது மிக இன்றியமையாததாகும். அவ்வகையில் ஒவ்வொரு மொழிக் குடும்பத்திலுமுள்ள சொற்களுக்கும் அச்சொல்லுக்குரிய வேர்ச்சொல், பயன்பாடு, பொருள் ஆகியவற்றினை அத்துறைசார் ஆய்வறிஞர்கள் ஆராய்ந்து வருகின்றனர். இப்பயன்பாட்டுச் சொற்கள் குறித்த ஆய்வுகள் மொழியியல், மானுடவியல், தொல்லியல் ஆகியத் துறைகளில் மேற்கொள்ளப்பெறும் மனிதவியல்சார் ஆய்வுகளில் முக்கியப்பங்காற்றி வருகின்றன. அவ்வகையில் தமிழ் மொழியில் 'கொள்' எனும் வேர்ச்சொல்லைக் கொண்டு 'கோள்' என்னும் சொல்லாக மருவி பல சொற்களுக்கு பின்னொட்டாகப் பயின்று வரும் இச்சொற்கள் பேச்சு மொழியான மக்கள் வழக்காறுகள், எழுத்து மொழியான இலக்கியங்கள், கல்வெட்டுகள், செப்பேடுகள் என பல ஆவணங்களில் பயின்று வந்துள்ளன. அவற்றுள் சில சொற்கள் கல்வெட்டுகளில் இருந்து ஆராய்ந்து விளக்கப்படுகிறது.

இவ்வாய்வின் நோக்கமாக 'கொள்' எனும் வேர்ச்சொல்லினையுடைய 'கோள்' என்ற சொல் செவ்வியல் இலக்கியங்களில் காணப்படுவதைப் போன்று பிற ஆவணங்களான கல்வெட்டுகள் மற்றும் செப்பேடுகள் ஆகியவற்றில் இச்சொல் ஆளப்பட்டு வந்தாலும் அச்சொல் 'கோள்' எனும்

சொல்லாக பெரும்பாலும் அமையப்பெறவில்லை. மாறாக 'கொள்' எனும் வேர்ச்சொல்லைத் தழுவியும், கோள், கொள்ள, கொள, கொளல், கொள்ளீ, கொள்ளல், கொண்ட ஆகியப் பதத்தில் சுட்டப்பட்டுள்ளதென்பது இங்கு நோக்கதக்கதாகும். இவ்வாறாக ஆவணங்களில் இடம்பெற்ற 'கோள்' எனும் சொல் செவ்வியல் இலக்கியங்கள் உள்ளிட்ட பிற ஆவணங்களில் பயின்று வருவதை கருப்பொருளாகக் கொண்டு அச்சொல்லுக்குரியப் பொருள் காலந்தோறும் தேடப்பட்டு அவற்றிற்கான பொருள் ஒத்த தன்மையுடையதாய் உள்ளதா அல்லது மாறுபட்டவையாக உள்ளதா என்பதை அறியும் நோக்குடன் 'கோள்' என்னும் சொல் ஆராயப்படவிருக்கிறது.

'கோள்' பொருள்

'கோள்' எனும் சொல் செவ்வியல் இலக்கியங்கள், சமய இலக்கியங்கள் மற்றும் இடைக்கால ஆவணங்கள் மற்றும் மக்கள் வழக்காறுகளில் பரவலாக பயின்று வரும் சொல்லாகும். இச்சொல்லுக்கு பொருளறியும் வண்ணம் நிகண்டுகள், பேரகராதிகள், அகராதிகள், கலைக் களஞ்சியங்கள், பொருட்களஞ்சியங்கள், பெருஞ்சொல்லகராதிகள், கல்வெட்டுச் சொல்லகராதிகள் மற்றும் பிற மொழி வேர்ச்சொல் அகராதிகள் என பலவற்றிலும் பலவாறு பொருள் தருகின்றதென்பதனைக் காண்போம். 'கோள்' எனும் சொல்லிற்கு

- சேந்தன் திவாகரம் எனும் நிகண்டு *கொழு* (தி.நி:7:1259, *தீது, ஊறு,* (தி.நி:8:1455), *குணம், கோட்பாடு, குறளை,*(தி.நி:11:1979), *அலர்கதி முதலாம் அமரர், நாள், கொலை, இடையூறு* (தி.நி:11:2053), *பரிவேடம், வட்டம், ஊர்கோள்* (தி.நி:1:156) என்றும் பொருள் முழங்குகின்றது
- சூடாமணி நிகண்டில் ஊர்கோள் என்று வருமொழியாக வரும்போது *பரிவேடம், வட்டம்* என்றும் பொருள் உரைக்கிறது.
- பிங்கல நிகண்டிலும் *ஊர்கோள் வருமொழியாக இடம்பெறும் போது (பரிதி) சூரியன் முதலான ஒன்பது கிரகங்களும், வலிமை, கோட்பாடு, இடையூறு, கொலை, புறங்கூறல், வட்டம், மண்டிலம், விசயம்* என பொருள் விழைகிறது. (பி.நி:18, 474)
- கயாதரம், நாமதீபம் ஆகிய நிகண்டுகள் –(45),(84) *பரிவேடம், ஊர்கோள்* என்று பேசுகிறது,
- யாழ்பாண அகராதி இடையூறு, கிரகம், குணம்,கொலை, கொள்ளல், கோட்பாடு, தீமை, நாள், நாள், பழிமொழி, புறங்கூறல், பொய், வலி. (ப-352) என பறைகிறது.
- சென்னை பல்கலைக்கழகம் வெளியிட்ட Tamil Lexicon (part -1- 256) கோள் என்பதற்கு *நட்சத்திரம்* என்று பொருள் தருகிறது.
- Dravidian Etymological Dictionary - aspersion, calumny, talebearing, faksehood ஆகியப் பொருள்களை நாவுகிறது.

- சங்க இலக்கியப் பொருள்களஞ்சியம் (தொகுதி இரண்டு) காய், குலை, கொல்லுதல், முகம், கோட்பாடு, இராசி, மனத்தாற் குறித்துக்கொள்ளுதல், கடைப்பிடித்தல், செம்பாம்பு, வகை, பழுத்தல், கூற்றம், கொள்ளுதல் எனப் பொருள் இயம்புகிறது.
- பெருஞ்சொல்லகராதி (தொகுதி இரண்டு) காய், குலை, கொல்லுதல், முகம், கோட்பாடு, இராசி, மனத்தாற் குரித்துக்கொள்ளுதல், கடைபிடித்தல், செம்பாம்பு, வகை, பழுத்தல், கூற்றம், கொள்ளுதல் போன்ற பொருளை நவில்கிறது.
- வரலாற்று முறைத் தமிழ் இலக்கியப் பேரகராதி குலை, கொத்து, கொள்ளுதல், கொள்கை, காய், கூற்றம், ஆராய்ச்சி ,குற்றம் கிரகம் துணிவு தவறு தன்மை பெருமை, மதிப்பு, இயற்கை, வலிமை, மாறுபாடு, துன்பம் வெற்றி, ஒளி, அனுபவம், மேகம், இராகு, பரி வேடிப்பு, குறளை, கொடுமை என பொருள் கூறுகிறது.
- கல்வெட்டு கலைச் சொல்லகராதி கோள் என்பதற்கு புறங்கூறுதல் என்று பேசுகிறது. (முதல் தொகுதி-223)

செவ்வியல் இலக்கியங்களில் 'கோள்'

முதல் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் 'கொள்' எனும் வேர்ச்சொல்லைக் கொண்ட 'கோள்' எனும் சொல் தனித்து இடம் பெறாமல் கால்கோள், ஆகோள் ஆகிய இரு வருமொழிச் சொற்களாக பயின்று இடம்பெற்று வந்துள்ளன. இவ்விருச் சொற்களுக்கும் 'கோள்' எனும் பொருளைத் தழுவி பொருள் கொண்டால் 'ஆகோள்' எனும் சொல்லுக்கு ஆநிரை கவர்தல், மீட்டல் என்னும் பொருளில் ஆளப்படுவதையும் 'கால்கோள்' எனும் சொல் தேர்ந்தெடுத்தல், உறுதியளித்தல், பெறப்படுதல் ஆகிய சொற்களுக்கானப் பொருளை வருமொழியாக வந்து மேற்கண்ட பொருள்களைத் தருகிறது.

பழந்தமிழரின் அகம் புறம் சார்ந்த வாழ்வியலை எடுத்துக்கூறக் கருவாக விளங்கும் தொல்காப்பியத்தில் போர் மரபில் வீரமரணம் எய்திய வீரர்களுக்கு நிகழ்தப்பெறும் வழிபாட்டுச் சடங்குகளுள் நடுகல் எடுக்கும் மரபு ஏற்படுத்துதலை குறிப்பிடும் போதும், ஆநிரை கவர்தல் - மீட்டல் ஆகிய செயல்களை எடுத்துரைக்கும் போது முறையே கால்கோள், ஆகோள் எனும் சொற்களை தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. அவை

"காட்சி கால்கோள் நீர்ப்படை நடுதல்
சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தல் என்று
இருமூன்று வகையிற் கல்லொடு புணரச்
சொல்லப்பட்ட எழுமூன்று துறைத்தே".[1]

கால்கோள் என்பது நடுகல் எடுப்பதற்கான கல்லைத்தேடி

---

1 தொல்காப்பியம்

தேர்ந்தெடுத்தவுடன், மாலையிட்டு, மது படைத்து, அக்கல்லை கொண்டு வருதலைக் குறிக்கிறது.

ஊர் கொலை ஆகோள் பூசல் மாற்றே (தொல் 20:3)[2]

'ஆகோள்' என்பது ஆநிரை கவர்தல் – மீட்டல் ஆகிய இரு நிகழ்வுகளையும் குறிப்பிடும் ஒரு சொல்லாக எடுத்தாளப்பட்டுள்ளது. ஆனால் தொல்காப்பியம் ஆநிரைகளை கவர்தலை 'ஆகோள்' என்னும் சொல் பொருளுரைக்கிறது. 'கால்கோள்', 'ஆகோள்' ஆகிய இரு சொற்கள் இங்கு வருமொழியாக பயின்று நிலைமொழியின் பொருண்மைக்கேற்ப பொருளுரைப்பதை அறியலாம். மேலும் தொல்காப்பியத்தில் இடம்பெற்றதைப் போன்று சங்க இலக்கியங்களிலும் இச்சொல் பல இடங்களில் வருமொழியாக சுட்டப்பட்டு வந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

தொல்காப்பியத்தைத் தொடர்ந்து 'கோள்' எனும் சொல் சங்க இலக்கியங்களில் பல இடங்களில் வருமொழியாகவும் நிலைமொழியாகவும் சில இடங்களில் தனித்தும் பயின்று வந்துள்ளன. அவற்றுள் ஒரு சில இலக்கியங்கள் மட்டுமே இங்கு விளக்கப்பட்டுள்ளன. அதில் (குறு:18:1,267:5-7), (நற்:102:5) (அக:33:5,36:2,48:26,79:17), (நால்:2:8,17:5), (நான்:27) என விரவிக்கிடைக்கின்றன. பெரும்பாலும் 'கோள்' எனும் சொல் தனியாக வரும் போது எதிர்வினை அதாவது துன்பம் தரக்கூடியச் சொல்லாகவே பொருள்தரப்படுவதை ஆய்ந்தறியமுடிகிறது. ஆனால் 'கோள்' எனும் சொல் வருமொழியில் நிலைமொழிக்கு ஏற்ப அவற்றிற்கான எதிர்மறைப் பொருளைத் தருகிறது. காட்டாக இங்கு கடல் என்னும் சொல்லுடன் 'கோள்' எனும் சொல்லை வருமொழியாகக்கொண்டு வினைச்சொல்லாகப் பொருத்தி பார்த்தால் கடல்+கோல்=கடற்கோள் என்று புணர்ந்து கடல் கவரப்படுதல், உள்வாங்கப்படுதல், கொள்ளப்படுதல், உமிழப்படுதல் ஆகிய வினைப்பொருள்களுடன் பொருத்திப் பார்த்தால் 'கடற்கோள்' எனும் சொல் 'இடையூறு செய்தல்' எனும் சொல்லுடன் பொருந்தி போவதை அறியலாம். மேலும் இச்சொல் கடற்கோள்[3] என்னும் சொல்லைப் போன்று வருமொழியாக சங்க இலக்கியங்களில் 'கோள்' எனும் சொல் பல இடங்களில் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் கார்கோள்[4], ஏறுகோள்[5], பூகோள்[6], முலைகோள்[7], கைகோள்[8], மீக்கோள்[9], தலைகோள்[10] என பல இடங்களில் 'கோள்' எனும் சொல் வருமொழியாக இடம்பெற்று எதிர்வினைப் பொருளாக

2 மேலது
3 பொருநர் ஆற்றுப்படை
4 புறநானூறு
5 கலித்தொகை
6 புறநானூறு
7 மேலது பாடல் எண்
8 மலைபடுகடாம்
9 செந்தமிழ் (இதழ்), மதுரை தமிழ்ச்சங்கம், மதுரை, 1912 ப.47
10 பொருநர் ஆற்றுப்படை

பொருளறியப்படுவதையறியலாம். காட்டாக

கார்கோள் முகந்த கமஞ்சூல் மாமழை,
வாள் போழ் விசும்பில் வள் உறை சிதறித்
தலைப்பெயல் தலைஇய தண் நறுங்கானத்து,
இருள்படப் பொதுளிய பராரை மராஅத்து
உருள் பூந்தண் தார் புரளும் மார்பினன்; (7 – 11)

இப்பாடலில் முதல் வரியில் இடம் பெற்றுள்ள ‘கார்கோள்’ என்னும் சொல்லுக்கு கடல் நீர் மேகங்களால் கொள்ளப்படுதலை குறிக்கிறது. அதாவது கடல்நீர் மேகங்களின் சுழற்சியால் கவரப்படும் (கடத்தப்படும்) நிகழ்ச்சியை இப்பாடல் பதிவு செய்கிறது.

கடல்கொளப் படாஅது உடலுநர் ஊக்கார்
கழல்புனை திருந்துஅடிக் காரிநின் நாடே
அழல்புறம் தரூஉம் அந்தணர் அதுவே[11]

என்னும் புறநானூற்றுப் பாடலின் வழி கடல் கொள்ளப்படாத நாட்டின் தலைவனானன் என்னும் பொருளில் விளக்கப்பட்டுள்ளது. இப்பாடலில் ‘கோள்’ எனும் சொல் ‘கொள’ என்று புணர்ந்து பொருள் தருவதை அறிய முடிகிறது.

புறநானூற்றுப் பாடலைப் போன்று கலித்தொகைப் பாடலில் ‘கோள்’ என்னும் சொல்லுக்கான இணையானச் சொல்லாக ‘வெளவல்’ என்னும் சொல்லாக பயின்று கீழ்காணும் பாடலில் ‘கடல் கோள்’ ஏற்படுத்துவதை பற்றிக் குறிக்கிறது.

மலிதிரைஊர்ந்துதன் மண்கடல் *வெளவலின்*
மெலிவின்றி மேற்சென்று மேவார்நாடு இடம்படப்
புலியொடு வில்நீக்கிப் புகழ் பொறித்த கிளர்கெண்டை
வலியினான் வணக்கியவாடாச்சீர்த் தென்னவன்[12]

மேலும் பொருநராற்றுபடையில் ‘கடற்கோள்’ என்னும் நேரடியாக ஆளப்பட்டு வந்தாலும் அப்பாடலில் அவை கூட்டமாக உள்ள மேகங்கள் கடலில் நீர் கொள்ளுதலை (முகத்தலை) மறக்கவும் செய்தன என்னும் நிகழ்வை பதிவு செய்யும் பொருட்டு ‘கடற்கோள்’ என்று இடம்பெற்றுள்ளது. அதேப்போன்று சிலப்பதிகாரத்திலும் ‘கோள்’ என்னும் சொல் ‘கொள்ள’ என்னும் சொல்லாக இடம்பெற்று தமிழகத்தின் தென்பகுதி கடற்கொள்ளப்பட்ட நிகழ்வை கீழ்காணும் பாடல் கூறுவதை அறியலாம்.

பஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் *கொள்ள*

11 புறநானூறு 122
12 கலித்தொகை.104

வடதிசைக்கங்கையும் இமயமுங் கொண்டு
தென்திசை ஆண்ட தென்னவன் (சிலம்பு. 11)13

கல்வெட்டுகளில் 'கோள்'

பழந்தமிழ் செவ்வியல் இலக்கியங்களில் 'கோள்' என்னும் சொல் பயின்று வந்துள்ளதைப் போன்று கல்வெட்டுகளிலும் மக்கள் மொழியாகவும் அரசு ஆணையாகவும் இச்சொல்லை வழக்கிலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளதை கல்வெட்டுகளில் சுட்டப்பட்டுள்ளதனை அறியமுடிகிறது. செவ்வியல் இலக்கியங்களைப் போன்று பொதுவாக கல்வெட்டுகளிலும் 'கோள்', கொளல், கொள், கொள்ள, கொள, கொண்ட, மீட்ட, பட்ட என பயின்று கொள்ளப்படுதல், பெறப்படுதல், கவரப்படுதல், மீட்கப்படுதல், அழிக்கப்படுதல், புறங்கூறல் என பல பொருள்களில் மருவி சொற்றொடராகப் பயன்படுத்தப்பட்டுள்ளதை அறியமுடிகிறது. சான்றுகளின் அடிப்படையில் ஆவணங்களில் பயின்றுவரும் ஒரு சொல்லைக் கொண்டு அச்சொல் காலந்தோறும் மற்ற ஆவணங்களில் எவ்வாறு பயின்று வந்துள்ளது என்பதனை அறிவதோடு அச்சொல்லுக்கான பொருள் ஆவணங்களுக்கேற்ப மாறுபடுவதையும் அறியமுற்படலாம்.

குறிப்பாக 'கொள்' என்னும் வேர்ச்சொல்லைக் கொண்ட 'கோள்' என்னும் சொல் பல ஆவணங்களில் பலவாறு இடத்திற்கேற்ப பொருள்கொள்ளப்படுவதை இலக்கியங்கள், கல்வெட்டுகள், மக்கள் வழக்காறுகள் என அனைத்திலும் ஒரே பொருளை கொடுப்பதை அறியலாம். மேலும் அச்சொல் 'கோள்' என்னும் சொல்லாக பயின்று வராமல் கொள், கொள, கொளல், கொள்ள, கோள், கோள்ளீ, கொளீ என கல்வெட்டுகளில் பயின்று வந்துள்ளதை அறியமுடிகிறது.

மேலும் கல்வெட்டுகளை நடுகற்கல்வெட்டுகள், மெய்க்கீர்த்திக் கல்வெட்டுகள், கொடைக்கல்வெட்டுகள் என வகைப்படுத்தப்பட்டு அவற்றில் 'கோள்' என்னும் சொல் அப்பொருண்மைக்கு ஏற்ப எங்கெங்கு எவ்வாறு கல்வெட்டுகளில் ஆளப்பட்டுள்ளதைக் கொண்டு இக்கட்டுரையின் வாயிலாக ஆராயப்படுகிறது.

நடுகற்கல்வெட்டுகளில் 'கோள்'

பழந்தமிழர் வாழ்வியலை எடுத்துரைக்கும் கருவூலமாக இலக்கண, இலக்கிய நூல்கள் விளங்குவது போல அக்காலத்தில் நடைபெற்ற திணைப்புலச் சமூக வாழ்வியல் நிகழ்வுகளைப் பதிவுசெய்யும் கருவூலமாக கல்வெட்டுகள் திகழ்கின்றன என கொள்ளலாம். அவற்றில் குறிப்பாக நடுகற்கல்வெட்டுகள் அத்திணைப்புல நிகழ்வுகளை திறம்படக் காட்டுகின்றன. அப்பதிவுகள் தொல்பழங்கால நினைவுச் சின்னங்களில் அதிகம் காணப்பட்டாலும் ஆய்வறிஞர்களின் கருத்துப்படி பொ.ஆ.மு. 4-ஆம் நூற்றாண்டு முதல் பொ.ஆ.16-ஆம் நூற்றாண்டு வரையிலான நடுகற்கல்வெட்டுகளில் அதிகம் காணப்படுகின்றன. அதில் ஆநிரை கவர்தல், மீட்டல் ஆகிய இரு நிகழ்வுகளை

13 சிலப்பதிகாரம்

நடுகற் கல்வெட்டுகள் மிகுதியாகப் பேசுகின்றன. அவ்வீரச்செயல்களில் இறந்துபோன வீரர்களுக்கு நடுகல் வைத்து, அவ்வீரனின் தீரச்செயல்களை கல்லில் உருவங்களை வடித்து அவர்களை புகந்துரைத்து வணக்கம் செலுத்தும் முறை சங்ககாலத் தமிழர் புறவாழ்வியலில் இருந்திருக்கின்றதென்பதை ஆநிரை கவர்தல், மீட்டல் ஆகிய இந்நிருநிகழ்வின் பொழுது இறந்துப்பட்ட வீரர்களுக்கு எடுக்கப்பட்ட நடுகற்கல்வெட்டுகளின் வழி உணரலாம். ஆகோள் பூசலைப் பற்றிய குறிப்புகள் இலக்கணநூலான தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ளன. இச்சான்றுகளை மெய்ப்பிக்கும் வண்ணமாக தமிழ்ப் பல்கலைக்கழக கல்வெட்டியக் மற்றும் தொல்லியல் துறை பேராசிரியர் கா.இராஜன் தலைமையில் தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி வட்டம் புள்ளிமான் கோம்பை என்னும் ஊரில் மூன்று நடுகற்கல்வெட்டுக்கள் கண்டறியப்பட்டன. அந்நடுகற்கல்வெட்டுகளில் ஒன்றில் போரில் வீரமரணம் அடைந்த வீரனுக்காக எடுக்கப்பட்ட நடுகல்லில் அவ்வீரனின் பீடும் பெருமையும் எடுத்துரைக்கையில் அவ்வீரன் ஆகோள் பூசலில் ஈடுபட்டு உயிர்த் துறந்தான் என்பதை மெய்ப்பிக்கும் வண்ணமாக அந்நடுகற்கல்வெட்டு அமைகிறது. அவை

கல்
பேடு தீயன் அந்தவன்
கூடல் ஊர்
ஆகோள் [14]

இக்கல்வெட்டில் ஆகோள் எனும் சொல்லில் வரும் ‘கோள்’ எனும் சொல் வருமொழியாகக் கீறப்பட்டுள்ளதை நோக்கலாம். இந்நடுகற்கல்வெட்டில் வரும் கோள்’ எனும் சொல்லுக்கானப் பொருள் தொறு பூசலில் அதாவது ஆநிரை கவர்தல், மீட்டல் ஆகிய இரு நிகழ்வுகளில் இறந்து போன வீரனுக்காக எடுக்கப்பட்டக் கல் என்பதைக் குறிக்கிறது.

இந்நடுகற்கல்வெட்டை போன்று தமிழகத்தின் ஏனையப் பகுதிகளில் கண்டறியப்பட்ட சில நடுகற்கல்வெட்டுகளிலும் ஆநிரைக் கவர்தல் மீட்டல் ஆகியவற்றில் ஈடுபட்டு இறப்பெய்திய வீரர்களுக்காக எடுக்கப்பட்ட நடுகற்கல்வெட்டுகள் காணப்படுகின்றன. அவற்றிலும் கோள் என்னும் சொல் இட்த்திற்கேற்ப மாறுபட்டு அந்நடுகற்கல்வெட்டுகளில் கீறப்பட்டுள்ளதை அறியமுடிகிறது.

குறிப்பாக தமிழகத்தில் திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் பகுதியில் கண்டறியப்பட்ட நடுகற்கல்வெட்டுகளில் ஆநிரைக் கவர்தல் - மீட்டல் ஆகிய இவ்விரு நிகழ்வுகளில் ஈடுபட்டு வீரமரணமடைந்த வீரர்களின் சிறப்பு நிகழ்வுகளைக் குறிப்பிடுகின்றன. அந்நடுகற்கல்வெட்டுகளில் ஆகோள் எனும் பதத்தையுடையச் சொல் கீழ்கண்டவாறு தொறு கொள்ள, தொறு கொண்ட, தொறு மீட்டு அல்லது தொறு மீட்ட என்று ஆநிரை கவரப்பட்டதையும் மீட்கப்பட்டதையும் கொள்ளப்பட்ட என்ற பொருளிலும் பட்டார், பட்டாரு,

14 கா.ராஜன், கல்வெட்டியல்,

பட்டான், எரிந்து பட்டான், கத்தி எய்தி பட்டான் ஆகியச் சொற்கள் கொல்லப்பட்டான் என்றப் பொருளிலும் குறிப்பிடுகின்றதென்பதையும் சில நடுகற்கல்வெட்டுகளின் வழி காணலாம்.

திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் வட்டம் முறையே தண்டம்பட்டு, சே.கூடலூரில் ஆகிய ஊர்களிலுள்ள பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மனின் 18-ஆம் ஆட்சியாண்டு (பொ.ஆ.610) மற்றும் 39-வது ஆட்சியாண்டினைச் (பொ.ஆ.629) சேர்ந்த வட்டெழுத்தில் எழுதப்பட்ட நடுகற்கல்வெட்டுகளிலும் 'கோள்' என்னும் சொல் 'கொண்ட' என்னும் பதத்தில் ஆளப்பட்டுள்ளதை அறியமுடிகிறது. காட்டாக

கோவிசைய மயீந்திரபரு
மற்கு பதினெட்டாவது மீ
வேணாட்டு ஆந்தைபாடி ஈசை
பெரும்பாணரைசரு மருமக்கள்
பொற்சேந்தியாஞ் சேவகரு தொறு
க் *கொண்ட* ஞான்று மீட்டு பட்டா
ன் வேணாட்டு நந்தி
யார் கல் க..[15]

அதேப்போன்று 39-வது ஆட்சியாண்டினைச் (பொ.ஆ.629) சேர்ந்த கல்வெட்டில் 'கோள்' என்னும் சொல் பட்டான் என்னும் சொல்லாகவும் கீழ்காணுமாறு

கோவிசைய மசீந்திரபரு
மற்கு முப்பத்தொன்பதாவது
வாணகோ அரைசரு மருமக்கள் பொ
ற்றொக்கையார் சருக்கிருந்த ஊர் போ
ந்தை மேற் சக்கரவரு படை வந்த ஞா
ன்று மகன் னந்
தி எறிந்து *பட்டா*
ன் கல்[16].

பயின்றுள்ளது. இப்பல்லவர்கால முதல் நடுகற்கல்வெட்டில் 'கோள்' எனும் சொல் கொண்ட என்று பயின்று கொள்ளப்பட்ட எனும் பொருளில் ஆநிரைக் கொள்ளப்பட்டதனைக் குறிப்பதாக அமைகிறது. இரண்டாவது நடுகற்கல்வெட்டில் 'கோள்' என்னும் சொல் பட்டான் என்று அதாவது கொல்லப்பட்டான் (இறந்துப்பட்டான்) என்னும் பொருளில் இங்கு சுட்டப்பட்டுள்ளது.

15 இரா.நாகசாமி, செங்கம் நடுகற்கள், (77/1971) தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை, சென்னை, 1972.

16 மேலது, செங்கம் நடுகற்கள், (35/1968) தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை, சென்னை, 1972.

அதேப்போன்று முதலாம் மகேந்திர வர்மனுக்கு அடுத்து ஆட்சிக்கு வந்த நரசிம்ம வர்மனின் 11-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டிலும் 'கோள்' எனும் சொல் 'கொண்ட' என்னும் பதத்தில் சுட்டப்பட்டு கொள்ளப்பட்ட என்னும் பொருளில் கொல்லப்பட்ட எனும் செய்தி இங்கு பட்டாரு எனும் பொருளிலும் கீழ்காணும் இந்நடுகற்கல்வெட்டில் காணலாம்.

கோவிசைய நரைசிங்
க பருமற்கு பதினொன்
றாவது மேற்கோவலூர் நாட்டு அள
இற்பாடி கடிபகையார் தொறு கொண்ட ஞா

ன்று சென்று தொறு இடுவித்து பட்டாரு உணங்க
யார் மகனார் கோத்தையார் சேவகன் ஆரோகவண்க
ர் மக்கள்
கணிமாத
னார் கல்[17].

நரசிம்ம வர்மனின் கல்வெட்டைத் தொடர்ந்து நந்திவர்மன் பதினேழாவது ஆட்சிக்காலத்திய நடுகல் கல்வெட்டில் 'கோள்' என்னும் சொல் 'கோள்' என்றே குறிப்பிடப்பட்டுள்ளது நோக்கத்தக்கதாகும். இங்கு 'கோள்' என்பது கொள்ளப்படுதல் என்னும் பொருளில் பொருளறியப்படுகிறது. இந்நடுகற்கல்வெட்டில் கொல்லப்பட்ட எனும் செய்தி பட்டார் என்று சுட்டப்பட்டுள்ளது.

ஸ்வஸ்திஸ்ரீ
கோவிசைய நந்தி விக்கிர
ம பருமற்கி யாண்டு பதினேழாவ
து பல்குன்றக் கோட்டத்து மண்டைகுள நா
ட்டுச் சுரைக்குளத்துத் தொறு *கோளில்*
ப் பட்டார் நிலம் பேறூர்நாயகர் ஆதட்
டியார் மகனார் செருவலியார்[18]

இம்மன்னனைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த கம்பவர்மனின் மூன்றாவது ஆட்சியாண்டு கல்வெட்டில் 'கோள்' எனும் சொல் *கொள்ள* என பயின்று வந்துள்ளதை அறியலாம். இக்கல்வெட்டில் ஆநிரைகளை கொள்ளப்பட்டதை அதாவது பசுக்கள் கவரப்பட்டதனை எடுத்துரைக்கிறது. மேலும் இக்கல்வெட்டில் வீரன் இறந்துபட்டதைக் [கொல்லப்பட்டதை] குறிக்கும் போது பட்டான் என்று குறிப்பிடுகிறது.

17 மேலது, (36/1971)
18 தமிழக நடுகல் பரபு, 2022

ஸ்வஸ்தி ஸ்ரீ கோவிசைய கம்ப
பருமர்கு யாண்டு மூன்றாவது
வயிரமேக வாணகோவரையர் சேவகன்
மீகுன்றை ஞாட்டு மலையனூருடைய செம்பத்
தொண்டன் மகன் காரிப்பெருமான் பாசா
ற்றெருமத் தொறு எயினாட்டார் *கொள்ளப்*
பாசாற்றூர் பூசலிடப் பூசல் சென்று கோவூ
ர் நாட்டுச் சிற்றிடையாற்று மது கொன்றை
மூக்கின் மீமலை அயங்கயக்கரையிற் செ
ன்று முட்டி மலையனூருடைய செம்பர் ம
கன்னான காரிப்பெருமான்ணன் உ
ரையிலம்புமாள எவ்வித பத்திர முரு
வி எதிரே சென்று பட்டான்[19].

பல்லவர் கால கல்வெட்டுகளைப் போன்று சோழர்கால நடுகற்கல்வெட்டுகளிலும் கோள் என்னும் சொல் எவ்வாறு பொதிந்து காணப்படுகிறது என்பதற்கு சான்றாக சில நடுகற்கல்வெட்டுகள் இங்கு விளக்கங்களுக்காக தரப்பட்டுள்ளன. தற்போதைய கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோயிலூர் வட்டம் வீரசோழபுரம் என்னும் ஊரிலில் கண்டறியப்பெற்றுள்ள நடுகற்கல்வெட்டானது. முற்காலச் சோழப் பேரரசைத் தோற்றுவித்த விஜயாலய சோழனின் 03-ஆம் ஆட்சியாண்டில் (பொ.ஆ.853) வெட்டப்பட்ட நடுகல் கல்வெட்டாகும். அந்நடுகற்கல்வெட்டில் *ஆநிரைக் கவரச் செல்லுகையில் உயிர் நீர்த்ததைப் பற்றிக் குறிப்பிடுகிறது.*

1. தஞ்சை கொட்ட கோப்பரகே
2. சரி பந்மர்க்
3. கு யாண்டு
4. 3 வது கற்பூ
5. ண்டி நாட்டு அ
6. த்தியூர் கரம்
7. பை கலி
8. துடன் மூ
9. க்கன் அணிய
10. ன் தொறு
11. *கொள*
12. தொறு மீட்
13. டு பட்டான்[20].

---

19 இரா.நாகசாமி, செங்கம் நடுகற்கள், (56/1971) தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை, சென்னை, 1972.

20 தமிழ்நாட்டு கல்வெட்டுத்தொகுதி-XXIII - விழுப்புரம் மாவட்ட கல்வெட்டுத்

இக்கல்வெட்டில் 'கோள்' எனும் சொல் 'கொள' என்னும் சொல்லாக மருவி இங்கு பொருள் கொள்ளப்படுகிறது. அதாவது இந்நடுகல் கல்வெட்டில் ஆகோள் என்னும் சொல் தொறு கொள (ஆ,தொறு=ஆநிரை] கோள் என்பது இங்கு கொள அல்லது கொள் என மருவி கவர்ந்து செல்லப்பட்ட ஆநிரைகளை மீட்கும் போது இறந்து போனதை இந்நடுகல் கல்வெட்டு குறிப்பிடுகிறது.

அதேப் போன்று முதலாம் பராந்தகனின் நான்கு (பொ.ஆ.911) மற்றும் இருபத்தி மூன்று (பொ.ஆ.930) ஆட்சியாண்டு கல்வெட்டுகளில் 'கோள்' எனும் சொல் *கொள்ள* என்றும் *மீட்டு* என்று இந்நடுகற்கல்வெட்டுகளில் இடம் பெற்றுள்ளது.

ஸ்வஸ்தி ஸ்ரீ மதிரை கொண்ட கோப்பரகேசரி பர்
ம்மர்க்கி யாண் டிருபத்து மூன்றாவது பல்குன்ற கோ
ட்டத்து மேல் வேணாட்டு தாழையூர் இயைம்பர்
ததள் எருமை தொறு கள்
ளர் *கொள்ள* போகாமைப்
பட்டார் தந்
தையுங் மக
னும்[21].

கோப்பரகேசரி பன்மர்
கு யாண்டு நான்காவது வாண
கோவரையர் வேட்டுவதியரை
யராள் மேற்கோவலூர் நாட்டு
அளவிப்பாடி உடைய ஆந்தை பொ
ன்னி மகன் தொறு *மீட்டு*
ப் பட்டான் கல்[22].

மெய்க்கீர்த்தீகளில் 'கோள்'

இடைக்கால வரலாற்றினை அறிந்து கொள்ளக்கூடிய சான்றுகளில் கல்வெட்டுச்சான்றுகளும் ஒன்றாகும். அதில் முறையாக மெய்க்கீர்த்தியை கற்பொறிப்புகளில் இட்டப் பெருமை முதலாம் இராஜராஜ சோழனை சாரும். அவன் தன் மெய்க்கீர்த்திகளில் திருமகளை போல நில மகளையும் தனதுடமையாக்கதனது குலத்தின் எதிரிகளான செழியர்களான பாண்டியர்களை ஒளி குன்றச் செய்தவன் என்பதனை அவரின் மெய்க்கீர்த்திகளில்

தொகுதி V, 2023. ப.19

21 இரா.நாகசாமி, செங்கம் நடுகற்கள், (75/1971) தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை, சென்னை, 1972.

22 மேலும், செங்கம் நடுகற்கள், (45/1971) தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை, சென்னை, 1972.

பதிவு செய்துள்ளான். அவ்வாறான மெய்க்கீர்த்திகளில் தனது புகழை எடுத்துரைக்கையில் மனக்கொள எனவும் அதேக்கல்வெட்டில் பாண்டியரை வெற்றிக்கொண்டதனை குறிக்கையில் செழியதரைத் தேசுகொள் என்ற சொல்லும் இடம்பெற்றுள்ளதை கீழ்காணும் கல்வெட்டின் வழி அறியலாம்.

ஸ்வஸ்திஸ்ரீ
திருமகள்போலப்பெருநிலச்செல்வியும்
தனக்கே உரிமை பூண்டமை மனக்கொளக்
....
தொழுதகை விளங்கும் யாண்டே
செழியரைத்தேசுகொள் கோஇராசகேசரி
வன்மரானஸ்ரீ இராசராச தேவர்க்கு யாண்டு[23]

இம்மெய்க்கீர்த்தீயைப் போன்று இராஜராஜனின் மற்றொரு கல்வெட்டில் மேற்கண்ட விளக்கங்களுடன் கூடுதலாக ஒரு சொல் இம்மெய்க்கீர்த்தியில் இடம்பெற்றுள்ளன. அவை ஆழி கொள் சிறுதுறை என்னும் சொல்லாகும். இச்சொல் கடல்கொண்ட துறைமுகம் என்னும் பொருளில் இம்மெய்க்கீர்த்தீயில் உள்ளது.

1.ஸ்வஸ்திஸ்ரீ
2.திருமகள்போலப் பெருநிலச்செல்வியும்
3.தனக்கே உரிமை பூண்டமை மனக்கொளக்
4.காந்தளூர் சாலை கலமறுத்தருளி கங்கப்பாடியும்
5.நுளம்பபாடியும் தடிகைவழி யும் குடமலை நா
6.டுங் கொல்லமும் கலிங்கமும் .... டம் பொழில் அணி
7.ஆழி *கொள்* சிறுதுறைஎண்டிசை புகழ்தர ஈ
8.ழமண்டலமுந் திண்டிறல் வென்றி தண்டாற்
9.கொண்ட தன்னெழில் வளர் ஊம் ஊழியுள் ளெல்லா
10.யாண்டுந் தொழுதகை விளங்கும் யாண்டே
11.செழியரைத்தேசு*கொள்* கோஇராசகேசரி பன்மரா
12. ந ஸ்ரீ இராசராச தேவர்க்கு யாண்டு 17 ஆவது இவ்[24].

மெய்க்கீர்த்தி-2

ஸ்வஸ்தி ஸ்ரீ
பூமாது புணரப் புவிமாது வளர
நாமாது விளங்க ஜயமாது விரும்பத்
தன்னிரு பதமலர் மன்னவர் சூட

23 சுப்ரமணியம்., பூ, மெய்க்கீர்த்திகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1983,ப.

24 Inscriptions of The Pudukottai States, Government Museum, Chennai,2002 p.31

மன்னிய *உரிமையில் மணிமுடி சூடிச்
செங்கோல் சென்று திசைதொறும் வளர்ப்ப
வெங்கலி நீங்கி மெய்யறந் தழைப்பக்
கலிங்கம் இரியக் கடல்மலை நடாத்தி
வலங்கொள் ஆழி வரைணழி நடாத்தி
இருசுடர் அளவும் ஒருகுடை நிழற்கீழ்
முக்கோக் கிழான்அடிக ளோடும் செம்பொன்
வீரசிம்மா சனத்து வீற்றிருந் தருளிய –
கோப்பர கேசரி பன்ம ரான
திரிபுவனச் சக்கரவர்த்திகள் உடையார் ஸ்ரீ விக்கிரம
சோழ தேவர்க்கு யாண்டு 10-ஆவது.
கொடைக் கல்வெட்டுகளில் 'கோள்[25]'

வரலாற்றுச் சான்றுகளுள் ஒன்றான கல்வெட்டுச் சான்றுகளான நடுகற்கல்வெட்டுகள், மெய்க்கீர்த்திகள் போன்ற ஆவணங்களைப் போன்று அரசர்களால் வெட்டிவிக்கப்பட்ட கொடைக்கல்வெட்டுகளிலும் 'கோள்' எனும் சொல் பயின்று வந்துள்ளதை அறியமுடிகிறது. செவ்வியல் இலக்கியங்களைப் போன்று கல்வெட்டுச் சான்றுகளிலும் 'கோள்' எனும் சொல் எதிர்மறைப் பொருளைத் தரக்கூடிய சொல்லாகவே பொருள் தருவனவாக உள்ளது.

'காடுகோள்'

தமிழ்க் கல்வெட்டுக்களில் இயற்கை சீற்றங்கள் குறித்த பல செய்திகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இயற்கை பேரிடர்களை பற்றி கல்வெட்டுகளில் பதிவு செய்யும் போது கொள் என்னும் வேர்ச்சொல்லைக் கொண்ட கோள் என்னும் சொல் ஆளப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். அவ்வகையில் இடைக்கால கல்வெட்டுகளில் காடுகோள் பற்றி குறிப்பிடும் இரண்டு கல்வெட்டுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன. அக்கல்வெட்டுகளைப் பற்றி விரிவாக பார்க்கலாம். திருநெல்வேலி மாவட்டம் கங்கைகொண்டானில் உள்ள கைலாசநாதர் கோயிலிலுள்ள முதாலாம் இராஜராஜனின் 26 ஆவது ஆட்சியாண்டு (பொ.ஆ.1011) கல்வெட்டில் காடுகோள் பற்றியக் குறிப்பு காணப்படுகின்றன. காடுகோள் என்பது தேவையற்ற மரம் செடிகள் வளர்ந்து நிற்பதை குறிப்பதாகும். 'காடுகோள்' என்பதற்கு தமிழ்க்கல்வெட்டுச் சொல்லகராதி மரஞ்செடிகள் முளைத்தல் என்று பொருள் தருகிறது[26]. சில கல்வெட்டுகளில் காடுபாழ், காடெழுந்த தரிசு நிலம் என பொருளுரைத்து காடுகோள் என்னும் சொல்லுக்கு விளக்கம் தரப்பட்டுள்ளது. மேலும் கீழ்காணும் கல்வெட்டுகளில் 'காடுகோள்' என்றும் இடம் பெற்றுள்ளதை அறியலாம்.

1. நமசிவாய ஸ்வஸ்தி ஸ்ரீ திருமகள்

25 S.I.I-V/724
26 தமிழ்க்கல்வெட்டுச் சொல்லகராதி

2. போலப் பெருநிலச் செல்வியும்
3. ....
4. ....
74. இ ஸ்ரீகைலாயத்துதேவர் தெவதானம் அரிகெசரிமங்கலத்து ஏரி உடைகுளமா
75. ய் காடுகொளாய் கிடந்தமையில் இவ்வெரி இஷெத்திரபாலதெவர் வஸங்கொண்டு

இக்கல்வெட்டில் அரிகேசரிமங்கலத்திலுள்ள கோயிலுக்குரிய தேவதான நிலத்தில் ஏரி உடைந்து காடுகோளாய் பயனற்றுப் போதனைப் பற்றியச் செய்தியைத் தெரிவிக்கிறது. மேலும் இக்கல்வெட்டினைப் போன்று விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் வட்டம் பெருமுக்கல் முக்யாசலேசுவரர் கோயிலில் காணப்படும் விக்கிரமசோழனின் 8-ஆம் ஆட்சியாண்டு (பொ.ஆ.1126) கல்வெட்டிலும் 'காடுகோள்' எனுச்சொல் சுட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

1. ஸ்வஸ்தி ரீ விக்கிரமசோழதேவற்கு யாண்டு அவது ஒய்மா நாடாந விஜைராஜேந்த்ர வள நாட்டு நுளம்பூர் ஊரோம் எங்களூரில் ஏரிகீழ்ப் படு ஏரி உடைந்து மண்ணிட்டு காடு
2. கோளாய் கிடந்தமையில் இன் நிலம் விலையிட்டுக் கொண்டு திருத்திக் கொள்வீரர்]*க[ள்]* உளீரோ வென்று கூற இம்மொழி கேட்டு [எதிர்] மொழி குடுத்தோந் சோழ மண்டலத்து[27]

இக்கல்வெட்டில் அவ்வூரின் ஏரி உடைந்து காடாக மாறிய நிலப்பகுதியியைக் சுட்டும் போது 'காடுகோள்' என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. பொதுவாக ஏரி உடைந்து வெகுநாட்கள் கழித்து அந்நிலப்பகுதிகளில் காடுகள் போன்ற (தேவையற்ற மரங்கள்) வளர்ந்து நிலப்பகுதியை எதிர்மறையான வளப்படுத்துவதை 'காடுகோள்' என்றப் பொருளில் இங்கு கையாளப்பட்டுள்ளது. கல்வெட்டில் இந்நிலத்திற்குரிய எல்லைகளும் குறிப்பிடப்பட்டுள்ளதோடு அக்கல்வெட்டில் 'கோள்' எனும் சொல் 'திருத்திக்கொள்வீர்' என்ற சொல்லில் வருமொழியாக இரண்டாவது முறையும் இடம் பெறும் 'கோள்' எனும் சொல் இரண்டு இடங்களில் இடம் பெற்றுள்ளதை இக்கல்வெட்டில் அறியலாம். அதில் முதலாவதாக இடம்பெறும் 'காடுகோள்' எனும் சொல் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துவதைக் குறிப்பதாகவும், இரண்டாவதாக இடம் பெற்றுள்ள 'திருத்திக்கொள்வீர்' என்னும் சொல்லில் ஏரி உடைந்து நிலம் காடு வளர்ந்து போனதால் அதனை சீர்செய்து பெற்றுக்கொள்வ[ளோ]ர் யாரேனும் உள்ளீர்களா எனும் பொருளிலும் ஆளப்பட்டுள்ளதை அறிய முடிகிறது. இவ்விரு கல்வெட்டுச் சொற்களையும்

27 காசிநாதன்.நடன, வசந்தகல்யாணி. அர, பெருமுக்கல் கல்வெட்டுகள், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை, 1998.ப.64

கொண்டு முதல் சொல்லுக்கானப் பொருளாக இலக்கியங்களில் எதிர்மறைப் பொருளைத் தருவதையும் இரண்டாவது சொல்லுக்கான பொருளைக் கொண்டு பெற்றுக்கொள்ளுதல் என்னும் பொருளிலும் ஆளப்பட்டுள்ளதை அறியலாம்.

ஏரிகோள்

'காடுகோள்' என்னும் சொல்லைப் போன்று 'ஏரிகோள்' எனும் சொல்லும் விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் வட்டம் பெருமுக்கல் முக்யாசலேசுவரர் கோயிலில் காணப்படும் விக்கிரமசோழனின் 8-ஆம் ஆட்சியாண்டினை சேர்ந்த மற்றொரு (பொ.ஆ.1126) கல்வெட்டில் ஏரிகோள் என்னும் சொல்லில் 'கோள்' எனும் சொல் வருமொழியாகப் பயின்று வருவதை அறியமுடிகிறது. ஏரிகோள் என்னும் சொல்லுக்கு தமிழ்க்கல்வெட்டுச் சொல்லகராதி ஏரியின் நீர்த்தேக்கப்பகுதி என்று பொருள் தருகிறது.

'ஏரிகோளாய்' விழல் மண்டிப்போனதை குறிப்பிட இக்கல்வெட்டில் 'கோள்' எனும் சொல் வருமொழியாகப் பயின்று வந்துள்ளதை அறியமுடிகிறது. இக்கல்வெட்டில் 'ஏரிகோள்' எனும் சொல்லும் 'திருத்திக்கொள்வீர்' எனும் சொல்லும் இடம்பெற்றுள்ளது. அதிக மழைப் பொழிவின் காரணமாக ஏரியின் கொள்ளளவிலிருந்து மழைநீர் பெருகி வெளியேற முடியாமல் ஏரி நீர் வழிந்து உடைவது இயல்பு. இந்நிகழ்வு விக்கிரமசோழனின் காலத்தில் அவ்வூரில் நடைபெற்றதை அக்கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. மேலும் இந்நிகழ்வால் நிலம் பாழ்ப்பட்டு போனதைக் குறிப்பிடும் விதமாகவும் அதனை சீர்செய்து கொள்வீர் உள்ளீரோ என்று கேட்டறியும் விதமாக இக்கல்வெட்டு அமைகிறது எனபது குறிப்பிடத்தக்கதாகும்.

1. ஸ்வஸ்தி ஸ்ரீவிக்கிரம சோழ தேவற்(க்)கு யாண்டு அ ஆவது ஜயங் கொண்ட சோழ மண்டலத்து ஓய்மாநாடாந
2. விஜை[ய*] ராஜேந்த்ர வளநாட்டு பெருமுக்கிலாந கங்கை கொண்டா நல்லூர் ஊரோம் நிலவிலை ஆவணக் கை
3. ....

6.ஏரிகோளாய் விழலெழுந்து கிடந்தமையில் இந்நிலம்தைத் விற்போம் இத்தொண்டு திருத்திக் கொள்வீர் உளீ[28]

மக்கள் வழக்காறுகளில் 'கோள்'

ஒரு சொல் இலக்கியங்களிலோ அல்லது பொதுவான அகராதிகலிலோ பயின்று வருவதற்கு முன்னர் அச்சொல் வழக்குச் சொல்லாக அம்மொழிக்குடும்பத்தில் உளவி பின்னர் பல நிலைகளில் இடத்திற்கேற்ப

28 காசிநாதன்.நடன, வசந்தகல்யாணி. அர, பெருமுக்கல் கல்வெட்டுகள், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை, 1998.ப.2

அவை இடம்பெற்றிருப்பது இயல்பு. அவ்வாறு கோள் என்னும் சொல்லும் மக்கள் வழக்காறுகளில் இடம்பெற்றதானாலேயே அச்சொல் மேற்கண்டவாறு பலவாறு சமூக ஆவணங்களில் பயின்று வந்துள்ளதை அறியமுடிகிறது. கோள் என்னும் சொல் தற்காலத்திலும் முன்னரும் 'கோள்' எனும் சொல்லுக்கு கோள் சொல்லுதல், கோள் மூட்டுதல் அல்லது புறங்கூறல் என்னும் பொருளிலும் இடையூறு செய்தல் என்னும் பொருளில் ஆளப்படும் போது கோளாறு செய்தல் அல்லது கொளு கொடுத்தல் என்னும் பொருளிலும் கவனமுடன் செல்லுதலை குறிப்பிட்டுச் சொல்லும் போது கோளாராக செல்லுதல் என்று தென்மாவட்டங்களில் வழக்குச் சொல்லாக பயன்படுத்தப்பட்டும் குறிப்பாக கன்னியாக்குமரி மாவட்டங்களில் 'கோள்' என்னும் சொல் கொண்டாட்டம் என்று பொருள் கொள்ளப்படுகிறது.

மேற்காணும் சான்றுகளின் அடிப்படையில் ஆவணங்களில் பயின்றுவரும் ஒரு சொல்லைக் கொண்டு அச்சொல் காலந்தோறும் மற்ற ஆவணங்களில் எவ்வாறு பயின்று வந்துள்ளது என்பதனை அறிவதோடு அச்சொல்லுக்கான பொருள் ஆவணங்களுக்கேற்ப மாறுபடுவதையும் அறியமுற்படலாம். இவ்வாறு 'கொள்' என்னும் வேர்ச்சொல்லைக் கொண்ட 'கோள்' என்னும் சொல் பல ஆவணங்களில் பலவாறு இடத்திற்கேற்ப பொருள் கொள்ளப்படுவதை இலக்கியங்கள், கல்வெட்டுகள், மக்கள் வழக்காறுகள் என அனைத்திலும் ஒரே பொருளை கொடுப்பதை அறியலாம். மேலும் அச்சொல் கொள் என்னும் வேர்ச்சொல்லைக் கொண்ட கோள் என்னும் சொல்லைக் கொண்டு பயின்று வராமல் கொள், கொள, கொளல், கொள்ள, கோள், கோள்ளீ, கொளீ என மறுவி இடம்பெற்று அதே பொருளை தருவதை இனம் காணலாம். இதனை வட்டார மொழியியல் அணுகுமுறையில் இலக்கியங்களிலும் கல்வெட்டுகளிலும் ஆளப்படுவதைக் காட்டுகிறது. எனவே தமிழ்க் கல்வெட்டுச் சொற்களில் ஒன்றான கோள் எனும் சொல் இலக்கியங்கள், கல்வெட்டுகள், வாழ்வியல் நடைமுறை வழக்காறுகள் ஆகியவற்றிலும் இச்சொல் எதிமறை பொருளுரைக்கும் சொல்லாக பயணிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

நூற்ப்பட்டியல்

பெருஞ்சொல்லகராதி (தொகுதி இரண்டு), தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1989,

சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம் (தொகுதி இரண்டு), தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1986.

வரலாற்று முறைத் தமிழ் இலக்கியப் பேரகராதி, சாந்தி சாதனா

ராஜன்,கா., கல்வெட்டியல், மனோ பதிப்பகம், தஞ்சாவூர், 2006.

இரா.நாசாமி, செங்கம் நடுகற்கள், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை, சென்னை, 1972.

இரா.நாசாமி, கல்வெட்டியல், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை, சென்னை, 1972.

கேசவராஜ், வே., தென்னிந்திய நடுகற்கள், காவியா பதிப்பகம்,
தொல்லியல் நோக்கில் சங்ககாலம், உலகதமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
பவானி. மா., தமிழக வரலாற்று ஆவணங்கள் கல்வெட்டுகளும் செப்பேடுகளும், அலமு பதிப்பகம் , சென்னை-2017
கிருஷ்ணமூர்த்தி,ச., நடுகற்கள், மணிவாசகர் பதிப்பகம்,
பூங்கன்றன்.ரா., தொல்குடி வேளிர் வரலாறு, Heritage Tresure Publishers, Chennai, 2017.
பூங்கன்றன்.ரா., நடுகல் கல்வெட்டுகள், Heritage Tresure Publishers, Chennai, 2017.
செந்தமிழ் (இதழ்), மதுரை தமிழ்ச்சங்கம், மதுரை, 1912
தமிழ்நாட்டு கல்வெட்டுத்தொகுதி-XXIII - விழுப்புரம் மாவட்ட கல்வெட்டுத் தொகுதி V, 2023.
கல்வெட்டுச் சொல்லகராதி, சாந்தி சாதனா, தொகுதி 1&2 2002 ,2003

கல்வெட்டுகளில் நாள் காட்டி

சா.தீ.சந்திர குமாரி
தொல்லியல் அலுவலர், காஞ்சிபுரம்

சுருக்கம்

பள்ளிக் குழந்தைகளுக்கு முதன் முதலாக ஆசிரியர்கள் பழக்கும் பழக்கம், தேதி குறிப்பிடும் பழக்கம். தேதி குறிக்கப்பெற்ற ஆவணத்தின் உண்மைத் தன்மை உறுதிப் படுத்தப்படுகிறது. இவ்வழக்கம் கல்வெட்டுகளிலும் காணலாம். இதன் மூலம், நாள் குறிப்பிடும் பழக்கத்தின் முக்கியத்துவம் உணரலாம்.

நாள் காட்டியின் பொருள், விளக்கம், இதன் அவசியம் தற்காலத்தில் இதன் தேவை ஆகியவற்றை இக்கட்டுரையில் சில எடுத்துக்காட்டுகளோடு விளக்கப்பட்டுள்ளன. தொன்றுதொட்டு இன்று வரை சிறப்பாக கொண்டாடப்படுகின்ற முக்கிய திருவிழாக்கள் நாள் குறிப்புகளை (ஒப்பிடும் போது சிறப்பு பூஜை நாட்களை) காணலாம்.

தற்காலத்தில் நிலத்தை ஆவணப்படுத்தப்படும் நடைமுறை கல்வெட்டில் காணப்படும் விவரங்களை அடிப்படையா கொண்டது என்பதை உதாரணத்தோடு காணலாம்.

நாள் பார்ப்பது (பஞ்சாங்காம் பார்ப்பது)

காலம் காலமாக நம்பிக்கை மூட நம்பிக்கை என்ற விவாதங்களைத் தாண்டி இன்றளவும் ஒவ்வொரு குடும்பங்களும் திருமணம், காது குத்து, சடங்கு உட்பட அனைத்து சுப மற்றும் அசுப நிகழ்ச்சிகள் அனைத்திற்கும் பஞ்சாங்கம் பார்ப்பது வழக்கமாக உள்ளது.

பெயர்க் காரணம்

பஞ்சாங்கம் = பஞ்சம் (ஐந்து) + அங்கம் (உறுப்பு)

நாள்காட்டி ஐந்து உறுப்புகளைக் கொண்டது என்பது இதன் பெயர்காரணமாகும்.

ஐந்து உறுப்புகள்

1. வருடம், 2. மாதம். 3. கிழமை, 4, நட்சத்திரம், 5.. திதி மேற்கூறிய ஐந்து உறுப்புகளைக் கொண்டது ஒரு நாள்.

விளக்கம்

தற்காலத்திய நாட்காட்டியோடு பழங்கால நாட்காட்டியோடுனான ஒப்பீடு.

தற்காலத்திய நாட்காட்டி	பழங்கால நாட்காட்டி
வருடம்: தொடர் எண்களாக குறிக்கப்படுகிறது.	தமிழ் வருடங்கள் பிரபவ முதல் அட்சயம் ஈராக 60 ஆண்டுகளின் பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன.
மாதம்: ஜனவரி முதல் டிசம்பர் வரையிலான 12 மாதங்கள்	சித்திரை முதல் பங்குனி வரையிலான 12 மாதங்கள்
கிழமை: ஞாயிறு முதல் சனி வரையிலான கிழமைகள்	கிழமை: ஞாயிறு முதல் சனி வரையிலான 7 கிழமைகள்
நட்சத்திரம்: அஸ்வினி முதல் ரேவதி வரையிலான 27 நட்சத்திரங்கள்.	நட்சத்திரம்: அஸ்வினி முதல் ரேவதி வரையிலான 27 நட்சத்திரங்கள்.
திதி: வளர்பிறை மற்றும் தேய்பிறை ஆகிய இரண்டு திதிகள்	திதி: வளர்பிறை மற்றும் தேய்பிறை ஆகிய இரண்டு திதிகள்

மேற்குறிப்பிட்டுள்ள ஐந்து உறுப்புகளையும் தற்காலத்திய நாள் காட்டியில் (தினசரி காலண்டரில்) காணலாம்.

தொடர்ந்து கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ள நாட்காட்டியை காணலாம்..

கோயம்புத்தூர் மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி – I

தொடர் எண் : 783-2003

கி.பி.1350 ஆம் ஆண்டு

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ சகாத்தம் ௲உ௱௭௰உ விரோதி (ஸம்வத்ஸரத்து) கற்கடக நாயிற்று பூர்வபக்ஷத்து திதியும் நாயிற்றுக் கிழமையும் பெற்ற மூலத்து கொங்கு மண்டலத்து வட பரிசார நாட்டு உடையார் அவிநாசி ஆளுடைய நாய(னார்) சோழ மண்ட,,,,
2. வருடம் - விரோதி ஆண்டு (தமிழ் மாதங்கள் 60ல் 23 ம் ஆண்டு)
3. மாதம் - கற்கடக ஞாயிறு (ஆடி மாதம்) (கடக ராசியில் சூரியன் சஞ்சாரம் செய்யும் மாதம்)
4. கிழமை - ஞாயிற்றுக் கிழமை
5. நக்ஷத்திரம் - மூலம் நட்சத்திரம்
6. திதி - பூர்வ பக்ஷம் (வளர் பிறை)

செய்தி : உணவு படைத்தல்.

கல்வெட்டில் விஜய தசமி திருநாள்

திருக்கோயில்களில் உள்ள கல்வெட்டுகள் பெரும்பாலும் திருவிளக்கு எரிப்பதற்கான நிதி தேவை பூர்த்தி செய்யவும், வரி வசூல் மற்றும் நிலக்கொடை

பற்றியும் குறிப்பிடுகின்றன. அவற்றோடு சிறப்புப் பூசைகள் பற்றிய குறிப்புகளும் நமக்கு தருகின்றன. அவற்றுள் விஜய தசமி, தசரா என்று அழைக்கப்படும் பண்டிகை பற்றிய நாள் குறிப்பும் பெருமுக்கல் கல்வெட்டுல் காணமுடிகிறது. இதன் விவரம் பின்வருமாறு காணலாம்.

விஜய தசமி

ஒவ்வொரு ஆண்டும் புரட்டாசி மாதம் அமாவாசைக்கு அடுத்த நாள் முதல் பத்து நாட்கள் நவராத்தி விழாவாக ஒவ்வொரு கோயில் மற்றும் வீடுகளில் கோலாகலமாக கொண்டாடப்படும் விழாவாகும். விழாவின் கடைசி நாளான 10வது நாள் விஜய தசமியாக இன்றளவும் கொண்டாடப்படுகிறது. இவ்விழாவினைப் பற்றிய நாட்குறிப்பு பெருமுக்கல் கல்வெட்டு (121/1992) இல் காணப்படுகிறது.

பெருமுக்கல் கல்வெட்டுகள் (121/1992)

இப்புத்தகம் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் வெளியிடப்பட்டுள்ளது. இதில் இடம் பெற்றுள்ள கல்வெட்டு தொடர் எண்: 121/1992, ஊர் கல்வெட்டு எண் – 53. இக்கல்வெட்டு இருக்கும் இடம், தென்னார்க்காடு மாவட்டம், திண்டிவனம் வட்டம், பெருமுக்கல் என்னும் ஊரில் மலையடிவாரத்தில் உள்ள சிவன் கோயில் கருவறை தெற்குச் சுவர்.

இக்கல்வெட்டின் மொழி மற்றும் எழுத்து - தமிழ். இக்கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள அரசு விஜயநகரம் மற்றும் அரசர் சதாசிவ தேவ மகாராயர். இக்கல்வெட்டின் காலம் பொ.ஆ.1548.

கல்வெட்டு

1. ஸுப மஸ்
2. த்து சுவஸ்தி
3. ஸ்ரீமத் சதாசிவ
4. தேவ மகாராய
5. ர் பிறிதி இராச்சிய
6. ம்(ப்) பண்ணி அ
7. ருளா நின்ற ஃசா
8. காற்த்தம்
9. சுமி அன் மேல்
10. செல்லா நின்
11. ற கீல க ஞு க
12. ன்னி நாயற்று
13. பூறுவ பக்ஷத்து
14. தெசமியும் ரெபதி
15. யும் பெற்ற புத(ன்)
16. வாரத்து நாள்
17. பெருமுக்கில்
18. திருமலாவுடை
19. ய தம்பிரானாற்
20. கு கால சந்திக்
21. கு வேட்டை
22. வல்லம்
23. மாணிக்க வா
24. ணாதராயர் கு
25. ..... சாதமாக
26. வேட்டை வல்ல
27. த்து சீர்மையா
28. ன தேவர் பிடா
29. கைகுள்ப் பக்கம்
30. சத்திராதித்த வரை
31. க்கும் நடக்க க(டை)
32. வது ஆகவும் இது
33. க்கு .அகுதம் பண்ணி
34. னவன் காராம் பசு.....

இக்கல்வெட்டில் குறிக்கப்பெற்ற நாள் மற்றும் செய்திகள்

1. வருடம் - கீலக ஆண்டு (தமிழ் மாதங்கள் 60ல் 42 ம் ஆண்டு)
2. மாதம் - கன்னி ஞாயிறு (புரட்டாசி மாதம்) (கன்னி ராசியில் சூரியன் சஞ்சாரம் செய்யும் மாதம்)
3. கிழமை - புதன் கிழமை
4. நக்ஷத்திரம் - ரேவதி நட்சத்திரம்
5. திதி - பூர்வ பக்ஷம் (வளர் பிறை தசமி திதி)
6. அமாவாசையிலிருந்து பத்தாவது நாள்

இக்கல்வெட்டில் சந்திராதித்த (சந்திரன் சூரியன்) உள்ள வரை தொடர்ந்து புரட்டாசி மாதம் வளர்பிறை தசமி திதியில் இறைவனுக்கு சந்தி கால பூசை நடத்திட வேண்டும் என்றும் இத்திருப்பணிக்கு தீங்கு செய்பவர் காராம் பசுவை கொன்ற பாவத்திற்கு ஆளாவர், என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

இவ்வாறு இக்கோயிலில் நடைபெற்ற சிறப்பு பூசை தற்காலத்தில் கொண்டாடப்படும் விஜயதசமி நாளோடு ஒப்புநோக்கலாம்.

நிலம் ஆவணப்படுத்தும் முறை

பல கல்வெட்டுகளில் நிலம் கொடையளிக்கும்போது நாள் மற்றும் எல்லைகள் குறிப்பிடுப்பட்டுள்ளன. இது தற்கால நிலம் உள்ளிட்ட பிற ஆவணங்களின் முறையோடு ஒப்பிடலாம். இதன் வாயிலாக நாள் குறிப்பிடுவதன் அவசியத்தை உணரலாம்.

பின்வரும் கல்வெட்டு இதன் எடுத்துக்காட்டாக கொள்ளலாம்.

காஞ்சிபுரம் மாவட்டக் கல்வெட்டுகள் (2/1999)

இப்புத்தகம் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் வெளியிடப்பட்டுள்ளது. இதில் இடம் பெற்றுள்ள கல்வெட்டு தொடர் எண்: 2/1999, ஊர் கல்வெட்டு எண் – 1. இக்கல்வெட்டு இருக்கு இடம், காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், நென் மேலி என்னும் ஊரில் அவிமுக்தீசுவரமுடையார் கோயில் உண்ணாழிகை வடக்கு, மேற்கு, தெற்குக் குமுதப்பட்டை. இக்கல்வெட்டின் மொழி - தமிழ் மற்றும் எழுத்து – கிரந்தம் கலந்த தமிழ். இக்கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள அரசு பாண்டியர் மற்றும் அரசர் விக்கிரம பாண்டியன்.

கல்வெட்டு

1. ஸ்வத்திக ஸ்ரீதிருவாயக்கேழ்வி முன்னாக கோமாறபன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ விக்கிரமபாண்டிய தேவற்கு பாண்டு அ வது கும்பநாயிற்று பூறுவ பஷத்து பிறதமையும் திங்கட்கிழமையும் பெற்ற சதையத்து நாள் ஜயங்கொண்ட சோழ மண்டலத்து களத்தூர்

தமிழ தரையர்களொம் இக்கோட்டத்து வல்லநாட்டு எங்கள் பாணியான நென்மலியான புண்டரிக நல்லூர் உடையார் அபிமுக்தீசுரமுடைய நாயனார் கொயிலுக்கு இக்கோயில் கா

2. ணி உடைய சிவப்ராம்ம ண(ன்) காஞ்சி குறி காஸ் யப(ந்) காக்கு நாயகப் பட்டனான ஆண்டார் ஆவுடைதேவர் எழுன்தருளுவித்த புண்டரிக நாயகற்கு திருப்படி மாற்றுக்கும் பலபணி நிமந்தங்களுக்கும் நாங்கள் திருநாமத்துக்காணித் தேவதானமாக இன்நென்மலியில் விட்ட நிலமாவது கீழ் பாற்கெல்லை இந் நாயனார் பழன் தேவதானமான சேரமானுக்கு மேற்கு தெற்கு நோக்கிப் போன காலுக்கு மேற்கும் தென்பாற்கெல்லை சத்துருகாலன் கிணற்றுக்கு வடக்கு மேற்கு நோக்கிப் போ(ன) வதிக்கு வ

3. டக்கும் மேல்பாற்கெல்லை பள்ளக்காலுக்குக் கிழக்கும் வடபாற்கெல்லை ஏரிக்கரைக்கு தெற்கு பழந்தேவதானத்திலே உறவும் ஆக இந்நாற்பாற் கெல்லைக்கு நடுவுபட்ட நிலம் பலதடியினால் குழி இரண்டாயிரத்து தொள்ளாயிரத்து ஒருபத்து இரண்டும் இதில் நிலவேற்றதாழ்வும் இதில் மேனோக்கின மரமும் கீனோக்கின கிணறும் உட்ப(ட) இந் நாயனார்க்கு திருநாமத்துக்காணி இறையிலி தேவதானமாக சன்திராதித்தவரை செல்வதாக சிலாலேகை பண்ணிக்குடுத்தோம் தமிழதரையர்களோம், இத்தம்மம் ரக்ஷித்தான் ஶ்ரீ பாதங்கள் எங்கள் தலைமேலின இத்தம்மம் பன்ஹேஸ்சுவர ரசைஷ.

   1. வருடம் - விக்கிரம பாண்டியனுடைய 8 ஆம் ஆட்சி ஆண்டு
   2. மாதம் - கும்ப ஞாயிறு (மாசி மாதம்) (கும்ப ராசியில் சூரியன் சஞ்சாரம் செய்யும் மாதம்)
   3. கிழமை - திங்கட் கிழமை
   4. நக்ஷத்திரம் - சதயம் நட்சத்திரம்
   5. திதி - பூர்வ பக்ஷம் (வளர் பிறை பிரதமை திதி) அமாவாசை அடுத்த நாள்

தமிழ்நாட்டின் இடைக்காலத்து வரலாற்றில் நீர்ப்பாசனம்

கி.இரா.சங்கரன்
தலைவர் (ஓய்வு)
வரலாற்றுத்துறை
ஏ.வி.சி.கல்லூரி (தன்னாட்சி)
மயிலாடுதுறை-609305
rajamuthusankaran@gmail.com

சுருக்கம்

மனிதகுலத்தின் வாழ்விற்கு தேவையான உணவு உற்பத்திக்கு மட்டுமல்லாமல் பிறவகைத்தொழில்களுக்கும் நிலமும் நீரும் முதன்மையான மூலப்பொருள்கள் (primary resources) இவற்றில், நீர் மிகவும் முதன்மையானது. எனவேதான், நீர்மலிந்து கிடைக்கும் ஆற்றங்கரைகளில் நாகரிகங்கள் தோன்றின. ஆறுகளின் பெயர்களில் நாகரிகங்கள் அறியப்படுகின்றன. ஆனால், கிடைக்கும் நீரினை அறிவியல்பூர்வமாக சிக்கனமாக பயன்படுத்துவதற்கான நுட்பங்கள் தேவை. இந்தியத் துணைக்கண்டம் பொறுத்து சிந்துவெளி, கங்கை சமவெளி, கிருஷ்ணா-கோதாவரி ஆற்றுப்படுகை, அடுத்து பாலாறு-தெண்பெண்ணை, காவிரி, வைகை-தாமிரவருணி என்று நாகரிகங்கள் தோன்றிய நிலப்பரப்புகளை வரிசைப்படுத்தலாம். மேலோட்டமாக பார்த்தால், அங்கெல்லாம் ஆற்றுநீர், வாய்க்கால்கள் வாயிலாக விளைநிலங்களுக்கு பாய்ந்தன என்பதனைக் காணலாம். தமிழ்நாட்டு வரலாறு பொறுத்து தமிழர்கள் தொன்றுதொட்டு நீரினைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் முறையினை அறிவது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது. இதற்கான சான்றுகள் கல்வெட்டுகள் வழியே பெறப்பட்டன. கள ஆய்வுகளில் பாசனத்தொழில் நுட்பங்களை அறியமுடிந்தது. இவற்றினடிப்படையில் காலம் நெடுக தமிழ்நாட்டில் வேளாண்மைக்கு பயன்படுத்தப்படும் நீர்ப்பாசனத்தொழில் நுட்பங்கள் விளக்கப்படுகின்றன. இதற்கான கலைச்சொற்களாக ஆறு, ஏரி, குளம், வாய்க்கால், குமிழி, மடை, தலைவாய், தலைவாய்ச்சான்றார், ஏரிவாரியப்பெருமக்கள் வதி-வாய்க்கால்-கண்ணாறு-சதிரம் போன்ற சொற்களும் அமைந்து இந்நுட்பத்தினை புரியவைக்கின்றன.

இதற்கான ஆய்வுக்களங்களாக, முதலில் காவிரி வடிநிலப்பகுதியான சோழநாட்டிற்கும் பாண்டிநாட்டிற்கும் இடையில் அமைந்த வரண்ட புதுக்கோட்டைவட்டாரமும், நீர்வளம் கொழிக்கும் காவிரி வடிநிலப்பகுதியும், அடுத்து பல்லவர்கள் ஆண்ட தொண்டை மண்டலமும்

பாண்டியர்களின் பாண்டி மண்டலமும் அமைகின்றன. பொ.ஆ. 800 முதல் பொ.ஆ1400 வரையிலான காலகட்டம் ஆய்விற்கான காலமாக தெரிவுசெய்யப்பட்டது.

வளமையான காவிரிப்பகுதியில் பண்டுதொட்டு வாய்க்கால் முறை பாசனமும், மாறாக, வரண்ட புதுக்கோட்டை பகுதியில் குளத்துமுறை பாசனமும் இன்றும் வழக்கில் உள்ளன. தமிழ்நாட்டின் மேற்குபகுதியான கொங்கு பகுதியில் கிணற்றுமுறை பாசனம் பயன்பாட்டில் இருந்து வருகிறது. பாண்டி மண்டலத்திலும் தொண்டை மண்டலத்திலும் வாய்க்கால் பாசனமும் குளத்துமுறை பாசனமும் பரவலாக உள்ளன. இது தமிழ்ச்சமூக வரலாற்றில் ஒரு அறுபடாத தொடர்ச்சி எனலாம். வெவ்வேறு பாசனமுறைகளை அங்கங்கு அமைந்திருக்கும் நிலப்பரப்பியலே நிர்ணயிக்கின்றன. இதனை மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையிலான உறவு (man-environment relationship) என்று கூறலாம். குளத்துமுறை பாசனம் பெரிதும் பயன்பட்டில் உள்ள புதுக்கோட்டை வட்டாரத்தின் கல்வெட்டுகளும் குமிழி-மடைகளும்….. குளத்துமுறை பாசனத்தினைப் புரிந்துகொள்வதற்கு பெரிதும் பயனுள்ளவை. அவ்வட்டாரத்தில்தான் நீரினை பகிர்ந்தளிக்கும் (turn-system in water distribution) முன்முறை, முட்டுமுறை, போகுமுறை, முறைவிழுக்காடு போன்ற கல்வெட்டுத்தொடர்கள் பதியப்பட்டுள்ளன. நாழிகை (24.1/2 நிமிடங்கள்) என்ற சொல்லால் நீர்விடும்நேரம் கல்வெட்டுகளில் பதிவாகியுள்ளது. குளங்கள் உருவாக்கப்பட்ட தொழில் நுட்பத்தினை கள ஆய்வுகள் உணர்த்துகின்றன.

வாய்க்கால்முறை பாசனத்தில் காவிரி வடிநிலப்பகுதியின் வேளாண்குடிகள் நீரினை சிக்கனமாகப் பயன்படுத்தியதனை கல்வெட்டுப் பாடங்களும் கள ஆய்வுகளும் விளக்குகின்றன. வதி-வாய்க்கால்-கண்ணாறு-சதிரம் என்ற வாய்க்கால்முறை நிலக்கிடப்பு (layout)) தலைவாய், பெருவாய்க்கால், சிறுவாய்க்கால், இடைவாய்க்கால், உட்சிறுவாய்க்கால் போன்ற அமைப்புகள் காவிரி வடிநிலம் மழைக்காலங்களில் வெள்ளக்காடாவதை தடுத்தன அல்லது மட்டுப்படுத்தின எனலாம். ஆற்றிலிருந்து நீரினை வாய்க்கால்களுக்கு திருப்பி விடுவதனை தலைவாயர், தலைவாய் சான்றார் என்ற குழுவினரும், ஏரிவாரியப் பெருமக்கள் என்ற குழுவினரும் பெரும்பங்காற்றினர் என்பதனையும் அறியமுடிகிறது. வேளாண்குடிகள், வெட்டி, வேதனை, குலைவெட்டி, குரப்பு வெட்டி, ஆற்றங்கரைதேவை போன்ற உழைப்பினால் வெள்ளத்தில் உடைபட்ட ஆற்றங்கரைகளை சீர் செய்தனைர் என்பதனையும் கல்வெட்டுச் சான்றுகள் விளக்குகின்றன. இதனடிப்படையில் தமிழ்நாட்டின் நீர்ப்பான வரலாற்றினை மக்கள்வரலாறு எனலாம். இதில் ஆட்சியாளர்களும், தனியாரும் ஒருங்கிணைபாளர்களாக இயங்கியுள்ளனர் போல் தெரிகிறது.

நீர்ப்பாசனத்தினை விளக்கும் கல்வெட்டுச் சொற்கள்

நீர்நிலைகளைச் சுட்டும் கல்வெட்டுச் சொற்கள்

ஏந்தல், ஏம்பல், ஊருணி, குண்டு, குழி, பள்ளம், தடாகம் போன்ற சொற்கள் குளத்தினைச் சுட்டுகின்றன. இவற்றைக்குறிக்கும் பொதுச்சொல் குளம்.

வாய்க்கால்களைச் சுட்டும் கல்வெட்டுச்சொற்கள்

ஆற்றுவாய்க்கால், இடைவாய்க்கால், உட்சிறுவாய்க்கால், ஊர் வாய்க்கால், ஊடறுத்துப்புறவூர்களுக்குப் போனவாய்க்கால், குளத்து வாய்க்கால், நாட்டுவாய்க்கால், நாட்டார்வாய்கால்.

விளைநிலங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட நீர் பற்றிய கல்வெட்டுத் தொடர்கள்

இந்நிலத்துக்கு நிலபோதியிலே நீர், நிலத்தால் உள்ளநீர், நிலம்பெறும் தண்ணீர், நிலவிழுக்காடு நீர், நீர்க்கீய்ந்தவாறு நீர்,கிணற்றில் செம்பாதி.

முறைவைத்து நீர்பகிர்தல் பற்றிய தொடர்கள்

முட்டுமுறை, முன்முறை, முறைவிழுக்காட்டிலே, போகுமுறை

பாசனக் குளங்களை பராமரிப்பதற்கென ஒடுக்கப்பட்ட நிலங்கள்

ஏரிப்பட்டி, ஊருணிப்புறம், குமிழித்துடவல், குளப்பட்டி.

நீர் மேலாண்மையினை செய்த குழுக்கள்

ஏரிவாரியப் பெருமக்கள், குளத்தார், தலைவாயர், தலைவாய்ச்சான்றார், அரையர்கள்

ஆற்றின் வெள்ளப் பாதிப்பு பற்றிய கல்வெட்டுத் தொடர்கள்

ஆறுடைந்து வெள்ளப் பெருஞ்சாவி, ஆறுடைந்து மணலிட்டு, காவேரிகுலை உடைந்து, காவேரி ஆறுடைந்து, ஆற்றங்கரை குலையும் மண்ணட்டி

வழிவழியாக நீர்பாயும் முறை பற்றிய கல்வெட்டுத் தொடர்கள்

பழம்படியே நீர்பாயப் பெறுவதாகவும், பண்டொடி பழநீர்பாயப் பெறாவதாகவும், பண்டுநீர் வாரும்படியே வாரவும்

கட்டுரை

மனித குலத்தின் வாழ்க்கைக்குத் தேவையான உணவு உற்பத்திக்கு நீரும் நிலமும் முதன்மையான மூலவளங்கள். இவற்றில் நீர் மிகவும் முதன்மையானது. எனவேதான், வரலாற்றில் நீர்மலிந்து கிடைக்கும் ஆற்றங்கரைகளில் நாகரிகங்கள் தோன்றின. ஆனால், நாகரிக வளர்ச்சிக்கு

கிடைக்கும் நீரினை சிக்கனமாகப் பயன்படுத்தும் நுட்பங்கள் தேவை. இந்தியத் துணைக்கண்டம் பொறுத்து சிந்துவெளி, கங்கைவெளி, கிருஷ்ணா-கோதாவரி ஆற்றுப்படுகை, அடுத்து பாலாறு-தென்பெண்ணை, காவிரி, வைகை, தாமிரபரணி என்றுஆற்றுநாகரிகங்களை வரிசைப்படுத்தலாம். அங்கெல்லாம் ஆற்றுநீர், வாய்க்கால்கள் வாயிலாக விளைநிலங்களுக்கு பகிரப்பட்டது என்பதனை அறியமுடிகிறது.தமிழ்நாட்டுவரலாறு பொறுத்து தொன்றுதொட்டு தமிழர்கள் நீரினை சிக்கனமாக பயன்படுத்தும் முறையினை பின்பற்றி வருகின்றனர். இக்கட்டுரைக்கு தமிழ்நாட்டின் இடைக்காலம் (கி. பி.800 முதல் 1400 வரை) தேர்வு செய்யப்பட்டது. இதற்கான சான்றுகள் தமிழ்நாட்டின் கல்வெட்டுகளில் பெறப்பட்டன. கள ஆய்வுகளில் நீர்ப்பானத் தொழில்நுட்ப கூறுகள் அறியப்பட்டன. இதனடிப்படையில் தமிழ்நாட்டின் வரலாற்றில் வெவ்வேறு நிலப்பரப்பியலில் வழக்கத்தில் இருக்கும் நீர்ப்பாசன முறைகளையும் அவற்றின் தொழில்நுட்பத்தினையும் விளக்கும் முயற்சியும் அத்தொழில்நுட்பங்களை விளக்கும் கல்வெட்டுச் சொற்களை கண்டறியும் முயற்சியும் மேற்கொள்ளப்படுகிறது.

தமிழ்நாட்டில் வெவ்வேறு நீர்ப்பாசன முறைகள் பண்டுதொட்டு வழக்கத்தில் இருந்து வருகின்றன. காவிரி வடிநிலப்பகுதியில் (Kavery Delta) வாய்க்கால்முறை பாசனமும் வரண்டநிலப் பகுதியான புதுக்கோட்டைப் பகுதியில் குளத்துமுறை நீர்ப்பானமும் காலம் காலமாக பயன்பட்டில் இருந்துவருகின்றன. இப்பகுதி சோழநாட்டிற்கும் பாண்டிநாட்டிற்கும் இடைப்குதியாகும் (intermediate-zone). தொண்டைமண்டலமும் பாண்டிமண்டலமும் ஒரே மாதிரியான நிலப்பரப்பியலை (topography) கொண்டவை. இவ்விருநிலப்பகுதிகளும் வாய்க்கால்முறை பாசனத்தையும் குளத்துமுறை பாசனத்தையும் கொண்டவை/கொண்டிருப்பவை. கொங்குபகுதியில், கிணற்றுமுறை பாசனம் பயன்பாட்டில் உள்ளது.

தமிழ்நாட்டின் நிலக்கிடப்பு (layout) ஐந்து திணைகளாக இலக்கியங்களில் பிரித்தறியப்பட்டிருப்பினும் நிலப்பரப்பியல் பூர்வமாக அரசகுலத்துப்பெயர்கள்/ குடிப்பெயர்களின் பின்னணியில் சோழமண்டலம், பாண்டிமண்டலம், தொண்டைமண்டலம், மலைமண்டலம் (சேரமண்டலம்) என்று வரலாற்றில் அறியப்பட்டுள்ளது. இவற்றில், சோழரின் தலைநகரம் தஞ்சாவூர் காவிரிக் கரையிலும் பாண்டியரின் தலைநகரான மதுரை வைகைக்கரையிலும் பல்லவரின் தலைநகரான காஞ்சிபுரம் பாலாற்றங்கரையிலும் அமைந்தன. இங்கு, மழைநீரினை குளங்களில் சேமித்து பாசனத்திற்கு பயன்படுத்தும் புதுக்கோட்டை வட்டாரமும் வேளாண்மைக்கு வாய்க்கால்முறை பாசனத்தினைப் பயன்படுத்தும் காவிரி வடிநிலப்பகுதியும் கட்டுரையின் முதன்மைக் கருப்பொருளாக அமைகின்றன. பாண்டிமண்லத்திலும் தொண்டைமண்டலத்திலும் குளத்துமுறை நீர்ப்பாசனமும் வாய்க்கால்முறை நீர்ப்பாசனமும் கலந்து வழக்கில் உள்ளன.

கொங்குபகுதி ஏற்றநீர்ப்பாசனத்தினை பெரிதும் பின்பற்றியது. இது, தனித்த ஆய்விற்கு உட்பட்டது. என்பதால், இக்கட்டுரையில் இடம்பெறவில்லை.

புதுக்கோட்டைவட்டாரத்தில் பாசனமும் தொழில்நுட்பமும்

குறைவான மண்வளமுடைய வரண்ட இடைநிலைப் பகுதியான (intermediate-zone) புதுக்கோட்டையில் மாரிக்காலத்து நீரினை வேளாண்மைக்கு தேக்கிவைப்பதற்கான குளங்கள் பரவலாக கல்வெட்டுகளில் பதியப்பட்டுள்ளன. அந்நீர்நிலைகள், குளம், ஏரி, ஊருணி, குண்டு, குழி, பள்ளம், ஏம்பல், ஏந்தல் என்று பலவாறாக அடிக்கடி பதிவாகியுள்ளன. அங்கு, கி.பி.800-600 காலகட்டத்தில் குளம் அதிகமாக 168 முறையும் ஏரி 35 முறையும் ஊருணி15 முறையும் பதிவாகியுள்ளன. இவற்றில் குளங்கள் கி.பி.1200-1400 காலகட்டத்தில் மொத்தம் 119 முறை கல்வெட்டில் இடம்பெற்றுள்ளன. இக்காலகட்டத்தில்தான் புதுக்கோட்டைவட்டாரத்தில் பலகல்வெட்டுகள் பாசனம் தொடர்பாக தெளிவான செய்திகளை பதிவாக்கியுள்ளன. இங்குள்ள நீர்நிலைகள் பொதுவாக மழைக்காலத்துநீர் தேங்கிநிற்கும் இயற்கையான பள்ளங்களாகும். இவை, அமைந்திருக்கும் நிலவியல் அமைப்பினை (topography) நன்கு அறிந்து அப்பள்ளங்களை குளங்களாகவும் ஏரிகளாகவும் இடைக்காலத்து வேளாண்குடிகள் மாற்றியுள்ளனர். இது, கள ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. சில இடங்கள் இவ்வாறு நீர்நிலைகளாக மாற்றப்படும்போது அவற்றின் கரைகளை உருவாக்குவதில் இவ்வட்டாரத்து மக்கள் ஓர் உத்தியினை பின்பற்றியுள்ளனர். அதாவது, இயற்கையாக அமைந்த கற்பாறைகளை (granite rock) கரைகளாகத் தெரிவுசெய்துள்ளனர். இதற்கு புதுக்கோட்டையில் நார்த்தாமலை என்ற ஊரில் அமைந்துள்ள அணிமத ஏரி (11) நல்ல காட்டாகும். அவ்வட்டாரத்திலுள்ள, மைலாப்பூர், சித்தண்ணவாசல் போன்ற ஊர்களிலும் இதுபோன்ற பாறைகளை கரைகளாக கொண்ட பாசனக்குளங்கள் உள்ளன. இவ்வுத்தியினால், அதாவது பாறைகளைக் கரைகளாக தேர்வுசெய்வதன் மூலம் கரைகளை கட்டுவதற்கான வேலையாள்களின் எண்ணிக்கையும் உழைப்பும் நேரமும் பெருமளவு மிச்சப்பட்டிருக்கும். இவ்வட்டாரத்தில் பொதுவாக, பாசனக்குளங்கள் ஊரின்பெயர்களால் கல்வெட்டுகளில் சுட்டப்பட்டுள்ளன. கி.பி.800-1800 காலகட்டத்தில் ஓராயிரமாண்டுகளில் 76 குளங்கள் ஊர்களின் பெயர்களில் சுட்டப்பட்டுள்ளன. 45 குளங்கள் தனியார் பெயர்களில் பதிவாகியுள்ளன. பெரும்பாலான ஊருணிகளும், பாசனக்குளங்களாகவே உள்ளன. பொதுவாக, ஊர்க்குளங்கள் குடிநீருக்கானகுளங்களாகவும் பாசனக்குளங்களாகவும் பயன்பட்டில் இருந்துவருகின்றன. இதுமட்டுமன்று, இவ்வட்டாரத்தில் கிணற்றுப்பாசனம் இருந்து வருவதனை கிணறு, துரவு, நந்தவனம், ஊற்றுக் கேணிபோன்ற கல்வெட்டுச் சொற்களால் அறியலாம். கிணறு தோண்டுதல், கிணறு தொட்டல், கிணறு குழித்தல், கிணறு இழிக்கப்படுதல் போன்ற கல்வெட்டுத் தொடர்கள் இதனை விளக்குகின்றன.

கிணற்றிலிருந்து பாசனத்திற்கான நீர் இறைக்கப்படுதல் கிணறிறைவை (596) என்ற கல்வெட்டுத் தொடரால் விளங்கும். ஏத்த இறைவை, ஏத்தம், ஏத்தங்கால், என்ற தொடர்கள் இதனை மேலும் உறுதிப்படுத்துவன (305;489;156). புதுக்கோட்டை பொறுத்து நீர்நிலைகள் அரையர்கள் என்ற குழுக்களின் கட்டுப்பாட்டில் இருந்து வந்ததனை அறியமுடிகிறது. அவ்வரையர்கள் அந்தந்த ஊரின் பெயர்களில் அறியப்பட்டுள்ளனர். கி.பி.1202 இல் கீரனூர்என்ற ஊரின்அரையர்கள் தங்கள் பற்றுநிலங்களில் ஏற்றத்தினை எவரும் அழிக்கக்கூடாது என்று முடிவெடுத்துள்ளனர் (156). அரையர்களின் இயக்கம் பிறகு விளக்கப்படும்.

முறை விழுக்காடு

புதுக்கோட்டை வட்டாரத்தில் ஊராரும் அரையர்களும் நீர்நிலைகளில் சேமித்துவைத்த நீரினை வேளாண்மைக்கு பகிர்ந்தளிக்கும் முறையினை செயல்படுத்தி வந்தனர். முறைவைத்து நீர்வழங்கும்முறை முன்முறை, முட்டுமுறை, போகுமுறைஎன்றும் முறைவிழுக்காட்டிலே (301) என்றும் கல்வெட்டுகளில் விளக்கப்பட்டுள்ளன. ஊரார் பொதுவாக முடிவெடுத்து நீர்வழங்கியமுறைஊர்பொதுவான முட்டுமுறைஎன்று கல்வெட்டில் பதிவாகியுள்ளது (30;258;301;384;258). இம், முறைவிழுக்காட்டில், நீர்வழங்கப்படும் நேரம் ஊருக்கு ஊர் வேறுபட்டது. அந்நேரம் நாழிகை என்ற சொல்லில் குறிக்கப்பட்டுள்ளது. ஒரு நாழிகைஎன்பது 24 1/2 நிமிடங்கள் ஆகும். இந்நீரினைப் பகிர்ந்தளிப்பதில் குமிழி, மடைஎன்ற நுட்பமான அமைப்புகள் பெரிதும் பயன்பாட்டில் இன்றும் உள்ளன. இடைக்காலத்தின் வரலாற்றில் வேளாண்மைக்கு பயன்பட்ட சுமார் 200 பாசனக்குளங்களில் ஏறத்தாழ 30 குளங்களில் உள்ள குமிழி/மடை என்ற அமைப்புகளில் அவை நாட்டப்பட்ட விவரங்கள் கிடைக்கின்றன. அவற்றில்சில, இன்னும் பயன்பாட்டில் உள்ளன என்பதனை கள ஆய்வுகள் நிரூபிக்கின்றன. தேவதான நிலங்களுக்கு நீர்வழங்குதலில் முதன்மை தரப்பட்டதனை முன்முறை தேவதான நீர் பாயப்பெறுவதாகவும் என்ற கல்வெட்டுத் தொடர் விளக்கும். விளை நிலத்திற்கு போதுமான நீர் வழங்கப்பட்டது நிலவிழுக்காடுநீர், இந்நிலத்துக்கு நிலபோதியிலே நீர், நிலத்தால் உள்ளநீர், நிலம் பெறும் தண்ணீர் போன்ற கல்வெட்டுத் தொடர்களால் விளக்கபடுகின்றன (285;405;283;866). நிலத்துக்கு போதுமான நீர்வழங்குதல் பற்றி இந்நிலத்திற்கு நிலபோதியிலே நீர் பாயக்கடவதாக, இக்குளத்தில் நீர்விழுக்காடு போன்ற தொடர்களால் அறியப்படுகின்றன. அதேபோன்று, கிணற்றில் பகிர்ந்தளிக்கப்பட்ட நீர், கிணற்றில் செம்பாதி என்று சுட்டப்பட்டுள்ளது (405;286;314;395).

பாசனக்குளங்களின் பராமரிப்பு

ஊர்ப் பொதுவான பாசனக்குளத்தினை பராமரிப்பதற்கென்று ஒருமுறையினை புதுக்கோட்டையின் வேளாண்குடிகள் பின்பற்றியுள்ளனர். அதன்படி,

குளப்பட்டி, குமிழித்துடவல் (11,28) என்ற கல்வெட்டுச் சொற்கள் கவனம் பெறுகின்றன. இதன்படி, ஊரார் குறிப்பிட்ட அளவுள்ள நிலத்தினை தனியாருக்கு அளித்துள்ளனர். பதிலுக்கு, அந்நிலத்தினை பெற்றவர்கள் அந்நிலத்தின் விளைச்சலில் ஒரு பங்கினை ஊருக்குத் தரவேண்டும். கூடவே, பாசனக் குளங்களை பராமரிக்கும் பொறுப்பினையும் ஏற்கவேண்டும் (59;60;61;71). ஒருமுறை செம்பாட்டு என்ற ஊரின் ஆண்டார்கள் என்ற குழுவினர் ஒரு பாசனக் குளத்தினை வெட்டும் பொறுப்பினைப் பெற்றனர். அதற்காக தேவையான ஆள்களை (குடிகளை) அமர்த்தி அவர்கள் குளப்பட்டியாக பெற்ற நிலத்தினை வேளாண்மை செய்து அதில் வரும் மேல் வாரத்தினை (விளைச்சலில் பெரும்பங்கினை) பெற்றுக் கொள்ளலாம் என்ற உரிமையினையும் பெற்றனர் (477). மற்றொருமுறை விசலூரின் ஊரார், அவூர்க்குளத்தின் குளப்பட்டி நிலத்தினை தனியாருக்கு மூன்றுநாழிகை நேரம் குளத்திலிருந்து நீர்பாயும் உரிமையுடன் விற்றுள்ளனர் (301). முனியந்தை என்ற ஊரின் ஐநூற்றுவர் பேரேரியினைப் பராமரிப்பதற்கு இரண்டு காசுகள் இருப்பாக வைக்கப்பட்டு அதில்வரும் வட்டியினைக் கொண்டு ஆண்டு தோறும் அவ்வேரியினை பராமரிக்கும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது (11). ஆதற்கான இருப்பாக தனியார் ஒருவர் இரண்டு காசுகளை வைத்தார். அதனைக் கொண்டு அக்குளத்தினை ஆழப்படுத்துவதற்கான ஏற்பாடும் செய்யப்பட்டது.

குமிழி/மடைகள்

பாசனக் குளங்களில் இருந்து நீரினைப் பகிர்தலில் குமிழி/மடைகளின் பங்கு பொறியியல் நிலையில் நுணுக்கமானவை. பெரும்பாலான, ஊர்க்குளங்களில் இத்தொழில்நுட்ப அமைப்புகள் உள்ளன. புதுக்கோட்டை அரசு வெளியிட்ட கல்வெட்டுத் தொகுதியில் 60 கல்வெட்டுகளில் குமிழி/மடை கல்வெட்டுகள் பதிவாகியுள்ளன. இவை கி.பி.700-1800 காலகட்டத்தினை சார்ந்தவை. இதுபோன்று, அண்மையில் கல்வெட்டுகளைக் கொண்ட குமிழி/மடைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றின் கல்வெட்டுப் பாடங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அக்கல்வெட்டுகள் பெரும்பாலும் மடைகள் நிறுவப்பட்டது பற்றியும், சீர்செய்யப்பட்டதுபற்றியும் பேசுகின்றன. நாட்டப்பட்டது, புதுக்கியது போன்ற தொடர்கள் இதனை விளக்கும் (ஆவணம்,1-3).

அரையர்கள்

புதுக்கோட்டை வட்டாரத்தின் ஆதிக்ககுழுவினரான அரையர்கள் கி.பி.15-16 ஆம் நூற்றாண்டு காலகட்டத்தில் நீர்ப்பாசனத்தின் மீதான பொறுப்பினை பெற்றனர். அரையர்களுக்கும் ஆட்சியாளர்களுக்கும் இடையிலான உறவினைவிட அரையர்களுக்கும் மக்களுக்கும் இடையிலான உறவு கல்வெட்டுகளில் தெளிவாக பதிவாகியுள்ளன. இவ்வரையர்கள், நாடு

அளவிலான சபைகளில் பங்கேற்றனர் (107;119;139;141;146;169;295;304;313;314). காலம் செல்ல செல்ல வேளாண் ஊர்களையும் கோயில்களையும் பாதுகாக்கும் பாடிகாவல் உரிமையினைப் பெற்றனர் (439;440;454). இவ்வுரிமை பாடிகாவல் சுவந்திரம் எனப்பட்டது. இது அடுத்தகட்டத்தில் குளச்சுவந்திரம் (right on tank), அரசு சுவந்திரம் (ruling right), என்ற உரிமையினை ஈட்டுத்தந்தது. அடுத்து, அரையர்கள் படைப்பற்று தலைவர்களாக மாறினர் (409;439;462). அவர்கள் குளங்களைத் தோண்டுவித்தும், குளத்தின் மிகுநீரினை வெளியேற்றும் கலிங்கு (weir) அமைப்புகளை கட்டுவித்தும் வெள்ளாற்றிலிருந்து குளங்களுக்கு நீர்பாயும் வாய்க்கால்களை வெட்டுவித்தும் வேளாண்பெருக்கத்திற்கு உதவினர் (123;375;478). அப்படி, உமையாண்டி ஊருணி என்ற குளத்தினை வெட்டுவித்தவருக்கு பாடிகாவல் உரிமை (right of protection) வழங்கப்பட்டது. ஓர் ஊரின் வேளாண்மக்கள் மற்றொடு ஊரின் ஊராருக்கு பாடிகாவல் உரிமையினை வழங்கினர். பதிலுக்கு, அவ்வூரார் ஒரு குளத்தினை சீரமைத்தனர் (681). இப்படி, புதுக்கோட்டை வட்டாரத்தில் நீர்ப்பாசனத்து மேலாண்மையினை மக்கள் கூட்டாக செயலாற்றினர்.

தொண்டைமண்டலத்தில் பாசனம்

வரண்ட பகுதியான புதுக்கோட்டையின் நீர்ப்பாசனத்தினை தொண்டைமண்டலத்தோடு ஒப்பிடும்போது புதுவிதமான வரலாற்றுப் போக்கினை அறியமுடிகிறது. அதற்காக பல்லவரின் செப்பேடுகளும் கல்வெட்டுகளும் பயன்பட்டன. அவற்றின் வாயிலாக, கிணற்றுப்பாசனம், வாய்க்கால்பாசனம், குளத்துப்பாசனம் நிலைபெற்றிருந்ததனை அறியமுடிகிறது. பல்லவர்செப்பேடுகள் நீர்நிலைகளை ஏரி, குளம், கேணி, கிடங்கு போன்ற சொற்களால் சுட்டுகின்றன. தடாகம் என்ற சொல் பெருவழக்காக இருந்துள்ளது. ஆற்றிலிருந்து நீர் தரும் வாய்க்கால ஆற்றுவாய்க்கால் என்றழைக்கப்பட்டுள்ளது. ஏரித்தோண்டி, ஏரித்தோண்ட எனும் தொடர்கள் ஏரிகள் புதிதாக தோண்டப்பட்டன என்பதனை விளக்குகின்றன. பிராமணர்களுக்காக புதிதாக பரமேச்சுரமங்கலம் என்ற ஊரினை உருவாக்கி அவ்வூரின் பாசனத்திற்காக பரமேச்சுரதடாகம் என்ற ஏரியும் தோண்டப்பட்டது. இவ்வேரிக்கு பாலாற்றிலிருந்து நீர் கொண்டுவருவதற்கு பெரும்பிடுகு என்ற வாய்க்கால் தோண்டப்பட்டுள்ளது. அதன் தலைவாய், தழைப்பேழை (sluice)என்றழைக்கப்பட்டுள்ளது. தழைப்பேழை மடையோடு ஒப்பிடத்தக்கது. பரமேச்சுரமங்கலம் கொடையளிக்கப்பட்டபோது நீர் உரிமையும் அதோடு பாசனத் தொழில்நுட்பத்தின் மீதான உரிமையும் வழங்கப்பட்டுள்ளது. அம்மங்கலத்து பிராமணர்கள் ஏற்றத்தின் மூலம் புதிதாக வெட்டப்பட்ட வாய்க்காலில் இருந்து நீரினை இறைத்துக் கொள்ளும் உரிமையும் சேர்த்தே வழங்கப்பட்டது. தொடர்ந்து வரண்டகாலங்களில் குளத்திலும் வாய்க்காலிலும் ஊற்றுக்கால் தோண்டிக்கொள்ளவும் உரிமை வழங்கப்பட்டது

(கூரம் செப்பேடுகள், பல்லவர் செப்பேடுகள் முப்பது,1999). இதேபோன்று, காசாக்குடி செப்பேடுகளும் நீருரிமையுடன் பிறவகை உரிமைகளும் சேர்த்தே வழங்கப்பட்டமை பற்றி பேசுகின்றன. இதில், கொடையாளிகள் செய்யாறு, வெகா என்ற இரு ஆறுகளில் இருந்தும் திரையனேரி என்ற நீர்நிலையில் இருந்தும் வாய்க்கால்கள் வழியே நீர்பெறும் உரிமை பெற்றனர். வெள்ளக்காலங்களில் ஆறுகளில் இருந்து மிகுநீரினை வெளியேற்றுவதற்கு வெள்ளக்கால் (weir) தோண்டிக்கொள்ளவும் உரிமை வழங்கப்பட்டது (காசாக்குடி செப்பேடுகள்,பல்லவர் செப்பேடுகள் முப்பது,1999).

இருப்பு

தொண்டைமண்டலத்தில், நீர்நிலைகளை பராமரிப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டன. பொன், நெல், நிலம் போன்றவற்றை ஓர் இருப்பாக (deposition) வைத்து அதன்மூலம் ஈடாகவரும் வட்டியினைக் கொண்டு நீர்நிலைகள் பராமரிக்கப்பட்டன. இதுபற்றிய முதல் கல்வெட்டு கி.பி.768 ஆம் ஆண்டில் பதிவாகியுள்ளது. இவ்விருப்பு, கொடை என்றும் அறம் என்றும் கல்வெட்டுகளில் சுட்டப்படுகிறது (12:34;6:359). பாசனஏரிகளை பராமரிக்கும் பொறுப்பினை ஏரிவாரியபெருமக்கள் ஏற்றனர் என்றும் அறியமுடிகிறது. கி.பி.888இல் உத்தரமேரூர் சபையின் தனியார் ஒருவரிடமிருந்து நூறுபொன் கழஞ்சினை கொடையாக ஏரியினைப் பராமரிக்கும் செலவிற்கு சபையார் பெற்றனர். அவர்கள், ஒவ்வோர் ஆண்டும் கொடையளிக்கப்பட்ட பொன்னிலிருந்து ஈட்டக் கூடிய வட்டியினை கொண்டு வயிரமேகத்தடாகத்தினை ஆழப்படுத்துவதற்கு ஒப்பினர் (6:348). அதுபோல், மற்றொரு ஊரின் ஏரி உடைந்தபோது அதன் உடைப்பினை அடைப்பதற்கு ஏரிவாரியப்பெருமக்கள் ஒத்துக்கொண்டனர் (3-3,4:79).

தொடர்ந்து தொண்டைமண்டலத்தில், நிலங்களுக்கு வழங்கப்படும் நீர் பழம்படியே நீர்பாயப்படுவதாகவும்(4:555) என்றும் பண்டொடி பழநீர் பாயப்பெறுவதாகவும் என்றும் (6:434) சான்றுகளில் குறிக்கப்பட்டுள்ளது. கொடையளிக்கப்பட்ட நிலத்திற்கு போதிய நீர்வழங்குதலை நீர்க்கீய்ந்தவண்ணம் (alloted proposition) என்ற கல்வெட்டுத்தொடர் விளக்குகிறது (7:439;22-2:322). இதுபோல் நீரினை வழங்கும் உரிமையினை சபையாரும் ஊராரும் பெற்றிருந்தனர். சில இடங்களில் முன்பு பாஞ்சுவருகின்ற படியே என்ற தொடர் மேலும் விளக்குகிறது (9:832). ஒருசில சமையங்களில் நிலப்பரிமாற்றத்தின்போது பிற உரிமைகளும் வழங்கப்பட்டன. அதாவது, நீர்பெறுவதற்காக புதிதாக வாய்க்கால்களை வெட்டிக்கொள்ளவும்என்றும் வெட்டப்படக்கூடிய வாய்க்கால்களின் (நாற்சாண்கோல்) அகலமும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. கி.பி.1082 இல் ஓர் ஏரி பெருமடையால் உடைபட்ட போது தனியார் ஒருவர் அதனை செப்பனிட்டுள்ளார் (7:393). உடைபட்ட ஏரி செப்பனிடப்பட்ட செய்தி கரையும் பருமை செய்கைக்கு என்ற தொடரால் விளக்கப்பட்டுள்ளது. அதாவது, கரை திண்மையாக வலுப்படுத்தப்பட்டுள்ளது.

கி.பி.1264இல் வல்லவராயர் என்ற வட்டாரத் தலைவர் பிராமணர்களுக்கான ஒரு அகரத்தினை உருவாக்கி அவர்களுக்கு காணிநிலமும் அதற்கான நீர்ப்பாசன உரிமையினையும் வழங்கினார். அத்துடன், ஏத்தமும் இடாவும் இட்டுபாசனத்திற்காக நீர் இறைக்கும் உரிமையினையும் வழங்கியுள்ளார் (17:170).

பாண்டிமண்டலமும் பாசனமும்

தொண்டை மண்டலத்திலும் பாண்டி மண்டலத்திலும் கிட்டத்தட்ட ஒரே காலகட்டத்தில் பாசனவேலைகள் தொடங்கப்பட்டதாக கூறலாம். கி.பி.674 இல் கோச்சேந்தன் என்ற பாண்டியமன்னன் வைகையாற்றில் மதகுஒன்றினை அமைத்து ஆற்றுநீரினை ஓடைக்கு திருப்பியுள்ளார் (38/4). மதகு பற்றிய ஒரு குறிப்பு மணிமேகலையில் (மணிமேகலை,ப.138) மறைமுகமாக குறிக்கப்பட்டுள்ளது.

பாண்டி மண்டலத்தில் அரசர் மட்டுமின்றி வட்டாரத் தலைவர்களும் நீர்ப்பாசன வேலைகளைச் செய்துள்ளனர். அவர்களுள் இருப்பைக்குடி கிழவன் என்பவர் ஒரு குளத்தினை உருவாக்கியபோது நூல் கயிற்றினைப் பயன்படுத்தியது நூலிட்டேறுவித்திதன் குளவாய் செய்வித்தும் என்ற தொடரில் பதிவாகியுள்ளது (14:47). புதுக்கோட்டை வட்டாரத்தில் இயற்கையான பாறைகளை கரையாகப் பயன்படுத்தியதுபோல் பாண்டிமண்டலத்திலும் பாறைகளும் பயன்படுத்தப் பட்டுள்ளது. இத்தேர்வு, ஏரியின் வடகடைப்பாறை என்று சுட்டப்பட்டுள்ளது (5:747).

சோழமண்டலத்தில் காவிரி வடிநிலப்பகுதியில் நீர்ப்பாசனம்

சோழமண்டலத்தில் தொன்று தொட்டு வாய்க்கால்முறை நீர்ப்பாசனம் பயன்பாட்டில் இருந்துவருவதனை சான்றுகள் விளக்குகின்றன. ஆற்றுக்கு நீர்தரும் வாய்க்கால்களை பழவாற்றுக்கே விழுந்தவாய்க்கால், கடம்பாற்றுக்கு பாஞ்சவாய்க்கால் போன்ற கல்வெட்டுத்தொடர்கள் விளக்குவன (13:49,99). இதுவன்றி, ஏரிக்கு நீர்பாய்கிற வாய்க்கால் கரையேரிக்கு நீர்பாயும் வாய்க்கால் போன்ற தொடர்கள் ஏரிகள் வாய்க்கால்கள் மூலம் நீர்பெறுவன என்பதனை உறுதிப்படுத்துகின்றன.

பாசன வாய்க்கால்கள் பல சிறு சிறு வாய்க்கால்களாக பிரிக்கப்பட்டதனை இடைவாய்க்கால், உட்சிறுவாய்க்கால், கண்ணாறு, வாய்க்காலினின்று கிழக்கு நோக்கிப்போன கண்ணாறு போன்ற கல்வெட்டுத் தொடர்களால் அறியலாம். நாட்டார் வாய்க்காலின்று வடக்கு நோக்கிப் போன வதிவாய்க்கால் போன்ற தொடர்கள் வாய்க்கால்கள் பலதிசைகளிலும் ஓடுபவை என்பதனை விளக்கும். தொடர்ந்து, பந்நெடுங்காலமாக நீர்தரும் வாய்க்கால் நியாய நடை வாய்க்கால் எனப்படுகிறது (19:452,371). சோழர் கல்வெட்டுகளில் மொத்தம் 524

வாய்க்கால்கள்பதிவாகியுள்ளன. இவற்றுள்பெருவாய்க்கால்,இடைவாய்க்கால், உட்சிறு வாய்க்கால், கண்ணாறு போன்றமைந்த நிலக்கிடப்பு (layout) அமைப்பு ஒருவகையான வெள்ளத்தடுப்பமைப்பு எனலாம். அதிலும், வதி-வதி-வாய்க்கால்-கண்ணாறு-சதிரம் என்ற நீர்ப்பாசன அமைப்பு (irrigation pattern) சோழநாட்டின் காவிரி வடிநிலப்பகுதியின் ஒரு தனித்த (unique) தொழில்நுட்பம் எனலாம். இவ்வமைப்பு, நெற்பயிர் விளைச்சலுக்கென்று உருவாக்கப்பட்ட பாசனஅமைப்பு போலத்தோன்றுகிறது. இவ்வமைப்பு, பெரும்பாலும் பிராமணர்களுக்கு வழங்கப்பட்ட விளைநிலங்களில் மட்டுமே அமைந்திருந்தது என்று சொல்லப்படுவதெல்லாம் அதனை உருவாக்கியவர்கள் வேளாண்குடிகளாவர் என்பதனை உணர்த்தும்.

சோழமாண்டலத்தில் பாசனவாய்க்கால்கள் அரசர்கள், அரசிகள், கடவுளர்கள் பெயரிலும் இருந்துள்ளன என்பதனை கல்வெட்டுகள் பதிவிட்டுள்ளன. முதன்முதலில் வாய்க்கால்களுக்கு பயன்படுத்தப்பட்ட அரசரின் பெயர் முதலாம் ஆதித்தன். அடுத்து, பராந்தகன், அரிஞ்சயன் ,உத்தமசீலி, உத்தமசோழன், குலோத்துங்கசோழன், விமலாதித்தன், கோதண்டராமன் என்று அரசர்களின் பெயர்களில் வாய்க்கால்கள் பதிவிடப்பட்டுள்ளன. கேரளமாதேவி, சோழமாதேவி, வானவன்மாதேவி, புவனமாதேவி, திரிபுவனமாதேவி,செம்பியன் முக்கோக்கிழான் என்று அரசிகள் பெயரிலும் வாய்க்கால்களுக்கு பெயர்கள் இடப்பட்டுள்ளன. இப்பெயரிடும்முறை, நீராட்சியில் அரசகுலத்தினரின் புகழ்/பெருமை படிந்திருக்கலாம் என்ற கருதுகோளினைத் தருகிறது.

கி.பி.888இல் இறையான்வாய்க்கால்என்ற பெயரில் ஒருவாய்க்கால் குறிக்கப்பட்டுள்ளது (5:554). பரமேஸ்வரி, சரஸ்வதி, ஸ்ரீதேவி, வள்ளி, கணவதி, சுப்பிரமண்யர், விக்னேஷ்வரன் என்ற பெயர்களில் வாய்க்கால்கள் இருந்தன. இதுதவிர, வாய்க்காலின் முன்னொட்டாக இராசகேசரி, கேரளகேசரி, விக்கிரமகேசரி என்ற பட்டப்பெயர்கள் இடப்பட்டுள்ளன. அறிஞர்கள் வகுத்த சோழர் ஆட்சியின் இரண்டாம் காலகட்டத்தில் (985-1070) அதிகமான வாய்க்கால்கள் (177) பதிவாகியுள்ளன. இது, சோழர் ஆட்சியில் வாய்க்கால்கள் உருவான உச்சகட்டத்தினையும் வேளாண்பெருக்கத்தினையும் காட்டுவதாகக் கொள்ளலாம். இப்போக்கு, சோழராட்சி நிலைபெற்றதன் வெளிப்பாடு. மொத்தகாலத்திலும் சேர்த்து காவிரி வடிநிலப்பகுதியில் மட்டும் (Chola core-region) 278 வாய்க்கால்கள் பதிவாகியுள்ளன. வதிகளின் எண்ணிக்கை 144 மட்டுமே. வாய்க்கால்கள், நிலச்சரிவிற்கேற்ப (gradient) மேற்கு-கிழக்காக ஓடுவன;வதிகள் வடக்கு-தெற்காக ஓடுவன. வதிஎன்பது உண்மையில் வடிவாய்க்கால் (drainage). வாய்க்கால் (irrigation channel) என்பது பாசனவாய்க்கால். வாய்க்கால்கள் அரச குடும்பத்து நபர்களின் பெயர்களில் சூட்டப்பட்டிருக்க வதிகள் பெரும்பாலும் ஊர்களின்

பெயரால் சுட்டப்பட்டுள்ளன. 48 வாய்க்கால்கள் ஊர்களின் பெயரால் பதிவிடப்பட்டுள்ளன. நாடு அளவிலான வாய்க்கால்கள் நாட்டு வாய்க்கால்கள் எனப்பட்டன. நாட்டார்களின் கட்டுப்பாட்டில் இருந்த வாய்க்கால்கள் நாட்டார் வாய்க்கால்கள் எனப்பட்டன. ஒரே வாய்க்கால் பல ஊர்களின் வழியே ஓடி பாசனத்திற்கு நீர்தந்துள்ளது. அது, ஊடறுத்துப் புறவூர்களுக்குப் போன வாய்க்கால் என்று அழைக்கப்பட்டுள்ளது. தொண்டைமண்டலத்தில், ஏரிவாரியப் பெருமக்கள் பாசன ஏரிகளை பராமரிக்கும் பொறுப்பினை ஏற்றது. சோழமண்டலத்தில் அவர்கள் ஏரிவாயர்கள் என்று அழைக்கப்பட்டுள்ளனர். குளத்தார் என்றும் அழைக்கப்பட்டுள்ளனர்.

சோழமண்டலத்தில், ஆற்றிலிருந்து மதகு/மடைவழியே நீரினை வாய்க்கால்களுக்கு பகிர்ந்தளிக்கும் வேலைகளை செய்பவர் தலைவாய்ச்சன்றார் என்று அழைக்கப்பட்டுள்ளனர். இவர்கள், தலைவாயர் என்றும் அழைக்கப்பட்டுள்ளனர் (13:50). இவ்வட்டாரத்தில், இவ்விளைநிலங்களுக்கு போதுமானநீர் வழங்கப்பட்டதனை நீர்க்கீய்ந்தவாறு என்ற கல்வெட்டுத்தொடர் விளக்குகிறது (கரந்தை செப்பேடுகள்,1999).

நீர் உரிமைகள் கொடையளிக்கப்படும் போது, சோழர்கள் பல்லவரின் பாணியினைப் பின்பற்றினர். காட்டாக, சூளாமணிபன்மவிகாரைக்கு இறையிலி நிலம் வழங்கப்பட்டபோது அந்நிலத்திற்கு போதிய நீர்பாய்வதற்கு புதிதாக ஒரு வாய்க்கால் தோண்டிக்கொள்ளும் உரிமையும் வழங்கப்பட்டது. ஆனைமங்கலத்திற்கு பாயக்கல்லின இராஜராஜன் வாய்க்கால் என்ற தொடர் இதனை விளக்குகிறது (22:34). ஆறுகளிலில் இருந்து வாய்த்தலைகள் வழியே நீர் வெளியேறும் முறைபற்றி காவிரியின் வடிநிலப்பகுதியில் கிடைக்கும் கல்வெட்டுகளில் செய்திகள் கிடைக்கின்றன. ஆற்றிலிருந்து நீர் வெளியேறும் இப்பகுதி தலைவாய்க்கால் என்றும் அதிலிருந்து பிரியும் வாய்க்கால் உவன்றி வாய்க்கால்என்றும் அறியப்பட்டுள்ளன (2:99;24:142;296/1917/113/1938-39;276/1727). ஆற்றிலிருந்து தற்காலிகமாக நீரினைத் திருப்பிவிடுவதற்கு குரம்பு என்ற அமைப்பினை ஆற்றின் குறுக்கே அமைத்தனர். கல்வெட்டுகளில் குலையும் குரம்பும் என்ற தொடரால் இவ்வமைப்பு குறிக்கப்பட்டுள்ளது (5:518 ;24:99;219/1899/509/1920;293;1908;126/1938). ஆற்றங்கரைகள் உடைந்த போதெல்லாம் அவற்றைப் பழுது பார்க்க ஆற்றங்கரை, ஆற்றுக்குலை, ஆற்றங்கால், ஆற்றுக்கால்வெட்டி, அமஞ்சி போன்ற உடலுழைப்பு வரிகளால் மக்கள் சரி செய்துள்ளனர் (8:739,907;26:739;7:1015;7:440;3:84;24:97) . ஆற்றுப்பாசனம் பெருமளவில் வழக்கிலுள்ள காவிரி வடிநிலப்பகுதியில் வாய்த்தலைகள் மட்டுமின்றி தூம்பு என்ற அமைப்பின் வாயிலாகவும் நீர் வெளியேற்றப்பட்டிருப்பது கல்வெட்டுக் குறிப்புகளால் அறியமுடிகிறது. இதனை, தூம்பினின்றும், மடையினின்றும், குமிழியினின்றும் போந்த வாய்க்கால் என்ற தொடர் விளக்கும் (68/1908;417/1912;376/1909;62/1435).

வாய்த்தலைகள், தலைவாயர்கள் என்ற குழுவினரால் பராமரிக்கப்பட்டுள்ளன (8:692). சபையார்களே கூட சில இடங்களில் தலைவாயராக இயங்கியுள்ளனர் (13:151). அவர்கள், அவ்வாய்த்தலைகளை எங்கள் வாய்த்தலை என்று குறித்துள்ளனர். ஒரு கல்வெட்டில், குளத்தினை மேலாண்மை செய்யும் குழுவினர் குளத்தார் என்று அழைக்கப்பட்டுள்ளனர் (13:50). அவர்கள் நிலத்திற்கு போதுமான நீரினை வழங்கியதனை குளத்தாரே நீர்கீய்ந்தவாறு என்ற கல்வெட்டுத் தொடர் விளக்குகிறது. இதன்மூலம், இங்கும் முறைநீர் வழக்கம் இருந்தது என்பதனை அறியமுடிகிறது. சில நேரங்களில் (7:1031) நீர் வழங்கப்பட்டதோடு போதுமான நீரினை இறைத்துக்கொள்ளும் உரிமையும் வழங்கப்பட்டது. இதில், ஊராரும் இயங்கியுள்ளனர். இதனை, நீர் ஊர்முறைப்படி பெற்றுக் கொள்ளவும் என்ற தொடரும் நீரினை இறைத்துக் கொள்ளவும் என்ற தொடரும் விளக்குகின்றன. முன்பிருந்தபடியே நீர் வழங்கப்படுதல் பண்டுநீர்பாயும் வாய்க்கால், முறைப்படி நீர்பாயும் வாய்க்கால், பண்டுநீர் வாரும்படியேவாரவும் என்ற தொடர்களால் விளக்கப்பட்டுள்ளன (23:490). பண்டாடு பழநடை என்ற தொடராலும் விளக்கப்பட்டுள்ளது (23:489). காலம் நெடுக, ஓர் ஆற்றிலிருந்து பாசனத்திற்கு பாயும்நீர் பழமனாறு ஆற்றில் முன்பிருந்தபடியே நீர் வழங்குதலை பண்டாடு பாயும் நீர் என்று கல்வெட்டில் விளக்கப்பட்டுள்ளது. இன்னொரு சான்றில், பழம்படி பாயும்நீர் பாயவும் வாரும்நீர் வாரவும் என்ற கல்வெட்டுத் தொடர்கள் விளக்குகின்றன (12:179).

சோழர் வெளியிட்ட செப்புப்பட்டயங்கள் நீருரிமையுடன் கூடுதலாக பிற உரிமைகளும் கொடையளிக்கப்பட்டுள்ளதனை குறிப்பிடுகின்றன. அச்செய்திகள் (steriotype) ஒரே மாதிரியான தொடர்களாக பதிவாகியுள்ளன. சோழர்கள் பிராமணர்களுக்கும் சமையம் தொடர்பானவற்றுக்கும் நிலக்கொடைகள் வழங்கியபோது அத்துடன் நீர் உரிமையினையும் நீர் ஆதாரங்களையும் அளித்துள்ளனர். இங்கு, பல்லவர்களை தம் முன்னோராக பின்பற்றியுள்ளனர். இதனை, அன்பில் செப்பேடு தொடக்கம் அறியலாம்.

வரலாற்றில், காவிரிவடிநிலப்பகுதி மழைவெள்ளத்தால் துயருறும் நிலப்பரப்பாகவே இருந்துவருகிறது. இதுபோன்ற இயற்கை பேரிடர்களை இடைக்காலத்தின் வேளாண்குடிகள் சில தொழில்நுட்ப உத்தியினால் முறியடித்தனர். வேளாண் பெருக்கத்திற்கு நீரின் தேவைக்காக புதிய வாய்க்கால்களை உருவாக்கினர். இதனால், நீர் விரையமாகி வெள்ளமாவது தவிர்க்கப்பட்டது. அவ்வாறு, புதிதாக வெட்டப்பட்ட வாய்க்கால்கள் பலவாறாக கல்வெட்டுகளில் பதிவாகியுள்ளன. வீரசோழவடவாறு.... புதிசாக...வெட்டின ஆறு, திருத்துறைப்பூண்டி கொடமுருட்டி ஆறு புது ஆறு வெட்டினது, குலோத்துங்க சோழ நல்லாற்றுக்கு நீர்பாய கல்லின வாய்க்கால்(539/1921; தெ.இ.கோ.க:1071;620/1909) போன்ற கல்வெட்டுத்

தொடர்கள் விளக்குகின்றன. புதிய வாய்க்கால்களும் ஆறுகளும் வெட்டப் பெறுவதால் வேளாண் பெருக்கம் ஏற்பட்டது மட்டுமன்றி வெள்ளப் பெருக்கமும் தவிர்க்கப்பட்டது. இப்பகுதி, வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்பட்டது பற்றியும் கல்வெட்டுகளில் பதிவாகியுள்ளன. ஆறுடைந்து வெள்ளப் பெருஞ்சாவி, ஆறுடைந்து மணலிட்டு சம்வத்சரம் பயிரேற்றி பல்கி, காவேரிகுலை உடைந்து மண்ணும்..இட்டு, ஆறுடைந்து மணலிட்டு பயிர்செய்யவொண் ணாத(தெ.இ.கோ.க:1193), காவிரி ஆறுடைந்து நடுவாய் நீர்நிலையான நிலம்(5:985;120/1896),வதி-வாய்க்கால்-கண்ணாறு-சதிரவருடியும் ஆற்றுக்குலையும் இன்றி வெள்ளம் கொண்டமையால் (214/1911) என்றும், அழியன் ஆற்றிலும் முடிகொண்டான் ஆற்றிலே உடைந்து விழுகிற என்றும் சான்றுகள் விளக்குகின்றன (524/1920).

ஆறுகளும் வாய்க்கால்களும் வெள்ளத்தால் உடைபட்டபோது மக்கள் கூட்டாக அதனை சீர்படுத்தியுள்ளனர். உடைபட்ட கரைகளை அடைப்பதற்கு மண்ணையும்,மணலையும் இட்டு சீர்செய்துள்ளனர். இதனை, பலகல்வெட்டுகள் பதிவிட்டுள்ளன. இவ்வாற்றங்கரை குலையும் மண்ணட்டிநானேபரிசரித்து (68/1915), காவேரிகரையில் நம்மூர்கோலறை செய்யுமிடத்து(6:58), ஆற்று அணைக்கு மண்கொண்ட நிலம் (113/1927) போன்ற கல்வெட்டுத் தொடர்கள் விளக்குகின்றன. தண்டுறை நிலத்து காவேரி குலை உடைந்து மண்ணும்...இட்டு(24:38;10/1948-49) என்ற தொடர் மேலும் விளக்குகிறது. ஆற்றங்கரையினை வலுப்படுத்துவதற்காக தெண்ணைமரங்கள் வெட்டப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதனையும் கல்வெட்டுச்சான்றுகளால் அறியமுடிகிறது (354/1927). காவேரி கரையட்டுவதற்கு திடர்மண்(87/1926) பயன்படுத்தப்பட்டது. அதாவது அடர்த்தியானமண் என்பதனையும் மற்றொருதொடர் விளங்குகிறது.

வேளாண் சமூகம், கூட்டுழைப்பினால் காவேரி கரையினை சீர்செய்தனர் என்பதனை நில ஒபாதிக்கு குடிப்பற்றான நிலத்துக்கு வெள்ளாளர் கரைசெய்யவும் (6:58) என்ற தொடர் விளக்குகிறது. தனியார் ஒருவரும் கரையினை சீர்செய்தனர் என்பதற்கும் கல்வெட்டுப்பாடம் உண்டு (68/1915). வாய்த்தலைகளை சரிசெய்தவதற்கு செயல்பட்ட குழுவினர் வாய்த்தலைபடி குலையரையகளோம் என்ற தொடர் விளக்குகிறது (சி.என்.சுப்பிரமண்யன், ப. 64).

தமிழ்நாட்டின் இடைக்காலத்து வரலாற்றில், நீர்மேலாண்மை பொதுவாக அரசின் இயக்கத்தில் இருந்தது என்று கருதப்பட்டாலும், ஊரார், சபையார் போன்ற நிர்வாக அமைப்புகளும் தலைவாயர், தலைவாய்ச்சான்றார் போன்ற சிறப்புகுழுக்களும், வேளாண்மக்களும் தனியாரும் ஈடுபட்டு பாசனத் தொழில்நுட்பத்தினை நுணுக்கமாக செயல்படுத்தினர் என்பதனை

கல்வெட்டுகள் உறுதிப்படுத்துகின்றன. இதனை, ஒருவகையான கூட்டிசைவு (harmony) என்றும் ஒருங்கிணைந்த ஆக்கம் (coordinating accomplishment) என்றும் கூறலாம்.

சான்றாதாரங்களுக்கான விளக்கம்

புதுக்கோட்டை வட்டாரத்துகல்வெட்டுகள் ஒரு தனித்தொகுதியில் வெளியிடப்பட்டதால் கட்டுரையில் கல்வெட்டுகளின் வரிசை எண்கள் மட்டும் பிறையடைப்பிற்குள் தரப்பட்டுள்ளன. தென்னிந்தியத் தொகுதி கல்வெட்டுகள் பிறையடைப்பில் முதலில் தொகுதியின் எண்ணும் அடுத்து அத்தொகுதியில் உள்ள கல்வெட்டின் வரிசையெண்ணும் தரப்பட்டுள்ளன. அதேபோன்று, கல்வெட்டு ஆண்டறிக்கையில் வெளியிடப்பட்டவை பிறையடைப்பில் கல்வெட்டுச் செய்தியின் வரிசை எண் சாய்கோட்டிற்கு இடப்பக்கமும் அது வெளியிடப்பட்ட ஆண்டு சாய்கோட்டின் வலப்பக்கமும் தரப்பட்டுள்ளன. செப்புப்பட்டயங்களின் ஆதாரங்கள் கட்டுரையின் இடையிடையே தரப்பட்டுள்ளன. தெ.இ.கோ.க என்பது தென்னிந்திய கோயில் கல்வெட்டுகள்.

Bibliograpahy

Primary Sources

Annual Report on Epigraphy Vols.

Epigraphia Indica, Vols.

Inscriptions of Pudukkottai State,1929.

South Indian Inscriptions, Vols

ஆவணம் இதழ்கள்.தமிழகத்தொல்லியல் கழகம், தஞ்சாவூர்.

Secondary Sources

இராசேந்திரன்,கரு.1991-1993,"புதுக்கோட்டை மாவட்டக் குமிழிக் கல்வெட்டுகள் "ஆவணம் இதழ்கள், தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சாவூர்.

இராசேந்திரன்,கரு. 2017, புதுக்கோட்டை வட்டாரக் கல்வெட்டுகள் (புதிய கண்டுபிடிப்பு), பாண்டி நாட்டு வரலாற்று ஆய்வுமையம், மதுரை.

சங்கரன்,கி.இரா. 2011, தமிழக வரலாற்றில் நீர் உரிமை (சங்ககாலம் முதல் கி.பி.1600 வரை), நியூ சென்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை.

Burton Stein.1982, Peasant and Society in Medieval South India, OUP,New Delhi.

Kathiravan.N. and K.R.Sankaran.2018,"Vati and Kannaru in Chola Inscriptions from C.850 CE to 1300 CE : An Interpretation on policies of Water Right" in Journal of Modern Thamizh Research (A Quarterly International Multilaterarl Thamizh Journal,Vol.6,no.3.pp.683-690.

Rajan,K. (et al).2013,Cultural Heritage of Tamil Nadu: Pudukkottai Region,2 Volumes,

Government of Tamil Nadu, Department of Archaeology,Chennai.

Sankaran,K.R.2004,"Some Historical Trends as Gleaned from the Nomenclature of the Canals (vaykkals) in the Chola Inscriptions" in Sri Puspanjalai Dr.C.R.Srinivasan Commemoration Volume, Bharatiya Kala Parakashan, Delhi,pp.266-271.

Sankaran,K.R.2013,Irrigation Techniques in Pudukkottai Region, New Century Book House (P),limited,Chennai.

Subramaniam,C.N.1983,Aspects of the History of Agriculture in The Kaveri Delta C.850 to C.1600. Unpublished M.Phil., Dissertation submitted to Jawaharlal Nehru University, New Delhi.

சோழர் படைமுறையில் குடிபடை

இரா.கோமகன்
செயற்பொறியாளர் (ப. நி) பொ.ப.து.,
தகைசால் பேராசிரியர், கடல்சார்த் தொல்லியல் மற்றும் வரலாறுத்துறை,
தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம்.
erkomagan@gmail.com.

சோழர் படைமுறையில் பல படைகள் இருந்ததற்கான குறிப்புகள் காணக் கிடைக்கின்றன. அவற்றை தெரிந்த, வலங்கை, இடங்கை எனும் வகைப்பாட்டில் பிரிக்கப் பட்டிருந்ததாகக் கருதமுடிகிறது. சோழர் அரசு சிற்றரசுகளை அதாவது குடியரசுகளை மேலாண்மை செய்யும் முடியாச்சியாக இருந்தது. கூறாக்கத்தன்மையில் தான் தன் அதிகாரத்தைக் கொண்டிருந்தது. இந்நிலையில் மாற்றம் இராசராசச் சோழன் காலத்தில் வளநாடுகள் அறிமுகத்தின் வழியாக தொடங்குகின்றது. சிற்றாரசுகள் தங்கள் அளவிலான படைகளைக் கொண்டிருந்தன எனக் கருதயிடமுண்டு. அவை நிலைப்படை என்பதை விட குடிபடைகளாகக் கருதலாம். தேவையான காலங்களில் படைத்தொழிலையும் போர் அற்றக்காலங்களில் குடித்தொழிலையும் செய்தனர் எனலாம். அவர்கள் விருதுப் பெயர்களால் சிறப்பிக்கப்பட்டனர். தெரிந்த X தெரியாத எனும் இருமை எதிர் வகைப்பாட்டில், இவர்கள் தெரியாதபடையினராக வகைப்பட்டனர் எனக் கூறலாம். வலங்கை இடங்கை பிரிவுகளில் இடங்கையினராக இவர்களைக் கருதலாம். வளர்ச்சிப்போக்கில் இவர்களில் தெரிஞ்ச இடங்கையினர் எனும் அங்கீகாரம் கொண்டப் பிரிவினராகத் தோன்றினர். வீரபோகம், படைவிருத்தி, படைப்பற்று போன்ற நிலக்கொடை பெற்றவர்களாகவும் கூறலாம். இப்பிரிவினரில் இருந்தே வணிகர்கள் தங்களுக்கான காவற்படையை தெரிவு செய்தனர் எனலாம். சோழர்கள் தலைநகர், நிர்வாகத் தலைமை யிடங்களில் காணப்படும் குடிப்பெயர்கள் வரலாற்று தொல்லெச்ச சொல்லாடல்களாக உள்ளன. முன்னூட்டுச் சொல்லோடு அரையன் எனும் பின்னூட்டுச் சொல் படைத்தலைவன் எனும் நிலையக் குறிக்கிறது. மழவரையன், பல்லவரையன், கச்சியரையன், முத்தரையன், மலையவிச்சாதரையன், வானவரையன், முனையதரையன், காடவரையன் என்பவை குடிபடைத் தலைவர்களைக் குறிப்பதாக கூறலாம்.

சோழ வரலாற்றை அணுகும் பொழுது 'ஊர்', 'நாடு' அல்லது 'கூற்றம்' எனும் புவியியற் பிரிவைத் தவிர்க்க முடியாது. சோழநாட்டின் அரசியல் புவியியலைப் புரிந்துகொள்ளும் முக்கியத் திறவுகோலாகும். சோழ நிர்வாக அமைப்பில் இது மிக முக்கியமான ஒரு அங்கமாக இருந்தது; மேலும் அக்காலத்து வேளாண்மைச் சமூகத்தின் அடிப்படை அலகாகவும் விளங்கியது.

கி.பி. 1300 ஆம் ஆண்டுக்குள், சோழ மண்டலத்தில் சுமார் 144 நாடுகள் (கூற்றங்கள் உட்பட) குறித்த குறிப்புகள் கிடைக்கின்றன. அதேகாலக் கட்டத்தில், நடு-நாடு பகுதியில் சுமார் 56 நாடுகள் இருந்ததாகத் தெரிகிறது (ஓய்.சுப்பராயலு.2026).

ஊர் என்பது அடிப்படை அளவிலான ஒரு பிரதேச அலகாகும் (territorial unit). இது புவியியல் மற்றும் சமூக ரீதியாக ஒரு நாட்டின் ஒருங்கிணைந்த பகுதியாக விளங்கியது. ஊர் பல குடும்புகளைக் கொண்டிருந்தன. இவை குருதி வழிப்பட்ட உறவுகளால் தீர்மானிக்கப்பட்டது. அவை குடிகள் என வழங்கப்பட்டது.

சங்க இலக்கியத்தில் ‘குடி’ என்று சொல் குறிப்பிட்ட இரத்த உறவு உள்ளவர்களை (பங்காளிகளை) மொத்தமாக குறித்தது என்று கொள்ளலாம். ஆங்கிலத்தில் ‘Lineage’ என்று பெயர்த்து கூறலாம். குடிமுறை என்பது இரத்த உறவு அடிப்படையில் அமைந்திருப்பது ஆகும். இந்த அமைப்பில் உள்ளவர்களுக்கு கடமையும் உரிமையும் உண்டு. குடிவழி உறவு முறை அனைவரையும் இணைத்து நிற்கின்றது. ‘குடி’ சிறு சிறு கூறுகளாகப் பிரிந்து சிறு குடிகள் உருவாகலாம். பல்வேறு கிளைக் குடிகள் உருவாகும் பொழுது பொய்யாகவோ மெய்யாகவோ படைத்துக்கொள்ளப் பெற்ற குடி முதல்வரைப் பெற்றிருக்கும். பெண் கொள்வினை கொடுப்பினை பொருள் கைமாற்றமும், குடியிருப்பு முறையும், உற்பத்திப் பொருளின் மீது கிளைக் குடிகளுக்குள்ளான பிடிப்பும் கிளைக்குடிக்கும் தாய்க்குடிக்கும் இடையில் உள்ள உறவை நிர்ணயிக்கின்றன. குடியின் ஆட்சிக்குழு மூத்தோர்களில் இருந்து உருவாக்கப்பெறும். குடிதெய்வ வழிபாட்டில் செய்யப்படும் சடங்குகளும் இளையோரைக் குடிவாழ்வில் ஏற்றுக் கொள்ளும் சடங்கும் கூடிய அமைப்பில் சிறப்புடையவை.(ர,பூங்குன்றன்;2016)

ஒவ்வொருக்குடிக்கும் ஒரு தலைமை தோன்றியது எனலாம். அவர்கள் ’வேள்’ என்றழைக்கப்பட்டனர். “ஓவ்வொரு தொல்குடிக்கும் ஒரு வேள் இருந்திருக்க வேண்டும். தொல்குடி மக்களுக்கும் வேளுக்குமிடையிலான உறவு இரத்த உறவின் அடிப்படையில் உறுதிப்பட்டு நின்றது. ஆகோள் பூசலில் தான் முதலில் வேள் உருவானான். காலப்போக்கில் பூசல் காலங்கள் மட்டுமன்றி அமைதிக் காலங் களிலும் வேளாகவே நிலைப் பெற்றான்” (ர.பூங்குன்றன்:2016) குடித்தலைமைக்கு குறிப்பிட்ட எல்லை கொண்ட புவிப்பரப்பை வாழ்விடமாக நிலைநிறுத்தவும் அதன் பாதுகாப்பை உறுதி செய்வதிலும் குருதிவழி உறவுகளின் பண்பாட்டை பேணுவதிலும் முனைப்பு காட்டவேண்டியது தேவையாயிற்று. இதன் வழித்தோன்றலே ஊர், நாடு, சேர்ப்பு என்பவை ஆகும். கால்நடை வளர்ப்பும் கனிம வளங்களும் கானக இயற்கைப் பொருட்களும் சமூகப் பொருளியல் வளர்ச்சியை அதிகப்படுத்தின. குடிகளுக்குள் வளர்ச்சி நிலை வேறுபாடுகளைத் தோற்றுவித்தது. செல்வாக்குள்ளக் குடிகள் தேன்றின.

குடிகளுக்குள் பூசல் தோன்றுவதற்கான சூழலை பொருளில் வளர்ச்சி வித்திட்டது. இது குலக்குடி உறவில் மாற்றங்களைக் கொண்டு வந்தது. இது 'வேளிர்' தோற்றத்திற்கான அடிப்படையான. 'வேள்' என்பதின் பன்மை 'வேளிர்' ஆகும்.

சங்ககால தமிழகத்தில் வேள்கள் ஆய்வேள், அழுத்தூர்வேள், அழும்பில்வேள், நெடுவேள் ஆதன், இருங்கோவேள், புடவூர் வேள் மான், மையூர் கிழான் வேள்மான், வெளியன் வேள்மான் போன்ற வேளிர் குறிக்கப்படுகின்றனர். அகநானூற்றில் பதினான்குவேளிர் பதினோரு வேளிர், ஐம்பெரும் வேளிர் எனப் பன்மையிலும் வேளிர்கள் கூறப்படுகின்றனர். வேந்தாற் எழுச்சிக்கு முன்னும் பின்னும் தமிழ்ப்புலத்தில் வேளிர் ஆட்சி நிலைத்திருந்தது எனலாம்.

மருதநிலப்பகுதியில் ஊர், குறிஞ்சி மற்றும் முல்லை நிலப்பகுதி நாடு, நெய்தல் நிலப்பகுதியில் சேர்ப்பு என்பனவற்றை அரசியல் புவிப்பிரிவுகளாக கருதலாம். இந்த அர்சியல் புவிப்பிரிவில் தோன்றிய ஆட்சியாளர்கள் நாடான், ஊரன், சேர்ப்பன் என்ற அழைக்கப்பட்டனர்.

நாடன் என்கோ? ஊரன் என்கோ? /பாடு இமிழ் பனிக் கடல் சேர்ப்பன் என்கோ? / யாங்கனம் மொழிகோ, ஓங்கு வாள் கோதையை? / புனவர் தட்டை புடைப்பின் அயலது / இறங்கு கதிர் அலமரு கழனியும், /பிறங்கு நீர்ச் சேர்ப்பினும், புள் ஒருங்கு எழுமே (ஔவை.சு.துரைசாமிப் பிள்ளை.1947) என்ற புறநானூறு பாடல் அரசன் சேரமான் கோதை மார்பனைப் போற்றிப் பாடப்பட்டுள்ளது. இவரது அரசாள்கைக்குட்பட்டப் பகுதி முல்லை, மருதம், நெய்தல் ஆகியவற்றைக் கொண்டிருந்து என்பதை இப்படி எடுத்துரைக்கிறார்.

வேளிரிலிருந்து வேந்து எழுச்சி நடைபெற்றிருக்க வேண்டும். ஒரு குடியில் வலிமையான வேள் வேந்தாக எழுச்சியுற்றான் என்பதற்கு சோழர்க்குடி வரலாறு சான்றாகிறது."இரும் பனை வெண் தோடு மலைந்தோன் அல்லன். / கருஞ் சினை வேம்பின் தெரியலோன் அல்லன். / நின்ன கண்ணியும் ஆர் மிடைந் தன்றே; நின்னொடு / பொருவோன் கண்ணியும் ஆர் மிடைந்தன்றே; / ஒருவீர் தோற் பினும், தோற்ப நும் குடியே; / இருவீர் வேறல் இயற்கையும் அன்றே; அதனால், / குடிப் பொருள் அன்று, நும் செய்தி; கொடித் தேர் / நும் ஓர்அன்ன வேந்தர்க்கு / மெய்ம் மலி உவகை செய்யும்; இவ் இகலே"(ஔவை. சு.துரைசாமிப் பிள்ளை.1947) "உன்னோடு போர் செய்பவன் பனம்பூ மாலை அணிந்த சேரனும் அல்லன்; வேப்பம்பூ மாலை அணிந்த பாண்டியனும் அல்லன். உங்கள் இருவரது மாலையும் ஆத்தி மாலைதான் (சோழருக்குரியது). எனவே, உங்களில் யார் தோற்றாலும் தோற்பது சோழர் குடியல்லவா? எனப் புறநானூற்றில் கோவூர்கிழார் கூறுவதன் மூலம் சோழர்க்குடிப் பல கிளைக்குடிகளை கொண்டிருந்தது என உணரலாம்.

இதை சிலப்பதிகாரம் உறுதிப்படுத்துகிறது. சேரன் செங்குட்டுவன், ஒரே பகலில் ஒன்பது சோழ வம்சத்து இளவரசர்களை (ஒன்பது கிள்ளி) நேரிவாயில் என்னும் இடத்தில் வென்றதை இளங்கோவடிகளறவிளக்குகிறார்:' நின்/ மைத்துன வளவன் கிள்ளியொடு பொருந்தா/ ஒத்த பண்பினர், ஒன்பது மன்னர்/ இளவரசு பொறாஅர்; ஏவல் கேளார்;/ வளநாடு அழிக்கும் மாண்பினர்; ஆதலின்/ ஒன்பது குடையும் ஒரு பகல் அழித்து, அவன்/ பொன் புனை திகிரி வழிப்படுத்தோய்' (ப. சரவணன். 2008)

இதன் வழி சோழக்குடிகள் பத்து இருந்தன அவற்றில் ஒரு குடியைச் சேர்ந்த பெருநற்கிள்ளிக்கு முடிசூட்ட மற்ற ஒன்பது குடிகளோடு சேரன் போரிட்டான் என விளங்கிக்கொள்ள முடியும்.வேந்தர் எழுச்சியில் தன் கிளைக்குடிகளை இணைத்துக் கொண்டு குலமாக திரட்சி கொண்டதால் குலவரலாறு தோன்றின. சேர,சோழ, பாண்டிய குலங்களில் பல வேளிர்கள் இருந்தனர், அவர்கள் தங்கள் குடிவழிகளை காத்து வந்தனர் எனலாம். 'குடிபடை' தோன்றல் அங்கிருந்து தொடங்குகிறது எனலாம்.

மருதநிலத்துவாழ்விடம் 'ஊர்' எனப்பட்டதற்குச்சான்றாகபட்டினப்பலைப் படலையும் சுட்டலாம். 'விலங்குபகை அல்லது கலங்கு பகை அறியா // கொழும் பல்குடிச் செழும் பாக்கத்துக் // குறும்பல்லூர் நெடுஞ்சோணாட்டு (ரா. இராகவையங்கார்.1951) விலங்கு-பகை அல்லது மக்களை மக்கள் தாக்கும் பகை இல்லாதது சோழநாடு. சோழ நாட்டில் பயிர்களை உண்ணும் விலங்குபகை உண்டு. உட்பகை, வேற்றுநாட்டுப் பகை போன்ற எந்தப் பகையும் இல்லை. கொழுத்துக் கிடக்கும் செல்வக் குடிகள் பலவாகப் பெருகியிருந்தன. இவர்கள் வாழும் செழுமையான சிற்றூர்கள் பலவற்றைக் கொண்டது சோழநாடு.

இதன் மூலம் 'ஊர்' என்பது 'குடி'களின் வழியானது என்பதை உணரலாம். தொடக்கத்தில் ஊர் இரத்த உறவுள்ள ஒரு தனிக்குடி குடியிருப்பாகத் தோன்றி வளர்ச்சி நிலையில் கிளைக்குடிகள் கொண்ட பல குடிகள் வாழும் இடமாக மாறியது எனலாம். இதுவே நிலவுடமை காலத்தில் இரத்த உறவற்றப் பல குடிகள் வாழும் ஊராக மாறியது. இது சிறுகுடி, பெருங்குடி, முதுகுடி, கீழ்க்குடி, மேற்குடி எனும் சொல்லாடல்கள் தோன்றக் காரணமாகியது. குடிகளில் இருந்து 'குடிபடை' திரட்டப்பட்டது.

ஒவ்வொரு ஊருக்கும் ஒரு நாட்டார் இருந்தார். அவரே ஊர் நிர்வாகத்தை கவனித்தார். ஒவ்வொருக் கிளைக்குடிக்கும் ஒரு நாட்டார் இருந்திருக்கிறார் அவர் 'கரை நாட்டார்' என அழைக்கப்பட்டிருக்கிறார். அவர் குடியில் மூத்தவராக இருந்தார். கரைநாட்டார்களில் ஒருவர் ஊர்நாட்டாராகத் தெரிவுசெய்யப் பட்டிருக் கிறார்.இதன் எச்சம் இன்றும் நடுவில் நாட்டுப்பகுதில் உண்டு. குறிப்பாக உடையார் பாளையம் தாலுக்காவில் இருக்கிறது.

"சோழர் படைகள் பற்றிய வரலாற்றுப் பதிவுகள் நன்கு உறுதிப்படுத்தப்பட்டவை. சுந்தர சோழர் (கி.பி. 956-73) முதல் முதலாம்

குலோத்துங்கன் (கி.பி. 1070-1120) வரையிலான சோழ மன்னர்களின் வெற்றிகள் உண்மையானவை. ஆனால், இந்த வெற்றிகளுக்கு ஒரு பிரம்மாண்டமான 'நிரந்தர ராணுவம்' (Standing Army) அவசியமாகவோ அல்லது இருந்ததாகவோ கருதத் தேவையில்லை.படை வலிமையானது சோழ நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்த குறுநில மன்னர்கள், வணிகக் குழுக்கள் மற்றும் பிற உள்ளூர் அமைப்புகளிடமே இருந்தது. இவை அந்தந்தப் பகுதிகளிலேயே திரட்டப்பட்டு கட்டுப்படுத்தப்பட்ட படைகளாக இருந்தன. சோழ மன்னர்கள் ஒரு மையப்படுத்தப்பட்ட ராணுவத்தை முழுமையாகத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்கள் என்பது ஒரு தவறான புரிதலாகும். சோழ நாடு முழுமைக்கும் அதிகாரம் செலுத்தக்கூடிய ஒரு 'மையப்படுத்தப்பட்ட அதிகாரத்துவ அமைப்பு' (Central Bureaucratic Organization) இருந்ததற்கான நேரடிச் சான்றுகள் ஏதுமில்லை." (பர்ட்டன் ஸ்டெயின்:1980).

ஸ்டெயின் உள்ளூர் அமைப்புகளிடம் இருந்து படையணி திரட்டப்பட்டது எனச் சுட்டுவது, ஊர் கிராம அளவில் வாழ்ந்தக் 'குடி'களிடம் இருந்து திரட்டப்பட்ட படையைத்தான் குறிப்பிடுகிறார் எனலாம். இது குடிபடையாகும். இப்படை 'வேளிர்' சார்ந்தது, அதாவது குறுநிலமன்னர்கள் என அழைக்கப்பட்டவர்களால் நிர்வகிக்கப்பட்டது எனலாம். சோழர் படையமைப்பை அணுகும் பொழுது 'தெரிந்த' 'வலங்கை' 'இடங்கை' எனும் சொல்லாடல் கவனத்திற்கு உரியதாகின்றன.

சோழவீரர்கள் பல பெயர்களில் அழைக்கப்பட்டனர். அது அவர்களின் பணியை ஒட்டியப் பெயராக அமைந்திருந்தன. பொதுவாகப் படையாட்கள் 'சேவகன், என்றழைக்கப்பட்டனர். ஆயுதம் தாங்கிய வீரர் 'கைக் கோளர்' என்றழைக்கப் பட்டனர். (AD.913-SII.xix-166). இவர்களை வகைப்படுத்த 'தெரிந்த' எனும் சொல் முன்னோட்டாகப் பயன்படுத்தப் பட்டது.'தெரிந்தக் கைகோளார்' 'தெரிஞ்ச வில்லாளி', 'தெரிஞ்ச படைவாள்' எனும் தொடரில் 'தெரிந்த' என்பது தேர்ந்தெடுத்த /தெரிந்து எடுக்கப் பெற்ற எனும் பொருள் என்று ஆய்வாளர்களால் பொருள் உரைக்கப் படுகிறது. (பா.ரா.சுப்பிரமணியம்-ப. சண்முகம்:2023) கல்வெட்டு ஆவணங்களில் பல இடங்களில் இப்பெயர்கள் சுட்டப் படுகின்றன.'தெரிஞ்சக் கைகோளர்', தெரிஞ்சக் கைகோளர்படை', (AD.909. SII.Vol.xix.25 / கி.பி.913 – SII.Vol.xix.166, / AD.953.SII.Vol.xiii.45/ AD.957. SII. Vol. xix.7 / AD.975 SII.Vol.xix.95 / SII.Vol.xix.3 /AD.1006.SII. Vol.v.518 / AD.1040.SII.Vol.xiv.197).

படைவீரர்களில் 'தெரிந்த' எனும் முன்னூட்டு அளிக்கப்படும் பொழுது 'தெரியாத' எனும் வகைப்பாடு இருந்ததாகக் கருதலாம். தெரிஞ்ச கைக்கோளர், தெரிஞ்ச வில்லாளி, தெரிஞ்ச படைவாள், எனும் பொழுது தெரியாத கைக்கோளர், வில்லாளிகள், படைவாள் இருந்தது எனக்கருத இடமுண்டு.

பர்டன் ஸ்டெயின் "படை வலிமையானது சோழ நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்த குறுநில மன்னர்கள், வணிகக் குழுக்கள் மற்றும் பிற உள்ளூர் அமைப்புகளிடமே இருந்தது. இவை அந்தந்தப் பகுதிகளிலேயே திரட்டப்பட்டு கட்டுப்படுத்தப்பட்ட படைகளாக இருந்தன" எனக் கூறுவதிலிருந்து 'தெரிந்த' எனும் தெரிவு/ தேர்ந்தெடுக்கப்பட்ட படை வீரர்கள் வேந்தர்களின் நேரடிக் கட்டுப்பட்டிலும் தொடர்பிலும் 'தெரியாத' படைவீரர்கள் அவ்வப்பொழுது தேவையின் பொருட்டு உள்ளூர் அமைப்புகளின் மூலம் திரட்டபட்டவர்களாக, வேந்தர்களின் நேரடிக்கட்டுப்பட்டிலும் தொடர்பிலும் இல்லாதவர்களாகக் கருதலாம். அவை வேளிர் படைகளாக அல்லது குடிபடையாகக் கூறலாம்.

இதன் வளர்ச்சிப்போக்கில் 'தெரிஞ்ச வலங்கை' எனும் முன்னூட்டு சேர்க்கப் படுகிறது. ஸ்ரீராஜராஜதேவர் படை ஜநநாதத் தெரிஞ்ச வலங்கை வேளைக்காறரில் (கி.பி.1007- 238, 283) என்ற தொடரில் உள்ள 'வலங்கை' எனும் சொல்லாடல் வகைப் பாட்டில் கூடுதல் தேவையாகிறது. தெரிஞ்ச X தெரியாத என்பது போல் வலங்கை X இடங்கை இருந்திருக்க வேண்டும், 'தெரியாத' படைவீரர்களை பகுக்க வேண்டியத் தேவையில் வலங்கை X இடங்கை தோன்றியிருக்கலாம். வலங்கைப் பிரிவிலிருந்து 'தெரிஞ்ச' தெரிவுசெய்யப்பட்டிருக்க வேண்டும்.

"வரலாற்று ஆதாரங்களின் அடிப்படையில், வலங்கை–இடங்கை என்ற பெயரிடலின் தோற்றத்தை சோழர் கால இராணுவப் பிரிவமைப்பிற்கே கொண்டு சென்று சேர்க்க முடிகிறது. மிகவும் ஆரம்பகாலமாக, வலங்கை என்ற சொல் 10ஆம் நூற்றாண்டின் இறுதியில், பேரரசு விரிவாக்கப் படையெடுப்புகளுக்காகப் பெரும் படையை முதன்முறையாக அமைத்த முதலாம் இராஜராஜ சோழன் (கி.பி. 985–1014) கால கல்வெட்டுகளில் காணப்படுகிறது. அந்தக் கல்வெட்டு பதிவுகளில், இச்சொல் இராணுவப் படைப்பிரிவுகளைச் சுட்டிக்காட்டும் பெயராக மட்டுமே பயன் படுத்தப்பட்டுள்ளது" (ஓய்.சுப்பராயலு:1999).

முதலாம் இராஜராஜசோழனின் படைகளில் வலங்கை-வேளைக்காரப் படைகள் போன்ற குழுக்கள் இருந்ததைக் கல்வெட்டுகள் கூறுகின்றன. 11-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், 'வலங்கை' எனத் தங்களை அழைத்தவர்கள் கோயில்களுக்கு காணிக்கைகள் வழங்கியதும் பதிவுகளில் காணப்படுகிறது. உதாரணமாக, வெம்பரூர் ஆலயத்திற்கு வழங்கப்பட்ட காணிக்கைகள் குறிப்பிடத் தக்கவை. (ARE.1936-7.Para.27; K.Neelakanda Sastri.2000. The Cola.p.551)

"இடங்கை-வலங்கை பிரிவு சோழர் காலத்தில் ஒரு இராணுவ வகைப்பாடாகத் தொடங்கியது. வலங்கைப் படைகள் பிரதான இராணுவத்தில் இருந்தன (வலுவானவர்கள் பொதுவாக வலங்கை என்று அழைக்கப்பட்டனர்).

பல இராணுவப் பிரிவுகள் வலங்கை வேளைக்காரப் படை என்று அழைக்கப்பட்டன. அவை குலோத்துங்கன் காலம் வரை இருந்தன. இராஜராஜன் மற்றும் இராஜேந்திர சோழன் போன்றோரின் ஆரம்பக் காலத்தில், இடங்கைப் படைகள் பற்றிய குறிப்புகள் இல்லை. இடங்கைப் படைகள் பற்றிய முதல் குறிப்பு பதினோராம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வருகிறது."(ஒய்.சுப்பராயலு.2005)

சோழர் காலத்தில் படைப் பகுப்பில் வலங்கை, இடங்கை எனும் படைப்பிரிவுகள் சமகாலத்தில் அமைந்திருக்க வேண்டும். சோழமண்டலத்தில் சோழக் கிளைக் குடிகள், சோழக்குடியோடு மணவினைத் தொடர்பு குடிகள், அதிகாரம்கொண்டவேளாண்குடிகள்,பெருவணிகக்குடிகள்ஆகியவற்றிலிருந்து 'வலங்கை தெரிஞ்ச' முன்னூட்டுக் கொண்டப் படைப்பிரிவுகள் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். இவை காணிக்கைகள் வழங்கும் அளவிற்கு பொருளியலில் வலுவானதாக உருவாகியிருந்தன. சோழக்குடி வேந்துவின் மேலாண்மையை ஏற்ற மணவினைத் தொடர்ப்பற்ற குடிகள், போர்ச்சேவைக் குடிகள், உழுகுடிகள், போரிக்கருவி உற்பத்திக்குடி ஆகியவற்றிலிருந்து 'இடங்கை' பகுப்பு படையணிகள் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும். பொருளியல் அடிப்படையில் வலங்கைப் பிரிவை விட வலுக்குன்றியதாக இருந்தன எனலாம். எனவே தான் வலங்கை குறிப்புகள் தாண்டி ஐம்பது ஆண்டுகள் கடந்து இடங்கைக் குறிப்புகள் கிடைக்கின்றன எனலாம்.

'வலங்கை' என்ற சமூகப் பிரிவு இராஜராஜன் மற்றும் இராஜேந்திரன் காலத்திலேயே (11-ஆம் நூற்றாண்டின் தொடக்கம்) புகழ் பெற்றிருந்தது. ஆனால், அவர்களுக்கான 'மகமை' (வரிப் பங்களிப்பு) குறித்த கல்வெட்டுச் சான்றுகள் வீரராஜேந்திர சோழன் காலத்திலிருந்தே தெளிவாகக் கிடைக்கப் பெறுகின்றன.(தெ.இ.க.ம.5 எண்.976. / தெ.இ.க.ம.3, எண்: 57). அவைகளில் வலங்கை இடங்கை மகமை உள்ளிட்ட அந்தராயங்களில் எனும் சொல்லாடலில் 'இடங்கை' சுட்டப்படுகிறது. எனவே வலங்கை இடங்கை பகைப்பாடு ஒரே காலத்திலேயே தோன்றியது எனக் கருதுதலே சரியாகும்.

குடிகளில் இருந்து திரட்டப்பட்ட படைகள் 'தெரிஞ்ச' வகைப்பட்டில் உள்ளடக்க முடியாது. ஏனேனில் அவை தெரிவு செய்யப்பட்டவை. தெரிவு நெறிமுறைகள் பின்னாளில் வலங்கை உருவாகுவதற்கு எது அடிப்படையாக இருந்தோ அதுவாகத் தானிருக்க முடியும். எனவே குடிபடை இடங்கைச் சார்ந்ததாகக் கருத இடமுண்டு. பின்னாளில் இடங்கைப் பகுப்பிலிருந்தோர் வலங்கைக்கு மாறியதில் பொருளாதார உடமை உறவேக் காரணம் எனலாம்.

வகங்கை இடங்கை இருப்பிரிவுகளிலும் படைகள் இருந்ததால் அதன் தகுதி வேறுபாடுகளாலும் பொருளியல் உடமை மாற்றாங்களாலும் இவற்றிர்க்கு இடையே முரண்பாடுகள் தோன்றியது. இது பூசலுக்கு வழிவகுத்தது. நித்த

விநோத வளநாட்டின் இராசமகேந்திர சதுர்வேதிமங்களத்தில் முதலாம் குலோத்துங்க சோழனின் இரண்டாம் ஆண்டாகிய கி.பி.1073-ல் வலங்கை இடங்கை மோதல் ஏற்பட்டிருக்கிறது. அம்மோதலில் ஊர் எரிக்கப்பட்டு மும்முடிசோழ விண்ணகர் ஆழ்வர் கோவிலும் சிதைக்கப்பட்டிருக்கிறது. (ARE-1936-37.No.31,p.11). இவ்வூர் தற்பொழுது தஞ்சைமாவட்டம், பாபநாசம் தாலுக்காவில் உள்ள நெல்லித் தோப்பு என பாண்டியர் காலத்துக் கல்வெட்டு மூலம் தெரியவருகிறது. (ARE.1921.No.539- The Cola.p,551)

ஒப்பிட்டுளவில் வலங்கை / தெரிஞ்ச வலங்கை சோழ அரச சமயமான சைவத்தில் ஆர்வம் காட்டி யதால் இடங்கையினர் வைணவக்கோவில்கள் கிராம தெய்வமான பிடாரியம்மன் வழிபாட்டிலும் ஆர்வம் காட்டினர் எனலாம். இதனால் வழிபாட்டுச் சடங்கு முன்னுரிமை கோருதலில் முரண்பாடு தோன்றியிருக்ககூடும். இதன் அடிப் படையில் மும்முடிசோழ விண்ணகர் சிதைக்கப்பட்டிருக்கலாம் எனக்கருத இடமுண்டு.

‘குடிபடை’எனும் சொல்லாடல் பழையக் கல்வெட்டுகளிளல் நேரடியாகச் சுட்டப் பெறவில்லை. இதன் பொருள் படை என்றும் மக்கள் எனவும் அகராதியில் சுட்டப்படுகிறது. (குடிப்படை (Kutippatai),n.குடி + படை.:Militia, volunteer corps as opposed to a mercenary army; குடிகளிலான சேனை..Inhabitants; குடிசனங்கள் (Tamil lexicon .1936)

குடிசனங்கள், குடிமக்கள் எனும் சொற்களில் சனம், மக்கள் என்பது மனிதத் தொகுப்பை குறிக்கிறது. குடி எனும் முன்னூட்டு சொல் குடி வழிவந்த, குடிகளாக வாழும் மக்கள் என்பதை சுட்டிநிற்கிறது. அதன்படி குடிபடை என்பது குடிகளின் படை, குடிகளிலானப்படை என்பது பொருத்தமானது.

மதுரை மேலூர் அழகர்கோவிலில் கி.பி.16-ஆம் நூற்றாண்டில் மதுரை நாயக்க மரபின் முதல் மன்னர் விசுவநாதநாயக்கர் அழகர்கோவிலுக்கு திருவிடை யாட்டமாக குன்றத்தூர் சீர்மையில் ‘அமஞ்சி’ எனும் ஊரை வழங்கியுள்ளார். இக்கல்வெட்டில் ‘குடிபடை’ உட்பட வழங்கியுள்ளதாக கூறப்படுகிறது. (தி.ஸ்ரீ.ஸ்ரீதர்: 2010)

கல்வெட்டு வரி 11:அனுபவிக்கு மிடத்து நிதி நிக்ஷேபம் ஜலகாஷாண ஆக்ஷிணி ப்ராப்ராத்திக்க ,

வரி 12: என்று கொள்ளப்பட்ட அஷ்ட போக தேஜஸ்வாமித்வத்துக்கும் ஊர் தோறும் கொண்டு

வரி 13: அனுபவித்துக்கொள்ளவும் இம்மருவாதிக்கு நாளது வரைக்கும் நடந்து வருகிறதாந

வரி 14: மாநியம் நீங்கலாகவும் இந்த கிராமத்தில் குடிபடை உட்படவு மனுபவித்திக் கொள்ளவும்

வரி 15: இந்த கிராமத்தில் முதல் கொண்டு.........தர்மமாக அழகர்க்கு ஒரு

இவ்வாண்ணம் மதுரை அழகர்க்கு (திருமாலிருஞ்சோலை நம்பி) அமஞ்சி கிராமத்தை முழுமையாகத் தானமாக வழங்கியதை அறிவிக்கிறது. இது 'தர்மமாக' வழங்கப்பட்ட கொடையாகும். நிலத்தின் மீதுள்ள நிதி, நிக்ஷேபம், ஜல, பாஷாணம் உள்ளிட்ட எட்டு வகையான உரிமைகளும் (அஷ்ட போக தேஜஸ்வாமித்வம்) கோவிலுக்கு மாற்றப்பட்டுள்ளன. அதாவது நிலத்தின் மேலிருக்கும் மரங்கள் முதல் நிலத்தின் அடியில் இருக்கும் புதையல்கள் வரை அனைத்தும் கோவிலுக்கே உரியது. இக்கொடையில் 'குடிபடை உட்படவும்' என்ற வாசகம் மிக முக்கியமானது. இது அக்கிராமத்தில் வாழும் குடியானவர்களைக் (குடி) கொண்டப் படைவீரர்கள் (படை) மீதான நிர்வாக உரிமையையும், அவர்கள் செலுத்த வேண்டிய கடமைகளையும் கோவிலின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருகிறது. 'மாநியம் நீங்கலாக' என்ற குறிப்பு, ஏற்கனவே மற்றவர்களுக்கு வழங்கப்பட்ட நிலங்கள் இதில் சேர்க்கப்படவில்லை என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

தமிழ்ப்புலத்தில் ‘குடிபடை’ என்பது இராணுவச் சொல்லாடலாகக் கருதலாம். அது சோழர்காலத்திய வலங்கை இடங்கை எனும் படையமைப்பில் இடங்கையினராக அவதானிக்கவும் இடம் உண்டு. பிற்காலத்திய காணியாளராக - காணியுடையவர் களாக வளர்ந்த வர்க்கமாகவும் ஏற்கலாம்.

நூற்பட்டியல்

Y.Subbarayalu. 2026. Historical and Political Geography of the Cola Country.Ch.6.p.84-85

ர.பூங்குன்றன். 2016. தொல்குடி வேளிர் வேந்தர், ISBN: 978-81- 2343-306-6. பக்கம்.4, பக்.53

ஔவை.சு.துரைசாமிப்பிள்ளை.1947.புறநானூறு.49.பக்.133-34.

ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை. 1947.புறநானூறு-45.பக்,127-28.

ப.சரவணன்.2008.சிலப்பதிகாரம்.வஞ்சிக்காண்டம்.நீர்ப்படைக்காதை.வரி;117-123.பக்கம்.455-56.

ரா.இராகவையங்கார்.1951.பட்டினப்பாலை வரி.20-28 பக்கம்.2.

பர்ட்டன் ஸ்டெயின்:1980.Peasant State and Society in Medieval South India. Pg.257-58

பா.ரா.சுப்பிரமணியம்-ப.சண்முகம்:2023.கல்வெட்டுச் சொற்களின் பொருட்புல அடைவு (கி.பி.300 முதல் கி.பி.1300 வரை). ISBN:978-93-881744-92-5.

Y.Subbarayalu.1999. THE RIGHT-HAND AND LEFT-HAND DIVISIONS OF MEDIEVAL SOUTH INDIA - A CRITIQUE. Proceedings of the Indian History Congress.1999.Vol. 60, pp. 1118-1125.

Annual Report on Epigraphy.1936-7 Para.27

K.Neelakanda Sastri.2000.The Cola.p.551

Y.Subbarayalu.2005.Reconstructing Chola Agrarian History Parvathi Menon Interviews. https://doi.org/10.25003/RAS.13.01.0005

தென் இந்திய கல்வெட்டு மடலம் (SII.Vol.V)-5 எண்.976. (கி.பி.1062)

தெ.இ.க.ம.தொகுதி-3, எண்.579 (கி.பி.1073)

ARE-1936-37.No.31,p.11

ARE.1921.No.539- The Cola.p.551

Tamil lexicon .1936.Vol. 2, p. 1041. University of Madras

தி.ஸ்ரீ.ஸ்ரீதர்: 2010-த.நா.க.வரிசை எண்: 35, அழகர்கோவில்கல்வெட்டுகள்.

கோயில் – நிலம்: கோயில்சார் சமூக உருவாக்கமும் சைவ நாயன்மார்களின் பங்களிப்பும்

முத்து வெ. பிரகாஷ்
ஆராய்ச்சியாளர்
பாண்டிச்சேரி பிரஞ்சு ஆய்வு நிறுவனம், புதுச்சேரி

சுருக்கம்

கோயில்சார் சமூகமாகத் தமிழகம் ஏழாம் நூற்றாண்டிலிருந்து படிப்படியாக மாறத் தொடங்கினாலும் களப்பிரர்கள் காலம்தொட்டு கோயிலுக்கு நிலக்கொடை கொடுக்கும் வழக்கம் இருந்துள்ளதைப் பூலாங்குறிச்சிக் கல்வெட்டு உறுதிப்படுத்துகிறது. பாண்டியர்கள், பல்லவர்கள் கட்டிய கோயில்களுக்கு நிலக்கொடை பெரும்பாலும் அரசர்களாலேயே தரப்பட்டுள்ளது. நிலக்கொடையில் தனிப்பட்ட மக்களோ சபையோ குறைவாகவே ஈடுபட்டுள்ளனர். கி.பி. எட்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதிக்குப் பிறகே அரசரல்லாத தனிப்பட்ட நபர்கள் கோயிலுக்கு நிலக்கொடை தரும் மரபு படிப்படியாக வளர்ந்துள்ளது. நிலக்கொடையில் தனிப்பட்ட நபர்கள் ஈடுபடுவதற்குத் தூண்டுகோலாகச் சைவ நாயன்மார்கள் ஈடுபட்டுள்ளனர். சைவ நாயன்மார்கள் தமிழ்நாட்டில் உள்ள கோயில்களுக்கெல்லாம் பயணம் செய்து பக்தியை வளர்த்தது மட்டுமல்லாமல் கோயில்களை வளமுள்ள நிறுவனமாகவும் சமூகத்தைக் கோயில்சார்ந்ததாக மாற்றவும் அரசர்களுக்கு உதவியுள்ளனர். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோரின் பயணம் பிற்காலத்தில் எப்படிக் கோயிலைச் சமூகத்தின் மையமாக மாற்ற உதவியது என்பதைக் கல்வெட்டு ஆதாரங்களையும் இலக்கிய ஆதாரங்களையும் கொண்டு இந்தக் கட்டுரை வரைய முயல்கிறது.

சோழர் (கி.பி. 10-13ஆம் நூற்றாண்டு) காலத்தில் கோயில்கள் நிலவுடைமை நிறுவனமாக மாறியது. எனினும் இதற்குப் பல்லவர் காலம் தொடங்கி ஏறக்குறைய 300 ஆண்டுகாலம் ஆகியுள்ளது. இந்த இடைவெளியில் கோயில்களுக்கு நிலக்கொடை தரும் மரபு எப்படிப் பரவலானது என்பது முதன்மையான கேள்வியாகும். கோயில்களை ஒட்டிய வளமான வயல் பகுதிகளை பிரம்மதேயங்களாக மாற்றுவது கி.பி. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்தே வழக்கில் இருந்துள்ளது (காண்க: பூலாங்குறிச்சிக் கல்வெட்டு). அரசுகளால் கட்டப்பட்ட கோயில்களுக்கு திருநுந்தாவிளக்கு எரிப்பதற்கும் நாட்காலப் பூசை நடத்துதல், நந்தவனம் பராமரித்தல் முதலான தொழில்களைச் செய்யவும் தேவையான கொடைகளை அரச குடும்பத்தைச் சார்ந்தோரும் அரச அதிகாரிகளும் தரும் வழக்கம் இருந்துள்ளது. இந்த வரிசையில் தனிநபர்களின் பங்களிப்பு குறைவாகவே இருந்துள்ளது. கோயிலை வளமுள்ள நிலவுடைமை நிறுவனமாக மாற்ற பொதுமக்களின் பங்கைப் பெருக்க நாயன்மார்கள் முதலான

பக்தி இயக்கச் சமூகத்தின் பங்களிப்பு அளப்பரியது. சுந்தரர் தனது பதிகத்தில் கோயிலுக்கு வேலி நிலம் கொடையாகத் தரப்பட்டுள்ளதைக் குறிப்பிடுகிறார். எட்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதியிலிருந்து பத்தாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை (கி.பி.750-கி.பி.900) குறைந்த அளவிலான நிலக்கொடைக் கல்வெட்டுகளே பதிவாகியுள்ளன (காண்க: பின்னிணைப்பு-2). எனவே இந்தக் காலத்தில் கோயில்களுக்கு நிலக்கொடை குறைவாகவே தரப்பட்டுள்ளது என்று கருதலாம். இந்தக் கட்டுரை கோயிலை நிலவுடைமைச் சமூகமாக மாற்றியதில் நாயன்மார்களின் பங்கு என்ன என்பது பற்றியும் வேலி நில அளவையின் பின்னணி பற்றியும் ஆராய்கிறது.

1

சைவ சமயக் குரவர்களான நால்வர்களில் சுந்தரர் தனது பதிகத்தில் கோயிலுக்கு நிலக்கொடை தந்ததைப் பற்றிக் குறிப்பிடுகிறார். பெரியபுராணத்தின்படி திருவெண்ணெய்நல்லூரில் பிறந்த சுந்தரர் கோயில்களுக்குப் பயணம் செய்து சிவபெருமானைப் பாடும் பணியைச் செய்துவரும்பொழுது **திருப்புன்கூருக்கும் திருநின்றியூருக்கும்** செல்கிறார். கொள்ளிடத்திற்கும் மயிலாடுதுறைக்கும் இடையில் இருக்கும் இவ்விரு ஊர்களும் நீர் வளம் மிக்க ஊர்கள். சுந்தரரின் கூற்றுப்படி, திருப்புன்கூரிலோ அல்லது அருகிலோ மழை பெய்யாத காரணத்தால் ஏற்பட்ட வறட்சி காரணமாக வயலும் வறண்டது. இதனால் ஊர் மக்கள் அல்லது ஊர்ச் சபை சிவபெருமானிடம் முறையிட மழை பொழிகிறது. இதற்காக 'மா நிலம்' (வேலி அளவு கொண்ட பெரிய நிலம்) சிவன் கோயிலுக்குக் கொடையளிக்கப்படுகிறது. மழைப் பொழிவு பெருகி வெள்ளம் வர மீண்டும் சிவபெருமானின் அருளால் மழை நின்றது. இதற்காக மீண்டும் பன்னிரு வேலி[1] நிலம் கோயிலுக்குத்

1 வேலி எனும் நில அளவை முதன்முதலாகச் சங்க இலக்கியத்தில் பதிவாகியுள்ளது. சங்கச் சோழ மன்னனான கரிகால்வளவனைப் புகழ்ந்து ஆற்றுப்படுத்திய முடத்தாமக்கண்ணியாரின் பொருநராற்றுப்படை,

கடுந்தெற்று மூடையின் இடங்கெடக் கிடக்கும்

சாலி நெல்லின் சிறைகொள் வேலி

ஆயிரம் விளையுட் டாகக்

காவிரி புரக்கு நாடுகிழ வோனே (பொருந. 245-248)

என்று சோழ அரசச் செல்வத்தை விவரிக்கிறது. நச்சினார்க்கினியர் (கி.பி. 14) இந்த வரிகளுக்கு 'வரம்புகட்டின வேலிநிலம் ஆயிரக்கலமாகிய செந்நெலின் விளையுட்டாக' என்று விளைச்சலின் பெருக்கத்தை விளக்குகிறார்.

புறநானூற்றின் 391ஆம் பாடலில் கல்லாடனாரால் புகழப்பட்டவன் சீறூர் மன்னனான பொறையாற்றுக்கிழான். இவன் தற்காலப் பொறையாற்றை ஆண்டவன். இப்பாடலில்,

வளஞ்சால்

துளிபதன் அறிந்து பொழிய

வேலி ஆயிரம் விளைகநின் வயலே (புறநா. 391-21)

என்று வேலி நிலம் ஆயிரமாக (கலமாக?) விளையட்டும் என்று கல்லாடனார் புகழ்கிறார். காவிரியின் வளமான நீர் ஆதாரம் கரிகால்வளவனின் சோழ நாட்டை நெல்வளம் மிக்க நாடாக ஆக்க, பொறையாற்றுக்கிழானின் நிலம் மழைவளத்தை ஆதாரமாகக் கொண்டிருந்தது என்று

தரப்படுகிறது. திருப்புன்கூரில் சுந்தரரின் பாடல் வருமாறு:

> வையக முற்று மாமழை மறந்து
> வயலில் நீரிலை மாநிலம் தருகோம்
> உய்யக் கொள்க மற்றெங்களை யென்ன
> ஒலிகொள் வெண்முகி லாய்ப்பரந் தெங்கும்
> பெய்யும் மாமழைப் பெருவெள்ளம் தவிர்த்துப்
> பெயர்த்தும் பன்னிரு வேலிகொண் டருளும்
> செய்கை கண்டு நின்திருவடி அடைந்தேன்
> செழும்பொ ழில்திருப் புன்கூ ருளானே (சுந்தர. 7:55:2)

இதற்கு அடுத்த பாடல் மற்றொரு கொடை பற்றிக் குறிப்பிடுகிறது. சுந்தரரின் சமகாலத்தவராகக் கருதப்படும் ஏயர்கோன் கலிக்காம நாயனாரின் கதையில் நிகழ்வதாகச் சுந்தரரால் இப்பாடல் பாடப்பட்டுள்ளது. தனக்கு உற்ற கடுமையான நோயைத் தீர்த்தருள கலிக்காமர் சிவபெருமானை வேண்ட அந்த நோய் குணமடைகிறது. அதற்காக அவர் பன்னிரு வேலி நிலத்தைத் திருப்புன்கூர் கோயிலுக்குக் கொடையாக வழங்குகிறார். இந்தப் பன்னிரு வேலி நிலம் நன்செய் நிலம் என்பதைப் பாடல் குறிப்பிடுகிறது. பாடல் வருமாறு:

> ஏத நன்னிலம் ஈரறு வேலி ஏயர்கோன் உற்ற இரும்பிணி தவிர்த்து...
>
> (சுந்தர. 7:55:3)

புறநானூற்றுப் பாடல் குறிப்பிடுகிறது.

படப்பைகள் சூழ்ந்து வளமான நிலமாகத் தொண்டைநாடு விளங்கியிருந்தாலும் வேலி எனும் நில அளவை பெரும்பாணாற்றுப்படையில் குறிக்கப்படவில்லை. தமிழ்நாட்டின் வட பகுதியை ஆண்ட பல்வேறு சீறூர் மற்றும் குறுநில மன்னர்களின் பாடல்களிலும் வேலி எனும் நில அளவை குறிக்கப்படவில்லை. வேலி எனும் சொல் சங்க இலக்கியத்தில் 50 முறை பயின்றுவந்துள்ளது. பொதுவாக நிலத்தின் வரம்பைக் குறிக்கவே சங்க இலக்கியத்தில் இச்சொல் பெரும்பாலும் குறிக்கப்பட்டுள்ளது. குடியைச் சுற்றியிருக்கும் வேலி (நற்.346-4), ஊரைச் சுற்றியிருக்கும் வேலி (அகநா.97-13), வயலைச் சுற்றியிருக்கும் வேலி (புறநா.345-20) என்று பயின்று இறுதியில் நிலத்தை அளக்கும் நில அளவையாக மாறியிருப்பதாக இச்சொல்லைக் கருதலாம். ஆற்று நீர்ப் பாசனமுடைய காவிரிசூழ் சோழ நாட்டிலேயே வேலி நில அளவை பயன்படுத்தப்பட்டுள்ளது. சங்க இலக்கியச் சான்றுகளின்வழி தொண்டை நாட்டிலோ பாண்டி நாட்டிலோ வேலி நில அளவு பயன்படுத்தப்பெறவில்லை.

கிடைக்கின்ற கல்வெட்டுத் தரவுகளின்படி கி.பி.753 இல் பல்லவ அரசனான இரண்டாம் நந்திவர்மனின் இருபத்தியிரண்டாவது ஆட்சியாண்டில் தஞ்சாவூர்ப் பகுதியில் தரப்பட்ட நிலக் கொடையே முதன்முதலில் வேலி அளவைக் குறிக்கிறது (SII 34:48). பட்டி, பாடகம் என்னும் பெரு நில அளவைகள் பல்லவர்களின் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் பயன்பாட்டில் இருந்தாலும் திருவைகாவூரில் பயன்பாட்டிலிருந்த உள்ளூர் நில அளவையே இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இக்கொடை அரசனால் நேரடியாகத் தரப்படவில்லை. மாறாக சந்திப்பெலியார் என்பவரால் இக்கொடை தரப்பட்டிருப்பதால் அரச அளவைக்கு மாற்றாக ஊர் அளவை பயன்படுத்தப்பட்டுள்ளது என்றும் கருதலாம். இதன்பிறகு கி.பி. 900ஆம் ஆண்டில் திருச்சி லால்குடியில் பல்லவ மன்னன் நிருபதுங்கவிக்கிரமனின் ஆட்சியில் தரப்பட்டுள்ள கொடையும் வேலி நிலமாக அளவிடப்பட்டுள்ளது (SII 4:531). இவை இரண்டிலும் சோழ நாட்டில் பயன்பாட்டிலிருந்த உள்ளூர் அளவே பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

பெரியபுராணத்தில் வம்பறா வரிவண்டுச் சருக்கத்தில் இடம்பெற்றிருக்கும் ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணத்தில் இத்தகைய தகவல் எதுவும் இடம்பெறவில்லை. மாறாகச் சூலை நோய் சுந்தரரின் வருகையால் நீங்கும் எனச் சிவபெருமான் கலிக்காமருக்கு ஆணையிட அதனைப் பொறுக்காத அவர் தன் வாளால் தன் குடரைக் கிழித்து இறந்ததாகப் பெரியபுராணம் பதிவுசெய்கிறது. சேக்கிழாரின் கூற்றுப்படி சுந்தரரும் கலிக்காமரும் சமகாலத்தவர்கள். சுந்தரரும் தனது பதிகத்தில் கலிக்காமரைக் குறிப்பிட்டுள்ளதாலும் அவருக்குப் பிணி ஏற்பட்டிருந்ததாகக் குறிப்பிட்டுள்ளதாலும் இதை உறுதிசெய்யலாம். கி.பி. 12ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட பெரியபுராணத்தின் நோக்கம் வேறு; 9ஆம் நூற்றாண்டினரான சுந்தரரின் நோக்கம் வேறு.

சுந்தரர் திருநின்றியூர் பதிகத்தில் பரசுராமர் 360 வேலி நிலத்தையும் 300 வேதியர்களையும் திருநின்றியூர்க் கோயிலுக்குக் கொடையாக அளித்ததாகக் குறிப்பிடுகிறார். பாடல் வருமாறு:

> மொய்த்தசீர் முந்நூற்று அறுபது வேலி
> மூன்று நூறு வேதியரொடு நுனக்கு
> ஒத்த பொன்மணிக் கலசங்கள் ஏந்தி
> ஓங்கும் நின்றியூர் என்றுனக்கு அளிப்ப
> பத்தி செய்த அப்பரசு ராமற்குப்
> பாதம் காட்டிய நீதிகண் டடைந்தேன் (சுந்தர. 7:65:3)

இது மிக முக்கியமான குறிப்பு. பூலாங்குறிச்சிக் கல்வெட்டில் கோயிலில் பூசை செய்யும் உரிமை பற்றிய குறிப்பு உள்ளது. அதன் அடிப்படையில் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு தொடங்கிக் கோயிலில் யார் பூசிக்க வேண்டும் யார் பூசிக்கக் கூடாது என்று வகுக்கிற வழக்கம் இருந்துள்ளது என்பதை அறியமுடிகிறது. வேதம் கற்ற பார்ப்பனர்களைக் கோயிலில் பூசைக்கு அமர்த்தும் வழக்கம் பல்லவர் காலம் முதலாக இருந்துவருகிறது. இதை வலியுறுத்தும் வகையில் இலக்கியச் சான்றாக மூன்றாம் நந்திவர்மனின் சமகாலத்தவராகக் கருதப்பெறும் சுந்தரரின் பாடலைக் கொள்ளலாம்[2] . 300 வேதியர்கள் என்று சுந்தரர் குறிப்பிடுவது வரலாற்று ரீதியாக ஏற்றுக்கொள்ளத்தக்கதா என்பது ஒருபுறம் இருக்க, தமிழகத்தில் வேதியர்களின் குடியமர்த்தல் பெருவாரியாக நிகழ்ந்துள்ளது; அதுவும் காவிரிப் பாசனப் பகுதியில் தொடர்ச்சியாக நிகழ்ந்துள்ளது என்பதற்கு இவரது பாடல்கள் மேலும் ஒரு சான்றாக அமைகின்றன.

2

சுந்தரரின் கூற்றுப்படி திருப்புன்கூர் மற்றும் திருநின்றியூர் கோயில்களுக்குக் கொடையாக அளிக்கப்பட்ட நிலத்தின் அளவுகள்:

---

2 C. Minakshi, 1938, pp. 299,300

திருப்புன்கூர்: 24 வேலி

திருநின்றியூர்: 360 வேலி (காண்க: பின்னிணைப்பு-1: வரைபடம்)

திருநின்றியூரில் வளமான கிராமங்களை பிரம்மதேயமாகவோ அல்லது சதுர்வேதி மங்கலமாகவோ ஆக்கிக் குடியமர்த்தப்பட்ட பார்ப்பனர்களின் எண்ணிக்கை: 300

இந்தக் கொடைகள் எந்தப் பின்னணியில் கோயிலுக்குக் கொடையாக அளிக்கப்பட்டன என்பதும் கவனிக்கத்தக்கது:

- ஊருக்குப் பொதுவாக ஏற்பட்ட இன்னல்கள்: வறட்சி, பெருமழை, வெள்ளம்
- தனிப்பட்ட ஒருவருக்கு ஏற்பட்ட நோய் அல்லது துன்பம்
- தனிப்பட்ட ஒருவரின் பக்தி அல்லது நோக்கம்

ஐந்தாம் நூற்றாண்டு தொடங்கிக் கோயில்களுக்குக் கொடைகள் தரப்பட்டுள்ள நிலையில், கிடைக்கின்ற கல்வெட்டுத் தரவுகள் எவையும் நம்பிக்கை அல்லது பக்தி சார்ந்த கொடையாகப் பதிவுபெறவில்லை. நுந்தாவிளக்கு எரிப்பதற்கு, பூசைக்கு, சந்திப் பூசைக்கு, திருவிழாவுக்கு எனப் பல நிலைகளில் கொடைகள் தரப்பட்டிருந்தாலும் இந்தக் கொடைக்கான காரணங்கள் என்ன என்பது குறித்துக் கல்வெட்டுகள் மௌனிக்கின்றன.

சுந்தரர் நான்மறை அங்கமானவன் (7:7:4), அந்தணாளன் (7:55:1), வேத மால்விடை ஏறவல்லான் (7:57:3) என்று சிவபெருமானை வேதத்தோடு தொடர்புபடுத்திப் பாடுகிறார். ஆதிசைவராகப் பிறந்து மன்னராக இருந்து[3] சைவ நாயன்மாராக மாறிய சுந்தரர், கோயிலின் நடைமுறைகள் எவ்வாறு இருக்கவேண்டும் என்பதில் ஆர்வம் காட்டியுள்ளாரா என்று கவனிக்கவேண்டும். கோயில் நடைமுறை சார்ந்து சுந்தரரின் பாடல்கள் நேரடியாகக் குறிக்கவில்லை என்றாலும் அவரது பாடல்கள்வழிச் சிலவற்றை ஊகிக்க இயலும். ஏற்கெனவே பார்ப்பனர்கள் நிறைந்த மங்கலங்கள், பிரம்மதேயங்கள் சூழ்ந்ததாகக் கோயில்கள் இயங்கிக்கொண்டிருந்தன. எனினும் பிரம்மதேயங்களாலும் பார்ப்பனர்களின் ஆளுகையின்கீழும் இல்லாத கோயில்களில் பார்ப்பனர்களை நியமிக்கும் அல்லது குடியமர்த்தும் நோக்கம் சுந்தரரிடம் இருந்திருக்க வாய்ப்பு இருக்கிறது[4] . இதன் பின்னணியிலேயே திருநின்றியூர் பதிகத்தில் பரசுராமர் தொன்மத்தை அடிப்படையாகக் கொண்டு 300 பார்ப்பனர்களை நியமித்து அதை ஒரு பிரம்மதேயமாகவோ சதுர்வேதி மங்கலமாகவோ ஆக்கும் தனது நோக்கத்தை அவர் வெளிப்படுத்தியிருக்கலாம் என்று கருதலாம்.

சுந்தரர் குறிப்பிடும் இந்த நிலக்கொடைகள் கல்வெட்டுகளில் <u>பதிவாகவில்</u>லை அல்லது பதிவான கல்வெட்டுகள் இதுவரை

3 கூடலர் மன்னன் குலநாவலூர்க் கோன் (சுந்தர. 7:18:10)

4 சம்பகலக்ஷ்மி தனது நூலில் திருஞானசம்பந்தர், சுந்தரர் ஆகியோரின் பிராமணிய ஈடுபாடு குறித்து விவாதித்துள்ளார். (Champakalakshmi, 2011, 59-67)

கிடைக்கவில்லை. சுந்தரரின் நோக்கம் சைவ சமயத்தை மக்களிடையே பரப்புவது மட்டுமல்லாமல் சைவக் கோயில்களில் பூசைகளும் பிற நிவந்தங்களும் குறைவற நடைபெறவேண்டும் என்பதுமாகும். கோயிலுக்குத் தரப்படும் நிலக்கொடைகளின் மூலம் சிவனின் கருணைக்கு ஆட்பட்டு நன்மை அடையலாம் என்ற கொள்கைப் பரப்பும் இதனுள்ளே இருப்பதை மறுப்பதற்கில்லை. நாயன்மார்களின் காலத்திற்குப் பிறகு கோயிலுக்கு நிலக்கொடைகள் படிப்படியாக உயர்ந்து கோயில் ஒரு நிலவுடைமை நிறுவனமாக வலுப்பெற்றது. பதினொன்றாம் நூற்றாண்டில் கோயில் மிகப்பெரிய நிறுவனமாக உருப்பெற நாயன்மார்களின் பங்களிப்பு அளப்பரியது. கோயிலுக்குக் கொடை தருவதன்மூலம் தனிப்பட்ட நபர்களின் தேவையை நிறைவேற்றிக்கொள்ள முடியும் என்னும் நம்பிக்கையை மேலும் மேலும் விதைத்து அதை நடைமுறைப்படுத்தியதில் நாயன்மார்களுக்குப் பெரிய பங்குண்டு.

மூன்றாம் நந்திவர்மனின் சமகாலத்தவரான சுந்தரரின் குறிப்புகள் இரண்டு பொருண்மைகளைக் கவனப்படுத்துகின்றன. ஒன்று, ஒன்பதாம் நூற்றாண்டுத் தமிழ்ச் சமூகத்தில் ஏற்கெனவே வலுவடைந்துவந்த கோயில்களுக்கான இடத்தை உறுதிசெய்யத் தேவையான அடிப்படைக் கட்டமைப்பை வலுவாக்குதல்; இரண்டு, கோயில்களைச் செல்வச் செழிப்போடுகூடிய நிலவுடைமை நிறுவனமாக மாற்றுதல். இவை இரண்டும் சுந்தரர் காலத்திற்குப் பிறகு நடந்தேறியது.

நூற்பட்டியல்

சத்யா, ப., செவ்வியல் நூல்களில் அளவைகள். சென்னை: செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், 2023.

சாமிநாதையர், உ.வே., பத்துப்பாட்டு மூலமும் மதுரையாசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியருரையும். சென்னை: கேசரி அச்சுக்கூடம், 1931, மூன்றாம் பதிப்பு.

பிள்ளை, ஔவை சு. துரைசாமி, புறநானூறு 201-400 பாட்டுக்கள். சென்னை: திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1951, முதல் பதிப்பு.

பிள்ளை, குமரகுருபரன், T.M., சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த தேவாரம் ஏழாம் திருமுறை: தலமுறை. கி.வா. ஜகந்நாதன் (உரை). திருப்பனந்தாள்: காசித்திருமடம், 1958.

Champakalakshmi, R., Religion, Tradition and Ideology: pre-colonial south India. New Delhi: Oxford University Press, 2011.

Minakshi, C., Administration and social life under the Pallavas. Madras: University of Madras, 1938.

Sastri, Krishna H., South-Indian Inscriptions (texts) Volume IV miscellaneous inscriptions in Tamil, Telugu and Kannada (with eleven plates). Mysore: Archaeological Survey of India, 1986, reprint.

Subbarayalu, Y., South Indian Inscriptions volume XXXIV (inscriptions collected during the year 1914). New Delhi: Archaeological Survey of India, 2015.



பின்னிணைப்பு-1: வரைபடம்: சுந்தரர் பிறந்த ஊர், பயணம் செய்த ஊர்கள், கொடை அளிக்கப்பட்ட நில அளவு, சங்க கால ஊர் (நன்றி: முனைவர் G. முத்துசங்கர், IFP).

பின்னிணைப்பு-2: நில அளவை (கி.பி. 750 – கி.பி. 900)

Data collected as a part of 'Social history of vernacular mathematics' project

French Institute of Pondicherry, Pondicherry

ஊர்	மாவட்டம்	கோயில்	அரசு	அரசன்	காலம்	அளவை	கல்வெட்டு	வருகை
திருவைகாவூர்	தஞ்சாவூர்	பில்வநாதேஸ்வரர் கோயில்	பல்லவர்	நந்திவர்மன் II	753	வேலி	வேலியாகக் கொண்டு விட்ட வண்ணக்க விளாகம் நிலம் ஒன்றரையும் இறக்காதாந் திருவடி இரண்டு ...	SII 34:48
பிள்ளைபாளையம்	செங்கல்பட்டு	திருமேற்றளி கோயில்	பல்லவர்	தந்திவிக்கிரம வர்மன்	800	பட்டி	நாலுபட்டி நிலமும் பழந்திருமெல்	SII 12:44
கண்டியூர்	தஞ்சாவூர்	வீரட்டானேஸ்வரர் கோயில்	பல்லவர்	நிருபதுங்க வர்மன்	850	செய், மா	சபையோம் இவ்வூர்ச்செரிவிசைய நல்லுழான் மாறங்காளியிடை கொண்ட திபமொன்றுக்குச் செம்பொன் சம்பிராணிப் பழங்காசினொடுரையொப்பது ஊராடுகல்லால் 110 கழஞ்சு இவ்வூர்க் காளாபடாரியார்க்கு ஒழுக்கவிப்புறமாகாப் 10 செய்யும் ஒழுக்குபுறமாக ஒருமாச்செய்யும் ஆக 11 மாசெய்யும் எங்கள்	SII 5:572
பிள்ளைப்பாக்கம்	செங்கல்பட்டு	சிவன் கோயில்	பல்லவர்	நிருபதுங்க வர்மன்	850	மா	அய்யக்குடியார் குடுத்த நிலம் புறம்பாட்டிலெ ஆறுமா நிலம்	SII 12:80
பிள்ளைப்பாக்கம்	செங்கல்பட்டு	சிவன் கோயில்	பல்லவர்	நிருபதுங்க வர்மன்	850	மா	.. செறுவு எழுமாவுங் குடுத்தென்	SII 12:81

அச்சரவாக்கம்	செங்கல்பட்டு	அகஸ்தீஸ்வரர் கோயில்	பல்லவர்	நிருபதுங்க வர்மன்	850	குழி	நிலம் விரன் செறுவுங் கழுவலுங் கொடுமாடியுங் காழியுமாக எண்ணூறு குழியும் அகத்திஸ்ரீத்தேவர்க்கு குடுத்த தர்மம்	SII 12:83
திருவல்லம்	செங்கல்பட்டு	பில்வநாதேஸ்வரர் கோயில்	பாணர்கள்	மகாவலி வாணாதிராயர்	888	குழி	மாணாபரணன் வைத்த நிலைத்திருவமிர்து குத்தலரிசியிருநாழியும் நறுநெய்யாழாக்கும் நாள்த்திருவமிர்தாக சந்திராதித்யருள்ளளவு முட்டாமைச் செலுத்தவதாக கொண்ட பொன் இருபதின் கழஞ்சும் மேற்படி நந்தாவிளக்கெரிப்பதாக நிசதம் உழக்காழாக்கெண்ணையட்டுவதாக கொண்ட பொன் இருபதின் கழஞ்சும் ஆக நாப்பதின் கழஞ்சும் கொண்டு.ஊர்மஞ்சிக்கமிறை இழிச்சி வைத்த நிலம் வாகைகுண்டில் ரூா குழியும் புறவடுகொல்லை அம குழியும் குடுத்தோம்	SII 3:45

திருவல்லம்	செங்கல்பட்டு	பில்வநாதேஸ்வரர் கோயில்	பாணர்கள்	மகாவலி வாணாதிராயர்	888	குழி	சபையோம் நால்ப்பதின் கழஞ்சு செம்பொன் கொண்டு நிசதம் உரிய் நறுநெய்யும் கால்கூற்ப்பூரமுமிட்டு ஒருநொந்தாவிக்கு எருப்போமானொம். இதுக்கு முட்டின பொழுது நிசதி ஐஞ்சுகழஞ்சு பொன் மன்ற ஒட்டிக்குடித்தோம்...இதுக்கு ஊர்மஞ்சிக்கமிறை இழிச்சி வைத்த நிலம் பாற்குட்டை 400 குழியும் பலவேரிகீழ் 820 குழியும் நொணிடுகொள்ளி 2 நிலமும்	SII 3:48
லால்குடி	திருச்சிராப்பள்ளி	சப்தரிஷிஸ்வரர் கோயில்	பல்லவர்	நிருபதுங்க விக்கிரமன்	900	மா, வேலி, தடி	பொன் 50னுக்கு விற்று குடுத்த வேலி நிலமாவாது வடவூர் நான்மாவரையும் ... மூன்றுமாவும் இதன் கீழை நான்மாவரையும் இதன் கிழைக்காற்செயும் இதன் கீழை மூன்றுமாவும் இதன் கீழை அரைமாவும் ஆகத்தடி ஆறினால் நிலம் வேலியும் ......ஒருநொந்தவிளக்குக்கும் சிறுகாட்டி ஒரு திருவமிர்துக்குமாக விற்று இ நிலம் இறையும்....	SII 4:531

திருவையாறு	தஞ்சாவூர்	பஞ்சநதீஸ்வரர் கோயில்	சோழர்	பரகேசரி	900	வேலி	காடுவெட்டி வயக்கின நிலம் 5 வேலி இந்நிலன் பொந்த போகத்தில்	SII 5:540
திருவையாறு	தஞ்சாவூர்	பஞ்சநதீஸ்வரர் கோயில்	சோழர்	பரகேசரி	900	மா	நிசதி உழக்கு நெய்யா விரவும் பகலுமெரிவதற்கு ... வைத்த பொன் 30 (கழஞ்சு), வெள்ளி விளக்கு நிறை 57 பலம்..... வயக்கின நிலம் எழுமாவிற் மடுங்காற் செய்யும் வாய்காலும் ... விட்ட நிலன் கால்	SII 5:547
கண்டியூர்	தஞ்சாவூர்	வீரட்டானேஸ்வரர் கோயில்	சோழர்	பரகேசரி	900	மா	நிசதி உழக்கு நெய்யால் இரவும் பகலும் எரிப்பதர்க்கு குடுத்த பொன் 30ன் கழஞ்சும் இவனெ திருவமிதுக்கு நிசதி நானாழி அரிசியால் உச்சியம் பொது திருமமிதுக்கு குடுத்த பொன் 15 கழஞ்சும் ஆக 45 கழஞ்சு பொன்னுங்கொண்டு ஒரு நொந்தவிளக்கும் இத்திருஅமிதும் சந்திராதிதவரை...... இப்பொன்னால் எரிக்கு கடவ .... எங்கள் 10 செயில் கீழ்க்குறுடைய கால் செயிலும் திருவிளக்கு மூன்றுமா செயும் இவ்வெ அடைய இரண்டுமா செயியும் ஆக கால் செயும்	SII 5:569

							இறையிலியாக விற்றுக்குடுத்தோம்	
கண்டியூர்	தஞ்சாவூர்	வீரட்டானேஸ்வரர் கோயில்	சோழர்	பரகேசரி	900	மா	...... நிலத்தில் மிபிலாற்று கோட்டகத்து அறுமாசெஇல்	SII 5:571
கண்டியூர்	தஞ்சாவூர்	வீரட்டானேஸ்வரர் கோயில்	சோழர்	இராசகேசரி	900	மா முந்திரிகை	...... பங்கு (குறியீடு).... விலைகொண்டுடைய (குறியீடு) ..... தூணி நிலத்தால் நிலவோபாதி (குறியீடு) கால் .... பங்கு (குறியீடு) ஒருமா முந்திரிகை பங்கும் விற்று குடுத்தேன் இதேவர்க்கு ஸ்ரீகாரியஞ்செய்கின்ற நக்கன் ஸ்ரீமாறபட்டன் பக்கல் கொண்ட செம்பொன் (குறியீடு) இப்பங்கு ஒன்றெ ஒருமா முந்திரிகை பங்கும் விற்று குடுத்தேன்	SII 5:574

கண்டியூர்	தஞ்சாவூர்	வீரட்டானேஸ்வரர் கோயில்			900	மா	நிசதி உழக்கு நெய்யால் எரிவதற்கு.......... நாழி அரிசியால்...... அமுது செய்விப்பதற்கு	SII 5:577
உத்தரமல்லூர்	செங்கல்பட்டு	வைகுந்தபெருமாள் கோயில்	பல்லவர்	நந்திவர்மன்	900	பாடகம்	குண்டூர் கந்தமச்சடங்கவியார் பங்கின்வழி முதலிட்டிரண்டாம் பாடகமும் மிமூன்று பாடகமும் யானிவர் பக்கல் விலைக்குக் கொண்டுடையான அவிப்புறமாகக் குடுத்தெனிவற்றின் பொகத்தால் நித்ய முந்நாழி அரிசி நெய்யுட்ப்பட 2 பொழுது திருவமிருது காட்டுவானாகப் பணித்தோம்	SII 6:356
உத்தரமல்லூர்	செங்கல்பட்டு	வைகுந்தபெருமாள் கோயில்	பல்லவர்	தந்திவர்மன்	900	பாடகம்	பரமெஸ்வரவதியின் கீழ்க்கூரின் றெற்க்கு எரிக்க வைத்த ஐந்து பாடகமும் முடும்பை	SII 6:364
உத்தரமல்லூர்	செங்கல்பட்டு	வைகுந்தபெருமாள் கோயில்	பல்லவர்	விக்கிரபர்மர்	900	அரை கோல் அகலம்	எம்மூர் கறிகைக்குட்டத்தின் சுற்றும் கோலிடு நீக்கி இக்கோலிட்டொம் அடைய அரைக்கொல் அகலத்தால் இவேரிகரையின் வளையில் சுற்றும் மஞ்சிக்கமா யிந்நிலம் இவ்வேரிக்கெ பகிர் பூமியாகவும்	SII 6:370

							மடமெடுக்கவேண்டும் நிலமும்	
உத்தரமல்லூர்	செங்கல்பட்டு	வைகுந்தபெருமாள் கோயில்	பல்லவர்	நந்திவர்மன்	900	பாடகம்	குண்டூர் கந்தமச்சடங்கவியார் பங்கின்வழி முதலிட்டிரண்டாம் பாடகமும் மிமூன்று பாடகமும் யானிவர் பக்கல் விலைக்குக் கொண்டுடையான அவிப்புறமாகக் குடுத்தெனிவற்றின் பொகத்தால் நித்ய முந்நாழி அரிசி நெய்யுட்ப்பட 2 பொழுது திருவமிருது காட்டுவானாகப் பணித்தோம்	SII 6:356
உத்தரமல்லூர்	செங்கல்பட்டு	வைகுந்தபெருமாள் கோயில்	பல்லவர்	தந்திவர்மன்	900	பாடகம்	பரமெஸ்வரவதியின் கீழ்க்கூரின் றெற்க்கு எரிக்க வைத்த ஐந்து பாடகமும் முடும்பை	SII 6:364
உத்தரமல்லூர்	செங்கல்பட்டு	வைகுந்தபெருமாள் கோயில்	பல்லவர்	விக்கிரபர்மர்	900	அரை கோல் அகலம்	எம்மூர் கறிகைக்குட்டத்தின் சுற்றும் கோலிடு நீக்கி இக்கோலிட்டொம் அடைய அரைக்கொல் அகலத்தால் இவேரிகரையின் வளையில் சுற்றும் மஞ்சிக்கமா	SII 6:370

							யிந்நிலம் இவ்வேரிக்கெ பகிர் பூமியாகவும் மடமெடுக்கவேண்டும் நிலமும்	
திருவொற்றி யூர்	செங்கல்ப ட்டு	ஆதிபுரீஸ்வ ரர் கோயில்	பல்லவ ர்	அபராஜித விக்கிரம வர்மன்	900	1000 குழி	இவ்வாயிரம் குழியாலும் .... நிசதி நானாழி அரிசி இரண்டு சந்திவிளக்கினுக்கும் உழக்கெண்ணையும் இவ்வூர் தர்மிகளோம்	SII 12:95
திருச்செந்து றை	திருச்சிரா ப்பள்ளி	சந்திரசேகர ர் கோயில்			900	அரையே அரைக் கால் செய்	நூற்றுக் கழஞ்சு பொன் குடுத்து கல்லிசெயியாக்கி பின்னாமழை வயக்கலென்று பேர் யிட்டு அரையே அரைக்கால் சேயியும் நிலம் உழுவார் பத்தெட்டு குத்தல் பழவரி திருவமிதுக்கு அட்டுவிதாக.	SII 32, பின்னிணைப்பு எண். 3
திருப்பத்தூர்	இராமநாத புரம்	திருத்தாலீ ஸ்வரர் கோயில்	பாண்டி யர்	வரகுணன்	900	அகலம், முழம்	ப்ழங்காசு பதினைந்து இக்காசினாற் பூப்பொலி காசின்வாய் இருவிரல் அகலத்து இரண்டிரண்டு நறும்பூ இட்டுத் தொடுத்தன இரு முழ நீளத்தன ஒரொவடமாக நியதி பதினைந்து வடம் இடுவதாக	SII 14:15

விஜயநாராய ணம்	திருநெல் வேலி	மனோன்ம ணீள்வரர் கோயில்	பாண்டி யர்	கோமாற ன் சடையன்	900	மா	பத்து மா நிலமுஞ் சந்திராதித்தவற் திருநந்தாவிளக்கு எரிக்க வைத்த	SII 14:17
திருக்குறுங்கு டி	திருநெல் வேலி	நம்பி கோயில்	பாண்டி யர்	கோமாற ன் சடையன்	900	மா அரைக் காணி, மாகா ணி, அரைக் காணி, காலே காணி	நிலன் காலெய் காணியும் உண்ணிலம் ஒழிவின்றிக்கெய் விலக்கறவிற்றுப் பொருளறக் கொண்டு	SII, 14, no, 19, ARE. 128 of 1905
தளப்திசமுத் திரம்	திருநெல் வேலி	வயல்	பாண்டி யர்	கோமாற ன் சடையன்	900	மா, தடி	நிசதி உழக்கு நெய் முட்டாம் லட்டி விளக்கு எரிவதாக, துடவை தடி 2 நிலன் மாகாணி தண்ணிர்த்துடவை தடி 1 நிஅல்ன் ... இரண்டுமா கொயிற் பிள்ளைகள் முந்நூற்றுவர்	SII 14:40
ஏர்வாடி	திருநெல் வேலி	பாறை	பாண்டி யர்	கோமாற ன் சடையன்	900	தடி	நிலம் 22 விளம்பெருங்காலால் நீர் அட்டு நெல் விளைவன கானம் தடி 2 காயலூர்க்கிழான் தடி 2 நிலன் 4 இக்காலால் நீர் அட்டு நெல் விலவன முதச்சேர்மெலது தடி 1 நிலன் 5 வகையில்....	SII 14:41

காவேரிப்பாக்கம்	வட ஆற்காடு	சுந்தரவரத பெருமாள் கோயில்			900	100 குழி = 1 மா	பெருமக்கள் இவர்களை தண்டித்து செய்வித்து குடுப்பன புதுப்பித்து நூறு குழி ஒருமாவாக இறை காட்டின பொழுது.	SII 41:179
ஆதனுர்	திருநெல் வேலி	ஆதிலிங்கேஸ்வரர் கோயில்			900	மா	நீர்நிலம் இரண்டு மா நாகன்றிஞல்லூர் வேலீக்கருஞ்செயும்....	SII 26:460

முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்

மீ.மருது பாண்டியன்
காப்பாட்சியர், அருங்காட்சியகத்துறை
அரசு அருங்காட்சியகம், மதுரை.

தீ.ஆனந்தி
தொல்லியல் அலுவலர், தொல்லியல் துறை
திருமலை நாயக்கர் அகழ்வைப்பகம், மதுரை.

சுருக்கம்

முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்கள் பிற்கால சோழர்கள் காலத்தில் கோயிலில் பூஜைகள் செய்யும் பிராமண அமைப்பாகும். 'முப்பது வட்டம்' என்பது மாதத்தின் முப்பது நாட்களைக் குறிக்கிறது. 'காணி' என்பதன் பொருள் உரிமை. மாதத்தின் முப்பது நாட்களும் சிவன் கோயில்களில் பூசை செய்யும் உரிமையினையுடைய சிவப்பிராமணர்கள் என்பது பொருளாகும். பூசைகளானது நித்திய பூசை, சந்தி பூசை, நொந்தாவிளக்கு எரிப்பது, கோயில் திருவிழாக்கள் காலங்களில் அனைத்து விதமான பூசைகளும் மேற்கொள்பவர்கள். தண்ணீர்க்குண்ணம் ஜலகிரிநாதர் கோயில் கல்வெட்டில் இக்கோயில் நொந்தாவிளக்கு எரிப்பதற்காக மாதத்தினை ஐந்து நாட்கள் வீதம் நான்கு பாகங்களாக பிரித்துக்கொண்டு முப்பது நாட்களும் விளக்கெரிக்கும் பணியினை சிவபிராமணர்கள் மேற்கொண்டுள்ளனர். இவர்களை முப்பது வட்டத்து காணியுடைய சிவப்பிராமணர்கள் என்று கல்வெட்டு கூறுகிறது. இவ்வமைப்பானது இரண்டாம் இராஜராஜனின் (கி.பி.1156) தொடக்க காலத்தில் முப்பது வட்டத்து நாளோபாதி நாங்கள் காணி அனுபவிக்கிறபடியே என்று பயன்படுத்தபட்டு அவருடைய கடைசி (கி.பி.1165) காலத்தில் நாகப்பட்டினம் காயாரோகணர் கோயில் கல்வெட்டுக்களில் முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்கள் என்று முழுமையடைந்துள்ளது. இரண்டாம் இராஜாதிராஜன் காலத்திற்குப் (கி.பி.1173) பிறகாக வெளிவந்த அனைத்து நொந்தாவிளக்கு கல்வெட்டுக்களிலும் முப்பது வட்டதுக் காணியுடைய சிவபிராமணர்கள் என்றுதான் கூறப்பட்டுள்ளது. ஆகவே இவ்வமைப்பானது இரண்டாம் இராஜராஜன் (கி.பி.1146-1173), இரண்டாம் இராஜாதிராஜன் (கி.பி.1166-1182), மூன்றாம் குலோத்துங்கன் (கி.பி.1178-1218) மூன்றாம் இராஜராஜன் (கி.பி.1216-1253) மற்றும் மூன்றாம் இராசேந்திர சோழன் (கி.பி.1246-1258) ஆகிய சோழ மன்னர்கள் காலத்தில் மட்டும் இயங்கிய அமைப்பாகும். பிற்கால பாண்டியர் காலத்தில் கி.பி.1350 ஆம் ஆண்டு இரண்டாம் மாறவர்மன் திரிபுவன சக்கரவத்தின் வீரபாண்டியனின் செங்கல்பட்டு ஆத்தூர் கல்வெட்டில் மட்டும் முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்கள் பற்றிய குறிப்பு இடம்பெற்றுள்ளது. பிற்கால சோழ அரசு வீழ்ச்சி பெற்ற பிறகு முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்கள் எனும் அமைப்பின் பெயர் கல்வெட்டுக்களில் இடம்

பெறவில்லை. அதற்கு மாறாக முப்பது வட்டத்து சிவபிராமணர்கள் என்னும் பெயர் மட்டும் இடம்பெற்றுள்ளது. கி.பி.1153க்கும் கி.பி.1279 வரையிலான காலக்கட்டங்களில் முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்கள் குறித்து விரிவாக ஆராய்கிறது.

முன்னுரை

முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்கள் பிற்கால சோழர்கள் காலத்தில் கோயில் பணிகள் செய்யும் சிவபிராமணர்கள் அமைப்பாகும். 'முப்பது வட்டம்' என்பது மாதத்தின் முப்பது நாட்களைக் குறிக்கிறது.[1] 'காணி' என்பதன் பொருள் உரிமை[2]. மாதத்தின் முப்பது நாட்களும் சிவன் கோயில்களில் பணிகள் செய்யும் உரிமை உடைய சிவப்பிராமணர்கள் என்பது இதன் பொருளாகும். உதாரணமாக, தண்ணீர்க்குண்ணம் ஜலகிரிநாதர் கோயில் கல்வெட்டில் இக்கோயில் நொந்தாவிளக்கு எரிப்பதற்காக மாதத்தினை ஐந்து நாட்கள் வீதம் நான்கு பாகங்களாக பிரித்துக்கொண்டு முப்பது நாட்களும் நித்திய பூசை, சந்தி பூசை, நொந்தாவிளக்கு எரிப்பது, கோயில் திருவிழாக்கள் காலங்களில் கொண்டாப்படும் அனைத்து விதமான பூசைகளும் மேற்கொள்வது இவர்களின் தலையாயப் பணியாகும். இவர்களை முப்பது வட்டத்து காணியுடைய சிவப்பிராமணர்கள், முப்பது வட்ட சிவபிராமணர்கள், காணியுடைய சிவபிராமணர்கள் என்று அழைப்பர்[3]. ஆனால், ஒவ்வொரு குழுக்களும் வெவ்வேறு காலத்தினைச் சேர்ந்த அமைப்பாகும். இது அவர்கள் கோயில்களில் மேற்கொள்ளும் பணிகளுக்கு ஏற்றவாறு மாறிக்கொண்டே வருகிறது. காணியுடைய சிவபிராமணர்கள் குழுவில் "காணி" எனும் உரிமை பெற்ற சிவபிராமணர்கள் எவர் வேண்டுமானாலும் கோயிலில் பணி செய்யலாம். ஒரு குறிப்பிட்ட குடும்பமாக இருக்காது. இது குறித்து மேலும் ஆய்வு செய்ய வேண்டும். முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்கள் என்பவர்கள் காணி எனும் உரிமையினை பெற்று ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், உறவினர்கள், என பணிசெய்துள்ளதற்கான சான்றுகள் ஏராளம். முப்பது வட்டத்து சிவபிராமணர்களுக்கு எவ்வித உரிமையும் (காணி) கொடுக்காமல் கிராமத்து சபையின் மூலமாகவோ அல்லது கோயில் நிர்வாகக் குழுக்களின் மூலமாகவோ கோயில் பணிகளை மேற்கொண்டுள்ளனர். சில நேரங்களில் 'காணி' எனும் உரிமையினைப் பெற அரசனுக்கு பணம் கொடுத்துள்ளனர்[4].

இவ்வமைப்பானது இரண்டாம் இராஜராஜனின் (கி.பி.1156) தொடக்க காலத்தில் முப்பது வட்டத்து நாளோபாதி நாங்கள் காணி அனுபவிக்கிறபடியே என்று பயன்படுத்தபட்ட சொல்லானது அவருடைய கடைசி (கி.பி.1165) காலத்தில் நாகப்பட்டினம் காயாரோகணர் கோயில் கல்வெட்டுக்களில் முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்கள் என்று அழைத்துள்ளனர்[5]. முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்கள் எனும் சொல்லானது முதன் முதலில் கி.பி.1156 இரண்டாம் இராஜராஜன் காலத்தில் நாகப்பட்டினம் காயாரோகணர் கோயில் கல்வெட்டுகளில் முப்பது வட்டத்து நாளோபாதி

நாங்கள் காணி அனுபவிக்கிறபடியே என்று தொடங்கி கி.பி.1165 இல் முழுமைபெற்ற வடிவமாக முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்கள் என்று அழைக்கத்தொடங்கினர். அதற்குப் பிறகாக இரண்டாம் இராஜாதிராஜன் காலத்தில் கி.பி.1173 க்கு பிறகாக வெளிவந்த அனைத்து நொந்தாவிளக்கு கல்வெட்டுகளிலும் முப்பது வட்டதுக் காணியுடைய சிவபிராமணர்கள் என்றுதான் கூறப்பட்டுள்ளது[6]. ஆகவே இவ்வமைப்பானது இரண்டாம் இராஜராஜன் (கி.பி.1146-1173), இரண்டாம் இராஜாதிராஜன் (கி.பி.1166-1182), மூன்றாம் குலோத்துங்கன் (கி.பி.1178-1218) மூன்றாம் இராஜராஜன் (கி.பி.1216-1253) மற்றும் மூன்றாம் இராசேந்திர சோழன் (கி.பி.1246-1258) ஆகிய சோழமன்னர்கள்காலத்தில்மட்டும்இயங்கியஅமைப்பாகும்.ஆனால்,கி.பி.1350 ஆம் ஆண்டு இரண்டாம் மாறவர்மன் திரிபுவன சக்கரவத்தி வீரபாண்டியனின் செங்கல்பட்டு ஆத்தூர் கல்வெட்டில் மட்டும் முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்கள் பற்றிய குறிப்பு இடம்பெற்றுள்ளது. ஏனைய பாண்டியர்கள் கால கல்வெட்டில் முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்களைப் பற்றிய குறிப்பு இடம்பெறவில்லை. பிற்கால சோழ அரசு வீழ்ச்சி பெற்ற பிறகு முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்கள் எனும் அமைப்பின் பெயர் கல்வெட்டுக்களில் இடம் பெறாமல், அதற்கு மாறாக முப்பது வட்டத்து சிவபிராமணர்கள் என்னும் பெயர் மட்டும் இடம்பெற்றுள்ளது. “காணியுடைய” என்னும் சொல் நீக்கம் பெற்றுள்ளது. குறிப்பாக பிற்கால பாண்டியர்கள் கால கல்வெட்டுக்கள் (ஆத்தூர் தவிர) மற்றும் கொங்குமண்டலக் கல்வெட்டுக்களில் முப்பது வட்டத்து சிவபிராமணர்கள் எனும் பெயரில் கி.பி.14ஆம் நூற்றாண்டு வரை கல்வெட்டுகள் கிடைக்கிறது[7].

முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்களின் பணிகள்

முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்களின்[8] முக்கியப் பணி கோயில் காரியங்களை மேற்கொள்வதும், கோயில்களுக்கு கொடைகளைப் பெற்று அவற்றை குறைவில்லாமல் நிறைவேற்றுவதும் ஆகும். சந்தி விளக்கு எரிப்பது, நொந்தவிளக்கு எரிப்பது, அமுதுபடி அளப்பது மட்டுமல்லாது முக்கியமான திருவிழாக்காலங்களில் அரிசி, கறியமுது, உப்பமுது, மிளகு, நெய், தயிர், அடைக்காய் வெற்றிலையுள்ளிட்ட அமுதுபடிக்குத் தேவையான பொருட்களை பெற்று கோயிலின் தினசரிபூசையினை நடத்தவும் செய்துள்ளனர்[9]. கி.பி.1146 முதல் கி.பி.1258 க்கும் இடைப்பட்ட சோழர் காலத்திய நொந்தாவிளக்கு கல்வெட்டுக்களில் முப்பது வட்டதுக் காணியுடைய சிவபிராமணர்கள் விளக்கு எரிப்பதற்கு பணம் மட்டுமே பெற்று, அதன் மூலம் கிடைக்கும் பொலிசை (வட்டி)யினைக்கொண்டு விளக்கெரித்துள்ளனர்[10].

முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்கள் பற்றி தொல்லியல் அறிஞரின் விளக்கம்

தொல்லியல் அறிஞர் பூங்குன்றன், முப்பது வட்டத்துக் காணியுடைய சிவப்பிராமணர்கள், முப்பது வட்டம் சிவபிராமணர்கள், காணியுடைய

சிவப்பிராமணர்கள் ஆகிய அனைத்து அமைப்புகளும் ஒரே பணியினை மேற்கொள்ளும் அமைப்பு தான். அவற்றுள் வேறுபாடுகள் ஏதும் இல்லை என்கிறார். அவ்வாறெனில், ஏன் பல்லவர், சோழ, பாண்டியர் மற்றும் கொங்கு மண்டல கல்வெட்டுக்களை ஆராயும் போது பல்வேறு நபர்கள் கோயில்காரியங்களைச் செய்துள்ளனர். உதாரணமாக, நொந்தாவிளக்கு எரிக்கும் பணியினை தனிநபர்கள், கிராம சபைகள், வணிகர்கள், செல்வந்தர்கள், சிவபிராமணர்கள், காணியுடைய சிவபிராமணர்கள், முப்பது வட்ட நாளோபாதி சிவபிராமணர்கள், அறுபது வட்ட சிவபிராமணர்கள், முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்கள், முப்பது வட்ட முறை செய்யும் சிவபிராமணர்கள், முப்பது வட்ட சிவபிராமணர்கள் என்று பலபெயர்களில் கல்வெட்டுக்களில் இடம்பெற்றுள்ளன. அதிலும் குறிப்பாக ஏன் இரண்டாம் இராஜராஜன் காலம் தொடங்கி மூன்றாம் இராஜேந்திர சோழன் காலம் வரை முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்கள் எனும் பெயரில் கல்வெட்டுகளில் இடம்பெற்றுள்ளது. சிற்சில கோயில் கல்வெட்டுகளில் முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்கள் பெயர்கள் இடம்பெறாமல் வெவ்வேறு பெயர்கள் இடம் பெற்றாலும் அக்கல்வெட்டு பெரும்பாலும் சோழ நாட்டிற்கு வெளியில் தான் கிடைத்துள்ளது. ஆகவே, முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்கள் எனும் அமைப்பு இரண்டாம் இராஜராஜன் காலத்தில் தொடங்கி மூன்றாம் இராஜேந்திர சோழன் காலத்தில் முடிவுற்ற ஒரு அமைப்பாகும். அதற்குப் பிறகான காலங்களில் அவர்களின் “காணியுரிமை” இழந்து முப்பது வட்ட சிவபிராமணர்களாக மாறி கோயில் நிர்வாகக் குழுவின் ஆலோசனை மூலமாகவோ அல்லது கிராம நிர்வாக சபைகளின் மூலமாகவோ கோயில் காரியங்களை மேற்கொண்டுள்ளனர்[11].

முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணக் குழுக்கள்

முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்கள் எனும் அமைப்பானது சோழநாட்டு சிவன் கோயில்களில் செயல்பட்டு வந்த குழுவாகும். இக்குழுவில் ஒரே குடும்பத்தினைச் சேர்ந்த நபர்கள், ஒரே கோத்தரத்தினைச் சேர்ந்தவர்கள், அப்பா, மகன், தம்பி, தமையன் போன்றோர்கள் இணைந்து கோயில்பணிகளை மேற்கொண்டுள்ளனர். சோழர் காலத்து கல்வெட்டுகளின் அடிப்படையில் கோயில்களில் மேற்கொள்ளப்படும் சந்தி பூசைகளின் எண்ணிக்கைக்கு ஏற்றாற் போல் இக்குழுவில் உள்ள நபர்களின் எண்ணிக்கையிலும் மாற்றம் பெற்றுள்ளது. உதாரணமாக தினந்தோறும் ஒரு கோயிலில் ஒரு கால பூசை, மூன்று கால பூசை, ஐந்து கால பூசை அல்லது ஒன்பது கால பூசைகள் எனும் மாறும் பொழுது அதற்கேற்றாற் போல் இக்குழுவின் எண்ணிக்கையிலும் மாற்றம் பெற்றுள்ளது. சந்தி பூஜைகளின் எண்ணிக்கை குறைவாக உள்ள கோயில்களில் முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்கள் எண்ணிக்கையும் குறைவாக உள்ளது. எண்ணிக்கை குறைவாக உள்ள முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்கள் கோயில்களில் மேற்கொள்ளப்படும் திருவிழாக்காலங்களிலும் விசேஷ நாட்களிலும் மட்டும் பற்றாக்குறை ஏற்பட்டால் அருகில் உள்ள முப்பது வட்டதுக் காணியுடைய சிவபிராணர்களையும் தங்களுடன் சேர்த்துக்கொண்டு

பூசைகள் செய்துள்ளனர். தங்களது உறவினர்கள் தவிர்த்து மற்றவர்களை அவ்வாறு சேர்த்துக் கொள்ள சிவபிராமணர்கள் விருப்பம் கொள்ளவில்லை. ஆகவே தான் கல்வெட்டுக்களில், தமையன், தம்பி போன்ற உறவுச் சொற்கள் இடம்பெற்றுள்ளன. கோயில்களில் சந்தி பூசையின் எண்ணிக்கை அதிகப்படுத்தினால் அதற்கேற்றார் போல் தனது உறவினர்களை அக்கோயில் பூசை காரியங்களில் இணைத்துக்கொண்டு பணிசெய்துள்ளனர்[12].

முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்கள் உள்ள கோயில்கள்

முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்களின் அமைப்பானது பல்வேறு கோயில் கல்வெட்டுக்களில் இடம்பெற்றுள்ளன. அவை, திருநள்ளாறு, இரிஞ்சியூர், திருக்கோளிலி (திருக்குவளை), திருவாய்மூர், நாகப்பட்டினம், வேதாரண்யம், அகஸ்தியன்பள்ளி, கோடியகாடு, திருநெல்லிக்காவல், திருத்தெங்கூர், திருத்துதேவன்குடி, திருமெய்ஞானம், கொறுக்கை, தன்னீர்க்குன்னம், பெரியகொத்தூர், திருராமநந்தீஸ்வரம், நல்லூர், புலிப்பாக்கம், ஆத்தூர் போன்ற ஊர்கள் ஆகும். மேற்கூறிய ஊர்களில் புலிப்பாக்கம் மற்றும் ஆத்தூர் ஆகிய இரண்டு ஊர்கள் மட்டும் தற்போதைய செங்கல்பட்டு மாவட்டத்தில் (தொண்டை நாட்டில்) உள்ளன. ஏனையவை அனைத்தும் சோழ நாட்டின் கீழ் தஞ்சை பகுதியில் உள்ள திருத்தலங்களலாகும்.

01. திருநள்ளாறு

புதுச்சேரி யூனியன் காரைக்கால் வட்டத்தில் திருநள்ளாறு உள்ளது. இங்குள்ள சனீஸ்வரன் கோயில் மிகவும் புகழ் பெற்ற சோழர்காலத்திய கோயிலாகும். இக்கோயில் சப்தவிடங்கத் தலங்களில் ஒன்றாகும். இரண்டாம் இராசராசனின் பத்தொன்பதாவது ஆட்சியாண்டினைச் (கி.பி.1165) சேர்ந்த கல்வெட்டில் முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்களைப் பற்றிய குறிப்பு உள்ளது. காலத்தால் முந்தைய கல்வெட்டு இதுவாகும்[13]. கல்வெட்டுச் செய்தியின் படி குனித்தான் சிவதேவனான மீனவன் மூவேந்தவேளானிடம் நூறு காசுகளை முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்கள்[14] பெற்றுக்கொண்டு கோயிலில் ஒரு நொந்தாவிளக்கு எரிக்க ஒப்புக்கொண்டுள்ளனர்.

இரண்டாவது கல்வெட்டு இரண்டாம் இராசாதிராசனின் பதினோராவது ஆட்சியாண்டுடினைச் (கி.பி.1176) சேர்ந்ததாகும். அதில் நித்த வினோத வளநாட்டு ஆமூர்க்கூற்றத்து விழியூருடையாந் செந்நாடுடையான் உடைய நம்பியாரான தொண்டைமானார்[15] அவர்களிடமிருந்து இக்கோயில் முப்பது வட்டத்துக் கோயில் காணியுடைய சிவபிராமாணர்கள்[16] உபையத் தீட்டு பெற்றுள்ளனர். கல்வெட்டில் எதற்காக உபையத் தீட்டு[17] பெற்றார்கள் என்பதற்கான சான்று இல்லை யென்றாலும், ஏனைய கல்வெட்டுக்களில் காணும் சான்றுகளின் அடிப்படையில் இக்கோயில் திருநொந்தாவிளக்கு

எரிப்பதற்காகத்தான் உபையத் தீட்டு எழுதிக்கொடுத்திருக்கின்றனர் என்று கருதலாம்[18].

மூன்றாவது கல்வெட்டு மூன்றாம் குலோத்துங்கனின் ஒன்பதாவது ஆட்சியாண்டினைச் (கி.பி.1187) சேர்ந்தாகும். இக்கல்வெட்டில் கோயிலுக்கு எண்ணெய்விடும்வாணியன்சோறன்ஆனநாடுடையநாயகமாயிலட்டிஎன்பான் ...ம்ப குடையான் சான்று போனான் என்பவனிடமிருந்து 120 காசினை முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்கள் பெற்றுக்கொண்டு கோயிலில் மூன்று சந்தி வழிபாட்டின்போது விளக்கெரிக்கத் தேவையான எண்ணையை வழங்குவதாகக் கூறி உபையத் தீட்டினை எழுதிக் கொடுத்துள்ளனர்[19]. இங்கு கிடைக்கும் அனைத்துக் கல்வெட்டுகளிலும் நொந்தாவிளக்கு எரிப்பதற்காக கொடையாக காசுகளை மட்டும் இக்கோயில் சிவபிராமணர்கள் பெற்றுள்ளனர்.

02. இரிஞ்சியூர்

நாகப்பட்டினம் மாவட்டம் மற்றும் வட்டத்திற்குபட்ட கிராமம் இரிஞ்சியூராகும். வரிஞ்சையூர் என்னும் இவ்வூர் தற்போது மக்கள் மத்தியில் இரிஞ்சியூர் என்று வழங்கலாயிற்று. இங்கு பாடல்பெற்ற வேபுரீஸ்வரர் எனும் சிவன் கோயில் ஒன்றுள்ளது. கல்வெட்டில் மூலவரின் பெயர் திருக்கோதாரமுடையார் என்றுள்ளது[20]. இக்கோயிலில் நான்கு பிற்கால சோழர்கால கல்வெட்டுகள் உள்ளன. கல்வெட்டின் அடிப்படையில் இக்கோயிலானது இரண்டாம் இராஜராஜன் காலத்தில் உருவாகியிருக்கவேண்டும். நான்கு கல்வெட்டுக்களில் மூன்று கல்வெட்டுக்கள் முப்பது வட்டத்து காணியுடைய சிவபிராமணர்களைப் பற்றி குறிப்பிடுகிறது. இரண்டாம் இராஜராஜனின் (கி.பி.1166) இருபத்திரண்டாம் ஆட்சியாண்டில் திருக்கோதாரமுடையார் கோயிலில் சிறுகாலைச் சந்தியின் போது விளக்கெரிக்க ஐநூறு காசுகளை முப்பது வட்டத்து காணியுடைய சிவபிராமணர்கள் பெற்றுக்கொண்டு விளக்கெரிக்க சம்மதித்துள்ளனர்[21]. அதே ஆட்சியாண்டில் மற்றொரு கல்வெட்டில் (கி.பி.1168) திருவெண்காடு பட்டன் எரிக்கிற திருவிளக்கு ஒன்றுக்கு உபையமாக முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்களிடம் ஐநூறு காசுகள் கொடுத்த செய்தி இடம்பெற்றுள்ளது[22]. மூன்றாவது கல்வெட்டானது இவனது இருபத்திமூன்றாம் ஆட்சியாண்டில் வழங்கப்பட்டது. கி.பி.1167ல் தில்லைநாயகன் திருமறுமாறுபட்டன் என்பவர் விளக்கெரிக்க ஐநூறு காசுகளை இக்கோயில் முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்களிடம் வழங்கியுள்ளார். அதனைப் பெற்றுக்கொண்ட இக்கோயில் சிவபிராமணர்கள் அப்பணியினை நிறைவேற்றித் தருவதாக இசைவு அளித்துள்ளனர்[23]. மேற்கூறிய அனைத்துக் கல்வெட்டுக்களும் இக்கோயில் உள்ள அகத்தீஸ்வரமுடையார் சந்நிதியின் கருவறையின் மேற்குக் குமுதப்பட்டையில் உள்ளது. இக்கோயில் கல்வெட்டின் படியும் நொந்தாவிளக்கு எரிக்க முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்கள் காசினை மட்டுமே பெற்றுள்ளனர்.

03. திருக்குவளை

நாகப்பட்டினம் மாவட்டத்தில் தனி வட்டமாக திருக்குவளை உள்ளது. இங்கு பாடல் பெற்ற சோழர் காலத்திய தியாகரசர் கோயில் உள்ளது. இது சப்தவிடங்கத் தலங்களில் ஒன்றாகும். மறைந்த தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி பிறந்த ஊர். இக்கோயிலில் இருபத்திநான்கு கல்வெட்டுகள் உள்ளன. அவற்றில் இரண்டாம் இராஜாதிராஜன் காலத்தில் கி.பி.1184 ஆம் ஆண்டினைச் சேர்ந்த கல்வெட்டு தியாகராஜசுவாமி கோயிலின் மகாமண்டப வடக்கு மேற்குப்புற ஜகதியில் உள்ளது. அக்கல்வெட்டின்படி திருக்கோளிலி உடையார்க்கு நொந்தாவிளக்கு எரிக்க அளித்த 100 காசுகளைப் பெற்றுக்கொண்ட இக்கோயில் முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்கள், நாளொன்றுக்கு உழக்காக எண்ணெய் வீதம் ஆண்டுக்கு 91 நாழி உழக்கு நெய்யளிக்க வழி வகை செய்துள்ளனர்[24].

மூன்றாம் குலோத்துங்கனின் நான்காம் ஆட்சியாண்டில் கி.பி.1181இல் குலோத்துங்க சோழக்கச்சிராயர் என்பவர் 100 காசுகளை முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்களிடம் கொடுத்து நாள் ஒன்றுக்கு உழக்கு எண்ணெய் வீதம், ஆண்டின் 365 நாள்களுக்கும் 91 நாழி எண்ணெய் அளக்க சம்மதம் பெற்றுள்ளனர்[25].

மூன்றாம் குலோத்துங்கனின் ஏழாம் ஆட்சியாண்டான கி.பி.1183 ஆண்டினைச் சேர்ந்த மற்றொரு கல்வெட்டில் இராசேந்திர சோழ வளநாட்டு அளநாட்டு வண்டாழை வேளூர்க் கூற்றத்து ஓருரைச் சேர்ந்த ஒருவன் திருக்கோளிலி உடையார் கோயிலில் மூன்று திருநொந்தாவிளக்கு எரிக்க 135 காசுகளை முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்களிடம் கொடுத்துள்ளனர். இக்காசினைப் பெற்றுக்கொண்ட சிவப்பிராமணர்கள் நாளொன்றுக்கு உழக்கெண்ணையாக 365 நாளுக்கும் 91 நாழியும் ஓர் உழக்கும் எண்ணெய் செலுத்த இசைந்துள்ளனர்[26].

மூன்றாம் குலோத்துங்கனின் இருபதாம் ஆட்சியாண்டினைச் (கி.பி.1196) சேர்ந்த மற்றொரு கல்வெட்டானது தியாகராஜர் கோயில் மகாமண்டபச் வடக்கு மேற்குப்புற அதிட்டானத்தில் உள்ளது. அக்கல்வெட்டில் திருக்கோளிலி உடையாருக்கு நொந்தாவிளக்கு எரிக்க திருச்சாட்டியக்குடியுடையான் 800 காசுகளை முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்களிடம் கொடுத்து விளக்கெரிக்கச் சம்மதித்துள்ளனர்[27].

தியாகராஜர் கோயில் அகத்தீஸ்வரர் சன்னிதியின் மேற்குச் சுவற்றில் மூன்றாம் குலோத்துங்கனின் மற்றொரு கல்வெட்டு உள்ளது. கல்வெட்டின் காலம் அறியமுடியவில்லை. அக்கல்வெட்டில் அருமொழிதேவ வளநாட்டைச் சேர்ந்த தவமுடையான் என்பான் திருக்கோளிலி உடையார் கோயிலில் திருநொந்தாவிளக்கு எரிக்க தினமும் உழக்கெண்ணையைச் செலுத்துவதற்காக

1000 காசுகளை முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்களிடம் கொடுத்து விளக்கெரிக்க சம்மதம் பெற்றுள்ளனர்[28].

கி.பி.11-12 ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த திரிபுவனச் சக்கரவத்திகள் கல்வெட்டு ஒன்றில் முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்கள் பற்றிய செய்தி இடம்பெற்றுள்ளது. அக்கல்வெட்டில் இராஜேந்திர சோழ வளநாட்டு இடையளநாட்டு திருக்கோளிலி உடையார்க்கு தினமும் ஒரு நொந்தாவிளக்கு எரிக்க 140 காசுகளை இக்கோயில் முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்களிடம் கொடுத்துள்ளனர்[29].

கி.பி.12 அல்லது 13ம் நூற்றாண்டினைச் சேர்ந்த கல்வெட்டு தியாகராசர் கோயில் அகத்தீஸ்வரர் சன்னதியின் வடக்குச் சுவரில் உள்ளது. இக்கல்வெட்டானது உடைந்த நிலையில் இருந்தாலும், கிடைக்கும் சொற்கட்டுக்களின் மூலம், முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்கள் தங்களது பங்கினை (காணி) விற்பதும், வாங்குவதும் நடைமுறையாகக் கொண்டுள்ளனர். ஆகையால் சிவபிராமணர்கள் ஏதோவொரு வகையான தடையினால் தங்களது உரிமையை விற்கவும், வாங்கவும் செய்துள்ளனர்[30].

இறுதியாக, கி.பி.13 நூற்றாண்டினைச் சேர்ந்த கல்வெட்டு ஒன்றில் இக்கோயில் முப்பது வட்டத்து சிவபிராமணர்கள் என்ற பெயர் இடம்பெற்றுள்ளது. இரண்டாம் இராஜாதிராஜன் காலம் தொடங்கி மூன்றாம் ராஜேந்திரன் காலம் வரையிலும் இருந்த முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்கள் எனும் அமைப்பானது கி.பி.13 நூற்றாண்டின் பிற்பகுதியைச் சேர்ந்த இவ்வூர் கல்வெட்டில் முப்பது வட்டத்து சிவபிராமணர்கள் என்று குறிப்பிடப்பெற்றுள்ளது. இதன்மூலம் ஏதோ மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன என்பதினை அறியமுடிகிறது[31]. இவ்வூரில் கிடைக்கும், கல்வெட்டின் படி மூன்றாம் குலோத்துங்கன் காலம் தொடங்கி பயன்பாட்டில் இருந்த முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்கள் அமைப்பானது, கி.பி.13ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் முப்பது வட்டது சிவபிராமணர்கள் என்று பெயர்மாறத் தொடங்கியுள்ளது.

04. திருவாய்மூர்

திருவாய்மூர், நாகப்பட்டினம் மாவட்டம், திருக்குவளை வட்டத்தில் அமைந்துள்ளது. இங்கு சப்த விடங்க தலங்களில் ஒன்றான தியாகராஜர் திருக்கோயில் உள்ளது. கல்வெட்டுக்களில் இறைவனின் பெயர் திருவாய்மூருடையார் என்றழைக்கப்படுகிறார். இக்கோயிலில் முப்பது வட்டத்துக்காணியுடைய சிவபிராமணர்கள் பற்றிய பன்னிரண்டு கல்வெட்டுகள் உள்ளன. அவை, இரண்டாம் இராஜாதிராஜன், மூன்றாம் குலோத்துங்கன் மற்றும் மூன்றாம் இராஜராஜன் காலத்தியதாகும்.

கி.பி.1177 ஆம் ஆண்டு இரண்டாம் இராஜாதிராஜனின் பதினோராம்

ஆட்சிக் காலத்து கல்வெட்டு தியாகராஜர் கோயிலின் கருவறை மேற்கு ஜகதியில் உள்ளது. இக்கல்வெட்டின்படி திருவாய்மூருடைய நாயனார் திருமுன்பிலும், திருக்காமக்கோட்டமுடையாள் திருமுன்பிலும் (பாலின் நன்மொழியாள்) தம் முன்னோர் தந்தை ஆகியோர் நன்மைக்காக, ஸ்ரீபஞ்சவன் விழுப்பரையன் கயிற் சீர்த்தங்குடையான் வேளான் பட்டன் என்பான் இரண்டு திருநொந்தாவிளக்கெரிக்க 50 காசுகளை, ஈச்சனூரான பரமேஸ்வரச் சதுர்வேதி மங்கலத்துப் பெருங்குறிச் சபையாரிடம் கொடுத்ததையும், அதனைப் பெற்றுக்கொண்ட சபையார், இக்கோயில் (திருவாய்மூருடையார்) நிலங்களை உடைய காணியாளர்கள் செலுத்த வேண்டிய வரிக்குப் பதிலாக, அதற்கு ஈடாகக் காணியாளர்கள் விளக்கெரிப்பதற்குத் தேவையான நெய்யினைச் செலுத்தவும் ஒப்புக்கொண்டுள்ளனர்[32]. இக்கல்வெட்டின் மூலம் கோயில் நிலங்களை பெற்றுக் கொண்ட காணியாளர்கள் அதற்கான பொலிசையினை சரிவரக்கட்டாததனால் இவ்வூரில் இருந்த சபையினர் நொந்தாவிளக்கு எரிக்க கொடுத்த காசினை சபை பெற்றுக்கொண்டது. அதற்கு மாறாக விளக்கு எரிக்க தேவையான நெய்யினை முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்கள் செலுத்த சபை உத்தரவிட்டுள்ளது.

இக்கோயிலின் தியாகராஜர் சன்னிதியின் தென்புறச்சுவற்றில் இரண்டாம் இராஜாதிராசனின் (கி.பி.1178) பன்னிரெண்டாம் ஆட்சியாண்டில் கொடுக்கப்பட்ட கல்வெட்டொன்று மிகவும் சிதைவு பெற்றநிலையில் உள்ளது. கல்வெட்டின் வாசகங்களின் அடிப்படையில் இக்கோயிலின் முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்கள் திருநந்தாவிளக்கு எரிக்க தினந்தோறும் செலுத்தவேண்டிய நெய்க்காக நூறு காசுகளை பெற்ற செய்தி இடம்பெற்றுள்ளது. தானம் கொடுத்தவர் பெயர் சிதைந்துள்ளது[33]. கி.பி.1177இல் இக்கோயில் சிவப்பிராமணர்களிடம் நேரடியாக பணத்தைக் கொடுக்காமல் சபையின் தலையீட்டு மூலம் நெய்யினை சிவபிராமணர்கள் கொண்டு அளக்கச் செய்த சபையினர், எவ்வாறு கி.பி.1178இல் நேரடியாக நொந்தாவிளக்கு எரிக்க கொடுக்கப்பட்ட 100 காசுகளை முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்கள் பெற அனுமதித்தார்கள் என்பதற்கான காரணம் தெரியவில்லை.

மூன்றாம் குலோத்துங்கனின் நான்காவது ஆட்சியாண்டான கி.பி.1182இல் கொடுக்கப்பட்ட திருநொந்தாவிளக்கு கல்வெட்டில் திருவாய்மூருடையார் கோயில் முப்பது வட்டத்துக் காணியுடைய சிவப்பிராமணர்கள்[34], பெரியகுடையான் வைத்த தாமோதரனான குலோத்துங்க சோழக் கச்சிராயன் என்பவனிடம் நூறு காசுகளை பெற்றுக்கொண்டு அதன் வட்டியில் தினந்தோறும் ஒரு நொந்தாவிளக்கெரிக்க நாள்தோறும் உழக்கு நெய்யளக்க ஒத்துக் கொண்டுள்ளனர்[35]. கி.பி.1184 ஆம் ஆண்டில் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் வாழ்ந்த இக்கோயில் தேவரடியாரான பூநங்கை 112 காசுகளை இக்கோயில் சிவபிராமணர்களிடம் கொடுத்து திருநந்தாவிளக்கு எரிக்க ஏற்பாடு செய்துள்ளார்[36].

மூன்றாம் குலோத்துங்கனின் இருபத்தாறாம் ஆட்சியாண்டில் (கி.பி.1204) பாசையைச் சேர்ந்த வணிகண் வைப்பூருடையான் திருநாகீசுரமுடையானின் மனைவி உடையநாச்சி எனும் சிவன் பெருந்தேவி அறுநூறு காசுகளை இக்கோயில் முப்பது வட்டத்துக் காணியுடைய சிவப்பிராமணர்களிடம் கொடுத்து, அக்காசிலிருந்து பெற்றப்பட்ட வட்டியினைக் கொண்டு மூன்று சந்தியிலும், ஒரு விளக்கெரிக்க தினந்தோறும், முச்செவிடு நெய்யளக்க கேட்டுக்கொண்டுள்ளார்[37]. மேலும் நொந்தாவிளக்குடன் சேர்த்து இரும்பு பிடியுடன் கூடிய பித்தளை விளக்கினையும் கொடுத்துள்ளார்.

கி.பி.1211இல் மூன்றாம் குலோத்துங்கனின் முப்பத்திமூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் இக்கோயிலின் திருவாய்மூர்க்கிழவன் எனும் திருச்சிற்றம்பலமுடையான் திவாகர் கோயில் பண்டாரத்திலிருந்து 1200 காசுகளைப் பெற்று, இக்கோயில் முப்பது வட்டத்துக் காணியுடைய சிவப்பிராமணர்களிடம் கொடுத்துள்ளார். அதன்மூலம் கிடைக்கும் வட்டியிலிருந்து, இரண்டு திருநாள்களான திருக்களப்பத்துக்கும், திருமேற்பூச்சுக்கும், திருப்பள்ளித்தாமத்துக்கும், அரிசி, கறியமுது, உப்பமுது, மிளகு, நெய், தயிர், அடைக்காய் வெற்றிலையுள்ளிட்ட அமுதுபடிக்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்த விபரம் பற்றியும் இக்கல்வெட்டு கூறுகிறது[38]. ஆனால் கோயில்களில் திருநொந்தாவிளக்கு எரிக்க காசினை முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்களிடம் நேரடியாக கொடுக்கப்பட்ட நிலையில், இக்கல்வெட்டில் மட்டும் பண்டாரத்திலிருந்து காசு பெற்றுக் கொடுத்தற்கான காரணம் தெரியவில்லை.

மூன்றாம் இராஜராஜனின் இருபதாம் ஆட்சியாண்டினைச் (கி.பி.1236) சேர்ந்த கல்வெட்டு ஒன்று இக்கோயிலில் உள்ள வேதாரண்யேஸ்வரர் சன்னிநிதியின் மகாமண்டப வடக்குச் ஜகதியில் உள்ளது. அக்கல்வெட்டின் படி இக்கோயில் தேவரடியாளான வடுகி வம்பழுத்தாள் ஆன திருவாய்மூர் மாணிக்கத்திடம் இக்கோயில் முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்கள் காசு பெற்றுள்ளனர்[39].

மூன்றாம் இராஜராஜனின் மேற்கூறிய அதே ஆட்சியாண்டில் (கி. பி.1236) இராசேந்திர சோழவளநாட்டுக் கோட்டூருடையான் செம்பொற்சோதி வட்டணையாடலுடையான், திருவாய்மூருடையார் கோயிலில் தான் எழுந்தருளுவித்த அழகிய வினாயகப் பிள்ளையார் முன்பு மூன்று சந்தியிலும் விளக்கு எரிப்பதற்காக அறுநூறு காசுகளை இக்கோயில் முப்பது வட்டத்துக் காணியுடைய சிவப்பிராமணர்களிடம் கொடுத்து அக்காசு மூலம் பெறப்படும் வட்டியிலிருந்து விளக்கெரிக்க ஒப்புக்கொண்டுள்ளார்[40].

கி.பி.1245ஆம் ஆண்டு மூன்றாம் இராஜராஜன் காலத்திய மற்றொரு கல்வெட்டு தியாகராஜர் கோயிலின் கிழக்குக் கோபுரத்தில் கிடைத்துள்ளது. அவற்றில் சீபீடத்து காட்டூருடையான் செம்பொற்சோதி என்பான் ஆளுடைய

நாயகப் பிள்ளையாரான அழகிய வினாயகப் பிள்ளையாருக்கு, சந்தி பூஜை தோறும் ஒருவிளக்காக, மூன்று சந்திக்கும் மூன்று விளக்கெரிக்க அறுநூறு காசுகளை முப்பது வட்டத்துக் காணியுடைய சிவப்பிராமணர்களிடம் கொடுத்துள்ளார்[41]. இந்த அழகிய வினாயகப் பிள்ளையாரை கி.பி.1236 ஆம் அண்டு இராசேந்திர சோழவளநாட்டுக் கோட்டூருடையான் செம்பொற்சோதி வட்டணையாடலுடையான் எழுந்தருளுவித்த சிலையாகும். நாளடைவில் இவ்வினாயகருக்கு வட்டணைப் பிள்ளையார் என்று பெயர் ஏற்பட்டுவிட்டது.

இக்கோயிலின் தியாகராஜர் கருவறையின் மேற்குப் பட்டியில் யாருடைய காலம் என்பது தெரியாத கல்வெட்டு உள்ளது. கல்வெட்டின் காலம் கி.பி.12-13 ஆகும். கல்வெட்டுச் செய்தியின் படி இங்கண் நாட்டு இங்கண் ஆன பவித்திரமாணிக்கச் சதுர்வேதி மங்கலத்துக் கரணத்தான் வரகூருடையானும் அவனது மனைவியும், பொத்தூருடையான் உலகனாத தேவன் உறவுடையாளுமான ஒருத்தி இக்கோயில் முப்பது வட்டத்துக் காணியுடைய சிவப்பிராமணர் தில்லை நாயகரிடம் தினந்தோறும் விளக்கெரிக்க உழக்கு நெய்யளிக்கும் வகையில் நிவந்தம் கொடுத்துள்ளனர்[42].

05. நாகப்பட்டினம்

திருநாகைக்காரோணம் என்று இலக்கியங்களும், திருக்காரோகணம் என்று கல்வெட்டுகளும் இவ்வூரைக் குறிப்பிடுகின்றன. சப்த விடங்கத் தலங்களில் நாகப்பட்டினம் காயாரோகணர் கோயிலும் ஒன்று. பாடல் பெற்ற தலமும்கூட. கிழக்கு கடற்கரை சாலையில் சோழர்களின் முக்கியத் துறைமுகப் பட்டிணமாக விளக்கிய இடமாகும். பிற்கால சோழர் காலத்தில் இப்பகுதியானது கெயமாணிக்க வளநாட்டுப் பட்டினக் கூற்றத்தில் இருந்துள்ளது. இங்கு கி.பி.1156 ஆம் ஆண்டு இரண்டாம் ராஜராஜனின் பத்தாவது ஆட்சியாண்டைச் சேர்ந்த கல்வெட்டு திருக்காரோகணமுடையார் கோயிலின் மகாமண்டப வடபுறக் குமுதத்தில் உள்ளது. அதில் திருக்காரோணமுடையாருக்கு ஆண்டுதோறும் ஒரு திருநொந்தாவிளக்கு எரிப்பதற்காக, வேட்டைக்காரர். தெரிந்த வில்லிகள், அணுக்க வில்லிகள், இராஜராஜன் வேளைக்காரர், இராஜேந்திரசிங்கன் வேளைக்காரர், குலோத்துங்க சோழன் வேளைக்காரர், குதிரைச் சேவகர், சேனாபதிகள், தண்டநாயகம் உள்ளிட்ட அகம்படி நியாயங்களிலார்கள் அனைவரும், இக்கோயில் முப்பது வட்டத்துக் காணியுடைய சிப்பிராமணர்களிடம் 83 அன்றாடு நற்காசுகளை வழங்கி, அக்காசின் பொலிசையில் இருந்து இச்சிவபிராமணர்கள் விளக்கெரிக்க ஒப்புக்கொண்டனர்[43].

மேற்கூறிய கல்வெட்டில் முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்கள் என்பதற்கு பதிலாக முப்பது வட்டம் நாளோபாதி நாங்கள் காணி அனுபவிக்கிறபடியே என்றுள்ளது. இதன்மூலம் இரண்டாம் இராஜராஜனின் கி.பி.1156 ஆண்டில் முப்பது வட்டத்து நாளோபாதி நாங்கள்

காணி அனுபவிக்கிற என்ற சொல் இடம் பெற்றுள்ளது. கி.பி.1173க்குப் பிறகு முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்கள் என்ற நிறைவுபெற்ற சொல்லாக இரண்டாம் இராஜாதிராஜன் காலத்தில் மாறியுள்ளது. உதாரணமாக இரண்டாம் இராஜாதிராஜனின் கி.பி.12ம் நூற்றாண்டினைச் சேர்ந்த மற்றொரு கல்வெட்டில் திருவாரூர்க்கூற்றத்துப் பழைய வல்லத்தைச் சேர்ந்த வல்லங்கிழான் பொன்னம்பலக்கூத்தன் நாடுடையான், முப்பது வட்டத்து காணியுடைய சிவபிராமணர்களிடம்[44] 85 காசுகளைக் கொடுத்து நொந்தாவிளக்கெரிக்க சம்மதம் பெற்றுள்ளனர்[45]. இவ்வூர் கல்வெட்டின் மூலம் தான் முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்கள் எனும் சொல் எவ்வாறு உருவாக்கம் பெற்றது என்பதை அறியமுடிகிறது.

06. வேதாரண்யம்

வேதாரண்யம், நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ளது. இங்குள்ள வேதாரண்யீசுவரர் திருக்கோயில் தேவார பாடல்பெற்ற மற்றும் சப்தவிடங்கத்தலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. கல்வெட்டுகளில் திருமறைக்காடு என்றும் இலக்கியங்கள் வேதாரண்யேஸ்வரம் என்றும் குறிப்பிடுகின்றன. அப்பர், சம்பந்தர், முறையே கதவை அடைக்க மற்றும் திறக்க பாடல் பாடப்பெற்ற தலமாகும். இங்கு மூன்றாம் குலோத்துங்கன், மூன்றாம் இராஜராஜன் மற்றும் மூன்றாம் இராஜேந்திரன் காலம் வரையிலான நொந்தாவிளக்கு கல்வெட்டுக்களில் முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்கள் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. வேதாரண்யீசுவரர் சன்னதியின் எதிரே உள்ள மண்டபத்தின் தென்பகுதியில் மூன்றாம் குலோத்துங்கன் காலத்திய கி.பி.1181 ஆம் ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டு உள்ளது. அக்கல்வெட்டில், சுத்தமல்லி வளநாட்டிற்குட்பட்ட வென்னிக்குன்றத்தில் உள்ள குணமலைப்பாடி உடையானான பள்ளிகொண்டான் நகரஈஸ்வரம் உடையான் எனும் வீரசிங்கபன்மர் என்பவர் உம்பளநாட்டு குன்றூர் நாட்டு உடையான் திருமறைக்காடுடையாருக்கு 150 அன்றாடு நற்காசினை முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்களிடம் கொடுத்து விளக்கு எரிக்க கேட்டுகொண்டுள்ளார். அக்காசினைப் பெற்றுக்கொண்டு அதிலிருந்து கிடைக்கும் வட்டியினைக் கொண்டு வேதவன நாயகன் அளவீட்டில் ஒரு உழக்கு நெய் கொண்டு நொந்தாவிளக்கு எரிக்க உடன்பட்டுள்ளனர்[46]. இக்கல்வெட்டில், நொந்தாவிளக்கின் உயரம் மற்றும் எடையும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கி.பி.1182 ஆம் ஆண்டினைச் சேர்ந்த மூன்றாம் குலோத்துங்கனின் மற்றொரு கல்வெட்டானது வேதாரண்யீசுவரர் சன்னிதியின் தெற்குச்சுவரில் உள்ளது. அதன்படி சுத்தமல்லி வளநாட்டு வெண்ணிக்கூற்றத்து குணமலைப்பாடி உடையான் கங்கை கொண்டான் இரரராசதேவரான கொத்தப்பிச் சோழர் உம்பள நாட்டு குன்றூர் நாட்டு திருமறைக்காடுடையாருக்கு 150 அன்றாடு நற்காசு கொடுத்து அதன் மூலம் கிடைக்கும் வட்டியிலிருந்து வேதவன நாயகன்

அளவீட்டில் ஒரு நாழி நெய் ஊற்றி நொந்தாவிளக்கு எரிக்க முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்கள் சம்மதித்துள்ளனர்[47].

மேலும் வேதாரண்யீசுவரர் சந்நிதியின் கருவறையின் தெற்குச் சுவற்றில் மூன்றாம் குலோத்துங்கனின் கி.பி.1207-1028 ஆம் ஆண்டினைச் சேர்ந்த மற்றொரு கல்வெட்டில் வீரசோழ அணுக்கர் படையில் வீரனாக இருந்த இளையாழ்வான் திருவிடைமருதுடையான், திருமறைக்காடுடையாருக்கு இவ்வூர் (வேதாரண்யம்) அளவான கருணாகரன் நாழியின் மூலம் ஒரு உழக்கு நெய் வழங்க 1500 காசு கொடையாக முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்களிடம் கொடுத்து நொந்தாவிளக்கு எரிக்க வேண்டியுள்ளனர்[48].

கி.பி.1212-1213 இல் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் வேதாரண்யீசுவரர் சந்நிதியின் கருறைக்கு அருகில் உள்ள மண்டபத்தின் கல்வெட்டில் அரயபளரி உடையான் வேதன் உதையன் திருமறைக்காடுடையாருக்கு மூன்று நாட்களுக்கு ஒரு முறை சந்தி விளக்கு எரிக்க 1450 காசினை இக்கோயில் முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணரிடம் கொடுத்துள்ளார். அதற்கு சம்மதம் தெரிவித்த சிவபிராமணர்கள் மூன்று நாட்களுக்கு ஒரு முறை திருமறைக்காடுடையாருக்கு சந்திவிளக்கினை எரித்துள்ளார்கள். இக்கல்வெட்டின் மூலம் சந்தி விளக்கு ஏற்றும் மரபு ஒவ்வொரு கோயிலுக்கும் ஒரு நடைமுறையினை பின்பற்றிகின்றனர் என்பது உண்மை[49].

இறுதியாக, மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் வாழ்ந்த மருகல் நாட்டு பொக்காக்குடையார் இயற்பகையாண்டார் திருமறைக்காடுடையாருக்கு இரண்டு நொந்தாவிளக்கு அளித்தும் அதற்கு தேவையான ஒரு உரி நாழி எண்ணெய் வழங்க இக்கோயில் முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்களிடம் வேண்டியுள்ளார்கள். இயற்பகையார் பெரியபுராணத்தில் இடம்பெறும் சிவ அடியார்களில் ஒருவராவர்[50].

மூன்றாம் இராஜராஜனின் கி.பி.1234யைச் சேர்ந்த கல்வெட்டானது வேதாரண்யீசுவரர் சந்நிதியின் முதல் பிரகாரத்தின் மேற்குச் சுவற்றில் உள்ளது. இதில் நித்தவினோதவளநாட்டுக் கிழாய்க்கூற்றத்துச் சிறைக்காவூருடையான் வெள்ளாளன் குடந்தைநாயகனான பஞ்சவராயனிடம் இடையளநாட்டு அனுப்ப சதுர்வேதிமங்கலத்தில் உள்ள கால் வேலி நிலத்தினை இக்கோயில் சபையாரிடம் கொடுத்து, அதிலிருந்து கிடைக்கும் பணத்தின் மூலம் 80 பலம் கொண்ட நொந்தாவிளக்கிற்கு ஒரு உழக்கு எண்ணெய் வீதம் தினந்தோறும் திருமறைக்காடுடையார்க்கு எரிக்க முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்களுக்கு சபையின்மூலம் ஆணையிடப்பட்டுள்ளது[51]. இக்கல்வெட்டின் மூலம் முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்கள் நிலை குறைந்து வருகிறது என்பதினை அறியமுடிகிறது, ஏன்னெனில் இது நாளது வரையிலும் பணத்தினை நேரடியாக கொடையாக பெற்றுக்கொண்டு பணி செய்த முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்கள், தற்போது, கோயில் சபையார் ஏன் நிலத்தினை வேறொரு நபருக்கு கொடுத்து அதிலிருந்து

கிடைக்கும் வட்டியினைக் கொண்டு விளக்கெரிக்கச் சொல்லவேண்டும் என்பது கேள்வியாகும்.

மூன்றாம் இராஜராஜனின் காலத்திய மற்றொரு உடைந்த கல்வெட்டு இக்கோயில் முதற் பிரகார தெற்குச் சுவரில் உள்ளது. அக்கல்வெட்டின் படி குலோத்துங்க சோழ வளநாட்டு இடையள நாட்டு மனற்குடையான் எரிய வைத்த நொந்தாவிளக்கிற்காக கால் வேலி நிலத்தினை விக்கிரம சோழன் கடம்பூரில் முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணருக்கு கொடுத்த செய்தி இடம்பெற்றுள்ளது[52]. இக்கல்வெட்டின் படி மனற்குடையான எரிய வைத்த நொந்தாவிளக்கிற்காக, விக்கிரம சோழன் என்பவன் நிலம் கொடுத்த செய்தியின் மூலம் வேரொருவர் வைத்த நொந்தாவிளக்கிற்கு, பின்னாளில் வேரொருவர் நிலம் அளக்கும் நடைமுறை இருந்துள்ளது என்பதும் புலனாகிறது.

பிற்கால சோழர்களின் கடைசிக் காலக்கட்டத்தில், மூன்றாம் இராசேந்திரனின் கி.பி.1250இல் இராசேந்திர சோழவளநாட்டு வண்டாழை வேளூர்க் கூற்றத்து (திருக்குவளை) சாத்தங்குடையான் திருச்சிற்றம்பலமுடையான் பள்ளியாழ்வி உம்பள நாட்டு உடையார் திருமறைக்காடுடையாருக்கு திருநொந்தாவிளக்கு எரிக்க உம்பள நாட்டில் உள்ள அநாபயச்சதுர்வேதிமங்கலத்தில் கால் வேலி நிலத்தினை முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்களிடம் கொடுத்து, அந்நிலத்திலிருந்து வரும் வருமானத்தின் மூலம் இக்கோயிலில் திருநொந்தவிளக்கு எரிக்க சம்மதம் பெற்றுள்ளார்கள்[53]. கோயில் கல்வெட்டின படி மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் நொந்தாவிளக்கு எரிக்க முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்களிடம் காசினை கொடுத்துள்ளனர். ஆனால், மூன்றாம் இராஜராஜன் மற்றும் மூன்றாம் இராஜேந்திரன் காலத்தில் காசிற்குப் பதிலாக நிலத்தினை கொடுத்துள்ளனர். இதன்மூலம் படிப்படியாக முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்களின் பணிகளில் தொடர்ச்சியாக மாற்றம் நிகழ்ந்துள்ளது என்பதினை தெளிவாக அறியலாம்.

07. அகஸ்தியன்பள்ளி

நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டத்தில் அகஸ்தியன்பள்ளி உள்ளது. இங்கு அகஸ்தீஸ்வரர் எனும் தேவார பாடல் பெற்ற சோழர் காலத்திய சிவன் கோயில் உள்ளது. இக்கோயிலில் கி.பி.1218 ஆம் ஆண்டினைச் சேர்ந்த மூன்றாம் இராஜராஜன் காலத்திய கல்வெட்டு அகஸ்தீஸ்வரர் கோயிலின் கற்பக்கிரஹத்தின் தென்புறத்தில் உள்ளது. அக்கல்வெட்டின் படி உம்பள நாட்டின் குன்றூர் நாட்டிற்குட்பட்ட திருவகத்தியான்பள்ளி உடையார் கோயிலுக்கு மாசி மாதத்தில் திருநொந்தாவிளக்கு எரிக்க இராஜேந்திர சோழ வளநாட்டு புறக்கரம்பை நாட்டுக் கொற்றமங்கலத்தினைச் சேர்ந்த திருப்பழனமுடையாரான விராடகுலராயர் பாக்கை குடபுலமுடையான் அரையன் ஆதித்ததேவன் என்பவன் 1500 அன்றாடு நற்காசினை இக்கோயிலின்

முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்களிடம் கொடையாக கொடுத்து, மாசி மாதத்தில் விளக்கெரிக்க சம்மதம் பெற்றுள்ளார்[54].

08. கோடியக்காடு

நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யம் வட்டத்தில் கிழக்கு கடற்கரையின் முனையில் கோடியக்காடு எனும் சிறிய ஊர் உள்ளது. இங்கு அமிர்தகடேஸ்வரர் எனும் சோழர்காலத்திய கோயிலில் கி.பி.1276 ஆம் ஆண்டினைச் சேர்ந்த மூன்றாம் இராஜேசந்திரனின் கல்வெட்டில் இவ்வூரினைச் சேர்ந்த நம்பிக்குடியான் எனும் கங்கைநாட்டுக் கோன் என்பவன் இக்கோயில் பூஜை செய்யும் முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணரான சேனாபதிகயினை திருவாய்ப்பாடி எனும் நந்தவனத்தில் குடியிருக்கச் செய்துள்ளார்[55]. ஆனால் சில நாட்களில் அந்நந்தவனத்திற்குப் பதிலாக மய்யார்தடங்கண்ணி மயக்கலெனும் நிலத்தில் குடியிருக்க சேனாபதிக்கு இடம் ஒதீக்கீடு செய்து கொடுத்துள்ளார்[56]. இக்கோயில் கல்வெட்டில் மட்டும் முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்களின் குடியிருப்பு தொடர்பான செய்தி இடம்பெற்றுள்ளது.

09. திருநெல்லிக்காவல்

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டத்தில் திருநெல்லிக்காவல் உள்ளது. இங்கு நீலவண்ணநாதர் எனும் தேவாரப் பாடல் பெற்ற தலம் உள்ளது. அக்கோயிலில் உள்ள ஆம்லகேஸ்வரர் சந்நிதியின் கற்பக்கிரத்தின் வடக்கும் மற்றும் கிழக்குச் சுவரில் கி.பி. 1184-1185 ஆம் ஆண்டினைச் சேர்ந்த மூன்றாம் குலோத்துங்கன் காலத்திய கல்வெட்டில் உடையவளநாட்டுக் குன்றலூர் கிழவன் திருநட்டமாடி ஆட்கொண்ட நாயகனான எதிரிலிச்சோழ இடையளநாட்டுக்கோன் வைத்த திருநொந்தாவிளக்குக்கு நாள் ஒன்றுக்கு 91 நாழி உழக்குக்கு எண்ணையினை 365 நாட்களுக்கு வழங்க உபையமாக 160 காசினை இக்கோயில் முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்களிடம் கொடுத்துள்ளனர். அக்காசினைப் பெற்றுக்கொண்ட கோயில் சிவபிராமணர்கள் அதிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து அப்பணியினை மேற்கொள்ள உறுதியளித்துள்ளனர்[57].

10. திருத்தெங்கூர்

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டத்தில் திருத்தெங்கூர் உள்ளது. இங்கு சோழர் காலத்தில் கட்டப்பட்ட இராஜதகிரிஸ்வரர் கோயில் உள்ளது. கோயில் கருவறையின் தெற்குச் சுவற்றில் கி.பி.1235-1236 ஆம் ஆண்டினைச் சேர்ந்த மூன்றாம் இராஜராஜனின் கல்வெட்டின்படி இங்குள்ள திருவெள்ளியங்குன்ற உடையார் கோயிலுக்கு கருப்புழான் திருவேகம்பமுடையான் திருச்சோற்றுத்துறை உடையான் என்பவன் இக்கோயிலுக்கு 200 பலம் எடையுடைய திருநொந்தாவிளக்கு ஒன்று கொடுத்து அதற்கு நெய்யூற்றி விளக்கெரிக்க 4000 காசினையும் இக்கோயில் முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்களிடம் கொடுத்துள்ளனர்[58].

11. திருந்துதேவன்குடி

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டத்தில் திருந்துதேவன்குடி உள்ளது. இவ்வூரானது சோழர்காலத்தில் குலோத்துங்க சோழ வளநாட்டுப்பிரிவில் இருந்துள்ளது. இங்கு சோழர்காலத்திய புகழ்பெற்ற கற்கடேஸ்வரர் கோயில் உள்ளது. அக்கோயிலின் அர்த்தமண்டப தென்புறச் சுவரில் சிதைந்த நிலையில் கி.பி.12ம் நூற்றாண்டினைச் சேர்ந்த கல்வெட்டில் திருந்துதேவன்குடி அருமருந்துடையார்க்கு ஒரு திருநொந்தாவிளக்கு எரிப்பதற்காக சென்னிமங்கலமுடையான் அரையன் சீராள தேவனான இராஜராஜ (பெயர் சிதைவுபெற்றள்ளது) என்பவன் இக்கோயிலைச் சேர்ந்த முப்பது வட்டத்துக் காணியுடைய சிவப்பிராமணர்களிடம் கொடை அளித்ததோடு, இரண்டு நிலைத்திருக்குத்திவிளக்கும் (Perpetual Lamp) அளித்துள்ளான்[59].

12. திருமெய்ஞானம்

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டத்தில் திருமெய்ஞானம் எனும் ஊர் உள்ளது. சோழர்கள் காலத்தில் இவ்வூரானது குலோத்துங்க சோழவளநாட்டு செற்றூர் கூற்றத்து நல்லூர்க்கு உட்பட்ட பகுதியில் இருந்துள்ளது. இங்கு சிவனுக்காக எடுப்பிக்கப்பட்ட ஞானபரமேஸ்வரர் கோயில் உள்ளது. அக்கோயிலின் மகாமண்டபச்சுவரின் தெற்குச் சுவரில் கி.பி. 11 ம் நூற்றாண்டைச் சேர்ந்த துண்டுக் கல்வெட்டில் திருவெண்காட்டு நங்கை என்பாள் இரண்டு சந்தி விளக்கெரிக்க இக்கோயிலின் முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்களிடம் கொடை வழங்கியதையும், அதை ஏற்றுக்கொண்டு இரண்டு சந்தி விளக்கினையேற்றியுள்ளார்கள் பெண்களும் கோயிலுக்கு கொடை செலுத்தியது குறிப்பிடத்தக்கது[60].

13. கொறுக்கை

மயிலாடுதுறை மாவட்டம் மற்றும் வட்டத்தில் கொறுக்கை உள்ளது. சோழர்கள் காலத்தில் விருதராஜ பயங்கர வளநாட்டு குறுக்கை நாட்டுப் பிரிவுக்குட்பட்டதாகும். கல்வெட்டில் குறுக்கை என்றும், பிற்காலத்தில் கொறுக்கை வழங்கலாயிற்று. மொத்தம் பதினெட்டுக் கல்வெட்டுகள் இக்கோயிலில் உள்ளது. அவற்றில் கி.பி.1179 இரண்டாம் இராஜாதிராஜன் காலத்தினை சேர்ந்த கல்வெட்டில்[61] பனையூர் திருச்சாமுண்டீஸ்வரமுடையார் கோயிலில் அகப்பரிவாரப்பெண்டு அரையன் உமையாழ்வி எழுந்தருளிவித்த திருப்பள்ளியறை நாச்சியார், ஆட்கொண்ட நாயக தேவர்க்கும், நாச்சியார்க்கும் திருப்படிமாற்றுக்கு அவளே கொடுத்து வந்த நாள் ஒன்றுக்கு குறுணி இரு நாழியாக வந்த நெல் விட்டுப் போனது ஏன் விட்டுப்போனது என்பதற்கான இடம்பெறவில்லை. ஆகையால், முப்பது வட்டத்துக் காணியுடைய சிவப்பிராமணர்கள் மீண்டும் புதுப்பித்து நூற்றிருபது காசுகள் அவளிடமிருந்து

கைக்கொண்டு அதன் பொலிசையால் திருவமுதுபடி செலவுக்காக நாள் ஒன்றுக்கு குறுணி இரு நாழி நெல் அளந்துள்ளனர்[62]. இக்கல்வெட்டுச் செய்தியின் படி முதன் முதலில் இவ்வொரு கல்வெட்டு மட்டுமே நெல் அளந்தாகச் செய்தியுள்ளது. ஏனைய கல்வெட்டுக்கள் அனைத்தும் நொந்தாவிளக்கு எரிப்பதற்காக பணம் பெற்றச் செய்தியினை எடுத்துரைக்கிறது. மேலும் விடுப்பட்டுக் கிடந்தற்கான காரணம் தெரியவில்லை. மேலும் அதனை மீண்டும் புதுப்பித்ததில் முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்களின் பங்கு மகத்தானது.

14. தன்னீர்க்குன்னம்

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டத்தில் தன்னீர்குன்னம் உள்ளது. சோழர்கள் காலத்தில் இராஜேந்திர சோழவளநாட்டு நென்மலி நாட்டு நெடுமணலான மதனமஞ்சரி சதுர்வேதிமங்கலம் எனும் நாட்டுப் பிரிவில் இருந்துள்ளது. இங்கு சோழர்காலத்தில் கட்டப்பட்ட உருத்திரகோடீஸ்வரர் கோயிலில் இரண்டாம் இராசாதிராஜன் மற்றும் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தினைச் சேர்ந்த மூன்று சோழர்கால கல்வெட்டு உள்ளது. கி.பி.1178-இல் இரண்டாம் இராசாதிராஜனின் காலத்தில் ஜயங்கொண்ட சோழ மண்டலத்தைச் சேர்ந்த மேல்ப்பழையனூர் நாட்டு வேதவனமுடையான் கருணாகரதேவனான அமரகோனார் என்பவர் தண்ணீர்க்குன்னமுடையார்க் கோயிலுக்கு ஒரு திருக்குத்துவிளக்கு அளித்து அதை நொந்தாவிளக்காக எரிப்பதற்கு நூறு காசுகள் உருத்திரகோடீஸ்வரர் கோயில் முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்களிடம் வழங்கியுள்ளனர்[63]. அதனைப் பெற்றுக்கொண்ட சிவபிராமணர்கள் தங்களுக்குள் மாதநாட்கள் முப்பதினை ஐந்து நாட்கள் வீதம் நான்கு பாகமாக பிரித்துக்கொண்டு தினந்தோறும் உழக்கு எண்ணையில் நொந்தாவிளக்கு எரிக்க சம்மதித்துள்ளனர்[64]. இக்கல்வெட்டுச் செய்தியின் படியும், திருராமநந்தீஸ்வரம் கல்வெட்டும் மற்றும் திருவைகாவூர் கல்வெட்டுச் செய்தியின்படியும் மாத நாட்கள் முப்பதினை ஐந்து நாட்கள் வீதம் நான்கு பாகமாக பிரித்து முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்கள் பணி செய்துள்ளனர் என்பது தெரியவருகிறது.

மூன்றாம் குலோத்துங்கனின் கி.பி.1199ம் ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டில் இராஜேந்திர சோழ வளநாட்டு நென்மலி நாட்டு மதனமஞ்சரி சருப்பேதிமங்கலத்து உருத்திரகோடீஸ்வரமுடையார் கோயிலைச் சேர்ந்த முப்பது வட்டத்து காணியுடைய சிவபிராமணர்கள் ஐநூறு காசுகளை வெள்ளாளன் ஒருவரிடம் பெற்றுக் கொண்டு அதன் வட்டியால் நொந்தாவிளக்கு எரிப்பதற்கு சம்மதம் தெரிவித்துள்ளனர்[65].

15. பெரியகொத்தூர்

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டத்தில் பெரியகொத்தூர் உள்ளது. இங்குள்ள சுந்தரேசுவரர் கோயிலில் சோழர்கள் காலத்தினைச் சேர்ந்த

பதினோரு கல்வெட்டுகளில் மூன்றாம் குலோத்துங்கன் காலத்திய கி.பி.1188 மற்றும் கி.பி.1189 ஆகிய இரண்டு கல்வெட்டில் மட்டும் முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்கள் பற்றிய செய்தியுள்ளது. முதல் கல்வெட்டில் தேவாரம் பாடிய மூவரான அப்பர், சம்பந்தர் மற்றும் சுந்தரர் ஆகிய மூவருக்கும் கந்தமங்கலமுடையான் புற்றிடங்கொண்டான் உடைய பிள்ளையான திருநாவுக்கரசு என்பவர், திருமண்டபமும், முகமண்டபமும் செய்வித்து மூவர் முதலிகள் சிலைகளையும் எழுந்தருளுவித்திருக்கின்றார். இச்சிலைகளுள் ஒன்றாகிய அப்பர் சிலைக்கு படைக்க வேண்டிய அமுதுபடி செலவுகளுக்கு இவர் இரந்து (பிச்சை பெற்று) பெற்ற நெல்லினை இக்கோயிலைச் சேர்ந்த முப்பது வட்டத்து காணியுடைய சிவபிராமணர்களிடம் கொடுத்துள்ளனர். அந்நெல்லினைப் பெற்றுக்கொண்ட சிவபிராமணர்கள் அச்சிலைக்கு அமுதுபடைக்கும் பணியை ஆற்றுவதாகவும் ஒப்புக்கொண்டுள்ளனர்[66].

கி.பி.1189ல் மூன்றாம் குலோத்துங்கனின் மற்றொரு கல்வெட்டானது இக்கோயிலின் மகாமண்டபத் தென்புற ஜகதியில் உள்ளது. அதில் கொற்றூர் திருவிடைக்காடுடைய நாயனார் கோயிலுக்கு கொடுத்த நூறு கல நெல்லினை முப்பது வட்டத்து காணியுடைய சிவபிராமணர்கள் பெற்றுக்கொண்டு, அதனை தினந்தோறும் இரு நாழி பதக்கு நெல் கோயிலுக்கு செலுத்துவதாக ஒப்புக்கொண்டுள்ளனர்[67]. மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் நொந்தாவிளக்கு எரிப்பதற்காக காசினைப் பெற்றுக் கொண்டிருந்த முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்கள் அமுதுபடிக்காக நெல்லினையும் பெறத்தொடங்கியதற்கான சான்றாக கருதலாம்.

16. திருராமநந்தீஸ்வரம்

திருராமநந்தீஸ்வரம், திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டத்தில் உள்ளது. இங்குள்ள இராமநாதசுவாமி கோயிலில் மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்திய கல்வெட்டில் இக்கோயில் சிவபிராமணக் காணியாகிய நாள் முப்பது வட்டத்தையும் பாரத்துவாசி திருநட்டமாடி ஆண்டான் பட்டனான திருமன்னு சோழ பிரமராயனுக்கும் அவன் வர்கத்தார்க்கும் கொடுக்கவேண்டும் என்று மழவராயன் என்பவன் இராமநாதசுவாமி கோயிலின் தேவகன்மிகள், ஸ்ரீமாகேஸ்வர கண்காணி செய்வார்கள், ஸ்ரீகார்யம் செய்வார்கள் ஆகியோரிடத்தில் விண்ணப்பம் செய்துள்ளான். மேற்கூறியவர்களே அனுபவிக்கும் உரிமையை பதிவுசெய்து, திருமந்திரவோலையும் மற்றும் அதிகாரிகளும்கையெழுத்திட்டுஆணையும்பிறப்பித்துள்ளனர்[68]. இக்கல்வெட்டு மிகவும் சிறப்பு வாய்ந்த கல்வெட்டாகும். ஏன்னெனில் கோயிலில் பூசைகள் முதற்கொண்டு அனைத்துப் பணிகளும் ஏதோ ஒரு காரணத்தினால் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதும் புலனாகிறது. மேலும் முப்பது வட்டம் என்பது மாத நாட்களை குறிக்கிறது என்று இவ்வூர் கல்வெட்டும் மற்றும் திருவைகாவூர் கல்வெட்டும்[69] கூறுகிறது.

17. நல்லூர்

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டத்தில் நல்லூர் அமைந்துள்ளது. சோழர்களின் ஆட்சிக்காலத்தில் நித்த விநோத வளநாட்டு நல்லூர் எனும் நாட்டுப் பிரிவில் இருந்துள்ளது. கல்வெட்டுச் சான்றுகளின்படி மூலவரின் பெயர் திருநல்லூர் நாயனார், தற்போது கல்யாணசுந்தரேஸ்வரர் கோயில் என்று அழைப்பர். இக்கோயில் முப்பது வட்டத்து காணியுடைய சிவபிராமணர்கள் பற்றிய கல்வெட்டு இரண்டு உள்ளது. அவற்றுள், கி.பி.1179ம் ஆண்டினைச் சேர்ந்த இரண்டாம் இராஜாதிராஜன் காலத்திய கல்வெட்டு கல்யாணசுந்தரேஸ்வரர் கோயிலின் இரண்டாம் திருச்சுற்று கிழக்குச் சுவரின் வாயிலில் உள்ளது. அதில் திருப்பெருமணமுடையார் என்ற இறைவன் சன்னதியில் நந்தாவிளக்கு எரிப்பதற்கு ஜயங்கொண்ட சோழமண்டலத்து மேல்மலைப் மழையனூர் நாட்டுப் பழையனூருடையான் வேதவனமுடையான் என்பவன் 200 காசினை[70]. திருநல்லூர் நாயனார் கோயிலின் முப்பது வட்டத்துக் காணியுடைய சிவப்பிராமணர்கள் பெற்றுக்கொண்டு விளக்கெரிக்கும் பணியினைச் மேற்கொண்டுள்ளனர்.

தமிழும் கிரந்தத்திலும் எழுதப்பட்ட மூன்றாம இராஜராஜனின், கி.பி.1222 ஆம் ஆண்டு கல்வெட்டில் முடிகொண்ட சோழ வளநாட்டுத் துண்டநாட்டுத் துண்டநாடுடையான் ஏகவாசகன் உலகுகண்விடுத்த பெருமாளான வாணகோவரையர் என்பவர், இக்கோயிலில் 174 பலம் எடையுடைய இரண்டு நிலை தராத்திருவிளக்கு ஒன்று அளித்துள்ளார், மேலும், அதற்கு தேவையான உழக்கு எண்ணெய் கிடைக்கும் வகையில் இருநூற்று நாற்பது காசுகள் இக்கோயில் முப்பது வட்டத்துக் காணியுடைய சிவப்பிராமணர்கள் வசம் கொடுத்து, அவர்கள் பரம்பரை பரம்பரையாக இதனை திருநல்லூர் நாயனார் முன்பு எரியவைக்கச் செய்துள்ளனர்[71]. மற்றொரு துண்டுக் கல்வெட்டில் கௌசிகன் தில்லைனாயகன், கோவணன் அமுதுய்ய வந்தாநான நாயகன், மரையன் தில்லைனாயகன் தேவன் உள்ளிட்ட முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்கள் கொடையாக பெற்ற காசால் இருநாழி அரிசியும், இரண்டு பலம் கறியமுதும் கொடுக்க இசைந்துள்ளார்கள்[72]. இக்கோயில் பிற்காலத்திய கல்வெட்டில் (கி.பி.1222)க்குப் பிறகு காசு அல்லது நெல்லிற்குப் பதிலாக அரிசி மற்றும் கறியமுதும் கொடுக்க இசைந்துள்ளனர்.

18. புலிப்பாக்கம்

புலிப்பாக்கம், செங்கல்பட்டு மாவட்டம் (ம) வட்டத்தில் சென்னை செல்லும் வழியில் உள்ள ஊராகும். இங்கு சோழர்காலத்தினைச் சேர்ந்த பதினான்கு கல்வெட்டுக்களுடன் வியாக்ரபுரீசுவரர் கோயில் உள்ளது. அதில் கி.பி.1242ல் மூன்றாம் இராஜராஜனின் இருபத்தாறாவது ஆட்சியாண்டில் முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்கள் பற்றிய குறிப்பு இடம்பெற்றுள்ளது. அதில் புலிப்பாக்கம் என்கிற சோழசிகாமணிச் சதுர்வேதி மங்கலத்து ஸ்ரீபொன்மலை உடையார் கோயில் திருநடைமாளிகையில் இவ்வூரைச்

சார்ந்த குரவசேரி சோமிதேவ பட்டன் ஆட்கொண்டான் என்றழைக்கப்படும் தொண்டைமண்டலத்துப் பிள்ளை என்பவன் தனது பெயரால் ஆட்கொண்ட தேவர் (சிவலிங்கம்) சிலையினை எடுப்பித்து, பூசை, அமுது மற்றும் கறியமுது போன்றவற்றிற்காக 10 கழஞ்சுப் பொன்னினை இக்கோயில் முப்பது வட்டத்துக் காணியுடைய சிவப்பிராமணர்களிடம் கொடுத்துள்ளான்[73]. இப்பொன்னின் மூலம் தினமும் தூணிப் பதக்கு அளவு திருமஞ்சனமும், திருப்பள்ளித்தாமமும் (இறைவனுக்கு சாத்தும் மாலை), இரண்டு சந்தி விளக்கும், நான்கு நாழி அளவு அரிசி திருவமுதும், கறியமுதும் வைத்து இறைவனுக்கு வழிபாடு செய்வதாக இக்கோயில் சிவப்பிராமணர்கள் உறுதியளித்து உடன்படிக்கை எழுதிக் பணியினை ஏற்றுள்ளனர்[74]. இதே ஊர்க் கல்வெட்டில் கி.பி.1242க்கு முன் மூன்றாம் இராஜராஜனின் கல்வெட்டுக்களில் காணியுடைய சிவபிராமணர்கள் என்று மட்டுமே இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. அப்படியென்றால் முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்கள் என்கிற அமைப்பானது புலிப்பாக்கம் கோயிலில் பிற்காலத்தில் தோன்றிய உள்ளது. மேலும், இக்கல்வெட்டில் முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்கள் கோயில் பணிகளான செய்வதற்காக கொண்ணினை கொடையாக பெற்றுள்ளனர். இம்முறை சற்று மேலேசென்று காசு, நெல், அரிசி, போன்றவற்றை பெற்றுக் கொண்டிருந்த சிவபிராமணர்கள் தற்போது பொன்னாலான கழஞ்சினைப் பெறத் தொடங்கியுள்ளனர்.

19. ஆத்தூர்

செங்கல்பட்டு மாவட்டம் மற்றும் வட்டத்தில் ஆத்தூர் எனும் சிற்றூர் காஞ்சிபுரம் செல்லும் வழியில் உள்ளது. அங்கு இருபத்தாறு கல்வெட்டுகளுடன் சோழர் காலத்திய முக்தீஸ்வரர் கோயில் உள்ளது. அதில் ஒரு கல்வெட்டு இரண்டாம் மாறவர்மன் திரிபுவன சக்கரவத்தி விரபாண்டியனின், கி.பி.1350 ஆண்டினைச் சேர்ந்தது. அக்கல்வெட்டில் ஜயங்கொண்ட சோழ மண்டலத்து ஊற்றுக்காட்டுக் கோட்டத்து ஆற்றூர்நாட்டு ஆற்றூர் என்கிற இராஜராஜநல்லூரில் உள்ள திருமுத்தீசுரமுடைய நாயனார் கோயிலில் ஒன்பது கைக்கோளர்கள் புரட்டாசி மாதத்தில் நடபெற்ற ஒன்பது நாள் திருவிழாவினை நடத்தியுள்ளனர். அதற்கான செலவினத்தொகை 44 பணத்தினை இவ்வூர் கிராம சபையிடம் பெற்றுள்ளனர். அதன்படி திருக்காரொளிநாள் திருவிழாவினை காலிங்கராயன் என்பவனும், இரண்டாம் திருநாளினை சிற்றம்பலவன் என்பவனும், மூன்றாம் திருநாளினை பெருமாள் என்கிற தொண்டைமண்டலக் காங்கேயன் என்பவனும், நான்காம் திருநாளினை வத்தராயன் மகள் முதலிச்சி என்பவளும், ஐந்தாம் திருநாள் அறமளத்தான் என்கிற கண்டியதேவன் என்பவனும், ஆறாம் திருநாள் திருநட்டப்பெருமாள், ஏழாந் திருநாள் வல்லானை வென்றான் என்பவனும், எட்டாம் திருநாள் பாசன் என்பவனும், ஒன்பதாம் திருநாள் காவன் தொண்டைமான் என்பவனும் ஒன்பது திருநாள் விழாவினையும் நடத்தியுள்ளார்கள்.

இக்கோயில் முப்பதுவட்டத்து காணியுடைய சிவபிராமணர்கள் 175 பணம் பெற்றுக்கொண்டு, இந்த ஆண்டு புரட்டாசி மாதம் முதல் ஒன்பது நாள் திருவிழாவினைத் தாங்களே நடத்துவதாக உறுதியளித்து கைகோளர்களிடமிருந்து இடமாறியுள்ளது[75]. ஏன்னெனில் கைக்கோளர்கள் ஒப்புக்கொண்ட படி முறையாக விழாவினை நடத்தவில்லை ஆகையினால் அப்பொறுப்பினை முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்கள் ஏற்றுள்ளனர். அதற்கு உதாரணமாக கைக்கோளர்களில் ஒருவர் எட்டாந் திருநாள் விழாவினை நடத்துவதில் பேர்கெட்டுப் போனதால் இக்கோயில் தேவரடியார் முத்தாண்டை மகள் முதலிச்சியின் பெயர் சேர்க்கப்பட்டது[76]. இது போன்ற காரணங்களினால் கைக்கோளர்கள் தங்களது உரிமைகளையிழந்து முப்பது வட்டதுக் காணியுடைய சிவபிராமணர்களின் செல்வாக்கு மேலோங்கியுள்ளது. இந்த ஒரேயொரு கல்வெட்டு மட்டும் தான் பிற்காலப் பாண்டியர்களின் காலத்தினைச் சேர்ந்தது. ஆயினும், முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்களின் பணி முற்றிலும் மாற்றம் பெற்றுள்ளது.

முடிவுரை

முப்பது வட்டத்து நாளோபாதி நாங்கள் காணி அனுபவிக்கிறபடியே என்று முழுமையான உரிமையினை கி.பி.1156ம் ஆண்டில் இரண்டாம் இராஜராஜன் காலத்தில் நாகப்பட்டினம் காயாரோகணர் கோயில் கல்வெட்டின் மூலம் சிவபிராமணர்கள் உரிமை பெற்றுள்ளனர். இவர்களே பிற்காலத்தில் முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்கள் என்று கி.பி.1173க்குப் பிறகு அழைக்கப்படுகின்றனர். கி.பி.1173க்குப் பிறகாக கீழ்தஞ்சையில் உள்ள ஏறத்தாழ பதினேழு கோயில்களின் கல்வெட்டில் முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்கள் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளது. இரண்டு இடங்கள் மட்டும் (புலிப்பாக்கம் மற்றும் ஆத்தூர்) சோழ நாட்டிற்கு வெளியில் கிடைக்கிறது. இவர்களின் முக்கியமானப் பணி கோயில்களில் நித்திய பூசை, சந்தி பூசை, நொந்தாவிளக்கு எரிப்பது, கோயில் திருவிழாக்கள் காலங்களில் கொண்டாப்படும் அனைத்து விதமான பூசைகளும் மேற்கொள்வதாகும். செங்கல்பட்டு மாவட்டம் ஆத்தூர் கோயிலில் மட்டும் கைக்கோளர்கள் சேர்ந்து நடத்தி வந்த ஒன்பது நாள் திருவிழாவினை 175 பணத்தினை கோயில் நிர்வகாத்திடமிருந்து பெற்றுக்கொண்டு முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்கள் நடத்தத் தொடங்கியுள்ளனர்.

முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்கள் கோயில்களில் பூஜையின் போதும், திருவிழாக்களின் போதும் எரிய வைக்கும் நொந்தாவிளக்கிற்காக ஆரம்பத்தில் காசு, நெல், அரிச போன்றவற்றை கொடையாக பெற்றுள்ளனர். நாளடைவில் காசிற்கு இணையான நிலத்தினையும், அதற்கும் பிந்தைய காலங்களில் பொன்னையும் கொடையாக பெற்றுள்ளனர். கி.பி.1156 முதல் கி.பி.1258றக்கு இடைப்பட்ட காலங்களில்

நொந்தாவிளக்கிற்காக கோயிலுக்கு சாவா மூவா பேராடுகள் கொடையாக கொடுத்தற்கான சான்றுகள் கல்வெட்டுக்களில் இடம்பெறவில்லை.

கோயிலுக்கு திருநநொந்தாவிளக்கெரிக்க கிராமத்து சபை, கோயில் சபை, வணிகர்கள், தேவரடியார்கள், பெண்கள், வேட்டைக்காரர்கள், தெரிந்த வில்லிகள், அணுக்க வில்லிகள், நாயன்மார்கள் (இயற்பகை நாயனார்), இராஜராஜன் வேளைக்காரார், குதிரைச் சேவகர், சேனாபதிகள், தண்டநாயகம் உள்ளிட்ட அகம்படி நியாயங்களிலார்கள் மற்றும் வேளைக்காரர் உள்ளிட்ட பலவகை கொத்துக்கள் (பணியாட்கள்) தனிநபர் சிலரும் எனப் பலர் நிவந்தங்கள் கொடுத்த செய்திகள் கல்வெட்டின் வாயிலாக அறியமுடிகிறது. கொடையாக வழங்கப்பட்ட காசு, நெல், அரிசி, பொன் போன்ற இதர இனங்கள் அனைத்தும் கோயில் பண்டாரங்கள் மற்றும் கிராமத்து சபைகள் மூலம் மேற்பார்வை செய்யப்பட்டுள்ளன.

எப்போதெல்லாம், முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்கள் தங்களது பணிகளை செய்யத் தவறுகிறார்களோ, அப்போதெல்லாம் கோயில் சபை அல்லது கிராமத்து சபைகள் தலையிட்டு பணியினை தொய்வில்லாமல் செய்ய ஆணையிட்டுள்ளது. சில நேரங்களில் சிவபிராமணர்களின் பணிகள் குறித்து விசாரனையும் நடைபெற்று தண்டனைகளும் வழங்கப்பட்டுள்ளது. உதாரணமாக மூனறாம் இராசராசனின் கடைசி காலக்கட்டத்தில் திருநள்ளாறு தர்ப்பாரண்யேச்வரர் திருக்கோயில் கல்வெட்டின் படி முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்கள் எனும் பொறுப்பு நீக்கப்படுகிறது. ஏன்னெனில் கி.பி.1241இல் இக்கோயில் தானத்தாரும், மாஹேசுவரரும் நாட்டவரும், திருநள்ளாறுடையார் கோயில் நாடுடைநாயகன் திருமண்டபத்தில் கூடி கோயிலில் நடைபெறும் பூசைக் காரியம் பற்றி ஆராய்ந்த பொழுது போயிலில் பணிபுரியும் சிவப்பிராமணர்கள் பழைய நிவந்தத்திற்கான அரிசி, எண்ணெய் முதலானவற்றை அளிக்காதிருந்தமை கண்டு அதற்கான தண்டத்தை அவர்களிடமிருந்து பெற்று அதைக்கொண்டு நிலம் வாங்கி அந்நிலத்தால் வரும் வருவாயைக் கொண்டு முன் நிறுத்தப்பட்ட சடங்குகளை மீண்டும் நடத்தியுள்ளார்கள்[77]. இதனால், முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்கள் தங்களது காணியுரிமையினை இழந்தும் உள்ளனர். காணியுரிமையினை விற்கவும், வாங்கவும் செய்துள்ளனர். மேலும், முப்பது அரசின் நடவடிக்கைகள் அல்லது கோயில் நிர்வாக சபை அல்லது கிராமத்து சபைகளின் நடவடிக்கையினால் காணியுரிமையினை பறிக்கவும் செய்துள்ளனர். ஆகையினால் தான் திருக்குவளை தியாகராசர் கோயில் கல்வெட்டுக்களில் ஆரம்பத்தில் முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்கள் என்றும், கி.பி.13ஆம் நூற்றாண்டுக்குப் பிறகான கல்வெட்டில் முப்பது வட்டத்து சிவபிராமணர்கள் என்றும் இடம்பெற்றுள்ளது. ஏறக்குறைய கி.பி.13ம் நூற்றாண்டு சோழர்களின் வீழ்ச்சிக்குப் பிறகு தமிழகத்தில் கிடைக்கக்கூடிய பெரும்பாண்மையான கல்வெட்டுக்களில் முப்பது வட்டத்து சிவபிராமணர்கள்

என்றே இடம்பெறுகின்றன. ஆகவே இக்கட்டுரையின் மூலம் கி.பி.1156 முதல் கி.பி.1279 வரையிலும் உயிர்ப்புடன் இருந்து மறைந்த முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்களைப் பற்றிய ஆய்வுக் கட்டுரையாகும்.

1. ARE., 50/1914. தீ.ஸ்ரீ.ஸ்ரீதர் (பதி), பாபநாசம் வட்டக் கல்வெட்டுக்கள், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை, 2004, ப.96-97.
2. Tamil Lexicon, vol.II, University of Madras, Chennai, 1982, p.859.
3. சு.இராசகோபால் மற்றும் ஆ.பத்மாவதி (பதி), தமிழ்நாட்டுக் கல்வெட்டுக்கள், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை, 2005, ப.34-35.
4. ர.பூங்குன்றன், செ.இராசு, கி.சு.சம்பத் மற்றும் இரா.சிவானந்தம், ஈரோடு மாவட்டக் கல்வெட்டுகள், தொகுதி-2 தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை, 2004, ப. 35
5. கோ.விசயவேணுகோபால், திருநள்ளாறு அருள்மிகு தர்ப்பாரண்யேச்வரர் திருக்கோயில் கல்வெட்டுக்கள் பிரெஞ்சு ஆசியவியல் ஆய்வுப் பள்ளி, புதுச்சேரி, 2017, ப.69
6. சீதாராம் குருமூர்த்தி, நாகப்பட்டின மாவட்டக் கல்வெட்டுகள், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, 2007, ப.202- 207.
7. SII., Vol.XXIII, No.409 and SII., Vol.XIV, No.233
8. ஆ.பத்மாவதி, நன்னிலம் கல்வெட்டுக்கள் தொகுதி-3, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை, 1980, க.எண். 508/1978.
9. சீதாராம் குருமூர்த்தி, நாகப்பட்டின மாவட்டக் கல்வெட்டுகள், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, 2007, ப.184
10. மேலது.
11. ARE., 114/1966-68
12. மேலது.
13. கோ.விசயவேணுகோபால், மேலது, ப.69-70
14. மேலது. ப.69-70.
15. மேலது. ப.73
16. மேலது. ப.73.
17. கோயில் தருமங்களை ஏற்று நடத்துவதற்காகக் கொடுக்கப்படும் உறுதிமொழி. SII., XVII., 557
18. கோ.விசயவேணுகோபால், மேலது. ப.79
19. மேலது, ப.79
20. சீதாராம் குருமூர்த்தி, மேலது, ப.23
21. மேலது. ப.23
22. மேலது. ப.25
23. மேலது. ப.25

24. மேலது.ப.95.

25. மேலது.ப.99-100

26. மேலது.ப.131-132,

27. மேலது.ப.97-98,

28. மேலது.ப.130,

29.மேலது, ப.115-116.

30. மேலது, ப.128

31. மேலது, ப.124,

32. மேலது, ப.167

33. மேலது, ப.173

34. மேலது, ப.164:

35. மேலது.

36. மேலது, ப.191

37. மேலது, ப.189-190

38. மேலது, ப.184

39. மேலது, ப.155

40. மேலது, ப.178-179

41. மேலது, ப.134-135

42. ARE., 593/1962-63, 594/1962-63 and 691/1962-63,

43. ARE., 154/1956-57

44. சீதாராம் குருமூர்த்தி, மேலது, பக்.202-2023:

45. ARE., 153/1956-57

46. SII., Vol.XVII, No.449.

47. SII., Vol.XVII, No.445.

48. SII., Vol.XVII, No.446.

49. SII., Vol.XVII, No.459.

45. SII., Vol.XVII, No.451

46. SII., Vol.XVII, No.538

47. SII., Vol.XVII, No.535

48. SII., Vol.XVII, No.454

49. SII., Vol.XVII, No.548

50. SII., Vol.XVII, No.556

51 SII., Vol.XVII, No. 557

52. SII., Vol.XVII, No. 569

53. SII., Vol.XVII, No. 574

54. ஆ.பத்மாவதி மற்றும் பொ.கோ.லோகநாதன், தமிழ்நாட்டுக் கல்வெட்டுக்கள் தொகுதி VI., கும்பகோணம் வட்டக் கல்வெட்டுக்கள், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை, 2015, ப.4

55. மேலது, ப.158

56. தீ.ஸ்ரீ.ஸ்ரீதர் (பதி), தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை, 2004, ப.216:

57. மேலது

58. சு.இராசகோபால் மற்றும் ஆ.பத்மாவதி (பதி), மேலது, ப.34-35:

59. மேலது.

60. மேலது 37-38.

61. மேலது, ப.72-73

62. மேலது, ப.74

63. ஆ.பத்மாவதி, மேலது, 508/1978

64. ARE., 50/1914

65. தீ.ஸ்ரீ.ஸ்ரீதர் (பதி), மேலது, ப.171

66. ஆ.பத்மாவதி, மேலது ப.157-160

67. மேலது, 204.

68. இரா.சிவானந்தம், தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள், தொகுதி, IX,(காஞ்சிபுரம் மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி-5) ப.100-101.

69. ARE., 07/1932-33

70. ARE., 281/1921

71. இரா.சிவானந்தம், மேலது, ப.62-63

72. கோ.விசயவேணுகோபால், மேலது, ப.82

புதுக்கோட்டைப் பகுதி கல்வெட்டுகளில் தெய்வப் பெயர்கள்

சு.இராசகோபால்
சென்னை

தமிழ்நாட்டுக் கல்வெட்டுகளில் காணப்படும் ஊர்ப் பெயர்களும் ஆள் பெயர்களும் பல சமூக ஆய்வுகளைத் தந்துள்ளன. அவ்வகையில் தெய்வப் பெயராய்வும் சமூகச் செய்திகளைத் தரவல்லது. கல்வெட்டுகளில் கோயில்களுக்குக் கொடைகள் நல்கப்பட்ட செய்திகள் சொல்லப்படும் போது இயல்பாகவே அவற்றில் நமக்குத் தெய்வப் பெயர்கள் அறியக் கிடைக்கின்றன. தெய்வப் பெயர்களைத் தொகுத்து ஆய்வு செய்யத் தமிழ்நாட்டுக் கல்வெட்டுகளில் தரவுகள் நிறைந்து இருக்கின்றன.

முன் ஆய்வுகள்

கோயில்கள் பற்றி ஆய்வு நூல் எழுதிய பலர் அவ்வக் கோயில்த் தெய்வங்களின் பெயர்களை தொகுத்தும் விளக்கம் தந்தும் ஒப்பிட்டும் காட்டியிருக்கின்றனர். பர்டன் ஸ்டெயின் தமிழக அரசிதழ்களில் வெளியான கோயில்களின் பட்டியல்களைக் கொண்டு நிகழ்த்தியுள்ள ஆய்வு தெய்வப் பெயராய்வுக்கு ஒரு வகையில் முன்னோடி எனலாம்[1]. சங்ககாலம், வேதகாலம், பிற்காலம் ஆகியவற்றில் தெய்வங்களின் தோற்றம் வளர்ச்சி தன்மை பற்றிய ஆய்வுகள் நிகழ்ந்திருக்கின்றன. இவை தெய்வ ஆய்வு அடிப்படையில் நிகழ்ந்தனவே அன்றித் தெய்வப் பெயராய்வு என்ற அடிப்படையில் நிகழவில்லை. இவர்களது ஆய்வு அவ்வக் கோயிற் கல்வெட்டுச் செய்திகளைத் தொகுப்பதாக அமைந்தவை. 'தெய்வப்பெயராய்வு - ஒரு முன்னோட்டம்' என இக் கட்டுரையாளரால் 80 களில் தஞ்சைப் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் ஒரு கட்டுரை படிக்கப்பட்டு அது சென்ற ஆண்டு ஒரு சிறு கட்டுரைத் தொகுப்பு நூலில் வெளி வந்துள்ளது.[2]

சமூகமும் தெய்வப் பெயர்களும்

சோழர்கால மக்கள் பெயராய்வு செய்தவர்கள் ஆள் பெயர்களில் சிவபெருமானின் நக்கன் என்ற பெயர் ஒரு கால கட்டத்தில் மிகுதியாக இருந்து பிறகு வழக்கொழிந்தது என எடுத்துக் காட்டி இப்பெயரின் பெருவழக்கு சைவம் தழைத்து அரசியல் மாற்றம் ஏற்பட்ட காலத்தில் நிகழ்ந்ததாகலாம் என்று குறிப்பிட்டுள்ளனர்.[3] சமயம் தனது செல்வாக்கால் சமூகத்தில் மாற்றம் ஏற்படுத்தியது போலச் சமூகமும் சமயத்தில் மாறுதல்களை ஏற்படுத்தியதைத் தெய்வப் பெயராய்வு மூலம் எடுத்துச் சொல்ல இயலும்.

நமக்கு கிடைக்கும் கல்வெட்டுகள் பெருந்தெய்வக் கோயில்களில் பதிவாகிய அளவு கிராமியத் தெய்வக் கோயில்களில் பதிவாகவில்லை. ஆனால் கல்வெட்டில்லாது கிராமியக் கோயிலகள் ஏராளமாக உள்ளன. பின்னிணைப்பில் பார்வைக்கு இரு பட்டியல்கள் தரப்பட்டுள்ளன.4 அது போல கொங்குப் பகுதியில் அண்ணன்மார் கோயில்கள் இருப்பதையும் தருமபுரிப் பகுதியில் வேடியப்பன் கோயில்கள் இருப்பதையும் மதுரை இராமநாதபுரம் பகுதிகளில் கருப்பர், ஐயனார் கோயில்கள் இருப்பதையும் சொல்லலாம். இக் கிராமியத் தெய்வப் பெயர்களை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு முன்னதாகக் கல்வெட்டுகளிலோ இலக்கியங்களிலோ காண வாய்ப்பில்லை. எனவே தெய்வப்பெயராய்வை காலவாரியாகவும் பகுதி வாரியாகவும் பல ஆய்வாளர்கள் மேற்கொள்ள வாய்ப்பிருக்கிறது. இக் கட்டுரையில் அமையும் தெய்வப் பெயராய்வு பெருந் தெய்வக் கோயில்கள் சார்ந்ததே.

புதுக்கோட்டைக் கல்வெட்டுகள்

பாடங்கள் வெளியாகியுள்ள தமிழ்நாட்டுக் கல்வெட்டுத் தொகுதிகளில் புதுக்கோட்டை சமஸ்தானக் கல்வெட்டுத் தொகுதி, கால வரிசையில் கல்வெட்டுகள் வெளியான தொகுதிகளில் ஒன்று. வெவ்வேறு கால - அரசுகள், கோயில்கள், தெய்வங்கள் இதனில் அறியக் கிடைக்கின்றன. மேலும் 1914 ஆம் ஆண்டில் ஒன்றிய அரசு படியெடுத்த புதுக்கோட்டைப் பகுதி கல்வெட்டுப் பாடங்கள் தென்னிந்திய கல்வெட்டுத் தொகுதி எண் 34 இல் வெளியிடப்பட்டுள்ளன. அது போல இன்னும் சில பிற தொகுதிகளிலும் வெளியாகியுள்ளன. அவையும் தற்போது தெய்வப் பெயர் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

கல்வெட்டுகளில் கிடைக்கும் தெய்வப் பெயர்களை கீழ்வருமாறு பகுத்து அறியலாம்.1. சமணம், வைணவம், சைவம் 2. அரசு , அரசர், குறிசில்கள் 3. ஊர் மற்றும் இடப் பெயரிலானவை 4 தொன்மச் சார்புப் பெயர்கள் 5.பண்பு சார்ந்த பெயர்கள் 6. உட்சிறு கோயில்கள் மற்றும் உலா எழுந்தருளுபவை. 7. ஊர்த் தெய்வங்களான ஐயனார், பிடாரி .

சமணப் பெயர்கள்

சமணத்தில் முனிவர்களே வணக்கத்திற்குரியவராக இருந்தனர். எனவே தனிப்பட தெய்வப் பெயர்கள் இல்லை என்றே சொல்லலாம். புதுக்கோட்டைப் பகுதியில் தொன்மையான சமணப்படுக்கையும் தமிழி கல்வெட்டும் உள்ள ஊர் சித்தன்னவாசல். காவுடி ஈதென் என்ற வணக்கத்திற்குரிய முனிவர் இக்கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளார்.இச் சமணப்படுக்கை அருகிலேயே உள்ள 7,8 ஆம் நூ.ஆ. பெயர்க் கல்வெட்டுகள் கடவுளன் திருநீலன், கயிமனூர் கடவுளன், திருப்பூரணன், ஸ்ரீ பூரண சந்திரன் என்ற பெயர்களுடன் உள்ளன. திரு, ஸ்ரீ அடைக் குறிப்புகளைக் கொண்டு இவர்களும் வணங்கப்பட்டவர்கள் எனக் கருதலாம். சங்க இலக்கியங்களிலேயே கடவுள் என்ற சொல் தெய்வம் என்ற

பொருளில் பரவலாகக் காணப்படுகிறது. கல்வெட்டுகளில் இச்சொல் பரவலாக இல்லை. திரு செல்வம், இலக்குமி என்ற பொருளில் காணப்படும் ஒன்று இங்கு திரு, ஸ்ரீ இரண்டும் பெயர் அடைகளாக உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

புதுக்கோட்டைப் பகுதியில் சமணத் திருமேனிகளும் கல்வெட்டுகளும் அரிதாகவே காணப்படுகின்றன. கல்வெட்டுகளில் காணப்படும் பெயர்கள் கீழே ஒரு பட்டியலில் தரப்பட்டுள்ளன.

வ.எ	ஊர்.	சமண தெய்வம்	க.எண்	காலம்
1	சித்தன்னல்வாசல் ஏழடிப்பாட்டம்	கடவுளன் திருநீலன், ஸ்ரீபூர்ண சந்திரன்	7	பொ.ஆ.600
2	சித்தன்னல்வாசல்-குடைவரை	அறிவர் கோயில்	14:45	815-862
3	தேனிமலை	மலையத்துவஜன்	9	பொ.ஆ900
4	தேனிமலை	திருமேனி	10	பொ.ஆ.900
5	திருக்கோகர்ணம்-சடைய பாறை	கல்லாற்றுப் பள்ளி பெருநற்கிளிச் சோழப் பெரும்பள்ளி ஆழ்வார்	530	பொ.ஆ1300
6	திருக்கோகர்ணம்-சடைய பாறை	தென்கவி நாட்டுப் பெரும்பள்ளி ஆழ்வார்	530	பொ.ஆ1300
7	பொம்மைமலை	திருப்பள்ளி மலைப்பள்ளி உடையார், தென்திருப்பள்ளி மலைப்பள்ளி உடையார்	658	பொ.ஆ1300

காலப் போக்கில் ஆழ்வார், உடையார், நாயகர் என பின்னொட்டுச் சொற்கள் சேர்வதைப் பட்டியல் காட்டுகிறது

வைணவத் தெய்வப் பெயர்கள்

வைணவக் கோயில்கள் பொதுவாக மேற்கோயில், விண்ணகரம் என்ற முன் பின் ஒட்டுச் சொற்களுடனும் வைணவத் தெய்வங்கள் எம்பெருமான், ஆழ்வார் என்ற பின்னொட்டுச் சொற்களுடனும் காணப்படுகின்றன. புதுக்கோட்டைப் பகுதியில் உள்ள திருமயம் திருமங்கை ஆழ்வாரால் பாடல் பெற்ற தொன்மை வைணவத்தலம். அவர்

திருமெய்ய மலையாளன், மெய்ய மணாளர், மெய்யம் என்னும் தடவரை மேல் கிடந்தான், மெய்யம் அமர்ந்த பெருமான்மெய்யான் மெய்ய மலையான் சங்கு ஏந்தும் கையான், அரியை திருமெய்யத்து இன்னமுதை என்று

1206,1389 , 1760, 1095, 1524, 2016, 2779 நாலாயிரத் திவ்யப் பிரபந்த பாசுர எண்களில் திருமெய்யத்த தெய்வப் பெயர்களைக் குறிக்கின்றார். திருமங்கை ஆழ்வார் எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். திருமயத்தில் எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டு ஒன்று மட்டும் உள்ளது(பு.கோ.க.13). முத்தரையர் கல்வெட்டான அதனில் உண்ணாழிகை(கருவறை) பற்றிய சொல் உள்ளதே தவிர தெய்வப் பெயர் எதுவும் இல்லை. நூற்றாண்டுகள் கடந்து பொ.ஆ.1245ல் சுந்தரபாண்டியன் காலப் போசளர் கல்வெட்டில் *திருமெய்யத்து எம்பெருமான் நின்றருளிய தேவர், பள்ளிகொண்டருளிய ஆழ்வார்* என இன்று அங்கு ஒரே முற்றத்தில் அடுத்தடுத்துள்ள திருமால் கோயில்களின் பெயர்கள் உள்ளன(பு.கோ.க.340,341). திருமெய்யத்தில் உள்ள ஜடாவர்மன் பராக்கிரம பாண்டியனின் இரு கல்வெட்டுகள் திருமங்கை ஆழ்வார் குறிப்பிட்ட திருமெய்யமலையாளன் என்ற பெயரை *நாயனார் திருமெய்யமலையாளன்* என்று குறித்துள்ளன.(பு.கோ.க.459,460). இப்பகுதிக் குறிசில்களான சூரைக்குடி அரசுகளின் பொ.ஆ.1452,1461 கல்வெட்டுகள்(பு.கோ.க.792,800) *நயினார் திருமெய்யமலையாளர்* என்று குறித்துள்ளன.விஜயநகர மன்னர் கிருஷ்ணதேவராயரின் பொ.ஆ.1522 கல்வெட்டில் *திருமெய்ய பெருமாள் அழகிய மெய்யர்* என்ற பெயர் உள்ளது (பு.கோ.க.735). பொ.ஆ.1668,1669 ஆண்டுகளைச் சேர்ந்த சேதுபதி கல்வெட்டுகள் (பு.கோ.க.872,873) *திருமெய்யம் அழகிய மெய்யர், திருமெய்ய திருப்பதி நயினார் திருமெய்ய மலையாளர்* என குறிக்கின்றன. திம்மப்பநாயக்கரின் ரௌத்திரிவருடக் கல்வெட்டில்(பு.கோ.க. 967) *திருமெய்யமலையான்* என்று குறிப்பிட்டுள்ளது.

மெய் என்பதற்கு வாய்மை/உண்மை என்றும் உடல் என்றும் பொருள் உண்டு. திருமங்கை ஆழ்வார் காலம் தொட்டு 17,18 ஆம் நூற்றாண்டு வரை கல்வெட்டுகளில் தமிழாலேயே அறியப்பட்ட இம் மலையும் தெய்வமும் சமூகப் போக்கால் வடமொழியில் சத்யகிரி, சத்யமூர்த்தி என பொருள் மாறாது பெயர் மாறியுள்ளன. கீழ்வரும் பட்டியலில் இப்பகுதியில் உள்ள விண்ணகரத் தெய்வங்கள் குறித்து அறிந்து கொள்ளலாம்.

வ.எ	ஊர்	தெய்வம்	பு.கோ க.எண்	காலம்
1	இரும்பாநாடு	நுளம்பூர்- *அழகு கண்ட விண்ணகர எம்பெருமான்*	124	பொ.ஆ.1103 குலோ3
2	இரும்பாநாடு	(பராந்தகநல்லூர்) *திருமிழலை நாட்டு திருவிண்ணகர எம்பெருமான்*	372	பொ.ஆ1267 ஜடா வீரபா.
3	சேந்தமங்கலம்	சேந்தமங்கலம் - *திருமேற்கோயில் சித்திரமேழி விண்ணகர எம்பெருமான்*	171	குலோ3 பொ.ஆ -1206

வ.எ	ஊர்	தெய்வம்	பு.கோ க.எண்	காலம்
4	முனிச்சந்தை	முனியந்தை- திருமேற்கோயில் சோழகோன் விண்ணகர் எம்பெருமானுக்கு ஊரின் அபாயத்து நன்மைக்கு எழுந்தருளிவித்த பிராட்டிமார் இருவர்	247	சுந்தர.பா பொ.ஆ 1219
5	பொன்னமரபதி	பொன்னமரபதி- அழகப்பெருமாள் விண்ணகர ஆழ்வார்	289	சோனாடு வழங். சுந் பா பொ.ஆ.1230
6	பொன்னமரபதி	அழகப்பெருமாள் விண்ணகர எம்பெருமான்	398	பொ.ஆ.1285 மாற குலசே. பா
7	பெருந்துறை	பெருந்துறை – தி[டா] கமீகாம விண்ணகர் எம்பெருமான்	333	ஜடா.குலசே 1212
8	பெருந்துறை	பெருந்துறை – கண்டதேவ விண்ணகர எம்பெருமான்	336	ஜடாகுலசே 1216
9	பெருந்துறை	பெருந்துறை – கண்டதேவ விண்ணகர எம்பெருமான் பிராட்டி, உடைய பிராட்டியார்	337	ஜடா.குலசே 1216
10	பெருமாநாடு	பெருவாயில் நாட்டு சிறுசுனையூர் நாயனார் கரியமாணிக்க விண்ணகர எம்பெருமான்	359	ஜடா.சு.1218
11	திருவேட்பூர்	தாவடிமோக விண்ணகர எம்பெருமா	475	ஜடா.சு
12	கதவம்பட்டி	திருமேல்கோயில் ராஜமஹேந்திர விண்ணகர எம்பெருமான்	544	மாற.சு.
13	காரையூர்	மேற்கோயில் அழகப்பெருமாள் விண்ணகர எம்பெருமான்	584	பிற்பாண்
14	வேங்கைவாயில்	திருவேங்கைவாசல் உடையார் பெருமாள் கோயில்	599,34: 237	ஜடா.சு

வ.எ	ஊர்	தெய்வம்	பு.கோ க.எண்	காலம்
15	கோட்டையூர்	*நரலோக வீர விண்ணகர ஆழ்வார்*	633, 34	விக்கிரம .பா
16	கண்ணனூர்	கண்ணனூர் விருதராஜ பயங்கர விண்ணகர் எம்பெருமான்	631	விக்கிரம பா
17	சுந்தரம்	*பொலிஞ்சுநின்ற விண்ணகர எம்பெருமான்*	761	வேங்கடபதி பொ.ஆ.1628
18	சுந்தரம்	*பொலிஞ்சுநின்ற விண்ணகர எம்பெருமான்*	1020	---
19	நார்த்தாமலை	*பதினெண்பூமி விண்னகரஎம்பெருமான் + பிராட்டிமார்*	281	சோனாடு வழ.சுந்தரபா

இப்பட்டியலில் காணப்படும் பெயர்களை பின்வருமாறு புரிந்து கொள்ளலாம்.

அழகர்/அழகு(சுந்தரர்) பண்பின் பெயரால் அமைந்தது. அழகுகண்டன் அரச தலைவ பெயர்;

திருமிழலை நாட்டின் பொருட்டு இறைவனை நிறுவியுள்ளனர்;

சித்திரமேழி விண்ணகர எம்பெருமான், பதினெண்பூமி விண்னகர எம்பெருமான்- வணிகக் குழுக்களின் பெயரில் அமைந்தவை;

சோழகோன் விண்ணகர்- அரசுத் தலைவர் பெயரால் ஏற்பட்டது;

அழகப்பெருமாள்- அழகர்மலை,அழகிய(சுந்தரர்) என்ற குணப் பெயரால் எற்பட்டது. அரசு தலைவரின் பெயராகவும் அமைந்தது;

தி[டா]கமீகாம விண்ணகர் எம்பெருமான்- தெளிவில்லை. எழுத்துப் பிழையா என்பதும் தெரியவில்லை. திடர்-திருவரங்கம் போன்ற தீவுகளைக் குறிக்கும். காமிக ஆகமம்- சிவ ஆகமம், இங்கு பொருந்தவில்லை;

கண்ட தேவன் - இதுவும் அரசு தலைவரின் பெயர்;

விருதராஜ பயங்கர- குலோத்துங்கனின் விருதுப் பெயர்;

நரலோக வீரன் - முதலாம் குலோத்துங்கனின் படைத் தலைவன்;

பொலிஞ்சுநின்ற- செழிப்புடன் விளங்கிய என்று பொருள்படும்;

தாவடி- திருமாலின் உலகளந்த திருவடிகளைக் குறிப்பதாகலாம்;

கரியமாணிக்கம்- திருமாலின் நிறம் கருமை என்ற அடிப்படையில் மாணிக்கமாக; பிராட்டிமார் – திருமாலுடைய தேவியர்; திருமகள்.பூமகள் (ஸ்ரீதேந்வி,பூதேவி) என்று பெயர் சொல்லிக் குறிக்கப்படவில்லை. ஊரின் அபாயம் நீங்க இப் பிராட்டிமார் எழுந்தளுவிக்கப்பட்டுள்ளனர். ஏற்கனவே முன்னதாக திருமால் உருவம் மட்டும் இருந்திருக்கிறது;

உடைய பிராட்டியார் என ஒருவர் மட்டும் எழுந்தருளப்பட்டுள்ளார்; இன்றைய தாயார் சன்னதித் தெய்வம் போலக் கருதலாம்.

அரசு, அரசர் பெயரிலான தெய்வங்கள்

புதுக்கோட்டைப் பகுதி பல்லவ , பாண்டிய , சோழ அரசுகளின் எல்லைப் பகுதி. அரசுகளின் நேரடி ஆளுகையைவிட அவர்களின் கீழமைந்த முத்தரையர், இருக்குவேளீர் இன்னும் பிற குறிசில்கள், அரசுத் தலைவர்களின் ஆளுகைப் பார்வைகளையே பெற்றிருந்தது. தொன்மையான குடைவரைகளான திருக்கோகர்ணம், குடுமியான்மலை, திருமெய்யம், மலையடிப்பட்டி, நார்த்தாமலை, குண்டாண்டார் கோயில், சித்தன்னவாசல் முதலியவற்றில் நேரடியாக பேரரசர்களின் பெயரில் பணிகளோ கொடைகளோ கல்வெட்டுகளில் ஏதும் இல்லை. சித்தன்னவாசலில் ஸ்ரீமாறஸ்ரீவல்லபன் பெயரில் மதுரை ஆசிரியன் இளங்கௌதமர் கல்வெட்டும் நார்த்தாமலையில் நிருபதுங்கன் பெயரில் முத்தரையன் சாத்தம் பலியிலி கல்வெட்டும் குண்டாண்டர் கோயிலில் நந்தி போத்தரையன் பெயரில் வடுவூர் கனப்தி கல்வெட்டும் உள்ளன.

பின்வரும் பட்டியலின்படி ஒலியமங்கலத்தில் முற்காலப் பாண்டியன் வரகுணன் பெயரில் ***வரகுணீஸ்வரமுடையார்*** தெய்வப் பெயர் காணப்படுகிறது. எனினும் இது பிற்காலப் பாண்டியர்களான சுந்தரபாண்டியன் மற்றும் குலசேகர பாண்டியன் கல்வெட்டுகளாகும். இருந்தபோதிலும் திருக்கோகர்ணம் குடைவரை முன்பகுதியில் உள்ள கோமாறஞ்சடையனின் கல்வெட்டு ஸ்ரீவரகுணவதி அரையனின் கொடையைக் குறிப்பிடுகிறது.நார்த்தாமலையில் நிருபதுங்க பல்லவன் காலத்திய கல்வெட்டில் ***பழியிலீஸ்வரம்*** என்ற பெயர் உள்ளது. இது சாத்தம்பழியிலி என்ற முத்தரையரது பெயரில் அமைந்ததாகும். பழி ஏதுயில்லாத குணத்தைக் குறிப்பதாகும்.

முத்தரையர்களை வென்று சோழப் பேரரசைத் தோற்றுவித்தவன் விஜயாலயன் ஆவான். நார்த்தாமலையில் அவனது பெயரில் அமைந்தது ***விஜயாலயசோழீஸ்வ***ரமாகும்.இதனைக்குறிக்கும்கல்வெட்டுஅவனதுசமகாலக் கல்வெட்டில்லை. சோனாடு வழங்கிய சுந்தரபாண்டியன் காலத்தியது. இப்பகுதி சூரைக்குடி அரசு தலைவர்களில் ஒருவர் விஜயாலயன் என்று பெயருடையவர் என்பதால் சோழ விஜயாலயனுடையது என்பதில் இடர்பாடுண்டு. எனினும் கட்டட அமைப்பு, நிருபதுங்கன், முத்தரையர் கல்வெட்டுகளைக் கொண்டு விஜயாலயன் சோழன் என்று முடிவு செய்துள்ளனர்.

குளத்தூர் கல்வெட்டுகள் இராஜராஜனின் தந்தை சுந்தரசோழன் பெயரில் ***சுந்தரசோழீச்சுரமுடைய நாயனார்*** தெய்வத்தைச் சுட்டுகின்றன. விரைகுடி கல்வெட்டு இராஜராஜன் பெயரிலான ***அருமொழீச்சுவரமுடைய நாயனார்*** பெயரைச் சுட்டுகிறது. எனினும் இவையும் சம காலத்தவை அல்ல. பொன்னமராபதி, பின்னங்குடி கல்வெட்டுகளில் ***ராஜேந்திர சோழீஸ்வரமுடையார், ராஜேந்திர சோழீஸ்வரமுடைய நாயனார்*** பெயர்கள் உள்ளன. குலோத்துங்க சோழனின் ஒருசிறப்புப் பெயர் அகளங்கன்- களங்கமில்லாதவன் என்பதாகும். இந்த குணம் சார்ந்த பெயரில் மறவாமதுரை என்னும் வடமதுரையில் ***அகளங்கீஸ்வரர்*** என்ற

பெயர் காணப்படுகிறது. *குலோத்துங்க சோழீஸ்வரமுடைய நாயனார், குலோத்துங்க சோழீஸ்வரமுடையார்* என குலோத்துங்கன் பெயரிலேயே தெய்வப் பெயர்களை சேரனூர், பெருங்களூர் கல்வெட்டுகள் காட்டுகின்றன. நரலோகவீரன் குலோத்துங்கனின் படைத்தலைவன். தில்லையில் நூற்றுக்கால் மண்டபம் எடுத்துச் சிறப்பித்தவன். இங்கு கோட்டையூரிலுள்ள திருமால் *நரலோக வீரவிண்ணகரஆழ்வார்* என்ற பெயரில் விளங்கியிருக்கிறார், அன்புக்கோயில் *அழிம்பில் நாயினார் வீரராசேந்திர சோளீசுரமுடையார், பெருந்துறை சுந்தரசோழ பாண்டீச்வரம், கதவம்பட்டி ராஜமஹேந்திர விண்ணகர எம்பெருமான், பரம்பூர் சோழகேரளீஸ்வரமுடைய நாயனார்* என்ற பெயர்கள் முதலாம் இராசேந்திரனின் வாரிசுகளும் போர் முனைகளில் ஈடுபட்டவர்களின் பெயர்களாகும். கண்ணனூர், திருகுளம்பூரில் காணப்படும் *குலசேகரஈச்வரமுடைய நாயனார், குலசேகரமுடைய நாயனார்* பிற்கால பாண்டியர்களின் பெயரிலான தெய்வங்களாகும்.

அரசுகள், அரசர்கள் மாறிய போதிலும் பொதுவாகப் பெயர்கள் மாறாது தொடர்வது சிறப்பாகும். இப்பகுதி பேரரசுகளின் எல்லைப்பகுதி என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். சுந்தரசோழன் இப்பகுதி சேவூர் (செவ்வூர்) போரில் இறந்தவன் என்பது ஒரு வரலாற்றுக் கணிப்பு. எனவே அவன் பெயரில் குளத்தூரில் *சுந்தரசோழீச்சுரமுடைய நாயனார்* கோயில் அமைந்திருக்கிறது. முதலாம் இராஜேந்திரன் தான் வெற்றி கண்ட பாண்டிய நாட்டுப் பகுதிகளில் சோழர் ஆளுகையை நிலை நிறுத்தும் முன்னெடுப்பின் காரணமாகவே கோயில்களும் தெய்வங்களும் அவன் காலத்திலும் அவனுக்குப் பின் தொடர்ந்தவர்கள் காலத்திலும் அவர்களதுபெயரெகளைப் பெற்றன.

வ.எ	ஊர்	தெய்வப் பெயர்	பு. கோ. க. எண்	காலம்/மன்னன்
1	ஒலியமங்கலம்	*வரகுணீஸ்வர முடையார்*	345, 349, 541, 587	சுந்தரபாண், குலசே பாண்
2	நர்த்தாமலை	*பழியிலீஸ்வரம்*	19	நிருபதுங்.-முத்தரையர்
3	நார்த்தாமலை	*விஜயாலயசோழீஸ்வர முடையார்*	282	சோனா. வழ.சுந்தர
4	குளத்தூர்	*சுந்தரசோழீச்சுரமுடைய நாயனார்*	512	மாற.சுந்த
5	குளத்தூர்	*சுந்தரசோழீச்சுரமுடைய நாயனார்*	515	சோனாடு கொ சுந்த
6	குளத்தூர்	*சுந்தரசோழீச்சுரமுடைய நாயனார்*	551	குலசே

வ.எ	ஊர்	தெய்வப் பெயர்	பு. கோ. க. எண்	காலம்/மன்னன்
7	குளத்தூர்	சுந்தரசோழீச்சுரமுடைய நாயனார்	34-378	பொ.ஆ1233
8	குளத்தூர்	சுந்தரசோழீச்சுரமுடையார்	162	குலோ 3
9	விரைகுடி	அருமொழீச்சுவரமுடைய நாயனார்	537, 34: 328	குலசே பா
10	மறவாமதுரை	அகளங்கீஸ்வரம் (வடமதுரை)	985	நிசதராஜன்
11	கோட்டையூர்	நரலோக வீரவிண்ணகரஆழ்வார்	633, 634	விக்கிரம பா
12	சேரனூர்	குலோத்துங்க சோழீஸ்வரமுடைய நாயனார்	163, 499, 500, 980	குலோ-3, சு.பா, குலசேபா
13	பெருங்களூர்	குலோத்துங்க சோழீஸ்வரமுடையார்	228, 34-197	குலோத்து3
14	அன்புக்கோயில்	அழிம்பில் நாயினார் வீரராசேந்திர சோளீசுரமுடையர்	369, 458	ஸ்ரீவல்ல, சு.பா
15	பின்னங்குடி	உடையார் ராஜேந்திரசோழீஸ்வர முடையார்	141, 159	பரகேசரி 1178,1205
16	பெருந்துறை	சுந்தரசோழ பாண்டீச்வரம்	242,	ஜடா.சுந்
17	கதவம்பட்டி	ராஜமஹேந்திர விண்ணகர எம்பெருமான்	544	குலசேகரபா
18	பரம்பூர்	சோழகேரளீஸ்வரமுடைய நாயனார்	272, 479, 508, 543	சோ.வழ. சுந் ஜடா.சுந் குலசே.பா
19	பரம்பூர்	சோழகேரளீஸ்வரமுடைய நாயனார்	99	ராஜே1
20	பரம்பூர்	சோழகேரளீஸ்வரமுடைய நாயனார்	165	குலோ3
21	முனிசந்தை	சோழகோன்விண்ணகர எம்பெருமான்	247	சுந்தரபாண்
22	திருவேட்பூர் இரும்பாழி	ராஜராஜீஸ்வரமுடைய நாயனார்	155, 344	குலோ3 சுந்தர பா
23	திருவேட்பூர்	ராஜராஜேஸ்வரமுடையார்	153	பிற்.பாண்

வ.எ	ஊர்	தெய்வப் பெயர்	பு. கோ. க. எண்	காலம்/மன்னன்
24	பொன்னமராபதி	*ராஜேந்திர சோழீஸ்வரமுடைய நாயனார்*	147, 150	குலோ3
25	பொன்னமராபதி	*ராஜேந்திர சோழீஸ்வரமுடைய நாயனார்*	256, 312, 404,	சுந்தரபா
26	பொன்னமராபதி	*ராஜேந்திர சோழீஸ்வரமுடைய நாயனார்*	578	குலசேகர
27	பொன்னமராபதி	*ராஜேந்திர சோழீஸ்வரமுடையார்*	131, 132, 137	ராஜராஜ2
28	பின்னங்குடி	*ராஜேந்திர சோழீஸ்வரமுடைய நாயனார்*	297, 302,	சுந்தரபா
29	அன்புக்கோயில்	*அழிம்பில் நாயனார் வீரராஜேந்திர சோளீச்வரமுடைய னாயனார்*	369	வீர பாண்டியன்
30	பெருந்துறை	*கண்டதேவவிண்ணகர எம்பெருமான்*	336	1216ஸ்ரீவல்
31	கண்டீஸ்வரமு டையார் கோயில்	*கண்டதேவ ஈஸ்வரமுடையார்*	570	குலசே
32	கண்ணனூர்	*குலசேகரஈச்வரமுடைய நாயனார்*	632	விக்கிர பாண்12 நூ
33	திருக்குளம்பூர்	*குலசேகரமுடைய நாயனார்*	588	கோனே குல

பெண் தெய்வங்கள்

புதுக்கோட்டை கல்வெட்டுகளில் சேகரித்த தெய்வப் பெயர்களின் (கீழே தரப்பட்டுள்ளது) பட்டியலில் உள்ள பெண் தெய்வப் பெயர்களின் அண்டக் கூத்தர் தம்பிராட்டியார், ஆவுடையார் ஆண்டக் கூத்தர் தம்பிராட்டியார், கூத்தாடுவார் தம்பிராட்டியார், சதிரவிடங்க தேவர் பிராட்டியார், சதிரவிடங்க நாயனார் நாச்சியார், செம்பாட்டுடைய நாயனார் திருப்பள்ளியறை நாச்சியார், திருப்பள்ளியறை நாச்சியார், உடையார் நித்த சூளாமணி விண்ணகர விடங்கர் தம்பிராட்டியார் என்ற பெண் தெய்வங்கள் செப்புத் திருமேனிகளாகும். இவை நடராஜர் அருகிலும் பள்ளியறைக்கு எடுத்துச் செல்லும் வகையிலும் அமைந்தவை. விடங்கம் என்பது கல் உளி கொண்டு செதுக்கப்படாதது என்று பொருள் கொள்வர்.

திருக்காமக்கோட்ட நாச்சியார், திருக்காமக்கோட்ட முடைய நாச்சியார், திருக்காமக் கோட்டத்து பெரியநாச்சியார், திருமலைக்கடம்பர் ஸ்ரீகோயில் தம்பிராட்டியார், பெருந்துறை பிராட்டியுடைய பிராட்டியார், ஸ்ரீசேட்டாதேவி போன்றவை கோயில்களின் சுற்றாலைகளில் இடம்பெறும் கோயில் தேவியர் என்று சொல்லலாம். படாரி அய்யப்பொழில் நாச்சியார் ஊரில் அமைந்த தனிக் கோயில் ஊர்த் தெய்வமாகும்.

அகத்தீஸ்வரர்

பட்டியலில் அகத்தீஸ்வரமுடைய நாயனார், அகத்தீஸ்வரர். திருஅகத்தீஸ்வரம் உடையார், உடையார் திருவகத்தீஸ்வரமுடையார், திரு அக்னீஸ்வரத்து பரமேஸ்வரர், திருஅகத்தீஸ்வரமுடையார், திருவகத்தீஸ்வரமுடைய நாயனார், திருவகத்தீஸ்வர முடைய மகாதேவர், திருவகத்தீஸ்வரம் உடையார் என சுமார் 75 கல்வெட்டுகளில் காணப்படுவது குறிப்பிடத் தக்கது. இவை வாராப்பூர், நெய்வாசல், கோட்டையூர், புலிவலம், வெள்ளலூர், வயலோகம், திருவேட்பூர், பெருமானாடு, இரும்பானாடு, காரமங்கலம், ஆரியூர், ஊணையூர், மேலத்தாணையம், ஆலாத்தூர் என 14 க்கு மேற்பட்ட ஊர்களில் காணப்படுகின்றன. இன்று அகத்தியர் குறித்த செய்திகளும் கதைகளும் பல உள்ளன. சங்க இலக்கியங்களில் அவர் பேசப்பட்டதாகத் தெரியவில்லை. தேவாரத்தில் ஆலமர் செல்வரான சிவபெருமானே அகத்தியர் என்ற பெயரில் சொல்லப்படுகிறார். கம்பராமாயனத்தில் காவிரி, வேதம் முதலிய தொன்மங்களோடு அவர் பேசப்படுகிறார். சிதம்பரம் , தாராசுரம் முதலிய இடங்களில் சிற்பங்கள் உள்ளன. இடைக்காலத்தில் அவரது சிறப்பு பேசப்பட்டதால் புதுக்கோட்டைப் பகுதியில் மேற்சொன்னபடி பல ஊர்களில் ஈஸ்வரராகக் கோயில்கள் காணபடுகின்றன என்று கருதலாம்.

மூலத்தானமுடையார்

திருமூலத்தனத்து மகாதேவர், திருமூலத்தானத்துப் பெருமானடிகள் என்ற பெயர்கள் சுமார் 20 கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. அவை குடுமியான் மலையில் உள்ளவை. தமிழகக் கல்வெட்டுகளில் குறிப்பிடத்தக்க அளவில் ஸ்ரீமூலஸ்தானத்துப் பெருமான், திருமூலஸ்தானத்துப் படாரர், திருமூலஸ்தானம் உடையார், திருமூலஸ்தானத்து மகாதேவர் அரிகேசரி நல்லூர் திருநடுவுபடாரர் என்று பெயர்கள் காணப்படுகின்றன. சபைகள் கூடுமிடத்தைச் சொல்லும்போது ஊரின் பிரம்மஸ்தானத்தே கூடின என்று கல்வெட்டுகள் குறிப்பிடுவது உண்டு. இதை ஊர்த் தோற்றத்தின் மைய இடமாகக் கருத இடமுள்ளது. காளிதாசன் சிவபெருமான் மூன்று உலகங்கள் தோற்றத்திற்கும் மூல ஸ்தம்பமானவன் என்பார். 'த்ரைலோக்ய நகராரம்ப மூலஸ்தம்பாய சம்பவே' என்று அழைப்பது இங்கு எண்ணத்தகும். குடுமியான் மலையில் மூலத்தானம் அவ்விதம் அமைந்திருந்ததா என்பது தெரியவில்லை.

சில குறிப்பிடத்தக்க செய்திகள்

கொடும்பாளூரில் தேவபுத்திரன் மார்கண்டேயன் கற்றளி குறிக்கப்பட்டுள்ளது. காலனை அழித்த காலசம்கார மூர்த்தி தொன்மத்தில் தொடர்புடையவர் மார்கண்டேயன். அவர் இங்கு தேவபுத்திரனாக வணங்கப்பட்டுள்ளார். கொடும்பாளூர் கபாலிக மதத்துடன் தொடர்புடையது என்பர்.

சண்டேஸ்வரர் சிவன் கோயி கணக்கராக் அறிய்ப்படுபவர்.இங்கு திருவிறையான்குடி திருவன்னி இனிதமர்ந்தருளிய திரிபுவனபதிக்கு மூலவிருத்தராகிய சண்டேஸ்வரதேவர். திருவிளாங்குடி முதலாம் இராசேந்திரன் கல்வெட்டில் மேற்கண்டவாறு மூல விருத்தராகச் சொல்லப்பட்டுள்ளார்.

திருவன்னி உடையார் கோயில் சேத்திரபாலதேவர் திருவிளாங்குடி முதலாம் இராஜராஜனின் கல்வெட்டில் சொல்லப்பட்டுள்ளார். சேத்திரபாலதேவர் பைரவர் ஆவார்.இவர இங்கு தனிப்பட அமுது படையலுடன் வணங்கப் படும் அளவு சிறப்புப் பெற்றுள்ளார்.

அக்னீஸ்வரர் குறித்து சித்தூர், நெய்வாசல் ஆகிய ஊர்களில் கல்வெட்டுகள் உள்ளன. அவை முதலாம் இராஜராஜன், இராஜேந்திரன் காலத்தவை .அக்னி வேதகாலம் தொட்டு வணங்கப்படும் கடவுள். திசாபாலகர்களில் ஒருவர்.இவ்வூரில் அவர் எதோ ஒரு வகையில் முக்கியத்துவம் பெற்று வணங்கப்பட்டுள்ளார். திருமாங்கனீஸ்வர்முடையார், தெங்கங்குடிஉடையார் தெங்ஞ்க நாயனார் என மா, தென்னை தொடர்பான பெயர்களும் உள்ளன. இப்படி இன்னும் பல செய்திகளை இத்தெய்வப் பெயர்கள் வழிநாம் பெற இயலும்,

நூற்ப்பட்டியல்

South Indian temples – Ed. Burton Stein, An Analytical Reconsideration Vkas Publishing House, 1978 -

ஒரு கல்வெட்டாய்வாளரின் சேரி முதலிய கட்டுரைகள்', நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை - 2025

Statistical study of Personal Names in Tamil Inscriptions – Noboru Karashima and Y.Subbarayalu, Institute of Asian and African Languages and Culture, Tokyo 1976.

பின்னிணைப்பு 1

புதுக்கோட்டை கல்வெட்டுகளில் சேகரித்த தெய்வப் பெயர்களின் பட்டியல்

..க்னீஸ்வரத்து பர்மேச்வரர் 24,17-380,19-387,16-387 , 19-386, 616

அகத்தீஸ்வரகர்த்த மண்டபம் பாடல் வெள்ளைநல்லூர் 34-200

அகத்தீஸ்வரமுடையநாயனார் 360,397,408,409,766

அகத்தீஸ்வரர் 243

அகளங்கீஸ்வரம் 985
அண்டக்கூத்தர்-தம்பிராட்டியார் 509
அய்யப்பொழில் நாச்சியார் 148
அருமொழீச்சுவரமுடைய நாயனார் 34 -328
அருமொழீஸ்வரமுடையநாயனார் 537
அழகப்பெருமாள் 661
அழகப்பெருமாள் விண்ணகர ஆழ்வார் 289
அழகப்பெருமாள் விண்ணகர எம்பெருமான் 398, 584
அழகிய திருச்சிற்றம்பலமுடையார் 1908:220
அழகியநாச்சியார் 30-31:209
அழகுகண்ட விண்ணகர எம்பெருமான் 124
அழிம்பில் நாயினார் வீரராசேந்திரசோளீசுரமுடைய
அழிம்பில்நயினார் 975, 34-231
ஆகமசீலீஸ்வரமுடைய நாயனார் 360,397,408,409
ஆயிரவிச்வரமுடையார் 338
ஆயிரவீச்வரமுடையார் 274,338,339
ஆலஞ்சேர் மிடற்றர் பாடலகத்தீசர்கர்த்த 115, 34:206
ஆலத்தூர் மலைஉடையார் வாயீச்வரமுடையார் 116
ஆவுடையார்ஆண்டக்கூத்தர் தம்பிராட்டியார் 527, 34:368
ஆன்குடி நக்கர் – ஸ்ரீகோயில் 84
இம்மையேதருவார் 416
இலங்கேஸ்வர தேவர் 631,632
உடையார் திரு வகத்தீஸ்வரமுடையார் 97
உடையார் திருப்பூவாலைக்குடி உடைய நாயனார் 490
உடையார் திருப்பெருமானாண்டர் 129
உடையார் திருவேங்கைவாசால் உடைய நாயனார் 195, 34-247
உடையார் திருவேங்கைவாயில் உடையார் 327, 34-235
உடையார் நித்த சூளாமணி விடங்கர் 34-234
உடையார் நித்தசூளாமணி விண்ணகர விடங்கர் தம்பிராட்டியார் 100
உடையார் ராஜேந்திரசோழீஸ்வரமுடையார் 141,159
உடையார்திருப்பெருமனாண்டார் 105
உதய வளர்மதீஸ்வரமுடைய நாயனார் 185
உதயமார்தாண்டீஸ்வரமுடைய நாயனார் 421

உதயமார்த்தாண்ட ஈஸ்வரத்துப் பெருமானடிகள் 20

உத்தமதானீஸ்வரமுடையநாயனார் 415,546,237

உத்தமதானீஸ்வரம் உடைய மகாதேவர் 23

உத்தமதானேஸ்வரமுடைய நாயனார் 145,156,156

உத்தமதானேஸ்வரமுடையார் 198

உமாபதீஸ்வரமுடைய நாயனார் 146,167,168,179,

உலகவிடங்கீஸ்வரமுடையநாயனார் 393,421

கணபதியார் 20, 54, 1904:305

கண்டதேவஈஸ்வரமுடையார் 570

கண்டிதேவவிண்ணகர எம்பெருமான் 336,337

கரியமாணிக்க விண்ணகர எம்பெருமான் 350

காட் டுப்பள்ளி பெருநற்கிளி சோழப் பெரும்பள்ளி ஆழ்வார் 530

காரிமங்கல நாயனார் 410

குடைவித்த சிரீகோயில் 19

குலசேகரஈச்வரமுடையநாயனார் 632

குலசேகரமுடையநாயனார் 588

குலோத்துங்க சோழீஸ்வரமுடைய நாயனார் 499, 500, 558, 574

குலோத்துங்க சோழீஸ்வரமுடையநாயனார் 980

குலோத்துங்க சோழீஸ்வரமுடையார்

குலோத்துங்க சோழீஸ்வரமுடையார்163, 228, 34-197,163, 228, 499, 500, 558, 574. 980

குன்றப்பெருமாள் 184,186

கூத்தாடுவார் தம்பிராட்டியார் 34-216

கைலாச(முடைய)நாயணார் 418,540

கோகர்ணத்து மகாதேவர் 41.73

கோகளி 34-257

க்ஷேத்திரபால பிள்ளையார் 417

சங்குபரமேச்வரி 19-389

சதிரசேகரதேவர் 327, 34-235

சதிரவிடங்கதேவர் பிராட்டியார் 34-246

சதிரவிடங்கநாயனார் நாச்சியார் 195,34-247

சந்திரசேகரதேவர் 109

சாத்தனூர் ஸ்ரீகயிலாயமுமாபதீச்வரம் 149

சித்திரமேழி விண்ணகரம் 171

சுந்தரசோழபாண்டீச்வரம் 242,512,515,551

சுந்தரசோழீச்சுரமுடைய நாயனார் 34:378

சுந்தரசோழீச்சுரமுடையார் 162

சுப்பிரமணியதேவர் 334

சுப்பிரமணியபிள்ளை 335

சுப்பிரமணியபிள்ளையார் 273, 423

செம்பாட்டுடைய நாயனார் திருப்பள்ளியறைநாச்சியார் 667

செம்பியன் புத்தாபூர் உடையார் திருவைய்யாருடையார் 34-216

செம்போத்துடையார் திருவையாறுடைய நாயனார் 34-213

சேத்திரபால பிள்ளையார் 417

சேரபாண்டியதேவர் 287

சொக்ககூத்தராவுடைநாச்சியார் 540

சொக்கநாதசாமி 760

சோழகேரளீஸ்வரமுடைய நாயனார் 272, 479, 508, 543, 99,165, 99,168, 272, 479, 508, 543

சோழகோன்விண்ணகர் எம்பெருமான் 247

சோறுடைய சோழீஸ்வரமுடையார் 358, 34:342

தக்ஷினாமூர்த்தி,திருமாலயன்,வாசலிரு பாலர் 144

தாவடிமோக விண்ணகர எம்பெருமான் 475

திடர்காமிகாம விண்ணகர் எம்பெருமான் 333

தியாகஞ்சதஈஸ்வரமுடையமுடையநாயனார் 192

திரு அக்னீஸ்வரத்து பரமேஸ்வரர் 87

திரு ஐந்தளி மகாதேவர் 40-41-213

திரு மேற்றளிமகாதேவர் 135, 34-238

திரு அகத்தீஸ்வரமுடையார் 199

திரு ஆனைக்காவுடையநாயனார் 170

திரு ஓடைபந்தல்மகாதேவர் 230

திரு குன்றக்குடி உடையநாயனார் 97

திருகோகர்ணத்துமஹாதேவர் 36

திருக்கடம்பர்நாயனார் 170

திருக்கற்றளி ஆழ்வார் 38

திருக்கற்றளி பெருமானடிகள் 81

திருக்கற்றளி வ்க்நேஸ்வர தேவர் 119

திருக்கற்றளிநாயகர் 118

திருக்காமக்கோட்ட நாச்சியார் 504

திருக்காமக்கோட்ட நாச்சியார் 34-213

திருக்காமக்கோட்ட முடையநாச்சியார் 597

திருக்காமக்கோட்டத்து பெரியநாச்சியார் 343

திருக்காமக்கோட்டமுடைய தம்பிராட்டியார் 294

திருக்காமக்கோட்டம் உடைய பெரிய நாச்சியார் 1908-196

திருக்குரம்பாண்ட நாயனார் 388,392,497,516, 579,1021

திருக்குரம்பூருடையார் 662

திருக்குன்றக்குடி உடையார் 353

திருக்குன்றக்குடி நாயனார் 175

திருக்குன்றக்குடி மகாதெவர் 177

திருக்குன்றக்குடி மகாதேவர் 227

திருக்குன்றக்குடிஉடையநாயனார் 559

திருக்குன்றக்குடிதேவர் 8

திருக்குன்றமுடையார் 215

திருக்கொடுங்குன்றமுடைய நாயனார் 394

திருக்கோகர்ணத்துமகாதேவர் 39

திருச்சிற்றம்பலம் உடையார் 363

திருச்சிற்றம்பலம் உடையார் 390

திருச்சூல தேவர் 34-242

திருஞானசம்பந்தபிள்ளையார் விழா 282

திருஞானம் பெற்ற பிள்ளையார் 1908-216

திருத்தாந்தோன்றீஸ்வரம் 161

திருத்தாந்தோன்றீஸ்வரம் உடைய நாயனார் 127, 309, 612,1012,1013

திருத்தேந்தோன்றிஸ்வரம் 189,268

திருத்தேந்தோன்றிஸ்வரம் உடையார் 382

திருநலக்குன்ற மகாதேவர் 53

திருநலக்குன்றத்து பரமேஸ்வரர் 22,255

திருநலக்குன்றத்து பெருமானடிகள் 37,75

திருநலக்குன்றத்து மூலட்டானத்து பெருமானடிகள் 80, 32

திருநலக்குன்றம் உடைய நாயனார் 50.151,219,266, 285, 290, 291,301, 304, 367, 368, 374,375, 383, 384, 406, 486,506, 509, 543, 549 , 666, 1906-361

திருநலக்குன்றம்உடையமகாதேவர் 17-382

திருநாகீஸ்வரமுடையநாயனார் 193,194,288, 402,403,412,629,263, 496

திருநிலக்குன்றமுடைய மகாதேவர் 182

திருநிலக்குன்றமுடையார் 136

திருபூமீஸ்வரமுடைய நாயனார் 401,419,491,627

திருப்பழங்கரை உடையநாயனார் 330

திருப்பள்ளிமலை 41-42:210

திருப்பள்ளிமலை ஆழ்வார் 41-42:209

திருப்பள்ளியறை நாச்சியார் 164, 661, 34:217

திருப்பனங்காடுடையார் 476

திருப்புனல்வாசல் உடையநாயனார் 8-210

திருப்பூதீஸ்வரத்து உடையார்

திருப்பூதீஸ்வரத்து மகாதேவர் 33

திருப்பூமீஸ்வரம் உடையார் 342

திருப்பூவாலைகுடி உடைய நாயனார் 400,444

திருப்பெருமனாண்டார் நாயனார் 471

திருப்பெருமனாண்டார் 138,140,169

திருப்பெருமான் 56

திருமடிஸ்வரமுடைய நாயனார் 387

திருமணஞ்சேரி உடையநாயனார் 377, 688

திருமதீஸ்வரமுடையார் 133

திருமலக்கடம்பீஸ்வரர் 173

திருமலைக்கடம்பர்நாயனார் 271, 279, 280, 325

திருமலைக்கடம்பர் ஸ்ரீகோயில் தம்பிராட்டியார் 114

திருமலைக்கடம்பூர் உடைய மஹாதெவர் 113

திருமலைக்கடம்பூர் உடைய நாயனார் 531

திருமலைக்கடம்பூர் நாயனார் 200

திருமாங்கனீஸ்ரம் 498

திருமாங்கனீஸ்வர்முடையார் 399

திருமூலத்தானத்துப்பெருமாள் 64

திருமிலக்குன்றத்து பெருமானடிகள் 55, 67,17-348

திருமிழலை நாட்டீஸ்வரமுடைய நாயனார் 1002

திருமிழலைநாட்டு திருவிண்ணகரம் 372

திருமுக்கடம்பீஸ்வரம் 348

திருமுதுகுன்றமுடையநாயனார் 299, 379.536, 545, 379, 536, 545, 611, 1907-131, 1907-133

திருமூலத்தனத்துமகாதேவர் 238.

திருமூலத்தானத்துப் பெருமானடிகள் 29, 240, 31, 43, 46, 47, 52, 58, 62, 63, 66, 68, 69, 70, 74, 76, 78, 79,

திருமேற்கோயில் 281

திருமேற்றளி 366

திருமேற்றளிப்பெருமானடிகள் 34,57

திருமேற்றளிமகாதேவர் 77

திருமேற்றளிமகாதேவர் 88

திருமேற்றளிமகாதேவர் 19-432

திருமேனி 10

திருவகத்தீச்வரமுடையார் 754, 252

திருவகத்தீஸ்சுரம் 322

திருவகத்தீஸ்வரமுடைய நாயனார் 97, 259, 270, 276, 277, 292, 303, 305,306, 307, 308, 311, 313, 314, 315, 317, 320, 321, 328, 331, 332, 347, 357, 359, 396, 405, 411, 424, 465, 473, 502, 505, 507, 533, 539. 548, 552, 562, 563, 566, 571, 572, 589, 602, 608, 623, 630

திருவகத்தீஸ்வரமுடைய மகாதேவர் 205

திருவகத்தீஸ்வரமுடையமகாதேவர் 641

திருவகத்தீஸ்வரம் 126, 178, 262, 265, 267, 269, 286, 329

திருவகத்தீஸ்வரம் உடையார் 310, 34:204,318

திருவக்த்தீஸ்வர உடைய நாயனார் 260, 261

திருவக்னீஸ்வரத்து பரமேஸ்வரர் 26, 94, 95, 10

திருவக்னீஸ்வரமுடையநாயனார் 420

திருவக்னீஸ்வரமுடையார் 93

திருவக்னீஸ்வரம் 87, 93, 94, 95,109,254

திருவரங்குளமுடையநாயனார் 176. 365, 373, 378, 385, 429, 431, 487, 605, 606, 617, 34:296

திருவன்னி உடையார் சேத்திரபாலதேவர்

திருவன்னிஉடையார் 92

திருவாரூருடையார் 509

திருவிக்கிரம சோழீஸ்வரமுடைய மகாதேவர் 1904:367

திருவிடனிருடையார் 300

திருவிறையான்குடி திருவன்னி இனிதமர்ந்தருளிய திரிபுவனபதிக்கு மூலவிருத்தராகிய சண்டேஸ்வரதேவர் 96

திருவிறையான்குடி பரமேச்வரர் 88, 89

திருவிறையான்குடி மகாதேவர் 90, 98,117

திருவேங்கடமுடையார் 656
திருவேங்கைவாசல் உடைய நயினார் 34-241
திருவேங்கைவாசல் உடையார் வேங்கவந பெருமாள் 639, 34-243
திருவேங்கைவாசல் நாயனார் ஆதிசண்டேச்வரர் 34-242
திருவேங்கைவாசல் பெருமாள்கோயில், திருச்சூலதேவர் 599.34-237
திருவேங்கைவாயிலுடைய நாயனார் ஆதிசண்டேஸ்வரர் 275, 34-249
திருவேங்கைவாயிலுடையநாயனார் 480
திருவேங்கைவாயில் உடையார் 108 34-236
திருவேங்கைவாயில் சிவர் விளமர் மாதர்- பாடல் 34-236
திருவையாறுடையநாயனார் 224,526.34-212, 34-213
தில்லைகாளி 120
தில்லைவனம் உடையாள் மடம் 152
துடராண்டநாயனார் 495
தெங்கங்குடிஉடையார் தெங்ஞ்க நாயனார் 107
தேவபுத்திரன் மார்கண்டேயன்கற்றளி 40-41:112,114
தொழுக்குன்றத்து கடவுளந் திருநீலன் 7
நம: சிவாய 2
நமனக்குறிச்சி சொக்கர் சொக்கநாதசாமி சன்னதி 875, 34-220
நயினார் செங்கண்மாலீஸ்வரமுடைய நாயினார் 681,34-244
நரலோக வீரவிண்ணகரஆழ்வார் 633,634
நரலோக வீரவிண்ணகரம் 220
நாகீஸ்வரமுடையநாயனார் 283, 503
நாகீஸ்வரமுடையார் 223
நாகீஸ்வரம் 264
நாயனார் 34-230, 458
நாயனார்வீரராஜேந்திரசோளீச்வரமுடையநாயனார் 522, 34-232, 34-229
நீர்பழனி மகாதேவர் 30
படாரி அய்யப்பொழில் நாச்சியார் 134
பரம்பையூர் சோழகேரளீஸ்வரமுடையார் 121
பழங்கரை உடையநாயனார் 287
பழியிலீஸ்வரம் 19
புத்தாம்பூருடையார் திருவையாறுடை 661,34-217
புவனா/னதிபதி நாச்சியார் 1908:168 in

பெருஞ்சுனையூர் உடையார் சுனையிலாண்டநாயனார் 560

பெருந்துறை பிராட்டியுடைய பிராட்டியா 336,337

பெரும்புஞ்சைஉடையார்திருபெருமாள்நாயனார் 34-209

பொரன மலையாண்டனார் 470

பொலிஞ்சுநின்ற விண்ணகர எம்பெருமான்1020

பொன்னமராபதி பெருமாள் 278

மகாதேவர் 187

மகாதேவர் 222

மலைக்கடம்பர் மகாதேவர் 91

மலைக்கடம்பூர் தேவர் 86

மலையை தளியாககுடைந்து படாரர் பிரதிட்டை18,

மஹாதேவர்187, 202, 241, 1907-146, 1907-143, 13-156

மாதேவர் 36, 241,177

மிழலைக்காட்டீஸ்வரமுடையநயினார்1941-42-214

முக்கடம்பீஸ்வரமுடையநாயனார் 295

மூத்தபிள்ளையார்கோயில் 643

மூலத்தானத்துபெருமானடிகள் 45

மேலைநிலைமேன்னின்ற பிள்ளையார் கோயில் 482

மேனின்றநாயனார்1936-37-125

ராஜமஹேந்திர விண்ணகரஎம்பெருமான் 544

ராஜராஜீஸ்வரமுடையநாயனார்155, 344

ராஜராஜீஸ்வரம் 165

ராஜராஜேஸ்வரமுடையார் 153

ராஜேந்திரசோழீஸ்வரமுடையநாயனார் 150, 297.302, 312.404, 578,1906-6

ராஜேந்திரசோழீஸ்வரமுடையார் 131,132,147,1909-3,137,256, 1906-10

ராஜேந்திரசோழீஸ்வரம்உடைய மஹாதேவர் 1906-6

வடகைலயமுடையநாயனார் 197,351,354,356,395

வம்சோத்ஹரகணநாதர்கோயில் 34-197

வரகுணீஸ்வர்முடையார் 239, 345, 349, 541, 587, 598,

வளர்மதீஸ்வரமுடைய நாயனார் 296,413

வளர்மதீஸ்வரமுடையார் 204, 207, 208, 216,

வளர்மதீஸ்வரர் 154,160

வாசுகீஸ்வரமுடைய மகாதேவர் 231, 391

வாழவந்தீஸ்வரமுடையார்

விக்கிரமசோழீஸ்வரமுடையார் 190

விநாயகபிரதிஷ்டை 760

விருதராஜபயங்கர விண்ணகர்எம்பெருமான் 631

விஜயாலயசோழீஸ்வரமுடையார் 282

வீரராஜேந்திரசோளீச்வரமுடையனாயனார்

வீரராஜேந்திரசோளீச்வரமுடையனாயனார் 369.458, 522, 580

ஸ்ரீகயிலாயமுடையார் 492

ஸ்ரீகைலாசமுடையநாயனார் 158

ஸ்ரீகோகர்னத்துமஹாதேவர் 27

ஸ்ரீசேட்டாதேவி 510

ஸ்ரீவரமுடையநாயனார் 246

பின்னிணப்பு 2

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கிராம தேவதைகள் :

பேராசிரியர்கள் கே.வி. ராமன் மற்றும் ப சண்முகம் ஆகியோர் ஜப்பாளியப் பேராசிரியர் நொபுரு கராஷிமா பதிப்பித்துள்ள "Socio - cultural Change in Villages in Tiruchirappalli Dist" என்ற நூலில் எழுதியுள்ள ஒரு கட்டுரையில் இணைக்கப்பட்டுள்ள பட்டியல்.

சப்தமாதரின் பெயர்கள்

அணைச்சாயி

ஆசிராமவல்லிஅம்மன்

செம்பாயம்மன்

சித்தகண்ணிஆயி

சிவந்தழகிய அம்மன்

கனக பார்வதி

கோளாந்தாலம்மன்

குலுந்தாலம்மன்

மலைவளர்த்த அம்மன்

முப்பிலி ஆயி

நல்லசெல்லி அம்மன்

நத்த-ஆயி

பந்தாளம்மன்

பரிபூரணத்தம்மாள்

பட்டாளச்சி அம்மன்

பிள்ளை ஆளம்மன்

புலிகுத்தி அம்மன்

புலிவர்த்தினி அம்மன்

திருவாயி அம்மன்

உலகநாயகி அம்மன்

வனத்தாயி

வாக்குவாளம்மன்

கருப்பின் பெயர்கள்:

ஆலடியோன்

ஆலடி கருப்பு

அல்லூர் கருப்பசாமி

சந்தனக் கருப்பு

சங்கிலி கருப்பு

சப்பாணி கருப்பு

சாத்தமுத்து கருப்பு

கஞ்ச கருப்பு

கருப்பண்ண சாமி

காத்தான்

மலையாளி கருப்பு

மணியக்காரர் வீட்டார் கருப்பு

மாவடி கருப்பு

முத்து கருப்பண சாமி

நருவிலிகருப்பு

பதினெட்டாம்பகருப்பு

பனையடிக்கருப்பு

பனையடியான்

பிடாரி வாசல் கருப்பு

தேவாங்குடி கருப்பு

தோப்புக் கருப்பு

துரைக் கருப்பு

உப்பிலி கருப்பு

வண்ணாதுரை கருப்பு

வெள்ளை கருப்பு

வேட்டைக் கருப்பு

பெண் தெய்வங்கள்

ஆச்சியாயி அம்மன்

அங்கையம்மாள்

அங்காளம்மன்

அங்காள பரமேஸ்வரி

அங்காயி

ஆயிரவல்லி ஆயி

பவானி அம்மன்

சக்கரகாளி

செல்லாண்டியம்மன்

செல்லி அம்மன்

செல்லித்தாயி

துரௌபதி அம்மன்

துர்கா

எலமதிச்சியாயி

காளி

காமாட்சி

காத்தாயி

கோழிஅம்மன்

கொங்கணி அம்மன்

சுந்தராண்டி அம்மன்

தையநாயகி

திருமத்திரி அம்மன்

நல்ல ஆபி

நல்ல காத்தாயி

நங்கையாரம்மன்

பச்சைஆயி

படலாயி

பேச்சிஅம்மன்

பேச்சி ஆயி

பெத்தனாச்சி

பொக்காண்டி அம்மன்

பூங்காயி

ராஜாத்தி

ஆண் தெய்வங்கள்

போஜராஜன்

சாம்பான்

சண்டிவீரப்பன்

சன்னாசியார்

செல்லப்பெருமாள்

சேங்கப்பெருமாள்

சிங்கண்ணசாமி

சிண்ணன்

துரைசாமி

ஏழுமலைசாமி

இடும்பன்

இரட்டைமலையான்

கலிங்கன்

கம்பராயர்

கரைவண்டராயர்

காத்தவராயன்

மாமுண்டி

முத்துமணி

முனியப்பசாமி

முன்னாடன்

மூப்பனார்

முத்தையன்

நாகப்பர்

நாகப்பசாமி

நம்பியப்பசாமி

நீலமேகம்

பட்டவன்

பெரியண்ணசாமி

பெரியசாமி

போரடிபுத்தர்

பூங்குடிசாமி

ராஜப்ப ரிஷி

ராஜவைய்யன்

செங்கேந்தி ஆண்டவர்

சுந்தரபாண்டியன்

உத்தாண்டராயர்

வேம்படியான்

வேணுகோபாலன்

வீரமலையாண்டி

வீரபத்திரன்

பின்னிணைப்பு 3

நகரத்தார் குலதெய்வக் காளி கோயில்கள்

1. அங்காள பரமேஸ்வரியம்மன் திருக்கோயில், இளையாற்றங்குடி
2. அங்காள பரமேஸ்வரியம்மன் திருக்கோயில், தேக்காட்டூர்
3. அங்காள பரமேஸ்வரி திருக்கோயில், இராங்கியம்
4. அங்காள பரமேஸ்வரி திருக்கோயில், நாட்டரசன்கோட்டை
5. அடைக்கலங்காத்த அம்பாள் திருக்கோயில், விரையாச்சிலை
6. அடைக்கலங் காத்த அம்மன் திருக்கோயில், வாணியங்குடி
7. அழகியநாச்சி அம்மன் திருக்கோயில், பொன்னமராவதி.
8. அன்னபூரணியம்மன் திருக்கோயில், வெற்றியூர்.
9. முத்துப்பெரியநாயகி அம்மன் திருக்கோயில், தாழையூர்.
10. உய்யவந்தாள் (தனியம்மன்) திருக்கோயில், சாக்கோட்டை
11. கண்ணுடையநாயகி அம்மன் திருக்கோயில், நாட்டரசன்கோட்டை
12. கருமலை சாஸ்தா (காஞ்சிரங்குடிக் காளி) திருக்கோயில், கோனாபட்டு.
13. கிணற்றடிக் காளியம்மன் திருக்கோயில், கண்டவராயன்பட்டி.
14. கோட்ட நாச்சியார் திருக்கோயில், திருப்புத்தூர்.
15. தேனாட்சியம்மன் திருக்கோயில், சிராவயல் புதூர்.
16. பரநாச்சியம்மன் திருக்கோயில், கருங்குளம்.
17. புல்வாய்நாயகி அம்மன் திருக்கோயில், பாகனேரி
18. பெரியநாயகி அம்மன் திருக்கோயில், அம்மாபட்டி.
19. பொக்கிஷக்கோட்டைக் காளி திருக்கோயில், கீழக்கோட்டை.

20. மதுக்காரை நாச்சியம்மன் திருக்கோயில், சேவலூர்.

21. மாகாளி திருக்கோயில், உஞ்சனை.

22. முத்துமாரியம்மன் திருக்கோயில், கீரணிப்பட்டி.

23. வடக்குவாசல் செல்லாயி அம்மன் திருக்கோயில், எழுவன்கோட்டை.

24. வயல்நாச்சியம்மன் - பெரியநாயகி அம்மன் திருக்கோயில், வேலங்குடி

நன்றி: 'நகரத்தார் குலதெய்வங்கள்' எஸ்ஆர்எ- பூச்சரம்

பிரமதேயங்கள்- தோற்றம், வளர்ச்சி மற்றும் அவற்றின் தாக்கம்

பேரா. சு. இராசவேலு

சுருக்கம்

தமிழக வரலாற்றில் சங்க காலத்தின் சமூக கட்டமைப்பு மற்றும் சமயக் கொள்கை போன்றவை சங்க இலக்கியங்களில் விரவிக் காணப்படினும் அச்சமூக அமைப்பிலும் மொழி, எழுத்து மற்றும் அரசு நிருவாக முறைகளிலும் பல புதிய மாற்றங்கள் பல்லவர்களின் தமிழக வருகைக்குப் பின் நிகழ்ந்துள்ளதை கல்வெட்டுகள் பெரிதும் தெரிவிக்கின்றன. சங்க இலக்கியங்களில் கற்றறிந்த புலவர்கள் அரசுகளிடமிருந்து பரிசுகளையும் நிலக்கொடைகளையும் பெற்றதாகக் குறிப்புகள் உள்ளன. இப்புலவர்கள் சமூகத்தில் பல்வேறு சமூக அமைப்பைக் கொண்டவர்களாகவே இருந்தனர். அந்தணர்களுக்குக் நிலக்கொடை அளித்த சான்று பிற்கால இலக்கியமாக விளங்கும் பதிற்றுப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. செல்வக்கடுங்கோ வாழியாதன் என்னும் சேரமன்னன் ஒகந்தூர் என்னும் ஊரை அந்தணராகிய கபிலருக்கு கொடையாகஅளிக்கின்றார்.

'நன்றா' என்னும் குன்று ஏறி நின்று, தன் கண்ணிற் கண்ட நாடு எல்லாம் காட்டிக் கொடுத்தான் (ப.ப. 6ஆம் பத்து). இக்கொடைகள் யாவும் புலவரின் அறிவுத்திறமை கொண்டு அளிக்கப்பட்டதே அன்றி சமூக சமயத் தொடர்பான கொடையாகக் கருத இயலாது. இந்நிலை தமிழகத்தில் மூவேந்தர்களின் காலம் வரை அதாவது 300 வரை நிலவி இருந்தது.

பல்லவர் தமிழக வருகைக்குப் பின் சமூகத்திலும் சமயத்திலும் பெரும் மாற்றங்கள் நிகழ்ந்தன. வைதீகத்திற்குட்பட்ட சமயநிலையைப் போற்றிய பல்லவர்கள் அதனைப் பெரிதும் போற்றினர். தங்களது ஆட்சி நிலைக்கவும் எதிரிகளை வெல்லவும் தாங்கள் நலம் பெறவும் குலம் தழைக்கவும் அந்தணர்களுக்குத் தானம் அளித்துப் பெரிதும் போற்றினர். இதனால் பிராமண நிந்தையில் இருந்து தங்களைக் காத்துக் கொள்ள இயலும் எனவும் அரசர்கள் கருதினர். இவ்விதமான சிந்தனைகள் தமிழகத்தின் தென்பகுதியில் இருந்த பாண்டிய அரசுக்கும் பரவலாயிற்று. பல்லவர்களுக்கும் முன்பாகவே பிரமதேய ஊரினைக் கொடையாக அளித்த செய்தி பொ.ஆ.300 யைச் சார்ந்த பூலாங்குறிச்சிக் கல்வெட்டில் காணாப்படுகிறது. இதன் தாக்கம் தொடர்ந்து விஜயநகர காலம் வரை இருந்து படிப்படியாகக் குறைந்தது. நிலவுடைமை பெற்றவர்களாக வேதம் கற்ற அந்தணர்கள் விளங்கினர். தமிழ் சமூக கட்டமைப்பிலும் சமூகத்திலும் இம்மாற்றம் பெரும் பங்கை ஆற்றியது. இக்கட்டுரை பல்லவர் சோழர் கால பிரமதேயங்கள் குறித்தும் அவற்றின் தாக்கம் குறித்தும் பேசுகின்றது. கட்டுரையின் விரிவு கருதி இங்கு பல்லவர் மற்றும் சோழர்கால பிரமதேயங்கள் குறித்தே பேசப்படுகிறது.

முன்னுரை

சங்க கால மூவேந்தர்கள் மற்றும் குறுநில அரசர்களின் வீழ்ச்சிக்குப்பின் பொ.ஆ. 300 அளவில் தமிழகத்தில் நிலையான ஆட்சி இல்லாத நிலையில் அக்காலகட்டத்தைச் சார்ந்த பூலாங்குறிச்சி கல்வெட்டுகள் தமிழக வரலாற்றில் சிறப்பிடம் பெற்ற கல்வெட்டுகளாக விளங்குகின்றன. இக்கல்வெட்டே வரலாற்றின் தொடக்க காலத்தில் வெளியிடப்பட்ட நீளமான கல்வெட்டாகவும் வானியியல் அல்லது ஓரு குறிப்பிட்ட ஆண்டைக் குறிக்கும் கல்வெட்டாகவும் நிருவாக அமைப்பு அரசு நிலக்கொடை போன்றவற்றைத் தெரிவிக்கும் கல்வெட்டாகவும் விளங்குகிறது. இக்கல்வெட்டில் தான் முதன்முறையாக பிரமதாயம் குறித்த செய்தி காணப்படுகின்றது. தென் தமிழகத்தில் கிடைத்த கல்வெட்டாக இது காணப்படுவதுடன் அந்தணர்களுக்கு வழங்கப்படும் கொடையான நிலம் அல்லது ஊர் குறித்தும் பிரமதேய அமைப்பைக் குறிப்பிடும் கல்வெட்டாக விளங்குகிறது. இக்கல்வெட்டில் பிரமதாயக் கிழவர் என்னும் சொல் அந்தணர்கள் நில உரிமையை அனுபவிக்கும் உரிமையைப் பெற்றவர்களாக விளங்குகின்றனர். எனவே பாரத்வாஜ கோத்திரத்தைச் சார்ந்த பல்லவர்கள் தங்களை பிரம்ம-சத்திரியர்களாக அழைத்துக்கொண்டு வேதம் வல்ல அந்தணர்களை தமிழகத்தில் குடியேற்றம் செய்யத் தொடங்கினர். இக்கால கட்டத்தில் வட இந்திய சமய மரபுகள் தமிழகத்தில் ஊடுருவ ஆரம்பித்ததைத் தெரிவிப்பதாக இது அமைந்துள்ளது.

பிரமதேயங்கள் குறித்த ஆய்வுகள் பல்லவர்களை பற்றி மீனாட்சி அவர்களும்(மீனாட்சி:1938) சோழப்பேரரசைப் பற்றியும் விரிவாக (நீலகண்ட சாஸ்திரி,(சாஸ்திரி:1932) அவர்களும் தொடக்க காலத்தில் ஆய்வுகள் மேற்கொண்டனர். பிரமதேயங்கள் குறித்து பிற்காலத்தில் விரிவான ஆய்வுகளை நபுரூ கராஷிமா, (கராஷிமா:2000) ஸ்டெயின்,(பர்டன் ஸ்டெயின்:1980) சுப்பராயலு (சுப்பராயலு:2012), கேசவன் வேலுதாட் (கேசவன்:1978) போன்ற அறிஞர்களும் ஆய்வு மேற்கொண்டனர். சில ஆய்வுக்கட்டுரைகளும் பிரமதேயங்கள் குறித்து வெளிவந்துள்ளன. (சண்முகம், இராசவேலு 2001)

சங்க இலக்கியங்களில் அந்தணர்கள், பாப்பனர், ஐயர்,வேதியர் எனும் பெயர்கள் காணப்படுவதை கீழ் உள்ள பட்டியலின் வழி அறியலாம் தொல்காப்பியம் மற்றும் சங்க இலக்கியங்களில் மொத்தம் 80 இடங்களில் இவை குறிக்கப்பட்டுள்ளன.

பட்டியல்-1

பெயர்	தொல்காப்பியம்	சங்க இலக்கியம்	மொத்தம்
பார்ப்பனர்	6	21	27
அந்தணர்	5	40	45
ஐயர்	2	5	7
மொத்தம்			80

இத்தகு சூழலில் வட தமிழகத்தைப் பல்லவர்கள் காஞ்சிபுரத்தைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி செய்யத் தலைப்பட்டு வைதீகத்திற்கு உட்பட்ட சமயத்தை ஊக்கப்படுத்தியும் அந்தணர்களுக்கு சிறப்பிடம் அளித்தும் நிலக்கொடைகளை வழங்கி பிரமதேய ஊர்களைக் கொடையாக அளித்து சிறப்பிடம் அளிக்கத் தொடங்கினர். தொடக்க நிலையில் வேதம் வல்ல அந்தணர்களுக்குத் தனித்தனியாக நிலங்கள் பிரித்துக் கொடையாக அளித்து ஊக்கம் அளித்தனர்.பின்னர் ஊர் முழுவதையும் பிரமதேயங்களாக மாற்றி அவற்றின் மேலாண்மையை அந்தணர்களுக்கு வழங்கி அவ்வூர்களின் நிலவருவாயை நேரிடையாக அவர்கள் பெறுவதற்கு வழி வகை செய்தனர். அதுவரை தமிழகத்தில் மக்கள் வழக்கில் இல்லாத பிராகிருத மொழியையும் அதை எழுதுவதற்கான பல்லவ கிரந்தத்தையும் உருவாக்கித் தங்களது செப்பேடுகளிலும் கல்வெட்டுகளிலும் எழுதத் தொடங்கினர்.

அந்தணர்களுக்கு நிலக்கொடைகள் அல்லது பிரமதேயங்கள் உருவாக்குவதின் மூலம் தங்கள் வலிமையும் கீர்த்தியும் பெறமுடியும் என்ற கருத்தும் 'பிரம்ம அத்தை' செய்வதால் தங்களின் புகழ் மங்கிவிடும் எனவும் கருதினர். இத்தகைய தாக்கம் அடுத்து தமிழகத்தை ஆட்சி செய்த முற்காலப்பாண்டியர், சோழர், பிற்காலப் பாண்டியர், விஜயநகரப் பேரரசு காலம் வரை நீடித்தது. சமூக அமைப்பில் முக்கிய அங்கம் வகித்தக் கோயில்கள் மூலம் அந்தணர்கள் முக்கிய இடத்தைப் பெற்றனர்.

பல்லவர்களின் தொடக்ககால செப்பேடுகளில் குறிக்கப்பட்டுள்ள அந்தணர்களின் பெயர்களின் வழி அவர்களின் 1.கோத்திரம், 2.சூத்திரம், 3. அவர்களின் பூர்வீகம் (ஊர்) , 4.தன் பெயர், 5.அவர்கள் வேதக்கல்வித் தகுதி குறித்த செய்தி போன்றவை காணப்படும். அதற்கு ஏற்ப அவர்களுக்கு நிலங்கள் கொடையாகப் பகிர்ந்தளிக்கப்பட்டன. இவர்களின் பெயர்களிலிருந்து இவர்கள் பெரும்பாலும் ஆந்திரப் பகுதியில் இருந்து தமிழகத்திற்குப் புலம் பெயர்ந்தவர்களாக அறிய முடிகிறது.

எடுத்துக்காட்டாக கீழ்கண்டவாறு இவர்களின் பெயர்கள் அமைந்துள்ளன. இவற்றின் மூலம் அவர்களின் பூர்வீக ஊர்களைப் பற்றி அறிய முடிகிறது. தண்டந்தோட்டம் செப்புப் பட்டயத்தில் குறிக்கப்பட்டுள்ள சில பெயர்கள் பின்வருமாறு

பட்டியல்-2

வ. எண்	கோத்திரம்	சூத்திரம்	ஊர்ப்பெயர்	தன்பெயர்	கல்வித் தகுதி
1	காசியப	ஆபஸ்தம்ப	கரஞ்சை	குமாரகோவன் சோமாசி	சதுர்வேதி
2	கௌதம	ப்ரவசன	குருகொட்டி	உருத்திரன்	சதுர்வேதி

3	ஆத்திரேய	ஆபஸ்தம்ப	ஆக்கி	தத்தசர்ம	சதுர்வேதி
4	அக்னிவேச்ய	ஆபஸ்தம்ப	விரிப்பறா	விஞ்சகுமார	சதுர்வேதி
5.	காசியப	ஆபஸ்தம்ப	குண்டூர்	சன்னய	சதுர்வேதி

பெரும்பாலும் பல்லவர் கல்வெட்டுகளில் குறிக்கப்பெறும் ஊர்கள் ஆந்திரப் பகுதிகளில் உள்ள ஊர்களாகும். இவற்றின் மூலம் பல்லவர்காலத்தில் பெரும்பான்மையான அந்தணர்களின் குடியேற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

பல்லவர் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் இவ்வகையில் 51 பிரமதேயங்கள் பொ.ஆ. 850 வரை உருவாக்கப்பட்டன. இதற்குப் பின் சோழர் ஆட்சி சோழமண்டலத்தில் ஏற்பட்ட பின் மிகப் பெரும் அளவில் பிரமதேய ஊர்கள் சோழர்களால் உருவாக்கப்பட்டன. பெரும்பாலும் பல்லவர் காலத்தில் நிலக்கொடை பெற்ற அந்தணர்களின் வழி வந்தவர்களே சோழர்காலத்திலும் சோழ நாட்டிற்குச் சென்று அங்கு பிரமதேய நிலங்களைப் பெற்றனர். வெள்ளான் வகை ஊர்கள் பிரமதேயங்களாக மாற்றம் பெற்றன. அவ்வகையில் உருவாக்கப்பட்ட ஊர்களின் வழக்கமான பெயர்கள், பெயர் மாற்றங்கள் பெற்றன. வழக்கமான ஊர்ப்பெயர்களுடன் ”ஆன” என்ற அடைமொழி பெற்று, மன்னர் அல்லது அவரது விருதுபெயர் அல்லது அரசிப் பெயர் ஆகியவற்றைக் கொண்டு சதுர்வேதி மங்களம் எனப் பின் ஒட்டைப் பெற்று இவ்வூர்கள் வழங்கப்பட்டன. பாண்டிய நாட்டிலும் இந்நடைமுறை பெரிதும் நிலவியது. இக்கட்டுரை தமிழகத்தில் காலந்தோறும் (பொ.ஆ.300 முதல் பிற்கால சோழர் முடிய) பிரமதேயங்கள் உருவாக்கம் மற்றும் அவற்றின் வளர்ச்சி, சமூக சமய அமைப்பில் ஏற்பட்ட தாக்கங்கள் குறித்து செப்பேடுகள்,கல்வெட்டு தரவுகளின் வழி விரிவாக ஆய்வு செய்கிறது.

சங்க இலக்கியங்களில் பார்ப்பனர், அந்தணர், ஐயர், வேதியர் எனக் குறிக்கப்படுபவர்களில் வேதங்கள் அறிந்தவர் பற்றிய குறிப்பு மிகக் குறைந்த அளவிலேயே உள்ளது. தொல்காப்பியத்தியத்தில் வேதங்களை அறிந்த வேதியர் பற்றிய குறிப்பு காணப்படவில்லை. சங்க இலக்கியத்தில் ஒரு இடத்தில் மட்டுமே வேதியர் பற்றிய குறிப்பு உள்ளது. வைதீகத்திற்குட்பட்ட சமயச் சடங்குகள் பல்லவர் காலத்தில் தொடங்கின. வைதீகத்திற்குட்பட்ட சமயச் சடங்குகளை செய்வதற்கு வேதங்கள் அறிந்த அந்தணர்கள் தேவைப்பட்டனர். எனவே பெரும்பாலான அந்தணர்கள் பல்லவர் காலத்தில் ஆந்திரப் பகுதிகளில் இருந்து தமிழகத்தில் குடியமர்த்தப்பட்டனர். இத்தாக்கம் பாண்டிய நாட்டிலும் ஒரே காலகட்டத்தில் நிகழத் தொடங்கின. அவ்வாறு வந்தவர்களுக்கு தனிப்பட்ட நிலங்கள் அல்லது ஊர்களில் உள்ள நிலங்களின் விளைச்சலில் பெரும்பங்கு வழங்கப்பட்டது. அவ்வாறு அளிக்கப்பட்ட ஊர்களே பிரமதேயங்கள் எனப்பட்டன.

பல்லவர்கள் தாம் வெளியிட்டுள்ள பெரும்பாலான செப்பேடுகள் பிரமதேயங்கள் உருவாக்கப்பட்ட செய்திகளைக் குறிக்கின்றன. பல்லவர்கள்

தொடக்க காலத்தில் தனிப்பட்ட வகையில் அந்தணர்களுக்கு ஊரின் நிலத்தின் ஒரு பகுதியை மட்டுமே பங்குகள் இட்டு அளித்துள்ளனர். பின்னர் ஓர் ஊரையே பிரமதேயமாக மாற்றி அரசன் அல்லது அரசி அல்லது அரசில் முக்கிய அலுவலர்கள் அல்லது படைத்தலைவர்கள் ஆகியோரின் பெயர்கள் அல்லது பட்டப்பெயர்களில் அழைக்கத் தொடங்கினர். இருப்பினும் அவ்வூரின் பழம் பெயர்களைமாற்றாமல்அதனைமுன்பெயராகவைத்துஅழைக்கத்தொடங்கினர். ஏற்கனவே அவ்வூரில் வாழும் மக்கள் தாங்கள் அனுபவித்து வந்த நில உரிமையை எவ்வித எதிர்ப்பும் இன்றி அளிக்க இவ்விதமாக அவ்வூரின் பெயர்களை மாற்றாமல் புதிய பெயர்கள் வைத்திருக்கவேண்டும். எடுத்துக்காட்டாக ஊரின் பழைய பெயர் பையூர் (ஆன) சிம்மவிஷ்ணு சதுர்வேதி மங்கலம் எனப் புதிய பெயர் அமைந்தது. அவ்வகையில் தமிழகத்தில் படிப்படியாக பிரமதேயங்கள் உருவாக்கப்பட்டன. மக்கள் மனதில் அந்தணர்களுக்கு உதவுவதும் தானம் அளிப்பதும் தங்களை வளப்படுத்தும் அல்லது எவ்வித தீயவைகளும் தங்களை அணுகாது அல்லது நிந்தனை ஏற்படுவது தவிர்க்கப்படும் (பிரம்மஹத்தை) என்ற மனப்பாங்கை உருவாக்கினர்.

முதன் முதலில் பல்லவர்களின் எல்லைப்பகுதியில் உருவாக்கப்பட்ட பிரமதேயங்கள் படிப்படியாக அவர்களின் தலைநகரமான காஞ்சியைச் சுற்றிலும் நீர்வளம் மிக்க ஆற்றுப் பகுதிகளிலும் வளமான நன்செய் நிலப்பகுதிகளிலும் உருவாக்கப்பட்டன. வயல்களுக்குத் தேவையான நீரை வழங்குவதற்கு ஆறுகளிலிருந்து வாய்க்கால்களும் ஏரிகளிலிருந்து நீர் செல்லும் வதிகளும் அரசால் ஏற்படுத்தப்பட்டன. வாய்க்கால்களிலிருந்து நிலங்களுக்கு நீர் பிரித்து செல்லப்படும் சிறிய வாய்க்கால்களே வதி எனப்பட்டன. வாய்க்கால்கள் கிழக்கு மேற்காகவும் அதிலிருந்து செல்லும் வாய்க்கால் வடக்கு தெற்காகவும் இருப்பதாக பேராசிரியர் சுப்பராயலு அவர்கள் குறிப்பிடுவார். (சுப்பராயலு, 2012, ப,60) வறட்சியான நீர்வளம் குறைந்த பகுதிகளில் இவற்றின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருந்தன. புதுக்கோட்டை மாவட்டத்தில் வரலாற்றுக் கோயில்கள் அதிக அளவில் இருந்தும் இப்பகுதியில் குறைந்த அளவு பிரமதேயங்களே காணப்படுகின்றன.(இராசவேலு, 2003)

பட்டியல்-3

பொ.ஆ.300 முதல் 900 முடிய (பல்லவர்)

வ. எண்	காலவரிசை	பிரமதேயம் எண்ணிக்கை
1	300-500	2 (சிற்றையூர் (சித்தூர் புதுக்கோட்டை தென்பகுதி மாவட்டம் பூலாங்குறிச்சி கல்வெட்டு) காஞ்சி வாயில் (வடபகுதி- தொண்டைமண்டலம்)
2	501-600	0
3	601-700	3

வ. எண்	காலவரிசை	பிரமதேயம் எண்ணிக்கை
4	701-800	14
5	801-900	24
மொத்தம்		51

பல்லவர்களால் உருவாக்கப்பட்ட காஞ்சிவாயில் என்னும் ஊர் ஆந்திர கர்நாடக எல்லைகளின் புறப்பகுதியில் அமைந்திருந்தது. இன்றைய வாணியம்பாடி மாவட்டத்தில் பேரணாம்பட்டு அருகிலுள்ள உதயேந்திரம் என்னும் ஊருக்கு அருகில் காஞ்சிவாயில் அமைந்துள்ளது. பல்லவ நாட்டின் எல்லைப்புற வாயில் என்ற பொருளில் இவ்வூர் அமைந்திருந்தது. முதலாம் நந்திவர்மன் காலத்தில் பொ.ஆ.469 ஆம் ஆண்டு அவனது படைத்தளபதி உதயசந்திரவர்மனின் வேண்டுகோளை ஏற்று காஞ்சி துவாரம் எனப்பட்ட காஞ்சிவாயில் பகுதியில் 4 கூறு நிலம் அந்தணர்களுக்கு வழங்கி படைத்தளபதியின் பெயரால் உதயசந்திர மங்கலம் என்னும் பெயர் மாற்றம் செய்யப்பட்டு வழங்கப்பட்டது. பிரமதேயங்கள் பொதுவாக மங்கலம், சதுர்வேதி மங்கலம், நல்லூர் என்னும் பின்னொட்டைப் பெற்று விளங்கின. இவற்றை சபை, பெருங்குறிசபை, ஆளுங்கணம் போன்ற உள்ளூர் அமைப்புகள் நிர்வாகம் செய்தன. இவை பெரும்பாலும் ஊர்களாக வேளாண் மக்களிடம் இருந்து நிலங்கள் மாற்றம் செய்யப்பட்ட அந்தணர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

தொடக்க காலத்தில் ஊர்களின் பெரும்பங்கு நிலங்கள் கூறுகளாகப் பிரிக்கப்பட்டு அந்தணர்கள் அனுபவிக்கும் வகையில் வழி வகை செய்யப்பட்டது. எடுத்துக்காட்டக உதயசந்திரமங்கலத்தில் 133 கூறுகளாக நிலங்கள் பிரிக்கப்பட்டன. இதே போன்று நயதீரமங்கலத்தில் இருந்த நிலங்கள் 132 கூறுகளாகப் பிரிக்கப்பட்டன. தொண்டைமண்டலத்தில் குடைவரைக் கலையை உருவாக்கி வடமொழியில் தனது பட்டங்களை வைத்துக்கொண்ட மகேந்திரவர்மன் காலத்திலும் அதன் பின் வந்த நரசிம்மவர்மன் காலத்திலும் பிரமதேயங்கள் உருவாக்கப்படவில்லை. வைதீக சமயத்திற்கான கோயில்கள் கடவுளர்களின் சிற்பங்கள் குடைவரைகளில் இடம்பெற்றன. எனினும் அந்தணர்களுக்கு நிலக்கொடை அளித்த செய்தியோ பிரமதேயங்கள் உருவாக்கப்பட்டதற்கான சான்றுகளோ கிடைக்கவில்லை.

படிப்படியாக நிலக்கூறுகளாக வழங்கப்பட்டவை மாற்றம் பெற்று ஓர் ஊரையே பிரமதேயமாக கொடுக்கப்பட்டதை பிற்காலக் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. அவ்வூரின் நில உரிமை உற்பத்தியின் பெரும் பங்கை அந்தணர்கள் பெறும் வகையில் பிரமதேயங்கள் உருவாக்கப்பட்டன. பல ஊர்களை ஒன்றிணைத்தும் பிரமதேயங்கள் உருவாக்கப்பட்டதைக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. இதன் மூலம் வேளாண்மை செய்வோர் மற்றும் பிறகுடிகளின் எதிர்ப்பைத் தொடக்க கால பல்லவர்கள் நிலங்களைக்

கூறிட்டுக் கொடையாக அளித்து ப பல்லவப் பேரரசு வலிமை பெற்ற ஆட்சியாக மாற்றம் பெற்ற பின் ஊரையே பிரமதேயமாக மாற்றியுள்ளமையைக் காணமுடிகிறது. இரண்டாம் நந்திவர்மன் காலத்தில் தான் அதிகமான பிரமதேயங்கள் உருவாக்கப்பட்டன.

மேலும் தானம் பெற்ற அந்தணர்களின் பெரும்பாலோர் ஆந்திரப் பகுதி ஊர்களில் இருந்து குடியேற்றப்பட்டவர்களாகவே அவர்களின் பெயர்களின் வழி அறிய முடிகிறது. மேலும் இவர்களின் கோத்திரம், சூத்திரம் ஆகியவையும் குறிக்கப்பட்டுள்ளன. பல்லவர்கள் தங்களை பாரத்வாஜ கோத்திரத்தைச் சார்ந்தவர் எனக்குறிப்பிடுகின்றனர். ஆந்திரப்பகுதியில் இருந்து தமிழகத்தின் காஞ்சியைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி செய்யப்பட்ட காலம் முதல் பிரமதேயங்களில் பெரும்பாலும் ஆந்திரப்பகுதியில் இருந்து வந்த வேதங்கள் அறிந்த அந்தணர்களையே ஊக்குவித்து பிரமதேயங்களை உருவாக்கினர்.

அவ்வகையில் அவர்களின் கோத்திரமான பாரத்வாஜ கோத்திரத்தார்க்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. ஏறக்குறைய கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் 45 கோத்திரங்கள் குறிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் பாரத்வாஜ கோத்திரத்தைச் சார்ந்த குடும்பம் 95 ஆகும். இதற்கு அடுத்த நிலையில் நிலம் பெற்றோர். காஸ்யப கோத்திரத்தைச் சார்ந்த குடும்பங்கள் ஆகும் இவர்கள் 53 குடும்பங்களாகும். அதற்கு அடுத்த நிலையில் விஷ்ணுவர்த்த கோத்திரம் 41 குடும்பங்கள் இவ்வாறு பல குடும்பங்கள் ஆந்திரப் பகுதியிலிருந்து தமிழகத்திற்குக் குடிமாற்றம் செய்ததை அறிய முடிகிறது.

ஆந்திராவின் காராம்பிச்சேடு என்னும் ஊரிலிருந்து மட்டுமே 35 குடும்பங்கள் தமிழகத்திற்கு குடி பெயர்ந்துள்ளன. குண்டூர், காராஞ்சி, குறவரிசி, படாகம், ஆபித்தி, செறுபள்ளி, வங்கிப்பறு, வெங்கி, கங்கபுரம், உதும்பூர், வேள்வெட்டி, புத்தூர், பட்டாங்கி, ஓங்கலூர், முடிபாரு, கொருகொட்டி, நெல்லூர் போன்ற ஊர்கள் இவற்றுள் குறிப்பிடத்தக்கவை, ஆந்திரப் பகுதியின் 88 ஊர்களிலிருந்து இவர்கள் பல்லவர் காலத்தில் குடிபெயர்ந்துள்ளனர்.

பிரமதேயங்களுக்குத் தேவையான வசதிகள் அரசர்களாலும் நிருவாகத்தாலும் செய்து கொடுக்கப்பட்டன. அனைத்து வகையான உரிமைகளையும் அவ்வூரில் பெறும் வண்ணம் சர்வமானியமாக அவை வழங்கப்பட்டன. அரசுக்கும் கோயிலுக்கும் அளிக்கவேண்டிய வரி வருவாய் பல இறை இறுத்து வழங்கப்பட்டன. இதனை இறையிலியாக வழங்கப்பட்டது எனக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. இறையிலி பிரமதேயங்கள் அல்லது தேவதான ஊர்கள் அரசுக்கு அளிக்க வேண்டிய கட்டாய வரியான கடமை அல்லது இறையை முழுமையாக நீக்கினர் எனக் கருத இயலாது. அரசின் வருவாய் இறை மற்றும் கடமையிலிருந்தே பெறப்பட்டது. எனவே அவ்வகை வரிகளின் வருவாயை குறைந்த அளவு அரசுக்குச் செலுத்தி குறைக்கப்பட்ட பங்கு வரியை உயர்த்தி அந்தணர்களுக்கோ அல்லது கோயிலுக்கோ அளித்தனர்.

பிற வரி வகைகளில் இருந்து இத்தகைய பிரமதேயங்கள் விலக்கு பெற்றது. இரண்டாம் நந்திவர்மன் காலத்தில் வருவாய் வசூலிக்கின்ற நாடுகாப்பான் மற்றும் வியவன் இக்காலகட்டத்தில் இதனைத் தவறாமல் செலுத்துவர்களுக்கு இறைவனின் அருள் கிடைக்கும் என்ற வகையில் மாகேஸ்வர ரசைஷ என்றோ அல்லது வைஷ்ணவ ரசைஷ என்றோ அல்லது இது காத்தான் அடி என் தலை மேலன என்றோ குறிப்பிடும் வழக்கம் ஏற்பட்டது. இவ்வகை ஓம்படைக்கிளவிச் சொற்கள் மாற்றம் பெற்றதன் வழி சமூகத்தின் அமைப்பை எளிதாக அறியலாம். கடவுளின் அருள் கிடைக்கும் எனத் தொடங்கப்பட்ட இச்சொற்றோடர்களில் பின்னர் அச்சப்படுத்தும் வகையான சொற்களும் பழி சொற்களும் படிப்படியாகத் தோன்றத் தொடங்கின.

கொடை எவ்வாறேனும் காக்கப்படவேண்டும் என்பதற்காக இவ்வகை ஓம்படைக்கிளவிச் சொற்களும் மாற்றம் பெற்றன எனக் கருதலாம். மேலும் கொடை அளிக்கப்பட்ட பின் அவற்றை மீண்டும் அபகரிக்கவோ அவற்றின் வருவாயைக் குறைத்து வழங்கவோ அல்லது தங்களுக்கே மாற்றிக் கொள்ளவோ முனைவர் என்பதற்காக அச்சம் கொள்ளத்தக்க சொற்றோடர்கள் கல்வெட்டுகளில் இடம் பெற்றுள்ளன புண்ணியம் உண்டாகட்டும் என்ற வகையில் தொடக்க காலத்தில் வழங்கப்பட்ட ஓம்படைக்கிளவி சொற்கள் மாறி கங்கை இடை குமரி இடை செய்த பாவம், கங்கை கரையில் காராம் பசுவை கொன்ற பாவத்தில் போகக் கடவர் எனவும் தன் மணாளனைத் தானே கொன்ற பாவத்திற்குப் போகக்கடவர் என்றும் மனைவி பிறருடன் தொடர்பு கொள்வாள் அல்லது ஓடிவிடுவாள் என்ற அச்சம் தரத்தக்க வகையிலும் சொற்கள் பிற்காலக் கல்வெட்டுகளில் மலிந்தும் காணப்படுகின்றன.

சோழ மண்டலத்தில் பிரமதேயங்களின் எண்ணிக்கை சோழர் காலத்தில் மிக உயர்ந்தது. மேலும் அந்தணர்களின் பெயர்களை ஆய்வு செய்யும் பொழுது பல்லவர் காலத்தில் தொண்டைமண்டலத்தில் வாழ்ந்த அந்தணர்களின் வழித்தோன்றல்களே இப்பகுதியிலும் குடியேறி கோயில்களில் பணியாற்றத் தொடங்கியுள்ளனர் என்பதை அறிய முடிகிறது.கீழ்கண்ட பட்டியல் சோழர் காலத்தை 5 பிரிவுகளாகப் பிரித்து பிரமதேயங்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுவதாக அமைகின்றது. ஆய்வு சுருக்கம் கருதி பேராசிரியர் கராஷிமா மற்றும் சுப்பராயலு அவர்கள் பின்பற்றியுள்ள காலப் பகுப்பு இங்கு கையாளப்படுகின்றது.

வ. எண்	காலப்பகுப்பு	அரசர்கள்	பிரமதேயம் எண்ணிக்கை
1	850-985	விஜயாலய சோழன் முதல்- உத்தமசோழன் காலம் முடிய	92
2	986-1070	முதலாம் இராஜராஜன் முதல் – அதிராஜேந்திரன் காலம் முடிய	236

வ. எண்	காலப்பகுப்பு	அரசர்கள்	பிரமதேயம் எண்ணிக்கை
3	1071-1178	முதலாம் குலோத்துங்கன் காலம் முதல்-இரண்டாம் இராஜாதிராஜன் காலம் முடிய	45
4	1179-1279	மூன்றாம் குலோத்துங்கன் காலம் முதல்-மூன்றாம் இராஜராஜன் காலம் முடிய	47
		மொத்தம்	420

மேற்குறித்த பட்டியலின் அடிப்படையில் சோழர்காலத்தில் பிரமதேயங்கள் பெருவளர்ச்சி அடைந்துள்ளதைக் காணமுடிகிறது. முதல் கால கட்டத்தில் 92 பிரமதேயங்களும் இரண்டாவது காலகட்டத்தில் 236 பிரமதேயங்களும் மூன்றாவது காலகட்டத்தில் 45 பிரமதேயங்களும் நான்காவதான சோழர்காலத்தின் இறுதியான காலகட்டத்தில் 47 பிரமதேயங்களும் தோன்றியுள்ளதை அறிய முடிகிறது. இப்பட்டியலின் மூலம் பிரமதேயங்களின் வளர்ச்சி முதலாம் இராஜராஜனின் காலத்தில் தான் அதிக அளவில் உருவாக்கப்பட்டுள்ளன. முதலாம் இராஜராஜன் மற்றும் முதலாம் இராஜேந்திரனின் ஆட்சிக்காலத்தில் சோழ சாம்ராஜ்ஜியம் திடமான வலிமை மிக்க அரசாக விளங்கியிருந்தமையும் பல்வேறு பகுதிகள் அவர்களின் நேரிடை ஆட்சிக்குட்பட்டு விளங்கியமையையும் வளநாடுகளாக நிருவாகப் பிரிவுகள் பிரிக்கப்பட்டு வேளாண்மைக்கு சிறப்பிடம் அளிக்கப்பட்டு நில வருவாயைப் வேளாண் உற்பத்தியைப் பெருக்கியமையாலும் அந்தணர்களுக்கு நிலங்கள் கொடையாகக் கொடுப்பது அதிகமானது. சமயத்தின் அடிப்படையில் ஆட்சி அமைக்கப்பட்டு கோயில்கள் கட்டப்பட்டமையாலும் அக்கோயில்களில் அந்தணர்கள் பணிக்கு அமர்த்தப்பட்டதுடன் வேதவிருத்திக்கும் வேதங்கள் அறிந்தோருக்கும் நிலங்கள் கொடையாக அளிக்கப்பட்டதாலும் பிரமதேயங்கள் அதிக அளவில் உருவாகக் காரணமாயின.

வெள்ளான் வகை நிலங்களின் வருவாய் அதிகம் செலுத்தவேண்டிய நிலை இருந்ததையும் சோழர்கால செப்பேடுகள் வழி அறியலாம். எடுத்துக்காட்டாக முதலாம் இராஜேந்திரன் காலத்தில் பழையனூர் திருவாலங்காடு தேவதானமாக அவ்வூரின் கோயிலுக்கு அளிக்கப்பட்டிருந்தது. இது பல்லவர் காலம் முதல் செயல்பட்டு வந்த தேவதான ஊராகும். இதனை பிரமதேயமாக மாற்றுவதற்கு முதலாம் இராஜேந்திர சோழன் காலத்தில் பல நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. தேவதானத்திலிருந்து நேரிடையாக பிரமதேயமாக மாற்றம் செய்யாமல் தேவதான நிலத்தை முதலில் வெள்ளான் வகை ஊராக மாற்றிப் பின்னரே பிரமதேயமாக அறிவிக்கின்றனர். அதாவது தேவதான நிலங்களுக்கு பல வரிகள் இறையிலியாக முன்பு வழங்கப்பட்டிருக்க வேண்டும். அதனை பிரமதேயமாக மாற்றும் பொழுது பிரமதேயம் குறைந்த அளவு அல்லது தேவதானத்திற்கு அளிக்கப்பட்ட வருவாயை மட்டுமே பெற முடியும் எனவே வெள்ளான் வகையாக மாற்றும் பொழுது பல வரிகள் அரசிற்குச்

செலுத்தவேண்டிய நிலை வேளாண் குடிகளுக்கு இருந்தது. எனவே வருவாயைக் கூட்டுவதற்கு அரசு இவ்வாறான நடவடிக்கையை எடுத்துள்ளது.

பொதுவாக பிரமதேயங்களில் பிற குடிகளும் வாழ்ந்து வருவர். இவர்கள் அரசுக்கு செலுத்த வேண்டிய வரியில் சில கூறுகளை பிரமதேய அந்தணர்களுக்கு அளிக்கவேண்டிய நிலை பிரமதேயங்களில் நிலவியது. பெயரளவுக்கு அவ்வூரில் வாழும் அந்தணர்களே நிலத்தின் உரிமையாளர்களாகக் கருதப்படுவர்.. வேளாண் மக்களும் உழுகுடிகளும் அந்தணர்களுக்கு செலுத்தவேண்டிய வருவாயைச் செலுத்துவர். அரசு எக்காரணம் இன்றியும் நிலத்தை அல்லது ஊரை தேவதானமாகவோ பள்ளிச்சந் தமாகவோ வெள்ளான்வகையாகவோ பிரமதேயமாகவோ முடிவு செய்து அறிவிக்கும் உரிமையை உடையது. அதே போன்று குற்றம் செய்தவர்கள் எவராயினும் நிலத்தை திரும்பப்பெறவும் அரசு உடமையாக்கவும் கோயிலுக்கு வழங்கவும் உரிமை உடையதாக அரசு விளங்கியது. இருப்பினும் பெரும்பாலும் பிரமதேயங்கள் மீண்டும் வெள்ளான் வகையாகவோ முழுமையான தேவதானமாகவோ மாற்றியதற்கான சான்றுகள் கிடைக்கவில்லை. கோயிலும் அந்தணர்களும் உரிமைகளைக் கொண்ட தேவதான பிரமதேயங்களும் கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டுள்ளன. நிலத்தை உழும் குடிகள் கோயிலுக்கும் அந்தணர்களுக்கும் உரிய பங்கை இதன் மூலம் அளிக்க வேண்டும். பிரமதேயங்களில் அந்தணர்கள் நிரம்பி இருந்த கிராம சபைகள் அவ்வூரின் அனைத்து வகையான நிருவாகத்தையும் கவனித்து வந்தன.

சோழமண்டலத்தில் முதலாம் இராஜராஜன் காலத்தில் பிரமதேயங்கள் மிகுந்த அளவில் புறங்கரம்பை நாட்டில் தான் காணப்படுகின்றன. இந்நாட்டின் 15 சதுர்வேதி மங்கலங்களில் 13 சதுர்வேதி மங்கலங்கள் இரண்டாவது கால கட்டத்தைச் சார்ந்தது. இரண்டு சதுர்வேதி மங்கலங்கள் மட்டுமே 4 வது காலகட்டத்தைச் சார்ந்தது. திருவாரூரின் தென்மேற்கில் புறங்கரம்பை நாடு இருந்துள்ளது. காவேரியின் கடைமடைப் பகுதியில் இச்சதுர்வேதிமங்கலங்கள் அமைந்திருந்தன. இதற்கு அடுத்தபடியாக அதிக அளவில் மயிலாடுதுறைப்பகுதியில் உள்ள திருவிந்தளூர் நாட்டில் 14 சதுர்வேதிமங்கலங்கள் காணப்படுகின்றன. இச்சதுர்வேதி மங்கலங்கள் 14 இல் 13 சதுர்வேதி மங்கலங்கள் இராஜராஜன் காலத்தவையாகும். ஒன்று மூன்றாம் காலகட்டத்தைச் சார்ந்ததாகும். இதனைத் தவிர முதலாம் இராஜாதிராஜன் தனது 33 ஆவது ஆட்சிக்காலத்தில் பல ஊர்களை இணைத்து சோழகுல சதுர்வேதி மங்கலம் என்ற பெயரில் 130 வேதம் விரித்துரைப்பதில் வல்ல சதுர்வேதி பட்டர்களுக்கு பிரம்மதேயமாக அளிக்கப்படுகிறது. இதே மன்னர் மேலும் சில பட்டர்களுக்கு நிலங்கள் வழங்க சில ஊர்களை தனது 35 ஆவது ஆட்சியாண்டில் மேற்குறித்த சதுர்வேதி மங்கலத்தோடு இணைக்கின்றார். இவ்வூர்களின் நிலங்களின் சில பகுதிகள் மட்டுமே பிரமதேய நிலங்களாக வழங்கப்பட்டுள்ளன. எனவே பிரமதேயங்களாக அவை அறிவிக்கப்பட்டாலும் அவ்வூரின் பிற நிலங்கள் மற்ற சமூகத்தினர் அனுபவிக்கும் நிலங்களாக

இருந்துள்ளன என்பதையும் இதன் மூலம் அறியலாம். எனவே ஊரின் நிலங்கள் ஒரு பகுதியாக விளங்கினும் இவையும் பிரமதேயமாகவே கருதப்பட்டது. இந்நாடும் காவேரியின் மேலைப்பகுதியில் உள்ளது. திருவிந்தளூர் நாட்டிற்கு வடக்கில் இருந்த குறுக்கைநாட்டிலும் 12 சதுர்வேதி மங்கலங்கள் இருந்துள்ளன. இவற்றுள் பெரும்பாலானவை 985க்கும் 1070 க்கும் உள்ள இடைப்பட்ட காலத்தில் தோற்றுவிக்கப்பட்டவை. இப்பகுதியின் முதல் கட்ட சதுர்வேதி மங்கலமாக முருகவேல் மங்கலம் இருந்துள்ளது. சம்புவராயர் பெயரில் ஆற்றூர் எனப்பட்ட இராஜநாராயணன் சதுர்வேதி மங்கலம் சோழப்பேரரசின் நான்காம் காலகட்டத்தில் தோற்றுவிக்கப்பட்டது இந்நாட்டில் தோற்றுவிக்கப்பட்டது.

பிரமதேயங்களாக மாற்றுவதற்கு அரச நிருவாகத்தின் பல அலுவலர்கள் முறையாகச் செயல்பட்டமையை செப்பேடுகள் குறிக்கின்றன. திருவிந்தளூர் செப்பேட்டில் அரசர் இட்ட ஆணையை அரசின் உயர் நிலை அலுவலர், ஓலைநாயகம், வரியிலிடச் சொல்லிய கருமம் ஆராய்வோர், நடுவிருக்கை அதிகாரிகள், விடையில் கருமம் ஆராய்வோர், நடுவுவரித் திணைக்களத்துக் கண்காணிகள், புரவுவரித் திணைக்கள அதிகாரிகள், வரிப்பொத்தக கணக்கு, முகவெட்டி, வரியிலீடு,பட்டோலை போன்றோர் பணியாற்றி உள்ளனர். நிலம் அளந்து பிடி சூழ்ந்து பிடாகை நடத்தி எல்லைக்கற்கள் நடுவதற்கு குறைந்தது ஓராண்டிற்கு மேல் ஆனதை திருவாலங்காடு செப்பேடு குறிப்பிடுகிறது. எனவே அரச ஆணை அவ்வூரின் கடை ஊழியருக்கும் சென்று முறைப்படி எல்லைத் தெரித்து தெரிவிக்க நீண்ட நாட்கள் அக்காலத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது என்பதை அறிய முடிகிறது.

பல்லவர் காலத்தில் ஆந்திராவில் இருந்து தமிழகத்திற்கு வந்த அந்தணர்கள் படிப்படியாக கோயில்களில் பணியாற்றவும் வேதங்களை ஓதவும் கல்விச் சாலைகளில் பணியாற்றவும் தமிழகத்தின் பிற பகுதிகளுக்கும் குடியேறியுள்ளனர். இவர்களின் குடியேற்றங்கள் எல்லைப்பகுதியில் முதலில் ஏற்படுத்தப்பட்டதற்கும் தங்களது நிலப்பகுதியை அந்நியரிடம் இருந்து காப்பதற்காக இக்குடியேற்றங்கள் முதலில் அங்கு ஏற்படுத்தப்பட்டிருக்கலாம். அந்நியர்களும் அந்தணர்களுக்குத் தீங்கு விளைவித்தால் தங்களுக்கும் நாட்டிற்கும் தீங்கு ஏற்படும் எனக் கருதி பிரமதேயம் வழியாக நாட்டில் நுழையத் தயங்குவர்.

சங்க காலத்திற்குப் பின் பல்லவர் காலம் தொடங்கி நிலவுடைமையாளர்களாக இருந்த வெள்ளான் குடிகள் பின் தள்ளப்பட்டு பிரமதேயங்களில் அந்தணர்களின் ஆதிக்கம் தலையெடுக்க ஆரம்பித்தனர். தங்களின் சபைகளில் நிலப் பரிவர்த்தனை மற்றும் நிலக்கொடை அளித்தல் ஊர்க்காரியங்களைச் செயலாக்குவதில் பெரும்பங்கை வகித்தனர். நிலத்தின் உரிமையாளர்கள் போன்று வாழ்ந்த வேளாண் மக்கள் உழுகுடிகளாக மாறுவதற்கும் பிரமதேயங்கள் உருவாக்கம் காரணமாக அமைந்தது. சமூகத்தில்

வேளாண் மக்கள் அதிக வரிகளையும் பிரமதேயங்கள் வரிகளில் இறையிலி பெற்றும் விளங்கியமையால் பொருளாதாரச் சமூக ஏற்றத் தாழ்வுகளும் உருவாகத் தொடங்கின. மொழி, எழுத்து ஆகியவற்றிலும் தமிழகத்தில் மாற்றங்கள் ஏற்பட்டன. வடமொழியும் அதற்கான கிரந்தமும் தோன்றி எழுத்துக் கலப்பும் மொழிக் கலப்பும் ஏற்பட்டன. கல்வெட்டுகளில் இக்கால கட்டத்திலிருந்து இதனை விரவிக் காணலாம். எனினும் பல்லவர் காலத்தில் பேரரசின் புறப்பகுதிகளில் வடமொழிப் பெயர்கள் தமிழ் வழக்கத்தில் மட்டுமே வழங்கப்பட்டது. புறப்பகுதிகளில் அரிதாகவே பிரமதேயங்கள் உருவானதும் வடமொழியை மக்கள் அதிக அளவில் போற்றவில்லை என்பதும் அரசனின் பெயர்கள் கூட தமிழ்படுத்தி எழுதப்பட்டதை நடுகற்களில் காணலாம்.. அரச விருதுகளையும் கீர்த்திகளையும் புராண வரலாற்றையும் மட்டுமே வடமொழியில் எழுதிய அரசுகள் கொடையளிக்கும் ஊரின் விவரங்கள் எல்லைகள் ஆகியவற்றைத் தமிழ்மொழியில் எழுதியுள்ளமையிலிருந்து மக்களின் வழக்கில் சமஸ்கிருதம் போற்றப்படவில்லை என்பதையும் அறிய முடிகிறது.எனினும் வழிபடு சமயத்தில் வைதீகம் பெரிதும் பரவத் தொடங்கியது. திணைக்கடவுள்கள் வைதீகத்திற்கான கடவுளர்களாக வழங்கப்பட்டனர். பிற்காலத்தில் பல ஊர்களும் கோயில்களும் கடவுளர்களின் பெயர்களும் வடமொழிப் பெயர்களாக உருமாற்றம் பெற்றன. அதுவரை தமிழ் சமூகம் கண்டிராத வர்னாசிரம சமூகமாக தமிழ்ஆ சமுகமும் மாற்றம் பெற்றது.

முகவெட்டி, வரியிலீடு,பட்டோலை போன்றோர் பணியாற்றி உள்ளனர். நிலம்அளந்து பிடிசூழ்ந்து பிடாகைநடத்தி எல்லைக்கற்கள்நடுவதற்குகுறைந்தது ஓராண்டிற்கு மேல் ஆனதை திருவாலங்காடு செப்பேடு குறிப்பிடுகிறது. எனவே அரச ஆணை அவ்வூரின் கடை ஊழியருக்கும் சென்று முறைப்படி எல்லைத் தெரித்து தெரிவிக்க நீண்ட நாட்கள் அக்காலத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது

நூற்பட்டியல்

Nilakanta Sastry, K.A, (1932) Studies in Cola History and Administration, University of Madras, Chennai, pp.73-175.

Minakshi., C, (1942) Administration and Social life under the Pallavas, University of Madras, Chennai, pp.156-157

Kesavan Veluthat, (1978) Brahman settlements in Kerala, Historical Studies, Sandhya Publications, Calicut, 1978

Burton Stein, (1980), Peasant State and Society in South India, Oxford, pp.141-172

Karashima, N. (1984) South Indian History and Society: Studies from Inscriptions, AD850-1800m Oxford

Shanmugam, P (2001) 'Brahmadeyas in the Pallava Country', in Kaveri, Professor Y.Subbarayalu Felicitation Vol.pp331-342

Rajavelu,S.(2001) 'Migration of Brahmins to Tamil Nadu under the Pallavas', in Kaveri, Professor Y.Subbarayalu Felicitation Vol.pp397-407

Subbarayalu. Y (2012) South India Under the Cholas, Oxford, pp.59-61

பல்லவர் செப்பேடுகள் முப்பது

சோழர் செப்பேடுகள்

திருவிந்தளூர்ச் செப்பேடு

பதிற்றுப்பத்து

தென்னிந்திய கல்வெட்டுகள் தொகுதிகள்

Land management and temple organisation in the Pūlāṅkuṟicci inscriptions

Valerie Gillet
EFEO, Paris
valerie.gillet@efeo.net

Abstract

This presentation will focus on the inscriptions of Pūlāṅkuṟicci. I will first analyze the setting up of a Brahmadeya and the management of lands and taxes related to this land donation. The use of a Tamil vocabulary concerning land-related matters points to a set of agricultural practices well rooted already in the 5th century in the Tamil tradition-if we accept this date for those inscriptions. It will be followed by the study of the record of the foundation of three religious monuments and the management of the lands given along with the foundation. I will show that some of the vocabulary used for various elements are derived from Sanskrit—in their tamilized form since Grantha seems not to have been invented yet—, perhaps following a route descending through Andhra Pradesh.

Introduction

In 1981, R. Nagaswamy announces the discovery of three inscriptions in Pūlāṅkuṟicci (10°16'42.35"N/ 78°34'57.58"E; located about 25 km as the crow flies to the south-west of Pudukkottai), made two years earlier by a Trichy District Archaeological Officer, Thiru D. Tulasiraman, during a survey of Epigraphs and Antiquities of the Tamil Nadu State Department of Archaeology.This "outstanding epigraphical discovery", as R. Nagaswamy presents it, will be the subject of a few short articles, and a few lines or pages in larger studies on the Tamil-speaking South. There are three inscriptions side by side, the middle one being too damaged to be legible. I have dealt elsewhere with this inscription in detail (Gillet 2026).Convinced by the various arguments ofK.V. Ramesh (1985: 4–5), Y. Subbarayalu (2001: 2; 2012: 29) and I. Mahadevan (2014: 248–250, chart 8), I follow them on the dating of those inscriptions and therefore consider that they reflect the state of the Tamil society in the 5th century CE. This century was hitherto thought to be a "Dark Period" but these inscriptions rather point to a period of profound societal transformation instead (Gillet 2014 and 2026).

Although the language is Tamil, the inscriptions are filled with Sanskrit terms. However, the script, which is a transitional form between Tamil-Brāhmī and Vaṭṭeḻuttu/

Tamil, never includes specific characters transcribing specific Sanskrit phonemes. The southern script for transcribing Sanskrit, that is the Grantha script, encountered for the first time in the inscriptions of the Pallava king Mahendravarman I at the end of the 6th century in the northern half of the Tamil country, and by the 7th probably in the Pāṇḍya inscriptions of the southern half, has not yet been invented. Consequently, all Sanskrit words are engraved in their tamilized form.

Engraved in a period of profound societal transformation of which we know little, they are the first inscriptions of this region to provide details regarding the organisation of the society revolving around temples, land rights and land management.

1. The left-side inscription and vocabulary related to landmanagement

I will begin with the left-side inscription which deals with a land donation. AVēḷ, commander of the great army, appears at the beginning of the record, and I therefore suppose that he may be the donor: he gave some lands to Brahmins, as a Brahmadeya. This would be the first occurrence of the word Brahmadeya, spelled in its Tamil form pirammatāyam, in an inscription of the Tamil-speaking South.

Brahmadeya

Let us examine the appearance of Brahmadeya in earlier inscriptions of surrounding regions. Kings—and queens—as well as their subordinates and ministers, often gave to religious institutions and individuals associated with them, strengthening an alliance between spiritual and mundane concerns which contributed to accruing merit for themselves and their family on the one hand, and legitimizing their actual power on the other. When Buddhism was a significant religion in the fabric of the society, kings and queens often granted shelters and lands to cover the expenses of the Buddhist communities, as in inscriptions found in at Nāsik and Kārle, Maharashtra. At the end of the Sātavāhana period, that is about the end of the 2nd century CE, we encounter a full-fledged donation of a Brahmadeya: in Maḷavaḷḷī, in the centre of the modern state of Karnataka, an epigraph engraved on a pillar records a grant of a village to a Brahmin as a Brahmadeya, for the enjoyment of the god Maḷapaḷi, by HāritīputraViṇhukaḍa Chuṭukulānanda Sātakarṇi, who is of the Mānavyagotra and king (rāja) of Vaijayantipura (Mirashi 1981: no. 35, 87–89). There is no distinction between the donation to the Brahmin and that to the god here, a distinction which will be effective later.

By the end of the 2nd century CE, the rapprochement between the conveyors of Brahmanical faith and those holding mundane political power had thus begun in the Deccan and perhaps in the Tamil-speaking South. This remains sporadic though until the advent in the south of the Andhra country of the Pallava dynasty at the end

of the 3rd century CE, whose kings no longer sponsor Buddhist communities but almost systematically donate to Brahmanical gods and Brahmins. Indeed, most of the donations made by the early Pallava kings do mention donations of lands to Brahmins along with exemptions, although they do not provide much detail about the latter, and it is often stated that the donation excludes lands previously given to a temple. By the 5th century, that is contemporaneous with the Pūlāṅkuṟicci inscriptions, we find the mention of temple lands excluded from the Brahmadeya donation (IP 5, 7, 8, 10, 11, etc.).

As Y. Subbarayalu (2012: 27) pointed out, the Pūlāṅkuṟicci inscriptions appear then to be the first occurrence in the southern part of the peninsula to record a donation of land to Brahmins, implying the creation of a brahmadeya, with brahmadeyakiḻavar, that is either a Brahmin at the head of the brahamadeya, if there were any, or a Brahmin who has a specific share in the brahmadeya, since kiḻaṉ originally meant "owner".

Tamil vocabulary for agriculture

If the principle of a donation of land to Brahmins by mundane power resembles the ones made by the Pallava kings, who probably themselves inherited a set of cultural practices from the Sātavāhanas and other smaller dynasties who rose in their wake, we notice that many terms related to land revenue here are Tamil, and not derived from Sanskrit as the term brahmadeya is. Although they appear for the first time here, they testify to a well-developed land-rights organization for which a local and diverse vocabulary was created and clearly in use in the 5th century: two different kinds of lands, dry and wet, corresponding to two different kinds of cultivation (puṉceynilam and nīrnilam), and all kinds of rights over the land (kiḻamai,mīyāṭci,kārāṇmai,mēllāṇmai,kalakiḻamai and kārānkiḻamai). Out of all these terms, mēllāṇmai, literally the "superior possession" only is a hapax; the others will continue to be used in later inscriptions. Kārāṇmai and mīyāṭci are two terms specifically associated in later inscriptions, both rights being mentioned when land is given. We find these terms in the first Pāṇḍya copper plates, that are the Iḷaiyaṉputtūr copper plates in the 7th century (Subbarayalu 2007), and the Vēḷvikuṭi (IEP 7) and the Śrīvaramaṅkalam (IEP 11) copper plates in the 8th century. I could not find these words in the corpus of inscriptions dated with Pallava kings' regnal years, except for one (IP 260) from the 8thcentury which is located inTirumeyyam, only 20 km from Pūlāṅkuṟicci. The localization of the first occurrences of these terms regarding rights over the lands and their produce point to a use more specifically circumscribed to the south of the Tamil country, and from at least the 5th century.

There is an enumeration of people, defined by their roles and duties, at the end of the description of the donation: servants (tamarai), tenants (kuṭikaḷ), the

Brahmadeya holders (pirammatāyamuṭaiyār), those protecting the nāṭu (nāṭukāppār), those protecting the donated lands (puṟaṅkāppār), those protecting the old village (muppūrukappār), and Tattamāṉ who keeps (ceytār) the righteousness (neṟi) of the moral duty (aṟañ). The terms, apart from pirammatāyam, are all Tamil. The word kuṭi has a long history: in the context of an inscription recording a land donation, it most probably refers to those who cultivate that land—or more precisely those who organise/supervise the cultivation, not the labourers themselves. It will be used in most Tamil inscriptions of the subsequent centuries. The nāṭukāppār may be the forerunners of the Nāṭṭār, the assembly protecting the nāṭu and assessing its taxes, found for the first time in the Pallava copper plates of Paḷḷaṉkōyil of the 6thcentury (Subramaniam 1959). The one who keeps (ceytār) the righteousness (neṟi) of the moral duty (aṟañ) is probably someone in charge of ensuring that the terms of the donation (aṟapuṟam) are respected, as proposed by Kasinathan (1983: 159). All these thus point to a society rather well structured in terms of taxes and land donations, which had developed a wide range of specific Tamil words corresponding to each element.

2. The right-side inscription and the establishment of templesalong with land endowments

In the right-side inscription, we are no longer in a context of land donation to Brahmins, but of the building of temples along with endowments of lands. Let us first consider the vocabulary used for the three temples which are constructed and the history of those words. The first two are called devakulam (tēvakulam), a Sanskrit term rarely employed in epigraphs of the Tamil-speaking South. It literally means "the abode (kulam) of the god (tēva)". It may, theoretically, refer to an abode for any god, although it could point more specifically to a "royal family shrine" (Fussman 1089). It appeared in the epigraphy of the Kuṣāṇa empire in the first centuries of our era, but it is not very clear whether it was meant for gods, kings or both. We find it in the corpus of the Ikṣvāku inscriptions in the second half of the 3rd century CE as noticed by Sethuraman (1983: 290). Two inscriptions record the foundation of a devakula: the great crown prince, great general HāritīputraŚrīVīrapuruṣadatta of the Ikṣvākus founded a devakula for the Bhagavant Puṣpabhadrasvāmin (EIAD 53); "for the victory and to increase the lifespan of the king, and for (the positive outcome) in this and in the other world for himself/themselves (the donors, namely: the wife of the chamberlain of the female apartments and the daughter of the Guild's Chief) had a temple and a platform made for the Bhagavant Noḍagīsarasāmi" (EIAD 56). We do not know who exactly these gods are, but they may have belonged to the Brahmanical pantheon.

In the wake of the Ikṣvāku inscriptions, we encounter other references to devalukas in the corpus of the early Pallava inscriptions which appear by the end of

the 3rd century CE, in the same area as the Ikṣvākus, and consequently draw upon the same cultural pool. The first Pallava inscription so far discovered was engraved on a pillar at Mañcikallu (EIAD 139). Because it is damaged, its meaning remains quite nebulous, but it is nevertheless clear that the Pallava Siṃhavarman donates different objects for the Lord Jīvaśivasāmi, probably Śiva, and that some repairs were made in the devakula of Kapa…, a god whose name is lost. This term continues to be found in inscriptions of the Early Pallavas, in the 4th century. The copper plates of Guṇapadeya record a donation of land by the Pallava queen Cārudevī to Bhagavant Nārāyaṇa of the devakula of Kūḷi-mahātaraka at Dālūra (EI 1, no. 1; IP 4). Another grant engraved on copper plates, which was assigned to the middle of the 5th century, that is more or less contemporaneous with our Tamil inscription, again uses the term devakula: the Pallava prince Viṣṇugopavarman is the donor of land for the enjoyment of the god (devabhogam) of the devakula of Viṣṇuhāra, made (kṛta) by the commander of the army (senāpati) Viṣṇuvarma in Kaṇḍukūra (lines 26–27 of the first side of the fourth plate. See IP 6; IA 5, no. XII, pp. 50–53). This grant presents a situation which is not far from the one we encounter at Pūlāṅkuṟicci, where a commander of the army builds a temple, and more particularly a devakula, recalling an even earlier situation at Nagarjunakoṇḍa.

All these references, although not always clear, may refer to a Brahmanical temple, perhaps somehow linked to a dynasty. If G. Vijayavenugopal (2016: 75–76) prefers to identify them with Jaina monuments—there are indeed references in which a devakula seems to be mentioned in a Jaina context —I would prefer to follow Kasinathan (1983: 161) and Y. Subbarayalu (2012: 35) who suggest that devakulam is a Brahmanical temple. Indeed, royal characters may have used this undertaking for cementing a social and political cohesion in their kingdom and giving to different religious communities does not appear as problematic. The word "temple", kōyil, exists in Tamil and the adoption of the Sanskrit word devakula in a Tamil inscription may have been "imported" from the cultural spheres of the Ikṣvākus and then the Pallavas, following a route descending from the 3rd century-Andhra country. I am aware of only one inscription in Tamil from the 6th century in which the term devakula refers to the shrine where it is engraved: in Vallam, in the northern part of the Tamil country, a military man Skandasena, servant of the king, founded a cave temple, a devakulam, probably dedicated to Śiva (IP 36). Even in the Sanskrit inscriptions of the Pallavas, the term devakula will no longer be used.

An entirely different vocabulary is used for the third monument constructed in Madurai, thus marking its difference from the first two: a sanctuary (kōṭṭamum) for the god Vāci ([vā]ci tēvaṉāru) inside the place/hermitage of the ascetics (tāpatappaḷḷiyuḷ).

It was unanimously identified with a Jaina monument by scholars who dealt with this inscription because of the specific word tāpatappaḷḷi. Indeed, paḷḷi has been associated with the Jaina religious community and was found in the earliest epigraphs of the Tamil country assigned to the first centuries before the common era. The Cilappatikāram, a Tamil text composed between the 2nd and the 7th centuries of our era, lists the different names used for a temple, while describing what the hero sees when entering the city of Madurai: for Śiva, a kōyil; for Viṣṇu, a niyamam; for Balarāma, a nakaram; for Murukaṉ, a kōṭṭam; for the ascetics who follow a path of virtue, a paḷḷi; for the king, a kōyil (14.7–12). This may not describe a fixed usage for the different terms according to the gods, but it does give an array of words employed to denote a shrine. The evocation of ascetics in a paḷḷi here reminds us of our tāpatappaḷḷi, also set in Madurai, although it is not clearly said to be Jaina. The word paḷḷiis specifically associated with Jaina circles in the Paḷḷaṉkōyil copper plates which record a donation of land specific to a Jaina community (paḷḷicantam) in the 6th century (Subramaniam 1959). In the 8th century, a donation was made to ascetics except to those who stay in the paḷḷi, where there was perhaps a kāmakkōṭṭam which was destroyed (IP 74). The word kōṭṭam, derived from the Sanskrit koṣṭha (an enclosed space), is associated with Murukaṉ in the Cilappatikāram, and even if it is indeed the case sometimes, it can be used for other deities; a shrine for Murukaṉ in a place for ascetics would also be surprising—although perhaps not impossible. Moreover, the name of the god which follows does not seem to refer to Murukaṉ or to one of his many names. Vācitēvaṉār was proposed, but the reading of the våremains doubtful. However, if its name is indeed Vācitēva, the interpretation unanimously proposed is that it stands for Vāsudeva, since Vācideva does not exist as such. Because it is located in a place that was probably associated with Jainas, they proposed to interpret Vāsudeva, otherwise known mainly to be a name of Kṛṣṇa, as the name of one of the classes of Jaina venerable persons (Desai 1957: 123).

Organizing the temple

The mention of the founding of the three monuments is followed by a description of the setting up of different functions regarding the temple organization and management, including of the lands which apparently came along with the foundation. That lands were given along with a foundation to support the expenses related to the running of the religious institution is a phenomenon encountered earlier, in a Buddhist context but also in a Brahmanical one. Indeed, if there are records which register only the foundation of a temple (see EIAD 50) or only a donation of land to a temple (see the Pallava grant of Queen Cārudevī, EI 1, no. 1; IP 4), there are some cases where both are mentioned (EIAD 53, EIAD 56). Once again in the south

of the Andhra country, contemporaneous with the Pūlāṅkuṟicci inscription, a Pallava grant registers a donation of land, with eighteen exemptions, by the Pallava king Viṣṇugopavarman to a temple (devakula) of Viṣṇuhāradeva which was constructed by the chief of the army (senāpati) Viṣṇuvarman (IP 6). The concerns that appear in the Pūlāṅkuṟicci inscription thus find an echo in contemporaneous inscriptions of the Pallavas: they seem to be symptomatic of a general process at work in this period, similarly spreading over the different parts of the southern peninsula. We notice though that they differ on the presentation of the king: while there is a long royal genealogy in the Pallava inscription, the Pūlāṅkuṟicci epigraph does not even mention the name of the dynasty—which, I believe, might be Pāṇḍya (Gillet 2026). What will become the norm by the 7th or 8th centuries in this region was apparently not yet established in this part of 5th-century Tamil country, and the mundane power responsible for issuing such an order did not yet seem very concerned with the extolling of its lineage and ancestors.

Following the foundation of monuments, the description of the setting up of the temple organisation and worship begins withthe group of warriors on elephants (attikōyattār): it is the Tamil rendering of the Sanskrit hastikośa, found in records of Pṛthivimūla kings between 400 and 600 CE, paired with vīrakośas for the protection of the grant (EIAD 185, 187). These attikōyattārs appear to be a single occurrence in the Tamil-speaking South, and I would then propose that it travelled to the South from the Andhra country, where this word was still in use in the 7th century (EI 19, no. 42, 254–258, Eastern Cāḷukya copper plates). Added to the attikōyattār protecting forces, we see two Tamil words: the uḷmaṉaiyār, literally "those of the inner (uḷ) dwelling (maṉai)", identified by Y. Subbarayalu (2012: 31) with palace guards, but which could in this case represent guards—or even priests?—attached to the sanctuary; and the nāṟpāltiṇaikaḷ, identified by the same with four kinds (nāṟpāl) of accountants (tiṇaikaḷ). Thus, a temple must receive protection from those guarding its outside, its inside, and its finances. After the setting up of those protective corps, comes the description of those who should perform worship and who seem to handle the revenues of the land endowment (aṟapuṟam): the accountants (pāṇṭaṅkarum), the servants (cēvukkarum), the Brahmaccāris (virummaccārikaḷḷun), the Dharmis (tarumikaḷum) and those who protect the village (ūrkāvalkoṇṭāru). Brahmacaris and Dharmi indicate we are in a Brahmanical context, and we are closer here to what will be found in later inscriptions of the Tamil country.

Finally, the last important clause of the record deals with those in charge of organising the cultivation of the temple land. There are two important points here. The first one is the use of the word kuṭumpiyar, a term which is not very often used in the Tamil-speaking South, but found rather commonly in the north and the Deccan,

especially between the 1st century BCE and the 6th century CE, denoting peasant householders centred around a family unit. It is striking that in a context of cultivation of Brahmadeya lands, kuṭi was used, while in this record concerning temple and temple lands, kuṭumpiyar was chosen. There is an additional element which is worth noting: it is clearly stated that the Lord (uṭaiyār) who slept in Kuḻalūr had placed the kuṭumpis previously, and that only their descendants should accomplish the duty of cultivation. Because the formula of a Lord who slept in a place, suggesting that a king died in a battle, is a formula found in the colophons of the Puṟaṉāṉūṟu (34–42; 55–57; 59; 173; 245), we may venture to consider the uṭaiyār of our inscription to be a king, perhaps a Pāṇḍya king if the CēntaṉKūṟṟaṉ of the beginning belongs to thisdynasty, as I suppose (Gillet 2026). Thus, the king himself would be the one appointing a specific family to attend to the lands given to the temple, and the cultivation of these temple lands would remain in their hands. This arrangement is sealed by a spoken order, reminding us of the later royal grants: "Saying (eṉṟu) 'Put (vaikka) this in writing (eḻuti)', he graciously granted (aruḷḷittāru)."

Conclusion

Both the legible inscriptions thus record two different statements: one concerning a land donation to Brahmins, the repartition of taxes and land revenues for these Brahmadeyas; another concerning the foundation of three monuments, the consequent settings for their protection and management, the management of the lands given to the. We see that these records introduce many Tamil terms regarding land revenues and taxes, suggesting that it was a locally well-developed practice by the 5th century, while Sanskrit vocabulary is readily used when it comes to the sphere of Brahmanical temples. I have been able to trace some of the words employed in these records to earlier epigraphs from the Andhra country, evincing one of the possible routes for the circulation and transmission of those concepts. If the Brahmanical lore was often thought to have been introduced by the Pallavas in the 6th century, these Pūlāṅkuṟicci inscriptions show that it begun much earlier than we had hitherto thought, perhaps following commercial channels.

Although their content differs, both the records end the same way: the decision registered here was first heard by three ulaviya-peruntiṇai. This term, made of words of Tamil origin, is a hapax and it is thus difficult to understand exactly what it refers to. Because peruntiṇai refers to an accountant, ulaviya-peruntiṇai may refer to a specific category of accountants, perhaps those keeping records of what taxes should be eventually collected, since they are called upon at the end of both the records. The first one, lord (kiḻāṉ) of Nallam, EyiṉaṉKumāṉ, is the same in both inscriptions, but the other two change. It is worth mentioning that the name Eyiṉaṉ is an old Tamil name, found from the time of the Puṟanāṉūṟu, and seems particularly in use in this

region of the South, anchoring further this inscriptions in a Tamil context. After the order was heard by these accountants, it was then probably written on palm-leaf (ōlai), before finally being copied onto the stone, engraving on a long-lasting material the details of a donation also meant to be long-lasting and seen by everyone passing by. This is a process which had been followed all over India since the time of Aśoka. The region of Pūlāṅkuṟicci thus also inherited this practice by at least the 5th century.

Abbreviations

IA = Indian Antiquary

EI = Epigraphia Indica

EIAD = Early inscriptions of Andhra Deśa = http://hisoma.huma-num.fr/exist/apps/EIAD/works/

IEP = Inscriptions of the Early Pāṇḍyas (see K.G. Krishnan 2002)

IP = Inscriptions of the Pallavas (see T.V. Mahalingam 1988)

SII = South Indian Inscriptions

TL = Tamil Lexicon

Bibliography

Bakker, Hans. 2007. Monuments to the Dead in Ancient North India. Indo-Iranian Journal 50.1: 11–47.

Chakravarti, Ranabir. 1996. Kutumbikas of Early India. InVijay Kumar Thakur and Ashok Aounshuman (eds.),Peasants in Indian History I, Theoretical Issues and Structural Enquiries (Essays in Memory of Professor Radhakrishna Chaudary). Patna: Society for Peasant Studies / New Delhi: Janaki Prakashan, pp. 179–198.

Desai, P.B.1957.Jainism in South India and Some Jaina Epigraphs. Sholapur: GulabchandHirachand Doshi, Jaina SaṁskrtiSaṁrakshaka Sangha.

Epigraphia Indica, 42 volumes (1892–1992), Calcutta / New Delhi: Archaeological Survey of India. [EI]

Folk, Michelle. 2013.Ascetics, Devotees, Disciples, and Lords of the maṭam: Monasteries in Medieval Tamilnadu.PhD dissertation, Concordia University.

Francis, Emmanuel.2025. Between Two Rivers: Śālaṅkāyana Charters (EIAD 159–68, ca 300–450 CE). In Griffith, A., Shimada, A. & Tournier, V. (eds.), Early Āndhradeśa: Historical Studies around the Epigraphic Corpus, Brill (Gonda Indological Studies, vol. 25.2), Leiden, pp. 334–376. DOI: https://doi.org/10.1163/9789004744097_016

Furui, Ryosuke. 2020.Land and Society in Early South Asia. Eastern India 400–1250 AD. London/New York: Routledge.

Fussman, Gérard. 1989. The Māṭdevakula: A New Approach to its understanding. In Doris Meth Srinivasan (ed.),Mathurā. The Cultural Heritage. New Delhi: American Institute of Indian Studies, pp. 193–199.

Gillet, Valérie.2014. The Dark Period: Myth or Reality?.The Indian Economic and Social History Review 51.3: 283–302.

Gillet, Valérie.2025. Mahāsena, from Āndhradeśa to the Tamil Country: The Descent of a God. In Griffith, A., Shimada, A. & Tournier, V. (eds.), Early Āndhradeśa: Historical Studies around the Epigraphic Corpus, Brill (Gonda Indological Studies, vol. 25.2), Leiden, pp. 592–628. DOI: https://doi.org/10.1163/9789004744097_016

Gillet, Valérie.2026. Insights into the Tamil-speaking South of the 5th century C.E.: the inscriptions of Pūlāṅkuṟicci. In Charlotte Schmid(ed.), SvastiŚrī.Pondichéry : École française d'Extrême-Orient/Institut Français de Pondichéry (Collection Indologie), pp. 149–194.

Gopal, B.R. 1985.Corpus of Kadamba Inscriptions.Sirsi: Kadamba Institute of Cultural Studies.

Kasinathan, Natana. 1983. Pulankuricci Inscription: A Relook.InR. Nagaswamy & A. Padmavati (eds.),Tolliyalkaruttaraṅku 2 (Seminar on Archaeology, Volume 2). Chennai: VaralāṟṟuPēravai, pp. 157–165.

Krishna Sastri, V.V. 1990. Three copper plate grants of Prithivi-Sri-Mularaja from Kondavidu.Journal of the Epigraphical Society of India 16: 71–83.

Krishnan, K.G. 1986. Date of Inscriptions from Pūlāṅkurichchi. In Gouriswar Bhattacharya (ed.),Deyadharma: Studies in Memory of Dr. D. C. Sircar. Delhi: Sri Satguru publications, pp. 235–237.

Krishnan, K.G. 2002.Inscriptions of the Early Pāṇḍya, c. 300 B.C. to 984 A.D. New Delhi: Indian Council and Historical Research Northern Book Center. [IEP]

Lüders, Heinrich. 1961.Mathurā Inscriptions, unpublished papers edited by Klaus L. Janert, Göttingen: Vandenhoeck& Ruprecht.

Mahadevan, Iravatham. 2003.Early Tamil Epigraphy from the earliest times to the sixth century A.D. Chennai: Cre-A and Harvard: The Department of Sanskrit and Indian Studies, Harvard University.

Mahadevan, Iravatham. 2014.Early Tamil Epigraphy from the earliest times to the sixth century A.D.,revised and enlarged second edition volume I, Tamil-Bhrāmī inscriptions, Chennai: Central Institute of Classical Tamil.

Mahalingam, T.V. 1988.Inscription of the Pallavas. NewDelhi: Indian Council of historical Research / Agam Prakashan. [IP]

Mirashi, Vasudev Vishnu. 1981.The History and Inscriptions of the Sātavāhanas and the Western Ksatrapas. Bombay: Maharashtra State Board for Literature and Culture.

Murugaiyan, Appasamy. 2015. Identifying Basic Constituent Order in Old Tamil: Issues in historical linguistics with Special Reference to Tamil Epigraphic texts (400–650 CE). International Journal of Dravidian Linguistics 44.2: 1–18.

Nagaswamy, R. 1981. An outstanding epigraphical Discovery in Tamilnadu. InM. Arunachalam (ed.),Proceedings of the fifth international Conference. Madurai – Tamil Nadu – India. January 1981, Volume 1, 67–71. Madras: International Association of Tamil Research.

Rajan, K., Yathees Kumar V.P., Muthukumar V., Pauldurai, G. 2023.Cultural Heritage of Tamil Nadu. Pudukkōṭṭai region. Chennai: Department of Archaeology, Government of Tamil Nadu.

Ramesh, K.V. 1985. Recent discoveries and research methods in the field of South Indian epigraphy.InN. Karashima(ed.),Indus Valley to Mekong Delta. Explorations in epigraphy. Madras: New Era Publications, pp. 1–32.

Ramesh, K.V. & Tiwari, S.P. 1990.A Copper-Plate Hoard of the Gupta Period from Bagh, Madhya Pradesh. New Delhi: Archaeological Survey of India.

Sankaranarayanan, S. 1977.The Viṣṇukuṇḍis and their times (And Epigraphical Study). Delhi: Agam Prakashan.

Sastri, K.A. Nilakantha. 1972 (1929).The Pāṇḍyan Kingdom, From the Earliest Times to the Sixteenth Century. Madras: Swathi Publications.

Sethuraman, N. 1983. Astronomical date of Pulankurichi inscription. InK.V. Raman (ed.),Śrīnidhiḥ, K. R. Srinivasan Festschrift. Madras: New Era Publications, pp. 285–291.

Sircar, D.C. 1966.Indian Epigraphical Glossary. Delhi: Motilal Barnasidass.

Skinner, Michael C. 2017.Marks of Empire: Extracting a Narrative from the Corpus of Kuṣāṇa Inscriptions. PhD dissertation, University of Washington.

South Indian Inscriptions (1890–), Madras / New Delhi: Archaeological Survey of India. [SII]

Subbarayalu, Y. 2001. The Pūlāṅgurichi Inscriptions. InS. Rajagopal (ed.),Kaveri. Studies in Epigraphy, Archaeology and History (Professor Y. Subbarayalu Felicitation Volume). Chennai: PanpattuVeliyiittakam, pp. 1–6.

Subbarayalu, Y. 2007. Pāṇṭiyaṉneṭumāṟaṉiṉiḷaiyāṉputtūrcceppēṭu.Āvaṇam 18: 1–15.

Subbarayalu, Y. 2012. The Social and Economic Milieu of the Pulangurichi Inscriptions. In Y. Subbarayalu(ed.),South India under the Cholas. New Delhi: Oxford University Press, pp. 27–37.

Subbarayalu, Y. & Raghava Varier, M.R. 1991.Pūlāṅkuṟiccikkalveṭṭukkaḷ.Āvaṇam 1: 57–69.

Subramaniam, T.N. 1959. Paḷḷaṉkōvil Jaina Copper-Plate Grant ofEarlyPallavaPeriod. TransactionsoftheArchaeological Society of South India 1958-1959: 41–83.

Veluthat, Kesavan. 2009. Into the 'Medieval' – and out of it.In Kesavan Veluthat(ed.),The Early Medieval in South India. New Delhi: Oxford University Press, pp. 19–60 [first published in Proceedings of the Indian History Congress, 58th Session, Bangalore, Aligarh: Indian History Congress, 1997, pp. 168–205].

Vijayavenugopal, G. 2016. Pulankurichchi – A Study. InT.S. Ravishankar & S. Swaminathan (eds.),Abhyudaya: Recent Researches in Epigraphy and Numismatics (Commemoration Volume in Honour of Dr. K.V. Ramesh). Delhi: Bharatiya Kala Prakashan, pp. 75–77.

---

i. Nagaswamy (1981) describes the epigraphs rather briefly and discusses their date and a few terms. Kasinathan (1983) publishes the text of the inscriptions for the first time, preceded by a short discussion. In 1991, Y. Subbarayalu and M.R. Raghava Varier revise the edition and propose a more elaborate discussion, although in Tamil and not accessible to the international community. Fortunately, Y. Subbarayalu (2001; 2012) publishes two rather similar papers, which comprise the translation of the inscriptions with a concise discussion. Other short articles dealt with these inscriptions: N. Sethuraman (1983), K.V. Ramesh (1985: 4–5), K.G. Krishnan (1986), G. Vijayavenugopal (2016) who proposes a somewhat different interpretation of these epigraphs, A. Murugaiyan (2015) who includes them in the linguistic analysis of ancient Tamil inscriptions. I will evoke the arguments of

each of them in the course of the discussion. Veluthat (2009: 47–48) provides a few words on what this inscription has changed regarding our knowledge of the transformation of the society in this period. I. Mahadevan (2003: 136, 169, 211) also rather often considers the shift the Pūlāṅkuṟicci inscriptions represent. K. Rajan et alii (2023) regularly include these inscriptions in the larger historical picture of the Tamil-speaking South.

ii. See, in the corpus of Sātavāhana inscriptions of the 2nd century CE, EI 8, no. 8, 71–73 and Mirashi (1981: no. 11, 23–28); EI 8, no. 8, 73–75 and Mirashi (1981: no. 13, 32–35); Mirashi (1981: no. 12, 28–31); Mirashi (1981: no. 18, 41–49); Mirashi (1981: no. 19, 49–55).

iii. Other dynasties of Andhra, such as the Śālaṅkāyana dynasty also give essentially to Brahmins in the 4th and 5th centuries CE (EIAD 159, EIAD 160, EIAD 161, EIAD 162, EIAD 163, Francis 2025). But other contemporary ones continued to support Buddhism, such as the Viṣṇukuṇḍins (EIAD 174, 175, 180, etc.).

iv. According to Y. Subbarayalu (2012: 34), kiḻamaiis the "possession right"; mīyāṭci is the "superior right of the king to collect taxes on land", although it is not clear; kārāṇmai is the "cultivator's right" (TL) equal to kārānkiḻamai; kalakiḻamai "may indicate the right of collecting one kalam per unit of land (as tax)"; mēllāṇmai may be equal to mīyāṭci. On the terms kārāṇmai and mīyāṭci, often associated, Nilakantha Sastri (1929: 78–79) says: "Since kārāṇmai seems etymologically connected with cultivation and mīyāṭci likewise with supervision and control, we may not be far wrong if we take the terms to indicate the rights of tenancy and landlordship respectively."

v. For Kasinathan (1983: 159), these are administrators of the grant.

vi. For the Kuṣāṇa inscriptions at Māṭ, see Lüders (1961: 131–147); Fussman (1989); Bakker (2007: 21–23). This term continues to be used, although not very frequently, and for Brahmanical deities. For example, it is found in some inscriptions of the Gupta and Kadamba empires, between the 4th and the 6th centuries CE. See Ramesh and Tiwari (1990: no. 10) for the Bāgh Charter of Bhuluṇḍa, year 56 of the Gupta Era (about 375 CE) which mentions a mātṛ-sthāna-devakula (line 4), and Gopal (1985: 159–163) for the Bennuru plates of the Kadamba Kṛṣṇavarman II referring to a devakula dedicated to Mahādeva (line 11).

vii. See, for example, an inscription at Mathura from 124/5 C.E. in Skinner (2017: 362); the Devagiri copper plates of the 3rd year of Kadamba king Mṛgeśavarman (Gopal 1985: 29–33). In fact, another ancient inscription mentions a devakula in the case of a Nāga cult temple, also related to Buddhism (Skinner 2017: 132, 151, 156, 299), suggesting perhaps that devakula was used in various religious contexts.

viii. The same remark was made by Sethuraman (1983: 287–289) concerning the word pakkam, that is the "bright or dark fortnight", a word of Sanskrit origin which was found in Sātavāhana and then Ikṣvāku inscriptions.

ix. See Mahadevan (2014: 164–168) for the list of the words in these early inscriptions related to Jainism, including paḷḷi. For a discussion on paḷḷi versus maṭam, see Folk (2013: 189–193).

x. G. Vijayavenugopal (2016: 76, footnote 8) mentions a tāpōtappaḷḷireferred to in Cīvakacintāmaṇi, a Jaina Tamil Epic from the 10th century.

xi. See for instance a Sātavāhana inscription of Nāsik (Mirashi 1981: no. 27, 71–75), or one of the earliest copper plates, that of the Ikṣvāku king Ehavalacāntamūla (EIAD 55).

xii. See Sircar (1966: 127) who thinks they designate a type of officer related to a district and in charge of elephants; Sankaranarayanan (1977: 132); Krishna Sastri (1990: 73).

xiii. The word kuṭumpi is found in an ancient inscription in a cave of Tirupparaṅkuṉṟam, near Madurai, and means here a family or a caste (Mahadevan 2014: no. 55, 465). We then find it, although rarely, in the 9th century, and it seems to be related indeed to some sort of families: see, for instance, IP 123, in Tiruvatikai, and SII 6, no. 12, in Centalai.

xiv. For a general study, through literature as well as epigraphy, of the term kuṭumpi, see Chakravarti (1996). For a study of this term in the corpus of the Gupta period in Bengal, where that dynasty represents an important force in land donation, see Furui (2020), and particularly pp. 46–67.

xv. It may prefigure, as Y. Subbarayalu (2012: 33) suggests, the kuṭinīkki/ kuṭiniṅkādevadānam of the post 9th century.

xvi I have also identified this route as a possible one for the circulation of the concept of the god Subrahmaṇya. See Gillet (2025).

xvii. In this sense, I agree with Nagaswamy (1981) who proposes to identify them with officers in charge of agricultural taxation, perhaps close to the samcarantas of the Prakrit charters of the Pallavas. Kasinathan (1983: 159) identifies them with transit revenue official. Y. Subbarayalu (2012: 32) thinks it refers to "distinguished tiṇai or accountant of Ulaviyaṉ" in which the latter is the king.

xviii. Vākai, i.e. Vaikai, seemed to belong to one Eyiṉaṉ in Puṟanāṉūṟu 351 (vaṇ kai eyiṉaṉvākai, line 6); In the Cilappatikāram, the Eyiṉaṉs appear as a tribe of hunters (canto 12); In the Pāṇḍya records, a MūrttiEyiṉaṉ was the great chieftain (peraraicaṉ) of Vīramaṅkalam in the Śrīvaramaṅgalam copper plates (IEP 11); in the Vēlvikuṭi copper plates, the same name appears (IEP 7).

இடைக்காலத் தமிழ்நாட்டில் நிலக்கிழார்களும் உழுகுடிகளும்

எ. சுப்பராயலு
கோயம்புத்தூர்.

சுருக்கம்

இக்கட்டுரையில் 10-16ஆம் நூற்றாண்டுகளில் தமிழ்நாட்டில் நிலவிய நிலவுடமை பற்றி ஆராயும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. பத்தாம் நூற்றாண்டு வரை நிலம் சமூக உடமையாக இருந்தது. இந்த நிலைமாறி அடுத்த இருநூற்றாண்டுகளில் தனி உடமை உருவாகிறது. இம்மாற்றத்தின் தன்மைகளையும் மாற்றத்திற்கான அடிப்படைக்காரணிகளையும் பகுத்து நோக்கும் முயற்சி செய்யப்படுகிறது. இந்த மாற்றங்களை சோழர்காலம் [10-13ஆம் நூற்றாண்டு], விஜயநகர அரசுக்காலம் [14-6ஆம் நூ] என்ற இரு காலநிலைகளில் ஆராயப்படுகிறது.

முன்னோடி வரலாற்று ஆசிரியர்களான நீலகண்ட சாஸ்திரி, அப்பாதுரை ஆகியோர் தொடங்கி சோழர்காலத்தின் வேளாண்கட்டமைப்பு பற்றி பல ஆய்வுகள் உள்ளன[1]. அந்த வகையில் இக்கட்டுரையின் நோக்கம் ஓரளவு ஏற்கெனவே தெரிந்த செய்திகளை மறு ஆய்வு என்றே கொள்ளவேண்டும். 11—13ஆம் நூற்றாண்டுகளில் வேளாண் சமூகத்தில் ஏற்றத் தாழ்வான படிநிலை இருந்தது என்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டாலும், அதில் எத்தனை அடுக்குகள் இருந்தன, அவற்றுக்குள் இருந்த உறவுகள் எத்தன்மையன என்பது பற்றி தெளிவில்லை. கிடைக்கும் கல்வெட்டுச் செய்தி முழுமையாக இல்லாததால் முரண்பாடான கருத்துக்கள் உலாவி வருகின்றன. அவரவர் கொண்டுள்ள சித்தாந்தக்கோட்பாடுகளும் இந்த முரண்பாட்டுக்குக் காரணமாகலாம்.

1980களில் நொபோரு கராஷிமாவின் ஆய்வு சோழர்கால நிலவுடைமை பற்றி ஒரு முக்கிய புரிதலை உண்டாக்கியது[2]. அவர், சோழர் ஆட்சியின் மையப்பகுதியில் அமைந்திருந்த பொதுவகை அதாவது வெள்ளான்வகை ஊர்களில் முதலில் கூட்டு நிலவுடைமையும் அதே காலகட்டத்தில் பிரமதேய ஊர்களில் தனியார் நிலவுடைமையும் நிலவியதை தெளிவுபடுத்தினார். பிரமதேய ஊர்களின் தாக்கத்தாலும் வேறு சில காரணிகளாலும் 11ஆம் நூற்றாண்டு தொடங்கி வெள்ளானூர்களிலும் கூட்டுடைமை சிதைந்து தனி உடைமை ஏற்படத் தொடங்கியது. போகப்போக 12—13ஆம் நூற்றாண்டுகளில் பெரிய நிலக்கிழார்கள் உருவாயினர். அவர்களில் சிலர் ஒன்றுக்கு மேற்பட்ட ஊர்களில் நிலஉரிமை கொண்டிருந்தனர். இயல்பாகவே, சோழர்காலத்தின் பிற்பாதியில் வேளாண்மக்களுக்குள் அழுத்தமான படிநிலைகள் உருவாகி வந்தன. இதனை ஆர். திருமலை மட்டும் தம் ஆய்வில் தெளிவாக நம்

கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளார்[3]. ஆயினும் அவற்றின் அடிப்படைக் காரணங்களை அவர் ஆராயவில்லை. பர்டன் ஸ்டைன் 1960களில் இருந்தே சோழர் காலத்தினை ஆய்ந்தார். சோழராட்சியின் மையப்பகுதியில் அதாவது காவிரி வடிநிலப் பகுதியில் இருந்த வேளாண்கட்டமைப்பு சிக்கலானது என்றும் நினைத்தார். ஆனால், கூறாக்கஅரசு என்ற தன் கோட்பாட்டிலேயே அதிகம் கவனம் செலுத்தியதால் வேளாண்கட்டமைப்பு பற்றி மேலும் ஆராயவில்லை[4].

ஆய்வுவசதிக்காக, சோழர்காலத்தை மூன்று உள்பிரிவுகளாகப் பிரிக்கலாம்: 1. முதல் இராஜராஜனுக்கு முந்தைய காலகட்டம், அதாவது 9—10 ஆம் நூற்றாண்டுகள். 2. பெருவேந்தர் காலமான 11ஆம் நூற்றாண்டு, 3. வீழ்ச்சிக்காலமான 12—13ஆம் நூற்றாண்டுகள். முதற் காலகட்டம் பற்றிய சான்றுகள், பெரும்பாலும் பிராமண ஊர்களின் சபை நடவடிக்கைகளிலிருந்தே கிடைக்கின்றன. சில நேரங்களில், வெள்ளான் வகை ஊர்களிலிருந்தும் சில துணுக்குச்செய்திகள் கிடைக்கின்றன. பிராமண ஊர்களின் நிலக்கிழார்கள் பிரமதேயகிழவர் என்று அழைக்கப்பட்டனர். பொதுவாக இப்பிராமணர்கள் வெவ்வேறு இடங்களில் இருந்து அழைத்து வரப்பட்டு புதிதாக உருவாக்கப்பட்ட ஊர்களில் குடியமர்த்தப்பட்டவர்கள். இவ்வூர்களை அரசர் உருவாக்கும் நேரத்தில், இவ்வூர் நிலங்களில் பிராமண நிலக்கிழாருக்கு, காராண்மை (உழும் உரிமை), மீயாட்சி (நிலக்கிழமை என்ற மேலுரிமை) ஆகிய இரு உரிமைகளும் வழங்கப்பட்டன. பிராமண நிலக்கிழார் (தர்மசாஸ்திரக் கோட்பாடுகளுக்கேற்ப) தாமே தம் நிலங்களில் உழுது பயிர்செய்வது இல்லை. ஆகவே அந்நிலங்களில் பயிரிடுவதற்காக உழுகுடிமக்களும் அமர்த்தப்பட்டனர். வெள்ளான்வகை ஊர்களில் நிலவுடைமையாளர் வெள்ளாளர் என்று அழைக்கப்பட்டனர். இங்கு உழுகுடிகளும் பெரும்பாலும் வெள்ளாளரே. இருவகைப்பட்ட ஊர்களிலும் நீர்ப்பாசன வாய்க்கால்களையும், குளங்களையும் காத்து நீர்ப்பாசனத்தை முறைப்படுத்த தலைவாய்ச்சான்றார் என்ற நீராண்மைக்குழுவினரும் அமர்த்தப்பட்டனர்[5]. இவ்வேலைகளுக்காக அவர்கள் வாழ்க்கைச் செலவுக்காக சில நிலங்கள் வெட்டப்பேறு என்ற பெயரில் வழங்கப்பட்டன[6]. பத்துப் பதினோராம் நூற்றாண்டுகளில் பிராமண ஊர்களிலும், வெள்ளான் ஊர்களிலும் சமூகத்தில் நில உடைமையாளருடன் பிறரும் அவரை அண்டி வசித்தனர். அவர்கள் கம்மாணர் அல்லது கைவினைஞர்கள், தென்னந்தோப்பு வளர்த்து கள் இறக்குபவர்கள், குயவர், துணி வெளுப்போர் போன்றோர். அவர்கள் தம் வேலைகளைச் செய்வதற்கு சிறியஅளவில் ஜீவித நிலங்கள் வழங்கப்பட்டன.

இந்தக் காலத்தில் சமூகப் படிநிலைக்கேற்ப, நிலக்கிழார், பறையர், கம்மாணர், ஈழவர், தலைவாயர், வண்ணார் ஆகியோருக்கு தனித்தனியான குடியிருப்புகள் இருந்தன என்பது தெரியவருகிறது. அதாவது சமூகத்தில் ஒருபிரிவினர் மற்றவரை விலக்கி வைக்கும் போக்கு (segregation) இருந்தது. ஒன்றிணைந்த மக்கள் கூட்டமாக அச்சமூகம் இல்லை. எல்லா ஊர்களிலும் மையப்பகுதியில் நிலவுடைமையாளர்களின் (பிராமண ஊர்களில்

பிராமணர்; பிற ஊர்களில் வெள்ளாளர்) குடியிருப்புகள் ஊர் நத்தம், ஊர் இருக்கை என்ற பெயரிலும், அவர்களை அண்டியிருந்த பிறர் (கைவினையர் அல்லது கம்மாணர், ஈழவர், பறையர், வண்ணார், இன்னோர்) தனித்தனி சேரிகளிலும் வாழ்ந்தனர்[7]. ஊரார், சபையார் என்ற ஊர் நிர்வாக மன்றங்கள் நிலவுடையுடைமையாளர்களையே குறித்தன. கைவினைஞர்கள், ஆயர்கள், பறையர், துணிவெளுப்போர் போன்றோர் நிலவுடைமையாளர்களை அண்டிப் பணி செய்தாலும் அவர்கள் ஊர் மன்றங்களில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. அவர்கள் நிலவுடைமையாளர்களுக்கு பணி செய்யும் மக்கள் என்றே அழைக்கப்பட்டனர். இப்பிளவுபட்ட சமூகமே பின் வந்த சாதிச்சமூகம் உருவானதற்கான முதல்கட்டம். சாதிச்சமூகம் 12—13ஆம் நூற்றாண்டுகளில் முதிர்ச்சி நிலையினை அடைந்தது.

கோயில்களுக்கு கொடையளிக்கப்பட்ட தேவதானம் என்ற ஊர்களிலும் மேற்சொன்னது போன்ற சமூகப் படிநிலை வளர்ந்ததைக் காணலாம். இது, ஒரு முழுஊராக இருக்கலாம், ஒரு ஊரின் பகுதியாகவும் இருக்கலாம். 10ஆம் நூற்றாண்டு வரை சில ஊர்களில் தேவதானமும் பிரமதேயமும் கலந்தேயிருந்தன. அவை பிராமண ஊர்கள் போன்றவையே. அங்கும் நிலத்தின் அடிப்படையில் சமூகப்படிநிலை தோன்றியது. நிலவுரிமைகள் பிராமணராலும் கோயில்களாலும் பகிரப்பட்டன. தொடக்கத்தில் தேவதான நிலங்களிலிருந்து அரசுக்குச் செல்லவேண்டிய முழுமையான வரியோ அல்லது அதில் ஒருபங்கோ கோயில்களுக்கு வழங்கப்பட்டன. அதன்படி தேவதானத்தின் நிலவுடைமையாளர்கள் அரசுக்குச் செலுத்த வேண்டிய வரிகளை கோயிலுக்கு செலுத்தினர். இதுபோன்ற தேவதானங்கள் குடிநீங்காத் தேவதானம் எனப்பட்டன. அதாவது அத்தேவதானங்களில் இருந்த பழைய நிலக்கிழார் நீக்கப்படவில்லை. நிறைய நிகழ்வுகளில் இந்நிலையினை ஊகித்து அறிய இயலும். இதற்கு நேர்மாறானது குடிநீக்கி தேவதானமாகும். அவற்றில் ஏற்கனவே இருந்த குடிகளை நீக்கி தேவதானம் உருவாக்கப்பட்டது என்று பொருள். இந்நிகழ்வில் உண்மையான நிலவுடைமையாளர் தங்கள் பரம்பரை உரிமைகளிலிருந்து நீக்கப்பட்டார். பதிலுக்கு அவருக்கு, விலை ஈடாகக் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். அதனால், அந்நிலம் கோயிலுக்கு உடைமையாகும். கோயில், அந்நிலங்களில் வேளாண்குடிகளை குத்தகைக்கு அமர்த்தி விளைவித்து வருமானம் பெறும். குடிநீக்கி தேவதானம் இன்னொருவகையில் கடவுளின் சொத்து என்ற பொருளில் திருநாமத்துக்காணி என்று குறிக்கப்பட்டது.

திருநாமத்துக்காணி எனும் கோயில் நிலக்கிழமை 11ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே வழக்கில் வந்தது. இக்காலகட்டத்தில் இருந்தே காணி எனும் சொல்லும் அடிக்கடி கல்வெட்டுகளில் இடம்பெறுகிறது. அது அக்காலத்து வேளாண் சமூகத்தின் கட்டமைப்பில் உருவான மாற்றத்தைச் சுட்டுகிறது எனலாம்[8]. சோழ அரசர்கள் மேலும் மேலும் தேவதானங்களை

உருவாக்குவதை ஊக்குவித்தனர். முன்பு செங்கற்களால் கட்டப்பட்டிருந்த கோயில்களை அரசகுடும்பத்தினைச் சேர்ந்தவர்கள் கற்கோயில்களாக மாற்றினர். மேட்டுக்குடி சமூகத்தினரும் பல புதிய கோயில்களைக் கட்டினர். அவற்றுக்குப் பணமும், பொருளும், நிலக்கொடைகளும் வழங்கினர். இதற்கு, முக்கிய எடுத்துக்காட்டு முதல் இராஜராஜனால் கட்டப்பட்ட தஞ்சாவூர்ப் பெரியகோயில். இக்கோயிலுக்கு காவிரி வடிநிலப்பகுதியில் பல ஊர்களில் இருந்து காணிக்கடன் என்ற முழுமையான நிலவரியினை வழங்கினார். இந்நிகழ்வில் நிலவரிமட்டுமே முக்கியத்துவம் பெற்றது. ஆனால், சில நிகழ்வுகளில் காராண்மை எனும் நிலத்தினை உழும் உரிமையும் கோயில்களுக்கு வழங்கப்பட்டது. இதனால், உண்மையில் கோயில் தெய்வங்கள் நிலவுடைமையாளர்களாயின. கோயில்கள் 12—13ஆம் நூற்றாண்டுகளில் வேறு வழிகளிலும் பெருமளவில் நிலத்தினைப் பெற்றன. இக்காலகட்டத்தில் பல சமயம் அரசு வரி நிலுவைக்கான நிலங்களைப் பறித்து அவற்றை பெருவிலை என்ற ஏலத்தில் விற்றது[9]. ஏலத்தில் விற்கப்பட்ட இந்நிலங்கள் பெரும்பாலும் உயரலுவலர்களால் வாங்கப்பட்டு கோயில்களின் வழிபாட்டுச் செலவிற்கு குடிநீங்கா தேவதானம் என்ற முறையில் கொடுக்கப்பட்டன.

பெருமளவிலான நிலங்கள் கோயில்களுக்குச் சொத்தானதால் அவற்றை அலுவலர்களும், செல்வாக்குள்ளவர்களும் தவறாகப் பயன்படுத்த வாய்ப்பேற்பட்டது. இந்நிலங்களைக் கொண்டு அரச அலுவலர்க்கு ஊதியத்துக்கு மாறாக ஜீவிதம் (அதாவது வாழ்க்கைச்செலவு) வழங்கியது இதற்கொரு காரணமாகலாம். அலுவலர் கோயில் நிலத்தை முறைகேடாகக் கையகப்படுத்தி அது அரசகட்டளையால் தமக்கு வழங்கப்பட்டது என்று சொல்லவும் தலைப்பட்டனர். இது போன்ற நேரங்களில் கோயில் பூசாரிகளும், உள்ளூர்மக்களும் எதிர்ப்பு தெரிவித்தனர் என்ற செய்திகளும் சில கல்வெட்டுகளில் பதிவாகியுள்ளன. வடார்க்காடு மாவட்டத்தில் தாமரைப்பாக்கம் எனுமிடத்திலுள்ள 1075 ஆண்டின் கல்வெட்டில் இதுபோன்ற குறிப்பு உள்ளது[10]. இங்கு ஒரு பிடாரர் (தேவாரம் பாடுபவர்) கோயில் நிலங்கள் அரசலுவலரால் முறைகேடாக துய்க்கப்படுவதை உள்ளூர்ப் பெருமக்களான பெரியநாட்டாருக்கு முறையிட அவர்கள் இனிமேல் அந்த முறைகேடு நடக்காதவாறு தாங்கள் பார்த்துக் கொள்வதாக உறுதியளித்தார்கள்.

அரசு வலிமையாக இருந்தவரை கோயில் நடப்புகளில் வெளியார் தலையீடு இல்லை. தொடர்ச்சியான போர்கள், படை விரிவாக்கம், அலுவலர்களின் கூடுதலான எண்ணிக்கை, அவர்களுக்கு வழங்கப்பட்ட நிலங்கள், படையாட்களுக்கு வழங்கப்பட்ட நில்வுரிமை (*படைப்பற்று, பரிக்கிரஹம், வீரபோகம்*) போன்றவையால் இப்போக்கு மாறியது. இவற்றால் கோயில்களில் வெளியார் தலையீடு அதிகரித்தது. பலரும் கோயில் நிலங்களை தங்களின் காணிநிலம் என்று உரிமைகோரினர். ஆட்சியாளர்கள் இதனைத்தடுக்கும் முயற்சிகளை எடுத்தனர். தஞ்சாவூர் மாவட்டத்தில் 1150—51இல் இரு

கல்வெட்டுகள் மேலே சொல்லப்பட்ட சிக்கல்களை விவரிக்கின்றன. முதற் கல்வெட்டில் அரசர் தேவதான ஊர்களுக்கு இட்ட கட்டளை பற்றியது. அவ்வூர்கள் அரசாணைகளாலோ அல்லது உள்ளூர் சபைகளாலோ வரிவிலக்கு பெற்றவை[11]. இவ்வாவணம் சில சிக்கலான செய்திகளைப் பேசுகிறது. அந்த அரசாணையின் சாரம்: எந்தக்கோயிலும் கொடையளிக்கப்பட்ட நிலத்தை பயிரிடாமல் வைத்துக் கொள்ளக் கூடாது என்றும் அவ்வாறு இருந்தால் அந்நிலங்களை நம்பிக்கையான நிலவுடைமையாளர் அல்லது பயிர் செய்பவரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும் உணர்த்தப்பட்டது. எனவே, அதுபோன்ற கோயில் நிலங்களை பொது ஏலத்தில் சில காணியாளர்களுக்கு விற்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால், ஒரு காணியாளருக்கு 3 வேலிக்கு மேல் நிலம் விற்கப்படவில்லை. அரசு சேவைக்காக நிலவுரிமை பெற்ற அலுவலர்களும் படையினரும் கோயில் நிலங்களை அபகரிப்பதில் ஈடுபட்டனர் என்ற செய்தியும் இக்கல்வெட்டில் பதியப்பட்டுள்ளது. இந்தக் காரணிகளால் தேவதான நிலங்கள் பல பயிரிடப்படாமல் தரிசாக இருந்ததன.

அடுத்த ஆண்டு இன்னோர் அரசகட்டளை இதே கருத்தினை கடுமையாக வலியுறுத்தியது[12].

> *இது இராஜகுலவருக்கு (வட்டாரத் தலைவர்களுக்கு) அரசின் எச்சரிக்கை. அதாவது, தேவதான நிலத்தில் காணியினை துணிந்து வாங்குபவருக்கும் இருவேலிக்கு மேல் காணி நிலத்தினை வாங்கும் குடிமக்களுக்குமான எச்சரிக்கை.*

இப்போக்கு அரசின் வலுவிழந்த தன்மையினைக் காட்டுகிறது. இது போன்று அடிக்கடி அரசின் தலையீட்டின் மூலம் ஓர் ஒழுங்கினை ஏற்படுத்தினாலும் அதனையும் மீறி வேளாண் நிலவுடைமையில் சிக்கல் ஆழமானது. இதுபற்றி 1174ஆம் ஆண்டில் இன்னொரு கீழப்பழுவூர் கல்வெட்டு வாயிலாக அறியலாம். அக்கல்வெட்டு இரண்டாம் இராஜாதிராஜன் காலத்தினைச் சார்ந்தது[13].

> இந்நிலப்பகுதியில் காணிஉரிமை எவரும் கோர இயலாது. இராஜகுலவராக இருந்தாலும், அவர் அந்நிலத்தினை 10ஆம் ஆண்டுக்கு முன்பு அரச ஏலத்தில் வாங்கியவர் என்று உரிமை கொண்டாடினாலும் இதுவே நிலையாகும். குடிநீக்கி தேவதானம், பள்ளிச்சந்தம் ஆகிய ஊர்களில் பழைய காணியாளர்களின் உரிமை மாற்றப்பட்டிருந்தால் அவர்களின் காணிஉரிமை மீட்டுக்கொடுக்கப்படவேண்டும்.

இருமாதங்களுக்குப்பின் பிறிதொரு அரசகட்டளை வெளியிடப்பட்டது. அதன்படி, வெவ்வேறு தரநிலையிலுள்ள நிலங்களுக்கு வரிகள் குறைக்கப்பட்டன. அந்நிலங்கள் படையினர் அனுபவத்திற்காக மாற்றித் தரப்பட்டிருந்தமையால் நெடுங்காலம் பயிர்விளைச்சல் இன்றி கிடந்தன. எனவே, அந்நிலங்களில் மீண்டும் பயிரிடும்வேலை தொடங்க இவ்வரிச்சலுகை தரப்பட்டது[14].

உழுது பயிரிடுவோர்

மேற்சொல்லப்பட்ட கல்வெட்டுச் சான்றுகள் வேளாண் சமூகத்தின் மேற்தட்டு மக்களையே அதிகமாகப் பேசுகின்றன. அதாவது, நிலத்தினை உடையவர்கள், அவற்றைக் கட்டுப்படுத்துபவர்கள் ஆன காணியாளர்களைப் பற்றியே பேசுகின்றன. இவர்கள் குத்தகைக்குடிகள் அல்லது உழுகுடிகள் மூலமே தங்கள் நிலங்களை பயிர்செய்ய முடியும். 12ஆம் நூற்றாண்டின் பின்பகுதியில் தான் உழவர்கள் பற்றிய செய்திகள் வெளிச்சத்திற்கு வருகின்றன். ஆயினும் அவர்கள் அந்த நேரத்தில் காணப்படும் தன்மை ஏற்கெனவே பல ஆண்டுகளாகவே ஒன்றிணைந்த குழுவினராக உருவாகி வந்திருக்க வேண்டும் என்று ஊகிக்கலாம். இவர்களைப் பற்றிய குறிப்புகள் சில இக்கட்டான சூழல்களிலிலேயே கல்வெட்டுகளில் பதியப் பட்டன. அவர்கள் பொதுவாக உழுகுடி வெள்ளாளர் என்று அழைக்கப்பட்டனர். அதாவது, உழவுவேலை செய்யும் வெள்ளாளர்கள் என்று பொருள். இவர்கள் பற்றிய கல்வெட்டுக் குறிப்புகள் இரண்டு கால இடைவெளியில் கிடைக்கின்றன. முதலில் அவை, தஞ்சாவூரின் கிழக்குப் பகுதிலுள்ள பிராமணஊர்க் கல்வெட்டுகளில் 1177ஆம் ஆண்டிலிருந்து கிடைக்கின்றன (நிலப்படம்). அவற்றில் சுட்டப்படும் உழுகுடி வெள்ளாளர் அவ்வூர்களின் பிடாகைகளில் வாழ்ந்து பயிர்செய்து வந்தவர்கள். ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட கல்வெட்டுகளில் பிராமண நிலக்கிழார்` குழு அல்லது சபையினருக்கும் உழுகுடிகளுக்கும் இடையே ஏற்பட்ட உடன்பாட்டைப் பற்றி விரிவாகப் பேசப்படுகின்றன.

காட்டாக இரு கல்வெட்டுகளைப் பகுத்துப் பார்க்கலாம். ஒன்று ஆச்சாள்புரத்தில் உள்ளது; மற்றொன்று திருக்கருகாவூரில் உள்ளது. இரண்டுமே தொடக்கம், முடிவு தவிர ஒரே செய்திகயைப் பதித்துள்ளன. கிட்டத்தட்ட அதேபோன்ற பிறிதொரு கல்வெட்டு சிறு வேறுபாடுகளோடு அதே யாண்டில் திருக்கடையூரிலிருந்து கிடைக்கிறது. இந்த ஊர்கள் 10—20 கி.மீ. இடைவெளியில் அமைந்துள்ளன. ஆச்சாள்புரம் கல்வெட்டுச் செய்தி: வெண்ணையூர் நாட்டிலுள்ள குலோத்துங்க சதுர்வேதிமங்கலத்தின் சபையார் (அதாவது பிராமண நிலக்கிழார்) தம் ஊரின் இரு பிடாகைகளில் வசிக்கும் உழுகுடிகளுக்கு ஓர் இசைவை அளித்தனர். திருக்கடையூர்க் கல்வெட்டில் 240 வெள்ளாளர் அல்லது பேரிளைமையாளர்களுடன் சபையார் பேசினர் என்ற குறிப்பு உள்ளது. அவர்கள் அவ்விடத்தின் உழுகுடிகளாக இருக்கவேண்டும். அச்சபையார்கள் அளித்த வாக்குறுதிகள் சில: (1) உழுகுடிகள் (பிராமண, வெள்ளாள) நிலவுடைமையாளர்களுடன் செய்துகொண்ட ஒப்பந்தப்படியான குத்தகைத் தொகையினை குறைத்தல் (2) உழவுச்செலவான ஆள்கூலியினை நிர்ணயிக்கும் பொறுப்பினை யார் ஏற்பது (3) உழுகுடிகளுக்கும் (அவர்கள் கீழான) பணிசெய்மக்களுக்குமான பொறுப்புகளையும் சலுகைகளையும் வரையறுத்தல் (4) உழுகுடிகள் கீழ் இருந்த அடிமைகளின் நிலையினை நிர்ணயிப்பது (ஓர் உழுகுடி இறந்துவிட்டால் அவனுடைய அடிமைகள் அவன் மனைவிக்கும் மக்களுக்குமே உரிமையாவார்கள்).

கடமை என்ற குத்தகைத்தொகை இருவழிகளில் வசூலிக்கப்பட்டது. (1) ஆண்டுக்கு வேலி நிலத்துக்கு இவ்வளவு தானியம் (நெல்) என்ற முறை. இது வரிசை எனப்பட்டது. (2) உடைமையாளருக்கும் உழுகுடிக்கும் விளைச்சலில் குறிப்பிட்ட பங்கு என்று கொள்ளல். இது வாரம் எனப்பட்டது. நிலவுடைமையாளரின் பங்கு மேல்வாரம் எனப்பட்டது. உழுகுடிகளின்பங்கு கீழ்வாரம்/குடிவாரம் ஆகும். முதல் நிகழ்வில் பயிரிடும் ஆள்கூலியை பயிரிடும்முறை, நீர்ப்பாசனம் போன்றவற்றின் அடிப்படையில் நிலவுடைமையாளரோ உழுகுடிகளோ ஏற்பர். இரண்டாம் நிகழ்வில் உழவுச்செலவினை இருவரும் பகிர்ந்துகொள்வர். புதிய குத்தகைத்தொகை ஒப்பந்தத்தினை எந்த உழுகுடியாவது ஏற்கவில்லையெனில் அவருடைய நிலம் பிறிதொருவருக்கு மாற்றித்தரப்படும்.

இக்கல்வெட்டுகளில் பொருளியல் தொடர்பான செய்திகளை மட்டுமன்று சமூகம் தொடர்பான செய்திகளையும் அறியலாம். சமூகத்தின் உச்சியில் பிராமண நிலவுடைமையாளர்கள் இருந்தனர். அவர்கள் பெருங்குடி என்றழைக்கப்பட்டனர். ஓரளவு அவர்களுக்கு சற்று கீழே வெள்ளாள நிலவுடைமையாளர்கள் இருந்தனர். அடுத்த நிலையில் உழுகுடிகள் என்ற உண்மையான உழைப்பாளிகள் இருந்தனர். இவர்கள் பெரும்பாலும் பிராமண மற்றும் வெள்ளாளர்களின் ஊர்களைச் சுற்றியிருந்த பிடாகைகளில் வசித்தனர். உழுகுடிகள் பேரிளமையாளர்கள் என்றும் அழைக்கப்பட்டனர். உழுகுடிகள் அடிமைகளைப் பெற்று அவர்களை வழிவழியாக அனுபவிக்கும் ஒரு உரிமையையும் கொண்டிருந்தனர். உழுகுடிகளுக்கு அடுத்த நிலையில் பணிசெய்மக்கள் இருந்தனர். இவர்கள் கணக்கர்கள், குயவர், இசைவாணர்கள், தச்சர்கள், நெசவாளர்கள், கொல்லர்கள் போன்ற பல தொழில் செய்தவர்கள். இக்கூட்டத்தினர் அனைவருக்கும் தலையில் குடுமி வைத்துக்கொள்ளும் உரிமையும், நல்லது கெட்டது ஆகிய எல்லா குடும்ப நிகழ்வுகளுக்கும் மேளம் வாசித்துக்கொள்ளும் உரிமையும் மறுக்கப்பட்டிருந்தன. அவர்கள் கால்நடைகளை வளர்க்கமுடியாது, அடிமைகளை வைத்துக்கொள்ள முடியாது. அடிமைகளைப் பொறுத்தவரை அவர்கள் சமூகத்தின் அடித்தளத்திற்கே ஒதுக்கப்பட்டார்கள். அவர்கள் பெரும்பாலும் நாள்கூலிகள் ஆக இருந்தவர்கள் என்று கருதவேண்டும்.

மேற்குறித்த கல்வெட்டுகளின் மொத்தக் கருத்து யாதெனில், உழுகுடிகள் அதிகமான குத்தகைத் தொகையினைச் செலுத்தமுடியாமல் அவதியுற்றனர் என்பதாகும். சிலவேளைகளில் நிலவுடைமையாளர்கள் அரசுக்கு செலுத்த வேண்டிய வரியை இவர்கள் செலுத்த வற்புறுத்தப்பட்டனர். (நில உடைமையாளர் தங்கள் நிலத்தைத் தாங்களே உழுது பயிர்செய்தாலும் குத்தகைக்கு விட்டுப் பயிரிட்டாலும் தங்கள் நிலத்தின் பேரான வரியை (கடமை/காணிக்கடன்) தாங்களே அரசுக்குச் செலுத்தப் பொறுப்பானவர்கள்). அரசுக் களஞ்சியங்களுக்கு நில உடைமையாளருக்குப் பதிலாக தானியத்தினைக்

கொண்டுசென்று ஒப்படைக்கவும் கட்டாயப்படுத்தப்பட்டனர். இதுபோன்ற பல நெருக்கடிகளால் உழுகுடிகள் பாதிக்கப்பட்டனர். அதே நேரத்தில் பிற தொழிலாளிகளிலிருந்து தங்களை வேறுபடுத்தி உயர்நிலையில் இருத்திக்கொள்வதில் கவனமாக இருந்தனர். தங்களின் கீழுள்ள பணிமக்களுக்கு சில உரிமைகளை மறுத்தனர். அவர்களுக்கு சில கட்டுப்பாடுகளையும் விதித்தனர்.

நிலவுடைமையாளர்களுக்கும் உழுகுடி வெள்ளாளர்களுக்கும் இடையிலான முரண்பாடு 1177க்குப் பிறகும் குறையவில்லை. அடுத்தடுத்த சில பத்தாண்டுகளில் இந்நிலை மேலும் இறுக்கமானது. இந்நிலைமை வேறு ஒரு கல்வெட்டுத் தொகுப்பில் பதியப்பட்டுள்ளது. இக்கல்வெட்டுகள் முன்னவற்றைக் காட்டிலும் பரந்த நிலப்பரப்பில் காணப்படுகின்றன. இவை சொல்லும் செய்திகள் மிகவும் தெளிவாக 1230களில் அறியப்பட்டாலும் அதற்கு முன்பே சில சிக்கல்கள் ஆழமாக வேர்விட்டிருந்தன எனத் தோன்றுகிறது. இத்தொகுப்பில் முதல் கல்வெட்டு 1192இல் ஆத்தூர் என்னுமிடத்தில் கிடைக்கிறது. அடுத்த கட்டத்தினைச் சேர்ந்த கல்வெட்டுகள் மேற்கு மற்றும் தென்மேற்குப் பகுதிகளில் இருந்து கிடைக்கின்றன. விவரமாக ஆவணமாக்கப்பட்ட நான்கு கல்வெட்டுகள் மன்னார்குடியிலுள்ள சிவன் மற்றும் விஷ்ணு கோயில்களில் கிடைக்கின்றன. அவற்றுள் இரண்டு 1239 பிப்ரவரி 28இல் எழுதப்பட்டு ஒரே செய்தியினைக் கொண்டுள்ளன. இவை பிராமணஊரான இராஜராஜ சதுர்வேதிமங்கலம் (இன்றைய மன்னார்குடி) பற்றிப் பேசுகின்றன[15]. அக்கல்வெட்டுகள் சிதைவுற்றிருந்தாலும், இரு கல்வெட்டுகளையும் ஒருசேர ஆயும்போது முழுமையான கல்வெட்டுப் பாடம் கிடைக்கிறது. இரு நாள்களுக்குப் பிறகு, 1239, மார்ச் 2 இல் மூன்றாம் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. ஆனால், இதில் கல்வெட்டின் தொடக்கப்பகுதி மட்டுமே உள்ளது. இது வெண்ணிக் கூற்றத்தைச் சேர்ந்த வேறொரு பிராமண ஊர் பற்றி பேசுகிறது. மேலும் இருநாள் கழித்து உள்ள நான்காவது கல்வெட்டு பாம்புணிக் கூற்றத்தைச் சேர்ந்த மூன்றாவது ஒரு பிராமண ஊர் பற்றியது. இதுவும் அதே பாடத்தினைச் சொல்லும் சுருக்கமான கல்வெட்டு. மூன்று நான்காம் கல்வெட்டுகள் முதல் ஊரின் முடிவுகளின் தாக்கத்தினால் எடுக்கப்பட்ட முடிவுகளைப் பதிந்துள்ளன என்பது தெளிவு.

அனைத்துக் கல்வெட்டுகளும் பிராமண நிலவுடைமையாளர்களுக்கும், உழுகுடி வெள்ளாளர்களுக்கும் இடையிலான பிணக்குகள் சரிசெய்யப்பட்டது பற்றியவையே. மன்னார்குடியின் உழுகுடி வெள்ளாளர்கள் பேரிளமைநாடு எனப்பட்ட ஐந்து நிலவட்டங்களில் (அல்லது நாடுகளில்) ஒருங்கிணைந்திருந்தார்கள். ஆகவே அவர்கள் பேரிளமை நாட்டார் எனப்பட்டார்கள். நீடுரில் உள்ள கல்வெட்டு இன்னொரு பெரிய பிராமண ஊர் பற்றிப் பேசுகிறது. அதில் மூன்று (பேரிளமை?) நாடுகளில் இருந்த நாட்டவர், குடும்பர், கரையார் என்ற உழுகுடிகள் பற்றிய குறிப்புகள் உள்ளன. உழுகுடிகள்

தங்கள் கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை யெனில் உழவுவேலைகளை நிறுத்துவோம் என்று மிரட்டியதால் அவர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்று நிலவுடைமையாளர்கள் உறுதியளித்தார்கள். ஆனால், இங்கு நிலவுடைமையாளர்களுக்கு உழுகுடிகள் செலுத்தவேண்டிய குத்தகைத்தொகையான வரிசை அல்லது வாரம் பற்றிய குறிப்புகள் இல்லை. ஒருவேளை குத்தகைத்தொகை ஏற்கனவே மிகவும் உயர்த்தப்பட்டு கடுமையாக இருந்திருக்கலாம். எனவே, நிலக்கிழார்களின் இப்போதைய வாய்ப்பு உடலுழைப்பைக் கூட்டுவதே. இன்னொரு செய்தியும் கோடிட்டு காட்டப்பட்டுள்ளது. அதன்படி, நிலக்கிழார்கள் தங்கள் வரிப்பொறுப்பை உழுகுடிகள் மீது சுமத்த முயன்றார்கள் என்று தெரிகிறது. இது தவிர இக்கட்டத்தில் முதன்மையான வரிப்பளு பெரும்பாலும் கட்டாயஉழைப்பாக இருந்தது. அதுவும் அரசரின் பெயரால் வேண்டப்பட்டது. இக்கட்டாய உழைப்பு வேறுவேறு வகைகளில் வேண்டப்பட்டது. (1) ஒன்று கோலறை (2) நெட்டாள் (3) வீரர்கள், படையாட்கள், வருவாய்அலுவலர் முதலியோர் செலவுகளுக்கு வேண்டும்போது பணத்தைச் செலுத்த வற்புறுத்தல் (4) சபாவினியோகம் என்ற ஊர் சபையின் பொதுச் செலவுகளுக்கு வேண்டிய உழைப்பு. இவற்றில் கொடுமை என்னவென்றால், இவ்வுழைப்புகள் ஒரே வேலை பொருட்டு வெவ்வேறு சூழல்களில் வெவ்வேறு முகவர்கள் உழுகுடிகளிடம் வற்புறுத்திச் செய்யச் சொன்னது. அதிலும் இவற்றை வற்புறுத்திப் பெற்றவர் பலர் ஆயுதம் ஏந்திய சேவகர்கள், படைவீரர் போன்றோராக இருந்தமை. மேற்சொல்லப்பட்ட நிகழ்வுகள் சோழர் அரசின் வீழ்ச்சி முகத்தினைக் காட்டும்.

கட்டாய உழைப்பின் ஒரு வகை கோலறை. இதன்படி, ஒவ்வொரு ஊரிலும் காவிரி அல்லது வாய்க்கால்கள் கரையினை குறிப்பிட்ட நீளத்திற்கு/அளவிற்கு சீர் செய்ய வேண்டும். ஆண்டுதோறும் ஒவ்வொரு பருவகாலத்திலும் காவிரியும் அதன்கிளைவாய்க்கால்களும் உடைபடும்போது அவற்றை செப்பனிடும் தேவை காவிரி வடிநிலப்பகுதி வேளாண்குடிகளுக்கு கட்டாயமாகியது. ஒரு ஊரின் ஒவ்வொரு உழவரும் இப்பணியினைப் பகிர்ந்துகொள்ள வேண்டியிருந்தது. இவ்வுழைப்பு மிகப்பெரிய அளவில் தேவைப்படுவதால் அனைவரும் உழைத்தால்தான் போதுமானதாக இருக்கும். பெரியநிலப்பரப்பிற்கு பெருமளவில் உழைப்புதேவை. சிலபோது உழைப்புக்கு மாற்றாக பண்டமும் கொடுக்கலாம். வாய்க்கால்களைச் சீராக வைக்க சென்னீர்வெட்டி எனும் உழைப்பும் முக்கியமானது. கல்வெட்டில் குறிக்கப்பட்ட நெட்டாள் எனும் சொல்லும் முக்கியமானது. தொடர்ந்து நீண்டு செய்ய வேண்டிய உழைப்பினைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தியிருக்கலாம். கல்வெட்டில் இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ள சூழலின்படி இக் கட்டாய உழைப்பு தலைநகர் இராஜராஜபுரத்தின் சீரமைப்பு வேலைகளுக்கும் வேண்டப்பட்டது. இவ்வேலை குறைவறுப்பு எனும் சொல்லால் சுட்டப்பட்டது. இவ்வேலைக்கு ஆண்டிற்கு ஒருமா நிலத்துக்கு ஒரு ஆள் என்று நிர்ணயிக்கப்பட்டது. இராஜராஜபுரம் கும்பகோணத்திற்கு அருகிலுள்ள பழைய தலைநகராகும். இது

மன்னார்குடியிலிருந்து 25 கிமீ தொலைவில் அமைந்துள்ளது. ஆக, கட்டாய வேலைக்காக உழைப்பாளர்கள் இவ்வளவு நெடுந்தொலைவில் இருந்து வந்து துயரத்துடன் வேலை செய்ய வேண்டியிருந்தது. நீடூர் கல்வெட்டில் நெட்டாள் என்பது ஒவ்வொரு காணி 'மடக்கு' நிலத்திற்கும் ஒருவர் தேவை என்று சொல்லப்பட்டது.

மூன்றாம் வகையில் வேறுவேறு தேவைகள் இருந்தன. மக்கள் சேவகர் எனும் படையாட்கள் உள்ளூர் நிர்வாகத்தில் தொடர்ந்து பணியாற்றினர். அவர்களின் பணிகளுக்கு உழுகுடிகள் ஊதியம் வழங்கினர். அவ்வூதியம் விளைநிலத்தின் அளவிற்கேற்றபடி தானியமாகவே தரப்பட்டது. மேலும், நிலவருவாயினை விளைச்சலை மதிப்பீடுசெய்பவர்கள், வரிவசூலிப்பவர்கள், கணக்கர்கள், படையாளர், குடும்புத் தலைவர் எனப் பலரும் அதிகாரத்திற்கு புறம்பாக பணம் வசூலித்தனர்.

மேற்குறிப்பிட்ட கல்வெட்டுகளிலும் அக்காலத்திய சமூகப் படி நிலையினை அறியமுடிகிறது. வெள்ளாள உழுகுடிகள் தம் மரபுரீதியான உயர்நிலையினை தக்கவைப்பது பெரும்பாடாக இருந்தது. ஊருக்கு வந்த படையாட்களுக்கு உணவளித்தபின் எச்சில் இலையை எடுக்க குடிகள் வற்புறுத்தப்பட்டனர் என்று தலைஞாயிறு கல்வெட்டு குறிப்பிடும்[16]. இவ்வழக்கம் தங்களை இழிவுபடுத்துவதாகக் கருதி சபையார்க்கு கோரிக்கை விடுத்தனர். கோரிக்கையினை சபையார் ஏற்று அதை நீக்கினர்.

இறுதியாக, நிலவுடைமையாளர்கள், உழுகுடிமக்கள் ஆகியோருக்கும் அவர்கள் கீழ் இருந்த அடிமைகளுக்கும் இடையிலான உறவினைக் கண்டறிவது ஒரு கேள்விக்குறியாக உள்ளது. வேளாண்சமூகத்தின் அடித்தளத்தில் இயங்கிய இவர்களைப் பற்றிய குறிப்புகள் மிகக் குறைவாகவே கிடைக்கின்றன. சோழர் காலத்தில் சமூகத்தின் ஒருபகுதி அடிமை நிலையில் இருந்தது என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. தேவரடியார் எனப்படும் கோயில் பெண்டிர் அடிமைகளாக கருதப்பட்டனர் என்பது பொதுவான புரிதல். அவர்கள் கடவுள்களின் அடிமைகள் அல்லது வேலையாட்கள். ஆகவே அடிமைமுறை அக்காலத்தில் சமயம், கோயில்கள் என்ற கோணத்திலேயே வரலாற்று நூல்களில் பார்க்கப்பட்டது. பிறநிலையில் அடிமைகள்பற்றி போதுமான கல்வெட்டுக் குறிப்புகள் இல்லை. ஆயினும் கடவுள் போன்ற புனித நிலையினையும் தாண்டி சோழர்காலத்தில் அடிமைமுறை இருந்தது என்ற நீலகண்ட சாஸ்திரி தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

அக்காலத்து மக்கள் தொகையில் கணிசமானோர், முக்கியமாக வேளாண் கூலிகள் வாழ்ந்த சூழல் அடிமை முறையை ஒத்ததாக இருந்தது என்பது அக்கால இலக்கியம் வாயிலாக அறிகிறோம். சில ஆட்கள் தனி மனிதர்களின் சொத்தாக நடத்தப்பட்டார்கள் என்பதைக் கல்வெட்டுகள் குறித்துள்ளன. அவர்களின் விருப்பமின்றியே அவர்கள் வாங்கப்பட்டனர், விற்கப்பட்டனர்.

12-13ஆம் நூற்றாண்டின் பல கல்வெட்டுகளில் மனிதர்கள் விற்கப்பட்ட செய்திகள் கிடைக்கின்றன. பிராமணர், பிராமணரல்லாதார், நிலக்கிழார்கள், படைத்தலைவர்கள், சமயத்தலைவர்கள் போன்ற பலர் அடிமைகளை உடையவர்களாக இருந்தனர். பிந்தைய காலகட்டத்தில் பல நேரங்களில் அரசத் துரோகிகள் அரசனால் தண்டிக்கப்பட்டார்கள் என்ற செய்தி கிடைக்கிறது. அதுபோன்ற நிகழ்வுகளால் துரோகமிழைத்தவரின் சொத்துகள் பறிக்கப்பட்டு பொது ஏலத்தில் விற்கப்பட்டன. அந்த விற்பனை அரசின் பெயரில் பெருவிலை எனப்பட்டது. விற்பனையின் போது தண்டிக்கப்பட்டவரின் மூன்று வகைச் சொத்துக்கள் வழக்கமாகக் குறிப்பிடப்படுகின்றன. அவையாவன 1) காணி அதாவது விளைநிலம், 2) மனை அல்லது வீடு, 3) அடிமைகள். வேளாண் உழுகுடிகளும்கூட அடிமைகளை பரம்பரையாக ஆள்வதற்கு அனுமதிக்கப்பட்டனர் என்று மேலே பார்த்தோம்.

நிலக்கிழார்களும் உழுகுடிகளும் பெருமளவில் அடிமைகளை வைத்துக் கொள்ள வேண்டிய தேவை குடும்ப வேலைகளுக்கு மட்டுமன்று எனக் கருதலாம். அவர்கள் வயல்வேலைகளைச் செய்தனர், முதன்மையாக நெல்விளைச்சல். இதற்குப் பெருமளவில் மனித உழைப்பு வேண்டும். இது தொடர்பான செய்திகள் கல்வெட்டுகளில் போதிய தெளிவுடன் பதியப்படவில்லை. ஏனெனில், அவை பெரும்பாலும் செல்வந்தரையும், அவர்கள் கோயில்களுக்கு கொடையளித்த சொத்துக்கள் பற்றியுமே பேசுகின்றன. பிற அன்றாட நிகழ்வுகளைப் பேசவில்லை. ஒரு அடிமைத் தொழிலாளி கட்டாய உழைப்பினையும் செய்ய வேண்டியிருக்கும். ஒவ்வொரு விவசாய குடும்பத்திலும் தனித்து அதிகமான பேர்கள் இருப்பதற்கு வாய்ப்பில்லை. எனவே, அவர்கள் இயல்பாகச் செய்ய வேண்டிய கட்டாய உழைப்பிற்கு அடிமை உழைப்பாளிகளைச் சார்ந்திருக்க வேண்டியிருந்ததது. 1280ஆம் ஆண்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின் திருப்பராய்த்துறை என்ற ஊரிலுள்ள ஒரு கல்வெட்டு சில யூகங்களைத் தருகிறது. ஒரு பெரிய நிலக்கிழார் பல ஆண்டுகளாக வரிசெலுத்தாததால் அரசனால் (பாண்டிய மன்னர்) மோசமாக நடத்தப்பட்டார். அந்நிலக்கிழார் காவிரிக்கரையினை செப்பனிடும் கோலறை எனும் வேலையினைச் செய்வதற்கு தன் பங்குக்கான 'ஆள்' அனுப்பவில்லை என்று குற்றம்சாட்டப்பட்டார். இங்கு ஆள் எனும் சொல் ஓர் ஆண்/பெண் என்று குறித்தாலும், அக்காலத்தில் அண்டி வாழ்ந்தவர்களைச் சுட்டும். அதாவது அடிமையைக் குறிக்கும் இச்சொல். ஆற்றங்கரையைச் செப்பனிடும் கட்டாய உழைப்பு உழுகுடிகளின் பொறுப்பு. ஆனால் இங்குச்சுட்டப்படும் பெருநிலக்கிழார் தம் வேளாண் தொழிலிற்கு அடிமை நிலையிலிருந்து பல பணியாட்களைக் கொண்டவராக இருந்திருக்கலாம்.

அந்த ஆட்களைக் கோலறை வேலைக்கு அனுப்பவில்லை என்பதே குற்றச்சாட்டு அடிமைகளின் உழைப்பு பற்றி கல்வெட்டுகள் அமைதியாக இருந்தாலும், சோழர்காலத்தின் பிற்பகுதியில் வேளாணுற்பத்தியில் அடிமைகள்

போன்றோரின் உழைப்பு பெருமளவில் இருந்திருக்க வேண்டும் என்று சொல்லலாம். விஜயநகர ஆட்சியின் தொடக்க காலத்து கல்வெட்டுகளில் கிடைக்கின்ற வெளிப்படையான சான்றுகளின் அடிப்படையில் 14ஆம் நூற்றாண்டின் வேளாண் நடவடிக்கைகளில் ஓரளவு ஆண்வழி (Partriarchal) அடிமைமுறை வழக்கில் இருந்தது என்று கராஷிமா கருதினார். ஆயினும் இந்த நடைமுறை 12ஆம் நூற்றாண்டிலிருந்தே தொடங்குவதாகக் கொள்ள இடமுண்டு. 12ஆம் நூற்றாண்டின் பக்தி இலக்கியமான பெரியபுராணத்தில் பலையர் அல்லது பறையர் வகுப்பில் பிறந்த நந்தனின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் நீலகண்ட சாஸ்திரியின் கூற்று கவனத்திற்குரியது. ''உழைப்பாளிகளான இவ்வகுப்பினர் பண்ணையாள் அல்லது பண்ணையடிமை நிலையிலேயே இருந்தனர். அதாவது நிலத்தோடு பிணைக்கப்பட்டிருந்தனர் (Adscriptiglebare) அதாவது நிலம் விற்கப்படும்போது இவர்களும் சேர்த்து விற்கப்பட்டனர்). இக்கருத்தோடு இணைத்துப் பார்க்கக்கூடிய கல்வெட்டுச் சான்றுகளும் உண்டு. அதாவது, புலையர் வசிக்கும் புலைச்சேரிகளையும் ஊரில் காணியாளராக இருந்தவர்கள் உரிமை கொண்டாடினார்கள். அவற்றையும் தங்கள் காணிகளுடன் சேர்த்து விற்றார்கள் என்பதையும் பார்க்கிறோம்.

முடிவுக்குறிப்புகள்

1. A. Appadurai, Economic Conditions in Southern India (1000–1500 AD). University of Madras, 1936; K.A. Nilakanta Sastri, Studies in Cola History and Administration, Madras, University of Madras, 1932; Idem., The Colas, University of Madras, 2nd ed. 1955 (1st ed., 1935 & 1937).
2. Noboru Karashima, South Indian History and Society: Studies from Inscriptions, AD 850–1800, OUP, New Delhi, 1984.
3. R. Tirumalai, Land Grants and Agrarian Reactions in Cola and Pandya Times. University of Madras, 1987.
4. Stein, Burton, Peasant State and Society in Medieval South India, Oxford University Press, New Delhi, 1980, pp. 134–40 .
5. SII, 8, no. 689; SII, 13, no. 240.
6. Noboru Karashima, South Indian History and Society, p. 6.
7. மேற்படி, பக்கம். 46–48.
8. Noboru Karashima, op.cit., pp. 26–31, 131; James Heitzman, Gifts of Power: Lordship in an Early Indian State, OUP, New Delhi, 1997, pp. 65–66.
9. SII, 22, no. 54(a); 17, no. 583, 585, 587.
10. ARE., 1974, no. 179. தாமரைப்பாக்கம் கல்வெட்டுகள், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, 1999, பக். 1-3.
11. ARE, 1932, no. 103.
12. SII, 22, no. 31.
13. ARE. 1926, no. 259.
14. ARE, 1926, no. 257.
15. SII, 6, nos. 50 and 58. SII, 6, no. 51. SII, vi, no. 48.
16. ARE, 1927, no. 150.

கல்வெட்டுகளில் இடையர் சமூகம்

மா. பவானி
இணைப்பேராசிரியர் மற்றும் தலைவர்
கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

சுருக்கம்

சங்க காலம்

சங்க காலம் பரந்து பட்ட ஐவகை நிலங்கள்(குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை) என்று பிரிக்கப்பட்டிருந்தது. இவற்றின் அடிப்படையில் முல்லை நில மக்களே கால்நடைகளை மேய்த்து பராமரிப்பு செய்து அதன் மூலம் தொழில் புரிந்த மக்கள் ஆவர். இவர்கள் ஆயர் குல மக்கள், இடையர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளனர். ஆடு மாடு மேய்க்கும் இடையர்களை அண்டர் (குறுந்: 117-3), ஆயர் (புறம்: 390-1) , இடையர் (அகம்: 94-4, 274-8, 394-13, நற்றி: 142-4, 169-7), கோவலர் (அகம்: 94-4, 274-8, 394-13, நற்றி: 142-4, 169-7), தொழுவர் (மலைபடு: 290), பொதுவர் (கலி :105-5.) எனப் பலவாறாக சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றது. இடையர் என்போர் ஆடுகளை கூட்டம் கூட்டமாக மேய்க்கும் தொழில் புரிந்தனர் என்பதனை அகநானூறு, புறநானூறு போன்ற இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இவர்கள் மேய்ச்சல் தொழிலுக்காக வேறு இடம் சென்றதனை நெடுநல்வாடைக் குறிப்பிடுகிறது (நெடு 3-4). சிலப்பதிகாரத்தில் இவர்கள் ஆயர், கோபாலர், இடைக்குலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளனர் (சிலம்பு : 15-17, 15-127, 15-30.). ‘இடையன்’ என்ற சொல்லிற்கு இடைப்பட்ட நிலத்தில் வசிப்போர் என்று பொருள் கூறுகிறது அகராதி. அதாவது மலைச் சார்ந்த குறிஞ்சிக்கும் வயல் சார்ந்த மருதத்திற்கும் இடைப்பட்ட காடும் காடு சார்ந்த முல்லை நிலத்தில் இவர்கள் வசித்ததால் இவர்கள் இடையர்கள் என்று அழைக்கப்பட்டுள்ளனர். (Tamil Lexicon, 1982,p.288.).

பல்லவர் காலத்தில் பெரிய அளவிலானக் கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. கோயிலில் கடவுளை எழுந்தருளிவித்தவுடன் செய்யும் முதல் செயல் தீபம் ஏற்றுவதாகும். அக்காலத்தில் தீபம் ஏற்றுவதற்கு நெய்யையே பயன்படுத்தியுள்ளனர். ‘சந்நிதி இருளா சந்தியா தீபம்’ என்ற வாசகம் இதன் முக்கியத்துவத்தினை விளக்குவதாகவுள்ளது. இரவு , சாயங்கால நேரங்களில் ஏற்றப்படும் தீபத்திற்கு ‘சந்தியா தீபம்’ என்று பெயர். தமிழகத்தில் உள்ள கோயில் கல்வெட்டுகளில் 90% விளக்கிற்காக அளிக்கப்பெற்ற கொடைகளைப் பற்றியே குறிப்பிடுகின்றன. விளக்கிற்காக பயன்படுகின்ற பொருட்களில் நெய் முக்கிய பொருளாகும். இக்காலத்தில் கோயிலுடன் நெருங்கியத்தொடர்பு கொண்டுள்ள குலங்களுள் இடையர் குலமும் ஒன்றாகும். விளக்கிற்கு நெய் தீபம் ஏற்றல் பொருட்டு பசுக்கள் , ஆடுகள், எருமைகள் போன்ற கால்நடைகளை கோயிலிற்கு தானமாக வழங்கியுள்ளனர். கோயிலிற்கு தானமாக வழங்கப்பெற்றக் கால்நடைகளை “கால் மாடுகள்” என்று கல்வெட்டுகள் சுட்டுகின்றன. இவற்றின் எண்ணிக்கைக் குறையாமல் தொடர்ந்தன என்பதற்கு ‘சாவா மூவாப் பேராடு’ என்ற சொல்லாடல் சான்றாகும். அதாவது சாவினாலோ அல்லது மூப்பினாலோ எண்ணிக்கைக் குறையாத ஆடுகள் என்று பொருள். இதனால் வரம் பெற்ற ஆடுகள்

என்று கருதயியலாது. இனப்பெருக்கத்தினால் எண்ணிக்கைக்குறையாத அளவில் ஆடுகளை வழங்கியுள்ளனர் என்று பொருள். இவ்வாறு தானத்தார் கோயிலுக்கு அளித்த ஆடுகளையும் பசுக்களையும் கோயில் நிர்வாகத்தினர் பெற்று அதை இடையர்களிடம் ஒப்படைக்கின்றனர். இடையர்கள் கால்மாடுகளைப் (கால்நடைகள்) பெற்று விளக்கு எரிப்பதற்கு நெய் வழங்கும் பொறுப்பினை ஏற்கின்றனர். இச்செயலை செய்வதில் இடையர், மன்றாடி ஆகியோரின் பங்கு மகத்தானது.

விளக்கெரிக்க எண்ணெய் கொடுத்ததற்கான குறிப்புகள் அரிதாகும். கால்நடைகளிலும் அதிக அளவு வழங்கப்பட்டிருப்பது ஆடுகளே ஆகும். எனவே ஆட்டு நெய்யே விளக்கேற்ற அதிக அளவில் பயன்பட்டுள்ளது. இவர்கள் நெய்யினை வழங்கும் பணியினை மட்டுமே வழங்கியுள்ளனர். கோயில்களில் விளக்கேற்றும் பணியினை கோயில் தேவகன்மிகள் செய்துள்ளனர்.

கல்வெட்டுகளில் இடையர்களுக்கானப் பெயர்கள்

இவர்களுக்கு 'இடையன்' , 'கோயில் மன்றாடி', 'நாட்டு மன்றாடி' (SII,vol,VI,no. 27).'நாட்டு விடங்க மன்றாடி', 'ஊர் மன்றாடிகள்' (SII,vol,VI,no. 27), 'ஊர் இடையர்' 'தேவரிடைச்சான்றோர்' (SII,vol,XVII,no.156), என்றெல்லாம் பெயர் வழங்கப்பெற்றுள்ளன. பாண்டி நாட்டில் இவர்கள் 'ஆயன்' (SII,vol,XIV,no.84), 'கோவலன்' (வெ. வேதாச்சலம்,1992, பக்.21.23.) என்றும் அழைக்கப்பெற்றுள்ளனர். பொதுவாக 'திருவிளக்கு குடிகள்', 'கோபாலர் குடிகள்', 'சுரபி மன்றாடி' (SII,vol,VII,no.939), 'மன்றாடிக்கலனைகள்' (SII,vol,XIII,no.60) 'மன்றாடிக்குடி' (SII,vol,XII,no.131) என்றும் அழைக்கப்பட்டுள்ளனர். கால்நடைகளை ஒரு இடையனிடம் ஒப்படைப்பதில்லை. இடையர் குழுவிடமே ஒப்படைக்கின்றனர்.

இவ்விதம் கால்மாடுகள் ஒப்படைக்கப்பெற்ற இடையர்கள் அவற்றை பராமரிக்க ஒருசில குத்தகைதாரரைத் தேர்ந்தெடுத்துள்ளனர். அவர்கள் கல்வெட்டுகளில் "அடைக்குடி" என்று அழைக்கப்பெறுகின்றனர்.

'இடையர்' 'மன்றாடி' என்ற இரு சொற்களும் இடையர் இனத்தவரை குறிக்கும் சொற்களாகும். ஆயினும் இடையர் என்ற சொல் மன்றாடி என்றச் சொல்லைக்காட்டிலும் மிக பழமையானதாக உள்ளது. சங்க காலந்தொட்டு இச்சொல் வழங்கிவருகிறது. கல்வெட்டுக்களில் மன்றாடி என்றச் சொல்லே காலத்தால் முந்தையதாகக் கிடைக்கிறது. ஆயினும் இடையன், இடையர் என்ற சொல்லே அதிக எண்ணிக்கையில் வழங்கியுள்ளது. இடைக்கால சமூகம் கோயிலை மையமாகக்கொண்டு இயங்கியுள்ளது. இக்கோயிலிற்கு வழங்கப்பெற்றக் கொடைகளில் அதிகளவில் இருப்பது நந்தாவிளக்கெரிக்க அளித்தக்கொடைகளேயாம். அவ்விதம் நந்தாவிளக்கெரிப்பதற்கு கால்நடைகளே (கால்மாடுகள்) அதிகளவிலை வழங்கப்பெற்றுள்ளன. அதிலும் குறிப்பாக ஆடுகள் அதிகளவில் வழங்கப் பெற்றுள்ளன. பசுகளும் , எருமைகளும் குறைந்த அளவில் கொடைவழங்கப்பெற்றுள்ளன. இடைக்கால சமூகத்தில் கோயிலைச்சார்ந்த சமூகமாக இடையர் சமூகம் விளங்குகிறது. ஆனால் இவர்களைப் பற்றிய ஆய்வுகள் குறைந்தயளவிலேயேயுள்ளன. எனவே இக்கட்டுரை இடைக்காலத் தமிழ்க்கல்வெட்டுகள் வழி அறியலாகும் இடையர் சமூகம் குறித்து ஆராய்கிறது.

மன்றாடி

மன்றாடி என்றச் சொல் சங்க காலத்திலும் அதைத் தொடர்ந்துவந்த பல்லவர் காலத்திலும் இடம்பெறவில்லை. பொ.ஆ. 845இல் சோழர் காலத்திலேயே முதன்முதலாக இடம்பெறுகிறது. 'நாட்டு விடங்க மன்றாடி என்பார் திருவிடைமருதூர் கோயிலில் 90 ஆடுகளைப் பெற்றுக்கொண்டு

விளக்கெரிக்கும் பொறுப்பை ஏற்றது பற்றியது அக்கல்வெட்டு (SII,vol,III,no.121). இடைச்சாதியினரை "மன்றாடி கலனை" என்றும் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன (SII,vol,XIII,no.60) 'மன்றாடுவார்" என்ற சொல் பொ.ஆ.764ஆம் ஆண்டிலேயே இடம்பெறுகிறது. ஆனால் இது மன்றாடிகளை அதாவது இடையர் குலத்தைக் குறிப்பதாகத் தெரியவில்லை. 'மன்று'என்றால் கிராமத்தின் பெரிய மனிதர்கள் சந்தித்து நீதி கூறும் இடம் என்று பொருள் (N. Subramanian, 1990, pp.660-661.) . இவ்விடத்தில் கால்நடைகள் கட்டப்பெற்றிருந்தன. 'மன்று' என்ற சொல் சங்க இலக்கியங்களில் இடம் பெறுகிறது (அகம்: 14:11, 63:11, 64:14 ஐங் 246:4,252:2, கலி 119:10, புறம் 46:1).

சிவபிரானை மன்றாடி என்று 8, 9 ஆம் நூற்றாண்டு இலக்கியங்கள் சுட்டுகின்றன. இதற்கு வழக்காடுபவன் என்று பொருள். (Tamil Lexicon, vol.5, 1982,p.312.) ஆனால் இடைக்கால கல்வெட்டுகளில் 'இடையர்' 'மன்றாடி' இரண்டுமே கால்நடை மேய்ப்பவரையே சுட்டுகிறது. ஆயினும் இடையரைக் காட்டிலும் மன்றாடிகள் ஏதோ ஒரு நிலையில் உயர்ந்திருக்க வாய்ப்புண்டு என்று கருதத் தோன்றுகிறது. ஏனெனில் மன்றாடிகள் கொடையாளராக ஒரு சிலக்கல்வெட்டுகளில் இடம்பெறுகின்றனர். ஒரு வேளை இவர்கள் தங்கள் குலத்துக்குள் இருக்கும் பிரச்சனைகளைத் தீர்த்து வைக்க வழக்காடும் செயலை செய்திருக்கக்கூடும். ஆனால் கல்வெட்டுகள் இது குறித்து ஏதும் கூறவில்லை.

பல்லவர் காலம்

பல்லவர் காலக் கல்வெட்டுகளில் இடையர் என்ற சொல்லானது இடம்பெறவில்லை மன்றாடி என்றச் சொல்லே இடம்பெறுகிறது. மூன்றாம் நந்திவர்ம பல்லவனின் ஆமூர் கல்வெட்டில் 'கோட்ட மன்றாடி' என்னும் சொல் இடம்பெறுகிறது. ஆமூர் கோட்டத்து கோட்ட மன்றாடியிடம் 96 ஆடுகள் ஒப்படைக்கப்பெற்றுள்ளது. (SII,vol,XII,no.54) குலோத்துங்கச் சோழ காடவராயரின் விருத்தாச்சலம் கல்வெட்டில் மன்றாடிக்குடியைச் சேர்ந்த குன்றன் என்ற மன்றாடியிடம் ஆடுகள் ஒப்படைக்கப்பட்ட செய்தி இடம்பெறுகிறது. (SII,vol,XII,no.131)

பல்லவர் காலத்தில்தான் மிகப்பெரிய அளவிலான கற்றளிகள் உருவாக்கும் வழக்கம் தொடங்கியுள்ளது. இதன் பெரிய அளவிலான செயல்பாடுகளின்மையால் இடையர்களது செயல்பாடுகளும் பல்லவர் காலத்தில் இல்லை. பல்லவர் காலத்தில் மன்றாடி என்ற சொல்லாட்சியே உள்ளது. விளக்கெரிக்க நெய் பெறுதல் பொருட்டு கால்நடைகளை இடையர்களிடம் ஒப்படைக்கும் வழக்கம் பல்லவர் காலந்தொட்டே தொடங்கியுள்ளதை அறியயியலுகிறது.

இடைச்சேரி

பல்லவர் கால பக்திஇலக்கியமான திருவெம்பாவை என்ற பக்தி இலக்கியத்தில் பாவை நோன்பு பற்றியக் குறிப்புகள் உள்ளன. இப்பாவை நோன்பு இடையர்கள் வாழ்ந்த இடைச்சேரிகளிலேயே பின்பற்றப்பெற்றுள்ளதாக

சீ. மீனாட்சி குறிப்பிடுகிறார். இடையர்கள் வாழ்ந்த பகுதி 'இடைச்சேரி' என்று அழைக்கப்பெற்றுள்ளது. (C.Meenakshi,1977,p.204.)

இடைப்பூட்சி

'இடைப்பூட்சி' என்பது இடையர்களுக்கு அரசால் விதிக்கப்பெற்ற ஒரு வித வரி வகையாகும் (எ. சுப்பராயலு, 2002, ப.64.) பல்லவர் காலச் கொடைகளில் இவ்வரி பற்றியக் குறிப்புகள் இருப்பதாக மீனாட்சி குறிப்பிடுகிறார் (C. Meenakshi, opcit., 1977, p.21.)

இடைப்பாட்டம்

"பாட்டம்" என்பது தொழில் செய்வோர் மீது அரசு விதிக்கும் வரியாகும். சோழர்கால வருமானச் சொற்கள் குறித்து ஆய்வு செய்த ப. சண்முகம் அவர்களது கருத்துக்கள் ஈண்டுச் சுட்டத்தக்கது. 'பாட்டம்' சோழமண்டலத்தில் பொ.ஆ. 10ஆம் நூற்றாண்டு அளவில் அதாவது சோழர் காலத்தின் இரண்டாம் காலக்கட்டமாகிய பொ.ஆ. 985 முதல் 1070 வரையிலான காலத்திலேயே கல்வெட்டுகளில் காணக்கிடைக்கின்றன. தொண்டை மண்டலத்தில் 3ஆம் காலக்கட்டமாக கருதப்பெறும் 1070 முதல் 1179வரையிலான காலத்திலேயே காணக்கிடைக்கின்றன என்கிறார் (P.Shanmugam, 1987,p.12.). முதல் தோற்றம் பொ.ஆ. 1069இலேயை இடம்பெறுகிறது. ஆனால் இடைப்பாட்டம் என்பது 978ஆம் ஆண்டிலேயே தஞ்சாவூர் பகுதியில் இடம்பெறுகிறது. (SII,vol,III,no.150, 151) பிறத் தொழில்களுக்கு வரிகள் இடப்பெறுவதற்கு முன்பாகவே இடையர்களுக்கு வரிவிதிக்கப்பெற்றுள்ளது. பல்லவர் காலத்திலேயே இடைப்பூட்சி என்ற வரி இடையர்களுக்கு விதிக்கப்பெற்றுள்ளதை முன்னர் கண்டோம்.

'கோன்'

'கோன்' என்ற பட்டமும் இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் கோன் பட்டம் பெற்றவர்களுக்கு இடையர் என்ற சொல்லாடல் பயன்படுத்துப்படவில்லை. ஒரு சில கல்வெட்டுகளில் மன்றாடி கோன் என்ற தொடர் இடம்பெறுகிறது. (SII,vol,VII,no.824) கோன் என்ற பட்டம் பெற்ற மன்றாடிகள் பெரும்பாலும் கொடையாளர்களாகவேவுள்ளனர் (SII,vol,VII,no.824). இவர்களது பெயர்களிலும் உயர் அந்தஸ்துடையவர்களுக்கு கூறுவது போல் ஊர் பெயர் தந்தைப் பெயர் போன்றவை கூறி பின்னர் இவரது பெயர் குறிப்பிடப்படுகிறது. காட்டாக சேந்தன் திருவையாருடையான் கோன் என்ற மன்றாடி 4 பசுக்களை தானம் வழங்கியுள்ளார். சுரபி மன்றாடிக்கிணையன் மகன் நம்பியாரூரன் கோன். சங்கரந் ஆன கண்டராதித்த கோன், கந்தனான வைத்யநாத கோன் (SII,vol,V,no.643) போன்ற தொடர்கள் இடம்பெறுவது இவர்களது சமூக உயர் நிலையினை காட்டுவதாகவுள்ளது. கோன் என்ற சொல்லாடல் இரண்டாம் குலோத்துங்கனின் காலத்திலிருந்தே கல்வெட்டுகளில் காணக்கிடைக்கிறது. 1124ஆம் ஆண்டைச் சேர்ந்த திருமழபாடி கல்வெட்டே இவ்வாய்விற்கு கிடைத்த

காலத்தால் முற்பட்ட 'கோன்' பற்றி வரும் கல்வெட்டாகும். சோழர் காலத்தின் பிற்பகுதியில் இடையர்களில் ஒரு சிலர் சமூகத்தில் உயர் நிலைப்பெற்று அரையன், கோன் போன்ற அரசப்பட்டங்களைப்பெற்று தானங்களையும் வழங்கியுள்ளனர். மூன்றாம் குலோத்துங்கச் சோழன் காலத்தில் பொ.ஆ.1192இல் வாணகோவரையன் மன்றாடி அரைசைக்கோன் தம்பி நந்தாவிளக்கெரிக்க 90 பசுக்களையும் 3 எருதையும் வழங்கியுள்ளார் (SII,vol,VIII,no.122) .

சோழர் காலம்

சோழர்காலக் கல்வெட்டுகளில் இடையன், மன்றாடி என்ற சொல்லே பரவலாக காணப்படுகிறது. தஞ்சாவூர் பெரியக்கோயில் கல்வெட்டுகளில் மன்றாடி என்ற சொல்லாடல் இடம்பெறவில்லை. 'இடையன்' என்றச் சொல்லே இடம்பெறுகின்றது.

தஞ்சாவூர் பெரியக்கோயிலில் முதலாம் இராஜராஜன் மன்னர் காலத்தில் கால்நடைகள் பராமரித்து நெய் வழங்கும் பொறுப்பினை 'அடைக்குடிகள்' என்னும் குத்தகை இடையர் குடிகள் ஏற்றுள்ளனர் (SII,vol,II,nos.63, 94,95) . தஞ்சை பெரியக்கோயிலில் மட்டுமே 1000க்கும் மேற்பட்ட (1043) இடையர்கள் பணியாற்றியுள்ளனர்.

திருமழவாடி இறைவனுக்கு விளக்கெரிக்க பூபால சுந்தரனின் மனைவி கற்பகம் என்பவர் 90 செவரி ஆடுகளைத் தானமாக வழங்கியுள்ளார். இவை கொண்டு தினமும் உழக்கு நெய் வழங்க நுந்தா விளக்குக்குடிகளான மன்றாடிகளில் பலர் பொறுப்பேற்றுக்கொண்டுள்ளதை இரண்டாம் குலேத்துங்கச் சோழனின் திருமழபாடி கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. இதன் காலம் பொது ஆண்டு 1115 ஆகும். இவர்கள் பழைய 'நந்தா விளக்குக்குடிகள்' என்று அழைக்கப்பட்டுள்ளனர் (SII,vol,V,nos.640). இதனால் விளக்கு தானம் செய்யும் பொழுது பழையக்குடிகள் , புதியக்குடிகள் என்ற இரு வகை இருந்துள்ளனர் போலுள்ளது.

இடையர்களின் பெயர்களை எ. சுப்பராயலு, நொபுரு கராஷிமா ஆகியோர் பகுத்ததன் அடிப்படையில் பார்த்தால் தன் தந்தைப் பெயர், தன் பெயர் என்ற இருக்கூறுப் பெயர்களே கிடைக்கின்றன. எடுத்துக்காட்டு மேல்வரும் திருமழபாடிக் கல்வெட்டு.

திரு நுந்தாவிளக்கு 1க்கு விட்ட செவரி ஆ 90. இவ்வாடு 90ம் தேவர் பழைய நுந்தா விளக்குக் குடிகளில் கைகொண்டார்

மன்றாடி	சிங்கன் ஐயன் –	விளக்கு 1/8.	ஆடு 11 ¼
	மல்லன் சிங்கம்	விளக்கு 1/8	ஆடு 11 ¼
	திரு வரங்கன்வாய்	விளக்கு 1/8	ஆடு 11 ¼
	பெரியான் தொண்டன்		

வெம்பன் மாணிக்கன்

வெம்பன் பெற்றான்

90 ஆடுகளையும் பெற்ற இடையர்கள் நாளொன்றுக்கு உழக்கு* நெய்யினை திருமழபாடி உடையார் பண்டாரத்து செப்பு நாழியால் அளந்து கோயிலுக்கு கொடுக்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நெய்யினை கொண்டு கோயிலில் திருவிளக்கு ஏற்றும் பணியை அக்கோயிலின் தேவர்கன்மிகள் ஏற்றுள்ளனர். இந்த நொந்தா விளக்கு எறிப்பதற்கு இட்ட தராகுத்தி விளக்கு ஒன்றின் நிரை உட்கரு உட்பட 100 பலமாகும் (கிட்டத்தட்ட 1 கிலோ)

இடையர் பெயர்களில் பட்டன்

ஒரு சிலக் கல்வெட்டுகளில் இடையர் பெயரில் முன்னொட்டாக பட்டன் என்ற பிராமணருக்குரிய விருதுப்பெயர் இடம்பெறுகிறது. இரண்டாம் இராஜேந்திரனின் திருக்கோயிலூர் கல்வெட்டில் (1177 பொ.ஆ) 'பட்டன் வெம்பன்' என்ற இடையரின் பெயர் குறிப்பிடப்பெற்றுள்ளது (SII,vol,VII,no.948). இவர் 'திருவெண்ணை நல்லூர் உடையார் ஆட்கொண்ட தேவர் கோயில் மன்றாடி சுரபி மன்றாடிகளில் பட்டன் வென்பன்' என்று கல்வெட்டு வாசகம் உள்ளது. ஆதங்கி சாகரன் என்பவர் 4 பசுக்களை இறைவனுக்கு அபிஷேகத்திற்கு பால் வழங்கும் பொருட்டு கொடைவழங்கியுள்ளார். தினம் காலை சந்திக்கு நாழி பால் வழங்கும் பொருட்டு இடையன் பட்டன் வெம்பன் என்வரிடம் பசுக்கள் ஒப்படைக்கப்பெற்றுள்ளன.

சுரபி மன்றாடி என்று குறிப்பிடுவதுடன் மன்றாடியின் பெயரில் பட்டன் என்ற சொல்லாட்சி உள்ளது.

பாண்டிய மன்னர் ஸ்ரீ வல்லபனின் 20ஆம் ஆட்சியாண்டில் திருப்பத்தூர் ஸ்ரீதளி பரமேஷ்வரர் கோயில் இடையன் வெந்தன் பட்டனான திருவிதிக்கோன் என்பவர் நந்தாவிளக்கெரிக்க 25 சாவா மூவா பேராடுகளைப் பொறுப்பேற்றுள்ளது குறிப்பிடப்பட்டுள்ளது (SII,vol,XIV,no.246). இக்கல்வெட்டில் வெந்தன் பட்டன் என்றப்பெயரில் பட்டன் என்பது பின்னொட்டாக இடம்பெறுகிறது.

இடையர்கள் விளக்கேற்றுவதற்கு நெய் மட்டுமே வழங்கயியலுமா? இறைவனுக்கு அபிஷேகம் செய்ய பால் வழங்கும் பசுக்களை ஒரு சில பிராமணர்கள் மேற்கொண்டனரா? இங்கு இடையர் என்பது தொழில் பெயரா? என்பது போன்ற

---

* ஆழாக்கு என்பது கிட்டத்தட்ட 125 மில்லி கிராமாகும் (முகத்தல் அளவையில் 1/8 அரைக்கால்படி ஆகும்.) உழக்கு என்பது கிட்டத்தட்ட 250 மில்லிகிராமாகும். (திருமுக்கூடல் கல்வெட்டில் ஒருநாளைக்கு ஆழாக்கு எண்ணெய்யாக ஆண்டொன்றுக்கு 45 நாழி எண்ணெய் என்ற அளவில் ஆதுலர் சாலையில் இரவு விளக்கெரிய எண்ணெய் வழங்கப்பெற்றுள்ளது, இதே அளவே அங்கும் பின்பற்றப்பெற்றுள்ளது)

ஐயங்கள் எழுகின்றன. கல்வெட்டறிஞர் எ. சுப்பராயலு சில நேரங்களில் இவ்விதம் ஒரு சிலர் வைத்துக்கொள்வதுண்டு. பிராமணர்கள் இடையராக இருந்திருக்க வாய்ப்பு இல்லை என்று குறிப்பிட்டுள்ளார் .

இடையன் என்பவர் கோனார் சாதியையும் கோயிலுக்கு கொடுக்கப்பட்ட ஆடு மாடுகளை பராமரிப்பவர். இவர் மன்றாடி என்ற பட்டப்பெயரை கொண்டிருந்தார் என க.பன்னீர் செல்வம் இடையர்கள் கோனார் சாதியைச் சேர்ந்தவராகக் குறிப்பிட்டுள்ளார் (க.பன்னீர் செல்வம், 2016, ப.34). ஆனால் பிற்காலக்கட்டங்களிலேயே கோனார் என்பது சாதிப்பிரிவாகியுள்ளது. சோழர்காலத்தில் பட்டமாகவே பயன்பட்டுள்ளது. கால்நடைகள் மேய்ச்சல் நிலமானது மன்றாட்டு என்றேக் குறிப்பிடுகின்றது. ஈரோடு தாலுக்கா அர்த்தபலிஸ்வரர் கோயில் கல்வெட்டானது எல்லைகளை குறிக்கும் போது நாலு மன்றாட்டு உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது (SII,vol,IV,no.413). மன்றாடிகளில் ஆடுகளை மேய்ப்பவர் ஆடு மேய்க்கும் மன்றாடி என்றும், பசுக்களை மேய்பவர்கள் சுரபி மன்றாடிகள் என்றும் அழைக்கப்பெற்றுள்ளனர்.

மன்றாடி கலனை என்ற சொல் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பெறுகிறது. கலனை என்றால் கூட்டம் தொழில் சாதி என்று பொருள் கூறப்படுகிறது. எனவே இக்குடியினர் கூட்டமாக வாழ்ந்துள்ளதை அறியலாம்.

மன்றாடிகளுக்கு வழங்கப்பெற்றச் சலுகைகள்

சோழர் காலத்தில் மன்றாடிகளுக்கு நிறைய சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. நகரங்களில் மன்றாடிகளுக்கெனத் தனியே தெருக்கள் இருந்தன. இவர்களின் வீடுகள் கட்டும்போது இருபுறமும் வாசல்படிகள் அமைத்துக்கொள்ளலாம். வீடுகளுக்குச் சுண்ணாம்புச் சாந்து பூசிக்கொள்ளவும், நன்மைத் தீமைகளுக்குச் சிவிகை ஏறவும், உவச்சுக் கொட்டுவதற்கும் சாவு ஊர்வலத்தின்போது மேல்வளைவுள்ள பாடைகட்டி அதன்மேல் பச்சைப்பட்டு, புலியூர்பட்டும் கட்டிக்கொள்ளவும் பயன்படுத்துவதற்கும் சாந்து இட்டுகொள்ளவும், உரிமைப் பெற்றுள்ளதை அறியமுடிகிறது (க.பன்னீர் செல்வம், 2016, ப.41).

பாண்டியர் காலம்

பாண்டியர் காலத்திலும் இடையர், மன்றாடி, கோன், என்ற பெயர்களுடன் ஆயன், கோவலன் போன்ற பெயர்களும் இவர்களுக்கு வழங்கியுள்ளன. எட்டி, செட்டி, அரையர் போன்ற பட்டப்பெயர்களுக்கும் இவர்கள் பெற்றுள்ளனர் (வெ. வேதாச்சலம், 2018, ப.59) பாண்டியர் கல்வெட்டுக்களில் இவர்கள் ‘வெட்டிக்குடி இடையன்’ என்று குறிப்பிடப்பட்டுள்ளனர் (SII,vol,XIV,no.182, 185, 230).

ராமநாதபுரம் மாவட்டம் குந்தலகுண்டில் உள்ள ஜடாவர்மன் சுந்தர சோழ பாண்டியனின் 17ஆவது ஆட்சியாண்டைச் சேர்ந்த கல்வெட்டானது (SII,vol,XIV,no.159) மாதேவிபுரத்து வியாபாரி ஆயன் அரங்கனிடம் கொடுத்த ஆடு 25 எனக் குறிப்பிடுவதிலிருந்து ஆயன் என்ற சொல்லானது இக்கால கட்டம் வரை தொடர்ந்து வந்துள்ளமையும் ஆயர் என்பது இடையர்களை

குறிப்பிடுவதாகவும் கொள்ளலாம். பாண்டி மண்டலத்தில் ஆய்க்குடி என்ற ஒரு ஊர் இருந்துள்ளது (SII,vol,IV,no.372).

இக்காலத்தில் சுரபி மன்றாடிகள் கோயில் நிவந்தக்காரராக இருந்துள்ளனர். சுரபி மன்றாடிகள் என்போர் ஆட்டிடையர்களைக் காட்டிலும் வசதி வாய்ந்தவராக இருந்திருப்பரோ என்று கருதத்தோன்றுகிறது. இவர்கள் ஊழியமின்றி பணி செய்ததால் இவ்விதம் வெட்டிக்குடி என்று அழைக்கப்பட்டதாகவும், 13ஆம் நூற்றாண்டில் பாண்டிநாட்டுக்கோயில்களில் விளக்கெரிக்கும் பணியில் சங்கரப்பாடியாரும், செக்கரும் அதிக அளவில் ஈடுபட்டதால் இடையர்களுக்கான வாய்ப்புகள் குறைந்துள்ளதாகவும் வெ.வேதாச்சலம் குறிப்பிடுகிறார் (வெ. வேதாச்சலம், 2018,ப.57). வெட்டிக்குடியாக இருப்பின் இவர்கள் மீது வரிகள் விதிக்கப்படுவதேன்?

விஜயநகரக் காலம்

இடையன், மன்றாடி போன்றப் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. இடையர்களிடம் கோயில் திருப்பணிக்காக பிற சமூகத்தினரிடம் மானியம் வசூலிக்கும் பொழுது இடையர்களிடமும் மானியம் வசூலித்துள்ளனர். இராமநாதபுர மாவட்டம் திருப்புல்லானியிலுள்ள 2ஆம் கம்பணனின் 1374ஆம் ஆண்டைச் சேர்ந்த ஜெகநாதேஸ்வர சுவாமிக் கோயில் கல்வெட்டில் திருப்பணிக்கு நாட்டிலுள்ள அனைத்து இனத்தவரிடமும் பணம் பெற்றுள்ள செய்தி இடம்பெறுகிறது.

3.'நாட்டில் வைத்துக்கொடுத்த பிராமணர் பேர் 1க்கு பணம் .... ' (SII,vol,VIII,no.400)

4. .... வெள்ளாளன் பிள்ளைகள் இடையர் கண்ணாளர் உள்ளிட்ட சாதிக்கு பேர் ஒன்றுக்கு பணம் ½ யும்.

இதில் பிராமணர், வெள்ளாளர், செட்டி, தவசி, கைக்கோளர் ஆகியோருக்கு 1 பணமும் வெள்ளான்பிள்ளை, இடையர், கண்ணாளர், சான்றார் ஆகியோருக்கு ½ பணமும் வசூலிக்கப்பட்டுள்ளது. இடையரிடம் ½ பணம் வசூலிக்கப்பெற்றுள்ளது. இவர்களது பெயர் வெள்ளான்பிள்ளைக்கு அடுத்தநிலையில் குறிப்பிடுவது சுட்டத்தக்கது. இவ்விதம் கொடுக்கத்தவறியர்களை திருவேளக்காறரைக் கொண்டு தண்டுவித்திருப்பதையும் அறியமுடிகிறது.

தளைவிறை, புற்கூலி

முதலாம் தேவராயரின் திருப்பத்தூர் கல்வெட்டு மன்றாடிகள் மேய்க்கும் கால்நடைகள் திண்ணும் தளைகளுக்கும், புல்லுக்கும் கூட வரி விதித்துள்ளதை குறிப்பிடுகிறது.

முளவாய் இராச்சியத்துக்குச் செல்லும் தகட நாடு, எயில் நாடு, கலிங்கரைப்பற்று, வாரூர்ப் பற்று, முக்கநூர்ப்பற்று, புறமலை நாடு, ஆர்ப்பூர்

பற்று, பையூர்ப் பற்று, குடியூர்ப் பற்று, தென்சீர்மங்கலப்பற்று, சந்திரப் பற்று, ஆகிய பகுதிகளில் வாழும் மன்றாடிகள் தளைவிறை, புற்கூலி ஆகியவை அரசிற்கு செலுத்தவேண்டுமாய் சாசனம் எழுதப்பட்டுள்ளது (SII,vol,XXVI,no.266).

மன்றாடி அதிகாரிகள்

தேவராயரின் 1430ஆம் ஆண்டைச் சேர்ந்தக் கல்வெட்டொன்றில் மன்றாடி அதிகாரிகள் பற்றியக்குறிப்பு உள்ளது. தெள்ளூர் கோயிலுக்கு குறிப்பிட்ட மன்றாடிகளை திருவிளக்குக் குடிகளாக செயல்பட வசு நாயக்க தேசு என்ற மன்றாடி அதிகாரி பரிந்துரைத்துள்ளார் (SII,vol,I,no.54). இவரை வரி அதிகாரியாக (tax office) எ. சுப்பராயலு குறிப்பிடுகிறார். (Y.Subbarayalu, 2014,p. 245.) பொதுவாக வரி நிர்ணயிக்கும் அதிகாரியா? மன்றாடிகளுக்கு மட்டும் வரி நிர்ணயம் செய்யும் அதிகாரியா? என்பது தெரியவில்லை.

ஸர்வமானியங்களை கோயிலுக்குக் கொடை கொடுத்த மன்றாடிகள்

செங்குன்ற நாட்டு திருக்கச்சியூர் 2000 வெளிப்பற்று நாட்டு மன்றாடிகள் கோபத்தராயன் மகன் கம்பன், ஆளப்பிறந்தான் கோன் மகன் பெரிய முதலி ஆகியோர் திருக்கச்சூரிலுள்ள கச்சபேஸ்வரர் இறைவனுக்கு தாங்கள் பெறும் ஸாதம் போன்ற வரி வகைகளை ஸர்வமானியமாக வழங்கியுள்ளனர் (SII,vol,XXVI,no.331).

இடைத்துறை - ஸாதமாணிகம்

'ஸாதம்' என்பது இடையர் சமூகத்திற்கு விதிக்கப்பட்ட வரிவகையாகும். மணிகம் என்பது தலைவனைக்குறிக்கும். இடையர் சமூகத்தினரிடமிருந்து வரிகளை வசூல் செய்வதற்கு இடைத்துறை, ஸாதமாணிகம் போன்ற வரிவசூலிப்பவர்களை விஜயநகர அரசு நியமித்துள்ளது. இக்காலப்பொருளாதாரத்தில் மேய்ச்சல் சமூகத்தின் பங்கு அவசியமானதாக இருந்துள்ளது. இதனால் விஜயநகர போர்வீரர்களுடன் அதிக அளவிலான இடையர்கள் இங்கு குடிப்பெயர்ந்துள்ளனர் என எ. சுப்பராயலு குறிப்பிடுகிறார் (Y.Subbarayalu, opcit, 2014, p.xix.) ஆனால் இடைத்துறை என்பது ஒரு வித வரிவகையாக 1406ஆம் ஆண்டைச் சேர்ந்த வீரப்ரதாப தேவரின் வேலூர் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது (SII,vol,I,no.55).

மராட்டியர் காலம்

மராட்டியர் கல்வெட்டுகளில் இவர்களைப் பற்றிய அதிக செய்திகள் இடம்பெறவில்லை. வலங்கை இடங்கை சாதிப்பிரிவுகளில் இடையர் வலங்கை 22 சாதிப்பிரிவினரில் 10ஆவது இடத்தில் இடம்பெற்றுள்ளது (செ. இராசு, 1987, ப. 408).

முடிவுரை

இவ்விதம் இடையர்கள் சங்க காலந்தொட்டு மராட்டியர் காலம் வரை தொடர்ந்து , மேய்ச்சல் சமூகமாகத் திகழ்ந்துள்ளனர். பல்லவர் காலந்தொட்டு மராட்டியர் காலம் வரை கோயில் செயல்பாடுகளில் அதுவும் குறிப்பாக திருவிளக்குகள் ஏற்றுவதற்காக வழங்கப்பெறும் கால்மாடுகளைப் பெற்றுப் பராமரித்து அதிலிருந்து நெய்யைப்பெற்று கோயிலுக்கு வழங்கிவருவதன் வாயிலாக கல்வெட்டுகளில் இவர்களது பணிகள் தொடந்து குறிப்பிடப்பெற்றுள்ளன. முன்பே சுட்டியது போல் 'இடையன்' , மன்றாடி, கோன், 'தேவரிடைச்சான்றோர்' 'ஆயன்' 'கோவலன்' போன்ற பலப்பெயர்களால் இவர்கள் அழைக்கப்பெற்றுள்ளனர். பொதுவான குடிப்பெயராக 'திருவிளக்கு குடிகள்', 'கோபாலர் குடிகள்', 'சுரபி மன்றாடி' 'மன்றாடிக்கலனைகள்' 'மன்றாடிக்குடி' என்றும் அழைக்கப்பட்டுள்ளனர். அடைக்குடிகள் என்றக் குத்தகைக்குடிகள் இருந்துள்ளனர். இடையர்களிடமும் இடைப்பூட்சி, இடைத்துறை, தளைவிறை, புற்கூலி போன்ற வரிகள் வசூலிக்கப்பெற்றுள்ளது. சோழர் காலத்தின் பிற்பகுதியில் மன்றாடிகள் கோன் என்ற சிறப்பு அந்தஸ்துப்பெற்றுள்ளனர். 'கோன்' என்றப் பட்டப்பெயர்கள் பெற்றவர்கள் கோயில்களுக்குக் கொடைகள்வழங்கியுள்ளனர். மன்றாடி அதிகாரிகள் இருந்துள்ளனர். இவ்விதமான செய்திகளை கல்வெட்டுகள் நமக்குத் தருகின்றன. 19 , 20 ஆம் நூற்றாண்டுகளில் வீடுகளிலுள்ளக் கால்நடைகளைப் பாரமரிக்கவும் பசுகளிடம் பால் கறக்கவும் 'கோனார்' என்ற ஒரு பிரிவினர் இருந்துள்ளனர். அவர்களுக்கு பொங்கல் விழாவின்போது ஐந்தாம் நாள் கோனார் பொங்கல் என்ற விழா ஒரு சில கிராமங்களில் எடுக்கப் பெற்றுள்ளது. இல்லங்களில் மாடுகள் வளர்க்கும் நடைமுறைகள் குறைவானதால் தற்போது இச்சமூகத்தினர் இத்தொழிலை செய்கின்றனரா? எனத் தெரியவில்லை.

முதன்மைச் சான்றுகள்

South Indian Inscriptions, Vol. II, Nos.63, 94,95, ASI, New Delhi.

South Indian Inscriptions, Vol. III, Nos.121, 150, 151, ASI, New Delhi.

South Indian Inscriptions, Vol. IV, No.413, ASI, New Delhi.

South Indian Inscriptions, Vol. V, No.643, ASI, New Delhi.

South Indian Inscriptions, Vol. VI, No. 27, ASI, New Delhi.

South Indian Inscriptions, Vol. VII, No.824, 939, 948, ASI, New Delhi.

South Indian Inscriptions, Vol. VIII, No.122, ASI, New Delhi.

South Indian Inscriptions, Vol. XII, Nos, 54, 131, ASI, New Delhi.

South Indian Inscriptions, Vol. XIII, No.60, ASI, New Delhi.

South Indian Inscriptions, Vol. XIV, Nos, 84, 246, ASI, New Delhi.

South Indian Inscriptions, Vol. XVII, No.156, ASI, New Delhi.

நூற்பட்டியல்

இராசு, செ. (1987), தஞ்சை மராட்டியர் கல்வெட்டுகள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

சுப்பராயலு, எ., (2002) கல்வெட்டுச் சொல்லகராதி, தொகுதி.1, சாந்திசாதனா பதிப்பகம், சென்னை.

பன்னீர் செல்வம், க,. 2016, முதலாம் இராஜேந்திரசோழர், கி.பி1012-கி.பி1044 கல்வெட்டுகள் காட்டுகின்ற வரலாறு, சென்னை.

வேதாச்சலம், வெ. (1992) 'திருத்தங்கல் மாறஞ்சடையன் கல்வெட்டு', ஆவணம், இதழ்.2, தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சாவூர்.

Karashima Noboru, Subbarayalu etal., 1978, A concordance of the Names in the cola Inscriptions, vol. 1, SIP, Madurai.pp.xlix- li.

Meenakshi, C., (1977), Administration and Social life under the Pallavas, University of Madras.

Shanmugam, P., (1987), Revenue Systems of the cholas, 850-1279, new era publication, Madras.

Subbarayalu, Y. et. al., (2014), Inscriptions of the Vijayanagara Rulers, vol. I, part 1, Tamil Inscriptions, 2014, p. 245.

Subramanian, N., (1990, Pre Pallavan Tamil Index, University of Madras, Madras.

Tamil Lexicon, vol.1, (1982), Madras University, Madras.

நடுகல் கல்வெட்டுகள் – நாட்டுப்பிரிவுகளும் நாடாள்பவர்களும்

ச. பாலமுருகன்
செயலர், திருவண்ணாமலை மாவட்ட
வரலாற்று ஆய்வு நடுவம், திருவண்ணாமலை

அறிமுகம்

இந்தியாவில் நடுகற்கள் அதிகமாக கிடைக்கும் மாநிலங்களில் தமிநாடும் ஒன்று. கர்நாடகா, ஆந்திராவிலும் அதிக அளவில கிடைக்கின்றன. தமிழ்நாட்டில் இவை மலைகளிலும், மலையடிவார காட்டுப்பகுதிகளிலும் குறிப்பாக கிழக்குத் தொடர்ச்சி மலைகளான ஜவ்வாதுமலை, கல்வராயன்மலை, செங்கம் கணவாய், அரூர், கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம் மாவட்டங்களில் அதிக அளவில் கிடைக்கின்றன. அதாவது இப்பகுதியில் கிடைக்கும நடுகற்கள் ஆநிரை பூசலுக்காக இறந்து பட்ட வீரர்களுக்கு எடுக்கப்பட்டவையாகும். திருச்சி, மதுரை உள்ளிட்ட தென்பகுதியில் தற்பலிக்கற்களும் மேற்குத் தொடர்ச்சிமலையடிவாரத்தில் விலங்குகளால் தாக்குண்டு இறந்த வீரர்களுக்கும் எடுக்கப்பட்ட நடுகற்கள் ஒப்பிட்டளவில் அதிகமாக உள்ளன. இக்கட்டுரை நடுகல் கல்வெட்டுகள் அதிகம் கிடைக்கும் பகுதிகளிலும் தொறு பூசல் நடுகல் கல்வெட்டுகளையும் அடிப்படையாகக் கொண்டு வரைப்பட்டதாகும்.

தமிழகத்தில் கிடைத்துள்ள நடுகற்களில், 2300 ஆண்டுகள் பழமையான நடுகல் முதல் 20 ஆம் நூற்றாண்டில் வைக்கப்பட்ட நடுகல் வரை வகைபாடுகளில் 20 மேற்பட்ட வகைகளைக் கொண்டு தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் நடுகற்கள் காணக்கிடைக்கின்றன. இந்த நடுகற்கள் அதில் கல்வெட்டுகள் உள்ளூர் வரலாற்றினை ஆய்வு செய்யவும் ஆவணப்படுத்தவும் மிகப் பெரும் பங்கு வகிக்கின்றன. நடுகல் கல்வெட்டுகள் மூலம் ஆட்சியாளர்கள், உள்ளூர் குறு நில மன்னர்கள் அல்லது வேளிர்கள், ஊராளும் அரையர்கள், மக்கள், சேகவர்கள் என்ற பல்வேறு சமூக மற்றும அரசியல் பிரிவுகளையும் அவர்களுக்குண்டான உறவு மற்றும் முரண் குறித்தும் அறியமுடிகிறது. நடுகல் கல்வெட்டுகள் மூலம் சங்க காலத்தின் தொடர்ச்சியான திணை வாழ்வின் காட்சிகளை அறிய இயலும்.

இந்நடுகற்கள் அமைந்துள்ள ஊர், கோட்டம், நாட்டுப்பிரிவு இன்னபிற பெயர்ச் சொற்களும் வினைச் சொற்களும் தமிழின் செம்மையான வடிவத்தில் கிடைக்கின்றன. பேரரசுகள் எழுச்சி பெறுவதற்கு முன்பே அமைக்கப்பட்ட நடுகற்களிலும் கூட தெளிவான நாட்டுப்பிரிவும், நாடாள்பவர்கள்/ ஊராள்பவர்கள் குறித்தும் பல்வேறு நடுகற்களில் தகவல்கள் கிடைக்கின்றன. தமிழில் பெயரிடும் மரபும் நிலவியல் அடிப்படையான பெயர்களும் திணை மரபு

சார்ந்த பெயர்களும் காணப்படுகின்றன. இப்பெயர்கள் ஒரு சில மாறுதல்களுடன் இன்றும் தொடர்ந்து காணப்படுகிறது. அதுமட்டுமல்லாது, நடுகற்களில் உள்ள பெயர்கள் தமிழிலும் பிற மொழி கலப்பில்லாமல் செவ்வியல் வடிவில் உள்ளது. இது 6-8 ஆம் நூற்றாண்டில் முல்லை நிலப்பகுதியில் வாழ்ந்த மக்களின் பெயர்கள் நகர் பகுதியில் வாழ்ந்த மக்கள் பெயருன் ஒப்பிடத்தக்கது.

இக்கட்டுரையில் திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, வேலூர், திருப்பத்தூர், விழுப்புரம், சேலம், கிருஷ்ணகிரி, தருமபுரி ஆகிய மாவட்டங்களில் உள்ள நடுகற்களை இந்த கட்டுரை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. இப்பகுதி நடுகற்கள் தொன்மையானவையாகவும், கல்வெட்டு முழுமையாகவும், விளக்கமாகவும் கிடைக்கின்றன. பிற பகுதி நடுகற்கள் கல்வெட்டு தகவல்கள் குறைவாகவும், அல்லது போர், தீப்பாய்ந்தல், தற்பலி வேறு வகையில் கிடைக்கின்றன. எனவே, மேற்குறிப்பிட்ட மாவட்டங்களில் உள்ள நாட்டுப்பிரிவு மற்றும் நாடாள்வார்கள் குறித்து விரிவாக காணலாம்.

1. நாட்டுப்பிரிவுகள்

தமிழகத்தில் பண்டைய காலம் முதலே நாடுகள் என்ற பிரிவு இருந்துவருதை இலக்கியங்கள் மூலம் அறியலாம். தொடக்க கால பல்லவர்கள் முதல் நாடு, கோட்டம் போன்ற சொல்லாட்சி காணக்கிடைகிறது. மேலும் 6 ஆம் நூற்றாண்டு வரை கிடைத்த நடுகல் கல்வெட்டுகளில் ஒரு சில தவிர இதர கல்வெட்டுகளில் நாடு, கோட்டம் பயின்று வரவில்லை. 7 ஆம் நூற்றாண்டு முதல் பெரும்பான்மையான கல்வெட்டுகளில் நாடு, ஊர், பெயர்கள், போருக்கான காணரங்கள் முழுமையாக அறியமுடிகிறது.

மண்டலங்கள்

ஜெயங்கொண்ட சோழமண்டலம், நிகரிலி சோழமண்டலம், இராஜேந்திரசோழ வளநாடு, எதிரிலி சோழவளநாடு, முடிகொண்ட சோழமண்டலம்.

கோட்டங்கள்

பல்குன்றக் கோட்டம், வெண்குன்றக் கோட்டம், படுவூர் கோட்டம்.

நாடுகள்

புறமலை நாடு, கங்க நாடு, கோயினூர் நாடு, வேளாள நாடு, கோவூர் நாடு, தாயனூர் நாடு, எயில் நாடு, மீகொன்றை நாடு, மீவேணாடு, மேற்கோவலூர் நாடு, வல்லவரையர் நாடு, முரசுநாடு, பெரியநாடு, கடத்தூர் நாடு, மாசந்தி நாடு, தென்கூற்று நாடு, வேண்மங்கலம், காரிமங்கலம், பாப்பன்பாடி, சிந்தகப்பாடி, விசயமங்கலம், தகடுர் நாடு, புயநாடு, சிறுபாழ்நாடு, நரிப்பள்ளி நாடு, வேணாடு, தென்வேணாடு,கீழ்வேள்நாடு, வேர்குளநாடு, மண்டைகுளநாடு, மிலாடு, வாணகோப்பாடி,

இலாடைப்பாடி, சோழநாடு, கோவூர்நாடு, பெண்ணைவடகரை, பங்களநாடு, காந்தளூர்க்கூற்றம், புதனாட்பாடி, விழுப்பரையநாடு, அடையாறு நாடு,

(மீ- மேல், வேணாடு – வேள்நாடு, மிலாடு - மலைநாடு)

நாடாள்பவர்கள்

வ.எண்.	ஊர்	நாடாள்பவர்கள்
1	கண்ணப்பலூர்	கந்தவாணதி அரைசர் புறமலை நாடாள
2	குரும்பட்டி	புலையமன்னர் புறமலை நாடாள
3	நவலை	ஸ்ரீதேவர் கோயினூர் நாடு, வேளால நாடு, கோவூர் நாடு, எயில் நாடு, புறமலை நாடு, தாயனுர் நாடு (9 ஆம் நூற்.)
4.	செல்லம்பட்டி	பிருணிதுவியார் புறமலை நாடாள
5.	செல்லம்பட்டி	கடல்மாணிக்கம் உளைகுன்னை ஆள
6	தீர்த்தமலை	இராஜேந்திரசோழர் விரியூர் உத்தமசோழ புறமலை நாடாள
7	செல்லம்பட்டி	ஐயப்பதேவன் ராஜ்ஜியம் ஆள
9.	ஒட்டம்பட்டு	மாவலி வாணரயர் கங்கநாடாள

இவை தவிர, வேணாடாள, எயில் நாடு 500, எயில் நாடு 300 என்று பல்வேறு அரையர்கள், நாடாள்பவர்களாக கல்வெட்டில் குறிக்கப்பெறுகின்றனர்.

ஊர்கள்

நாடுகளுக்கு உட்பட்ட ஊர்ப் பெயர்கள் நிலவியல் சார்ந்த பெயர்களாக அதிகமாக காணப்படுகின்றன. நிலவியல் பெயர்கள் நல்ல தமிழில் இருந்ததால் அதன் பொருட்டு ஊர்ப் பெயர்களும் தமிழில் அமைந்துள்ளன.

அளவிப்பாடி, அளையிற்பாடி, ஆந்தைபாடி, ஆறாற்றூர், இராமந்தைப்பாடி (இரவு மந்தைகள் அடைத்துவைத்திருக்கும் பட்டி) இளங்குன்றி, கலியனூர், கீழ்குளக்கட்பாடி, கூடல், சாத்தனூர் சாற்றுப்பாடி. தொக்கைப்பாடி, பாசாற்றூர், பெருமுகை, போந்தை, மணிக்கல் கடவூர், மலையனூர், வயல்ஊர், விண்ணன் ஊர் வெண்மணி, வெண்மறுகோட்டு, வேளூர், முருங்கைச் சேரி, கருங்காலிப்பாடி, பெருங்குளத்தூர், வெண்ணம்(வீரணம்), புளியூர், தாழைவூர், புஞ்சி, தொப்புரவுப்பாடி,சீயமங்கலம், கடலாடி, கோவனூர், சுரைகுளத்தூர்.

ஊர் ஆள்பவர்கள்

வ.எண்	ஊர்	ஊர் ஆள்பவர்கள்
1	தொரப்பாடி	ஆறாற்றூர் ஆண்ட
2	வேளூர்	வேளூர் அளும் பனையமாரியார்
3	பாசாறு	பகைமதர் பாசாறாள
4	கருங்காலிப்பாடி	கொற்றவாசிற்கருசாத்தன் கருங்காலிப்பாடி ஆளும்
5	மிஷார்	பிருதிகங்கர் கீழ் வேணாடாள

ஊர் ஆள்பவர்களில் சிலர் பெயர் ஊரில் இருந்து வாழும் என்றும் ஆளா நிற்க என்றும் கல்வெட்டுகளில் குறிக்கப்படுகின்றனர்.

கிடைத்த கல்வெட்டுகளில் பாப்பன்பாடி கல்வெட்டு 5/6 ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்தது என கருதப்படுகிறது. அந்த கல்வெட்டிலேயே தகடுர் நாடாள என்று குறிக்கப்படுகிறது. இந்த நிலை தொடர்ந்து 8 ஆம் ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி வரை தொடர்ந்து, அதன்பின்னர் 3,4 நாடுகளை ஒன்றாக ஆளும் நிலை வந்துள்ளது. வீரணம் கல்வெட்டு வேணாடு 500 எயில் நாடு 300 எல்லாம் ஆள என்றும், நவலை கல்வெட்டு, கோயினூர் நாடு, வேளால நாடு,கோவூர் நாடு, எயில் நாடு, புறமலை நாடு, தாயனூர் நாடு என்றும் நாடுகளை இணைத்து ஆளும் நிலை வந்துள்ளது. அதன்பிறகு இந்நாட்டு எல்லைகள் 10 ஆம் நூற்றாண்டு முதல் மாறுதலுக்கு உட்படுகிறது. அல்லது வேறு பெயர் பெருகிறது. இம்முறை போன்றே ஊர் ஆள்பவர்கள் குறித்து நடுகல் கல்வெட்டுகளில்பயின்று வருகிறது. இவர்கள் ஆள், ஆண்ட, ஆளா நிற்க, வாழும் என்று வெவ்வேறு சொற்களில் குறிப்பிடுகின்றனர். 9,10 ஆம் நூற்றாண்டுகளில் கிடைக்கும் கல்வெட்டுகளில் சில வடமொழி எழுத்தும், ராஜ்யம் போன்ற நாட்டுப்பிரிவுகளும் வரத்தொடங்கின.

இடப்பெயர்கள்

கல்வெட்டுகளில் வரும் இடங்களான மலைகள், ஆறுகள் போன்றவை நிலவாகு பெயராக நல்ல தனித்தமிழில் பெயரிடப்பட்டுள்ளன. அவற்றின் விவரம்.

பாசாறு – தானிப்பாடிக்கு மேற்கே ஓடும் சிற்றாறு

மீமலை - மேற்குப்பகுதியில் உள்ள மலை

சிற்றிடையாறு - சிறிய இடைபோன்று குறுகலான ஆறு

அயங்கயக்கரை

முதுகொன்றை - முதுகுன்றை என்ற பொருளில் பழமையான மலையின் பகுதி

காவிரி வடகரை - காவேரியின் வடகரை வரை ஆடசிப்பகுதி இருந்தது

அடையாறு - ஆற்றின் பெயர்

அம்பலம் - ஊர் மன்றம்.

பெருங்கற்காலத்தில் தோற்றம் பெற்ற தொல்குடி வேளிர்கள் அப்பகுதியினை சிறுநாடாக பிரித்து ஆண்டுவந்தனர். வடதமிழக மாவட்டப் பகுதியில் பல்வேறு நாட்டு பிரிவுகள் இருந்ததைப் பற்றி நடுகல் கல்வெட்டு தெரிவிக்கிறது. சங்க இலக்கியத்திலும் பாணர், அதியர், துடியர், எயினர் போன்ற வேளிர்கள் குறிப்பிடப்படுகிறது. சங்க காலத்திற்கு பின்பும் இந்த வேளிர்கள் 10ஆம் நூற்றாண்டு வரை இப்பகுதியில் ஆட்சி செய்தும், வாழ்ந்தும் வந்துள்ளனர். பல்லவர்கள், கங்கர்கள் பேரரசாக உயர்ந்த போதும் இந்த வேளிர்கள் தொடர்ந்து தங்களது பண்பாட்டையும், ஆட்சியதிகாரத்தையும் தக்கவைத்துக் கொண்டிருந்தனர்.

நடுகல் கல்வெட்டில் முதலில் அரசர் பெயர், நாட்டின் பெயர், இடத்தின் பெயர், பூசலுக்குள்ளாகும் இனக்குழுவின்/வேளிரின் பெயர், மக்கள் பெயர், சேவகர் பெயர், ஊர் பெயர், ஆற்றின் பெயர் உள்ளிட்ட பல பெயர்ச் சொற்கள் காணக்கிடைக்கின்றன. அவற்றின் பெயர் இடும் முறையும், அதன் நிலம் சார்ந்த பொருளும் இங்கு காணலாம்.

1. பெயர்ச் சொல்

நடுகல் கல்வெட்டுகளில் வரும் பெயர்ச் சொல்லை அதன் படிநிலைப்படி கீழ்வருமாறு பிரிக்கலாம்

1. பெருநில ஆட்சித்தலைவர் – பேரரசு
2. குறுநில நாட்டை ஆளும் பகுதியில் -அரையர், அரைசர் என்ற வேளிர்
3. வேளிர்க்கு உட்பட்ட – மகன்/மக்கள்/மருமக்கள்
4. இவர்களுக்கு உட்பட்ட சேவகர்கள்.

1. பெருநில ஆட்சியாளர்கள்

பெருநில ஆட்சியாளர்கள் என்பவர் பல்லவர்கள், சோழர்கள், கங்கர்கள் போன்றவர்களாவார்கள். இவர்களின் பெயர் சமஸ்கிருதமாக இருந்தால் அப்பெயர்களை தமிழ்ப்படுத்தி வடமொழிநீக்கி தமிழில் பெயரிடும் மரபு அக்காலத்திலேயே இப்பகுதியில் அமைந்திருந்தது.

சான்றாக, கோவிஜைய என்று தொடங்கும் பல்லவ மன்னர் பெயர்களை, கோவிஜைய என்பதற்குப் பதிலாக கோவிசைய என்றும், சிம்ம விஷ்ணு என்பதற்கு பதிலாக சிங்க விண்ண என்றும் மாற்றம் பெற்றிருக்கும். விவரம் வருமாறு.

> *சிம்ம வர்மன் (சிங்க பருமர்) சிம்ம விஷ்ணு (சிங்க விண்ண) மஹேந்திர வர்மன் (மயீந்திர பருமன்) நந்தி வர்மன் (நந்திவருமன்) நரசிம்ம வர்மன்(நரைசிங்க பருமர்) நந்தி வர்மன்(நந்தி பருமர்) கம்ப வர்மன் (கம்ப பருமர்) தந்தி வர்மன்(தந்தி பருமர்) சக்கரவத்தி (போத்தரையர்) புருஷ வர்மர் (புருஷ பருமர்) ஐயப்பதேவன் (நுளம்ப*

அரசர்) சிவமாரன் (கொங்கணி அரசர்) கட்டிணைப் பருமர் (கட்டினை பருமர்) மாவலி வாணராயர் (பாணர்) அரிமிறை பருமர்(அரிமிறை பருமர்)

2. அரையர்கள்/வேளிர்கள்

நடுகல்லில் உள்ளூர் ஆளும் அரையர்கள், பேரரையர்கள் குறித்து அதிகளவில் இப்பகுதி கல்வெட்டுகள் குறிக்கின்றன. அரசர்கள் என்ற சொல் அரையர் என்று குறிக்கபடுகின்றன.

நீலகண்டரையர், வாணகோஅரைசர், வாணகோ அதிஅரைசர், பெரும்பாண அதிஅரைசர், சிரிகங்கரைசர், கொங்கணி அரைசர், சோமாசி கோ திருமான், அத்திமல்லன், கங்கநடாழ்வார்,

போன்றோர்கள். அரையர்களில் வாணர்,கங்க அரையர்கள் குறித்த தகவல்கள் இம்மாவட்டக் கல்வெட்டுகளில் பெரும்பாலும் குறிக்கபடுகின்றன. பெயர்களைச் சுட்டும் போது அவர்களின் சிறப்புக்களை பெயரிலேயே சேர்த்து வழங்கியுள்ளனர். அரையர் என்பதை சிறப்பு கருதி அதி அரைசர் என்றும், பாணர்களை பெரும்பாணர்கள் என்றும், ஸ்ரீகங்கரையரை சிரிகங்கரையர் எனத் தமிழ்ப்படுத்தியும் குறிக்கபடுகின்றன.

பொன்

பொன் என்ற முன்னொட்டு கொண்ட பல அரையர்கள் நடுகல் கல்வெட்டுகளில் குறிக்கப்படுகின்றனர். இவர்கள் பொன் என்ற பெயரை சிறப்பு கருதி வைத்துள்ளனர் என ஆய்வாளர்கள் சுட்டுகின்றனர். பொன் என்ற பெயரில் சில பெயர்ச் சொற்கள்.

பொன்மோதனார், பொன்னந்தியார், பொன்னுழதனார், பொன்னக்கனார், பொன்னி, பொன்னரம்பனார், பொன்னிதானார், பொன்மாந்தனார், பொற்றக்கையார் உள்ளிட்ட பெயர்கள் பயின்று வருகின்றனர்.

இந்நிலத்திற்கும் பொன்னிற்கும் நீண்ட தொடர்பு இருந்து வருகிறது. இப்பகுதியில் பாயும் பெண்ணையாற்றை இவ்வூர் மக்கள் பொன்னையாறு என்று அழைக்கின்றனர். இவ்வூர்களில் பெண்ணையாற்றிலிருந்து இன்றும் சில குறிப்பிட்ட இனமக்கள் பொன் தாது எடுத்துவருகின்றனர். இப்பகுதியில் உள்ள நாட்டார் தெய்வமான பொன்முடிராயர் கோயிலும் முக்கியத்துவம் பெற்றதாகும். இந்த பொன்முடி என்ற பெயர் இப்பகுதி மக்கள் பலரின் பெயராக அமைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. விண்ணன் என்ற பெயர் இப்பகுதி நடுகற்களில் பல இடங்களில் பயின்று வருகின்றன. அண்ணமையில் சாத்தனூர் மல்லிகாபுரத்தில் 4/5 ஆம் நூற்றாண்டு நடுகல்லில் விண்ணன் என்ற பெயர் உள்ளதால் இதை விஷ்ணு என்று பொருள் கொள்ளலாமா என்பது ஆய்வுக்குரியதாக உள்ளது. சான்றாக, கந்த விண்ணன், விண்ணன்

ஊர் ஆகியன. காளகண்டன் என்ற பெயரின் தமிழாக்கமாக நீலகண்டன் அறியப்படுகிறது. இப்பகுதியில் நீலகண்ட அரையர்கள் என்ற வேளிர் குடிகள் வாழ்ந்து வந்துள்ளனர்.

3. மக்கள் மற்றும் சேவகர் பெயர்கள்

நடுகல் கல்வெட்டுகளில் வரும் பெயர்கள் அரையர்களும் அவர்கள் கீழுள்ள ஊர் தலைவர்கள், அவர்களின் மகன்கள், மக்கள் (வீரர்கள்) சேவகர்கள் ஆகியோர் சுட்டப்படுகின்றனர். இவர்கள் பெயர்கள் பெரும்பாலும் ஒற்றை சொல்லாக நேரடியாக பொருள் கொள்ளக்கூடியவாறு அமைந்துள்ளன. இப்பெயர்கள் 1300 ஆண்டுகளுக்கு முன்பு வைக்கப்பட்ட பெயர்கள் எனினும் செவ்வியல் தன்மையுடன் காணப்படுகின்றன. மிகக்குறைந்த அளவே இப்பெயர்களில் வடமொழியான சமஸ்கிருதத்தின் தாக்கம் உள்ளது. அதுவும் நேரடி உச்சரிப்பு இல்லாமல் தமிழ்ப்படுத்தி பயன்படுத்தப்பட்டுள்ளது. அப்பெயர்கள் விவரம் வருமாறு.

அக்கந்தை கோடன், அக்கழிமல்லன், அண்ணாண்டை, அண்ணாவன், ஆசானிறைவன், ஆதட்டியார்,ஆந்தை பொன்னி, ஆரோகவாணர், ஆறதன், ஊணமிறையார், ஏறன், கந்த விண்ணனார், கடிபகையார், கடுவந்தையார், கணகற்றிடியார், கணமாதர், கதவசாத்தன், கருந்தேவகத்தி, களமுகற் பெருங்கருமான், காரிப்பெருமான், காலிமாறன், கிலாசைப் பட்டர், குறட்டாதன், குன்றக் கண்ணியார், குன்றக்கட்டி, கொற்ற விண்ற்ற குன்றனார், கொற்றம்பாக்கிழார், கொற்றவாசி கருசாத்தன், கொற்றாடையார், கோக்கடமர், கோத்தையார், கோவிவன், சாக்கை பறையனார், செம்பத் தொண்டன், செருவலியார், சேவர்பரி, சாத்தன், தாசமாரியார், தாளச்சாமி, திருமலை அழகியார், திருமான், துருமாவனார், தென்பலையார், நந்தத்றமையார், நந்தி பெருமாள், நந்திகுட்டி, நீர்க்குட்டியார் ,பகைமதர், பனைய நாத்தன், பனையமாரியார், பாணி, பாரதாயர், புதனடி, பொங்கலத் தொண்டன், பொங்கியார், பொற்காடன், பொற்சேந்தியார், பொன்னம்பரனார், பொற்றொக்கையார், பொன்மாந்தனார், பொன்மாதன், பொன்னிருவர் மங்களபெருமான் மறிதொறு மாசந்தி, மாமலன், மிறையார் வண்ணக்க சாத்தன், வண்ணக்கடையனார், வத்தாவன், வளியப்பூரார், , வாணன் வில்லி, விலக்குமிறையார், வின்றன் வடுகன், வீரவாண்ரையர், வேட்டுவதியரையர், வேணர்க்களியன், மாறகடலன், விற்சிதை, வேம்படி, கட்டங்கன், குடைஅழகியான், கள்ளன்தாழன்.

வேளிர்கள் என்பவர்கள் தொறுவிற்காக நடைபெற்ற பூசல்களில் தலைமை தாங்கி நடத்திய வேள் என்ற தலைவன், பிற்காலத்தில் குலத்தின் தலைவனாக நிலைபெற்றான். தண்டராம்பட்டு பகுதியில் உள்ள தா. வேளூர் இது போன்ற ஒரு வேளிர் வாழ்ந்த ஊராகும். அவன் நாட்டின் பெயர் அப்பகுதியில் விளையும் கொன்றை மரங்களின் முக்கியத்துவத்தைக் கருதி கொன்றை நாடு

என்று பெயரிட்டான். அது மேற்குப் பகுதியில் இருந்ததால் மீகொன்றை நாடு என்றும் மிகத் தெளிவாக பெயரிட்டு ஆட்சி செய்து வந்திருக்கிறார். இது போல கோவல் என்ற நிலப்பகுதி கோவலூர் நாடு என்றும் அது தற்கால திருக்கோயிலூருக் மேற்கு பகுதியாக இருப்பதால் அதை மேற்கோவலூர் என்றும் அழைக்கப்பட்டது. செங்கம் பகுதியில் பல வேளிர்கள் ஆட்சிபுரிந்து வந்துள்ளனர். அவர்கள் தங்கள் நாட்டை வேள்நாடு என்று அழைத்தனர். 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டஇலக்கியமான மலைபடுகடாம் வேள் நன்னன் சேய் நன்னன் ஆண்ட பகுதி,இதில் குறிப்பிடும் வேள் என்ற பெயர் 13 ஆம் நூற்றாண்டு வரை வேள்நாடாக பயன்படுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இட மற்றும் திசைக்கு ஏற்றவாறு கீழ் வேள்நாடு (கீழ்வேணாடு), மேல்வேள்நாடு (மீ வேணாடு) தென்பகுதி வேள்நாடு (தென்வேணாடு) என்றும் அழைக்கப்பட்டன. இது 5 மற்றும் 6 ஆம் நூற்றாண்டின் நாட்டுப்பிரிவு என்பதை கணக்கில் கொள்ளும் போது இப்பகுதியில் இருந்த வேளிர்களும், அவர்களுக்கு உட்பட்ட ஊர் தலைவர்களும் எவ்வாறு தெளிவான சிந்தனையுடன் நிலவிலயலைப் பற்றிய கூரிய அறிவுடன் இருந்திருக்கிறார்கள் என்று அறியலாம்.

இந்த வேளிர்களின் பெயர்கள் சங்க இலக்கியத்தினை அடிப்படையாகக் கொண்டுள்ளது. மேலும் இந்நடுகல்லை வெட்டியவருக்கு இலக்கண அறிவும் இருந்துள்ளது. புணர்ச்சி விதிகளை முறையாக பல இடங்களில் பயன்படுத்தியுள்ளனர். தற்சமம், தற்பவம் போன்ற இலக்கண விதிகளையும் முறைப்பட கற்றவர்களாக இருந்துள்ளனர். இவை 1300 ஆண்டுகளுக்கு முற்பட்டவர்களின் கல்வி நிலை, மேலும் இவர்கள் வாழ்ந்துவந்த பகுதி பெருநகரங்களுக்கு வெகு தொலைவில் உள்ள காடு மற்றும் மலைகள் நிறைந்த, வனவிலங்குகள் வாழும் பகுதி என்பதை கல்வெட்டுகள் வழியாக தெரியவருகிறது. அந்நிலையில் வாழ்ந்த அம்மக்களின் நிலத்தின் மீதான பற்றும் தமிழ்ப் பற்றும் வியக்கச் செய்கிறது.

சான்று நூல்கள்

செங்கம் நடுகற்கள், தமிழ்நாடு தொல்லியல்துறை, 1972

தருமபுரி மாவட்ட நடுகற்கள், தமிழ்நாடு தொல்லியல் துறை, முதல் தொகுதி 1975.

நடுகற்கள், ச. கிருஷ்ணமூர்த்தி, மெய்யப்பன் பதிப்பகம்.

நடுகல் கல்வெட்டுகளும் சிற்பங்களும், ச. கிருஷ்ணமூர்த்தி, மணிவாசகர் நூலகம்

பண்டைய தமிழ்ச் செவ்விலிக்கியங்களும் நடுகற்களும்(சமூகம், அரசியல், மொழி), ர. பூங்குன்றன், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை

மீகொன்றை நாடு, திருவண்ணாமலை மாவட்ட வரலாற்று ஆய்வு நடுவம், 2025

திருவண்ணாமலை மாவட்டக் கல்வெட்டுகள், (புதிய கண்டறிதல்கள்), திருவண்ணாமலை மாவட்ட வரலாற்று ஆய்வு நடுவம், 2025

சோழர் கல்வெட்டுகளில் உழுகுடிகள் - ஒரு சிறப்பு கண்ணோட்டம்

ஆ. துளசேந்திரன்
இணைப் பேராசிரியர்
கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

சுருக்கம்

வரலாற்று தொடக்க காலங்களில் கீழைக் காவேரிப் பகுதியில் பெருவாரியான உழுகுடிகள் காணப்பட்டனர். இவர்களே இடைக்காலச் சோழர் வரலாற்றில் உழுகுடிகளாகப் பெரும் முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக கருதப்பட்டனர். சமூக வரலாற்றில் வேளாண் தொழில் பெரும் மாற்றத்தினை உருவாக்கியது. சங்க இலக்கியங்களில் வேளாண் தொழிலில் ஈடுபட்டோரை அகவர், உழவர், எரோர், தொழுவர் போன்ற பெயர்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. சங்க காலத்தில் நிலவிய நிலவுடமை சமுதாயத்தில் நிலம் தனியுடைமைகளாக இருந்தாத தெரிகிறது. இவற்றை டி.டி கோசாம்பி இன்று தாழ்ந்த சாதிகளாக

கருதப்படுபவர்களே ஈதல் நிலையில் உணவை உற்பத்தி செய்யும் உழவர்களாகவும், தொழிலாளர்களாகவும் உள்ளனர். இவர்கள் அக்காலங்களில் உணவு உற்பத்தி செய்யும் நிலைக்கு காலம் கடந்து நுழைந்தாலே வர்க்க வேற்றுமை தோன்றிற்று என்கிறார். எனவே ஊற்பத்தி என்பது வரலாற்றில் பெரும் மாற்றதினை உண்டாக்கிற்று என்பது தெரிகிறது.

கல்வெட்டுகளில் உழுகுடி மக்களின் வாழ்க்கை முறை அவர்கள் மேற்கொண்ட தொழில் சார்த உட்பிரிவுகள் பழக்க வழக்கங்கள் சமூகத்தில் அவர்களுக்கிருந்த சமூகக் கட்டமைப்பு பற்றி கே.ஏ. நீலகண்டசாஸ்திரி,எ சுப்பராயலு, பர்டன் ஸ்டெயின், நொபொரு கராசிமா போன்ற வரலாற்றாசிரியர்கள் உழுகுடிகளைப் பற்றிய செய்திகளை ஒரளவிற்குப் பதிவு செய்துள்ளனர். வேளாண்மை தொழிலில் ஈடுபட்ட மக்களை உழுகுடி, உழுது பயிக்கும் குடி, இன்நிலம் உழுகுடிகள் சென்னீமரஞ்சி உள்ளிட்ட ஏரியமஞ்சி செய்யக் கடவரல்லாதாக, உழுப்பறையர் உழும் தொழில் செய்யும் பறையர் ஐயப்பன் கோயிலுந் திருமுற்றமும் உழுப் பறையரிருக்கும், உழப்பார் பயிர் செய்பவர் நந்தவனம் உழப்பார் இருவருக்கு நிசத நெல் குறுனி உழப்பான் பயிர்செய்வான், திருநந்தவனத்துக்கு வேண்டும் உழப்புக் குற்றப்படாமை உழப்பானாகவும், உழுதகுடிமக்கள் பயிரிடும் குடிகள் இன்நிலம் உழுதகுடிமக்களை ஆள்வரி வெட்டயமஞ்சி உழுதகுடிகள் பயிரிடும் குடிகள். இவ்வூர்ப் பிடாக வட்டத்தும் உழுதகுடிகளைப் பூவில் மாத்தாற் குறுனியாக உழுத்தான் குடி ஒரு வரி இந்நிலத்தால் வந்த இறை குடிமை உழுதான்குடி உட்பட மற்றும் உழுது பயிர் செய்து காராண்மையாக உழுது போன்றவாறு கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகிறது.

ஒரு நாட்டின் வரலாற்றை எழுதும்போது அரசியல் நிகழ்வுகளின் ஊடாக சமூகத்தின் பொருள் உற்பத்தி சக்திகளைக் கண்டறிந்து வரலாற்றின்

ஓட்டத்தினைக் காண்பது சாலச் சிறந்தது. சமூகத்திற்கு அடித்தளமாக விளங்குவது பொருள் உற்பத்தி முறையே. வேட்டையாடிய சமூகத்திலிருந்து மேய்ச்சல் நிலைக்கு மனித சமூகம் முன்னேறியுள்ளது. இவ் வரலாற்று வளர்ச்சி தமிழ்க சமூகத்திற்கு பொருந்தும்.

வரலாற்று தொடக்க காலங்களில் கீழைக் காவேரிப் பகுதியில் பெருவாரியான உழுகுடிகள் காணப்பட்டனர். இவர்களே இடைக்காலச் சோழர் வரலாற்றில் உழுகுடிகளாகப் பெரும் முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக கருதப்பட்டனர். சமூக வரலாற்றில் வேளாண் தொழில் பெரும் மாற்றத்தினை உருவாக்கியது சங்க இலக்கியங்ளில் வேளாண் தொழிலில் ஈடுபட்டோரை அகவர், உழவர், எரோர், தொழுவர் போன்ற பெயர்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. சங்க காலத்தில் நிலவிய நிலவுடமை சமுதாயத்தில் நிலம் தனியுடைமைகளாக இருந்ததாக தெரிகிறது. இவற்றை டி.டி. கோசாம்பி இன்று தாழ்ந்த சாதிகளாக கருதப்படுபவர்களே ஈதல் நிலையில் உணவை உற்பத்தி செய்யும் உழவர்களாகவும், தொழிலாளர்களாகவும் உள்ளனர். இவர்கள் அக்காலங்களில் உணவு உற்பத்தி செய்யும் நிலைக்கு காலம் கடந்து நுழைந்ததாலே வர்க்க வேற்றுமை தோன்றிற்று என்கிறார். எனவே உற்பத்தி என்பது வரலாற்றில் பெரும் மாற்றதினை உண்டாக்கிற்று என்பது புலனாகிறது.

கல்வெட்டுக்களில் உழுகுடி மக்களின் வாழ்க்கை முறை அவர்கள் மேற்கொண்ட தொழில் சார்ந்த உட்பிரிவுகள் பழக்க வழக்கங்கள் சமூகத்தில் அவர்களுக்கிருந்த சமூகக் கட்டமைப்பு பற்றி கே.ஏ. நீலகண்டசாஸ்திரி, எ.சுப்பராயலு, பர்டன் ஸ்டெயின், நொபொரு கராசிமா போன்ற வரலாற்றாசிரியர்கள் உழுகுடிகளைப் பற்றிய செய்திகளை ஒரளவிற்குப் பதிவு செய்துள்ளனர். வேளாண்மை தொழிலில் ஈடுபட்ட மக்களை உழுகுடி, உழுது பயிர்க்கும் குடி, இன்நிலம் உழுகுடிகள் சென்னீமரஞ்சி உள்ளிட்ட ஏரியமஞ்சி செய்யக் கடவரல்லாதாக, உழுப்பறையர் உழும் தொழில் செய்யும் பறையர் ஐயப்பன் கோயிலுந் திருமுற்றமும் உழுப் பறையரிருக்கும், உழப்பார் பயிர்செய்பவர் நந்தவனம் உழப்பார் இருவருக்கு நிசத நெல்குறுனி உழப்பான் பயிர்செய்வான், திருநந்தவனத்துக்கு வேண்டும் உழப்புக் குற்றப்படாமை உழப்பானாகவும், உழுதகுடிமக்கள் பயிரிடும் குடிகள் இன்நிலம் உழுகுடி மக்களை ஆள்வரி வெட்டியமஞ்சி, உழுதகுடிகள் பயிரிடும் குடிகள் இவ்வூர்ப் பிடாக வட்டத்தும் உழுத குடிகளைப் பூவில் மாத்தாற் குறுனியாக உழுத்தான் குடி வரு வரி இந்நிலத்தால் வந்த இறை குடிமை உழுதான்குடி உட்பட மற்றும் உழுது பயிர் செய்து காராண்மையாக உழுது போன்றவாறு கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

சோழமண்டலத்தில் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்ட உழைப்பாளிகளை சமூகத்தில் உழுகுடிகள் என்றுதான் கல்வெட்டுக்களில்

கையாளப்பட்டுள்ளது. உழுகுடிகள் சார்ந்த கல்வெட்டுக்கள் காவேரிப் பகுதியில் சுமார் 1000த்திற்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

சோழர்காலத்தில் நிலவிய சமூக அமைப்பை வரலாற்றாசிரியர்கள் நிலமானியச் சமூக அமைப்பு என வர்ணிப்பார்கள். பேரா.நீலகண்ட சாஸ்திரி இந்த நிலமானிய அமைப்பினை பற்றி வரலாற்றுப் போக்கின் ஒரு காலக்கட்டத்தில் நிலமானிய பொருளாதார அமைப்பில் நிலம் பிரதானம் பெறுகிறது. இந்நிலத்தில் உழுவுத் தொழில் செய்த பண்ணையாட்கள் அரசரிடம் இருந்து மானியம் பெற்று பிரபுவின் ஆனைக்குள் இருந்தனர். மேலும் பண்ணையாட்களும், குடியாணவர்களும் நிலத்துடன் பின்னி பிணைக்கப்பட்டிருந்தனர் என்பது தெரிகிறது.

சங்க காலத்தில் சோழர் கால வரலாற்றில் உழுகுடிகளின் நிலை வேளாண் அமைப்பில் நில உடைமைகள் பொதுவாக நிலப்பிரபுக்களின் கூட்டமைப்பில் இருந்தாலும் அல்லது தனிப்பட்ட நில உடைமையாளர்களிடமிருந்தாலும் வேளாண் உற்பத்தியில் ஈடுபட்டவர்கள் சிறு நில விவசாயிகள், வாரம் தாரார்கள், விவசாயக்கூலி அடிமைகள் ஆகியோர்கள் ஆவார்கள். அவர்கள் நிலையில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை. இவர்களுடைய நிலம் சிறு இடம் உதவியும் இன்றி தானாகவே உழுது பயிரிட்டனர். பர்ட்டன் ஸ்டெயன் கூற்றுபடி மத்திய காலத்தில் அரசின் நடைமுறையாலோ அல்லது வேறு காரணங்களாலோ வேளாண் விரிவாக்கம் பல புதிய இடங்களில் பரவலாயிற்று. இம்மாதிரி நேரங்களில் அவ்விடங்களில் ஏற்கனவே வாழ்ந்த பழ்ங்குடி மக்கள் புதிதாக ஆக்கிரமித்த நில உடைமையாளர்களிடம் வாரம் தாரார்களாகவோ அல்லது விவசாயக் கூலிகளாகவோ வாழ வேண்டிய சூழ்நிலைக் கைதிகளாக இருந்தனர்.

விவசாய உற்பத்தியில் ஈடுபடும் உழுகுடி மக்கள் அடுத்த நிலையில் உள்ளவர்கள் வாராம்தாரார்கள். சமுதாயத்தில் இவர்கள் நிலையும் விவசாய கூலி அடிமைகளைப் போன்றே இருந்துள்ளனர். காட்டாக ஜா என்ற அறிஞர் கி.பி. மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுச் சான்றைக் கூறி அவர்கள் அடிமைகளாக நிலத்தோடு விற்கப்பட்டனர் என்று கூறுகிறார். காத்லின் காப் என்ற ஆராய்ச்சியாளர் சோழர் காலத்தைச் சேர்ந்த வாரம்தாரார்கள் ஐரோப்பாவில் உள்ள அடிமைகளைப் போன்ற நிலையில் இருந்தனர் என்று கூறுகிறார். கல்வெட்டுக்கள் கூறுகிறபடி இக்காலத்திய வாரம்தாரர்கள் ‘குடிகள்’ அல்லது ‘குடிமக்கள்’ என்று அழைக்கப்பட்டனர்.

பெரும்பாலான இடங்களில் பள்ளர், பறையர் சாதியினர்கள் தான் உழுகுடிகளாக இருந்துள்ளனர். இவர்கள் கிராம்பஃபுறங்களில் அதிகமாக ஒதுக்குப்புறமான பகுதிகளில் வாழ்ந்து வந்துள்ளனர். நிலத்தோடு ஒண்டி வாழ்கின்ற ஒரு போக்கானது இம்மக்களிடம் காணப்பட்டது. நிலப்பிரபுகள்

தங்கள் நிலத்தை விற்கும் போது நிலத்தோடு அதில் உழுகுடிமக்களையும் சேர்த்து விற்பார்கள். இவர்கள் நிலையைப் பற்றிக் கூறும்போது சோழர் காலத்தில் 1117-ஆம் ஆண்டில் ஒரே சமயத்தில் தஞ்சாவூர் மாவட்டத்தில் திருக்கருகாவூர், அக்கலாபுரம் ஆகிய இரு இடங்களில் இரண்டாம் இராசேந்திர சோழனின் கல்வெட்டுச் செய்திகளை சுப்பராயலு ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்றில் கூறுகிறார். அதன்படி கல்வெட்டுகள் ஒரு பெண்மணிக்கு அவருடைய கணவன் இறந்துவிட்டால் அவருடைய நிலம் அவற்றோடு சேர்ந்து அடிமைகள் மற்றும் நகைகள் ஆகியவை அனைத்தும் அப்பெண்மணிக்கே சொந்தமாகும் என்று கூறுகிறது. இவற்றிலிருந்து அடிமைகள் நிலப்பிரபுவிற்குச் சொந்தமானவர்கள் என்று அறியமுடிகிறது. இதற்கு பின்னால் பஞ்சம் மற்றும் பொருளாதார சிதைவுகள் ஏற்பட்ட காலங்களில் உழுகுடிமக்கள் அடிமைகளாகவே நடத்தப்பட்டார்கள். பாரம்பரிய உழுகுடிகளாக இருந்த பள்ளர், பறையர் இனமக்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டார்கள்.

சோழர் காலங்களில் அதிகமாக உழுகுடி மக்கள் பாதிப்படைந்தார்கள் அவர்களைப் பற்றி நா. வாணமாமலை இம்மக்கள் தங்கள் எதிரிப்புகளைத் தங்கள் உயிர்களைவிட்டனர். பயிர்தொழில் செய்வதை புறக்கணித்தனர். கோயில் சுவர்களை இடித்துத்தள்ளினர். இதற்கு உதாரணமாக சோழர் காலத்திய கல்வெட்டு ஒன்று சதுரிமாணிக்கம் என்ற நடன மாது அவருக்கு ஜிவிதமாகக் கொடுத்த நிலங்களில் அவரது உறவினர்களின் வேளாண்மை உரிமையை நிலைநாட்டக் கோவில் கோபுரத்திலிருந்து குதித்து தற்கொலை செய்துகொண்டனர். மற்றொரு கல்வெட்டு கோவில் காவலர்களில் ஒரு சிலர் தங்களுக்கு ஜீவிதமாக ஒதுக்கப்பட்ட நிலங்களில் கோவில் அதிகாரிகள், வேளாண்மை செய்யும் உரிமையைத் தடுத்தமையால் கோவில் முன் தீக்குளித்துக் தங்களது உயிரை விட்டு இருக்கிறார்கள்.

சோழர் காலத்தில் விவசாய நிலங்களின் உற்பத்தியை பெருக்குவதற்குதான் பாடுபட்டார்கள் தவிர உழுகுடிமக்களின் வாழ்க்கைத் தரம் மிகவும் பின்தங்கிய நிலையில்தான் இருந்தது. நாட்டின் பொருளாதார வளர்ச்சி இலக்கியம், கலை, கட்டடக்கலை, பெருங்கோவில்கள் கட்டப்பட்டன. அதன் பயன்கள் பெருங்குடிகளுக்கு தான் கிடைத்தன தவிர உழகுடி மக்களுக்கு கிடைக்கவில்லை. அவர்கள் நிலப்பிரபுத்துவத்தாலும் அதிகார வர்க்கத்தாலும் நசுக்கப்பட்டனர். இதனால் எதிர்ப்புகள் அதிகரித்தன. சோழ அரசர்கள் இவர்களை அடக்கி ஒடுக்கினர். மேலும் பயிர்தொழிலில் ஈடுபட்ட மக்களை துன்புறுத்தி பயிர்தொழில் செய்ய தூண்டினர். அதிலிருந்து கீழ்காவேரி பகுதிகளில் அடிமைகளின் எண்ணிக்கை அதிகரிக்க நிலபிரபுக்கள் அவர்களை கொடுமைப்படுதினர்.

நூற்பட்டியல்

தெ.க.தொ. 1-32

இ.க.ஆ.அ.

இராமன் கே.வி, சோழர்கள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை

சதாசிவப் பண்டாரத்தார் தி.வை., பிற்கால சோழர் சரித்திரம், அண்ணாமலை பல்கலைக்கழகம், சிதம்பரம்

இலங்கையில் சோழர் கோயிற் பண்பாடு (பொலநறுவை வானவன் மாதேவி ஈஸ்வரத்துக் கல்வெட்டை ஆதாரமாகக் கொண்டு - ஒரு மீளாய்வு)

வ. மகேஸ்வரன்
வாழ்நாள் பேராசிரியர்
பேராதனைப் பல்கலைக்கழகம்

(பொலநறுவை வானவன் மாதேவி ஈஸ்வரத்துக் கல்வெட்டை ஆதாரமாகக் கொண்ட மீளாய்வு) - பேராசிரியர். வ. மகேஸ்வரன் -கி.பி. 10ம் நூற்றாண்டின் முடிவிலே முதலாம் இராசராசனது எட்டாவது ஆட்சியாண்டளவில் இலங்கையின் பிரதான பகுதிகள் சில சோழரது ஆட்சியதிகாரத்தின் கீழ் வந்தன. இதனைத் தொடர்ந்து சுமார் 77 ஆண்டுகள், அதாவது கி. பி 1070 வரை சோழராட்சி இலங்கையில் நிலவியது. சோழ மன்னர்களது கட்டடக் கலைப்பாணியில் அமைந்த கோயில்கள், படிமங்கள், கல்வெட்டுக்கள் என்பவை இதற்குச் சான்றாக உள்ளன. சோழராட்சி இலங்கையில் நிலவியபோது இது மும்முடிச்சோழ மண்டலம் என்ற பெயரில் விளங்கியதையும் வளநாட்டுப்பிரிவுகள் பல அதனுள் அடங்கியதையும் இங்கு காணப்பட்ட கல்வெட்டுக்களினூடாக அறிய முடிகிறது. மேலாக ஜனநாதமங்கலம் என்ற இடம் (தற்போது பொலநறுவை) சோழரது தலைநகராகவும் விளங்கியது. இந்தத் தலைநகரில் சோழரது இலங்கைப் பிரசன்னத்தை வெளிப்படுத்தும் பல தொல்பொருட்சான்றுகள் உள்ளன. இவற்றுள் பெரியதும் சிறியதுமாகப் பல சிவ ஆலயங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. சோழர் கலைப் பாணியை வெளிப்படுத்தும் இரு சிவஆலயங்கள் இன்றுவரை ஓரளவு நல்ல நிலையில் உள்ளன. அவை முதலாம், இரண்டாம் சிவ தேவாலயங்கள் என தொல்லியல் துறையினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. எனினும் இரண்டாம் சிவதேவாலயத்தின் கருவறையின் தெற்குச் சுவரில் அதிராஜேந்திரனது 3 ஆம் ஆட்சியாண்டுக்குரிய கல்வெட்டு இதனை "ராஜேந்திர சோழவளநாட்டு", நிகரிலிச் சோழவளநாட்டு ஜனநாதமங்கலத்து உடையார்வானவன் மாதேவீஸ்வரம்" எனக் குறிப்பிடுகின்றது. அத்துடன் முதலாம் இராஜேந்திரனது "திருமன்னி வளர" எனத்தொடங்கும் மெய்கீர்த்தியின் சிதைந்த பகுதியும் மேலும் சில சிதைந்த கல்வெட்டுக்களுமாக ஐந்து கல்வெட்டுக்கள் உள்ளன. எனினும் அதிராஜேந்திரன் காலத்துக் கல்வெட்டு ஒன்றே இருபத்து மூன்று வரிகளைக் கொண்டதாகவும் சோழர் காலத்தில் நிலவிய கோயிற்பண்பாடு இலங்கையிலும் தொடர்ந்து பேணப்பட்டவாற்றையும் அறிவதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகின்றது.

இந்தப் பின்னணியில் சோழர்காலத்து அரசுக் கோயில் கட்டுமானம் (Royal Temple Construction) மற்றும் தேவராஜ வழிபாடு (Devaraja Cult) ஆகியவை இலங்கையிலும் நிலவியதை முறையே கோயிற் கட்டுமானத்தினூடாகவும் அதற்குப் பெயரிட்ட முறைமையினூடாகவும் கட்டமைக்க இந்த ஆய்வு முயல்கிறது. தொடர்ந்து அதிராஜேந்திரன் காலத்துக் கல்வெட்டினூடாக கோயிற் பணிகளில் பங்கேற்ற,

அ. கோயிற் பணியாளர்/ அதிகாரிகள்

- அர்ச்சகர்கள் (பதிபாத மூலப்பட்டுடைப் பஞ்சாச்சார்ய தேவகன்மிகள்)
- சிவப் பிராமணப்பணியாளர் (திருவாராதனை பண்ணும் பிராமணன்)
- உவச்சன்
- ஆசாரியன்
- அரையன்
- காவல்

ஆ. பன்மாகேஸ்வரக் கண்காணி செய்வார்கள்

இ. தேவரடியார்கள்

ஈ. பரிசாரகர்

ஆகியோர் பற்றிய செய்திகளும் கோயிற் கொடை பற்றிய செய்தியும் அறியக்கிடக்கின்றன. இதனைஅடிப்படையாகக் கொண்டு சமகாலத்தில் சோழமண்டலத்துக் கோயில்களில் நிலவிய பண்பாடுகளுடன் ஒப்பாய்வு செய்யவும் இந்த ஆய்வு முனைகின்றது.

இதற்கு மேலாக இக்கல்வெட்டுச் செய்திகளை விவரணம் செய்த மூத்த அறிஞர்களது கருத்து நிலைகள் தொடர்பாகப் பரிசீலனை செய்யவும் இந்த ஆய்வு முயல்கிறது. வரலாற்று விவரணம், ஒப்பியல் மற்றும் பகுப்பாய்வு முறையியல்களினூடாக இந்த ஆய்வு நிகழ்த்தப்படவுள்ளது.

சோழ அரசு இலங்கையில் நிலைகொண்டமை தொடர்பாகப் பல்வேறு தொல்லியல் சான்றுகள் கிடைக்கின்ற போதும் அவை பற்றிய பல அறிஞர்கள் பல ஆய்வுகளை நிகழ்த்திய போதும், கல்வெட்டுகளால் கட்டமைக்கப்பட்ட வரலாற்று விவரணங்கள் நிகழ்த்தப்பட்ட போதும் இந்த ஆய்வு நுண்ணாய்வு முறைமையில் சோழர்காலக் கல்வெட்டொன்றை அடிப்படையாகக் கொண்டு இலங்கையில் நிலவிய கோயிற்பண்பாட்டை பொதுமையிற் கட்டமைக்க முயல்கிறது.

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையேயான உறவுகளின் வரலாறு மிக நீண்டது. அரசியல், கலாசாரம், மொழி முதலானவைகளால் தொடர்புகள் நிகழ்ந்தன. எனினும் சோழர்காலத்துத் தொடர்புகள் பற்றியே இக்கட்டுரை முனைப்புக் கொள்வதால் பிற்காலச் சோழர் என்று அறியப்பட்ட சோழர்களுக்கும் இலங்கைக்கும் இடையே ஏற்பட்ட தொடர்புகள் பற்றியே இக்கட்டுரை ஆராய்கின்றது. இந்தவகையில் பராந்தக சோழன்[1] காலத்திலிருந்தே இலங்கை மீது சோழப்படையெடுப்புகள் நடைபெற்றதை

அறியமுடிகிறது. இப்படையெடுப்பு கி.பி 944 இல் நிகழ்ந்ததாக அறிஞர் கூறுவர். எனினும் இப்படையெடுப்பு நிகழ்ந்து சுமார் 47 ஆண்டுகளின் பின்னர் முதலாம் இராஜராஜன் காலத்தில் கி.பி 991 இல் இலங்கையின் சில பகுதிகள் சோழர் வசமாகின. இக்காலம் தொடக்கம் கி.பி 1070 வரை சோழப் பேரரசின் ஆதிக்கத்துடன் இலங்கை இருந்தது. இதனை சோழர்களது கல்வெட்டுக்களும், கலாசார கட்டடத் தொகுதிகளும் மெய்ப்பிக்கின்றன.

முதலாம் இராசராசனது எட்டாம் ஆட்சியாண்டுச் சாசனங்களிலும், மெய்க்கீர்த்திகளிலும் சோழர் வசமாகிவிட்ட தேசங்களுள் இலங்கையும் (ஈழம்) அடங்கிவிட்டதனைக் குறிப்பிடுகின்றன[2]. அதுபோலவே இராசராசனது தஞ்சைப் பெரிய கோயில் கல்வெட்டுக்கள் அவனது ஆட்சிக்கால நிர்வாகப்பிரிவுகள் மும்முடிச் சோழமண்டலம் என இலங்கை அடங்கியுள்ளதையும், தஞ்சைப் பெரிய கோயிலுக்கு இங்கிருந்து நிவந்தங்கள் வழங்கப்பட்ட செய்தியையும் அறிய முடிகிறது[3]. எனினும் முழு இலங்கையும் சோழர் ஆட்சிக்குட்படவில்லை. முதலாம் இராசேந்திரன் காலத்தில் 1012 தொடக்கம் 1024 வரையான பன்னிரண்டு வருட காலத்தில் இலங்கை முழுவதும் சோழர் வசம் இருந்தது என்பர் அறிஞர்[4].எவ்வாறெனினும் 1070 வரை அதாவது முதலாம் குலோத்துங்கனது ஆட்சிககாலத்தில்தான் சோழர் ஆட்சி இலங்கையில் இல்லாதொழிந்தது. இந்தப் பின்னணியில் இலங்கையில் சோழராட்சி நிலவியதற்கான சான்றாக கல்வெட்டுக்கள் சில காணப்படுகின்றன. எனினும் அவற்றின் சிதைவு காரணமாக முழுமையாக வாசித்து அறிய முடியவில்லை. இது பற்றி பேராசிரியர் பத்மநாதன்.

"ஈழமான மும்முடிச்சோழமண்டலம் பற்றிய வரலாற்றின் பல அம்சங்களையும் முழுமையாகவும் தெளிவாகவும் கிடைக்கின்ற சாசனங்கள் மூலம் அறிந்துகொள்ள முடியவில்லை. ஆயினும் அவற்றின் மூலம் சோழராட்சி பற்றிய அடிப்படையான சில அம்சங்களைப் புரிந்துகொள்ள முடிகிறது" என்கிறார்[5]. மேலும் சோழ அரசர்களது ஆணைகளையோ நன்கொடைகளையோ அவை குறிப்பிடவில்லை. கோயில் தானங்கள் பலவற்றை அரசு அதிகாரிகள், படைவீரர்கள், வணிகர்கள் வழங்கிய செய்திகளே காணப்படுகின்றன. சோழ அரசின் ஆதிக்கம் இலங்கையில் நிலவாதகாலத்திலும் தமிழகத்து வணிகர்களதும், படைவீரர்களதும் சாசனங்கள் பல இலங்கையில் கிடைத்துள்ளன.

சோழராட்சி இலங்கையில் நிலவியதை மெய்ப்பிக்கும் இன்னோர் எடுத்துக்காட்டு அவர்களால் உருவாக்கப்பட்ட கட்டடத் தொகுதிகள் எனலாம்.

சோழர்களது பிரதான ஆட்சித்தலமாகப் பொலன்நறுவை என்ற இடம் விளங்கியது. மும்முடிச்சோழ மண்டலத்தின் தலைநகரான இது ஜனநாதமங்கலம் என்றழைக்கப்பட்டது. இங்கு சோழர்களுடைய பத்துக்கும் மேற்பட்ட கோயில்களின் எச்சங்களையும், படிமங்களையும் காணலாம். சிவதேவாலயங்களும், விஷ்ணு தேவாலயங்களும் இங்கு கட்டப்பெற்றன. சோழருடைய கோயிற் கட்டடக்கலையின் சின்னமாக முதலாம், இரண்டாஞ்

சிவதேவாலயங்கள் விளங்குகின்றன. இன்றும் நல்ல நிலையில் உள்ள இரண்டாஞ் சிவதேவாலயத்திற் கிடைத்த அதிராஜேந்திரன் காலக் கல்வெட்டொன்று அதனை ஜனநாத மங்கலத்து உடையார் வானவன் மாதேவீஸ்வரமுடையார்கோயில் என்று குறிப்பிடுகின்றது. தமிழகத்தில் நிலவிய சோழர் காலக் கோயில்களுக்கேயுரிய நிர்வாக முறைகளும், சேவைகளும், தானங்களும் இலங்கையிலும் இடம்பெற்றன என்பதற்கு இக்கல்வெட்டு மிகச் சிறந்த உதாரணமாக விளங்குகின்றது.நான்கிற்கும் மேற்பட்ட விஷ்ணு கோயில்கள் இங்கு இருந்ததாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. அவை ஒன்றேனும் நல்ல நிலையில் இல்லை.

வானவன்மாதேவீஸ்வரம்,கருவறை,அந்தராளம்,அர்த்தமண்டபம்,ஸ்தம்ப மண்டபம், நந்திபீடம், கோபுரவாசல் ஆகிய பகுதிகளுடன் அமைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது அதன் சிதைவுகளின் எச்சங்களால் அறிய முடிகின்றது. கருவறையும்,அந்தராளமும், அர்த்த மண்டபமுமே இன்றுவரை நல்ல நிலையில் நிலைத்துள்ளன. கோயில் வளாகம் 96' நீளமும் 84' அகலமும் உடையதாக அமைந்திருந்தது. மதிற்சுவர் செங்கட்டியால் கட்டப்பட்டது. கோயில்,கல்லாலும், செங்கட்டியாலும் கட்டப்பப்பட்டுள்ளது. கருவறை 20'ஓ 6' சதுரமுடையது. அதிஷ்டானம் 4' - 1" உயரமும், சுவர் 12' உயரமும் 5',8" உயரமும், 2' - 8"அகலமும், 1' உட்குழிவும் உள்ளதாகத் தேவ கோஷ்டங்கள் அமைந்துள்ளன. கருவறைச் சுவரில் அரைத்தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை தடி, குமுதம், கண்டம், பலகை, பந்தம், போதிகை, எனும் உறுப்புகளமைந்தனவாக உள்ளன. கருவறையின் மேலே திரிதளவிமானம் 31',9" உயரமுடையது. கருவறையின் மேல் அகன்ற வளைவான கொடுங்கைகளும், யாழிகளும், உள்ளன. இதன் முதற் தளத்தில் நான்கு மூலைகளிலும் 3' நீளமும் 2', 8" உயரமும் உடைய கூடங்கள் உள்ளன. இவற்றிடையே சாலைகளும் நாசிகைகளும் உண்டு. இரண்டாம் தளம் 13',6" அளவுடைய பக்கங்களைக் கொண்ட சதுரமாகும். இதன் பீடத்தில் குமுதம், கண்டம், பத்மபட்டிகை ஆகிய அம்சங்கள் இடம்பெற்றுள்ளன. இதில் 12 அரைத் தூண்களுண்டு. 4', 4" சதுரம் கொண்ட மூன்றாம் தளம் எண்கோண வடிவுடையது. இதில் 2',9" உயரமுடைய அரைத்தூண்களுண்டு. இதன் பரிவாரத் தெய்வங்களாகப் பிள்ளையாரும், முருகனும் இடம் பெற்றிருக்க வேண்டும். பிள்ளையார் சிலை தற்போதும் உண்டு. முருகன் கோயில் மறைந்துவிட்டது[7].

மூலவர் ஆரம்பகாலச் சோழர் கோயிலுக்குரிய பாணியில் ஆவுடையார் அற்ற லிங்கமாகக் காணப்படுகின்றது. நந்திபீடமும் மிகச் சிறிதான அமைப்பை உடையதாகக் காணப்படுகின்றது. இதனது அமைப்பை நோக்கும் போது நார்த்தாமலையில் உள்ள விசயாலய சோழீஸ்வரம் போன்ற அமைப்புடையதாக அல்லது அதனை நினைவூட்டுவதாகவே காணப்படுகின்றது. இந்தக் கோயில் சோழர் காலத்தில் தமிழகத்தில் எழுப்பப்பட்ட பெருங்கோயிலை ஒத்த பிரமாண்டமானதாக இல்லாது போயினும் இலங்கையில் சோழர் ஆட்சி நிலவியதன் சின்னமாகவும், இலங்கையில் திராவிடக் கட்டடக் கலை

மரபின் பிரதான அடையாளமாகவும் விளங்குகின்றது என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

மேற்குறித்த பின்புலத்திலே தான் வானவன் மாதேவி ஈசுவரம் என்ற பெயரையும் இணைத்துப் பார்க்க முடிகின்றது. வானவன் மாதேவி என்ற பெயரில் மூவர் அறியப்பட்டனர். உத்தம சோழனின் மனைவியான வானவன் மாதேவி இருக்குவேளிர் குலத்தில் இருந்து வந்தவர். இவர் பற்றிய செய்தியை கைலாசநாதர் கோயில் கல்வெட்டொன்றால் அறிய முடிகிறது. (SII Vol.XIX No.31) முதலாம் இராசேந்திரனது மனைவியான திரிபுவனமாதேவி என்று அறியப்பட்ட வானவன் மாதேவி பல கோயில்களுக்கு விஜயம் செய்து பல தானங்களை வழங்கினார். திருவிடை மருதூரில் இவரது கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. (ARE. No.215 of 1907)

சுந்தர சோழனின் மனைவியான வானவன் மாதேவி மலையமான் என்ற சிற்றரசுக் குழுமத்தில் இருந்து வந்தவள். இரண்டாம் பராந்தகனான சுந்தர சோழனின் பிரதம பட்டத்தரசி, முதலாம் இராசேந்திரனது திருவாலங்காட்டுச் செப்பேடு இவளை கற்புடைய பெண்ணான 'அருந்ததி' என ஒப்பிடுகின்றது. (SII, Vol.III, No.205) இவளது பெயர்களால் ஆற்றுப் பாசன வாய்க்கால்கள், ஊர்கள், பிரமதேயங்கள் என்பன அமைந்தன: இரண்டாம் ஆதித்தன், முதலாம் இராசராசன், குந்தவை ஆகியோரது தாய்; சுந்தர சோழன் இறந்தபோது இவளும் தனது கணவனுடன் சதி(உடன்கட்டை) வழக்கத்தை மேற்கொண்டு உயிர் நீத்தவள்; (SII, Vol. VII, No.863), "இந்திரனுக்குச் சமமான புலியான முதலாம் இராசராசனைப் பெற்ற தங்கமான பெண்"; என்று இவள் சிறப்பிக்கப்பட்டவள். இவ்வாறான சிறப்புக்கள் பெற்ற வானவன் மாதேவி சோழ அரச வம்சத்தின் வரலாற்றில் மிகவும் சிறப்புப் பெற்ற பெண்ணாக இருந்துள்ளாள். எனவே இவளின் சிறப்பினைக் கௌரவிக்கும் வகையிலே இலங்கைக் கோயிலுக்கும் 'வானவன் மாதேவீஸ்வரம்' எனப் பெயரிட்டிருக்கலாம்[7].

இந்த பெயரிட்டமையை இன்னோர் விதத்திலும் கட்டமைக்கலாம். சோழ அரசில் நீத்தாரை நினைவுகூரும் வகையில், அவர்களுக்குத் தெய்வீக அந்தஸ்த்து அளிக்கும் வகையில் பள்ளிப் படைக் கோயில்கள் அமைக்கும் மரபு ஒன்று நிலைபெற்றது. முதலாம் ஆதித்த சோழனுக்கு பேராற்றூரில் எழுப்பப்பட்ட கோதண்ட ராமீஸ்வரம், அரிஞ்சய சோழன் நினைவாக எழுப்பப்பட்ட அரிஞ்சிகையீஸ்வரம் (வட ஆர்க்காடு), இராசராசனுக்கு உடையாயுளூரில் எழுப்பப்பட்ட கோயில், ஆகியவற்றை இவற்றுக்கு உதாரணமாகக் கூறலாம். அரசமாதேவியருக்கும் இவ்வாறு பள்ளிப்படைக் கோயில்கள் எழுந்தன. முதலாம் இராஜராஜன் மனைவியருள் ஒருவரான பஞ்சவன் மாதேவி நினைவாக முதலாம் இராசேந்திரன் பட்டீஸ்வரத்தில் பஞ்சவன் மாதேவீஸ்வரம் என்ற கோயிலை எழுப்பினான். இரண்டாம் பராந்தக சுந்தர சோழனுக்கும், அவன் மனைவி வானவன் மாதேவிக்கும் கண்டியூருக்கு

அண்மையில் இரட்டைக் கோயில் எழுப்பப்பட்டது. இரண்டாம் இராசராசன் இறந்தபோது அவனுடன் சதிவழக்கத்தைக் கடைப்பிடித்து இறந்த நான்கு தேவியருக்குமாக அரசலாற்றங்கரையில் ஐந்து கோயில்கள் எழுப்பப்பட்டன[8]. எனவே இந்த மரபின் அடியாகவும் சோழ அரசியற் குழாத்தில் புகழ்பெற்ற வானவன் மாதேவி நினைவாக அவளுக்கு மதிப்பளிக்கும் வகையில் இவ்வாலயம் எழுப்பப்பட்டிருக்கலாம் என யூகிக்க இடமுள்ளது.

இதனை இன்னோர் வகையிலும் கட்டமைக்கலாம். அரசுகளின் உருவாக்கம் பற்றிப் பேசும் போது 'தெய்வ வழிக்கோட்பாடும்' அதனுள் ஒன்றாக அமைகிறது. அரசன் தெய்வத்தின் பிரதிநிதி என்ற கருத்தியல் நீண்ட காலமாக இந்தியாவில் நிலவி வந்தது. கி.பி முதலாம் நூற்றாண்டளவில் இருந்து வட இந்தியாவில் குஷானரும் வேறு அரச மரபினரும் 'மகேஸ்வரன்', 'சர்வலோக ஈஸ்வரன்' போன்ற முழுமுதற் கடவுளுக்குரிய உன்னதமான விருதுகளைச் சூடிக்கொண்டார்கள்[9]. தமிழகத்திலும் அரசன் தெய்வத்தின் பிரதிநிதி என்ற கருத்தியல் நீண்ட காலமாக நிலவியன திருக்குறளில் அறியலாம்[10]. ஆயினும் அவர்கள் முழுமுதற்கடவுள் என்ற நிலையைப் பெற்றிருக்கவில்லை. ஆனால் சோழர்காலத்தே அவன் முழுமுதற்கடவுள் எனும் கருத்தியல் அழுத்தம் பெற்றது போலத் தெரிகிறது. சோழர் காலத்துக்கு முன்னதாகவே அரும்பத் தொடங்கிய அரச உரிமை தெய்வாம்சமானது எனுங் கொள்கை. சோழர் காலத்திலே பூரணத்துவம் பெற்ற ஆட்சிக் கோட்பாடாக அமைந்தது என்பதில் ஐயமில்லை. ஆங்கிலத்தில் இதனை "Divine Right of the Kings" என்பர். அரசனை மானுடனாகவன்றித் தெய்வமாகவே பாவிக்க இந்நம்பிக்கை வழி செய்தது. உலகமெங்கும் நிலமானிய அமைப்பிலே காணப்படும் ஓர் அம்சம் இது என்பதனை நாம் மனங்கொள்ளல் தகும். "திருவுடை மன்னரைக் கண்டால் திருமாலைக் கண்டேனே என்னும்" எனப் பாடிய நம்மாழ்வார் திருமொழியிலும், "அரிமா சுமந்த அமளியோனைத் தருமாவளவன் எனத் தேறேன் - திருமார்பின் மனமால் என்றே தொழுதேன்" என்ற பழம்பாடலிலும் அரசனின் கடவுட்தன்மை சுட்டிக்காட்டப் பெறுகின்றது. சோழர் காலத்தில் அதுவே பெரு நம்பிக்கையாக உருப்பெற்றிருந்தது[11]. சோழர்காலப் பள்ளிப்படைக் கோயில்கள் இறந்த அரசனைத் தெய்வமாக்கின என்பார் ஒகுரா[12]. இடைக்காலத்தில் தேவராஜன் வழிபாட்டுடன் (Devaraja Cult) இது ஒப்பிடக்கூடியது.

மேலும்அவர்கள்எழுப்பியகோயில்களில்சிலபடிமங்களுக்குமுக்கியத்துவம் கொடுத்தனர். உதாரணமாக இராஜராஜேசுவரத்தில் கருவறையில் புறச் சுவர்களிலெல்லாம் திருபுராந்தக மூர்த்தியின் படிமம் அமைக்கப்பட்டுள்ளது. இந்தச் செயல் அரசனைக் கடவுள் நிலைக்கு உயர்த்துவதன் இன்னோர் உத்தியாகும். சிவன் முப்புரங்களையும் எரித்த வரலாறு அவரது அட்டவீரச் செயல்களுள் மிகவும் சிலாகித்துப் பேசப்படுவதொன்றாகும். தேவார முதலிகள் இச்செயலை மிகவும் பிரதானப்படுத்திப் பாடியுள்ளனர். இங்கு பகையரசரை வென்று வெற்றிவாகை சூடிய பேரரசனைச் சிவனுக்குச் சமமாக

உருவகிப்பதன் செயற்பாடே இதுவாகும். இறைவன் அரசனாகவும், அரசன் இறைவனாகவும் கொள்ளும் மரபே இது என்கிறார் ஸ்பென்சர்[13]. இதே செயல் இராஜேந்திரனது கங்கைகொண்ட சோழபுரக் கோயிலில் இன்னொரு விதமாக விரிந்தது. அங்கே சண்டேஸ்வர அனுக்கிரக மூர்த்தி படிமங்கள் முக்கியம் பெற்றன. இறைவனது வாரிசாக அல்லது இராசராசனின் வாரிசாகத் தன்னை நிலைநிறுத்தி அதனூடாகத் தனக்குரிய முக்கியத்துவத்தை நிலைநிறுத்தும் செயற்பாடே இதுவாகும். பெரு வெற்றிகொண்ட வீரன் கடவுளின் வாரிசாகத் திருநிலைப் படுத்தப்படுவான் என்பதும் இதன் கருத்தியலுள் ஒன்றாகும். மேலும் கோயில்களில் அரசரது ஜென்ம நட்சத்திர விழா எடுத்தல், அரசரது படிமங்களை வைத்தல் முதலியனவும் அரசனைக் கடவுளாக்கும் செயற்பாடுகளே எனலாம்.

இவற்றைவிடத் தாம் கட்டிய கோயில்களை நாடு தழுவிய மைய நிலையங்களாக வடிவமைப்பதிலும் கவனத்தைச் செலுத்தினர். இராஜராஜேசுவரம் அதற்குச் சிறந்த உதாரணமாகும்.முதலில் இராஜராஜன் கோயிலுக்குப் பல தானங்களை வழங்குகின்றான். தொடர்ந்து அரச குலத்தவர் இதனைப் பின்பற்றினர். அடுத்த நிலையில் அரசு அலுவலர்களும் படைவீரர்களும் இச்செயற்பாடுகளில் தம்மை இணைத்துக் கொள்கின்றனர். இதற்கு அடுத்த நிலையில் தஞ்சாவூர் மக்கள் பல செயற்பாடுகள் தொடர்பாக இணைக்கப்பட்டார்கள். பின்பு சோழ மண்டலத்தின் பல வளநாடுகளும், அந்நாடுகளில் பரவியிருந்த பல பிரமதேயங்களும் ஊர்களும், கோயில்களும் இதன் செயற்பாட்டில் தமது பங்களிப்பைச் செலுத்தின. இறுதியாகக் கடல்கடந்த மும்முடிச் சோழமண்டலமும் இந்தச் செயற்பாட்டுடன் இணைந்து கொள்கின்றது. சோழராட்சி உறுதியுடன் நிலவிய பொரும்பாலான பகுதிகளின் தலைமையிடமாக ராஜராஜேஸ்வரம் கட்டமைக்கப்பட்டது.

(கோயிலில் செய்யப்பட்ட ஏற்பாடுகளை) கூர்ந்து ஆராய்ந்தால் ஒவ்வொரு கட்டத்திலும் மக்களுடைய வாழ்க்கையும் கோயிலும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்திருந்தது. சோழப் பேரரசு முழுமைக்கும் தலைநகராகவிருந்த தஞ்சைக்குப் பெரிய கோயில் எழிலும் பொலிவும் கொடுத்தது. ஏனைய கோயில்களை விட மிகப்பெரிய அளவில் சோழநாடெங்கும் தொடர்பு கொண்டிருந்தது.

என நீலகண்ட சாஸ்திரி குறிப்பிடுகின்றார்[14]. மேற்குறித்த மையப்படுத்தப்பட்ட தன்மை எல்லாக் கோயில்களுக்கும் இல்லாது போயினும் அரசுக் கோயில்களில் இது இருந்திருக்கின்றது.

சோழர் வரலாற்றில் அரசுக் கோயிற்கட்டுமானங்கள் இறுதிக் காலத்தில் குறைந்து போய்விட்டன. திரிபுவனத்தில் எழுந்த கம்பகேஸ்வரத்துக்குப் பின் இவ்வாறான கோயில்கள் எழவில்லை. அரசுக் கோயில்களின் கட்டுமானத்திலும் அதன் செயற்பாட்டுத் தன்மையிலும் ஏற்பட்ட ஏற்ற இறக்கங்களை அக்கோயில்களின் அளவு கொண்டும், அவற்றுடனான் அரச,

அதிகார வர்க்கத்துடனான தொடர்பின் அடிப்படையிலும், அவற்றுடனான சமூக ஊடாட்டத்தின் வழியாகவும் அளவிட முடியும். சோழர்களது ஆரம்பகால அரசுக் கோயில் கட்டுமானங்கள் அளவிற் சிறியன, அரசுத் தொடர்பும், மக்கள் தொடர்பும், சேவைகளும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. ஆயின் அவை தஞ்சைப் பெரிய கோயிலாகவும், கங்கைகொண்ட சோழீஸ்வரமாகவும் தோற்றம் பெற்றபோது அவற்றின் அளவும் செயல்பாடுகளும் மிகப் பிரம்மாண்டமானதாக அமைந்தன. ஐராவதேஸ்வரத்திலும், கம்பரகேஸ்வரத்திலும் அதன் இறங்குமுகத்தை அவதானிக்கலாம். அவை பிரமாண்டத் தன்மையை இழந்து சிக்கனமாகவும் கலையழகுடனும் உருவாக்கப்பட்டன. அவற்றிற் காணப்படும் கொடைகள் பற்றிய கல்வெட்டுகளும் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. சமூக ஊடாட்டம் மட்டுப்படுத்தப்பட்டதையும் கல்வெட்டுக்களின் அருகிய தன்மையால் அறிய முடிகின்றது. சோழ அரசின் எழுச்சியையும் ஒருங்கிணைப்பையும் வீழ்ச்சியையும் காட்சிபடுத்தும் நினைவுச் சின்னங்களாக இவ் அரசுக் கோயில்கள் விளங்குகின்றன. சோழராட்சியின் இறுதிக் காலங்களில் அரசின் ஸ்திரத் தன்மையில் ஏற்பட்ட வீழ்ச்சியின் விளைவாக இது ஏற்பட்டது. எனினும் அரசரது கோயில் தொடர்புகள் பழைய கோயில்களில் பெருமளவில் தொடர்ந்தும் நிகழ்ந்தே வந்துள்ளன. மேலும் சைவ சித்தாந்த மரபிலான பிராமணிய இயக்கத்தின் எழுச்சி - இறைவனை முதன்மைப் படுத்தி, அரசனைப் பின்தள்ளி அவர்களை அடியானாக்கிய செயற்பாட்டின் காரணமாகவும், பொருளாதார மந்தநிலை, அரசரது செயற்பாட்டுத் திறன் வீழ்ச்சி ஆகியவற்றின் காரணமாகவும் அரசுக் கோயில் கட்டுமானங்களும், அரசனே தெய்வம் எனும் கோட்பாடுகளும் செயலிழந்து போயின.

இந்தப் பின்னணியில் வானவன் மாதேவீஸ்வரம் என்பது அரசமாதேவியரையும் தெய்வமாக்கிய பண்பாட்டினை வெளிப்படுத்துவதாக இப்பெயரிடுதலையும் கட்டமைக்கலாம். அத்துடன் அவர்கள் 'உலக முழுதுடையாள்', 'புவனமுழுதுடையாள்', 'திரைலோக்ய மாதேவி' என்று மெய்க்கீர்த்திகளில் அவர்கள் குறிப்பிடப்படுவதையும் மனக்கொள்ளல் அவசியமானது.

மேற்குறித்த கோயிலை அரசுக் கோயிலாகவும் கட்டமைக்கலாம். அரச வம்சத்தினரால் எழுப்பப்பட்ட கோயில்களைப் பொதுவாக 'அரசக் கோயில்கள்' என்ற வரையறைக்குள் அடக்கிவிடலாம். ஆனால் அவற்றின் இட அமைவு, கட்டுமானத்தின் பிரமாண்டத்தன்மை, அவற்றின் செயற்பாடுகள் என்பவற்றினடிப்படையில் நோக்குகின்ற போதே அவற்றின் தனித்துவம் புலப்படும். அதாவது அரசு என்ற கருத்தியலை அல்லது அதன் மேலாதிக்கத்தன்மையை அரசவம்சத்தினரால் எழுப்பப்பட்ட கோயில்கள் எவ்வாறு பிரதிபலித்தன என்பதினடியாகவே 'அரசுக் கோயில்கள்' என்ற கருத்தியல் கட்டமைக்கப்பட்டுள்ளது.

மத்திய காலத்து இந்தியாவில் பல பிராந்தியங்களிலும் இவ்வாறான அரசுக் கோயில் கட்டுமானங்கள் நிகழ்ந்துள்ளன. இதன் விளைவாகப் பதினோராம் நூற்றாண்டிற்கும் பதின்மூன்றாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் அரச இந்துக்கோயில்கள் (Royal Hindu Temples) பல உருவாகின. இந்த வகையில் கஜீராகோவிலில் உள்ள லஷ்மணர் கோயில் (அண்ணளவாக கி. பி 954), காந்தாரிய மகாதேவர் கோயில் (பதினோராம் நூற்றாண்டின் முற்காற்பகுதி), உதய்ப்பூரில் உள்ள உதயேஸ்வரர் கோயில் (1059 - 80), பூரியிலுள்ள ஜெகந்நாதர் கோயில் (1135), புவனேஸ்வரில் உள்ள லிங்கராஜா கோயில் (பதினோராம் நூற்றாண்டின் நடுப்பகுதி), கோனாரக்கில் உள்ள சூரியன் கோயில் ஆகியவை குறிப்பிடக் கூடியவையாகும்.

சோழ அரசவம்சத்தைச் சேர்ந்தவர்களால் எழுப்பப்பட்ட கோயில்களையும் இவ்வாறான வகைக்கு உட்படுத்தலாம். தஞ்சாவூரில் ஆரம்பித்த சோழ அரசின் அரசியலாதிக்க எல்லை சோழமண்டலம் என விரிந்து பின் தென்னிந்தியா, வட இந்தியாவின் சில பகுதிகள், கடல்கடந்த நாடுகள் என விரிவு பெற்றது. இந்த விரிவாக்கத்தில் கோயில் உருவாக்கமும், கோயிற்பணியும் அரசியலதிகாரத்துடன் இணைந்தே இடம்பெற்றுள்ளன. இந்த செயற்பாட்டைக் கூர்ந்து கவனிக்கும் போது சோழர்கள் தமது சமயப் பின்புலத்துடன் மட்டும் கோயில்களை உருவாக்கவில்லை. அதற்கும் புறம்பாக தமது ஆதிக்கவேர்களை நிலை நிறுத்தவும் அவற்றைப் பயன்படுத்தினர் என்பது புலனாகும். இந்த வகையில் பார்க்கின்ற போது சோழர்களால் எழுப்பப்பட்டு புனருத்தாரணம் செய்யப்பட்ட கோயில்கள் சில அரசக் கோயில்கள் என்ற கட்டமைப்பைப் பெறுகின்றன.

ஒரிசா மாநிலத்தில் நிலவிய அரசக் கோயில்களின் கொள்கை பற்றி (Royal Temple Policy) விளக்க வந்த கேர்மன் குல்கே பின்வரும் அம்சங்களிலே இது இடம்பெற்றது என்கிறார்[15].

அ. அரசின் ஆதிக்க எல்லைக்குள் காணப்படும் முக்கியமான யாத்திரைத் தலங்களுக்கான அரச ஆதரவு (Royal Patronage)

ஆ. படிமுறையான ஆனால் பெரியளவான பிராமணக் குடியிருப்புகளை ஏற்படுத்துதல்

இ. பேரரசின் பிராந்தியங்களிலுள்ள மையப் பகுதிகளில் புதிய பேரரசுக் கோயில்களை (Imperial Temples) உருவாக்குதல்

பெரும்பாலும் பர்டன் ஸ்டெயின் இடைக்காலத் தென்னிந்தியாவின் அரசக் கோயில் உருவாக்கம் பற்றிக் கூறியவையே இதில் குறிப்பிடப்பட்டுள்ளன. பல்லவர் காலத்திலும் அதற்கு முன்பும், தமிழகத்தில் நிலைபெற்ற கோயில்கள், இடைக்காலத்தில் முக்கியம் பெறுகின்றன. பல்லவ அரசர்களும் பல கோயில்களை உருவாக்கினர். ஆழ்வார்களும் நாயன்;மார்களும் இக்காலத்தில் நிலைபெற்ற பல ஆலயங்களுக்குத் தலயாத்திரை சென்று அத்தலங்கள்

மீது பாடல்களைப் பாடினார். இதனால் பிராந்தியச் சூழலில் இத்தலங்கள் செல்வாக்குப் பெற்றன. இவை பின்நாட்களில் அதாவது சோழர் காலத்தில் அரசின் ஆதரவு பெற்ற கோயில்களாக மாறுகின்றன. இத்தலங்களுக்கு அரசர்கள் வழங்கிய கொடைகளும், செய்த பூசைகளும், எடுத்த விழாக்களும் கோயில்களுக்கும் அரசர்களுக்குமிடையேயான ஓர் உறுதிப்பாட்டை ஏற்படுத்தின. இத்தகைய செயற்பாடுகள் அரசைப் பூமியில் தெய்வ வழி அரசாக நிலைநிறுத்த முயன்றன.

இரண்டாவதாக இவ்விடங்களிலும் முக்கிய கேந்திர நிலையங்களிலும் பிராமணக் குடியிருப்புகள் ஏற்படுத்தப்பட்டன. இப்பிரமதேயங்களுக்கு அரசர் அளவிறந்த நிலக்கொடைகளை வழங்கினர். இக்கொடைகளைப் பெற்ற பிராமணர்கள் மத்திய அரசின் கருத்து நிலையைப் பிராந்திய அளவில் நிலைபெறச் செய்யும் அரசியல் அதிகாரிகளாகச் செயற்பட்டனர். மூன்றாவது செயற்பாடானது அதுவரையில் உள்ளூரில் அறிய முடியாததான அளவில் உயர்ந்த பெருங்கோயில்களை நிறுவுதல் ஆகும். அவை பிராந்தியங்களில் இருந்த கோயில்களை விட இரண்டு அல்லது மூன்று மடங்கு பெரியதாகவும், இன்னொரு முறை அடைய அல்லது உருவாக்க முடியாதளவிற்குப் பிரம்மாண்டமானதாகவும் உருவாக்கப்பட்டன. இவ்வாறு அமைக்கப்பட்ட கோயில்கள் அரசின் புதியதும், பன்முகப்பட்டதுமான பண்பாடு, கொள்கைகள் முதலியவற்றை உள்வாங்கிய சடங்குகளை உருவாக்கின.

சோழர் காலத்தில் அரசர், அரசமாதேவியர், குறுநிலமன்னர், அரசு அதிகாரிகள் ஆகியோரால் கோயில் எழுப்பப்பட்டன. சோழ அரசின் பிரதான ஆதிக்க மையமான சோழமண்டலத்திலும், ஜெயங்கொண்ட சோழ மண்டலத்திலும் பல கோயில்கள் எழுந்தன. இதனைவிட தமிழகத்துக்கு வெளியேயும் கடல்கடந்த நாடுகளிலேயும் கோயில்கள் எடுக்கப்பட்டன. மேலும் பழைய பாடல்பெற்ற தலங்களைக் கற்றளிகளாக்கப் புதிய கோயில்கள் எடுத்தல், பள்ளிப்படைக் கோயில்கள் எடுத்தல் என்ற வகையிலும் கோயிற் பணிகள் இடம்பெற்றன. இவற்றுள் அரசர்களால் புதியதாக எழுப்பப்பட்ட கோயில்களை ஆதாரமாகக் கொண்டே 'அரசக் கோயில்கள்' என்ற கருத்தியல் விபரிக்கப்படுகின்றது. அரசக் கோயில்கள் பற்றிக் கூறவந்த ஒகுரா, புனருத்தாரணம், புதிய கோயில் கட்டுமானம், பள்ளிப்படைகள் எனும் அடிப்படையில் காலவாரியாக ஆராய்ந்தார். எனினும், பழைய கோயில்களைக் கற்றளிகளாக ஆக்குதல் என்பது ஆரம்ப நிலையில் சமயச் சார்புடன் தமது ஆட்சியதிகாரத்தைப் பரவலாக்க மேற்கொண்ட முயற்சியாகும். அரச குலப் பெண்கள் எடுப்பித்த கோயில்கள் என்னும் கருத்தியல் அவர்களது சமயச்சார்பு ஃ சுயவிருப்பு முதலியவற்றுடன் தொடர்புடையது. பள்ளிப்படைக் கோயில்கள் என்பன அரசக் கட்டுமானங்களாக உருவானபோதும் அது மூதாதையருக்கு மதிப்பளித்தல், இறந்த அரசனைத் தெய்வமாக்குதல் என்ற மரபின் வழிவந்தது. மேலும் அதற்கென்றொரு சமயப் பின்புலம் உண்டு. ஆகவே இங்கு அரசுக்

கோயில்கள் என்ற கருத்தியல் பேரரசர்களால் தேவை கருதி உருவாக்கப்பட்ட பெரிய கோயில்ளை மட்டுமே குறித்து நிற்கின்றது.

சோழர் கால "அரசுக் கோயில்கள்" என்று இனங்காணப்படுபவை விஜயாலயனது விசாயலய சோழீஸ்வரம், முதலாம் ஆதித்தன் காலத்து ஆதித்தேஸ்வரம், முதலாம் ராஜராஜன் கட்டிய ராஜராஜேஸ்வரம், முதலாம் இராஜேந்திரன் கட்டிய கங்கை கொண்ட சோழீஸ்வரம், இரண்டாம் ராஜராஜன் காலத்து தாராசுரம் 'ஐராவதேஸ்வரம்', மூன்றாம் குலோத்துங்கனால் எழுப்பப்பட்ட திரிபுவன வீரேஸ்வரம் ஆகியவையாகும். மேலும் இலங்கையில் ராஜராஜன் காலத்தில் எழுப்பப்பட்ட "வானவன் மாதேவி" ஈசுவரத்தையும் இதனுள் அடக்கலாம்.

வானவன் மாதேவீஸ்வரத்தில் காணப்படும் கல்வெட்டுக்கள் தொடர்பான விரிவான ஆய்வை தமிழிலும் ஆங்கிலத்திலுமாக பேராசிரியர் பத்மநாதன் நிகழ்த்தியுள்ளார்[16]. அதன் வழி முதலாம் இராசேந்திரனது 'திருமன்னிவளர' எனத்தொடங்கும்மெய்க்கீர்த்தியின்முழுமைபெறாதகல்வெட்டொன்றுண்டு[17]. அதிராஜேந்திரனுடைய காலத்தவை என இரண்டு கல்வெட்டுக்கள் உண்டு. இரண்டினதும் மெய்க்கீர்த்தி வாசகங்களும் 'திங்களேர் மலர்ந்து' எனத்தொடங்குகின்றன. எனில் ஒன்று அவனது மூன்றாம் ஆட்சியாண்டில் எழுதப்பட்டுள்ளது. மற்றையதில் ஆட்சியாண்டு இல்லை. இரண்டும் தாராநிலை விளக்குத்தானம் பற்றியே பதிவு செய்கின்றன. ஆட்சியாண்டு குறித்த சாசனம் 23 வரிகளைக் கொண்டதாக அமைந்துள்ளது. இவற்றை விட சிதைவுள்ள இரு சாசனங்களும் இங்கு காணப்படுகின்றன[18].

மேற்குறித்த கல்வெட்டுக்களில் முழுமையற்ற இரு கல்வெட்டுக்களும் கோயில் தொடர்பான படிமங்கள் பற்றிக் குறிப்பிடுகின்றன. அவற்றுள் "அழகிய மணவாளரை எழுந்தருளுவித்து" என்ற வாசகம் பற்றிக் குறிப்பிட்ட பேராசிரியர் பத்மநாதன் அதனைக் கலியாண சுந்தரரது படிமமாகலாம் எனக்குறிப்பிடுகின்றார்[19]. அக்கூற்று ஏற்றுக் கொள்ளக்கூடியதே. அதாவது மூலவருக்குப் பதிலாக எழுந்தருளிகள் திருவிழாக்களின் போது திருவீதி வலம் வருதல் மரபு. அந்த மரபு இங்கும் பின்பற்றப்பட்டிருக்கிறது என்பதற்குச் சான்றாக இப்படிமத்தைக் குறிப்பிடலாம். இன்னோர் சிதைந்த கல்வெட்டு "வானவன் மாதேவி ஈஸ்வரமுடையார் கோயிலிற் பள்ளிகொண்டாரையும்" எனக் குறிப்பிடுகின்றது. 'பள்ளிகொண்டார்' என்ற பதம் பெரும்பாலும் பாற்கடலிற் பள்ளி கொண்ட பரந்தாமனைக் குறிக்கும். எனவே கோயில் பரிவார மூர்த்திகளுள் பள்ளிகொண்ட பரந்தாமன் படிமமும் இருந்திருக்கக் கூடுமென ஊகிக்க இடமுண்டு. சைவ, வைணவ நெறிகளின் சமரசம் பேணிய இடமாகவும் இதனைக் கருத இடமுண்டு. இல்லாதுவிடில் ஆகம விதிமுறைக்கு அமைந்த அக்கோயில் 'பள்ளியறை' என்ற அமைப்பும் இருந்திருக்க வேண்டும். கோயிலில் அர்;த்த சாமப்பூசை முடிந்தவுடன் சிவனது படிமம் ஒன்று வீதிவலம்

வந்து பள்ளியறையில் இருத்தி பள்ளியறைப்பாடல் அல்லது ஊஞ்சல் பாடல் பாடுவது மரபு. இந்த மரபு இங்கு பேணப்பட்டிருக்க வேண்டுமென்றும் ஊகிக்க இடமுண்டு.

வானவன் மாதேவி ஈஸ்வரத்திற் காணப்படும் அதிராஜேந்திரன் காலத்து கல்வெட்டுக்கள் இரண்டு விளக்குத்தானம் பற்றியே குறிப்பிடுகின்றன. ஒன்று தாராநிலைவிளக்குத் தானம் பற்றிக் குறிப்பிடுகின்றது. மற்றையது 'நொந்தாவிளக்குப்' பற்றிக் குறிப்பிடுகின்றது. நொந்தாவிளக்குப் (அணையா விளக்கு) பற்றிய கொடை பற்றிய கல்வெட்டே மிக விபரமாக அமைந்துள்ளது.

கொடையாளி: சோழ மண்டலத்து தக்.....கோட்டத்து விற்பேட்ட நாட்டு மங்கலப்பாடி வெள்ளாளன் சீராளன்...... யநான.......... கொண்ட சோழப்பல்லவரையன்

கொடைக்குரிய கோயில்: ராஜராஜேந்திர சோழவளநாட்டு (நிகரிலிச் சோழ வளநாடு) ஐனநாதமங்கலத்து உடையார் வானவன் மாதேவி ஈஸ்வரம் உடையார்க்கு

கொடை/தானம்: இருசாணே நால்விரல் நீளத்து தாராநிலை விளக்கு (நொந்தாவிளக்கு) எரித்தலுக்கு ஐந்து காசு வைப்பு

செயல்: ஐந்து காசால்வரும் வட்டியைக் கொண்டு சித்திரைத் திங்கள் முதல் நிசதம் (தினசரி) உழக்கு எண்ணை கொண்டு விளக்கு எரித்தல்

இந்தத் தானத்தை நிகழ்த்த இசைந்து ஏற்றோர்: கோயில் அதிகாரிகள்

அ. இக்கோயில் பதிபாத மூலப்பட்டுடைத் தேவன்மிகள்

ஆ. திருவாராதனை பண்ணும் பிராமணன்

இ. கோமடத்து கிரமவித்தன்

ஈ. இக்கோயிற் சிவப்பிராமணன் தில்லை நாயகப்பட்டன்

உ. உவச்சன்

ஊ. கோணனான கங்கை கொண்ட சோழ ஆசாரியன் (அட்டவும்)

எ. அரையன் காவல் ராஜாதிராக முதக்கரை நாடாழ்வான்

ஏ. இக்கோயிற் பண்மாகேஸ்வரக் கண்காணி செய்வாரும்

ஐ. குடிதாங்கியான சண்டேஸ்வர ராசனும்

ஒ. டவ(ந்) திருவியான கங்கை கொண்ட சோழ மாணிக்கம்,

- காமந் திருவியான கோதுகுலமாணிக்கம்
- கூத்தன் ராஜராஜேந்திர விடங்க மாணிக்கம்
- கோவிந்தன் ஆடவல்லானான நாற்பத்தெண்ணாயிர மாணிக்கம்

• ராஜேந்திர சோழ மாணிக்கம்

• தேவன் உய்யவந்தானான முடிகொண்ட சோழமாணிக்கம்

மேற்படி தானத்தை வழங்கியவர் சோழ அரசின் அதிகாரியாக இருந்திருக்க வேண்டுமென்பார் பேராசிரியர் பத்மநாதன், பேராசிரியர் சுப்பராயலுவினை ஆதாரம் காட்டி இதனை அவர் நிறுவுகிறார்[20].

கோயில்களுக்கு விளக்குத்தானம் அளிப்பதென்பது தமிழகச் சூழலில் பாரிய அளவில் நிகழ்ந்துள்ளது. அரசர் முதல் சாதாரண குடிமகன் வரை இதை நிகழ்த்தியுள்ளனர். விளக்குகள் நந்தா விளக்கு, சந்தி விளக்கு, அரை விளக்கு, கால் விளக்கு முதலிய பெயர்களில் காணப்படுகின்றன. விளக்கெரிக்க கோயில் அதிகாரிகளிடம் நிலம், பொன் மற்றும் சாவாமூவாப் பேராடுகள் வழங்கப்பட்டன. இவற்றை மூலதனமாகக் கொண்டு விளக்கெரிக்க நெய் வழங்கும் நடைமுறை வழக்கிலிருந்தது[21]. கோயிலுக்கு விளக்கெரிக்க வழங்கப்பட்ட சாவாமூவாப் பேராடுகளை கோயில் மன்றாடிகள் என்று அழைக்கப்பட்ட இடையர் குழுமம் பொறுப்பேற்று அதற்குப் பதிலாக நெய் வழங்கியது. தஞ்சாவூர் இராசராஜேஸ்வரத்திற்கு நெய் அளித்த இடையர்கள் பற்றி அக்கோயில் கல்வெட்டு விபரிக்கின்றது[22]. ஆகவே இக் கோயிலிலும் விளக்கெரிக்கத் தானம் வழங்கும் பண்பாடு நிலைபெற்றது எனலாம்.

இனி இந்த விளக்குத் தானத்தை ஏற்றுக்கொண்ட கோயில் அதிகாரக் கட்டமைப்புப்பற்றி நோக்க வேண்டியுள்ளது. அதில் முதல் இடம் பெறும் குழு "பதிபாத மூலப் பட்டுடைத் தேவகன்மிகள்" ஆகும். பதிபாதமூலம் என்போரைச் சிவன் கோயில் தலைமைப் பூசாரிகள் அல்லது சிவன் கோயில் பூசகர்கள் எனத் தமிழ்க் கல்வெட்டுச் சொல்லகராதி குறிப்பிடுகின்றது[23]. இவர்கள் பதி, பாதமூலம், பட்டுடைப் பஞ்சாசாரியர் என்றும் தேவகன்மிகள் என்றும் பல கல்வெட்டுக்கள் பதிவு செய்கின்றன. இவர்களுடைய பிரதான பணி கோயிற் பூசைகளை நிகழ்த்துதலாகும். ஆயின் கோயில் நிர்வாகக் கடமைகளிலும் ஈடுபட்டதை அறிய முடிகின்றது. குறிப்பாகக் கோயிற் கொடைகளை ஏற்று அதனை நிர்வாகம் செய்துள்ளனர் என மகேஸ்வரன் குறிப்பிடுகின்றார்[24]. இவர்கள் தேவ கன்மிகள் என்றும் பல கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படுகின்றனர்[25].

இக்கல்வெட்டில் இரண்டு பிராமணர்கள் குறிப்பிடப்பட்டுள்ளனர். ஒருவர் திருவாராதனை பண்ணுபவர் அவர் 'கோமடத்துக்கிரமவித்தன்' என்றும், மற்றையவர் அக்கோயிலின் சிவப்பிராமணர் 'தில்லைநாயகப்பட்டன' என்றும் குறிப்பிடப்படுகின்றார்கள். கிரமவித்தனை சடங்காசாரங்களில் விற்பன்னன் என்றும் சிவப்பிராமணனை ஆசார அனுஷ்டானங்களை நெறிப்படுத்துபவன் என்றும் பத்மநாதன் குறிப்பிடுகின்றார்[26]. அதுவே சரியான பாடம் என்பதைக் கல்வெட்டுச் சொல்லகராதி உறுதி செய்கின்றது. கோமடம் பற்றிய தெளிவின்மை உண்டு எனினும் கோயிலைச் சூழ்ந்த மடங்களில் தலைவர்களாக இவர்கள்

இருந்திருக்கலாம். இவர்களுக்குப்பின்பு 'உவச்சன்' என்ற தொழிற்பெயர் மட்டும் காணப்படுகின்றது. எனின் அவனுடைய பெயர் பதிவு செய்யப்படவில்லை. உவச்சர்களை இசைக்கலைஞர்கள் எனக் கல்வெட்டு சொல்லகராதி குறிப்பிடுகின்றது[27]. தஞ்சாவூர் ராஜராஜேஸ்வரத்து தளிச்சேரிக் கல்வெட்டில் இவர்கள் உவச்சர்கள் என்றும் இவர்களின் கீழ் குழுக்களாகப் பணியாற்றியோர் 'சகடைகொட்டிகள்' என்றும் குறிப்பிடப்பட்டனர்[28]. தமிழகத்துக் கோயில்கள் எங்கும் இவர்கள் பணிக்கமர்த்தப்பட்டனர் என்ற செய்தியைக் கல்வெட்டுக்களால் அறியலாம். இதற்கு அடுத்த நிலையில் "கோணனான கங்கை கொண்ட சோழ ஆசாரியன்" குறிப்பிடப்படுகின்றான். இவரை இக்கோயிலுக்குரிய பிரதம கைவினைக் கலைஞனாகப் (Master Craftsman) பேராசிரியர் பத்மநாதன் இனங்காண்கிறார்[29]. இதனையே கல்வெட்டுச் சொல்லகராதியும் பதிவு செய்கின்றது[30]. ஆயின் குறிப்பிட்ட வாசகத்தைத் தொடர்ந்து 'அட்டவும்' என்ற சொல் வருகின்றது. அட்டு, அட்டுதல் அட்டுவார் என்பதற்கு கல்வெட்டுச் சொல்லகராதி சமைத்தல், சமைப்போர் எனப் பொருள் தருகின்றது[31]. ஆகவே இவனைச் சமயல் செய்வோன் என்று எண்ணவும் இடமுண்டு. ஏனெனில் மேற்படி கல்வெட்டு கோயில் அதிகாரிகள் பற்றித் தொகுத்துக் கூறுகின்றபோது 'பரிய்சாரகரும்' என்று குறிப்பிடுகின்றது. இதனை பரிசாரகர்கள் எனக் கருத்திற்கொண்டு கோயிலின் புனித பிரசாதங்களைத் தயாரிப்போர் என பேராசிரியர் பத்மநாதன் விவரணம் செய்கின்றார்[32]. எனவே கல்வெட்டின் தொகுப்பில் கைவினைக்கலைஞர்களான 'ஆசாரியர்' என இடம்பெறவில்லை மாறாக பரிய்சாரகர் குறிப்பிடப்படுகின்றனர். எனவே கங்கை கொண்ட சோழ ஆசாரியனை பரிசாரகர் குழுமத்தைச் சேர்ந்தவராகக் கருத இடமுண்டு.

கல்வெட்டில் இடம்பெறும் தனியாள் இருவர் பற்றிய விளக்கங்களும் அவசியமானவை. ஒருவர் அரையன் - காவல் - ராஜாதிராஜ முத்தக்கரை நாடாழ்வான். இவர் அரசு அதிகாரி, அல்லது குறுநிலத் தலைவராகலாம். அரையன் என்பதற்கு அரசன், உயர் அலுவலர் மற்றும் குறுநிலத்தலைவர் பட்டப்பெயர் ஒட்டு எனக்குறிப்பிடுகின்றது[33]. அத்துடன் இராஜாதிராஜ முத்தக்கரை நாடாழ்வான் என்ற சிறப்புப்பெயரும் அவனது பதவிநிலை பற்றிக் குறிப்பிடுகின்றது. கல்வெட்டில் 'காவல்' என்று இடம்பெறுவதால் கோயில் பாதுகாப்பு இவன் வசம் இருந்திருக்க வேண்டும் என எண்ண இடமுண்டு.

இக்கல்வெட்டில் குறிப்பிடப்படும் இன்னோர் தனியாள் 'குடிதாங்கியான சண்டேஸ்வரராசன்' ஆவான். 'குடிதாங்கி' என்ற முன்னொட்டின் பொருள் பற்றி அறியுமாறில்லை. எனினும் 'குடி' என்பதற்குப் பல பொருளை சொல்லகராதி தருகின்றது. குடும்பம், குலம், சபை உறுப்பினர், உழுகுடி எனவும் குறிப்பிடுகின்றது[34]. 'தாங்கி' என்பதை பாதுகாவல், எனக்கொண்டால் இவனும் பொதுமக்கள் அல்லது குடிகளின் பிரநிதியாக இடம்பெற்றான் என ஊகிக்கலாம். அத்துடன் 'சண்டேஸ்வரராசன்' என்ற சிறப்புப்பெயர் பற்றியும்

கூர்ந்து நோக்க வேண்டியுள்ளது. சோழர் காலத்தில் 'சண்டேஸ்வரர்' என்ற தொன்மம்சார் கருத்து நிலை வலுப்பெற்ற போது சிவன் கோயில்களில் சண்டேஸ்வரர் படிமமும் கோயிலில் முக்கியம் பெற்றன. கோயில்களில் சிவனைத் தரிசித்தவர்கள் சண்டேசுவரரை வணங்கித் தம் வரவைப் பதிவு செய்யும் கோயில் பண்பாடு நிலை பெற்றது. மேலாகச் சிவன் கோயிலின் கொடைகள்,குறிப்பாக நிலக் கொடைகள் சண்டேஸ்வரரின் பெயரில் பதிவு செய்யப்பட்டன. மூலபரத்துவனாகிய சண்டேசுவரர், சண்டேசுவரப் பெருமானடிகள், சண்டேசுவர தேவர் என்றெல்லாம் கல்வெட்டுக்களில் இவர் குறிப்பிடப்பட்டார்[35]. முதலாம் இராசராசன் காலத்தில் இப்பதவிநிலை மாற்றத்துக்குள்ளாகியது. கோயில் சார்ந்த அதிகாரிகள் குழுமம் 'சண்டேசுவரத் தேவகன்மிகள்' என அழைக்கப்பட்டனர்[36]. தனிப்பட்ட அதிகாரிகளும் சண்டேஸ்வரர் என்ற பெயரை அத்தொன்மக்கருத்து நிலையின் தொடர்ச்சியாக இட்டிருக்கலாம். அவ்வாறான பின்புலத்திலே தான் குடிதாங்கியான சண்டேஸ்வரராசனைக் கட்டமைக்க முடியும்.

இக்கல்வெட்டுக் குறிக்கும் இன்னோர் குழுமம் "இக்கோயிற் பன்மாகேஸ்வரக் கண்காணி செய்வார்" என்பதாகும். சிவன் கோயிற் கொடைகளின் பாதுகாவலர்களாக மாகேஸ்வரர் என்ற குழு நீண்டகாலமாக இயங்கி வந்துள்ளது. கோயில் கொடைகள் குறித்த கல்வெட்டுக்களின் இறுதியில் 'மாகேஸ்வர ரட்சை' என்றோ 'இது பன்மாகேஸ்வர ரட்சை' என்றோ குறிப்பிடப்பட்டிருக்கும். 'மாகேஸ்வரர்கள் இத்தன்மத்தைக் காப்பார்களாக'என்பதே அதன் பொருளாகும். இவர்களைச் சிவனடியார் கூட்டம் என்கிறது தமிழ்க்கல்வெட்டுச் சொல்லகராதி[37]. எனினும் இவர்கள் காலக் கிரமத்தில் கோயில் நிர்வாகக் குழுக்ககளாக மாற்றம் பெற்றனர். அத்துடன் கோயில் நடவடிக்கைகளின் மேற்பார்வையாளர்களாகவும் மாறிவிடுகின்றனர்.

'ஸ்ரீ மாகேஸ்வரக் கண்காணி செய்வார்கள்' எனக் குழு நிலையிலும்[38] 'ஸ்ரீ மாயேஸ்வரக் கண்காணி செய்வான்' எனத் தனித்தும்[39] குறிப்பிடப்பட்டனர். மாகேசுவரக் குழுமத்தின் வளர்ச்சிப்போக்கைப் பார்க்கும் போது ஆரம்பகாலத்தில் அடியார்கள் என்ற மதிப்புறுநிலையில் நிலைத்த அவர்கள் பின்னர் கோயில் நிர்வாகத்தில் தனித்தும், குழுவாகவும் செயற்பட்டனர். தொடர்ந்தும் அவர்களுள் பல்வேறு குழுக்கள் உருவாகிச் செயற்பட்டனர் என்பதை விஜயநகர காலத்துக் கல்வெட்டுக்களினூடாகவும் அறியலாம்40.

கல்வெட்டின் இறுதியில் பணியாளர்களின் ஆறு பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவர்களின் இயற்பெயர்கள் மாணிக்கம் எனக்குறிப்பிடப்பட்டுள்ளன. எனவே இவர்கள் தேவரடியார்களாக இருக்கலாமோ எனப்பேராசிரியர் பத்மநாதன் தீர்மானிக்கின்றார். இதற்கு ஆதாரமாக இலங்கையில் பாடப்பட்ட கோணேசர் கல்வெட்டில் மாணிக்கம் என்ற இயற்பெயர் தேவரடியாரைச் சுட்டியதை ஆதாரமாக

முன்நிறுத்துகின்றார். எனினும் இக்கல்வெட்டின் இறுதியில் 'தேவரடியார்'என்று குறிப்பிடப்பட்டுள்ளதால் முதற்கூறிய அறுவரும் கோயிற்பணிகளில் ஈடுபட்ட வேறோர் குழுமமாக இருக்கவேண்டும் என்ற முடிவுக்கு வருகின்றார்[41].

பேராசிரியர் மாணிக்கம் என்ற பெயர்களை அடிப்படையாகக் கொண்டு சந்தேகிப்பது நியாயமானது. தஞ்சாவூர் தளிச்சேரிக் கல்வெட்டில் மாணிக்கம் என்று முடியும் பெயர்கள் எட்டு உள்ளன[42]. மேலும் இக்கல்வெட்டில் குறிப்பிடப்படுபவர்களுக்கு முன்னால் ..டவ(ந்) என்ற சொல் இடம்பெறுகின்றது. இதனை 'நட்டவந்' என மீட்டுருவாக்கம் செய்தால் நடனம் பயிற்றுவிப்பரை அது குறிக்கும். தஞ்சாவூர் தளிச்சேரிக் கல்வெட்டில் "நட்டவம் செய்ய நட்டவம் ஒன்றிற்கு" என்ற தொடரால் நடன ஆசிரியர்கள் பற்றிய குறிப்பு வருகின்றது[43]. எனவே இது தேவரடியார் குழுமத்தையே குறித்தது எனக் கருதலாம். மேலும் தேவரடியார்களது சிறப்புப் பெயர்கள் பல அரசவம்சத்தவரது பெயர்களுடன் தொடர்புபட்டு வருகின்றது கங்கை கொண்ட சோழ மாணிக்கம், ராஜேந்திர விடங்க மாணிக்கம், ராஜேந்திர சோழ மாணிக்கம், உய்ய வந்தானான முடிகொண்ட சோழ மாணிக்கம் என்பவை முதலாம் இராஜேந்திரனுடைய பெயர்களைக் கொண்டுள்ளன. தஞ்சாவூர் தளிச்சேரிக் கல்வெட்டில் இராசேந்திரனது பெயர் கொண்ட பெண்கள் குறிப்பிடப்படவில்லை. எனினும் அரசர் பெயர்,அவர்களது விருதுப் பெயர், அரச மாதேவியரது பெயர்களைத் தளிச்சேரிப் பெண்கள் கொண்டுள்ளதை அறிய முடிகின்றது[44]. அதில் நட்டுவம் செய்பவர்களது பெயர் வேறுவகையில் அமைந்துள்ளது. அரையன் சுந்தர சோழனான மும்முடிச்சோழ நிருத்தமாராயன் என்றே அமைந்துள்ளது. ஆயின் இக்கல்வெட்டில் திருவியான, கூத்தன், ஆடவல்லான் தேவன் என்ற முன்னொட்டுக்கள் காணப்படுகின்றன. இவை 'நக்கன்' என்று சிவனைக் குறிக்கும் ஆண்பாற்பெயர் போன்றவையாகும். தஞ்சாவூர் தளிச்சேரிக் கல்வெட்டில் தேவரடியாரது பெயர்கள் 'நக்கன்' என்ற முன்னொட்டுடனே காணப்படுகின்றன. திருவியான என்ற பெயரைத்தவிர ஏனையவை தேவரடியாரது முன்னொட்டுப் பெயர்களாக இருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

பேராசிரியர் பத்மநாதனுடைய முடிவிற்கு ஆதாரமாக அமைவது கல்வெட்டின் இறுதியில் அமைந்துள்ள "திருவாராதனை பண்ணுவாரும், பரிசாரகரும், பன்மாயேஸ்வரக் கண்காணி செய்வாரும் நாட்டவரும் தேவர் அடியாரும் என்ற குழுக்களின் பெயர்களாகும். இக்கல்வெட்டைத் தமிழ் இலக்கண வாக்கிய அமைப்பினூடாக விளக்கும் போது இச்சந்தேகத்தை நிவர்த்தி செய்யலாம். தமிழ் இலக்கணத்தில் இடைச்சொல் எனும் பகுதியுண்டு. அதில் தத்தம் பொருளுணர்த்தும் உருபுகள் உண்டு. அவற்றும் 'உம்' எனும் இடைச்சொல் வாக்கியத்தில் இணையும் போது பல்வேறு பொருளைத் தரும். அவற்றுள் ஒன்று எண்ணும்மை. எடுத்துக்காட்டாக சேர, சோழ, பாண்யர் என்பதை சேரனும் சோழனும் பாண்டியனும் என இணைத்து எழுதலாம். இவ்வாறு இணைத்து எழுதப்படுவதற்கு 'உம்' உதவுகின்றது. இதனைத் தமிழ்

இலக்கணகாரர்'எண்ணும்மை'என்கின்றனர். இந்த முறையே இக்கல்வெட்டிலும் பின்பற்றப்பட்டுள்ளது. முதலில் இந்தக் குழுமங்கள் தனித்து வாக்கியங்களாக எழுதப்பட்டுள்ளன. சிலவாக்கியங்களில் 'உம்' இடைச்சொல் இல்லாதபோதும் பெரும்பாலான வாக்கியங்கள் 'உம்' உடனேயே முடிவடைகின்றன. இதற்கும் மேலாகக் கல்வெட்டின் இறுதியில் மேற்குறித்தவர்களை அவர்களது பணிநிலை சார்ந்து குழுக்களின் தொகுப்பொன்றை இக் கல்வெட்டுக்குக் குறிக்கின்றது. அது திருவாராதனை பண்ணுவாரும், பரிசாரகரும், பன்மாயேஸ்வரக் கண்காணி செய்வாரும், நாட்டவரரும், தேவர் அடியாரும் எனக்குறிப்பிடுகின்றது. எனவே, முதலில் தனித்தும், பின்னர் தொகுத்தும் 'உம்' இடைச்சொல் சேர்த்து இருவகையான அமைப்பில் இக்கல்வெட்டு எழுதப்பட்டுள்ளது. ஆகவே,

- ஆராதனை பண்ணுவோர் - பிராமணக் குழுக்கள்
- பரிசாரகர் - சோழ ஆசாரியர்
- பன்மாகேஸ்வரக் கண்காணி - பெயர்கள் இல்லாது விடினும் மேற்பார்வைக்குழு சண்டேஸ்வர ராசன்
- நாட்டவர் - முதக்கரை நாடாழ்வான்
- தேவர் அடியார் - இதில் குறிப்பிட்ட அறுவர்

எனவே இந்த இரண்டு வகையாக இலக்கண அமைப்புத்தான் பேராசிரியர் பத்மநாதனுக்கு தேவடியாரை வேறாகவும், குறிப்பிட்ட பெயருடைய அறுவரை வேறாகவும் எண்ண இடமளித்துள்ளது எனலாம். முடிவாக இதில் குறிப்பிட்ட அறுவரும் தேவரடியார் குழுமத்தவரே என்பதை உறுதிசெய்யலாம். இக்கல்வெட்டு மேற்குறித்த பணிநிலைகள் தொடர்பில் மாற்று ஏற்பாடுகள் பற்றியும் கவனங்கொண்டுள்ளமையை இவர்களுக்குப் பிறகு இவர்களது 'தலைமாறு' என்று குறிப்பிடுகின்றது. இவ்வாறான ஒப்பந்தத்தைத் தஞ்சாவூர் தளிச்சேரிக் கல்வெட்டின் மூலம் விவரமாக அறியலாம்[45]. பணிக்கமர்த்தப்பட்டவர்கள் யாரேனும் இறந்தாலோ வெளிநாடு சென்றாலோ அவர்களுடைய நெருங்கிய உறவினர் அப்பணிக்குரிய தகுதி பெற்றிருப்பின் அவர்கள் அப்பணியில் அமர்த்தப்படுவர். அவ்வாறு உறவினர்களுள் ஒருவரும் இல்லையாயின் அப்பணி தொடரவல்ல திறன் மிகுந்தோரைத் தேர்ந்து பணிக்கமர்த்தலாம். இந்த நடைமுறை இங்கும் நிலைபெற்றதை இக்கல்வெட்டின் மூலம் நன்கு அறியலாம்.

சோழ அரசு தன் ஆதிக்க வேர்களை தமிழகத்திலும், தென்னகத்திலும். இந்திய உபகண்ட அளவிலும் கடல்கடந்த நாடுகளிலும் நிலைநிறுத்திய போது ஜயஸ்தம்பங்கள் நிறுவுவதற்குப் பதிலாக பாரிய ஆலயங்களை அமைத்து தன்னை சடங்காசார அரசாகவும் நிலைநிறுத்தியது. அந்த வகையில் ஈழத்தைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தபோது மும்முடிச்சோழ மண்டலமான ஈழத்தில் ஜனநாதமங்கலம் எனற அதன் தலைநகரில் எழுப்பிய கோயில்களிலும் தாம் பின்பற்றிய கோயிற்பண்பாட்டை நிலைக்கச் செய்தனர். அதன் பதச் சோறாக

வானவன் மாதேவீச்சரம் நிலவியது என்பதை அதிராஜேந்திரன் காலத்துக் கல்வெட்டு துலாம்பரமாக வெளிப்படுத்தி நிற்கிறது எனலாம்.

முடிவுக் குறிப்புகள்

1. பாலசுப்பிரமணியம். மா. 1978. சோழர்களின் அரசியல் கலாசார வரலாறு - பாகம் I. தமிழ்நாட்டுப்பாடநூல் நிறுவனம். ப. 543
2. முரட்டெழில் சிங்களர் ஈழமண்டலமும் தண்டாற்கொண்ட கோ இராசகேசரி வர்மரான ராஜராஜ சோழதேவர்
3. SII Vol. II No - 92, ஈழமான மும்முடிச் சோழ மண்டலத்து கணக்கன் கொட்டியாரமான விக்கிரமசோழ வளநாட்டிலிருந்து, காணிக்கடன், நெல், காசு, இலுப்பைப்பால் ஆகியன தஞ்சைப் பெருவுடையார் கோயிலுக்கு நிவந்தமாக அனுப்பப்பட்டன
4. பாலசுப்பிரமணியன். மா. 1978. மு. கு.நூ. ப. 545
5. பத்பநாதன். சி. 2006. இலங்கைத்தமிழ்ச் சாசனங்கள், இந்து சமய கலாசார அலுவலர்கள் அமைச்சு. ப. 65
6. பத்மநாதன். சி. 2005. இலங்கையின் இந்துசமயம். அகில இலங்கை இந்துமாமன்றம். கொழும்பு. பக் 382 - 383
7. மேலது - பக் - 145 - 206
8. Herman Kulke. 1993.Kings and Cults. Manohar, New Delhi - pp. 1 - 16
9. பத்மநாதன். சி. 'திரிபுவனச்சக்கரவர்த்திகள்' சோழப் பேரரசில் சமயமும் அரசியலும் - தட்டச்சுப்பிரதி - ப. 89
10. திருக்குறள் - முறைசெய்து காப்பாற்றும் மன்னன் மக்கட்கு இறை என்று வைக்கப்படும்
11. கைலாசபதி. க.(1991). பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும் - பக் - 146 - 147
12. Yasuhi Ogura (1999). ‘The Changing Concept of Kingship in the Chola period’ Royal Temple Constructions - Kingship in Indian History. p.127
13. Spencer. W. George (1969) “Religious Network and Royal Influence in Eleventh Century India” - Journal of Economic and Social History of Orient - pp.49 - 50
14. நீலகண்ட சாஸ்திரி. கே. ஏ. 1989. சோழர்கள்.என். சி. பி. எச். ப. 856
15. Herman Kulke. op cit - pp. 1 - 96
16. Pathmanathan. S. 2019. Inscriptions in Sri Lanka Part - I. Department of Hindu Religious and Cultural Affairs, பத்மநாதன். சி. இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள். 2006. மேலது
17. SII Vol IV No - 1389
18. SII Vol IV No - 1388, 1392
19. பத்மநாதன். சி. 2006. மு. மு.நூ. ப - 76
20. Pathmanathan. 2019. Op cit. p. 297
21. ஸ்ரீதரன். கி. 1988 'சோழர் காலத்தில் விளக்குத்தானம்' அருண்மொழி, தமிழ்நாடு அரசு தொல்லியல் ஆய்வுத்துறை. ப. 224
22. மகேஸ்வரன். வ. 2014. சோழர்காலத்து இடையர் சமூகம்: கோவில் கலாசாரத்தின் புறநிலைத் தொண்டர்கள். சேர்.பொன்.இராமநாதன் நினைவுப் பேருரை. யாழ்.

பல்கலைக்கழகம். பக் - 24 - 25

23. தமிழ்க்கல்வெட்டுச் சொல்லகராதி - II ப. 397 - 419
24. மகேஸ்வரன். வ. 2008. சோழர்காலத்துக் கோயிலும் சமூகமும். குமரன் புத்தக இல்லம்.ப.216.

    SII Vol III Part III No - 113

    Vol V No 596, 600, 602

    Vol XIII No 280
25. மகேஸ்வரன். வ. 2008. மேலது. ப. 217
26. Pathmanathan. S. op cit. p. 209
27. தமிழ்க் கல்வெட்டுச் சொல்லகராதி - II. ப. 180
28. மு. நளினி, இரா. கலைக்கோவன். 1995. தளிச்சேரிக் கல்வெட்டு வரலாறு - டாக்டர் இராசமாணிக்கனார் வரலாற்று ஆய்வு மையம். ப. 74
29. Pathmanathan. S. Op cit. p. 209
30. தமிழ்க் கல்வெட்டுச் சொல்லகராதி - I. p. 45
31. மேலது. II. ப. 185
32. Pathmanathan. S. op cit. p. 208
33. தமிழ்க்கல்வெட்டுச் சொல்லகராதி. II p. 30
34. மேலது p. 34
35. SII Vol. XXII No 42

    SII Vol. VII No 570

    SII Vol. II part III No. 83
36. மகேஸ்வரன். வ. 2008. மு. கு. நூ. ப. 212 - 213
37. தமிழ்க்கல்வெட்டுச் சொல்லகராதி. II. ப. 414
38. SII Vol II No.12
39. SII Vol IV No. 436
40. மகேஸ்வரன். வ. 2008. மு. கு. நூ. ப. 229
41. Pathmanathan. S. Op cit. pp - 209 - 230
42. நளினி. மு. கலைக்கோவன்.இரா. மு. கு. கட்டுரை. ப. 55

    SII Vol II No. 66
43. SII Vol II No - 66
44. நளினி. மு. கலைக்கோவன்.இரா. மு. கு. கட்டுரை. ப. 56
45. SII Vol II No. 66

    நளினி. மு. கலைக்கோவன்.இரா. மு. கு. கட்டுரை. ப. 80

சோழர்கால நீர் பாசன கட்டமைப்பும் அதன் கல்வெட்டுகளும்

வி.ப. யதீஸ் குமார்
துணை இயக்குநர்
தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை,
சென்னை.

பண்டைய தமிழ்நாட்டில் நீர்மேலாண்மையின் முக்கியத்துவத்தை உணர்ந்து ஏரிகள், குளங்கள், வாய்க்கால், அதைச் சார்ந்த கட்டமைப்பு, புனரமைப்பு, பாரமரிப்பு ஆகியவற்றைமிகச் செம்மையாகவும் நேர்த்தியாகவும் உருவாக்கினர். இவை அக்காலத்தில் பல்வகையில் சமூக, பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்தி, நிலையான குடியிருப்புகளுக்கும், தொடர்செழுமைக்கும் வழிவகை செய்தன.

நீரின் அவசியம் மற்றும் மேலாண்மையை சங்க இலக்கியங்கள் எடுத்துரைத்திருந்தாலும் நீரியல் தொடர்பான சஙகாலக் கல்வெட்டுக்கள் நமக்கு இதுவரை கிடைக்கப்பெறவில்லை. பொ.ஆ ஆறாம்/ஏழாம் நூற்றாண்டில் முதற்கொண்டே ஏரி மற்றும் குளங்கள் குறித்த கல்வெட்டுகள் தமிழகத்தின் பல பகுதிகளில் கிடைக்கின்றன.

இடைக்காலச் சோழர் காலத்தில், காவிரியாற்றின் இருமருங்கிலும் குறிப்பாக கரூர் முதல் திருச்சி வரை ஏராளமான புதிய வாய்க்கால்கள் வெட்டப்பட்டன. இவற்றில் தலை-மதகுகள் எழுப்பி, ஆற்று நீரினை வாய்கால் மூலம் பாசனத்திற்கு கொண்டு செல்ல வழிவகை செய்தனர். இவை முசிறி, புதுவாய்த்தலை, இராமவாய்த்தலை. பெட்டவாய்த்தலை உய்யக்கொண்டான், போன்ற பகுதிகளில் காவிரியின் கரையில் அமைக்கப்பட்டன.

ஆறு, ஏரி, குளங்களில் மதகுகள் அமைத்து நிர்பாசனம் செய்யும் முறையில் காலந்தோறும் பல்வேறு தொழில்நுட்ப வளர்ச்சி அடைந்து வந்துள்ளன. வறண்ட நிலப் பகுதிகளில் நீரின் தேவையை உணர்ந்து பல்வேறு ஏரி குளங்களை உருவாக்கி அவற்றை தொடர்ந்து பராமரிப்பு பணிகள் செய்து வந்துள்ளார். ஆற்றிலிருந்து கால்வாயை வெட்டி மேடான பகுதிகளுக்கு நில அமைப்புக்கு ஏற்றவாறு நீர்பாசனம் செய்துள்ளனர்.

பல ஊர்களின் பெயர்கள் காரணப் பெயர்களாக, சித்தார் (சிற்றார்), பேரோடு (பேரோடை), ஈரோடு (ஈரொடை), என ஆறுகள், ஓடைகளின் பெயரை தாங்கி வருவதையும், குளித்தலை பெட்டவாய்த்தலை என ஆற்றின் "தலை"மடை வாய்க்கால் அமைத்ததையும், சமுத்திரம் என்ற ஊர் பெயர் அவ்வூரில் சமுத்திரம் போன்ற ஏரியினைக் கொண்டுள்ளதையும் குறிக்கின்றன.

திருச்சி மாவட்டம், ஆற்றுப் பாசனம் , கால்வாய்ப் பாசனம் , ஏரி, மற்றும் குளம் நீர் பாசன மேலாண்மைசிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இம்மாவட்டத்தில் நீர் பாசனம் சார்ந்த கல்வெட்டுக்கள் எட்டாம் நூற்றாண்டு தொடங்கி பதினெட்டாம்நூற்றாண்டு முடிய உள்ளன. சோழர்களால் கட்டப்பட்ட கல்லணை பற்றிய பழைய கல்வெட்டுகள், காலந்தொறும் நடைபெற்ற பல்வேறு புனரமைப்பு பணியினால் காண போயிற்று என்று கருதலாம்.

முசிறியில் காணப்படும் கால்வாய் மற்றும் மதகு சோழ மன்னன் மூன்றாம் இராஜராஜனால் பொ.ஆ 1220-ம் ஆண்டு கட்டப்பட்டதாகும். காவிரி ஆற்றிலிருந்து வாய்க்கால் அமைத்து சுமார் 50 மீட்டர் தூரத்தில் மிக நேர்த்தியான கல்லாலான மதகுகள் அமைத்து அவற்றில் கல்வெட்டு வெட்டப்பட்டுள்ளன. இக்கல்வெட்டில் இவ்வூரை முசிறியான மும்முடிச்சோழபேட்டை எனக் குறிப்பிடுகிறது. இது சோழர்கால நீரியல் கட்டுமானத்திற்கும் நீர்ப்பாசனத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளன.

சோழர் காலத்தில் மணப்பாறைக்கு மேற்குப் பகுதிகளில் புதிய குடியேற்றம் நிகழ்ந்ததை அங்கு கிடைத்த சோழர், விஜயநகர, நாயக்கர் காலக் நீரியல் தொடர்பான கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. இப்புதிய குடியேற்றம் சிறு, சிறு ஓடைகள் மற்றும் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக திருச்சி மாவட்டத்தில் மணப்பாறை மருங்காபுரி வட்டார பகுதிகளில் ஏராளமான குமுழிக் கல்வெட்டுகள் கண்டறியப்பட்டுள்ளன. மறவனூர், வடசேரி, வீரப்பூர், பிச்சம்பட்டி, தாளகுளத்துப்பட்டி, இராஜபட்டி, மொண்டிபட்டி, அன்னசமுத்திரம், தொப்பநாயக்கம்பட்டி, பிச்சம்பட்டி, ஊனையூர், வேம்பனூர், கல்கொத்தனூர், அன்னதாசம்பாளையம், பண்றாங்கொம்புநத்தம், மேட்டுப்பட்டி, கல்குளம், நவகுடி ஆகிய ஊர்களில் குமிழிக் கல்வெட்டுகள் வெட்டப்பட்டுள்ளன.

மொண்டிப்பட்டி ஊரில் குமிழியும், தூம்பும் அமைத்தது குறித்து கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவற்றில் மறவனூர், பிச்சம்பட்டி, ராஜபட்டி ஆகிய ஊர்களில் உள்ள குமிழித்தூம்பு கல்வெட்டுகள் பத்தாம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாக உள்ளன. நவகோடி, பன்னாங்கொம்பு, மொண்டிப்பட்டி, மேட்டுப்பட்டி வடக்குச்சேரிப்பட்டி ஆகிய ஊர்களில் உள்ள குமிழித்தூம்பு கல்வெட்டுகள் 11-12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாக உள்ளன.

வீரப்பூர், தாளகுளத்துப்பட்டி, தொப்பநாயக்கன்பட்டி, அன்னசமுத்திரம் ஆகிய ஊர்களிலுள்ள குமிழிகள் 17-18-ம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும். 17-18-ம் நூற்றாண்டுகளில் சிறுசிறு ஓடைகளின் குறுக்கே கம்பயநாயக்கர் என்பவருடைய காலத்தில் வீரப்பூர், தாளகுளத்துப்பட்டி, கருங்குளம் பகுதிகளில் குளம் அமைத்து குமிழிகள் நிலை நிறுத்தப்பட்டுள்ளன. தாளகுளத்துப்பட்டி கல்வெட்டில் குண்ணுடையக் கவுண்டன் மகன் பெ(ரி)ய கவுண்டன் தம்பி சின்ன கவுண்டன் மகன், வீரமலை கவுண்டன் குமுழிகட்டி வைத்த செய்தியை அறியமுடிகிறது, இக்கல்வெட்டின் காலம் 18-ம் நூற்றாண்டைச் சார்ந்த்தாகும்.

சோழர் காலத்தில் மணப்பாறைக்கு கிழக்குப் பகுதியில் இருந்த குடியேற்றங்கள் மேற்குப் பகுதிகளுக்கும் புதிய குடியேற்றம் நிகழ்ந்ததை குழுமிக் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. இப்புதிய குடியேற்றம் சிறு, சிறு ஓடைகள் மற்றும் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். 11-12-ம் நூற்றாண்டுகளில் மொண்டிப்பட்டி, வடக்குச்சேரிப்பட்டி, மேட்டுப்பட்டி ஆகிய ஊர் கல்வெட்டுக்களில் தலைநீர் ஆழிய நாட்டின(ய) கல் என ஏரியின் தலை மடையில் கல் வெட்டிவைத்துள்ளனர்.

மரவனூர் மணப்பாறை வட்டத்தில் திருச்சி-மணப்பாறை சாலையில் திருச்சியில் இருந்து 35 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. மேலும் சேங்குடியாறு, வீர மலையில் உற்பத்தியாகி சுமார் 20 கிலோமீட்டர் கிழக்கு நோக்கி பயணித்து மாம்முண்டி ஆற்றுடன் கலக்கும் இடத்தில் இவ்வூர் அமைந்துள்ளது. மரவனூர் ஏரியானது, செங்குடியாறு மாம்முண்டியாற்றில் கலப்பதற்கு முன்பாக தடுத்து ஒரு பெரிய ஏரி அமைக்கப்பட்டுள்ளது. மரவனூர் ஏரி இப்பகுதியில் உள்ள ஏரிகளில் மிகப் பெரியதும் பழமையான ஏரியாகும். இப் பரந்துபட்ட ஏரியில் நீர் குமிழி-தூம்பு ஏறத்தாழ பதிமூன்று பதினான்காம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டதாகும். இதில் கல்வெட்டுக்கள் ஏதும் பொறிக்கப்படவில்லை. ஏரியின் நடுவில் குறிப்பாக தெற்குச்சேரிக்கும் மரவனூருக்கும் இடையில், சுமார் 1.1/2 மீட்டர் நீளமும் 1 மீட்டர் அகலமும் உள்ள பலகைகள் (ஏரி தூர்வாரும் பொழுது) உடைக்கப்பட்ட நிலையில் களப்பணியின்போது கண்டறியப்பட்டது. மேல்பகுதி உடைந்ததால் அரசனின் பெயர் கண்டறிய முடியவில்லை எழுத்தமைதியின் அடிப்படையில் சுமார் பொ.ஆ எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதலாம்.

தனிக்கல், திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டம், மரவனூர் குளத்தினில் உள்ள கல், பொ.ஆ 8- ம் நூற்றாண்டு ஆகும். தலைவாய் பழுது நீக்கியமையைப் பற்றி கூறுகிறது.

1. ……….........ய.......................
2. ....[யாவது]..........................[செரு]......
3. ....ளாநின்ற காலத்து வெ.......
4. ருர்சா...ருளாநின்றகாலதுஅடியு ......
5. லகலத்து தலைவாய் கெட்டு கிடக மூவாட்டை உள்
6. கெட்டு கிடந்த தலைவாய் கண்டான் இறைய்ய-
7. னூராலங்காணி உடையான் சாத்தங்கிளன்

முதல் இரண்டு வரிகள் சிதைந்த நிலையில் காணப்படுகின்றன இறுதி மூன்று வரையில் தலைவாய் கெட்டு கிடக்க மூட்டை உள்கெட்டு கிடந்த தலைவாய் கண்டான் இளைய்யா னூரலங்காணி உடையான் சாத்தங்கிளன் என்று கல்வெட்டு வாசகம் உள்ளது. இக்குளத்தின் தலைவாய் மூன்று ஆண்டுகள் பழுதடைந்த நிலையில், இவற்றை இளைய்யா னூரலங்காணி

உடையான் சாத்தங்கிளன் என்பவர் பழுது நீக்கினான் என்ற செய்தியினை அறியமுடிகின்றது. இக்குளத்தில் நீர்ப்பாசன முறைக்காக தலைவாய் பல காலம் இயங்கி வந்த நிலையில் சுமார் எட்டாம் நூற்றாண்டில் அவை பழுதடைந்துள்ளது என்ற செய்தியினை அறிய முடிகிறது.

திருச்சி மாவட்டம், மருங்காபுரி வட்டம், இராசாபட்டி, குளத்தினில் உள்ள குமுழிக்கல், பொ.ஆ 10-ஆம் நூற்றாண்டு . பாடல் கல்வெட்டில், குமுழி அமைத்ததைப் பற்றி கூறுகிறது.

1. ஸ்வஸ்திஸ்ரீ போ-
2. ரொன்று வேடர் புது-
3. க்குடி ஏற்றிக் குமுழி கண்-
4. டோன் பாரொன்று கீர்த்தி
5. மலர் (தாரணி)வீமன் கொடு-
6. ம் பையர் கோன் ஆரென்-
7. றுரைக் கிலழகிய பாண்-
8. டியத4ந்ம செட்டி கீரனா-
9. [னறு]வண்கைக் க[லி]யன்
10. [மூ]ர்க்கன் வணக்கியக[ரை]

திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டம், மேட்டுப்பட்டி ஊரின் தென்புறம் உள்ள தனிக்கல், பொ.ஆ 12 ம் நுற்றாண்டு, ஏரியூர் நாட்டு தஞ்சாவூர் கூற்றத்து மருராடி கிழான் ஆக்களாண்டாண் பெரும்-முப்பிக்கு தலைநீராழியகல் அமைத்ததைப் பற்றி கூறுகிறது.

1. ஸ்வஸ்திஸ்ரீ ஏரி-
2. யூர் நாட்டு த-
3. ஞ்சாவூர் கூற்ற-
4. த்து மருராடி கி-
5. ழான் ஆக்களா-
6. ண்டாண் பெரு-
7. ம்முப்பிக்கு த-
8. லைநீராழிய
9. கல்

திருச்சி மாவட்டம் மணப்பாறை வட்டம், வீரப்பர் குளத்தில் உள்ள குமுழிக் கல்வெட்டில் சக வருடம் 1649 ல் வகப்பனாயக்கர் மகன் ரங்கப்பனாயக்கர் குளம் வெட்டியதையும், குமுழி அமைத்ததைப் பற்றியும் கூறுகிறது.

குமுழிக் கல்வெட்டு -1	குமுழிக் கல்வெட்டு -2	குமுழிக் கல்வெட்டு -3	குமுழிக் கல்வெட்டு -4	குமுழிக் கல்வெட்டு -5
1. …..	1. இதெ	1. ..	1. (கு)ளம் வெ	1. அவ
2. மேற் சக	2. க்கு	2. …	2. ட்டி விப்	2. னுட
3. ர்த்தம்	3. பிள	3. …	3. பார்கலு	3. பொ
4. தசுாசமி	4. கடம	4. இ	4. இந்தப்படி	4. ண்
5. கூ இதன்	5. ன் க	5. பிங்	5. குடுதில்	5. சா
6. மேல் செ-	6. ல்லு	6. கல	6. லு குடா	6. தி
7. ல்லா நிந்	7. க்கு	7. ..	7. திருந்தா	7. யமூ
8. ற பிலவங்	8. தச்	8. உளு	8. லும் சில	8. ப்ப
9. க ஞு ஆ	9. சற்று	9. தபே	9. விட்டாலு	9. னுக்
10. னி மீ எ .	10. வப	10. ருக்கு	10. ம் இதற்கு	10. கும்
11. ம	11. னுக்	11. எல்	11. ஆட்சேர	11. வெ
12. ளமும தி .	12. கு செ	12. லா	12. னை நினைத்	12. ட்டி
13. றயொ..	13. யித	13. ம் செ	13. தாலும்	13. யா
14. யும் றொகண	14. இ ஐ	14. யிக		14. னுக்
15. யும் பெற்ற சு-	15. ந வீ	15. இ ஐ		15. கும்
16. பதினத்தி-	16. தம்	16. உ ள		16. விட்
17. ல் குமாரக் க-	17. குடுத்	17. வீத		17. டுக்கு
18. ம்பயனாயக்	18. து போ-	18. ங் கு		18. டுத்த
19. கர் குமாரன்	19. வா	19. டுத்து		19. வன் இ ஊ
20. பெரியொ வ-	20. ராக	20. குளம்		
21. க்கம்பயனா-	21. வும்	21. பாச்.		
22. க்கர் பட்டத்-		22. செய்		
23. தில் பாலால		23. .மு		
24. ரங்கம் வகப்		24. ம் போ		
25. பனாயக்கர்		25. ட்டு கு		
26. குமாரன் கா-		26. ளம்		
27. வெட்டிரங்-		27. வெட்		
28. கப்பனாயக்		28. டி வி		
29. கர் குளக்கற-		29. ப்பார		
30. தரத்தில் விர		30. கவும்		
31. ப்பூர்க் கன்னி		31. மேற்கு		
32. மார் கோவில்		32. ப்படி		
33. குளத்திலே பண்னின		33. க்கு க		
34. தற்மம் சூரிய்		34. ருங்கு்		

குமுழிக் கல்வெட்டு -1	குமுழிக் கல்வெட்டு -2	குமுழிக் கல்வெட்டு -3	குமுழிக் கல்வெட்டு -4	குமுழிக் கல்வெட்டு -5
35. சந்திரா- தியன் 36. உள்ள- வரை 37. க்கும் கல்க்கு 38. மிளி கட்டி வி 39. ச்சொம் இந்தக் 40. குளம் நிரொ 41. ட்டம் உள்ள ம- 42. ட்டு நிலத்தில் 43. பெரிய கோவி- 44. ல் சுத்திவர 45. இருக்கிறா 46. ண்டு செயி		35. ள முத 36. ல்முக 37. வனூ 38. ர் வ 39. ரைக் 40. கும்		

திருச்சி மாவட்டம்.மணப்பாறை வட்டம், தாளகுளத்துப்பட்டி குளத்தில் உள்ள குமுழிக் கல்வெட்டில், குண்ணுடையக் கவுண்டன் மகன் பெ(ரி)ய கவுண்டன் தம்பி சின்ன கவுண்டன் மகன், வீரமலை கவுண்டன் kகுளம் வெட்டியதையும், குமுழி அமைத்ததைப் பற்றியும் கூறுகிறது. இக்கல்வெட்டின் காலம் 18-ம் நூற்றாண்டைச் சார்ந்த்தாகும்.

1. கன்னிமா-
2. ர் துணை
3. உ . .
4. ருத்திரர்க்க-
5. ரி ஓு ஆடி
6. அ உ களை
7. கபிரியெ
8. வக கம்-
9. பயனாய-
10. க்கர் ஐ-
11. நவர்க
12. ள் னாளை-
13. யில் குண்-
14. ணடைய
15. கவுண்-
16. டன்மகன்
17. பெயகவுண்-
18. டன் தம்பி-
19. சின்னாகவு-
20. ந்டன் ம-
21. கன் வீரம-
22. லை கவுண்-
23. டன் வெட்-
24. டிவச்ச கு-
25. ழம் கல்க்-
26. குமுளி கட்டி
27. வச்சது இ
28. ந்தகல்குமு-
29. ளி குருவம்-
30. பு ஆசாரி க-
31. ட்டினது.

திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டம், அன்னசமுத்திரம் ஊரின் குளத்தில் பொ.ஆ 18 ம் நூற்றாண்டு (சக.1708, கலி.4886), சஸ்ரீ முத்துவீரப்ப லக்கயனாயக்கர் குமுழிகல் அமைத்ததைப் பற்றி கூறுகிறது.

1.	உ ஸ்வஸ்திஸ்ரி	16.	சத்திரமும் பி-	31.	த்திரராகிய ரா-
2.	சாலியவாக-	17.	றிதிநாம-		
3.	ன சகாற்தம்	18.	யொகமும்	32.	சஸ்ரீ முத்து
4.	தஎாஅ கலி-	19.	வாலவா க-	33.	வீரப்ப லக்-
5.	யுத்தம் சது-	20.	றணமும் கூடி	34.	கயனாயக்க-
6.	அாஅறு	21.	ய சுபதின-	35.	ரய்யனவர்-
7.	இதன் மெற்	22.	த்தில் சில்ல	36.	கள் அன்னச-
8.	செல்லா நி-	23.	சாசன கொ-	37.	மூத்திரம் கு-
9.	ன்ற பராப-	24.	த்திரத்தில்	38.	ளத்துக்குக்
10.	வ ஷுபங்கு-	25.	ராசமானி-	39.	குமுழியுண்டு
11.	னி மீ உயசு உ	26.	யராச ஸ்ரீ	40.	பண்ணிவிச்-
12.	பூறுவபட்சம்	27.	சொக்கனாத	41.	சு நாட்டுக் கல்
13.	பஞ்சமியும்	28.	லக்கய னாய-	42.	நிறுத்தினது
14.	ஸ்திரவாரமும்	29.	க்கரய்யன-	43.	
15.	ரொகிணி நஷ-	30.	வர்கள் சுபு-		

திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டம், கருங்குளம் ஊரின் குளத்தில் பொ.ஆ 18 ம் நுற்றாண்டு, இராமப்ப கம்பயனாயக்கர் மகன் சின்னவசப்ப னாயக்கர் குமுழி அமைத்ததைப் பற்றி கூறுகிறது.

1.	பிறமா-	10.	பயனாய-
2.	தி வரு-	11.	
3.	சம் ஆ-	12.	க்கர் ம-
4.	வனி	13.	கன் சி-
5.	ழசு உ க-	14.	ன்ன-
6.	லியுக-	15.	வசப்ப-
7.	த்திலெ-	16.	னாயக்கர்-
8.	இராம-	17.	கட்டிவி-
9.	ப்ப கம்-	18.	ச்ச குளுமி

முசிறி பெருவாய்க்கால் மதகு

முசிறி பெருவாய்க்கால் மதகு



முசிறி பெருவாய்க்கால் மதகு கல்வெட்டு

மரவனூர், குமுழிக் கல்வெட்டு

இராசாபட்டி குமுழிக்கல்

இராசாபட்டி குமுழிக் கல்வெட்டு

அன்னசமுத்திரம் குமுழிக் கல்வெட்டு

அன்னசமுத்திரம் குமுழிக் கல்வெட்டு

வீரப்பூர், குமுழிக் கல்வெட்டு

தாளகுளத்துப்பட்டி குமுழி

தாளகுளத்துப்பட்டி குமுழிக் கல்வெட்டு

நாகபட்டினமும் வணிகக் குழுக்களும்

பா. ஜெயக்குமார்
பேராசிரியர் (பணிநிறைவு)
கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறை
தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-613 010
Email :jayaepi@yahoo.com

சுருக்கம்

உலகளவில் தொன்று தொட்டு கடற்சார் வணிகச் செயல்பாடுகளில் முதன்மையான இடத்தை தமிழகம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. இச்செயல்பாடுகளில், குறிப்பாக சங்ககாலத்தில் 'பட்டினம்' என்னும் பின்னொட்டுடன் பெயர் பெற்ற கடற்கரைத் துறைமுக-வணிகத் தலங்கள் முக்கியப்பங்காற்றின. இப்பட்டினங்களின் வீழ்ச்சி அன்றைய அரசுகளின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தது என்பது வரலாற்று ஆய்வாளர்களிடையே பொதுவாக ஏற்கப் பெற்ற கருத்தாகும். இடைக்காலத்தில், சோழமண்டலக் கடற்கரையில் 'நாகை' குறிப்பிடத்தக்கக் கடற்சார் மையமாக உருவாக்கப்பட்டது. முதன் முதலில் "பட்டினம்" என்னும் தமிழ் மரபுசார் பின்னொட்டுடன் "நாகபட்டினம்" என முதலாம் இராஜராஜன் கல்வெட்டுகளில் பெயர் மாற்றம் பெறுவதையும் இம்மன்னனின் ஆனைமங்கலம் செப்பேட்டின் வடமொழிப் பகுதியில் 'நாகிபட்டன்' எனக் குறிப்பிடப்படுவதும் நோக்கத்தக்கதாகும். இப்பட்டினத்திற்குச் சோழர் கல்வெட்டுகளில் 'சோழகுலவல்லி பட்டினம்' என்ற மற்றொரு பெயரும் வழக்கத்தில் இருந்ததைப் பார்க்க முடிகிறது. மேற்சுட்டிய செப்பேட்டின் தமிழ்ப்பகுதியின் தொடக்கத்தில் 'உலகுக்கெலாம் திலகமாக விளங்குகின்ற நாகபட்டினம்' என விளிக்கப்படுவதில் இருந்து இப்பட்டினத்தின் பன்னாட்டுமுக்கியத்துவம் நன்கு புலப்படுகிறது. முதலாம் இராஜராஜன், முதலாம் இராஜேந்திரன், முதலாம் குலோத்துங்கன் ஆட்சிக் காலங்களில் தொடர்ச்சியாக நூறாண்டுகளுக்கும் மேலாக அன்றையத் தமிழகத்தில் முதன்மையான துறைமுக-வணிக மையமாக நாகப்பட்டினம் விளங்கியதைச் சான்றுகளின் ஊடாகக் காணமுடிகின்றது.

முதலாம் இராஜேந்திரனின் கல்வெட்டுகளில் சீனக்கனகம், நிறைபொன், உண்டிகைப் பொன் போன்ற சொற்கள் காணப்படுவது நாகபட்டினம் பிறநாட்டு வணிகர்களின் வாயிலாகத் தங்கக் கட்டிகளை ஈர்க்கும் மையமாக விளங்கியதை உறுதி செய்வதாகும். இங்கு அக்கசாலையும் இருந்துள்ளமை சுட்டத்தக்கது. மேலும் சிறப்புச் சேர்க்கும் வகையில் அக்காலத் தமிழகத்தில் குறிப்பாகப் பாண்டி நாட்டு, சோழநாட்டுக் கடற்கரைப் பட்டினங்களில் பெருமளவில் செயல்பாடுகளைக் கொண்டிருந்த பதினெண் விசயத்தார் மற்றும் குதிரைச்சாத்து அல்லது மலை மண்டலத்துக்கு திரைச் செட்டிகள் என்னும் இருவணிகக் குழுக்கள் நாகபட்டினத்தில் இருந்து செயல்பட்டமை கடற்சார் வணிகச் சிறப்புக்கு உரியதாகும். மேற்சுட்டிய முதலாவது வணிகக் குழுதங்களின் வணிகத்தில் குறிப்பாகப் பொன் ஆபரணங்கள் உள்ளிட்ட விலை உயர்ந்த பொருட்களைப் பிறநாடுகளுக்கு எடுத்துச் சென்றதையும், இரண்டாவது வணிகக்குழு உள்நாட்டு வணிகத்தில் குதிரையை மையமாகக் கொண்டு மிகச் சுறுசுறுப்பாக செயல்பட்டதையும் அறியமுடிகிறது. இடைக்காலத் தமிழகத்தில்

சோழரின் கீழ்சிறப்புக்குரிய பன்னாட்டுத் துறைமுக-வணிக நகரமாக நாகபட்டினம் விளங்கியதையும், இப்பட்டினச் சிறப்புக்கு மேற்சுட்டிய வணிகக் குழுக்கள் எத்தகையக் காரணிகளாகச் செயல்பட்டன என்பதையும் வணிகக்குழுக் கல்வெட்டுகளின் வாயிலாக வெளிக்கொணரும் வகையில் ஆய்வுக் கட்டுரை அமையும்.

முக்கியச் சொற்கள் : பட்டினம், நாகி, சீனக்கனகம், நிறைபொன், உண்டிகைப் பொன், அக்கசாலை, மலை மண்டலம், பதினெண் விசயத்தார், சாத்து, குதிரைச் செட்டி

உலகளவில் தொன்று தொட்டு கடற்சார் வணிகச் செயல்பாடுகளில் மிகச் சிறப்பான இடத்தைத் தமிழ்நாடு பெற்றிருந்தது. இச்செயல்பாடுகளில், குறிப்பாகச் சங்ககாலத்தில் 'பட்டினம்' என்னும் பின்னொட்டுடன் பெயர் கொண்ட கடற்கரைத் துறைமுக-வணிகத் தலங்கள் முக்கியப் பங்காற்றின. இப்பட்டினங்களின் வீழ்ச்சி அன்றைய அரசுகளின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தது என்பது வரலாற்று ஆய்வாளர்களிடையே பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தாகும். சங்ககாலக் காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பு முற்றிலுமாகக் குன்றிய நிலையில் இக்கடற்கரைப் பகுதியில் நாகபட்டினம் குறிப்பிடத்தக்கக் கடற்சார் மையமாக உருவானது. இவ்விடம் பல்லவர் காலத்தில் 'நாகை' என்ற பெயரில் அழைக்கப்பட்டதைக் கல்வெட்டு மற்றும் இலக்கியச் சான்றுகள் காட்டுகின்றன. நாகபட்டினம் நாகநாதர் கோயிலில் உள்ள ஒரு தனிக்கல்லில் பொ.ஆ.7-8 ஆம் நூற்றாண்டுக்குரிய எழுத்தமைப்புடன் காணப்படும் கல்வெட்டு பல்லவர் காலத்தைச் சேர்ந்ததாகக் கருதப்படுவதுடன், முதன்முதலில் 'நாகை' என்னும் பெயரினைக் காட்டக்கூடிய காலத்தால் முற்பட்ட எழுதப்பட்டச் சான்றாகவும் விளங்குகிறது (ஜெயக்குமார் 1991:2). இரண்டாம் நரசிம்மவர்மன் (பொ.ஆ.691-729) ஆட்சிக்காலத்தில் நாகையில் புத்தவிகாரை ஒன்று கட்டப்பட்டதாகக் கருதப்படுகிறது (Nilakanta Sastri 1972:116-117). மேலும், தேவாரப் பாடல்களில் நாகைக் கடற்கரைச் சிறப்புக் குறித்துப் பல்வேறு செய்திகள் காணப்படுகின்றன (இளமுருகனார் 1953:1056-1059). எனவே, நாகை என்பதே இதன் பழம் பெயராக இருந்துள்ளதை அறியமுடிகிறது. எனினும், நாகை 'பட்டினம்' என்ற பின்னொட்டுன் நாகபட்டினம் எனப் பெயர் மாற்றம்பெற்று இடைக்காலச் சோழரின் கீழ் போற்றுதலுக்குரிய பன்னாட்டுத் துறைமுக - வணிக நகரமாக சோழமண்டலக் கடற்கரையில் விளங்கியதையும் இப்பட்டினச் சிறப்புக்கு பதினெண்விசயத்தார் மற்றும் மலைமண்டலத்துக் குதிரைச் செட்டிகள் அல்லது குதிரைச் சாத்து என்னும் இரு வணிகக்குழுக்கள் எத்தகையக் காரணிகளாகச் செயல்பட்டன என்பதையும் கல்வெட்டுகளின் வாயிலாக வெளிக்கொணரும் வகையில் இக்கட்டுரை அமைந்துள்ளது.

பல்லவருக்குப் பின்பு, விஜயாலயன் காலம்முதல் சோழமண்டலத்தின் முக்கியக் கடற்கரைப் பகுதியாக சோழரின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் நாகை இருந்துள்ளது. எனினும், முதலாம் இராஜராஜன், முதலாம் இராஜேந்திரன், முதலாம் குலோத்துங்கன் மற்றும் இவருக்குப் பிந்தைய மன்னர்களின் கல்வெட்டுகளிலும் (சீதாராம் குருமூர்த்தி 2007:198-269), முதலாம் இராஜராஜன்

மற்றும் முதலாம் குலோத்துங்கனின் செப்புப் பட்டயங்கள் முறையே பெரிய லெய்டன் செப்பேடு மற்றும் சிறிய லெய்டன் செப்பேடுகளிலும் (EI 22:213-266, 267-281) நாகபட்டினம் என்னும் பெயர் குறிப்பிடப்படுவதைப் பார்க்கமுடிகிறது. இவற்றுள் குறிப்பாக, முதன்முதலில் ‘பட்டினம்’ என்னும் தமிழ் மரபுசார் பின்னொட்டுடன் நாகபட்டினம் என முதலாம் இராஜராஜன் கல்வெட்டுகளில் பெயர் மாற்றம் பெறுவதைக் காணமுடிகிறது. ஆகவே, இடைக்காலச் சோழ அரசு விஜயாலயனால் பொ.ஆ.850 வாக்கில் நிறுவப்பட்டு ஒன்றரை நூற்றாண்டுக்குப் பிறகுதான் ‘நாகை’ என்பது நாகபட்டினமாக அதாவது துறைமுக - வணிக நகரமாக முதலாம் இராஜராஜனால் உருவாக்கப்பட்டதை உறுதிசெய்வதோடு, இம்மன்னனின் சீரிய தொலைநோக்குப் பார்வையின் வாயிலான ஆளுமைத் திறனுக்கும் ஓர் சிறந்த எடுத்துக் காட்டாகவும் விளங்குவதை உணரமுடிகிறது. அப்போது நாகபட்டினம் சத்ரியசிகாமணிவளநாட்டில், பட்டினக்கூற்றம் என்னும் வருவாய் நிலப்பிரிவில் அமைந்திருந்ததையும் பின்னர் இதன் வருவாய் நிலப்பிரிவு அவ்வப்போது மாற்றம் பெற்றதையும் கல்வெட்டுகளில் காணமுடிகிறது (Subbarayalu 1973). ஊரார் சபை நிருவாகத்தில் இருந்த நாகபட்டினத்தை ‘நாகை நாடு’ என ஒரு பெரிய வருவாய் நிலப்பிரிவாக பாண்டியர் ஆட்சிக்காலத்தில் தரம் உயர்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது (ஜெயக்குமார் 2015:188-189).

சோழர் கல்வெட்டுகளில் நாகபட்டினத்துக்கு சேழகுலவல்லிபட்டினம் என்ற மற்றொரு பெயரும் வழக்கத்தில் இருந்ததை அறியமுடிகிறது. ஆனால், இப்பெயரின் சிறப்பு குறித்து வரலாற்று ஆய்வாளர்களோ அல்லது ஊர்ப்பெயர் ஆய்வாளர்களோ இதுவரை கவனம் செலுத்தவில்லை எனலாம். சோழகுலவல்லி என்பது சோழரின் பெண் தெய்வமாக அதாவது அவர்களின் குலதெய்வமாக இருந்திருக்க வேண்டும். நாகபட்டினம் இப்பெண் தெய்வத்தின் தலமாகச் சோழரால் கொண்டாடப்பட்டிருக்க வேண்டும். இதனை உறுதிசெய்யும் நேரடிச் சான்று இல்லை என்றாலும் கூட முதலாம் இராஜராஜனின் பெரிய லெய்டன் பட்டயத்தின் வடமொழிப் பகுதியில் குறிப்பிடப்படும் ‘நாகிபட்டன்’ என்னும் பெயர் இங்கு முக்கியத்துவம் பெறுகிறது. நாகிபட்டன் என்பது, நாகபட்டினம் அல்லது சோழகுலவல்லிபட்டினம் என்பதற்கு இணையான வடமொழிச் சொல்லாக இருந்திருக்க வேண்டும். இடைக்காலச் சீனப்பயணி இத்சிங் நாகபட்டினம் என்னும் பெயரை நாகியபொடனா எனக் குறிப்பிட்டுள்ளதையும் இங்கு சுட்டுதல் தகும். வடமொழிச் சொல்லகராதியில் ‘நாகி’ என்பதற்குப் பெண்பாம்பு அதாவது பெண் நாகம் எனப் பொருள் சுட்டப்படுவதால் நாகபட்டினம் பெண் நாகத்தின் தலமாகப் பெயர் பெற்றிருந்தது எனக் கருதுவதற்கு இடமளிக்கிறது. மேலும், இதனைச் சோழரின் வளமைக்கு உரியதாகவும் பார்க்கலாம். காரணம், சோழர் நாகர் மரபுக்கு உரியவர்கள் என்பதைத் தொடர்ந்து புராணம், இலக்கியம் வழியாகப் பேசப்பட்டுவருவதைச்

சுட்டலாம். பொதுவாக, ஊர்ப் பெயராய்வினை மேற்கொள்ளும் ஆய்வாளர்கள் நாகபட்டினம் என்பதற்கு நாகர் இனம் சார்ந்த மக்கள் அதாவது நாகர்கள் இங்கு வாழ்ந்ததால் அப்பெயர் பெற்றதாகவும், நாகை என்பது மருவி நாகபட்டினம் ஆனதாகவும் கருதுவர். ஊர்ப் பெயராய்வின் முன்னோடி ஆய்வாளரான ரா.பி.சேதுப்பிள்ளை (1976:88) நாகர் இன மக்களுக்கும் இவ்விடத்திற்கும் உள்ள தொடர்பின் அடிப்படையில் இவ்வூர் நாகை எனப் பெயர் பெற்றிருக்க வேண்டும் என்னும் கருத்து நிலவுவதாகக் குறிப்பிடுகிறார். ஆனால், இக்கருத்து சான்றுகளின் வழி திட்டவட்டமாக நிரூபிக்கப்படவில்லை. இக்குறையினைப் போக்கும் வகையில் மேற்சுட்டிய சோழர்காலச் சான்றுகளின் வெளிப்பாடு அமைந்திருப்பதாகக் கருதலாம். எனவே, இடைக்காலச் சோழரும் தாங்கள் நாகர் வம்சத்தின் வழி வந்தவர்கள் என்பதையும், நாகைக் கடற்கரைப் பகுதி சோழரின் மூதாதையர் பூமி என்பதையும் மறவாமல் இருந்தனர் என்பதற்குச் சோழகுலவல்லிபட்டினம் மற்றும் இதற்கு இணையான வடமொழிச் சொல்லான நாகிபட்டன் என்பதையும் தங்களின் அதிகாரப்பூர்வ ஆவணங்களின் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளனர் எனலாம். தமிழர்களுக்குச் சோழகுலவல்லிபட்டினம் எனவும் வெளிநாட்டினருக்கு நாகிபட்டன் எனவும் நாகபட்டினத்தைச் சோழப் பேரரசு அடையாளப் படுத்தியுள்ளமை வரலாற்றுச் சிறப்புக்குரியதாகும்.

முதலாம் இராஜராஜனால் உருவாக்கப்பட்ட நாகபட்டினத்திற்கு மேலும் சிறப்புச் சேர்க்கும் வகையில் அக்காலத் தமிழகத்தின் குறிப்பாகப் பாண்டிநாட்டு மற்றும் சோழநாட்டுக் கடற்கரைப் பட்டினங்களில் பெருமளவில் வணிகச் செயல்பாடுகளைக் கொண்டிருந்த பதினெண்விசயத்தார் மற்றும் மலைமண்டலத்துக் குதிரைச் செட்டிகள் / குதிரைச் சாத்து என்னும் இரு வணிகக் குழுக்கள் நாகபட்டினத்தில் இருந்து செயல்பட்டமை இதன் பன்னாட்டு வணிகம் சிறக்க முக்கியக் காரணிகளாக அமைந்தன. முதலாம் இராஜராஜனின் அனுமதியுடன் கடாரம் / ஸ்ரீவிஜய அரசன் நாகபட்டினத்தில் சூடாமணிபன்மவிகாரை, இராஜராஜப்பெரும்பள்ளி எனும் இரண்டு புத்தவிகாரைகளை உருவாக்கியமை பெரிய லெய்டன் செப்பேட்டின்படி அறிந்ததே. இவ்விகாரங்கள் அமைந்திருந்த இடமான தற்போதைய வெளிப்பாளையம், இங்கிருந்த நூற்றாண்டுகள் பழமைவாய்ந்த இலுப்பை மரத்தின் அடிப்பகுதி, மருந்துக்கொத்தளவீதி, நாணயக்காரத்தெரு ஆகிய இடங்களில் 1867இல் இருந்து பல காலகட்டங்களில் 350 புத்தப் படிமங்கள் கண்டுபிடிக்கப்பட்டன (Ramachandran 1965:19-20). சீனா, பர்மா, கம்போடியா, இந்தோனேசியா நாடுகளின் கலைப்பாணியை ஒத்த 11ஆம் நூற்றாண்டுக் காலகட்டத்தைச் சேர்ந்த இப்புத்தப் படிமங்கள் இந்தியா மற்றும் உலகின் பல இடங்களுக்கும் எடுத்துச் செல்லப்பட்டு அங்குள்ள அருங்காட்சியகங்களில் வைக்கப்பட்டுள்ளன. அந்தவகையில், அமெரிக்கச் செல்வந்தர் மூன்றாம் ராக்பெல்லருக்குச் சொந்தமான கலைப்பொருட்களின்

சேகரிப்பில் நாகபட்டினத்தில் இருந்து பெறப்பட்டதாகக் காட்டப்படும் புத்தப் படிமம் (Rockefeller 1992:38) பதினெண்விசயம் வணிகக்குழுவின் நாகபட்டினம் தொடர்புக்குச் சான்றாகத் திகழ்கிறது. புத்தப் படிமத்தின் பீடத்தில் இரு வரிகளில் “இராசேந்திரசோழப் பெரும்பள்ளி அக்கசாலைப் பெரும்பள்ளி ஆழ்வார் கோயிலுக்கு திருவுத்சவம் எழுந்தருள இவ்வாழ்வாரை எழுந்தருளுவித்தார் சிறுதவூர் நாலாங்குணாகர உடையார் ஸ்வஸ்திஸ்ரீ பதினெண்விசயத்துக்கும் அக்கசாலைகள் நாயகர்” எனக் காணப்படும் எழுத்துப் பொறிப்புகளை நொபொரு கராசிமா துணையுடன் வெளிக்கொணர்ந்த எ.சுப்பராயலு (1993:43-46) இதனை பொ.ஆ.1100ஆம் ஆண்டினை ஒட்டியக் காலத்தைச் சேர்ந்ததாகக் குறிப்பாக முதலாம் குலோத்துங்கன் காலத்துக்கு உரியதாகக் குறிப்பிடுவதோடு பதினெண்விசயத்துக்கும் அக்கசாலை நாயகர் என்ற தொடர் அக்கசாலை தொழில்புரிவோர் யாவரும் தொழில் அடிப்படையில் இவ்வணிகக் குழுவோடு நெருங்கிய தொடர்புடையவர்களாக இருந்தனர் என்பதைக் காட்டுவதாகவும் குறிப்பிடுகிறார். பொன்வேலை செய்யுமிடம், நாணயங்கள் அச்சிடுமிடம் அக்கசாலை எனப்படும். பதினெண்விசயம் வணிகக்குழு இடைக்காலத்தில் தென்னிந்திய அளவில் உள்நாட்டிலும் கடல்கடந்தும் பொன் அணிகலன்கள் முத்து, குதிரை, வாசனைப் பொருட்கள் அடங்கிய விலையுயர்ந்த வணிகப் பொருட்களைத் தங்களுடன் எடுத்துச் சென்றவர்களாவர். நாகபட்டினத்தில் மிகப் பெரியளவில் பொன் ஆபரணங்கள் செய்யும் அக்கசாலை இருந்திருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. காரணம், இத்துறைமுகப் பட்டினம் கடற்சார் வணிகத்தின் வாயிலாக பிறநாடுகளில் இருந்து தங்கக்கட்டிகளை ஈர்க்கும் மையமாக இருந்ததை இலக்கியம் மற்றும் கல்வெட்டுச் சான்றுகளின் வழி அறியமுடிகிறது. பொ.ஆ.10-11ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சீனமொழிக் குறிப்பான செள-சு-குவா தென்கிழக்காசிய நாடுகளில் இருந்து தங்கக்கட்டிகள் பெருமளவில் வணிகர்களால் சோழமண்டலக் கடற்கரைக்கு வந்ததாகவும், வெளிநாட்டு வணிகர்களை ஈர்ப்பதற்காகக் குறிப்பாக, சோழருடனான கடற்சார் வணிகத்தில் பெரும் நாட்டம் கொண்டிருந்த சீனமன்னன் தனது நாட்டு வணிகர்கள் மற்றும் தூதுவர்கள் வாயிலாக பெருமளவில் தங்கத்தை சோழமண்டலக் கடற்கரைக்கு அனுப்பியதாகவும் குறிப்பிடுகிறது (Hirth and Rockhill 1996:19). இதற்கு வலுசேர்க்கும் வகையில் நாகபட்டினம் காயாரோகணஈசுவரர் கோயில் அல்லது நீலாயதாட்சியம்மன்கோயிலில் காணப்படும் முதலாம் இராஜேந்திரனின் 3ஆம் மற்றும் 4ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் அமைகின்றன (ARE 1956-57:164, 166). முதல் கல்வெட்டில் ராஜராஜமண்டலத்து, கீட்செம்பிநாட்டு, மேன்றோன்றிபட்டினத்தைச் சேர்ந்த ஸ்ரீவிஜயத்தரையர் கந்மி அதாவது பாண்டிநாட்டு கீட்செம்பிநாட்டு பெரியபட்டினத்தில் (ஜெயக்குமார் 2001:66) ஸ்ரீவிஜய மன்னனின் கந்மியாக (வணிகப் பிரதிநிதி / உயர் அலுவலர் / தூதுவன்) இருந்து செயல்பட்டவன் நாகபட்டினம் கோயிலுக்கு 14½ கழஞ்சு நிறைபொன்னையும், இரண்டாவது

கல்வெட்டு கடாரத்து மன்னனின் கந்மியாக நாகபட்டினத்தில் இருந்து செயல்பட்டவன் காயாரோகணஈசுவரருக்கு வழங்கிய 87¾ கழஞ்சு சீனக்கனகம், ஏற்கனவே முந்தைய ஆண்டுக்கு வழங்க வேண்டிய 87¾ கழஞ்சு சீனக்கனகம், அரசனின் கருவூலத்துக்கு வழங்க வேண்டிய உண்டிகைப்பொன் 60¾ கழஞ்சு ஆக மொத்தம் 236¼ கழஞ்சு பொன் வழங்கிய செய்தியைக் குறிப்பிடுகிறது. மேற்சுட்டிய இரண்டு கல்வெட்டுகளில் மட்டும் 250¾ கழஞ்சு எடையுள்ள பொன் நாகபட்டினத்திற்கு வந்து சேர்ந்துள்ளமை சுட்டத்தக்கதாகும். கழஞ்சு 1ன் எடை இன்றைக்கு 4 கிராமுக்குச் சமமாகும். அவ்வாறாயின், 250¾ கழஞ்சு பொன்னின் இன்றைய மதிப்பு 1003 கிராம் ஆகும். சீனக்கனகம், நிறைபொன், உண்டிகைப்பொன் என்பது தூயத் தங்கத்தைக் குறிப்பதோடு, இவையாவும் தங்கக் கட்டிகளாக இருந்திருக்க வேண்டும் என்பதையும் உணர்த்துகிறது. தமிழகக் கல்வெட்டுகளில் மேற்சுட்டிய முதலாம் இராஜேந்திரனின் கல்வெட்டினைத் தவிர சீனக்கனகம் பற்றிய வேறு கல்வெட்டு எதுவும் இதுவரை கிடைக்கப்பெறவில்லை என்பதும் இங்கு சுட்டுதல் தகும்.

கனகம் என்ற பெயரில் பொன் அழைக்கப்பட்டதைச் சிலப்பதிகாரம் சுட்டுகிறது (Subramanian 1996-250). வரலாற்று ஆய்வாளர்கள் சீனக்கனகம் என்பதற்கு சீனத்தங்கம் அல்லது சீனப்பொன் நாணயம் எனப் பொருள் கொள்கின்றனர். சீனாவிலிருந்து ஸ்ரீவிஜயா மற்றும் கடாரம் வழியாகத் தமிழ்நாட்டின் சிறப்புமிகு வணிகத் துறைமுகமாக விளங்கிய நாகபட்டினத்திற்கு வணிகர்கள் மூலமாக சீனக்கனகம் வந்திருக்க வேண்டும் என கே.ஜி. கிருட்டிணன் கருதுகிறார் (Krishnan 1981:103). எனவே, மேற்சுட்டிய சீனக்குறிப்பான சௌ-சு-குவா சுட்டுவதை முதலாம் இராஜேந்திரனின் கல்வெட்டின் வாயிலாக உறுதிசெய்யமுடிகிறது. சோழப் பேரரசுக்கு வணிகர்களின் வாயிலாகப் பெருமளவில் அன்னியச் செலாவணியை ஈட்டக்கூடிய மையமாக நாகபட்டினம் அக்காலத்தில் விளங்கியதுடன் சோழரின் பொருளாதாரத்தை நிலையானதாக வலுப்படுத்தியது என்பதிலும் மிகையில்லை. சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்படும் காவிரிப்பூம்பட்டினத்து பொன் வணிகனார் (Subramanian 1966:269), தாய்லாந்தின் பழம்துறைமுக நகரான கிளோங்தோமில் உள்ள குவான் லக் பாட் என்ற இடத்தில் 8x4 செ.மீ அளவிலான சிறிய கல்லில் பொ.ஆ. 4-5 ஆம் நூற்றாண்டுக்குரிய தமிழ் எழுத்தில் 'பெரும்பதன் கல்' என்ற பொறிப்புடன் கிடைத்துள்ள தங்கத்தின் தரத்தை அறிய உரைத்துப் பார்ப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட உரைகல் (சண்முகம் 1993:81-84), நாகபட்டினம் நாகநாதர் கோயிலில் உள்ள 7-8 ஆம் நூற்றாண்டுக்குரிய பல்லவர்காலக் கல்வெட்டில் காணப்படும் 'நாகைப் பெருந்தட்டான்' என்ற குறிப்பு (ஜெயக்குமார் 1991:2), நாகபட்டினத்துக்குரிய மேற்சுட்டிய முதலாம் குலோத்துங்கன் காலத்தைச் சேர்ந்த புத்தப் படிமத்தில் குறிப்பிடப்படும் பொன்வேலை செய்யுமிடமான அக்கசாலை போன்றவை இக்கடற்கரைப்

பகுதி சங்ககாலம் முதற்கொண்டு சோழர்காலம் வரை பொன் ஆபரணங்களின் ஊடான வணிகத்தில் தென்கிழக்காசியப் பகுதியின் கடற்சார் தொடர்பினைப் பெற்றிருந்த்தைக் காட்டுவனவாகும்.

சோழநாட்டில் கிடைக்கின்ற பதினெண்விசயம் தொடர்புடைய கல்வெட்டுகளில் பெரும்பாலும் பாண்டிய மன்னர்கள் வெளியிட்டவையாகும் (SII:40,41,47). மேலும், சோழநாட்டை விட பாண்டிநாட்டில் இவ்வணிகக்குழுக் கல்வெட்டுகள் மிகுதியாகக் கிடைப்பதோடு பல்வேறு அரிய செய்திகளையும் தருகின்றன. குன்னவராயன்கோட்டை பொ.ஆ.12ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு (ஜெயக்குமார் 2015:136-137) இவ்வணிகக் குழுவினர் உள்நாட்டில் இருந்த மாநகரம், நகரம், பேரூர் ஆகியவற்றை மையமாகக் கொண்டு எவ்வாறு செயல்பட்டனர், இவர்களுக்கு சமூகநோக்கில் எவ்வாறான வரிகள் விதிக்கப்பட்டன என்பதையும், பொ.ஆ.12-13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பிரான்மலைக் கல்வெட்டு இவ்வணிகக்குழு தங்கள் வணிகத்தில் என்னென்ன சரக்குகளைப் பரிமாறினர் என்பதற்கான விரிவான பட்டியலைத் தருவதாகவும் அமைந்துள்ளன (SSI 4:442). இராமநாதபுரம் கடற்கரையில் அமைந்துள்ள கீழக்கரையான நினைத்ததுமுடித்தான்பட்டினத்தில் கிடைக்கப்பெற்ற சகவருடம் 1453ஆம் ஆண்டுக் (பொ.ஆ.1531) கல்வெட்டு இவ்வணிகக் குழுவினர் முத்து ஏற்றுமதி வணிகத்தில் ஈடுபட்டிருந்ததைக் காட்டுகிறது. இதிலிருந்து பதிணென்விசயம் வணிகக் குழுவினர் 16ஆம் நூற்றாண்டு வரை குறிப்பாகப் போர்த்துக்கீசியர் வருகைவரை தமிழகக் கடற்கரைப் பகுதியில் இருந்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வணிகத்தை மிகச் சுறுசுறுப்பாக மேற்கொண்டனர் என்பது தெளிவாகிறது.

சங்கக்காலத்தில் வெளிநாடுகளிலிருந்து உயர்ந்த வகையைச் சேர்ந்த குதிரைகள் காவிரிப்பூம்பட்டினத் துறைமுகம் வாயிலாக இறக்குமதி செய்யப்பட்டதை பட்டினப்பாலை (185) தெரிவிக்கிறது. இடைக்காலத்தில் இரண்டாம் குலோத்துங்கச்சோழனின் (1133-1150) சமகாலத்தவரான சேக்கிழார் இயற்றிய பெரியபுராணத்தில் நாகபட்டினச் சிறப்பினை விவரிக்கும் இடத்தில் கடல் வணிகத்தில் குதிரை முக்கியப்பங்கு வகித்ததைக் குறிப்பிடுகிறார் (ஞானசம்மந்தன் 1987:618). அரேபியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட குதிரைகள் தமிழகத் துறைமுகங்களில் பெருமளவில் இறக்குமதி செய்யப்பட்டதைக் குறிப்பிடும் அக்கால வெளிநாட்டு பயணிகளுள் அபுல்பதா (1273-1331)சோழமண்டலக்கடற்கரையில்அமைந்திருந்தமணிபட்டன்நகருக்கு குதிரைகள் பெருமளவில் அனுப்பப்பட்டதைக் குறிப்பிடுகிறார் (Nilakanta Sastri 1972:166, 214). சீனமொழியில் பொ.ஆ.12-13ஆம் நூற்றாண்டில் எழுதப்பெற்ற வரலாற்றுக் குறிப்பான தாங் பாவ் மணிபட்டன் குறித்துச் சுட்டுகிறது (Rockhill 1914:441). வெளிநாட்டுப் பயணிகள் நாகபட்டினத்தை மணிபட்டன் அல்லது மலிபடன் என அழைத்தமை இங்கு சுட்டத்தக்கதாகும்.

ஆசிரியர் பெயர் தெரியாத இடைக்கால மலையாள மொழியில் எழுதப்பெற்ற உண்ணியாச்சி சரிதம் மலைமண்டலத்து வணிகர்கள் சோழநாட்டில் பரந்த அளவில் சுறுசுறுப்பாகக் குதிரை வணிகத்தில் ஈடுபட்டதை 'சோனக குதிரெய சோணாட்டு விற்றால் ஆனை அச்சுடன் இரண்டாயிரம் கிடைக்கும்' என்ற வரிகளின் மூலமாகக் காட்டுகிறது (Jayakumar 2004:256-259). தஞ்சாவூர் பெரிய கோயிலில் கருவறைக்குப் பின்புறம் பாதுகாக்கப்பட்ட உள்சுற்றின் மேற்கு உட்சுவரின் மேற்கு நோக்கிய ஓவியங்களுள் ஒன்றில் முதலாம் இராஜராஜன் அவையில் அரேபியக் குதிரை வணிகர்களும் குதிரைச் சேவகர்களும் இருப்பதாகக் காட்டப்பட்டுள்ளமை (குழு 2010) அக்காலத்தில் சோழநாட்டில் காணப்பட்ட குதிரை வணிகத்தின் முக்கியத்துவத்தைக் காட்டுவதாகக் கொள்ளலாம். அரேபியக் குதிரைகள் அதிகளவில் நாகபட்டினத்தில் இறக்குமதி செய்யப்பட்டதற்கு முக்கியக் காரணம் அக்குதிரைகளுக்கு சோழ மண்டலத்தில் மிகுந்த வரவேற்பு இருந்ததே ஆகும்.

மேற்சுட்டிய இலக்கியம் மற்றும் வரலாற்றுப் பயணிகளின் குறிப்புகள் தவிர இடைக்காலக் கல்வெட்டுகளும் குதிரை வணிகம் பற்றியக் குறிப்புகளைத் தருகின்றன. இவ்வணிகர்கள் கல்வெட்டுகளில் மலைமண்டலத்துக் குதிரைச் செட்டிகள் அல்லது குதிரைச் சாத்து என அழைக்கப்பட்டன. மலைமண்டலம் என்பது மேற்குக் கடற்கரை பகுதியான இன்றைய கேரளப் பகுதியை குறிக்கும். இக்குழு உறுப்பினர்கள் சோழ நாட்டினைச் சாராதவர்கள் ஆவர். இடைக்காலப் பிற வணிகக் குழுக்களைப் போலவே இக்குழுவினரும் தென்னிந்தியாவை மையமாகக் கொண்டு இயங்கிய அய்யப்பொழில் திசையாயிரத்து ஐநூற்றுவர் அமைப்பில் ஒரு பிரிவினராகக் கருதப்பட்டனர் (Hall 1980:147). குதிரைச் செட்டிகள் குறித்த கல்வெட்டுகள் பல சோழராட்சிப் பகுதிகளில் கிடைக்கின்றன. இவர்கள் சோழநாட்டின் முக்கிய நகரங்கள் மற்றும் கடற்கரைத் துறைமுகப் பட்டினங்களில் இருந்து சாத்துகளாகச் செயல்பட்டனர். சோழ அரசின் அனுமதியுடன் குதிரை வணிகத்தில் நேரடித் தொடர்பு கொண்டிருந்ததாலும் குதிரைகளைப் பராமரிப்பதில் நன்கு தேர்ச்சிப் பெற்றிருந்ததாலும் மலைமண்டலத்துக் குதிரைச் செட்டிகள் சாத்துகளாக அதாவது வணிகக் கூட்டாகச் சோழநாட்டில் தங்கியிருந்தனர் என்பது நன்கு புலப்படுகிறது.

மாமல்லபுரத்துக்கு அருகிலுள்ள திருவடந்தையில் கிடைக்கப்பெற்ற முதலாம் இராஜராஜனின் கல்வெட்டு (ARE 1910:260) கேரளாவின் கொடுங்கலூரில் இருந்துவந்த குதிரைச் செட்டிகளைக் குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டு நாகபட்டினத்தில் கிடைக்காவிடினும் குதிரைச் செட்டிகள் தொடர்பாக முதலாம் இராஜராஜனின் ஒட்டுமொத்த ஆட்சிப்பரப்புக்கும் உரிய ஆவணமாக இதனைக் கருதுவதில் தவறில்லை. முதலாம் இராஜேந்திரன் (1012-44), இரண்டாம் இராஜாதிராஜன் (1018-54) கல்வெட்டுகள் (ARE

1956-57:157,152,155) மலைமண்டலத்துக் குரக்கேனிக்கொல்லம், பந்தலாயினிக்கொல்லம் ஆகிய இடங்களில் இருந்து வருகைபுரிந்த குதிரைச்செட்டிகள் நாகபட்டினம் துறைமுக நகரில் முகாமிட்டிருந்த்தைக் காட்டுகின்றன. திருவாரூரில் படியெடுக்கப்பட்ட விக்கிரமசோழன் கல்வெட்டு (1125) சித்தசெட்டி என்ற குதிரைச் செட்டியின் மகன் கங்கைச்செட்டி வீரராஜேந்திர தேவமங்கலச் சாத்துவைச் சேர்ந்த உறுப்பினர் என்று கூறுவது சுட்டத்தக்கது (SII 17:161). முதலாம் குலோத்துங்கச் சோழனுக்கு வீரராஜேந்திரன் என்ற சிறப்புப் பெயரும் உண்டு. எனவே, வீரராஜேந்திர தேவமங்கலச் சாத்து முதலாம் குலோத்துங்கன் பெயரால் அமைக்கப்பட்டிருந்தமை தெளிவாகிறது. வீரராஜேந்திர தேவமங்கலச் சாத்தும் நாகபட்டினம் துறைமுகமும் ஜெயமாணிக்க வளநாட்டின் பட்டினக்கூற்றத்தில் அருகருகே அமைந்திருந்ததைப் பார்க்கும்போது இவ்வணிகர்கள் நாகபட்டினம் துறைமுகத்தை மையமாகக் கொண்டு செயல்பட்டவர்கள் என்பது விளங்கும். சில வணிகர்களின் பெயர்கள் இராஜராஜ உத்தம செட்டி, குலோத்துங்கச்சோழ செட்டி என அழைக்கப்படுவதிலிருந்து (ARE 1926:182, 1936-37:63) இவர்கள் சோழ அரசில் உயர்ந்த இடத்தைப் பெற்றவர்களாகவோ, குதிரை வணிகத்தில் அரசனுக்கு துணை நிற்பவர்களாகவோ, குதிரைச் சாத்துகளுக்குத் தலைமைப் பொறுப்பு வகித்தவர்களாகவோ இருந்திருக்க வேண்டும். சோழமண்டலம் முழுவதும் குறிப்பாக நாட்டின் உட்பகுதிகளில் உள்ள முக்கிய நகரங்களில் இவர்கள் பரவி இருந்ததையும் சமூக நோக்கில் இவர்கள் ஆற்றியப் பணிகளையும் அந்தந்தப் பகுதிகளில் கிடைக்கின்ற இக்குழுவினரின் கல்வெட்டுகளின் மூலம் அறியமுடிகிறது.

மேற்சுட்டிய குதிரைச் சாத்துகளுக்கு தலைமைப் பொறுப்பாளர்கள் இருந்தாலும் கூட சோழ அரசர்கள் குதிரை வணிகம் சிறப்பாக நடைபெறுவதற்கு அரேபியர்களையும் தங்களுக்குத் துணையாக வைத்துக் கொண்டனர் என்பதும் தெரியவருகிறது. இதற்குக் காட்டாக முதலாம் இராஜராஜன் கல்வெட்டு (SII 2:66), கர்நாடக மாநிலம், கோலாரில் காணப்படும் முதலாம் இராஜேந்திரனின் கல்வெட்டு (EC 4:3), இம்மன்னனின் 1037ஆம் ஆண்டுக்குரிய எசாலம் செப்பேடு (மகாதேவன் 2013:873-928) ஆகியவற்றில் காணப்படும் சோனகன் சாவூர் பரஞ்சோதி என்பவனைப் பற்றிய செய்திகளைக் குறிப்பிடலாம். சோனகன் என்பது அரேபியாவைச் சேர்ந்தவன் என்பதாகும். சாவூர் என்பது ஜாபர் என்னும் இசுலாமியப் பெயரின் திரிபாகும். பரஞ்சோதி என்பது மரியாதைச் சொல். இச்சோனகன் சாவூர் பரஞ்சோதி முதலாம் இராஜராஜன் காலத்தில் எவ்வித அரசு பட்டங்களும் இன்றி சாதாரணமாக தஞ்சாவூர்ப் புறம்படியில் வாழ்ந்து வந்ததையும், முதலாம் இராஜேந்திரன் காலத்தில் ‘திருமந்திர ஓலைநாயகம் கங்கைகொண்டசோழப்புரத்து ராசவிச்சாதிரப் பெருந்தெருவில் சோனகன் சாவூர் பரஞ்சோதி’ எனக் குறிப்பிடும் அளவிற்கு அதாவது மன்னன்

முதலாம் இராஜேந்திரனின் அவையில் ஓலை நாயகமாக சோழப் பேரரசின் ஆணைகளைச் செயல்படுத்தும் தலைமை அமைச்சராகப் பொறுப்பேற்று இராஜேந்திர சோழ கந்திருவப் பேரரையன் என்னும் பட்டத்துடன் தலைநகர் கங்கைகொண்ட சோழபுரத்தில் உயர் அரசு அலுவலர்கள் வசிக்கும் இராசவிச்சாதரப் பெருந்தெருவில் வாழ்ந்துவந்தமை சோழப் பேரரசின் குதிரை வணிகத்தின் முக்கியத்துவத்தைக் காட்டுவதாகும்.

சோழ நாட்டில் இருந்த பல்வேறு படைகளுள் குதிரைப் படையும் முக்கியமானதாகக் கல்வெட்டுகள் குறிக்கின்றன. சோழமண்டலக் கடற்கரையில் நாகபட்டினம், தரங்கம்பாடி போன்ற துறைமுகங்களில் குதிரைப்படை இருந்ததை சான்றுகள் வெளிப்படுத்துகின்றன (ARE 1956-57:154, 1925:262). குதிரைப்படை கல்வெட்டுகளில் குதிரைச்சேவகர் என அழைக்கப்படுகிறது. இப்படைக்கு தேவையான குதிரைகளை மலைமண்டலத்துக் குதிரைச்செட்டிகளே அளித்துள்ளனர். மேலும், மிக நீண்ட சோழமண்டலக் கடற்கரைப் பகுதியை கண்காணித்து எதிரிகளிடமிருந்து பாதுகாக்கவும், உள்நாட்டுக் கலவரங்களை உடனடியாக கட்டுப்படுத்தவும், வணிகர்களை கடற்கொள்ளையர்களிடமிருந்து பாதுகாக்கவும் குதிரைகளைச் சோழ அரசு பெருமளவில் பயன்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சோழநாட்டில் குதிரை வணிகம் பெரிய அளவில் நடைபெற்றதில் இருந்து குதிரைகள் நாகபட்டினம் துறைமுகம் வழியாகப்பிற கடற்சார் நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்க வேண்டும். இது, வணிக நோக்கிலோ அல்லது இரு அரசுகளுக்கு இடையிலான நல்லெண்ணத்தின் அடிப்படையிலோ நடைபெற்றிருக்க வேண்டும். இலங்கையின் வடமேற்கு மாகாணத்தில் மன்னார் மாவட்டத்தில் மால்வத்து ஓயா நதி கடலில் கலக்கும் இடத்தில் அமைந்திருந்த மிகப் பழமையான துறைமுகமான மாதோட்டம் / மாந்தை முதலாம் இராஜராஜன் காலத்தில் சோழரின் கட்டுப்பாட்டில் இருந்துள்ளது என்பதைக் கொழும்பு அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள முதலாம் இராஜேந்திரனின் முற்றுப்பெறாத கல்வெட்டுகள் (SII 4:1414,1412) இத்துறைமுகத்தை மாதோட்டமான இராஜராஜபுரம் என முதலாம் இராஜராஜனின் பெயரில் அழைக்கப்பட்டதில் இருந்து அறிந்துகொள்ள முடிகிறது. இத்துறைமுகத்தில் மன்னன் முதலாம் இராஜேந்திரனின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கக் கூடிய பணியாளன் ஒருவன் நியமிக்கப்பட்டிருந்தான் என்பது இத்துறைமுகம் சோழரின் முழுக் கட்டுப்பாட்டில் இருந்ததைக் காட்டுவதாகும். மாதோட்டம் போல, இலங்கையின் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இருந்த ஊராத்துறையும் சோழர்களுடன் நெருங்கிய தொடர்பில் இருந்துள்ளது. முதலாம் பராக்கிரமபாகு வெளியிட்ட ஒரே தமிழ் மொழி கல்வெட்டான நயினாத்தீவு கல்வெட்டு (Indrapala 1963:63-70) பொதுவான வணிகத்திற்காக இத்துறைமுகத்திற்கு வரும் வணிகர்களுக்கு வழங்கிய சலுகைகளைக் காட்டிலும் குதிரை, யானைகளை

ஏற்றி வரும் வணிகர்களுக்குக் கூடுதல் சலுகை வழங்கப்பட்டுள்ளமை மன்னன் இத்துறைமுகத்தின் வழியாக குதிரை, யானை இறக்குமதிக்கு ஊக்கம் காட்டியுள்ளமை வெளிப்படுகிறது. இவன் காலத்தில் நடைபெற்ற உள்நாட்டு, வெளிநாட்டு போர்களுக்காகவும் இம்மன்னன் பெருமளவில் குதிரைகளை பயன்படுத்தியிருக்க வேண்டும். இரண்டாம் இராஜாதிராஜனின் 12ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு (1177-78) மேற்சுட்டிய மாதோட்டம், ஊராத்துறை போன்ற துறைமுகங்களில் பராக்கிரமபாகு படைகளைக் குவித்து போர் சார்ந்த இராணுவ நடவடிக்கைகளுக்காகக் குதிரை, யானைகளை ஏராளமாகப் பயன்படுத்தினான் என்பதும் (EI 22:86-92), இவை பெரும்பாலும் அக்காலத்தில் சோழமண்டலக் கடற்கரையில் முக்கியத் துறைமுகமாக விளங்கிய நாகபட்டினத்திலிருந்தே சென்றிருக்க வேண்டும் என்பதையும் யூகிக்கலாம். இதுபோல, பிற கடற்சார் நாடுகளான பர்மா, கம்போடியா, மலேயா, ஸ்ரீவிஜயா, சீனா போன்றவற்றிருக்கும் நாகபட்டினத்திலிருந்தே குதிரைகள் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கலாம்.

நாகபட்டினத்தை மையமாகக் கொண்டு மேற்சுட்டியபடி நடைபெற்ற வணிகச் செயல்பாடுகள் முதலாம் இராஜராஜனின் பெரிய ஆணைமங்கலம் செபேட்டின் தமிழ்ப் பகுதியின் தொடக்கத்தில் குறிப்பிடும் ‘உலகுக்கெலாம் திலகமாக விளங்குகின்ற நாகபட்டினம்’ என்பதை வரலாற்றில் உறுதிசெய்கிறது.

நூற்பட்டியல்

இளமுருகனார், மயிலைக்கிழார். 1953. தேவார அடங்கன்முறை. சென்னை:46ஆம் பதிகம்.

குழு. 2010. தஞ்சைப் பெரியகோயில் சோழர்கால ஓவியங்கள். தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம்.

சண்முகம், ப. 1993. தமிழ்நாடும் தாய்லாந்தும்: தொன்மைத் தொடர்புகள். ஆவணம். தமிழகத் தொல்லியல்கழக வெளியீடு, 3.

சீதாராம் குருமூர்த்தி. 2007. நாகப்பட்டினம் மாவட்டக் கல்வெட்டுகள். சென்னை: தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை.

சுப்பராயலு, எ. 1993. நாகபட்டினம் சூடாமணி விகாரத்தைச் சேர்ந்த ஒரு புதிய புத்தர் படிமம். ஆவணம். தமிழகத் தொல்லியல்கழக வெளியீடு, 3.

சேதுப்பிள்ளை, ரா.பி. 1976. தமிழகம் ஊரும்பேரும். சென்னை.

ஞானசம்மந்தன், அ.ச. 1987. பெரியபுராணம் – ஓர் ஆய்வு. தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம்.

மகாதேவன், புலவர் வே. 2013. சோழர் செப்பேடுகள். தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம்.

ஜெயக்குமார், பா. 1991. நாகைக் கல்வெட்டு. ஆவணம். தமிழகத் தொல்லியல்கழக வெளியீடு, 1.

ஜெயக்குமார், பா. 2001. தமிழகத் துறைமுகங்கள், தஞ்சாவூர்: அன்பு வெளியீட்டகம்.

ஜெயக்குமார், பா. 2015. நாகபட்டினம் நாகநாதர் கோயில் கல்வெட்டு – மறுவாசிப்பு. ஆவணம். தமிழகத் தொல்லியல்கழக வெளியீடு, 26.

Hall, Kenneth R. 1980. Trade and Statecraft in the Age of the Colas. New Delhi: Abinav Publications.

Hirth, F. and Rockhill, W.W.1966. Chau Ju Kua (His work on the Chinese and Arab Trade entitled zhufan zhi). New York: Paragan Book Reprint Corp.

Indrapala, K. 1963. The Nainativu Tamil Inscriptions of Parakramababu I. University of Ceylon Review, 21 (1).

Jayakumar, P. 2004. Horse Traders of Malaimandalam in Chola Country. Sri Pushpanjali. Dr. C.R. Srinivasan Commemoration Volume. Delh: Bharatiya Kala Prakasan.

Krishnan, K.G. 1981. Studies in South Indian History and Epigraphy. Madras: New Era Publications.

Nilakanta Sastri, K.A. 1972. Foreign Notices of South India. Reprint. Madras: University of Madras.

Ramachandran, T.N. 1965. The Nagapattinam and the other Buddhist Bronzes in the Madras Museum. Reprint. Bulletin of the Madras Govt. Museum, 7 (1).

Rockefeller, J.D. 1992. Treasures of Asian Arts from the Mr. & Mrs. John D. Rockefellers's 3rd Collection. New York: The Asian society.

Rockhill, W.W.1914. T'oung Pao. Libraire et Imprimerie. Leiden: E.J.Brill.

Subbarayalu, Y.1973. Political Geography of the Chola Country. Madras: Tamil Nadu State Department of Archeology.

Subramanian, N. 1966. Pre-Pallavan Tamil Index. Madras: University of Madras.

Abbreviations

1. ARE = Annual Report on Indian Epigraphy
2. EC = Epigraphia Carnatica
3. EI = Epigraphia Indica
4. SII = South Indian Inscriptions.

Merchants, Merchant Guilds and Trade Activities in Medieval Tamil Nadu

V. Selvakumar and R. Karthikeyan
Department of Maritime History and Marine Archaeology
Tamil University, Thanjavur 613010
selvakumarodi@gmail.com
karthikkannai91@gmail.com

Abstract

Merchant guilds emerged in India in the early historic period, and the early texts refer to merchants (sometimes also artisans) and their guilds such as cartavaha (sartavaha), sresti, sreni and nigama. In South India, terms such as sattu, sattuvan and nigama are found in the Tamil-Brahmi inscriptions. Merchant guilds were active in medieval Tamil Nadu and they did the important task of supplying and exchanging commodities across South India and in the Indian ocean region. They were active in the key medieval settlements and were an active part of the economic activities and transactions. The merchants specialized in finance, investment, trade and agriculture and were involved in administrative and charity activities. Some of the larger guilds maintained their own warrior guards. They were active in settlements with the names such as nagaram, perunteru, velapuram, puram, kadigaitavalam, eriviratalam and pattanam. There existed merchant guild categories and organizations such as tisaiayirattu ainurruvar, nagarattar, saliyar, nanadesis, manigramattar, anjuvannattar and sankarapadiyar in the medieval period. The traders were also known as vyapari and vanigan. Foreign traders were also settled in South India and they exported and imported commodities. The society in the medieval period became politically, economically, socially and culturally active, and people were in need of diverse commodities. The merchant guilds supplied the essential commodities to the local communities and also exported commodities from South India. Settlements such as markets, ports, commercial quarters and guarded settlements existed and they were connected by the trade routes that linked protected settlements, markets and warehouses. The inscriptions of the merchant guilds are distributed across South India and beyond. Kenneth Hall, Noboru Karashima, Y. Subbarayalu, P. Shanmugam and V. Vedachalam have studied the merchant guild activities in South India. This paper synthesizes the data from inscriptions and archaeology to understand the economic history of the medieval period.

Introduction

Indian mercantile tradition dates back to the Harappan period, about 3000 BCE. The Harappan craftpersons-cum-entrepreneurs and merchants generated wealth through their trade activities with the Mesopotamian civilization. Some of the Harappan seals might have been associated with the merchant guilds and their activities. Merchant guilds were active in India from the early historic period and mercantile activities were undertaken by the mercantile leaders and corporate bodies known as cartavahas (sartavahas), srenis and nigamas (Sircar 1974). The early historic

merchants and merchant guilds were perhaps instrumental in the introduction of scripts, accounting and dissemination of knowledge, ideas and commodities. In the conventional social theory of varna system of North India, merchants were placed after the brahmanas and kshatriyas as vaishyas. However, this conception was only notional and some of the large merchants had enormous wealth and power. In South India, there have been attempts at introducing such categorizations in the late historical period. The traditions and legacies of merchant guilds continued into the medieval period and also new groups seem to have emerged as part of the new developments in this period. The Medieval period is an important phase in the history of Tamil Nadu. State formation, political reorganization, social formation, economic developments and cultural transformation took place. Structured and hierarchical society emerged, because of the interlinkages and interplay of political, economic and cultural factors. Economic activities contributed to the prosperity of the country and also impacted the various domains. Among the economic activities, trade and exchange contributed to the prosperity of the country.

Merchants played an important role in the trade and exchange activities, and many of them functioned as corporate bodies and their activities spanned across South India and beyond in Southeast Asia and East Asia. Merchant guilds are associations of merchants that worked as corporate bodies and involved in trade and commercial activities. This paper presents a survey of the merchants, merchant guilds and the trade activities of the medieval period in Tamil Nadu.

Previous Research

The merchant guilds have been studied by several researchers. The documentation of inscriptions and copper plates from the 19th century led to the recognition of the activities of the medieval merchant guilds. In India, mercantile activities were conventionally classified under the varna category of vaishyas in some of the traditions, and the castes of chettiyars, gomattis and nagarattars (Rudner 1994) are part and parcel of the continuing heritage and traditions of mercantile communities of the medieval period. A few ethnographic studies have focused on these communities (Thurston and Rangachari 1909). When the colonial traders came, they encountered the mercantile guilds and associations Indigenous and Indian ocean merchants. The colonial powers collaborated with them across South India.

Several scholars have researched on the mercantile activities (Ayyar 1947; Sastri 1949, 1955; Chandra 1977; Velayudhan 1979; Hall 1980; Champakalakshmi 1996; Mukund 1999; Karashima 2002, 2009; Chakravarti 2007; Reddy 2007; Subbarayalu 1999, 2004, 2009a, 2009b, 2012a, 2012b, 2015; Kalaikkovan and Nalini; Kannan 2010; Vedachalam 2010; Roy 2012).Nilakanta Sastri (1949) published on the Takua

Pa inscription and discussed the role of Manigramattar. Noboru Karashima (2001), Subbarayalu (2015), Abraham (1988) have extensively studied the activities and nature of the merchant guilds. Ranabir Chakrabarti (2007) and Manu V. Devadevan have contributed to the study of merchant guilds of the medieval period. Trade wars were part of the Chola-Sri Vijaya interactions (Sen 2009; Selvakumar 2022). Despite these attempts, more research needs to be undertaken on the economic history and mercantile activities. This paper presents an overview of Medieval merchant guild activities.

Merchants and Entrepreneurs of the Medieval period by Commodities

Merchants of the medieval period were specialized in different commodities and some of them dealt only with certain commodities. They had different names and were organized into distinct guilds. However, they seem to have worked together as a corporate body. While referring to merchants, sometimes it is implied that they were only intermediaries connecting the producers and consumers. It is possible that in some cases the production activities were also organized by the merchants themselves. Hence, some of them were entrepreneurs, involving both in the production of commodities and trade. In certain situations, they must have gathered and bought the produce from the primary producers and they traded. Clearly, they were involved in the organization of production and trade of commodities in various ways.

a. General Merchants

In general, merchants were known as Vyapari and Vanigan. Interestingly, both these names do not appear to be Tamil in origin. They occur in literature as well as several inscriptions. In some contexts, they are referred to in relation to the commodities they dealt with. There is no specific adjective, when their names are mentioned in some contexts, and hence we could assume that they were trading in various commodities. Vaanigaru occurs in an inscription of 609 CE in Krishnagiri (Dharmapuri Inscriptions, 1, 1972, 5-6), and several other inscriptions. Sometimes it also referred to the oil merchants. Viyapari occurs from the inscription dated to 872 CE (SII 13, 18).

b. Textile Merchants or Aruvai Vanikar

Aruvai or Arukai refers to one type of textile. Weavers were the producers of textiles and textile merchants were involved in the trade of textile. The relationship between these groups is not clear. It is possible that some of the textile weavers acted as textile merchants. The earliest reference to textile merchants occurs at Alagarmalai Brahmi inscription which refers to Venpali Aruvar Vanikan Ela Atan (Mahadevan 2015). It dates to the early historic period. In the medieval period, they were referred

to as Arukai vanikan and they are found in the inscriptions of Thanjavur region (SII 23, 23; SII 7, 523, 524). Weavers of textile exist as various caste groups in Tamil Nadu.

c. Saliya Nagarattar

Saliyars are a community of weavers. The silk weaving Saliyars were known as Pattasalins. One type of nagaram was the association of the silk weaving communities. They appear to be different from aruvai vanigar. The Saliya Nagarattar perhaps acted both as weavers and the traders of silk clothes. An inscription from Tiruvannamalai dated to 1243 CE refers to Salikar Accatari and Koliyattari inavari (SII 7, 98). Another inscription says accattari and saligaittari (SII I, 64) as two types of taxes. We do not know what kind of taris (weaving instrument) these were.

d. Koliyar Weavers

Koliyars are another type of weavers of medieval South India. Koliyattari is referred to in an inscription (SII 7, 98). It is not clear if they also acted as traders. It is not clear if they were involved in the textile trade. But they seem to be craftgroup.

e. Horse Traders or Kudiraichetti

Horse traders were very active in South India in the medieval period. They were known as Kudiraichettis. Most of these traders were from Kerala and were known as Malaimandalattu Kudiraichettis (SII 8, 142). Malaimandalam refers to the region of Kerala. Since Kerala had easy access to the Arabian Sea and the source region of West Asia and Europe, horse trade was monopolized by the Kerala traders. It appears that these horse traders were controlling the region around the Palakkad Gap and supplied horses to the Chola country. In the Southern part of Tamil Nadu horse trade was dominated by the Arab traders and their activities centred along the southeast coast and more particularly around Kayal.

f. Oil Merchants or Sankarapadiyar

Oil merchants were known as Sankarapadiyar (SII 7, 421). The name refers to the oil-press found at several sites in Tamil Nadu. They were involved in oil production and sales. Oil merchants existed in many villages and major markets. There is reference to Sankarapadi Nagaram which was the association of the oil merchants. They were also known as Chekkar (Ganesan 2023). In the medieval period several villages had the stone oil press and some of them are found with inscriptions. Oil was used for lighting lamps in the temples and for cooking purposes. These communities existed in the later period as Ennaikkarachettiyar.

g. Gold Merchants

Traders specialized into certain commodities. Gold merchants are referred to in the Tamil-Brahmi inscriptions. Ponvanikan and Ponkolvan occur in Tamil-Brahmi inscriptions (Mahadevan 2015). In Thailand, there is an inscription referring to a goldsmith Perumpatan who hailed from ancient Tamizhagam (Mahadevan 2015). Perhaps some of the goldsmiths were also traders. There is a caste group of Kasukkara Chettiyar in the modern period. Similarly, Nanayakkara Chettis were involved in ornament production and their settlement quarters were located in many of the major urban centres of the modern period. Pon Kana vallar is referred to in an inscription of 932 CE (SII 6, 295) and it refers to gold tester and Vannakkaranattan is mentioned in 1006 CE and it means a gold tester (SII 5, 518). Hence, we could assume that some of the traders who were dealing with other materials such as gems also deal with gold and precious metals.

h. Gem Traders

Gem traders are perhaps another category of specialists and they were perhaps a few in number. They could have been involved in both metal and gems. A merchant from Karnataka known as Puzhalayachetti is referred to in an inscription of 901 CE from Nangavaram near Tiruchirappalli and he was residing at Thanjavur (SII 8, 634).

There existed many other merchants specializing in various commodities, and they are referred to in the inscriptions. For example, betel leaf merchants.

Merchants and Entrepreneurs by Territoriality

Territoriality is an important factor in the classification of merchants. In Cilappatikaram, there is reference to masattuvan and manaikan. While masattuvan referred to the chief of cattu or macattu, naikan perhaps referred to mahanavika, who was a maritime trader. These two categories were consciously created in the epic by Ilangovatikal, connecting territorial and overseas merchants. From the terminologies of merchants, we can understand the nature of their activities.

Nattuchetti

A class of traders are referred to as nattuchetti in medieval inscriptions (Avanam 2, No 2 and 3) and perhaps, they were traders who did their exchange activities in the local market. It is possible that they were trading in the villages and the local nadu territories. There are also references to traders working in specific mandalams. We get references to Chola mandala vanikan, which means merchants who belonged to and perhaps traded in one particular region.

Tisaichetti

Tisaichetti perhaps referred to the traders of long distance and they were trading across long distance and in overseas areas as well. The name tisai in tisayayirattu ainurrvar referred to such merchants. Similarly, nanadesi and nangudisai denoted the merchants who traded in foreign territories and long distances. Tisaichetti could also be a medieval name of the cartavahas of the early period or the same as the tisaiyayirattu Ainurruvar.

Masattu (Mahacartavaha) Traders

Masaatu referred to the large caravan traders and more particularly their leaders. In the text of Cilapatikaram, Masattuvan was the father of Kovalan. Although it is an epic or Kavya text, it reflects the contemporary usage of the term in early medieval South India. It could be considered equivalent to maha or peru titles offered to the craft persons and craftpersons also had such titles as perunkollan and perumpattan. Similarly, Mahanagara, Mahajana used the title of hierarchical status. An inscription of 960 CE of Kanchipuram refers to the merchants who were present in Masattulom (SII 32, 5). An inscription found at Valikandapuram refers to Thanjavur Kandarkandaraperunteru Masattu. Perhaps Masattu could be an adopted name of the trader, rather than the person being a Masattu. The Lambadis were itinerant traders of the medieval period and such trading groups existed in the medieval period. We can assume that they existed in South India in the medieval period.

Paradesi

Paradesi is a term referring to the foreign merchants. The synagogue at Fort Kochi in Kerala is known as Paradesi synagogue. An inscription from Sri Lanka (1200 CE) mentioned that foreign traders should come to our ports (University of Ceylon Review 21, p.63-70. It shows the importance of foreign traders in maritime activities.

Local Merchants

The merchants were attached to certain markets and residences and perhaps they carried out their operations by residing at these sites. An inscription from Nangavaram mentions Thanjavur madigai manikkavanigan (SII, 8, 634). Other inscriptions also refer to such merchants attached to a particular place or market. They were probably trading in local markets and within the region.

Settlements of Merchants: Markets, Shops and Mercantile Quarters

Settlements of merchants were of different kinds, and they existed across the landscapes. They included settlement quarters, markets, shops, warrior settlements and ports.

Angadi and Perangadi

Angadi is a market place and it is a common term used for the locality with rows or clusters of merchant shops in Tamil Nadu and Kerala. This term can also be equated with kadaiteru. Angadikkuli is a tax on the goods sold in kadaiteru or market (873 CE, SII 3, 90). Angadi is more frequently used for markets in Kerala. Angadi also referred to the mobile women who sold paniyaram in the village thrashing fields in the 20th century. Large markets were called perangadi. Tirubhuvanmadeviperangadi, Mumudicholaperangadi, Virasigamaniperangadi and Nittavinodaperangadi are referred to in the Thanjavur inscriptions (SII, II).

Madigai

Madigai refers to the market or kadaitteru. Perhaps the term maligaikkadai used in the contemporary period in Tamil Nadu derived from this term. An inscription from Thanjavur dating to 911 CE refers to madigai (SII 5, 530). Thanjavur madigai vaniyan is referred to in an inscription (SII 8, 634.). Perhaps such localities had shops dealing in all kinds of commodities.

Santai

Santai in Tamil or Canta in Malayalam is often an open-area market place where people and traders come and sell their produce. Santai has a specific allotted area for periodical meetings in a week or month. Sometimes these localities also have shrines. Many Santais exist even today at the key villages. These santais are mainly open areas where commodities are sold by the agrarian people by spreading them on the floor. In some villages, they are arranged by the side of the streets around the temples. Santai mahimai, a contribution of the merchants of Santai, is found in an inscription of 1495 CE (Tirupati Devasthanam Inscriptions 2, 133).

Kadai

Kadai is an individual shop unit. Kadai occurs in the inscriptions of 864 CE (Kanchipuram District Inscriptions 2005, 47) and 1300 CE (SII 1, 142), while kadaitteru occurs in 873 CE (SII 3, 90), indicating kadai or shop existed in the earlier period. Kadai could also mean assembly, which means the place where several materials are brought together and placed for sale. It could be compared to kadai used for the assembly of cattle by the cattle pastoralists and agro-pastoralists. Ella Viyaparamum katai Eri Vanigam seyya which means "to sell all kinds of commodities through setting-up of shops" occurs in an inscription (Kanchipuram District Inscriptions 2005, 47).

Kadaitteru

Kadaitteru occurs in Thanjavur region. Kadaitteru is a term equivalent to bazaar and in the 19th century it was used interchangeably with bazaar. An inscription of

873 refers to angadikkuli in our kadaitteru (SII 3, 90). Other inscriptions also referred to kadaitteru (SII 13, 198). Perhaps major regional centres had such market places called kadaitterus. From the terminology, it could be classified under market with one or two rows of shops on both sides of the walkway.

Velapuram Settlements

Velapuram is an interesting term found in the medieval inscriptions. 32 velapurams are mentioned in the inscriptions of merchant guilds as part of the inscriptional text. We do not know the actual list of these 32 velapurams. They are perhaps merchant settlements. Vela is a term referring to the sea. The term velakula is used for the ports in Northern India. The name of "vela" perhaps derived from Sanskrit. Kulam also refers to specific areas. Devakulam is the shrine mentioned in the medieval inscriptions. It is not clear if Velapuram has a similar meaning as velakula.

Tavalam and Kadigaittavalam

Tavalam is a market place with storehouses of the merchants. Kadigaitavalams were protected mercantile quarters. Tavalam exists as a place name in Kerala and Tamil Nadu. In Malayalam, Vimanatavalam (Airport) and Anatavalam (Elephant camp) are present and Velantavalam is a place near Coimbatore. Tavalam could be a base camp or market. Navartavalam is mentioned in the inscriptions of Salem and Dharmapuri regions. Tavalattu chetti is mentioned in a Sri Lankan inscription (Avanam 9, 5).

Pattinam, Port

Pattinam originally meant a port settlement. It appears to be a Prakrit term. The merchant guild inscriptions mention about 18 pattinams. The number 18 also occurs in the context of 18 territories or 18 Vishayas. The 18 pattinams in the merchant guild inscriptions perhaps referred to the 18 territories or 18 major ports within these 18 territories. The east coast of Tamil Nadu had numerous ports with the suffix Pattinam. An inscription from Kilakkarai datable to 16th century refers to Ninaithathaimudttanpattinam (Kilakarai), Ulagamadeveipattinam (Devipattinam), Pavitiramanikkapattinam (Thondi), and Pavitiramanikkapattinam (Periyapattinam) (SII 23, 396, Jayakumar 2001). We also have references to Kalyanapuramkondacholapattinam, Nagapattinamana Cholakulavallipattinam (Jayakumar 2001). Similarly, Kerala also has many ports with the suffix of pattanam.

Pattanam

For ports, in Tamil Nadu pattinam is used and in Kerala pattanam is prevalent. In Andhra, patnam is in vogue. Pattanam and pattinam originally referred to port towns in the early historic period and in the medieval period, it also referred to the towns in the hinterlands. Pattanappagudi was taxed on the merchandise (EC IX Ht, 162.) In the

Sivaganga region, Aruviyur was known as Aruvimangalamana Kulasekarapattinam (Kannan 2010: 97).

Asiriyapattanam

Asiriyapattanam refers to the protected settlements. Ashraya means refuge and it is a settlement that offered protection to the merchants. It can be compared to the anjinanpugalidam. Inscriptions from Aruppukkottai and Kollimalai refer to Desi Asiriyapattinam (Basheer and Selvakumar in press). Many inscriptions refer to the act of asiriyam or offering protection. Another inscription from 308 of 2005 of Tamil Nadu from T.Manakaseri in Virudungar district refers to the offering of ashrayam. The term also occurs as asiriyam.

Perunteru

Perunterus were settlements of merchants. Perunteru is interpreted as kadaitteru (Tamil Epigraphical Glossary, p. 451) They are referred to in the inscriptions. Perhaps they had the settlements of a larger number of merchants. However, perunterus were not exclusive to the merchants and other people also lived as indicated by Thanjavur inscriptions (SIII 3, 31). Tirumalai had a mercantile settlement called Panchavanmadeviperunteru (Kannan 2010: 96).

Puram

Puram is another suffix found along with the names of mercantile settlements. Puram is a Sanskrit suffix for a planned township. We have evidence for Puramalai nattu Puthutheruvana Seranarayanapuram, Alagapuriyana Chezhiyanarayanpuram, Maruthangudiyana Rajanarayanapuram (Kannan 2010: 96).

Anjinanpugalidam

Anjinanpugalidam is also a protected settlement of the merchants. This term literally means offering refuge to a person who was harassed. There existed other categories of anjinanpugalidam settlements. An inscription from Pattanam in Palladam taluk dated to 1570 CE refers to the establishment of nanadesipattanam and also anjinanpugalidam (SII 26, 222). It could also mean that merchants were offered refuge at these settlements.

Erivirapattanam

Erivirapattanam are mercantile settlements protected by warriors. They were also known as Erivirathalam. These settlements had warriors who excelled in the use of bow and arrows and/or spears. These settlements were also created to honour the warriors. Samudrapatti inscription mentions that Paniyanadu was made as nanadesi

erivirapattinam (Vedachalam 2010). This inscription mentions the honour given to the warriors at the eriviratalam. The merchants had a clash with the political head of the nadus and the warriors killed the enemies of the merchants and they were honoured. This episode indicates the weak nature of the local administration and state formation. Several such settlements are mentioned in the inscriptions, for example Tirumalunkandarkottai is mentioned as Idaivazhiyagiya Erivirapattinam (Kannan 2010)

Nagaram

Nagaram is a generic term for merchant settlements (EI 38, 4). They existed at key settlements of nadus. Kenneth Hall (1980) mentions at least one nagaram existed in each nadu in the medieval period. Nagarattars were traders. It also referred to the local bodies of merchant villages. It appears that they were involved in trade, financial, administrative and agrarian activities.

Pathinenvishayam

Pathinenvishayam refers to what is now referred to as the Afroeurasian world. In the medieval period, the Indian Ocean-Asia-Pacific world was perceived as 18 vishayas or territories. They included Tamizhagam, Kudagu, Telungam, Kannadam,Tuluvam, Kollam, Konganam, Angam, Vangam, Kalingam, Magadham, Kaudam, Kosalam, Singalam, Javagam, Kadaram, Cinam and Sonakam. These regions are mentioned in the text of Periyapuranam of Cekkizhar who mentions the port of Nagapattinam as the residence of merchants from 18 territories.

Merchant Guilds of the Medieval Period

The merchants of the medieval period worked as part of corporate bodies and they had different categories and distinct names.

Nagaram

Nagaram was an association of merchant communities. There existed different categories of merchants organized into nagarams. Nagaram strictly does not mean urban centre here, as it means in the modern sense of the Tamil term. It was an association and quarters of the merchants in a particular settlement. It also referred to the assembly of the merchants. The royal copper plates issued to Brahmanas and others, the orders were addressed to nattar, urar and nagarattar. Therefore, obviously the nagaram was the association of merchants and local mercantile bodies that were present in many of the settlements of the nadus. Nagar in the Sangam literature meant brick built houses and perhaps the early traders were the first to use brick-built houses. Since the settlements with such brick-built houses were referred to as nagarams. The

nattukkottai chettiyars are referred to as nagarattar even today. There were different kinds of nagarattars such as oil merchants and textile merchants.

Anjuvannam or Hanjamana

Anjuvannattar is a merchant guild referring to the merchants of Perso-Arabian origin and it included Jews, Christians and Parsis. For anjuvannam, many interpretations are given. According to one reference it actually refers to the site of Sanjan in Maharashtra. The town of Sanjan is mentioned as Hanyamana, Hamyamana and Hanjamana in the copper plate grants (Menant 1917: 44). Karnataka State Gazetteer Volume 16 refers to Muslims as hanjamana or anjuman (1985: 696). Hanjamana is the trading guild of the Persian Muslim merchants of the west coast and nagara hanjamana was their assembly of the town according to Bhat (1998: 19).

Manigrammattar

Manigramam is an association of merchants. It was active in South India and in Southeast Asia. Manigramattar is referred to in the inscription of Takuapa in Thailand. They are referred to in the copper plate inscription of Terisapalli (Devadevan 2020). There were manigramam merchants at Kodumbalur and several other places in South India.

Saliya Nagarattar

Saliya nagarattars are the merchants of textile and the nagaram also included the weavers. There are references to Saliyanagarattar. They are also part of the tisayayirattu ainurruvar guild. The term shālikē means weaver in Sanskrit. The weavers are considered as the employees of Saliyanagarattars who were merchants (SII 30 p. VII).

Sankarapadiyar

Sankarapadi refers to the settlement of oil merchants. They were also known as chekkar (Ganesan 2023). The sankarapadi merchants were also organised into nagaram. There are references to sankarapadi nagarattar. They were mainly involved in oil production and supplied for the temples and consumers. They were active across the major mercantile settlements.

Tisayayirattu Ainurruvar

Tisaiyayirattu ainurruvar refers to a supralocal body of merchants who were dealing with commodities across south and Southeast Asia. There existed many groups within this conglomerate. They were also known as nanadesis, valanchiyars, ayyavole or ayyapozhil and pathinenvishayattars. Tisaiyayirattu ainnurruvar were

active in Southeast Asia for example at Varosu or Barus in Indonesia. It appears to be a transnational corporate guild of numerous merchants and their local guilds.

Discussions

Merchants acted as intermediaries and were organized into various guilds in medieval South India. They were instrumental in undertaking transactions across the region and they also were involved in overseas trade. There were local as well as foreign merchants. The foreign merchants were hanjamane, anjuvannattar and manigramattar. Tisaiyarirattu ainurruvar were the major groups of merchants and they were variously known as pathinen vishayattar, ainnurruvar, valanjiyar and ayyavole. It appears several independent merchant guilds became a large conglomerate and it appears that they also maintained their individual existence. It appears this large group disintegrated from the 13th century as we do not hear much about their activities. From this period, the Islamic merchants began to dominate the Indian Ocean trade activities and other merchants perhaps began to operate independently. There existed specialized merchant guilds such as nagarattar, textile weavers, oil merchants and several other merchants. They operated across south India and they attributed to a conventional number of 18, 32 and 64. Their settlements had specific name suffixes such as puram, perunteru and pattanam. The 18 territories in fact included the Indian Ocean region and it referred to the 18 countries. Eighteen Pattinam perhaps referred to the 18 major ports in these territories.

References

Abraham, M. Two Medieval Merchant Guilds of South India. New Delhi: Manohar, 1988.

Ayyar, Venkatarama Medieval Trade, Craft and Merchant Guilds in South India, Journal of Indian History, 25, part 1 (1947), pp. 269--80.

Basheer Ahamed and V.Selvakumar. Archaeology of Kollimalai Region. Heritage Journal. In press, 2025.

Bhat, N. Shyam 1998. South Kanara, 1799-1860: A Study in Colonial Administration and Regional Response. Delhi, Mittal Publications.

Chakravarti, Ranabir, Trade and Traders in Early Indian Society, New Delhi, 2007.

Champakalakshmi. R. Trade, Ideology and Urbanization. Trade, Ideology and Urbanization. South India 300 BC to AD 1300. New Delhi, Oxford, 1996.

Chandra, Moti. Trade and Trade Routes in Ancient India, New Delhi, 1977.

Devadevan, Manu V. The Tarisāppaḷḷi Copperplate Grant and the Early Christians of India. Nidān: International Journal for Indian Studies 2020, 5(2): 5-26,

EI = Epigraphia Indica. New Delhi, Archaeological Survey of India.

Ganesan, N. 2023. Chekkar Vanikachamukam oru Varalarrupparvai. Dravidapozhil October December 2023, pp. 55-68.

Hall, Kennath, R. Trade and State Craft in the Age of Colas. Abinav Publication, New Delhi, 1980.

Jayakumar, P. 2001. Thamizhagat Turaimugankal, Thanjavur, Anbu Veliyittakam.

Kalaikkovan, R. and M. Nalini 2015. A Study on Nagaram in Thiruchirappalli District – II (Between C. E. 500 and 1300) (Part II) Varalaru.com 120. http://www.varalaaru.com/design/article.aspx?ArticleID=1362

Kannan, S. Pandiyanattu Kadarkarai Ulanattuppaguthikalil Vaniga Nadavadikkaikal, in Athiyaman, N and Thulasendran A. eds. Nigamam: Vaniga Varalaarrayvukal, Thanjavur, Tamil University, 2010. pp. 79-86.

Karashima, Noboru Ancient and medieval Commercial Activities in the Indian Ocean – Testimony of Inscription and Ceramic Shreds, TAISHO University, 2002.

Karashima, Noboru. South Indian Merchant Guilds In The Indian Ocean And Southeast Asia". Nagapattinam to Suvarnadwipa: Reflections on the Chola Naval Expeditions to Southeast Asia, Eds., Hermann Kulke, K. Kesavapany and Vijay Sakhuja, Singapore: ISEAS Publishing, 2009, pp. 135-157. https://doi.org/10.1355/9789812309389-013

Karashima, N. and Y.S ubbarayalu 2x Ancient and Medieval Tamil and Sanskrit inscriptions Relation to South Asia and China. In Nagapattinam to Suvarnadwipa. Reflections on the Chola Naval Expeditions to Southeast Asia, Kulke, Hermann, K. Kesavapany and Vijay Sakhuja eds., 2015, pp. 271-291.

Mahadevan, I. Early Tamil Epigraphy (from the earliest times to the sixth century C. E.,) Volume. I, Tamil-Brāhmi Inscriptions. Chennai, CICT, 2015.

Menant, Delphine The Parsis in India, being an enlarged & copiously annotated up to date English edition of Delphine Menant's Les Parsis. Ed. M.M. Murzban Vol.2, 1917.

Mukund, Kanakalatha The Trading World of the Tamil Merchants Evolution of Merchant Capitalism in the Coromandel. Hyderabad, Orient Black Swan, 1999.

Reddy, P. Chenna. Guilds And Their Administrative Powers And Functions In Mediaeval Andhra Desha. Proceedings of the Indian History Congress 68, 2007: 295–302. http://www.jstor.org/stable/44147839.

Roy, Tirthankar Merchants: Guild as corporation', Company of Kinsmen: Enterprise and Community in South Asian History 1700-1940, Delhi, 2010; online edn, Oxford Academic, 18 Oct. 2012), https://doi.org/10.1093/acprof:oso/9780198063780.003.0004, accessed 2 Jan. 2026.

Rudner, David West. Caste and Capitalism: The Nattukottai Chettiars. Berkeley: University of California Press, 1994.

Sastri, K.A.N. The Cholas. Chennai: Madras University, 1955.

Sastri, K.A.N. Takuapa and the Tamil Inscription, Journal of the Malay Branch of Royal Asiatic Society, 22(1), 1949, pp. 25–30, 1949.

Selvakumar, V. The Chola Naval Expedition to Southeast Asia. Sasanam 6, 2022, pp. 39-45.

Sen, Tansen The Military Campaigns of Rajendra Chola and the Chola and the Chola Srivijaya-China Angle. In Nagapattinam to Suvarnadwipa. Reflections on the Chola Naval Expeditions to Southeast Asia, Kulke, Hermann, K. Kesavapany and Vijay Sakhuja eds. 2009, pp. 61-75.

SII = South Indian Inscriptions. New Delhi, Archaeological Survey of India.

Sircar, D.C. Nigama and śreṇi, in Sircar D.C. ed., Studying in Political and Administration, Systems in Ancient and Medieval India, Delhi, 1974, pp. 259–64.

Subbarayalu, Y. 1973. Political Geography of the Chola Country. State Dept of Archaeology, Chennai.

Subbarayalu, Y. The Right-Hand And Left-Hand Divisions Of Medieval South India — A Critique. Proceedings of the Indian History Congress 60, 1999, pp. 1118–25. http://www.jstor.org/stable/44144188.

Subbarayalu, Y. Eṟivīrapaṭṭiṉam, Warriors and the State in Medieval South India. In South-Indian Horizons, edited by Jean-Luc Chevillard and Eva Wilden. Pondichéry: Institut Français de Pondichéry, 2004. doi:10.4000/books.ifp.7901.

Subbarayalu, Y. A Note on the Navy of the Chola State. In Nagapattinam to Suvarnadwipa. Reflections on the Chola Naval Expeditions to Southeast Asia, Kulke, Hermann, K. Kesavapany and Vijay Sakhuja eds. 2009a, pp. 91-95.

Subbarayalu, Y. Anjuvannam: A Maritime Trade Guild of Medieval Times. Nagapattinam to Suvarnadwipa: Reflections on the Chola Naval Expeditions to Southeast Asia, edited by Hermann Kulke, K. Kesavapany and Vijay Sakhuja, Singapore: ISEAS Publishing, 2009b, pp. 158-167. https://doi.org/10.1355/9789812309389-014

Subbarayalu, Y. South India under the Cholas. Delhi: Oxford University Press, 2012a.

Subbarayalu Y. Anjuvannam: A Maritime Trade Guild of Medieval Times, in Subbarayalu Y. (ed.), South India under the Cholas, New Delhi, 2012b, pp. 176–87.

Subbarayalu, Y. Trade guilds of South India up to the tenth century. Studies in People's History, 2(1), 2015, 21-26. https://doi.org/10.1177/2348448915574403.

Subbarayalu, Y. Historical and Political Geography of the Chola Country. New Delhi, Primus, 2025.

Thurston, E. and Rangachari Castes and Tribes of Southern India. Madras, Government Museum, 1909.

Vedachalam, V. Samudrapatti Vanigakkuzhu Virathavalakkalvettu, in Athiyaman, N and Thulasendran A eds. Nigamam: Vaniga VaralaarrayvukaL Thanjavur, Tamil University, 2010, pp. 79-86.

Velayudhan, K.P. The Role Of Merchant Guilds In The Urbanization Of South India. Proceedings of the Indian History Congress 40, 1979, pp. 203–10. http://www.jstor.org/stable/44141961.

தென்னக கடல் வர்த்தக நலன்கள் மற்றும் கலிங்கம் மீதான தமிழ் அரசர்களின் தொடர் தாக்கம் - அத்திகும்பா கல்வெட்டு ஓர் மீள்பார்வை

விக்னேஷ் சீனிவாசன்
முனைவர் பட்ட ஆய்வு மாணவர்,
தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை.
மின்னஞ்சல்: vigneshsrinivasang@gmail.com

பண்டைய இந்திய வரலாற்றில், கலிங்கத்திற்கும் (தற்போதைய ஒடிசா) தமிழகத்திற்கும் இடையிலான பிணைப்பு என்பது வெறும் போர்க்களங்களோடு மட்டும் நின்றுவிடாமல், வணிகம், சமயம் மற்றும் பண்பாட்டுப் பரிமாற்றங்களின் சங்கமமாகத் திகழ்ந்தது என்றால் அது மிகையன்று. கலிங்கத்தின் புவியியல் மற்றும் வர்த்தகச் சிறப்பினை நோக்கும்போது, பண்டைய கலிங்க தேசமானது வடக்கில் சுபர்ணரேகா நதி முதல் தெற்கில் கோதாவரி வரையிலும், கிழக்கில் வங்காள விரிகுடா முதல் மேற்கில் அமர்கந்தாக் மலைத்தொடர் வரையிலும் பரந்து விரிந்திருந்தது புலனாகிறது. மேலைநாட்டு அறிஞர்களான தாலமி, பிளினி போன்றோர் கலிங்கத்தின் மாண்பினைத் தங்களின் நூல்களில் போற்றிப் புகழ்ந்துள்ளனர்; அதுமட்டுமன்றி, பௌத்த சமயத்தின் மீதான ஈடுபாட்டினால் சீனாவிலிருந்து இந்தியாவிற்குப் புனிதப் பயணம் மேற்கொண்ட பாஹியான், யுவான் சுவாங் உள்ளிட்டோரும் கலிங்கத்தின் வழியாகவே இலங்கைக்கும் தென்னிந்தியாவுக்கும் வருகை தந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. வங்காள விரிகுடாவைத் தன் ஆதிக்கத்தில் வைத்து அதனைச் 'சோழமண்டல ஏரி' எனப் போற்றும் அளவிற்கு வலிமை பெற்றிருந்த தென்னக அரசுகளுக்கும், கலிங்கத்தின் வளமான துறைமுகங்களுக்கும் இடையிலான நெருங்கிய உறவினை இக்கட்டுரை விரிவாக ஆராய்கிறது. பொது ஆண்டிற்கு முன் இரண்டாம் நூற்றாண்டில் கலிங்கத்தை ஆண்ட மன்னன் கார்வேலன், தான் 'திரமிள தேசக் கூட்டணியை' முறியடித்ததாகத் தனது ஹத்திகும்பா கல்வெட்டில் பதிவு செய்துள்ள போதிலும், பொ.ஆ. 7-ஆம் நூற்றாண்டு முதல் 13-ஆம் நூற்றாண்டு வரையிலான காலக்கட்டத்தில் கலிங்கத் துறைமுகங்களின் மீது தமிழ் அரசர்கள் தொடர்ச்சியான தாக்கத்தைச் செலுத்தி வந்துள்ளனர். இப்பின்னணியில், புவிசார் அரசியல் முக்கியத்துவம், வணிகம், சமயம் மற்றும் பண்பாட்டுப் பரிமாற்றங்கள் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தின என்பதையும், அவை தென்னகக் கடல் வர்த்தக நலன்களைப் பாதுகாக்க எவ்வாறு துணைநின்றன என்பதையும் இக்கட்டுரை வரலாற்று நோக்கில் எடுத்தியம்புகிறது.

கலிங்கத்தின் கடல்சார் வலிமை மற்றும் முக்கியத்துவம்

கலிங்கம் ஒரு வலிமைமிக்க கடற்படையைக் கொண்டிருந்தது. இங்கிருந்து கப்பல்கள் இலங்கை, பர்மா, தாய்லாந்து, வியட்நாம், பாலி, சுமாத்திரா மற்றும் ஜாவா வரை வணிகத்திற்காகப் பயணம் செய்தன. தென்கிழக்காசியா நாடுகளுக்கு கடல்வழி பயணம் செய்வோருக்கு மிக முக்கியமான துறைமுகப் பகுதியாக கலிங்கத் துறைமுகங்கள் விளங்கியது என்றால் அது மிகையல்ல. ஆதலாலேயே, தென்கிழக்காசிய நாடுகளின் வணிகத்திற்கு இத்துறைமுகங்கள் பெரிதும் உதவும் வகையில் அமைந்திருந்தது. தாமிரலிப்த்தி, பித்துண்டா மற்றும் பாலூர் போன்றவை கலிங்கத்தின் புகழ்பெற்ற துறைமுகங்களாகத் திகழ்ந்தன. பொ.ஆ. 4-5 ஆம் நூற்றாண்டில் சீனப்பயணி பாஹியான் தாமிரலிப்தியில் இருந்து 14 நாட்கள் தொடர் பயணத்தில், இலங்கையின் யாழ்ப்பாணம் வரை சென்றதாக தனது நூலில் குறிப்பிடுகிறார். வடகிழக்கு பருவக்காற்றின் உதவியுடன் கலிங்கத்திலிருந்து இலங்கை மற்றும் கிழக்காசிய நாடுகளுக்கு மிக எளிதாகப் பயணிக்க முடிந்தது என்று குறிப்பிடுகிறார் அவர். கலிங்கத் துறைமுகங்கள் குறிப்பாக தாமிரம், பட்டு மற்றும் இன்டிகோ ஏற்றுமதிக்கு புகழ்பெற்றதாக இருந்தன.

அத்திகும்பா கல்வெட்டின் அமைவிடம் மற்றும் வரலாறு

தற்போதைய ஒடிசா மாநிலத்தின் புவனேசுவரத்திற்கு அருகிலுள்ள உதயகிரி மலையில், இயற்கை எழில்மிக்க யானை வடிவிலான குகையில் (ஹத்திகும்பா) அமைந்துள்ள இக்கல்வெட்டு , இந்திய வரலாற்றின் மகோன்னத அரசனான கார்வேலனின் வாழ்வியலையும் சாதனைகளையும் வெறும் பதினேழு வரிகளில் ஆவணப்படுத்தியுள்ளது. கலிங்க தேசத்தை ஆண்ட மகாமேகவாகன சாம்ராஜ்யத்தின் தலைசிறந்த மன்னனான கார்வேலன், பொது ஆண்டிற்கு முன் இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் (சுமார் கி.மு. 150) சிசுபால்கர் கோட்டையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தவன். அசோகரின் தௌளி கல்வெட்டுகளிலிருந்து மாறுபட்ட தனித்துவமான பிராகிருத மொழியில் செதுக்கப்பட்டுள்ள இக்கல்வெட்டில், தமிழுக்கே உரிய 'ன' போன்ற சிறப்பெழுத்துகளின் சாயல் (உதாரணம்: 'ஸதக்னி') காணப்படுவது வரலாற்று ஆய்வாளர்களிடையே பெரும் ஈர்ப்பை ஏற்படுத்தியுள்ளது. 1820-ஆம் ஆண்டு ஏ. ஸ்டெர்லிங் என்பவரால் கண்டறியப்பட்டு, மெக்கன்சியால் படியெடுக்கப்பட்ட இச்சான்றினை, 1837-இல் ஜேம்ஸ் பிரின்செப் முழுமையாக வாசித்து வங்காள ஆசியக் கழகத்தின் (Asiatic Society of Bengal) வாயிலாக வெளியிட்டார். அலெக்சாண்டர் கன்னிங்காம், பகவான்லால் இந்திரஜித் முதல் பி.சி. சர்க்கார் வரையிலான பல்துறை அறிஞர்களால் பல்வேறு காலகட்டங்களில் மறுவாசிப்பிற்கு உட்படுத்தப்பட்ட இக்கல்வெட்டு, தொடக்கத்திலேயே ஜைன மத மங்கல வாழ்த்துடன் தொடங்குகிறது. அதில் தன்னைச் சேதி வம்சத்தின் மூன்றாவது அரசனான 'அயிரை மகாராஜன்' என கார்வேலன் அறிமுகப்படுத்திக் கொள்வதன் மூலம், அவனுக்கு முன்னரே

இரு மன்னர்கள் அவ்வம்சத்தில் ஆட்சி புரிந்ததையும், அவ்வம்சத்தின் மரபு இடைக்காலக் காளச்சூரி அரசர்கள் வரை நீடித்திருந்ததையும் இக்கல்வெட்டு மிகத்தெளிவாகப் புலப்படுத்துகிறது.

அத்திகும்பா கல்வெட்டுச் செய்திகள்

1. மங்கல வாழ்த்தும் மரபுவழி அறிமுகமும்: கல்வெட்டு ஜைன மதத்தின் புனிதமான நமஸ்கார மந்திரத்துடன் தொடங்குகிறது. அயிர (ஆர்ய) மகாராஜ, மகாமேகவாகன, சேதி வம்சத்தின் மூன்றாம் தலைமுறை அரசனான கலிங்காதிபதி ஸ்ரீ கார்வேலன் தன்னை அறிமுகம் செய்துகொள்கிறான். இதில் வரும் 'அயிர' எனும் சொல்லினை கார்வேலனின் பேரனான குடிப்பசிறி மன்னனின் கல்வெட்டுச் சான்றுகளைக் கொண்டு, அது 'ஆரிய' இனத்தைக் குறிப்பதல்ல என ஆர். டி. பானர்ஜி போன்ற அறிஞர்கள் உறுதிபட மறுக்கின்றனர்.

2. இளமைப் பருவமும் கல்விப் பயிற்சியும்: கார்வேலன் தனது 15 வயது வரை இளமை ததும்பும் எழிலார்ந்த தேகத்துடன் பல்வேறு விளையாட்டுகளில் சிறந்து விளங்கினான். அதன்பின் ஒன்பது ஆண்டுகள் லேகா (எழுத்து), ரூபா (நாணயம்/கணக்கு), ஞான (நிர்வாகம், பொருளாதாரம், நீதி, மதம்) ஆகிய கலைகளைக் கற்றுத் தேர்ந்து இளவரசனாகப் பொறுப்பேற்றான். தனது 24-ஆம் வயது நிறைவில், வர்த்தமான மகாவீரரின் ஆசியுடன் அரியணை ஏறினான்.

3. முதலாம் ஆட்சியாண்டு - புனரமைப்புப் பணிகள்: அரசனாகப் பொறுப்பேற்ற முதலாம் ஆண்டிலேயே, பெரும் புயலால் பாதிக்கப்பட்ட கலிங்க நகரின் மதில்கள், கோபுரங்கள், விகாரைகள் மற்றும் பொதுக் கட்டடங்களைச் சீரமைத்தான். மேலும், 'கபீர ரிஷி' எனும் ஏரியினைப் புனரமைத்துப் பொதுப் பயன்பாட்டிற்கு வழங்கினான்.

4. இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆட்சியாண்டு - திசையெட்டும் வெற்றி: சுமார் முப்பத்தி ஐந்து லட்சம் கார்ஷபணங்களைச் செலவிட்டு மக்கள் நலம் பேணிய கார்வேலன், இரண்டாம் ஆண்டில் தன் படைகளுடன் (யானை, குதிரை, தேர், காலாட்படை) மேற்கு நோக்கிச் சென்று சாதவாகன மன்னன் சதகர்னியை எதிர்த்தான். கன்ஹா, பெம்னா போன்ற இடங்களைக் கடந்து மூஷிக நகரத்தை நிலைகுலையச் செய்தான். மூன்றாம் ஆண்டில், தலைநகரை இசை, நடனம் மற்றும் காந்தர்வ வேதக் கலைகளால் மகிழ்வித்தான்.

5. நான்காம் மற்றும் ஐந்தாம் ஆட்சியாண்டு - வரலாற்றுச் சான்றுகள்: நான்காம் ஆண்டில் முன்னோர்கள் கட்டிய செங்கல் கோபுரங்களைப் புனரமைத்தான். இவ்வரியில் 'காந்தர்வ வேதம்' என்று பதிவாகியுள்ளது. இங்கு வரும் 'வேத' எனும் சொல், தொல்லியல் ரீதியாக ரிக், யஜுர் போன்ற வேதங்களைக் குறிக்காமல் இசை தொடர்பான 'காந்தர்வ

வேதத்தையே' குறிக்கிறது. ஐந்தாம் ஆண்டில், சுமார் 300 ஆண்டுகளுக்கு முன் நந்த மன்னர்களால் 'தனசுலி' யிலிருந்து கலிங்கம் வரை வெட்டப்பட்ட கால்வாயினை விரிவுபடுத்திப் பெரும் நீர் மேலாண்மைப் பணியைச் செய்தான்.

6. ஆறாம் மற்றும் ஏழாம் ஆட்சியாண்டு - நிர்வாகச் சிறப்பு: பிஞ்சரர்கள் திருடிச் சென்ற விலையுயர்ந்த இரத்தினங்களையும் குடைகளையும் மீட்டு, இராஜக மற்றும் போஜகர்களைப் பணியச் செய்தான். ஏழாம் ஆண்டில் பட்டத்தரசி வஜ்ரகரா தாய்மையடைந்த செய்தி பதிவாகியுள்ளது.

7. எட்டாம் மற்றும் ஒன்பதாம் ஆட்சியாண்டு - வடபுலப் படையெடுப்பு: எட்டாம் ஆண்டில் கோரத்னகிரியைத் (தற்கால பராபர் மலைகள்) தாக்கினான். ஒன்பதாம் ஆண்டில் இராஜகிருகத்தை (பாட்னா) அதிரச் செய்து, யவன மன்னன் திமிதியை (Demetrius) மதுராவிலிருந்து பின்வாங்கச் செய்தான். வெற்றிக் கொண்டாட்டமாகப் பிரம்மதேய நிலங்களையும் வரியற்ற நிலங்களையும் தானமாக வழங்கினான்.

8. பத்தாம் மற்றும் பதினொன்றாம் ஆட்சியாண்டு - தமிழகக் கூட்டணி முறியடிப்பு: பத்தாம் ஆண்டில் பாரதவர்சத்தின் (தென்னிந்தியா) மீது படையெடுத்துப் பெரும் செல்வம் திரட்டினான். பதினொன்றாம் ஆண்டில், ஆவா அரசரின் வணிக நகரமான பித்துண்டாவைக் (ஆந்திராவின் ஸ்ரீகாகுளம் பகுதி) கைப்பற்றிக் கழுதைகளால் உழுதான். மேலும், சுமார் 1300 ஆண்டுகளாகத் தன் நாட்டிற்கு அச்சுறுத்தலாக விளங்கிய 'தாமிர தேசக் கூட்டணியை' (தமிழக மூவேந்தர் கூட்டமைப்பு) முறியடித்ததாகப் பெருமிதத்துடன் பதிவு செய்துள்ளான்.

9. பன்னிரண்டாம் ஆட்சியாண்டு - மகத வெற்றி: மகத நாட்டு அரசன் பஹசதிமிதாவை (பிரகஸ்பதிமித்திரன் - சுங்க வம்சம்) பணியச் செய்தான். முன்னொரு காலத்தில் நந்த மன்னரால் கலிங்கத்திலிருந்து கவர்ந்து செல்லப்பட்ட ஜைனச் சிலையினை (கலிங்க ஜின) மீண்டும் மீட்டு வந்து கலிங்கத்தின் பெருமையை நிலைநாட்டினான்.

10. பதிமூன்றாம் ஆட்சியாண்டு - பாண்டியரின் திறை: நாட்டின் உட்கட்டமைப்பை மேம்படுத்தி நூறு சிற்பிகளுக்கு வரியற்ற நிலங்களை வழங்கினான். தமிழகத்தின் பாண்டிய மன்னனிடமிருந்து முத்துக்களையும், இரத்தினங்களையும் திறையாகப் பெற்றான். 'பாண்ட' என இக்கல்வெட்டில் குறிக்கப்படும் பாண்டியர்களிடமிருந்து பெறப்பட்ட முத்துக்களுக்குத் தமிழ்ப் பெயர்களே வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

11. பதினான்காம் மற்றும் பதினைந்தாம் ஆட்சியாண்டு - ஜைன சமயப் பணி: குமரி மலையில் ஜைனத் துறவிகளுக்குச் சீனப் பட்டு மற்றும் வெண்ணிற

ஆடைகளை வழங்கினான். இதன்மூலம் கார்வேலன் ‘ஸ்வேதாம்பர’ ஜைனப் பிரிவைச் சார்ந்தவன் என அறியமுடிகிறது. துறவிகளின் நினைவாக ‘நிசீதிகை’களை (நினைவிடங்கள்) அமைத்தான். சிம்ஹபாத ராணி சிந்துலாவிற்காகக் கற்கோயிலை எழுப்பினான்.

12. பதினாறு மற்றும் பதினேழாம் வரிகள் - பேரரசனின் புகழுரை: கார்வேலன் தன்னை அமைதி விரும்பி, தர்மத்தை மதிப்பவன், அனைத்து மதங்களையும் ஏற்பவன் மற்றும் வசு முனிவரின் வழிவந்தவன் எனப் பறைசாற்றிக்கொள்கிறான். இராஜாதிராஜனாக, தனது தேசத்தின் காவலனாகப் புகழின் உச்சியில் நின்ற கார்வேலனின் முழுமையான வரலாற்றுச் சுருக்கமாக இக்கல்வெட்டு நிறைவடைகிறது.

பல்லவர் மற்றும் சோழர்களின் கலிங்கத் தாக்கம்

அத்திகும்பா கல்வெட்டுச் செய்திகளின்படி கார்வேலன் காலத்தில் மூவேந்தர்களின் கூட்டணி முறியடிக்கப்பட்டதாகக் கூறப்பட்டாலும், தமிழக அரசர்களின் கலிங்கப் படையெடுப்புகளும், அதன் மீதான ஈடுபாடும் பிற்காலத்திலும் தொடர்ந்துள்ளன. குறிப்பாக, பல்லவ மன்னன் இராஜசிம்மன் (இரண்டாம் நரசிம்ம போத்தவர்மன்) சீனத்துடனான கடல்வழி வணிகப் பாதையைப் (Silk Route) பாதுகாக்கவும், திபெத்தியக் கொள்ளையர்களை ஒடுக்கச் சீனாவுக்கு உதவவும் தனது படைகளைக் கலிங்கத்தின் வழியாகவே அனுப்பியுள்ளான் என்பதைச் சீன ஆவணங்கள் உறுதிப்படுத்துகின்றன. அரசியல் கடந்து, பொ.ஆ. 10-ஆம் நூற்றாண்டில் காஞ்சியிலிருந்து சென்ற வேதாந்த விற்பன்னர்கள் கலிங்கத்தின் குக்குடபாத விகாரைக்கு ஏராளமான மைத்ரேயர் சிலைகளை வழங்கியது, காஞ்சிக்கும் கலிங்கத்திற்கும் இடையிலான சமயப் பிணைப்பை வலுப்படுத்தியது. சோழர் காலத்தில் இந்தத் தொடர்பு இன்னும் தீவிரமடைந்தது; இராஜேந்திர சோழன் தனது கங்கைப் படையெடுப்பின் போது கலிங்க அரசன் இந்திரரதனை வென்று திறை கொண்டதோடு, கிழக்கு கங்க வம்சத்துடன் திருமண உறவுகளையும் கொண்டிருந்தான். அதன் விளைவாகவே, சோழ இளவரசி இராஜசுந்தரிக்கும் கலிங்க மன்னன் முதலாம் இராஜராஜ தேவனுக்கும் பிறந்த அனந்தவர்மன் சோடகங்கன், பிற்காலத்தில் புகழ்பெற்ற புரி ஜெகந்நாதர் ஆலயத்தைப் புதுப்பித்துக் கட்டியதுடன், தனது பெயரிலேயே 'சோழ' மற்றும் 'கங்கை' (Chodaganga) வம்ச அடையாளத்தைச் சுமந்து நின்றான். இருப்பினும், முதலாம் குலோத்துங்க சோழன் காலத்தில் கலிங்க அரசன் கப்பம் கட்ட மறுத்ததால் உருவான போரை, அவனது தளபதி கருணாகரத் தொண்டைமான் முன்னின்று நடத்திப் பெரும் வெற்றி பெற்றதை ஜெயங்கொண்டார் தனது 'கலிங்கத்துப் பரணி'யில் வரலாற்று ஆவணமாகப் பதிவு செய்துள்ளார்.

கலிங்கத்துப் பரணி கூறும் செய்திகள்

சோழப் பேரரசன் முதலாம் குலோத்துங்கன் காஞ்சிமாநகரில் தங்கியிருந்து பதினான்கு உலகங்களும் வியக்கும்படி ஒருகுடை நிழலில் ஆட்சி செய்தபோது,

ஏனைய நாட்டு மன்னர்கள் யாவரும் திறை செலுத்தித் தலைவணங்க, கலிங்க நாட்டு மன்னன் அனந்தவர்மன் மட்டும் இருமுறை திறை செலுத்தத் தவறித் தன் செருக்கைக் காட்டினான். அனந்தவர்மனின் இந்த அகங்காரத்தை அடக்கிடச் சினந்தெழுந்த குலோத்துங்கன், "திறையிலாக் கலிங்கத் தெருக்கினை அடக்கத் தொண்டைமான் வாரணம் தூண்டுக" எனத் தனது தளபதி கருணாகரத் தொண்டைமானுக்கு ஆணையிட்டான். அவ்வாணையை ஏற்றுப் புறப்பட்ட சோழர் படைகள் காஞ்சியிலிருந்து பாலாறு, பொன்முகரி, கிருஷ்ணா, கோதாவரி மற்றும் பம்பை எனப் பல ஆறுகளைப் பாய்ந்து கடந்து கலிங்கத்தின் எல்லையை அடைந்த வேகத்தைச் செயங்கொண்டார் மிக நயம்பட விவரிக்கின்றார். ஊழிக்காலத் தீயைப் போலச் சோழப் படைகள் கலிங்கத்தின் திசையெங்கும் புகுந்து போரிட்ட உக்கிரத்தில் அந்நாடே நிலைகுலைந்து எரிய, முன்னொரு காலத்தில் கார்வேலன் பாண்டியரை வென்றதாகக் கூறப்படும் அதே கலிங்கத்தின் மன்னன் அனந்தவர்மன், இப்போரில் சோழப்படைக்கு அஞ்சித் தன் யானையை விடுத்து மலைக்குகைகளிலும் காடுகளிலும் ஒளிந்து கொண்டான். இறுதியில் கலிங்க ஏழும் முழுமையாகச் சோழர் வசமாக, அங்கிருந்து கவர்ந்து வரப்பட்ட எண்ணற்ற பொற்குவியல்கள், யானைக்கூட்டங்கள் மற்றும் விலையுயர்ந்த ஆபரணங்களைக் கருணாகரத் தொண்டைமான் குலோத்துங்க சோழனின் பொற்பாதங்களில் காணிக்கையாக வைத்துத் தன் வெற்றியை நிலைநாட்டினான் என்று கூறுகிறது கலிங்கத்துப் பரணி.

முடிவுரை

முடிவாக, கலிங்கத்தின் மீதான தமிழ் அரசர்களின் தொடர் ஆதிக்கம் என்பது வெறும் அரசியல் வெற்றியாக மட்டுமன்றி, ஆழமான பண்பாட்டுப் பிணைப்பாகவும் உருவெடுத்ததை அறிய முடிகிறது. குறிப்பாக, இத்தொடர்பின் விளைவாகவே பூரி ஜெகந்நாதர் ஆலயம் வைணவ மரபில் 108 திவ்ய தேசங்களில் ஒன்றாக இன்றும் போற்றத்தக்க இடத்தைப் பெற்றுள்ளது.

தமிழக அரசர்கள் தென்கிழக்காசிய நாடுகளுடன் மேற்கொண்ட பிரம்மாண்டமான கலாச்சாரப் பரிமாற்றங்களுக்குக் கலிங்கம் ஒரு முக்கிய நுழைவாயிலாக (Gateway) விளங்கியுள்ளது. இதன் எச்சமாகவே, இன்றும் கலிங்கப் பகுதியில் பயன்பாட்டிலுள்ள சூரிய நாட்காட்டி முறை தமிழர்களின் வானியல் தாக்கத்தை பறைசாற்றுகிறது. இவ்வாறு, பொ.ஆ.மு. 1500 முதல் பொ.ஆ. 12-ஆம் நூற்றாண்டு வரையிலான சுமார் 3500 ஆண்டுகால நீண்ட வரலாற்றில், கலிங்க மண்ணில் நிலைபெற்றிருந்த தமிழர்களின் தாக்கம், தென்னகக் கடல் வர்த்தக மேலாதிக்கத்தையும், தமிழர்களின் ஈடு இணையற்ற கடல் கடந்த உறவுகளையும் உறுதிப்படுத்துவதை இக்கட்டுரையின் வாயிலாகத் தெளிவுபெறக் காண்கிறோம்.

நூற்பட்டியல்

James Legge, "The Travels of Fa-hien", Oriental Publishers, Delhi. 1971.

Hirananda Sastri, "Epigraphia Indica Vol XX (1929-30)", Archaeological Survey of India, New Delhi. 1983.

Thomas Watters, T.W.Rhys Davids, S.W. Bushell, Vincent A.Smith, "On Yuan Chwang's Travels in India (A.D.629-645), Royal Asiatic Society, London. 1961.

Hermann Kulke, K.Kesavapany, Vijay Sakhuja, "Nagappattinam to Suvarnadweepa: Reflections on Chola Naval Expeditions", ISEAS–Yusof Ishak Institute, Singapore. 2009

K.A.Nilakanta Sastri, "Foreign Notices of South India: From Megasthenes to Ma Huan", University of Madras, Chennai. 1939.

Kshitish Chandra Sarkar, "Kurkihar, Gaya and Bodh-Gaya", Varendra Research Society, Rajshahi. 1936.

இரா.நாகசாமி, "கங்கைகொண்ட சோழபுரம்", தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை. 1980.

முத்து இராமமூர்த்தி, "கவிச்சக்கரவர்த்தி ஜெயங்கொண்டார் அருளிய கலிங்கத்துப் பரணி மூலமும் உரையும்", சாரதா பதிப்பகம், சென்னை. 2018.

காசுகளிலும் கல்வெட்டுகளிலும் பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மன் விருதுப்பெயர்கள் (கி.பி. 590-630)

ஆறுமுக சீதாராமன்
தமிழக நாணயவியலாளர்,
தஞ்சாவூர்.

முதலாம் மகேந்திரவர்மன் கி.பி.590ல் தனது இளமைக் காலத்தில் தந்தை சிம்ம விஷ்ணுவுடன் போர்களிலும், நிர்வாகத்திலும் துணைபுரிந்தான். இவன் சிறந்த பல்லவப் பேரரசர்களில் ஒருவனாகத் திகழ்ந்ததோடு வீரனாகவும், ராஜதந்திரியாகவும், கவிஞனாகவும், கலைஞனாகவும், ஒரு சேர விளங்கினான். அவன் பல்துறையிலும் சிறந்து விளங்கிய குணவானாக இருந்தான். இது கல்வெட்டுகள், காசுகள் மூலம் கிடைக்கும் அவனது விருதுப்பெயர்கள் மூலம் தெளிவாகிறது. அவை மகேந்திர விக்கிரமன், சித்திரகாரப்புலி, சத்யசந்த, சைத்தியகாரி, விசித்திரசித்தன், மத்த விலாசன் போன்றவையாகும். தனிப்பாறைகளை குடைந்து குடைவரை கோவில்களைத் தமிழகத்தில் முதன்முதலில் பல இடங்களில் உருவாக்கியவன் முதலாம் மகேந்திரவர்மனே. அவற்றில் சில மாமண்டூர், பல்லாவரம், மகேந்திரவாடி, தளவானூர், திருச்சிராப்பள்ளி ஆகும்.

முதலாம் மகேந்திரவர்மனின் ஆட்சி பலவகையிலும் நினைவு கூறத்தக்கதாகும். அவனது ஆட்சிக்காலம் அமைதியாகவும், பின்னால் வந்த காலங்களில் ஏற்பட்ட சாளுக்கிய – பல்லவ பகையீட்டில் வந்த தொந்தரவுகள் இல்லாத காலமாகவும் விளங்கியது. போற்றுதற்குரிய கலைஞனாக முதலாம் மகேந்திரவர்மனின் அவையில் இலக்கியப் படைப்புகள் ஊக்குவிக்கப்பட்டன.

முதலாம் மகேந்திரவர்மன் சமயப்பொறை வாய்ந்த இந்து அரசன் என்பதற்கு அவன் எழுப்பிய சிவ, விஷ்ணு கோவில்கள் சான்றளிக்கின்றன. மரபு வழிச் செய்திகளின்படி தொடக்கத்தில் சமணனாக இருந்த அவன் சைவ நாயனார் அப்பரால் சைவ சமயத்துக்கு மாற்றப்பட்டான். முதலாம் மகேந்திரவர்மன் பௌத்த, சமண சமயத்தவருடன் நட்புணர்வோடு செயல்பட்டான். காஞ்சிபுரம் பல சமயப் பிரிவுகளின் மையமாகத் திகழ்ந்தது.

அண்மைக்காலம் வரை கண்டறியப்பட்ட பல்லவர் காசுகள் பற்றிய சான்று ஆதாரங்கள் இருவகையாகும். முதலாவது தமிழ்நாட்டில் பல இடங்களில் கண்டெடுக்கப்பட்ட காசுகளாகும். இரண்டாவது பல்லவர் கல்வெட்டுகளிலும்

இலக்கியங்களிலும் கிடைக்கின்ற செய்திகளாகும். பல்லவர் வரலாறு பற்றி அறிய இவை முக்கியச் சான்றுகளாகத் திகழ்கின்றன.

பல்லவர்கள் பல வகையான காசுகளை வெளியிட்டுள்ளார்கள். அவற்றில் மன்னர்களுடைய பல விருதுகள் தமிழிலும் கிரந்த எழுத்துக்களிலும் பொறிக்கப்பட்டுள்ளன. காசுகளில் பட்டப் பெயர்கள் மட்டுமே காணப்படுகிறது. இயற்பெயர்கள் ஒன்றுகூட காணப்படவில்லை. பட்டப் பெயரில் காசுகள் குறைவாகக் கிடைக்கின்றன. பட்டத்தை சூடிய நாளில் மட்டும் இந்தக் காசுகள் வெளியிட்டிருக்கலாம். மகேந்திரவர்மன் காலத்திலிருந்துதான் பல்லவர் காசுகள் எழுத்துப் பொறிப்புடன் கிடைக்கின்றன.

பல்லவர் காலத்தமிழ்க் கல்வெட்டுகளில் வரும் வடமொழிச் சொற்களைப் பயன்படுத்த பல்லவ கிரந்தம் என்னும் புதிய எழுத்து வகையை அறிமுகப்படுத்தி அவ்வெழுத்துகளையே காசுகளில் பொறித்துள்ளனர். கிரந்தம் எனும் எழுத்துவகையை பல்லவர் காசுகளில் அதிகமாகக் காணமுடிகிறது. பல்லவர் காலத்தில் தான் தமிழ்மொழியில் வடமொழிக் கலப்பு மிகுதியாக ஏற்பட்டது. பல்லவர் காலத்தில் வாழ்ந்த மக்கள் தமிழ், கிரந்தம் ஆகியவற்றை நன்கு அறிந்திருந்தனர். அதிக எண்ணிக்கையில் விருதுப் (பட்டப்) பெயர்களை காசுகளில் பொறிக்கும் வழக்கத்தை முதன்முதலில் முதலாம் மகேந்திரவர்மனே கொண்டு வந்தவன் எனக்கூறலாம்.

காசு – 1



நஹிகாமுத்ரிக

காசின் முன் பக்கத்தில் வலது பக்கம் நிற்கும் காளைக்கு மேல் ‘நஹிகாமுத்ரிக’ என்று தமிழ் – கிரந்த எழுத்துகளில் வடமொழியில் பொறிக்கப்பட்டுள்ளது. பின் பக்கத்தில் வட்டத்திற்குள் செங்குத்தான நிலையில் பிரயோக சக்கரம் ஒன்று பூவிதழ்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. கிடைத்த இடம்: திருச்சி, உலோகம்: கலப்பு உலோகம்; எடை: 2 கிராம்.

திருச்சி மலைக்கோட்டையில் உள்ள மேல் குடைவரை மற்றும் செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள பல்லாவரம் குடைவரைக் கோயில்களில் உள்ள கல்வெட்டுகள் ‘நைஹிகாமுத்ரிகஹ’ என்று முதலாம் மகேந்திரவர்மனின் விருதுப்பெயரைக் குறிப்பிடுகின்றன. இந்த வடமொழிச் சொல்லுக்கு ‘சிற்றின்ப ஆசை இல்லாதவன்’ (காம எழுச்சிகள் அற்றவன்) என்று பொருள் கொள்ளலாம்.

குடைவரையில் உள்ள எழுத்துகள் பல்லவ கிரந்த எழுத்துகளிலேயே எழுதப்பட்டுள்ளன. ஆனால் காசில் தமிழ், கிரந்தம் இரண்டும் கலந்து எழுதப்பட்டுள்ளது.

காசு – 2



உடுதிஹ

காசின் முன்பக்கத்தில் வலதுபக்கம் நோக்கி நிற்கும் காளைக்கு மேல் ‘உடுதிஹ’ என்று பல்லவர் காலக் கிரந்த எழுத்துகளில் பொறிக்கப்பட்டுள்ளது. பின்பக்கத்தில் சக்கரம் காணப்படுகிறது. கிடைத்த இடம்: திருவையாறு. உலோகம்: கலப்பு உலோகம், எடை: 2.2 கிராம். பல்லவர் கல்வெட்டுகளில் ‘ஹ’ என்ற விஸர்க எழுத்தை இரண்டு புள்ளிகள் வைத்துப் பொறித்தார்கள். அதேபோல் இந்தப் பல்லவர் காசில் மட்டும் பெயரின் இறுதியில் இரண்டு புள்ளிகள் பொறிக்கப்பட்டுள்ளன. வேறு எந்தப் பல்லவர் காசுகளிலும் இந்த அளவிற்குத் தெளிவாகப் புள்ளிகள் தெரியவில்லை. இந்த உடுதிஹ என்ற வடமொழி சொல்லுக்கு ‘புகழ் அல்லது உயர்வு’ என்று பொருள் கொள்ளலாம்.

காசு – 3

மஹாமேக

காசின் முன்பக்கத்தில் வலதுபக்கம் நோக்கி நிற்கும் காளையின் மேல் ‘மஹாமேக’ என்று பல்லவர் காலக் கிரந்த எழுத்துகளில் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. பின்பக்கத்தில் வட்டத்தை நான்காகப் பிரித்து ஒவ்வொரு பிரிவிலும் மூன்று வளை முகடுகள் காணப்படுகின்றன. கிடைத்த இடம்: அரசலாறு, கும்பகோணம், உலோகம்: கலப்பு உலோகம், எடை: 2 கிராம்.

மஹாமேக என்ற சொல்லுக்கு ‘கார்மேகம்’ எனப்பொருள் கொள்ளலாம். திருச்சி, பல்லாவரம், காஞ்சிபுரம் குடைவரைகளில் ‘மஹாமேகஹ’ என்று பெயர் பொறிக்கப்பட்டுள்ளது.

காசு – 4　　　　*ல ளி த கு ர*

காசின் முன்பக்கத்தில் வலதுபக்கம் நோக்கி நிற்கும் காளையின் மேல் ‘லளித(ங்)குர’ என்று பல்லவர் காலக் கிரந்த எழுத்துகளில் பொறிக்கப்பட்டுள்ளது. பின்பக்கத்தில் வட்டத்திற்குள் ஸ்ரீவத்ஸம் உள்ளது. கிடைத்த இடம்: கோவில்பட்டி, உலோகம்: கலப்பு உலோகம், எடை: 2.3 கிராம். ‘லளிதாங்குர’ என்ற வடமொழி சொல்லுக்குப் ‘பொருத்தமான வழித்தோன்றல்’ எனப் பொருள் கொள்ளலாம். திருச்சிராப்பள்ளி, பல்லாவரம் குடைவரைகளில் ‘லளிதாங்குரஹ’ என்று பெயர் பொறிக்கப்பட்டுள்ளது.

காசு – 5　　　　*ல க்ஷி த*

காசின் முன்பக்கத்தில் வலதுபக்கம் நோக்கி நிற்கும் காளையின்மேல் ‘லக்ஷித’ என்று பல்லவ கிரந்த எழுத்துகளில் வடமொழியில் பொறிக்கப்பட்டுள்ளது. பின்பக்கத்தில் வட்டத்திற்குள் எட்டு இதழ்கள் கொண்ட பூவின் வடிவ அமைப்பு பொறிக்கப்பட்டுள்ளது. கிடைத்த இடம்: கும்பகோணம், உலோகம்: கலப்பு உலோகம். எடை: 2.15 கிராம். திருச்சி மலைக்கோட்டையில் உள்ள மேல்குடைவரை மற்றும் பல்லாவரம் குடைவரைக் கோவில்களில் உள்ள பல்லவர்களது கல்வெட்டுகள் ‘லக்ஷித’ என்று முதலாம் மகேந்திர வர்மனின் விருதுப் பெயரைத் தருகின்றன. இந்த வடமொழிச் சொல்லுக்கு ‘குறிக்கோள்களை உடையவன்’ என்று பொருள் கொள்ளலாம்.

காசு – 6 *த ண் டி க் க ல*

காசின் முன்பக்கத்தில் வலதுபக்கம் நோக்கிநிற்கும் காளையின் மேல் ‘தண்டிக்கல’ என்று பல்லவ கிரந்த எழுத்துகளில் பொறிக்கப்பட்டுள்ளது. பின்பக்கத்தில் பூவிதழ்களினால் அலங்கரிக்கப்பட்ட வட்டத்திற்குள் பூர்ண கும்பத்தின் கீழ்ப்பகுதி உள்ளது. கிடைத்த இடம்: கரூர், உலோகம்: கலப்பு உலோகம், எடை: 2.45 கிராம்.

பல்லாவரம் குடைவரைக் கோயிலில் உள்ள பல்லவர் கல்வெட்டில் ‘தண்டிக்கல’ என்று முதலாம் மகேந்திரவர்மனின் விருதுப்பெயர் உள்ளது. இந்த வடமொழிச் சொல்லுக்கு ‘செங்கோல் ஆட்சியைத் திறமையாக நடத்துபவன்’ என்று பொருள் கொள்ளலாம்.

காசு – 7 *ஸ்ரீ வ ம்பு*

காசின் முன்பக்கத்தில் வலதுபக்கம் நோக்கி நிற்கும் காளைக்கு மேல் ஸ்ரீவம்பு என்று பல்லவ கிரந்த எழுத்துகளில் பொறிக்கப்பட்டுள்ளது. ‘ம்பு’ கூட்டெழுத்துகளில் உள்ளது. பின்பக்கத்தில் வலதுபக்கம் நோக்கி நிற்கும் புலி, மேலே மீன், மீனுக்கு அடுத்து வில் உள்ளது. கிடைத்த இடம்: கரூர், உலோகம்: கலப்பு உலோகம், எடை: 2.25 கிராம்.

வம்பு என்ற சொல்லுக்கு ‘புதுமையை புகுத்தியவன்’ என்று பொருள் கொள்ளலாம். இந்தக் காசு மூவேந்தர் வெற்றிக்காக வெளியிட்டிருக்கலாம்.. பல்லாவரம், திருச்சி குடைவரைகளில் ‘வம்பு’ என்று பெயர் பொறிக்கப்பட்டுள்ளது.

காசு – 8 *த ர் ப வி ஷ*

காசின் முன்பக்கத்தில் வலதுபக்கம் நோக்கி நிற்கும் காளைக்கு மேல் ‘தர்பவிஷ’ என்று பல்லவ கிரந்த எழுத்துகளில் வடமொழியில் பொறிக்கப்பட்டுள்ளது. பின்பக்கத்தில் வட்டத்திற்குள் செங்குத்தாகக் குடை ஒன்று உள்ளது. குடையின் மேல் சூரியன், சந்திரன் போன்ற உருவங்கள் உள்ளன. கிடைத்த இடம்: திருக்கோவிலூர், உலோகம்: கலப்பு உலோகம், எடை: 2.5 கிராம்.

பல்லாவரம் குடைவரையில் உள்ள கல்வெட்டில் ‘தர்பவிஷஹ’ என்று முதலாம் மகேந்திரவர்மனின் விருதுப்பெயரைத் தருகின்றன. இந்த வடமொழிச் சொல்லுக்கு ‘(பிறரின்) ஆணவத்தை அடக்குபவன்’ என்று பொருள் கொள்ளலாம்.



காசு – 9 *பகாபிடுகு*

காசின் முன்பக்கத்தில் வலதுபக்கம் நோக்கி நிற்கும் காளையின் மேல் ‘பகாபிடுகு’ என்று பல்லவர் காலத்தமிழ் எழுத்துகளில் பொறிக்கப்பட்டுள்ளது. ‘கு’ என்ற எழுத்து தமிழ்-பிராமி எழுத்திலிருந்து வளர்ச்சி அடைந்துள்ளதை இங்கு ஒப்பிட்டுப் பார்க்கலாம். தமிழகத்தில் கிடைத்த பல்லவர் காசுகளில் எழுத்துப்பொறிப்புள்ள காசுகளில் இந்தக் காசே மிகப்பெரியது எனலாம். கிடைத்த இடம்: தஞ்சாவூர், உலோகம்: கலப்பு உலோகம், எடை: 3.5 கிராம். செங்கல்பட்டு மாவட்டத்தில் வல்லம் குடைவரையில் உள்ள தமிழ்க் கல்வெட்டு ‘பகாப்பிடுகு’ என்று முதலாம் மகேந்திரவர்மனின் விருதுப்பெயரைத் தருகிறது. ‘பகாபிடுகு’ என்ற சொல்லுக்கு ‘பகைவர்மேல் இடிபோல் பாய்பவன்’ என்று பொருள் கொள்ளலாம். பல்லாவரம் குடைவரையில் ‘புகாபிடுகு’ என்று பெயர் பொறிக்கப்பட்டுள்ளது.



காசு – 10 *வ கா*

காசின் முன்பக்கத்தில் வலதுபக்கம் நோக்கி நிற்கும் காளைக்கு மேல் ‘வகா’ என்று தமிழ் எழுத்துகளில் பொறிக்கப்பட்டுள்ளது. பின்பக்கத்தில் தாமரைப்பூ இதழ் விரிந்த நிலையில் உள்ளது. கிடைத்த இடம்: காஞ்சிபுரம், உலோகம்: கலப்பு உலோகம், எடை: 1.3 கிராம்.

காசில் உள்ள ‘வகா’ என்ற சொல்லை ‘வங்கா’ என்று படிக்கலாம். வங்கா என்ற சொல்லுக்கு ‘ஆறு’ (நதி) என்று பொருள் கொள்ளலாம். காஞ்சிபுரம் அருகில் ஓடும் வேகவதி (வெஃகா) ஆற்றின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு இந்தக் காசை வெளியிட்டு இருக்கலாம். திருச்சிராப்பள்ளி குடைவரையில் ‘வ(ங்)க’ என்று பெயர் பொறிக்கப்பட்டுள்ளது.

காசு – 11 *குணபர*

காசின் முன் பக்கத்தில் வலது பக்கம் நோக்கி நிற்கும் காளைக்கு மேல் ‘குணபர’ என்று தமிழ் – கிரந்த எழுத்துகளில் பொறிக்கப்பட்டுள்ளது. பின்பக்கத்தில் நான்கு இதழ்கள் கொண்ட பூவிதழ் காணப்படுகிறது. உலோகம்: கலப்பு உலோகம், எடை: 1.5 கிராம். கிடைத்த இடம்: கும்பகோணம்.

முதலாம் மகேந்திரவர்மனின் விருதுப்பெயரான ‘குணபரஹ’ என்ற சொல்லுக்கு ‘நற்குணங்கள் நிறைந்தவன்’ எனப் பொருள் கொள்ளலாம். திருச்சி, பல்லாவரம் குடைவரையில் ‘குணபரஹ’ என்று பெயர் பொறிக்கப்பட்டுள்ளது.

காசுகளிலும் கல்வெட்டுகளிலும் பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மன் விருதுப்பெயர்கள்

	காசு	கல்வெட்டு
1		
2		
3		
4		
5		
6		
7		
8		
9		

10		
11		

	காசில் உள்ள பட்டப் பெயர்	பொருள்
1	நஹிகாமுத்ரிக	சிற்றின்ப ஆசை இல்லாதவன் காம எழுச்சிகள் அற்றவன்
2	உடுதிஹ	புகழ் அல்லது உயர்வு
3	மஹாமேக	கார்மேகம்
4	லளிதா(ங்)குர	பொருத்தமான வழித்தோன்றல்
5	லக்ஷித	குறிக்கோள்களை உடையவன்
6	தண்டிக்கல	செங்கோல் ஆட்சியை திறமையாக நடத்துபவன்
7	ஸ்ரீவம்பு	புதுமையைப் புகுத்தியவன்
8	தர்பவிஷ	(பிறரின்) ஆணவத்தை அடக்குபவன்
9	பகாபிடுகு	பகைவர்மேல் இடிபோல் பாய்பவன் (பிளக்க முடியாத இடி)
10	வகா	(வங்கா) ஆறு அல்லது நதி
11	குணபர	நற்குணங்கள் நிறைந்தவன்

நூற்பட்டியல்

Mahalingam, T.V., 1988, Inscriptions of the Pallavas, New Delhi, Indian Council of Historical Research.

Michael Lockwood, 1993, The Birudas of Mahendravarman.

Krishnamurthy, R., 2004, 'The Pallava Coins' Chennai, Garnet Publishers.

Minakshi, C. 1938, Administration and Social Life under the Pallavas, University of Madras.

ஆறுமுகசீதாராமன், சங்கரன்ராமன், 2002, 'பல்லவர் காசுகள்', தனலட்சுமி பதிப்பகம், தஞ்சாவூர்.

ஆறுமுக சீதாராமன், 2004, 'பல்லவர் காசுகள்' (அண்மைக்காலக் கண்டுபிடிப்புகள்), தனலட்சுமி பதிப்பகம், தஞ்சாவூர்.

ஆறுமுகசீதாராமன், 2019, ஆய்வு நோக்கில் பல்லவர் காசுகள், தனலட்சுமி பதிப்பகம், தஞ்சாவூர்.

தங்கம்தென்னரசு, ஆறுமுகசீதாராமன், 2024, வரலாறு கூறும் தமிழ்நாட்டுக் காசுகள், பாண்டிய நாட்டு வரலாற்று ஆய்வு மையம், மதுரை.

கற்றளி செய்வித்தார்

ப. காளீஸ்வரன்
தொல்பொருள் வேதியியல் துணை கண்காணிப்பாளர்,
இந்திய தொல்லியல் துறை,
அறிவியல் பிரிவு, மைசூர்.

சுருக்கம்

மக்கள் கல்லினாலும், உலோகப் பொருட்களினாலும் இறை உருவத்தை அமைத்து வழிபடுவதற்கு முன்பாகவே மரத்தையும், புற்றுக்களையும், இயற்கையையும் வழிபட்டுள்ளனர். கற்றளி எனும் கற்கோயில்களும், கற்படிமங்களும் பல்லவர்கள் காலத்தில் தொடக்கம் பெற்றன. குடைவரைக் கோயில்கள் பல்லவர்கள் காலத்தில் வெகு சிறப்பாய் வளர்ந்தன. மக்கள் பல்வேறு காலங்களில் பல்வேறு வகைகளில் தங்களால் இயன்ற அளவிலான கோவில்களை ஏற்படுத்தி வழிபாடு செய்துள்ளனர். இன்றும் பல இடங்களில் புற்றுக்களையும், மரங்களையும் தெய்வமாக வழிபடும் நிகழ்வை காண்கின்றோம். இவ்வழிபாடு அனைத்தும் பழைய வழிபாட்டின் தொடர்ச்சி ஆகும். செங்கல், மரத் தளிகளும் பல இடங்களில் அழிவினைக் காணவே அந்தந்தக் காலங்களில் ஆட்சி செய்த மன்னர்கள், அவர்தாம் மனைவியர், அரச குடும்பத்தினர், ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்கள், அமைச்சர்கள், அரசுப் பணியில் இருந்தவர்கள், ஊர் செல்வந்தர்கள் எனப் பாகுபாடு இன்றி பல்வேறு தரப்பினரும் கற்றளிகளாக மாற்றினர்.

திருநாவுக்கரசர் பெருங் கோயில்கள், கரக்கோயில், ஞாழக்கோயில், கொகுடி கோயில், இளங்கோயில் என்றெல்லாம் கோயில்களின் பல வகைகளை திருத்தாண்டகத்திலே பாடி வைத்திருக்கிறார். கோச்செங்கட் சோழ மன்னர் 70 மாடக் கோவில்களை காவிரிக் கரையில் கட்டினார். முதலாம் ஆதித்த சோழர் காவிரியின் இரு கரைகளிலும் நூற்றுக்கும் மேற்பட்ட திருக்கோயில்களை எழுப்பியதாக செப்பேடுகள் கூறுகின்றன. சோழப் பேரரசில் விஜயாலய சோழருக்குப் பிறகு ஆட்சிப் பொறுப்பேற்ற பல சோழ மன்னர்களும் பல திருக்கோவில்களைக் கற்றறிகளாக மாற்றினர்.

கற்றளிகளாக மாற்றப்பட்ட பல்வேறு செய்திகளை இவர்கள் கல்வெட்டுக்களாக ஒவ்வொரு கோவில்களிலும் எழுதி வைத்துள்ளனர். இதனை கருவாகக் கொண்டு இக்கட்டுரை அமைகிறது.

கல்வி மற்றும் துறைசார் பின்னணி

மதுரை மாவட்டம், சூலப்புரம் என்னும் ஊரை பூர்வீகமாகக் கொண்டு, சிவகாசியில் வசித்து வரும் நான், தற்போது மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் பணிபுரிந்து வருகின்றேன். என்னுடைய முனைவர் பட்ட ஆய்வினை வேதியியல் புலத்தில் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் முடித்தேன். பின்னர் தனியார் கல்லூரியில் சிவகாசியில் 3 ஆண்டுகள் பணிபுரிந்து, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்திய தொல்லியல் துறையின் இரசாயனர் பணிக்குத் தேர்வாகி இரண்டு ஆண்டுகள் அங்கு பணிபுரிந்து, 2021 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தடய அறிவியல் துறைக்கான இளநிலை அறிவியல் அலுவலர் தேர்வில் தேர்ச்சி பெற்று, சென்னை தடய அறிவியல் துறையில் இரண்டு ஆண்டுகள் பணிபுரிந்து, தற்பொழுது மதுரை ஆய்வகத்தில் பணிபுரிந்து வருகிறேன்.

தற்பொழுது மத்திய தொல்லியல் துறையின் “துணை கண்காணிப்பு தொல்லியல் இரசாயனர்” பணிக்குத் தேர்வாகி 2025 நவம்பர் மாதம் அப்பணியில் சேர உள்ளேன்.

கல்வெட்டுகள் படிப்பது மற்றும் தேவார பாடல் பெற்ற தலங்கள், மங்களாசாசனம் பெற்ற திவ்ய தேச திருத்தலங்களுக்கெல்லாம் சென்று அத்திருத்தலத்து கல்வெட்டுகளை சேகரித்து, வாசித்து, முகநூலில் பதிவிடுவது என்னுடைய ஓய்வு நேரப் பணியாக இருந்து வந்தது. பின்னர் பல்வேறு அமைப்புகள் மற்றும் கல்லூரிகள் நடத்திய கருத்தரங்குகளில் கலந்து கொண்டு என்னுடைய கல்வெட்டுகள் தொடர்பான தகவல்களை சமர்ப்பித்துள்ளேன். ஆற்றுப்படை என்னும் தொல்லியல் சார்ந்த குழுவினர் வெளியிடும் மாத இதழில் மாதம் தோறும் கட்டுரைகள் எழுதி வந்திருக்கின்றேன். என்றும் தொல்லியல் ஆர்வலராக...

முகவுரை

மக்கள் கல்லினாலும், உலோகப் பொருட்களினாலும் இறை உருவத்தை அமைத்து வழிபடுவதற்கு முன்பாகவே மரத்தையும், புற்றுக்களையும், இயற்கையையும் வழிபட்டுள்ளனர். குடைவரைக் கோயில்கள் பல்லவர்கள் காலத்தில் சிறப்பாக வளர்ச்சி பெற்றன. மக்கள் பல்வேறு காலங்களில், பல்வேறு வகைகளில் தங்களால் இயன்ற அளவிலான கோவில்களை ஏற்படுத்தி வழிபாடு செய்துள்ளனர். இன்றும் பல இடங்களில் புற்றுக்களையும், மரங்களையும் தெய்வமாக வழிபடும் நிகழ்வைக் காண்கிறோம். இவ்வழிபாடு அனைத்தும் பழைய வழிபாட்டின் தொடர்ச்சியே ஆகும்.

மரங்களினாலும், செங்கல்களினாலும் கட்டப்பட்டிருந்த பல தளிகளும் அழிவினைக் காணவே அந்தந்தக் காலங்களில் ஆட்சி செய்த மன்னர்கள், அவர்தம் மனைவியர், அரச குடும்பத்தினர், ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்கள், அமைச்சர்கள், அரசுப் பணியில் இருந்தவர்கள், ஊர் செல்வந்தர்கள் எனப் பாகுபாடு இன்றி பல்வேறு தரப்பினரும் கற்றளிகளாக மாற்றினர்.

திருத்தாண்டகம்

திருநாவுக்கரசர் பாரத தேசம் எங்கும் பரவி இருந்த பல திருத்தலங்களைத் தேடிச் சென்று இறைவனை வணங்கிப் பாடல்கள் பாடினார். திருநாவுக்கரசர் பாடிய திருத்தாண்டகத்தில் சேத்திரகோவை, அடைவு திருத்தாண்டகம் போன்றவை பல திருத்தலங்களின் கோர்வையாக அமைந்திருக்கின்றன.

அடைவு திருத்தாண்டகத்திலே[1] ஒரு பாடல்

“பெருக்கு ஆறு சடைக்கு அணிந்த பெருமான் சேரும் பெரும் கோயில் எழுபதினோடு எட்டும் மற்றும்

கரக்கோயில் கடி பொழில் சூழ் ஞாழற்கோயில் கருப்பறியல் பொருப்பு அனைய கொகுடிக்கோயில்

இருக்கு ஓதி மறையவர்கள் வழிபட்டு ஏத்தும் இளங்கோயில் மணிக்கோயில் ஆலக்கோயில்

திருக்கோயில் சிவன் உறையும் கோயில் சூழ்ந்து தாழ்ந்து இறைஞ்ச

தீவினைகள் தீரும் அன்றே" (6.71.5)

இப்பாடலில் பெருங் கோயில்கள் 78 இருப்பதாக நாவுக்கரசப் பெருமான் குறிப்பிடுகிறார். இன்றும் பெருங்கோயில்களை நம்மால் காண இயலுகிறது. அப்பர் காலத்துப் பெருங்கோயில்கள் எவ்வாறு இருந்தன என்பதை நாம் அறிய இயலவில்லை. திருநாவுக்கரசர் பெருங் கோயில், கரக்கோயில், ஞாழற்கோயில், கொகுடிக் கோயில், இளங்கோயில் என்றெல்லாம் கோயில்களின் பல வகைகளை திருத்தாண்டகத்திலே பாடி வைத்திருக்கிறார்.

பல்வேறு திருத்தலங்கள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் பாடிய காலங்களுக்கு முன்பும் வழிபாட்டில் இருந்திருக்கின்றன. இப்பெருமானர்கள் ஒவ்வொரு ஊராகச் சென்று அந்த திருக்கோயிலில் வீற்றிருக்கும் இறைவனைப் பாடித் துதித்து வழிபட்டு வந்தனர். இவ்வளவு கோயில்களும் இப்பெருமானார்கள் வாழ்ந்த காலத்திலேயே சிறப்புற்று இருந்தன. பெருங் கோயில்கள், சிறு கோயில்கள் என்று வகைப்படுத்தப்பட்டு இருந்தாலும் பல தேவாரத் திருத்தலங்கள் மூன்றாம் குலோத்துங்கச் சோழர் காலம் வரையில், செங்கல் தளிகளாக இருந்து கற்றளிகளாக மாற்றப்பட்ட வரலாற்றினையும் பல திருத்தலத்துக் கல்வெட்டுகள் வாயிலாக நாம் அறிகின்றோம்.

கோச்செங்கட் சோழன் எழுப்பிய கோயில்கள்

முற்காலச் சோழர்களில் முக்கியமானவராகக் கருதப்படும் கோச்செங்கட் சோழ மன்னர் 70 மாடக் கோவில்களை காவிரிக் கரையில் கட்டினார். யானை உட்புகா வண்ணம் கட்டப்பட்ட ஒருவகை சிறப்பு கோவில்களே மாடக் கோயில்களாகும். இவர் எழுப்பிய மாடக் கோவில்கள் பற்றி திருமங்கையாழ்வார் தன்னுடைய பாசுரத்திலே குறிப்பிடுகின்றார். திருநறையூர் பதிகத்திலே ஒவ்வொரு பாசுரத்திலும் கோச்செங்கட்ச் சோழனைப் பற்றிக் குறிப்பிடும் திருமங்கையாழ்வார் பாசுரப் பயன் எனும் இறுதிப் பாசுரத்தில் எண் தோள் ஈசருக்கு கோச்செங்கட் சோழன் கோயில் எழுப்பினார் என்ற வரலாற்றுச் செய்தியைப் பதிவு செய்கின்றார். அதிக அளவிலே மாடக்கோயில்களை எழுப்பி, இன்றும் உயிர்ப்புடன் இருக்கக்கூடிய அதிக கற்றளிகள் செய்த அரசராக வரலாற்றில் இன்றும் கோச்செங்கட்சோழர் உள்ளார்.

சோழப் பேரரசில் விஜயாலய சோழருக்குப் பிறகு ஆட்சிப் பொறுப்பேற்ற பல சோழ மன்னர்களும் பல திருக்கோவில்களை கற்றளிகளாக மாற்றினர். புதியதாக கோவில்கள் எழுப்புவதைக் காட்டிலும்தேவாரப் பாடல் பெற்ற பல திருத்தலங்களின் நிலையினை மாற்ற பல்வேறு காலங்களிலும் முயற்சி மேற்கொண்டுள்ளனர். இவர்களுள் செம்பியன் மாதேவி அம்மையாரின் திருப்பணி மிகவும் போற்றத்தக்கது ஆகும். இவ்வம்மையார் தமிழகம் முழுவதும்

இருந்த பல திருத்தலங்களுக்குத் திருப்பணி செய்துள்ளார். பல திருத்தலங்களை கற்றளிகளாக மாற்றிய பெருமைக்கும் சொந்தக்காரராக உள்ளார்.

முதலாம் ஆதித்த சோழர் காவிரியின் இரு கரைகளிலும் நூற்றுக்கும் மேற்பட்ட திருக்கோயில்களை எழுப்பியதாக செப்பேடுகள் கூறுகின்றன. காலப்போக்கில் ஏற்பட்ட பல அழிவுகளினால் பல திருத்தலங்களில், எவ்விதக் கல்வெட்டும் காணப்படாததால், ஆதித்த சோழர் எழுப்பிய பல திருக்கோவில்களை கல்வெட்டுகள் மூலம் அடையாளம் காண இயலாதவாறு உள்ளது.

இலம்பையங் கோட்டூர்

காஞ்சிபுரம் மாவட்டம் சிவபுரத்திற்கு அருகில் இருக்கக்கூடிய ஊர் இலம்பையங்கோட்டூர். இந்த திருக்கோயில் முதலாம் இராஜாதிராஜரின் பன்னிரெண்டாவது ஆட்சி ஆண்டில் (கிபி 1030) குணுக்கரும்பாத்து பண்டாரிக்கிழான் சிவசரணாலையர் என்னும் சிவபாதசேகர மூவேந்த வேளாண் என்பவர் இத்திருக்கோயிலைக் கற்றளியாக மாற்றியுள்ளார். இத்திருக்கோயிலை சிவசரணாலயரின் ஆணைக்கிணங்க கற்றளியாக செய்து கொடுத்தவர் திருவாலங்காடு மார்க்கண்டேயன் கூழப்பிடாரன் ஆவார். சிவசரணாலையர் என்னும் சிவபாதசேகரர் மூவேந்த வேளாண் பட்டம் பெற்று அரசின் உயர் பதவியில் இருந்துள்ளார்.

திருவைகாவூர்

செங்கல் கட்டிடமாகவோ, மரத்தால் கோவில்களை அமைத்திருந்தாலும் அவர்கள்பெரும்பாலானதிருக்கோயில்வாசல்கருங்கற்களாலேஅமைக்கப்பட்டு இருந்தது என்றும், அந்த கருங்கற்களில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகளை தான் பின்நாளில் வந்த அரசர்கள் பெருங் கோவிலாக எடுத்துக்கட்டும் பொழுது படி எடுத்து, படி எடுக்கப்பட்ட கால எழுத்து அமைதியில் எழுதி அதே திருக்கோயிலில் கல்வெட்டாய் அமைத்து பாதுகாத்து வைத்தார்கள் என்ற செய்திகளையும் பல திருத்தலத்து கல்வெட்டுகள் வாயிலாக அறிய முடிகிறது.

திருவைகாவூர் திருத்தலத்துக் கல்வெட்டிலும் இவ்வாறு படியெடுக்கப்பட்டகல்வெட்டுகளைக்காணமுடிகிறது.திருவைகாவூர்திருத்தலம் திருஞானசம்பந்தரால் பாடல் பெற்றிருந்தாலும், முதலாம் குலோத்துங்க சோழரின் 40 ஆவது ஆட்சி ஆண்டில் (கிபி 1110) தான் பெரிய மண்டபங்கள் எடுப்பிக்கப் பெற்று திருக்கோவில் கற்றளியாக மாற்றப்பட்டிருக்கின்றது.

நந்திவர்மன் காலத்தில் இத்திருக் கோவில் சிறிய அளவிலான திருப்பணிகளைக் கண்டிருக்க வாய்ப்புள்ளது. அதனால் தான் நந்திவர்மன் காலத்து கல்வெட்டு இத்திருக்கோயிலில் பழைய கல்வெட்டாக இருந்து அது

படி எடுக்கப்பட்டு திருக்கோயிலில் வைக்கப்பட்டுள்ளது. இது கல்வெட்டு படி என்று சோழர்கள் காலத்தில் பொறிக்கப்பட்ட கல்வெட்டின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ளது.

“இஷ்டிகை ஜீரணித்தமையில்” என்ற வாக்கியத்தின் மூலம் இத்திருத்தலம் செங்கல் கட்டிடமாக இருந்தது என்பது உறுதி செய்யப்படுகின்றது. இஷ்டிகை என்ற வார்த்தை பல இடங்களில் செங்கல் கட்டிடத்திற்கு பயன்படுத்தப்பட்ட வார்த்தை. சில திருத்தலங்களில் இட்டிகை இழிச்சிவிச்சு என்ற வார்த்தைகள் உபயோகப்படுத்தப்பட்டு இருக்கின்றது.

முதலாம் குலோத்துங்கரின் 40 ஆவது ஆட்சி ஆண்டில் இந்த செங்கல் கட்டிடம் பாழ் பட்டதால் செங்கல் கட்டிடத்திற்கு மாற்றாக கற்களால் கோயில் எழுப்ப வேண்டும் என்று ராஜராஜ வளநாட்டு பரவை சுற்றுப்பூண்டி உடையான் சூரியன் பவழக் குன்றினரான வன்னாடு உடையார் விண்ணப்பம் செய்ய இந்த செங்கல் கட்டிடம் அழிக்கப்பட்டு கருவறையானது கல்லால் எழுப்பப்படுகிறது. அது மட்டுமன்றி இடைக்கட்டுஇ திருமண்டபம் குலோத்துங்கன் காலத்தில் செய்து வைக்கப்படுகிறது. இக்கல்வெட்டின் மூலம் குலோத்துங்க சோழரின் 40 ஆவது ஆட்சி ஆண்டில் தான் திருவைகாவூர் திருத்தலம் கற்கோயிலாக மாற்றப்பட்ட செய்தி அறிய வருகிறது. இத்திருப் பணிகளை செய்து வைத்தவர் ஸ்ரீமயேஸ்வரர் திருவெண்காடுடையார் திருச்சிற்றம்பலம் உடையாரான தந்தை விரத முடித்தார் என்பவர் ஆவார்.

கல்வெட்டிலேயே இத்திருக்கோவில் திருப்பணிகளை செய்தவர் யார், கோயில் பணிகளை முன் நின்று நடத்தியவர் யார் என்பது போன்ற செய்திகளை நாம் அறிந்து கொள்ள முடிகிறது. தேவார மூவர் காலத்தில் இருந்த திருத்தலம் பல நூறு ஆண்டுகளுக்குப் பிறகு கற்கோயிலாக முதலாம் குலோத்துங்கன் காலத்தில் மாற்றப்பட்டு இன்றும் நாம் வழிபடக்கூடிய அளவு கம்பீரமாய் நிற்கிறது.[2]

அரகண்டநல்லூர்

அரகண்டநல்லூர் என்று அழைக்கப்படும் அறையணி நல்லூர் திருத்தலத்தில் மூன்றாம் குலோத்துங்கச் சோழரின் 32 ஆவது ஆட்சி ஆண்டில் (கிபி 1210) பாண்டி மண்டலத்து வட வெள்ளாற்றுக் கூற்றத்தைச் சார்ந்த ஆத்தம்பூர் என்னும் ஊரில் உள்ள ஆத்தம்பூருடையான் திருக்காளத்தி உடையான் ஆடுவான் என்ற பட்டண சுவாமி எனும் வணிகர், இத்திருத்தலத்து ஒப்பொருவரும் இல்லாத நாயனார் திருக்கோயிலை கற்றளியாக செய்வித்துள்ளார்.

மூன்றாம் குலோத்துங்க சோழரின் காலத்துக்கு முற்பட்ட கல்வெட்டுகளும் இத்திருத்தலத்தில் காணப்படுகின்றன. இந்த திருத்தலம் பராமரிப்பு இன்றியோ அல்லது காலத்தால் பாழ்பட்டோ போயிருக்கலாம். பின்னர் மூன்றாம் குலோத்துங்கச் சோழர் காலத்தில் திருப்பணி செய்யப்பட்டு

இருக்கலாம். இரண்டாம் குலோத்துங்க சோழர், இரண்டாம் இராசராசசோழர் ஆகியோர் காலத்து கல்வெட்டுகள் திருக்கோவிலில் காணப்படுவதில் இருந்து, இத்திருக்கோவில் மூன்றாம் குலோத்துங்க சோழரின் காலத்திற்கு முன்னமே கற்றளியாக வழிபாட்டில் இருந்ததையும் அறிய முடிகிறது.

ஆத்தம்பூர் என்னும் பகுதி தற்பொழுது புதுக்கோட்டை மாவட்டத்தில் அமைந்துள்ளது. இப்பகுதியில் தான் வெள்ளாறு ஓடுகிறது. தற்போதைய புதுக்கோட்டை மாவட்டத்தைச் சார்ந்த ஒரு பாண்டி நாட்டு வணிகர் அரகண்டநல்லூரில் கற்றளி ஏற்படுத்தி உள்ள நிகழ்வு நாட்டு எல்லைகள் கடந்து இறைப்பணி செய்ததற்கு ஒரு உதாரணமாக உள்ளது. தென் தமிழ்நாட்டில் ஓடும் வெள்ளாறு, புதுக்கோட்டை மாவட்டம் மணல்மேல்குடி அருகில் கடலில் கலக்கிறது. இப்பகுதியில் அமைந்துள்ள ஊரே ஆத்தம்பூர் ஆகும். இந்த ஆற்றின் வடக்கு கரையில் ஆத்தம்பூர் அமைந்துள்ளது.

தமிழகத்தின் வடபகுதியிலேயே காணப்படக்கூடிய மூன்றாம் ராஜேந்திர சோழரின் ஒரு கல்வெட்டு அரகண்டநல்லூரில் காணப்படுகிறது. இவரின் நான்காவது ஆட்சி ஆண்டில் (கிபி 1249) நித்த வினோத வளநாட்டு கழார் நாட்டு குருகாட்டினைச் சேர்ந்த ஜெயமான் குருகாடு கிழான் அத்தி திருஉண்ணாமலை உடையான் இருங்கோளன் என்பவர் அரகண்டநல்லூர் ஒப்பொருவரும் இல்லாத நாயனார் கோயில் திருக்காமக்கோட்ட நாச்சியார் ஆன பொன்னையாருக்கு திருக்கற்றளி, திருமண்டபம், திருமாளிகை ஆகியவற்றை எடுப்பித்து வழிபாட்டிற்குத் தேவையான நிவந்தங்களுக்குப் பொன்னையார் நல்லூர் என்னும் தேவதானத்தையும் வழங்கி உள்ளார். நித்த வினோத வளநாடு என்பது தஞ்சாவூரை ஒட்டி உள்ள பகுதியாகும். மூன்றாம் ராஜேந்திர சோழர் அவரின் தந்தையார் மூன்றாம் ராஜராஜ சோழன் ஆட்சியில் இருக்கும் பொழுதே அரசு உரிமை பட்டம் பெற்று சமகாலத்தில் ஆட்சி செய்த சோழ மன்னர்கள் ஆவர். மூன்றாம் ராஜேந்திர சோழனின் பெரும்பாலான கல்வெட்டுகள் தமிழகத்தின் வட பகுதியில் காணப்படுகின்றன.[3]

சித்தலிங்கமடம்

விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் வட்டத்தில், சித்தலிங்கமடத்தில் வியாக்கரபாதீஸ்வரர் திருக்கோயில் அமைந்துள்ளது. புலிப்பகவர் திருக்கோவில் என்றும் அழைக்கப்படுகிறது. இந்த திருக்கோயிலை முதலாம் குலோத்துங்க சோழரின் அமைச்சரும், தொண்டை மண்டல மணவில் பகுதியில் மன்னருமான மானாவதாரன் என்ற சிறப்பு பெயர் கொண்ட சபாநர்த்தகர் என்பவர், ஆற்றங்கரையில் தென்னை மரங்கள்சூழ திருச்சுற்றையும், விமானமும் கொண்டதாக கல்லாலான கோயிலை வியாக்கிரபாத முனிவரால் வணங்கப்பெற்ற சிவபெருமானுக்கு எடுப்பித்தார் என்று இத்திருக்கோயில் கல்வெட்டு ஒன்று கூறுகிறது. திருக்கோவிலில் முதலாம் பராந்தகர், ராஷ்டிரகூடர், முதலாம் இராசராசன், வீரராசேந்திரன் ஆகியோரது கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவர்கள் முதலாம் குலோத்துங்க சோழனின்

சோழனுக்கு முன்னர் ஆட்சி செய்தவர்கள். எனவே இத்திருக்கோவில் முதலாம் குலோத்துங்க சோழர் காலத்தில் திருப்பணி கண்டுள்ளது என்று அறியலாம். கல்வெட்டுகள் அனைத்தும் எழுத்த அமைதியில் முதலாம் குலோத்துங்கன் கால எழுத்தமைதியோடு ஒத்துப் போவதால் இவருடைய காலத்தில் மீண்டும் எழுதப்பட்டு கோவிலில் வைக்கப்பட்டுள்ளது என்பது அறிஞர்கள் கருத்தாகும்.[4,5]

திருமுண்டீஸ்வரம்

முதலாம் பராந்தகச் சோழரின் ஆட்சிக் காலத்தில் சோழ நாட்டின் வட எல்லையை பாதுகாக்கும் பொருட்டு ராஜாதித்த சோழர், சோழ நாட்டின் வடஎல்லையான திருமுனைப்பாடியை ஒட்டிய பகுதிகளில் படையுடன் தங்கி இருந்தார்கள். அவர் தங்கியிருந்த காலத்தில் அப்பகுதியைச் சுற்றியுள்ள பல திருக்கோவில்கள் நிவந்தங்கள் பெற்றன. அவற்றில் ஒரு கோயில் தான் விழுப்புரம் மாவட்டத்தில் இருக்கக்கூடிய கிராமம் என்று அழைக்கப்படும் திருமுண்டீஸ்வரம் திருத்தலமாகும். இந்த திருத்தலத்தில் இறைவன் ஆற்றுத்தளி பெருமான் அடிகள் என்று அழைக்கப்படுகிறார். இந்த திருத்தலம் முதலாம் பாராந்தகச் சோழரின் 36 ஆவது ஆட்சி ஆண்டில் கற்றளியாக மாற்றப் பெற்றுள்ளது. பராந்தகச் சோழரின் மகனான ராஜாதித்த தேவரின் பெரும்படையில் இருந்த மலை நாட்டைச் சேர்ந்த நந்திக்கரை புத்தூர் வெள்ளங் குமரன் என்பவர் இத்திருக்கோயிலைக் கற்றளியாக அமைத்துள்ளார்.[6]

மதுராந்தகம்

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தில் இருக்கக்கூடிய வெண்காட்டீஸ்வரர் திருக்கோவில் முதலாம் குலோத்துங்கச் சோழரின் 15 ஆம் ஆட்சியாண்டில் கற்றளியாக எடுக்கப்படுகிறது. திருவெண்காடு மகாதேவர் திருக்கோயிலை கற்றளியாக எடுப்பித்தவர் முதலாம் குலோத்துங்க சோழரின் சேனாதிபதியாக இருந்த செங்கேணி சாத்தன் சோழன் என்பவர் ஆவார். இவர் இந்த திருக்கோவிலை கற்றளியாக எடுத்தது மட்டுமின்றி, வழிபாட்டிற்காக மதுராந்தக சதுர்வேதி மங்கல சபையாரிடம், 2000 காசுகள் கொடுத்து அப்பகுதியில் இருக்கக்கூடிய நிலங்களை வாங்கி கோயிலுக்கு கொடையாகக் கொடுத்துள்ளார்.[7]

திருவாரூர் அசலேஸ்வரம்

திருவாரூர் திருக்கோயில் சோழர்கள் ஆட்சியில் சிறப்புற விளங்கியது. சுந்தரமூர்த்தி நாயனார் இத்திருக் கோவிலில் தான் திருத்தொண்டர் தொகை பாடி அருளினார். நாயன்மார்கள் பலரோடும் தொடர்புடைய இந்த திருத்தலம் சோழர்கள் காலத்தில் கற்றளியாக எடுப்பிக்கப்பட்டது. முதலாம் இராசராச சோழரின் ஏழாவது ஆட்சி ஆண்டில் (கிபி 992) திருவாரூர் திருத்தலத்திற்கு உள்ளேயே இருக்கக்கூடிய அசலேஸ்வரம் எனும் ஆரூர் அறநெறி திருக்கோயில் ஆனது கற்றளியாக செம்பியன் மாதேவியரால் எடுப்பிக்கப்படுகிறது.

"...திருவரநெறி ஆள்வார் கோயில் திருக்கற்றளி எழுந்தருளுவிச்ச உடையபிராட்டியார் ஸ்ரீ செம்பியன் மகாதேவியார்..." என்று கல்வெட்டில் கற்றளியாக்கப்பட்ட வரலாற்றுச் செய்தி பதிவு செய்யப்படுகிறது. மேலும் திருக்கோயில் வழிபாட்டிற்காகவும் முதலீடு செய்து செய்துள்ளார்.

வீதி விடங்கப் பெருமான்

திருவாரூரின் நாயகர் இத்திருக்கோவிலின் வீதி விடங்கப் பெருமானார் ஆவார். முதலாம் இராஜேந்திர சோழரின் இருபதாவது ஆட்சி ஆண்டில் (கிபி 1032) இத்திருக்கோவில் வீதி விடங்க பெருமாள் என்னும் தியாகராச சுவாமி திருக்கோயில் கருங்கற்கோயிலாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. அதற்கு முன்னர் இப்பெருமானின் திருக்கோயில் செங்கற் கட்டுமானமாக இருந்ததாகவும், இம்மன்னரின் அணுக்கியரான பரவை நங்கையார் என்பவர் இத்திருக்கோயிலைக் கற்றளியாக மாற்றி அமைத்து, 20643 கழஞ்சு எடை உள்ள தகடுகளால் கருவறையின் விமானத்தையும்,சுற்றுச்சுவர்களையும் போர்த்தியுள்ளார் எனவும், செப்புத் தகடுகளால் கதவுகளையும், மண்டபத் தூண்களையும்அலங்கரித்தார்எனகல்வெட்டுகள்வாயிலாகஅறியஇயலுகிறது. இது மட்டுமன்றி பல நிவந்தங்களையும் திருக்கோவிலுக்கு அளித்துள்ளார். இக்கல்வெட்டு திருவாரூர் திருத்தலத்து வரலாற்றில் முக்கியத்துவம் பெற்ற கல்வெட்டாக திகழ்கின்றது.[8,9]

திருக்கோடிக்காவல்

திருக்கோடிக்காவல் திருத்தலத்தில் நந்திவர்மர், நிருபதுங்கவர்மர், இளங்கோ முத்தரையர், மாறன் சடையன் எனப் பல மன்னர்களுடைய காலத்திய கல்வெட்டுகள் காணப்பட்டாலும், உத்தமச் சோழரின் 11 வது ஆட்சி ஆண்டில் உத்தமசோழரை திருவயிறு வாய்த்த மழவரையர் மகளாரான செம்பியன் மகாதேவியார் இத்திருக்கோயில் கற்றளியாக எழுப்பப்பட்டுள்ளது. இவர் காலத்திற்கு முன்னதாக இத்திருக்கோவிலில் இருந்த கல்வெட்டுகள் பல இடத்தில் கிடந்ததாகவும், இவை அனைத்தையும் ஒன்று சேர்த்து ஸ்ரீ விமானம் எனும் கருவறையில் இவர் காலத்தில் மீட்டெழுதப்பட்டது எனவும் உத்தமசோழரின் காலத்துக் கல்வெட்டுகள் குறிப்பிடுகிறது. இத்திருத்தலத்தில் காணப்படும்பலகல்வெட்டுகளிலும்பழங்கல்படிஎனும்சொல்காணப்படுகிறது. "இது பழைய கல் படி, இந்த ஸ்ரீ விமானத்திலே ஏற வெட்டினமையில் முன்னிவாஜகம் வெட்டிக்கிடந்த தனிக்கல்லால் உபயோகம் இல்லாமையால் அது தவிர்ந்தது"என்ற வார்த்தை ஒவ்வொரு கல்வெட்டிலும் காணப்படுவதில் இருந்து, இத்திருக்கோயிலுக்கு முன்னவர்கள் செய்த அறப்பணி அனைவரும் அறிய வேண்டும் என்ற உயர்ந்த சிந்தனையாலே செம்பியன் மாதேவியார் இதுபோன்ற ஒரு ஏற்பாட்டை செய்துள்ளது திருக்கோடிக்கா திருத்தலத்து கல்வெட்டுகளின் சிறப்பு ஆகும்.[10]

திருமணஞ்சேரி

இன்று திருமணப் பரிகாரத்தலமாகக் கருதப்படும் இந்த திருக்கோயில் இராசராசசோழரின் ஆறாவது ஆட்சி ஆண்டில் (கிபி 991) செம்பியன் மாதேவியரால் கற்றளி ஆக்கப்பட்டுள்ளது. வடகரை குறுக்கை நாட்டு பிரம்மதேயம் திருமணஞ்சேரி மகா தேவருடைய பீடிலிகைவாரி ஸ்ரீ உத்தமசோழ தேவர் திருவயிறு வாய்த்த உடையபிராட்டியார் அருளிச்செய்ய ஆரூரன் கம்பன் ஆகிய திருமணஞ்சேரி திருக்கற்றளி பிச்சன் என்பவர் இதக்கோயிலைக் கற்றளியாக்கியுள்ளார். செம்பியன் மாதேவியார் பணிக்க பிச்சன் ஆரூரன் கம்பன் திருக்கற்றளி எடுப்பித்தார் என்ற செய்தி மேலும் ஒரு கல்வெட்டு மூலம் உறுதிப்படுத்தப்படுகிறது. மேலும் இவர் திருநந்தா விளக்கிற்கு எண்ணெய்க்கு ஈடாக நெல், திருப்பதிகம் பாடுபவர்களுக்கு நிவந்தம், திருக்கோவில் திருவமிருதுக்கு நெல் என்று பல்வேறு கொடைகளையும் கொடுத்துள்ளார்.[11]

மேலத்திருமணஞ்சேரி

மேலத்திருமணஞ்சேரி என்று தற்பொழுது அழைக்கப்படக்கூடிய மற்றொரு திருத்தலம் திரு எதிர்கொள்பாடி என்னும் தேவாரத் தலமாகும். இத்திருத்தலமும் மூன்றாம் குலோத்துங்க சோழர் காலத்தில் கற்றளியாக செய்யப்பட்டுள்ளது. மூன்றாம் குலோத்துங்க சோழரின் மூன்றாவது ஆட்சி ஆண்டில் (கிபி 1181) விருதராஜ பயங்கர வளநாட்டு குறுக்கை நாட்டு உடையார் திரு எதிர்கொள்பாடி உடையாருக்குத் திருக்கற்றளியைச் செய்தவர் கீரனூர் கிழவன் அரசுக்கடியான் திருநீலகண்டன் சேரமான் தோழன் ஆவார். இவர் திருக்கோவிலைக் கற்றளியாக ஆக்கி இத்திருக்கோவிலுக்கு சந்தி விளக்கும் கொடையாகக் கொடுத்துள்ளார். திருமணஞ்சேரியில் இருக்கக்கூடிய திருக்கோயில் இராசராச சோழர் காலத்திலும், அருகில் இருக்கக்கூடிய மேலத் திருமணஞ்சேரி திருக்கோயில் மூன்றாம் குலோத்துங்க சோழரின் காலத்திலும் கற்றளியாக எடுக்கப்பட்டுள்ளது. இரண்டு திருத்தலங்களும் தேவார திருத்தலம் ஆகும்.[12]

திருவக்கரை

விழுப்புரம் மாவட்டம் திருவக்கரை சந்திரமவுலீஸ்வரர் திருக்கோயிலில் ராசராச சோழரின் 16 ஆவது ஆட்சியாண்டில் (கிபி1000) செம்பியன் மாதேவியார் திருவக்கரை சிவலோகமுடைய பரமசுவாமிகளுக்கு கற்றளி எடுப்பித்தார். மேலும் திருக்கோவிலுக்குப் பல நிவந்தங்களையும் அதே ஆண்டில் அளித்துள்ளார். குலோத்துங்கச் சோழரின் சில கல்வெட்டுகள் இத்திருத்தலத்து இறைவரை திருக்கற்றளி மகாதேவர் என்று குறிப்பிடுகின்றன.[13]

பெருமுக்கல்

திண்டிவனம் அருகில் உள்ள பெருமுக்கல் முக்தியாஜல ஈஸ்வரர் திருத்தலத்தை விக்கிரமச் சோழரின் மூன்றாவது ஆட்சி ஆண்டில் (கிபி 1121) ராஜாதிராஜ வளநாட்டு பொய்யில் கூற்றத்தைச் சார்ந்த கோனூருடையான்

அரையன் காக்குநாயகன் என்னும் கனகராயன் என்பவர் கற்றளியாகச் செய்து கொடுத்துள்ளார். கற்றளியாக எழுப்பியது மட்டுமின்றி திருமடைவிளாகம் மற்றும் திரு நந்தவனங்களும் திருக்கோவிலுக்கு அமைத்துக் கொடுத்துள்ளார்.[14]

திருத்தணி

திருத்தணி வீரட்டானேஸ்வரர் திருக்கோயில் பல்லவ மன்னன் அபராசிதவர்மர் காலத்தில் நம்பி அப்பி என்பவரால் கற்றளியாக எழுப்பப்பட்டுள்ள செய்தி இத்திருக்கோவில் கல்வெட்டில் உள்ள வெண்பா மூலம் அறியப்படுகிறது.[15]

வழுவூர்

தற்பொழுது மாயவரத்திற்கு அருகில் அமைந்திருக்கக் கூடிய வழுவூரில் வீரட்டானமுடையார் திருக்கோயில் அமைந்துள்ளது. இது அட்ட வீரட்ட தலங்களில் ஒன்றாகும். இந்த திருத்தலத்தில் வடக்குப் பகுதியில் திருப்பள்ளியறை நாச்சியார் என்று சொல்லக் கூடிய அம்மன் சன்னதியை மூன்றாம் குலோத்துங்க சோழரின் ஐந்தாவது ஆட்சி ஆண்டில் (கிபி 1183) முடிகொண்ட சோழ வளநாட்டு துண்டநாட்டு துண்டனுடையாள் ஏகவாசகன் உலண்டு வித்த பெருமாளான வாணக்கோவரையர் என்பவர் கற்றளியாக ஆக்கிக் கொடுத்துள்ளார். மேலும் அம்மையின் சன்னதிக்கு பூசை மற்றும் இதர செலவினங்களுக்கு தானமும் அளித்துள்ளார்.[16]

செம்பியன் மாதேவி

திருப்பணிச் செம்மல் செம்பியன் மாதேவியார் சோழ நாட்டில் எழுப்பிய கற்றளிகள் ஏராளம். அவற்றுள் நாகப்பட்டினம் மாவட்டம் செம்பியன் மாதேவி எனும் ஊரைச் சேர்ந்த கைலாயமுடையார் திருக்கோயிலும் ஒன்றாகும். இந்த திருக்கோயில் உத்தமசோழர் காலத்தில் செம்பியன் மாதேவியாரால் கற்றளியாக எழுப்பப் பெற்று, உத்தமசோழரின் மனைவியான திரிபுவனமாதேவியால் பல்வேறு நிவந்தங்களைப் பெற்று வழிபாட்டில் இருந்துள்ளது. செம்பியன் மாதேவியார் காலத்துக் கோவில்களில் அர்த்தமண்டப தேவகோட்டங்களிலும், கருவறை கோட்டங்களிலுமாக 9 தெய்வ உருவங்கள் அமைக்கப்பெறும் நடைமுறையினைக் காணலாம். அதே வகையான அமைப்பை இங்கு காண இயலுகிறது.[17]

அந்தநல்லூர்

திருச்சி மாவட்டம் திருவரங்கம் வட்டம் அந்தநல்லூர் வடதீர்த்தநாத சுவாமி திருக்கோயில் முதலாம் பராந்தகச் சோழரின் 11 வது ஆட்சி ஆண்டில் (கிபி 918) செம்பியன் இருக்குவேள் எனும் பூதி பராந்தகன் என்பவரால் கற்றளியாக எடுப்பிக்கப் பெற்றுள்ளது. பராந்தகச் சோழரின் காலத்தில் இத்திருத்தலத்து இறைவன் திருவாலந்துறைப் பெருமான் என்று அழைக்கப்பட்டுள்ளார்.[18]

திருநாவலூர்

மதிரை கொண்ட கோப்பரகேஸரி என்று தொடங்கும் முதலாம் பராந்தகச் சோழரின் 28 வது ஆட்சி ஆண்டில் (கிபி 935) திருநாவலூர்

இறைவருக்கு கற்றளி செய்விக்கப்பட்டுள்ளது. இக்கற்றளியை செய்வித்தவர் இராசாதித்த தேவரின் தாயாரும், பராந்தகரின் பட்டத்தரசியுமான கோக்கிழான் அடிகள் ஆவார். இவருடைய காலத்தில் இத்திருத்தலம் திருமுனைப்பாடி நாட்டின் கீழ் இருந்துள்ளது. இத்திருத்தலம் திருத்தொண்டீஸ்வரம் என்று அழைக்கப்பட்டுள்ளது.[19]

எறும்பூர் கடம்பவனேஸ்வரர் திருக்கோயில்

சிதம்பரம் அருகில் உள்ள எறும்பூர் கடம்பவனேஸ்வரர் திருக்கோயில் முதலாம் பராந்தகச் சோழரின் 28 வது ஆட்சி ஆண்டில் (கிபி 935) இருங்கோளன் குணவன் அபராஜிதன் என்பவரால் கற்றளியாக எடுப்பிக்கப்பட்டுள்ளது. இவருடைய காலத்தில் இது சிறுதிருக்கோயில் என்று அழைக்கப்பட்டுள்ளது. திருக்கோவிலுக்கு திருசென்னடை, அர்ச்சனை ஆகியவற்றிற்கு நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது.[20]

திருவாவடுதுறை

முதலாம் பரந்தகச் சோழரின் 38 வது ஆட்சி ஆண்டில் (கிபி 945) திருவாவடுதுறை மாசிலாமணீஸ்வரர் திருக்கோவில் கற்றளியாக எழுப்பப் பெற்றுள்ளது. இத்திருப்பணிக்கு பராந்தகச் சோழர் 500 கழஞ்சு பொன் தானமாகக் கொடுத்துள்ளார்.[21]

மீஞ்சூர்

உத்தமச் சோழரின் காலத்தில் மீஞ்சூர் வரதராச பெருமாள் திருக்கோவில்எகேசவன் கருகைக்கோன் என்பவரால் எடுப்பிக்கப் பெற்றுள்ளது. இக்கல்வெட்டில் கொடுக்கப்பட்டுள்ள முன்நாண்டில் என்பதை மூன்றாம் ஆண்டு (கிபி 974) என்று அறிஞர் பெருமக்கள் கூறியுள்ளனர்.[22]

கோனேரிராஜபுரம்

இன்று கோனேரிராஜபுரம் என்று அழைக்கப்படும் திருநல்லம் திருத்தலத்தினை உத்தமச் சோழரின் எட்டாவது ஆட்சி ஆண்டில் (கிபி 979) செம்பியன் மாதேவியார் தம் கணவரின் நினைவாக, கண்டராதித்தன் என்னும் திருநாமத்தால் திருக்கற்றளியாக எழுப்பினார். திருக்கற்றளியாக எழுப்பித்து இத்திருக்கோவிலுக்குப் பல நிவந்தங்கள் கொடுக்கப்பெற்ற இக்கல்வெட்டானது வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த கல்வெட்டாகக் கருதப்படுகிறது.[23]

திருவாலந்துறை

உத்தமசோழரின் ஒன்பதாவது ஆட்சி ஆண்டில் (கிபி 980) பழுவூரை மறவன் கண்டன் என்பவர் ஆட்சி செய்து உள்ளார். உத்தமசோழரின் ஒன்பதாவது ஆட்சியாண்டில் மறவன் கண்டரின் ஆணைக்கிணங்க கீழப்பழுவூரில் உள்ள திருவாலந்துறை சிவன் கோவில் திருக்கற்றளியாக எழுப்பப்பட்டுள்ளது. இப்பணியைச் செய்வித்தவர் மங்கல நாட்டு மங்கலத்து கவிசியன் நக்கன் மாறப்பிரான் என்னும் நம்பி ஆருரன் ஆவார். மேலும் இவர்

இத்திருக்கோவிலுக்கு 20 ஆடுகளைக் கொடையாக வழங்கி தயிர் அமுது செய்வதற்கும் ஏற்பாடு செய்துள்ளார்.[24]

கோவிந்தபுத்தூர்

அரியலூர் மாவட்டம் கோவிந்தபுத்தூரில் அமைந்துள்ள கங்கா ஜடாதீஸ்வரர் திருக்கோவில் உத்தமசோழரின் காலத்தில், அவருடைய பத்தாவது ஆட்சி ஆண்டில் (கிபி 981) குவலாளமுடையான் அம்பலவன் பழுவூரன் ஸ்ரீ விக்கிரம சோழ மாராயர் என்பவரால் கற்றளியாக எழுப்பப் பெற்றுள்ளது.[25]

விருத்தாசலம்

உத்தமச் சோழரின் 12வது ஆட்சி ஆண்டில் (கிபி 983) விருத்தாசலம் பழமலைநாதர் திருக்கோவிலில் ஸ்நான மண்டபம், கோபுரம், சுற்றாலை, பரிவார கோயில்கள் ஆகியவை பெரிய சோழனார் எனும் பராந்தக தேவரின் மகனாரான கண்டராதித்த தேவரின் தேவியாரும், மழபெருமான் அடிகளின் மகளாருமான செம்பியன் மாதேவியரால் எடுக்கப்பெற்றது.[26]

திருக்குருகாவூர் வெள்ளடை

சீர்காழிக்கு அருகில் அமைந்துள்ள திருக்குருகாவூர் வெள்ளடை என்னும் தேவாரத் திருத்தலமாகிய வெள்ளடைநாதர் திருக்கோயில் ஆனது உத்தமச் சோழரின் 13 ஆவது ஆட்சிக்காலத்தில் (கிபி 984) செம்பன் அருளன் உத்தமநிதி என்னும் உத்தமச் சோழ மூவேந்த வேளாளரால் கற்றளியாக எழுப்பப் பெற்று பல்வேறு நிவந்தங்களையும் பெற்றுள்ளது.[27]

தேவார மூவர் காலத்தில் இருந்த திருத்தலம் பல நூறு ஆண்டுகளுக்குப் பிறகு கற்கோயிலாக மாற்றப்பட்டு இன்றும் நாம் வழிபடக்கூடிய அளவு கம்பீரமாய் நிற்கிறது. இன்று தான் நம்முடைய மக்கள் கல்வெட்டுகளின் பெருமையை அறியாமல், இருக்கக்கூடிய கல்வெட்டுகளின் மேலேயே புதியதாக வண்ண பூச்சு பூசியும், கட்டடங்கள் எழுப்பியும் அந்த கல்வெட்டு இருந்த இடமே தெரியாதபடி செய்து, அதற்கு மேலே கிரானைட் கல்லில் இவர்கள் பெயரை எழுதி ஒட்டியும், கல்வெட்டு இருக்கக்கூடிய பகுதிகளிலேயே மின்விளக்குகளுக்கு துவாரம் அமைத்தும், குழாய்கள் செல்வதற்கு துவாரம் அமைத்தும் கல்வெட்டுகளை சேதாரம் செய்திருப்பதை பல இடங்களில் காண நேருகிறது. கல்வெட்டுகளின் அருமையை சோழர் காலத்து மக்கள் உணர்ந்திருந்ததால் தான் பாண்டிய மன்னர்கள், பல்லவ மன்னர்கள் கல்வெட்டைப் படியெடுத்து சோழப்பகுதியில் சேமித்து வைத்திருக்கின்றனர். கற்றளியாக நம் கையில் கொடுத்த இந்த அரிய கலைப் பெட்டகங்களை அடுத்த தலைமுறைக்கும் கொண்டு சேர்க்க வேண்டிய பொறுப்பு நம் தலைமுறைக்கு உள்ளது.

முடிவுக்குறிப்புகள்

1. பன்னிரு திருமுறை
2. பாபநாசம் வட்டக் கல்வெட்டுகள், 2004, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை, தொடர் எண்கள் 70-1986.
3. விழுப்புரம் மாவட்ட கல்வெட்டுக்கள், தொகுதி – 1, 2021, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை, தொடர் எண்கள் 16-2021, 40-2021
4. விழுப்புரம் மாவட்ட கல்வெட்டுகள் தொகுதி -1, 2021, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை, தொடர் எண்கள் 87/2021 & 102/2021.
5. இரா. பிரசன்னா, சித்தலிங்க மடம், 2016, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை.
6. விழுப்புரம் மாவட்ட கல்வெட்டுகள் தொகுதி -1, 2021, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை, தொடர் எண்: 213/2021.
7. செங்கல்பட்டு மாவட்ட கல்வெட்டுகள் தொகுதி 1, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை, 2023, தொடர் எண்: 91/23
8. திருவாரூர் திருக்கோயில், குடவாயில் பாலசுப்பிரமணியன்
9. தென்னிந்திய கல்வெட்டுக்கள், தொகுதி XVII எண், 617
10. நடன காசிநாதன், திருக்கோடிக்கா கல்வெட்டுகள், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை, 1992, தொடர் எண் 172/1979, 192/1979
11. தென்னிந்தியக் கல்வெட்டுகள், தொகுதி XXXIV, எண் 9,10.
12. தென்னிந்தியக் கல்வெட்டுக்கள், தொகுதி XXXIV, எண் 27.
13. தென்னிந்திய கல்வெட்டுகள், தொகுதி XVII, எண் 222
14. தென்னிந்தியக் கல்வெட்டுகள், தொகுதி XLI, எண் 41.
15. தென்னிந்தியக் கல்வெட்டுகள், தொகுதி XLI, எண் 215.
16. தென்னிந்தியக் கல்வெட்டுகள், தொகுதி XXXVIII, எண் 429.
17. நாகப்பட்டினம் மாவட்டக் கல்வெட்டுகள், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, 2007, தொடர் எண்: 20/1999
18. தென்னிந்திய கல்வெட்டுக்கள், தொகுதி 32, எண் 17.
19. தென்னிந்தியக் கல்வெட்டுக்கள், தொகுதி 32, எண் 31.
20. தென்னிந்தியக் கல்வெட்டுக்கள், தொகுதி 32, எண் 32.
21. தென்னிந்தியக் கல்வெட்டுக்கள், தொகுதி 32, எண் 46.
22. தென்னிந்தியக் கல்வெட்டுக்கள், தொகுதி 32, பகுதி 2, எண் 12.
23. தென்னிந்தியக் கல்வெட்டுகள், தொகுதி 32, பகுதி-2, எண் 52.
24. தென்னிந்தியக் கல்வெட்டுகள், தொகுதி 32, பகுதி-2, எண் 57.
25. தென்னிந்தியக் கல்வெட்டுகள், தொகுதி 32, பகுதி-2, எண் 84, 122, 123.
26. தென்னிந்தியக் கல்வெட்டுகள், தொகுதி 32, பகுதி-2, எண் 114.
27. தென்னிந்தியக் கல்வெட்டுகள், தொகுதி 32, பகுதி-2, எண் 120.

கொங்கு நாட்டுக் கல்வெட்டுளில் கூட்டமும் குலமும்

முனைவர் தி. சுப்பிரமணியன்
உதவி இயக்குநர் ப.நி.
தொல்லியல் துறை.
கிருட்டிணகிரி

ஒரு நாட்டின் சமுதாய அமைப்பு என்பது திடீரென்று உருவாவதில்லை. தொல்பழங்காலத்திலிருந்துப் படிப்படியாக வளர்ந்து சமுதாய அமைப்பு அல்லது பண்பாடு என்பது உருவானது. தொடக்கக் காலத்தில் மக்களுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட வளர்ச்சிப் படிநிலைகள் என்பது மக்கள் இயற்கைக்கு ஏற்றார் போன்று தங்களுடைய வாழ்க்கை முறையை மாற்றிக் கொண்டனர். சங்ககாலப் பாடல் இதைத்தான் “பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்” என்று கூறுகின்றது. சமுதாயம் என்பதற்கு மக்களின் கூட்டமைப்பு என்று பொருள். இச்சமுதாயம் தொல்குடி, இனக்குழு, சமுதாயம் என்றப் படிநிலைகளைக் கொண்டது என்று ஆய்வுகள் கூறுகின்றன. இத்தகைய வளர்ச்சி நிலைகள் உலகிலுள்ள பெரும்பாலான தொல்குடிகளில் காணப்படுகின்றன.

இனக்குழு அமைப்பு

ஒவ்வொரு குடியும் தங்களுடைய வாழ்க்கை முறைகளை அவர்களே உருவாக்கிக் கொண்டனர். இயற்கைச் சூழ்நிலைகளுக்கு ஏற்றார் போன்று தங்களுடைய குடிகளைக் கட்டமைத்துக் கொண்டனர். இதனால் குடி என்ற அமைப்பிலிருந்து இனக்குழு என்ற அமைப்பு உருவாவயிற்று. ஒருக்குடியில் உள்ளவர்கள் அருகிலுள்ள பிறக்குடிகளின் மேல் அதிகாரம் செலுத்த முற்பட்ட போது, அக்குடிகளுடன் சண்டை செய்து அக்குடிகளை தங்களுடைய கட்டுபாட்டிற்குக் கொண்டு வந்தானர். அதவாது பலம் வாய்ந்த குடிகள் சிறிய குடிகளுடன் சண்டை செய்து சிறியக் குடிகளைத் தங்களுடன் இணைத்துக் கொண்டன. தங்களுக்குச் சமமாக இருந்த குடிகளுடன் மணஉறவு கொண்டு புதிய குடிகள் உருவாவதற்கு வழிவகுத்தன. இதனால் பலகுடிகள் ஒன்றாக இணைந்து வாழுகின்ற வாழ்கை முறை ஏற்பட்டது.

மேலே கூறப்பட்டக் காரணங்களின் அடிப்படையில் ஒரு ஊரில் ஒரு குடியினர் அல்லது ஒரு இனத்தவர் மட்டும் வாழ்ந்த நிலை மாறி பலகுடிகள் அல்லது பல இனத்தவர் இணைந்து வாழுகின்ற வாழ்க்கை முறை வளர்ந்தது. பல குடிகள் இணைந்ததால் இதை “இனக்குழு” என்று பெயரிட்டனர். இந்த இனக்குழு அமைப்பு முறை சமுதாயம் என்ற கட்டமைப்பு உருவாவதற்கு அடித்தளமாக அமைந்தது.

குடி

ஒவ்வொரு தொல்குடியிலும் குடி என்பது அடிப்படைக் கூறு. குடி என்பது இரத்த உறவை அடிப்படையாகக் கொண்டது. ஒரு குடியில் தாய், தந்தை, மகன், மகள், பாட்டன் பேரன் என்ற உறவு முறை உண்டு. இவர்கள் அணைவரும் ஒரு குடியில் அல்லது கொடியில் இருந்து வந்தவர்கள். இவர்களுக்கு இடையில் இரத்த உறவு முறை அடிப்படையானது. இதைப் போன்று தொடக்கக் காலத்தில் பல குடிகள் இருந்தன.

இதற்குக் கூட்டம், குலம், கொத்து, கொடி, மரபு, கோத்திரம் போன்று பல பெயர்கள் காணப்படுகின்றன. கூட்டம் என்பது கொங்கு நாட்டில் அதிக அளவில் பயன்பாட்டில் உள்ளது. குலம் என்பது பொதுவாக எல்லா பகுதிகளிலும் வழக்கத்திலுள்ளது. கொத்து, கொடி ஆகியன பரவலாக பேசப்படுகிற சொற்களாக உள்ளன. கோத்திரம் என்பது பிராமணர்களிடையில் காணப்படுகின்றது. வரலாற்றுக் காலத்தில் சமயங்கள் வளர்ந்த பின்னர் சிவ கோத்திரம் என்றும் விஷ்ணு கோத்திரம் என்றும் இரண்டாப் பிரிக்கப்பட்டன.

குலம் அல்லது கூட்டம்

கூட்டச் சின்னம், குல குறியீடு ஆகிய இரண்டும் ஒரே பொருளைத் தருபவை. இக் கூட்டத்தைக் கணம் என்றும் குறிப்பிடுவர்[1]. இத்தகைய சமுதாய அமைப்பு முறை உலகிலுள்ள பெரும்பாலான ஆதிக்குடிகளிடையே காணப்படுகின்றது. இந்தியாவிலும், தமிழகத்திலும் குலகுறை அமைப்பு அலலது கூட்ட அமைப்பு முறை சங்ககாலத்திற்கு முன்பிருந்து பரவலாகக் காணப்படுகின்றது. கூட்ட அமைப்பு முறையை முதன்முதலாக அறிமுகப்படுத்தியவர் ஜே.எப். மெக்லேன்னன் (J.F. Maclennan) என்ற ஐரோப்பி ஆய்வாளராவார்[2]. தொல்குடிகளிடையில் குலக்குறியீடுகள் உள்ளன என்றும் அவை அத்தொல்குடிகளின் தெய்வங்களாக இருந்தன என்றும் தன்னுடைய ஆய்வில் குறிப்பிட்டுள்ளார். இவருடைய கருத்தின் அடிப்படையில் குலக்குறிகள் எவ்வாறு உருவாயிற்று என்பதைப்பற்றி பல ஆய்வுகள் வெளிவந்துள்ளன. உள்நாட்டு ஆய்வுகளைவிட வெளிநாட்டு ஆய்வுகள் அதிகமாக காணப்படுகின்றன. சில ஆயவுகள் மட்டும் தரப்பட்டுள்ளன.

குலச்சின்னக் கோட்பாடுகள்

1. செல்லப் பெயர்களை அடிப்படையாகக் கொண்டு கூட்டப் பெயர்கள் அல்லது குலப் பெயர்கள் உருவாயிற்று என்று எச். பென்ஸர் (H. Spencer) கருதுகின்றார். மூதாதையர்களுக்கும் அவர்களுடன் தொடர்புடைய பொருட்களும் மதிப்பும் மரியாதையும் கொடுத்தனர். அவற்றைத் தங்களுடைய

1. தேவிபிரசாத் சட்டோபாத்யாயா, “உலகாயதம்” தமிழாக்கம், எஸ். தோத்தரி, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2010, ப.194-95.

2.. J.F. Maclennan, “Primitive Marrage”, Adam and Charles Black, London, 1947, pp. 590-625.

மூதாதையர்களாகவே நம்மி வழிபட்டனர். தொல்பழங்காலத்தில் வாழ்ந்த மனிதர்களுக்கு ஒரு சில சொற்களே தெரிந்திருந்தால் இத்தகைய நிலை ஏற்பட்டது. இதுவே குலக்குறியாக மாறியது என்று குறிப்பிடுகின்றார். இனக்குழு மக்களாக வளர்ச்சியடையும் போதே கூட்டச்சின்னங்கள் உருவாயிற்று. எனவே இவருடைய கருத்து ஏற்புடையதாக இல்லை[3].

2. இயற்கைப் பொருளை வணங்குவதிலிருந்து வந்தது குலக்குறியீடு என்று லார்டு அவெபெரி (Lord Avebury) குறிப்பிடுகின்றார். வணங்கப்பட்ட இயற்கைப் பொருட்களின் பெயர்கள் முதலில் தனிமனிதனுக்கும் பின்னர் குடும்பத்திற்கும் வந்தது என்றும் தாவரங்களின் பெயர்களே கூட்டச் சின்னமாக மாறியது என்பதும் இவருடைய கருத்து. தாவரங்களின் வழிபாட்டிலிருந்து தோன்றியது என்பது பிற்காலத்திய கோட்பாடு. இது தொடக்க காலக் கோட்பாடு இல்லை.

3. ஜி. ஏ. வில்கென் (G. A. Wilhan) என்ற டச்சு நாட்டைச் சார்ந்த அறிஞர் உயிரை வெளியிலுள்ள பொருளில் வைக்கும் கோட்பாட்டை முன்வைத்துள்ளார். மனிதனுடைய உயிரை விலங்குகளின் உடலிளோ அல்லது தாவரங்களிளோ வைக்க இயலும் என்று நம்பிக்கை ஒரு காலத்தில் இருந்தது. தன்னுடைய உயிரை வேறு பொருளில் வைத்துவிட்டால் தன்னை யாராலும் கொல்ல முடியாது என்ற கருதினர். தன்னுடைய உயிர் எந்த பொருளில் (விலங்கு, தாவரம், மலை, குகை) இருக்கின்றதோ அப்பொருள் அழிந்தால் தான் தன்னுடைய உயிர் அழியும் என்ற நம்பிக்கை மக்களிடையில் இருந்தது. இது உடலுக்கு வெளியோ உயிர் (external soil) உண்டு என்ற நம்பிக்கையில் உருவானது[4]. எப்பொருளில் தன்னுடைய உயிர் இருந்ததாகக் கருதுகின்றனரோ அப்பொருளே அவக்ளுடைய குலச்சின்னமாக உருவாயிற்று என்பது இவருடைய கருத்து. இறந்தவர்ளின் உயிரையும் குலச்சின்னத்தையும் இணைக்கின்ற கோட்பாடு இது என்பது தெளிவாகின்றது. ஆனால் பல இனக்குழு மக்களிடையில் கூட்டச்சின்ன அமைப்பு இல்லாமல் உள்ளது. அவர்கள் மூதாயர்களை வழிபடுகின்ற வழக்கத்தை வைத்துள்ளனர். எனவே இக்கருத்தும் ஏற்புடையதில்லை என்று மானிடவியளார் கருதுகின்றனர்[5].

4. மூதாதையர் ஒவ்வொருவரும் தம்மை ஒரு ஆவி பாதுகாப்பதாக நம்பினர். அவர்கள் தம்மைப் பாதுகாப்பதாக நம்பிய ஆவியே அவர்களின் வழித்தோன்றல்களையும் பாதுகாக்கும் ஆவியாகக் கருதினர். அந்த ஆவி இயற்கையோடு இணைந்தவைகளான மரம், விலங்கு, செடிகள் போன்றவற்றில் இருக்கும். அவையே இவர்களுடைய குலச்சின்னங்களாக மாறின என்பது

3. க. கிருட்டினசாமி, கொங்கு வேளாளர் மாநாடு சிறப்பு மலர், 1982, ப.15 -20.
4. மேலது.
5. மேலது

ஏ.ஜி. மோரிஸ் (A.G. Morice) என்பவருடைய கருத்து. இக்கோப்பாட்டை மேலும் பல மானிடவியல் ஆய்வாளர்கள் ஒத்துக் கொண்டனர். இக்கோட்பாடு அமெரிக்காவிலுள்ள பழங்குடிகளிடையில் காணப்படுகின்றது[6]. ஆனால் உலகிலுள்ள மற்ற குடிகளுக்கு இது ஏற்புடையதா இல்லை.

5. ஜே. ஜி. பிரேசர் (J.G. Frazer) என்பவர் குலக்குறியைப் பற்றி ஆழமாக ஆய்வு செய்தவர். இவர் மூன்று கோட்பாடுகளை முன்வைத்து அவற்றில் ஒன்று மட்டும் ஏற்றுக் கொள்ளக்கூடியது என்று அவரே குறிப்பிட்டுள்ளார். இதற்குக் "கருகோட்பாடு" என்று பெயரிட்டுள்ளார்[7]. (Conceptional Theory) மத்திய ஆஸ்திரேலியாவில் சில பழங்குடிகள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு குலக்குறியை வைத்துள்ளனர். சில பழங்குடிகளில் ஒருவருக்கே மூன்று குலக்குறிகள் உள்ளன. இதற்கு இவர் குழந்தை பிறக்கும் போது தாய் எதனருகில் இருக்கிறாளோ அப்பொருளே அக்குழந்தையின் குலச்சின்னம் என்று நம்புகின்றனர். ஒரு பெண்ணுக்கு ஒரு மரத்தின் அடியில் குழந்தைப் பேற்றிற்கான வலி ஏற்பட்டால் அம்மரத்திலுள்ள ஆவியே தன் வயிற்றினுள் வந்து குழந்தையாக பிறக்கிறது என்று நம்புகின்றனர். இவர்கள் பெண் கருவுறுவதற்கு ஆணின் உறவு தேவை என்பதை அறியாதவர்கள். எனவே தாயை அடிப்படையாகக் கொண்டு குலகுறியீடுகள் உருவாயிற்று என்று கருதுகின்றார்.

எனவே ஓவ்வொரு பழங்குடியும் ஒவ்வொரு முறையில் அவர்களுடைய கூட்ட சின்ன அமைப்பு உருவாக்கினர் என்பது தெரியவருகின்றது. இந்தியாவில் கூட்ட சின்ன அமைப்பு எவ்வாறு உருவாயிற்று என்ற ஆய்வு மேற்கொள்ளப்பட்டது[8].

குலமுறை அமைப்பு

தொடக்கக் காலத்தில் ஒரே குடியில் மணம் முடிக்கின்ற வழக்கம் இருந்தது. இம்முறைகளுக்கு "அகமணமுறை" அல்லது "அனுலோமா" என்று பெயரிடப்பட்டது. ஒரு குடியில் மணமுடிக்கின்ற வழக்கத்தை விடுத்து பிற குடிகளுடன் மணம் முக்கின்ற வழக்கமும் இருந்தது. இவ்வழக்கத்தை "புறமணமுறை" அல்லது "பிறத்திலோமா" என்றும் பெயரிட்டனர். அதாவது ஒரேக் குடியில் மணமுடிக்கின்ற முறைக்கு அனுலோமா என்றும் பிறக்குடிகளுடன் மண உறவு வைத்துக் கொள்ளும் முறைக்கு பிறத்திலோமா என்றும் வழங்கலாற்று.

தொடக்கக் காலத்தில் ஒரே குடியில் மணம் முடிக்கின்ற வழக்கம் இருந்தது. காலப்போக்கில், ஒரே குடியில் மணம் முடித்தவர்களுக்குப் பிறக்கின்ற

6. தேவிபிரசாத் சட்டோபாத்யாயா, 2010, ப.112-15.
7. J.G. Frazer," The Golden Bough", Macmillon & Co.Lid. London,1967, pp. 125-30.
8. தேவிபிரசாத் சட்டோபாத்யாயா, "உலகாயதம்" தமிழாக்கம், எஸ். தோத்தரி, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2010, ப.194-95.

குழைந்தைகள் பலவீனமாகவும், அங்கக்குறைபாடுகளுடனும் பிறப்பதை உணர்ந்தனர். இரத்த உறவு உடையவர்களுடன் மணம் முடிப்பது தவறு என்தை உணர்ந்தனர். மேலும் ஒரேக்குடியில் மணவுறவுக் கொள்வது மிருகங்களைப் போன்ற செயல் என்பதைச் சங்ககாலத்திந்கு முன்பே மக்கள் உணர்ந்தனர். மிருகங்கள், பறவைகள் போன்ற உயிரினங்களிடையில் இனவிருத்தி செய்வதில் உறவு முறை என்பது கிடையாது. ஆனால் ஆறிவுப் பெற்ற மனித இனம் இச்செயல் தவறானது என்றும் மிருகங்களுக்கு இணையானது என்றும் முதன் முதலில் உணர்ந்தனர். எனவே பிறக்குடிகளுடன் மணஉறவு கொள்ள வேண்டும் என்ற கட்டுபாட்டைக் கொண்டு வந்தனர். இதனால் வேறு குடிகளுடன் மண உறவு வைத்துக் கொள்ளும் எண்ணம் உருவாயிற்று.

இரத்த உறவுடைய குடியிலேயே மணம் முடிப்பது மிருகங்களைப் போன்ற செயல் என்பதாலும், இவர்களுக்கு பிறக்கின்ற குழந்தைகள் உடல் ஊணமுற்றவைகளாகப் பிறக்கின்ற காரணத்தாலும் வேறு குடிகளுடன் மணவுறவை ஏற்படுத்திக் கொண்டனர். இதனால் ஒவ்வொருக் குடிக்கும் தங்களை வேறு குடிகளிடமிருந்து அமையாளம் படுத்த ஒவ்வொரு அடையாளம் தேவைப்பட்டது. இதற்காக கூட்டச் சின்னங்கள் உருவாக்கப்பட்டன என்று தப்போது கிடைத்துள்ள சான்றுகளின் அடிப்படையில் தெரியவருகின்றது.

1. இக்குலமுறை அமைப்பு இந்தியாவிலுல் மற்றப் பகுதிகளிலும் காணப்படுவதைவிட கொங்குநாட்டில் அதிக அளவில் இன்றும் வழக்கத்தில் உள்ளது. கொங்குநாட்டில் கிடைக்கின்ற கல்வெட்டுகளின் அடிப்படையில் குலமுறை அமைப்பு எவ்வாறு வழக்கத்தில் உள்ளது என்பது சுருக்கமாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

2. ஒரே குடியில் மண உறவு கொள்வது தவறு என்ற உணர்ந்ததால், ஒவ்வொரு குடியும் தங்களைப் பிறக்குடிகளிடமிருந்து வேறுபடுத்திக் காட்ட அல்லது தங்கள் குடியை அமையாளப்படுத்த முற்பட்டன. அதற்கு அவர்களுடைய மூதாதையர்களை முன்நிறுத்தினர். அதற்கு அக்குடியில் அல்லது இனத்தில் நடைப் பெற்ற நிகழ்கழ்வுகள் அந்த இனம் தோன்றுவதற்கு காரணமாக அமைந்தது என்று நம்பினர்.[9]

பெரும்பாலான ஆதிக்குடிகள் முதாதையர்களுக்கு உதவிய மிருகங்கள், தாவரங்கள், மரங்கள் போன்றன மூதாதையர்கள் வாழ்க்கைக்குக் துணை நின்றன என்று நம்பினர். பின்னர் இதுவே அவர்களுடைய சந்ததிகளையும் காக்கும் என்றும் அவர்களுக்குத் துணையாக இருக்கும் என்றும் நம்பினர். இத்தகைய நம்பிக்கை அவர்களுடைய குடி வழிமுறைக்கு வித்திட்டது என்று நம்பினர். இவையே அவர்களுடைய குலச்சின்னங்களாக (Totem) மாறின.

9. முனைவர் தி. சுப்பிரமணியன், "தமிழக அகழாய்வுகளின் அடிப்படையில் இனக்குழு சமுதாயம்" என்ற ஆய்வுக் கட்டுரை, 2014.

ஒரு குடியில் பிறந்தவர்கள் தங்களைச் சகோதர கூட்டம் அல்லது சகோதர குலங்கள் என்றும் மண உறவு கொண்ட குலம் மாமன் மச்சான் குலம் என்று வகைபடுத்தப்பட்டன. குலமுறையில் அணைவரும் சமம். கூட்டத்தாரிடையில் நிலவிய சமத்துவம், சகோதரத்துவம் அவர்களுடைய ஒற்றுமைக்கு வழிவகுத்தது. இவர்களிடையில் ஏற்றத்தாழ்வுகள் இல்லை. இம்முறை தற்போது இல்லை.

சங்ககாலக் குடிகளும் குலங்களும்

சங்ககாலம் என்பது பெருங்கற்காலம் அல்லது இரும்புக்காலம் என்ற காலத்திலிருந்து வளர்ச்சியடைந்தது. பெருங்கற்காலம் சுமார் 3000 ஆண்டுகளுக்கு முற்பட்டது. பெருங்கற்காலம் என்பது நாகரிகத்தின் தொடக்ககாலம். எனவே சங்ககாலத்தில் பாடப்பட்டப் பாடல்களில் பெருங்கற்கால சமுதாயம் பற்றிய குறிப்புகள் அதிகம் காணப்படுகின்றன. அவற்றில் ஒன்று குடியுமைப்பு முறை. பெருங்கற்காலத்திலிருந்த குடிகளைப் பற்றியும் குடிகளின் குறியீடுகள் பற்றியும் இலக்கியங்களில் பல செய்திகள் காணப்படுகின்றன. அவற்றில் சில செய்திகளில் மட்டும் இந்த ஆய்விற்குச் சான்றுகளாகக் காட்டப்பட்டள்ளன.

சோழர்களின் தலைநகரமான உறையூரில் யானைக்கும் கோழிக்கும் நடைபெற்ற சண்டையில் கோழி வென்றதாகவும், யானை தோற்றதாகவும் இலக்கியம் கூறுகின்றது. இது நடைமுறையில் இல்லாத செயல். இதைக் குலமுறை சமுதாயமாகக் கொண்டால் பொருள் விளங்கும். யானைக் கூட்டத்திற்கும் கோழிக் கூட்டத்திற்கும் இடையில் நடந்த சண்டையில் கோழிக்கூட்டத்தினர் வென்றனர் என்றால் பொருள் விளங்கும். கோழிக் கூட்டத்தார் வென்றதால் அந்த ஊருக்குக் கோழியூர் என்று பெயர் வந்தது. புறநானூற்றுப் பாடல் ஒன்று "கோழியனே கோப்பெரு சோழனே"[10] என்று குறிப்பிடுகின்றது. எனவே கோழியர் என்பது சோழனின் குலப் பொருள். எனவே சோழர்கள் உறையூரை வென்றனர் என்று பொருள். (புறம். 212)

திருவானைக்கா புராணம் கூறும் செய்தியையும் கவனிக்க வேண்டியுள்ளது. திருவானைக்காவில் உள்ள சிவப்பொருமானுக்கு யானை நாள்தோறும் தும்பிகையில் நீர் கொண்டு வந்து தெளித்து வழிபாடு செய்து வந்தது. சிலந்தி ஒன்றும் அதே சிவன் மேல் தூசி விழாமலிருக்க கூடு கட்டி தரிசித்து வந்தது. ஒருநாள் யானை தெளித்த நீரால் சிலந்திக் கூடு சிதைந்தது. சிலந்திப் பூச்சி சினமடைந்து யானையின் தும்பிக்கையினுள் நுழைந்தது. இதனால் யானை தன் தும்பிக்கையை பாறையின் மேல் மோதி யானையும் சிலந்தையும் உயிர் நீத்தன. யானைசிவலோகம்அடைந்தது.சிலந்திசோழமன்னன்கோப்பெருங்செங்கனாக மறுபிறவி எடுத்ததாகப் புராணம் கூறுகின்றது. இதைவிடுத்து அருகருகே

10. புறநானூறு, உ. வே. ச. பதிப்பு, பா.212.

வாழ்ந்த யானைக் கூட்டத்தாருக்கும் சிலந்தி கூட்டத்தாருக்கும் நடைபெற்றச் சண்டையில் இரண்டு கூட்டத்தாரும் அழிந்தனர் என்று பொருள் கொள்ளலாம்.

மற்றொரு புறநானூற்றுப் பாடலில் அதியமான் என்ற அரசன் தன்னைச் சுற்றியிருந்த எழுவரை வென்றான் என்று குறிப்பிடுகின்றது. எழுவர் என்று கூறும் போது அவர்ளுடைய பெயர்களைக் குறிப்பிடாமல் அவர்களுடைய குலபெயர்களை மட்டும் குறிப்பிட்டுள்ள முறை நோக்கத்தக்கது. சங்ககாலத்தில் குடிகளைக் குறிப்பிடம் போது குல சின்னங்களையும் குறிப்பிடுவதும் வழக்கமாக இருந்தது. எனவே சங்ககாலத்தில் குடியமைப்பும் குல சின்னங்களும் சமுதாயத்தில் இருந்தன என்று கூறலாம்.[11] பின்னர் அச்சின்னங்கள் அரசர்களுடைய கொடிகளாகவும், காவல் மரங்களாகவும் வளர்ந்தன. பாண்டியர்களின் மீன்கொடி, சேரர்களின் வில் கொடி, சோழர்களின் புலிக்கொடி ஆகியன குலக்குறியை அடிப்படையாகக் கொண்டு வந்தவை. எனவே பெருங்கற்காலத்தில் தொடங்கிய குலக் குறியீடுகள் சங்ககாலத்திலும் இருந்தன என்பதைச் சங்க இலக்கியங்கள் பகருகின்றன. இதனுடைய தொடர்ச்சி இன்றுவரையில் சமுதாயத்தில் காணப்படுகின்றது. குலம் தெரிந்து பெண் கொடு என்பது இதிலிருந்து வந்தததது.

கொங்குநாட்டுக் கல்வெட்டுகளில் குலம்

கொங்குநாட்டில் சுமார் 150க்கும் மேற்பட்ட கூட்டங்களின் பெயர்கள் வழக்கில் உள்ளன. இப்பகுதியில் கிடைக்கின்ற கல்வெட்டுகளில் இக்கூட்டங்களின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன. பெருங்கற்காலத்திலும் ஈமச்சின்னங்கள் குலமுறை அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளன என்பது கொடுமணல் அகழாய்வுகள் கூறுகின்றன.[12] அரசமரபினர் வெளியிட்டக் கல்வெட்டுகளில் கூட்டங்களின் பெயர்கள் அதிக அளவில் காணப்படவில்லை. ஆனால் பிறக்கல்வெட்டுகளில் கூட்டச்சின்னங்களின் பெயர்கள் அதிக அளவில் காணப்படுகின்றன.

பழமங்கலம் நடுகல் கல்வெட்டு

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், பழமங்கலம் கல்வெட்டு ஒரு பாடல் வடிவில் அமைந்த நடுகல் கல்வெட்டு. இதை வேடன் கல் என்று இப்பகுதி மக்கள் கூறுகின்றனர். இக்கல்வெட்டு கிபி.11ம் நூற்றாண்டைச் சார்ந்தது.[13] (217 1977)

“வாய்த்த புகழ் மங்கலத்து வந்தெதிர்த்த மாற்றலாரைச்

சாய்த்தமருள் வென்ற சயம்பெருக சீர்த்தபுகழ்

11. மேலது, பா.99.

12. முனைவர் தி. சுப்பிரமணியன், “தமிழக அகழாய்வுகளின் அடிப்படையில் இனக்குழு சமுதாயம்“ என்ற ஆய்வுக் கட்டுரை, 2014.

13.. புலவர் செ.இராசு, தமிழ்க் கல்வெட்டுப் பாடல்கள். கொங்கு ஆய்வு மையம், ஈரோடு, 2016, ப. 8.

நிக்கும் வணம் கல்பொறிக்கப் பட்டான் கரையகுலம்

சொக்கனேந்தலே உலகில் தான்.

இக்கல்பொறிப்பு இரட்சிப்பான் எந்தலெ மேலே"

காரை குலம் என்ற குலத்தைச் சேர்ந்த சொக்கநேந்தல் என்பவன் பகைவர்களுடன் போரிட்டு வென்றாதால் அவனுக்கு நடுகல் எடுக்கப்பட்டது என்பதை இப்பாடல் கல்வெட்டுக் கூறுகின்றது. முதலில் குலத்தின் பெயரைச் சொல்லி அதன் பின்னர் வீரனின் பெயரைக் குறிப்பிடுகின்ற வழக்கம் இருந்தது என்பதை இக்கல்வெட்டு குறிப்பிடுகின்றது. எனவே குலம் இப்பகுதியில் முதன்மை பெற்றுள்ளதை இக்கல்வெட்டு கூறுகின்றது.

ஆனூர்ரம்மன் கொயில் கல்வெட்டு

திருப்பூர் மாவட்டம், காங்கேயம் வட்டத்திலுள்ள ஆனூரம்மன் கோயிலின் கோபுரமண்டபத்தில் உள்ள கல்வெட்டில் பயிரகுலம் என்றக் குலம் இடம் பெற்றுள்ளது.

"உயருபுகழ் ஆனூர்வாழ் உத்தமி மண்டபம கட்ட உவந்து வந்து

பயிரகுல பெரியோர்கள் பணம் மட்டும் தான் கொடுத்தார் பணியாளர்ருக்கு

வயிறுநிறைய சோறும் வாய்க்கு வெற்றிலை பாக்கும் வாங்கித் தந்து

தயிரோடு மூவேளையிட்ட தரமமிது அழகன் சர்க்கரைய" [14]

ஆனூரம்மன் கோயிலில் மண்டபம் கட்டிய செய்தி இக்கல்வெட்டில் காணப்படுகின்றது. பயிரகுலத்தைச் சார்ந்தவர்கள் கோயிலில் மண்டபம் கட்டிய பணியாலர்களுக்கு பணம் கொடுத்ததுடன், வாயிக்கு வெற்றிலை பாக்கும் கொடுத்ததை இக்கல்வெட்டு குறிப்பிடுகின்றது. மண்டபம் கட்டியவர்களில் பெயர்களின்றி அவர்களுடையக் குலம் மட்டும் குறிப்பிட்டுளளது. எனவே குலம் முதன்மை பெறுகின்றது.

குண்டெலி குலம்

கி.பி.1270 ஆதியூர் ஆதீஸ்வரமுடையார் மேற்குச் சுவர் குறும்பு நாட்டு வெள்ளாளரில் குண்டெலி குல பிள்ளையாண்டான் செய்த தானம் வெட்டப்பட்டுள்ளது. இக்கோயிலில் மேலூம் மூன்று கல்வெட்டகளில் குண்டெலி குலத்தைச் சாந்தவர்கள் தானம் செய்த கல்வெட்டுகளும் காணப்படுகின்றன.[15]

---

14. புலவர் செ.இராசு, தமிழ்க் கல்வெட்டுப் பாடல்கள். கொங்கு ஆய்வு மையம், ஈரோடு,2016, ப.122.
15. ஈரோடு மாவட்டக் கல்வெட்டகள், தொகுதி 2, தமிழகத் தொல்லியல் துறை, சென்னை, ப. 3

தேவந்தைகள் குலம்

ஈரோடு மாவட்டம் பெருந்துறை வட்டம் குன்னத்தூர் லச்சுமிநாராயணபெருமாள் கோயிலில் கி.பி.1312 ஆண்டு குன்றத்தூர் வெள்ளாரில் தேவெந்தைக் குல நஞ்சுண்டன் என்பவர் இக்கோயிலில் விளக்கு எரிக்கப் பத்துப் பணம் தானமாக கொடுத்த செய்தி உள்ளது.[16] இதே ஊரிலுள்ள குன்னபுரீஸ்வரர் கோயிலில் கி.பி.1282ல் குறும்பு நாட்டுச் சிறுவலூரைச் சார்ந்த சாத்தந்தை குலத்தைச் சேர்ந்த கேசன் என்பவனின் மனைவி இரண்டு நிலைகால்கள் இக் கோயிலுக்கு தானமாகக் கொடுத்துள்ளார். விஜயமங்கலுத்திலுள்ள கருமாணிக்கபெருமாள் கோயில் கருவறையிலுள்ள கல்வெட்டு கி.பி. 1217ம் ஆண்டைச் சார்ந்தது. விஜயமங்கலத்து வெள்ளாளர்களில் சாத்தைந்தை குலத்தைச் சார்ந்த தேவன் என்பவன் அமுதுபடிக்கு 29 அச்சு தானமாகக் கொடுத்த செய்தி இடம்பெற்றுள்ளது. எனவே இப்பகுதியில் சாத்தந்தை குலத்தைச் சார்ந்தவர்கள் அதிகம் இருந்தனர் என்பது தெரியவருகின்றது.[17]

ஈரோடு மாவட்டம் பெருந்துறை வட்டத்தில் வெள்ளோடு என்ற ஊரிலுள்ள சர்வலிங்கேஸ்வரர் கோயின் மகாமண்டபத்தின் வடக்குச் சுவரில் கி.பி.16ம் நூற்றாண்டைச் சார்ச்த கல்வெட்டு ஒன்று வெட்டடப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு வீரநஞ்சராய உடையார் காலத்தியக் கல்வெட்டு. இக்கல்வெட்டில் இப்பகுதியிலிருந்த வெள்ளாளர்களின் குலப் பெயர்கள்20க்கும் மேற்பட்டவை காணப்படகின்றன.

கல்வெட்டின் வாசம்[18]

1. ஸ்வஸ்திஸ்ரீமந் மகாமணடலேஸ்வரன் ஸ்ரீவீரநஞ்சராய உடையார் இராசகாரியத்துக்குக் கடவதான வீரநஞ்சராயதேவற்கு செல்லாநின்ற காலத்து மேல்கரைப் பூந்துறை நாட்டு நாட்டவரோம் நிறைவற நிறைந்து குறைவறகூடி இருந்து எங்கள் நாட்டு வெள்ளோட்டு சருவேஸ்வரமுடைய தம்பிரானார்க்கு தரும சாதனம் பண்ணிக்

2. குடுத்தோம் சந்திராதித்தவரையில் குறைவறுப்புக்கும் தைமாசம் ஒரு நாளை இறை உவப்புக்கும் செல்லும் வெச்சமும் நாளொன்றுக்கு அமுதுபடி நாநாழி பருப்பு நாழி நெய்படி ஆறுபழம் இருபது படி வெல்லம் நாலு எண்ணெய் படி மூன்று மிளகு படி அரை உப்பு படி இரண்டு தேங்காய் ஆறு இளநீர் பத்து காக்கு நூறு வெற்றிலை இருநூறு மஞ்சள் பலம் பதினொன்று சந்தனம் கற்பூரம் பரிமளம் பலம் இருபத்த நாலு

16. மேலது., ப.47
17. மேலது., ப.47
18.. ஈரோடு மாவட்டக் கல்வெட்டுகள், தொகுதி 3, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சேன்னை, 2010, ப.94, 96.

3. உடையார் நாச்சியார் நாயகர் நாச்சியார்க்கும் பரிவட்டத்துக்கும் பணம் இருபதுக்கு நாற்பது பிராமண போஜணத்துக்கு படி பதினஞ்சு இந்த பதினோரு நாளைக்கு அமுதுபடி நாற்பத்தெட்டு நாழி பருப்பு பதினொரு நாழி நெய்பதினாறு நாழி பழம் இருநூற்று இருபது வெல்லம் நாற்பது நாழி தேங்காய் நூற்று எழுபத்தாறு மிளகு படி ஆறு நல்லெண்ணெய் எட்டு நாழி வெண்ண நூற்றுஎழுபத்தாறு நாழி பரிமளம்

4. ஆயிரத்தெட்டும் இம்மருவாதி இந்த குறைவறுப்பு நாடு முப்பத்திரண்டு ஊரோமும் சந்திராதித்த வரை நடத்தும்படி கல்வெட்டிக் குடுத்தொம் இத்தன்மைக் காத்தான் எங்கள் தலைமேல் இத்தன்மம் விலக்கினவன் ஏழெச்சம் அறுவான் இப்படிக்கு பூந்துறை வெள்ளாளன் மேலைச் சாகாடைகளில் அப்பியான் எழுத்து இப்படிகது வெள்ளோடு வெள்ளாளன் பயிறர்களில் பிள்ளையாண்டான் எழுத்து மேற்படி

5. ஊரில் சாத்தந்தைகளில் கனபுர வேளான் பெரியண்ணன் எழுத்து இப்படிக்கு நசியனூரில் வெள்ளாளர் கண்ணர்களில் அழைப்பிச்சான் எழுத்து இப்படிக்கு ஈரோடு செட்டி சமயமந்திரி கெம்பையன் எழுடதது இப்படிக்கு சாத்தனூரில் வெள்ளாளன் வண்ணக்கரில் சிவமலை எழுத்து இப்படிக்கு காளமங்களத்து வெள்ளாளன் கண்ணர்களில் தேவணன் எழுத்து இப்படிக்கு பிடாரி ஊரில் வெள்ளாளன் பிளந்தைகளில் உலகுடையான் எழுத்து

6. இப்படிக்கு பெருந்துறை வெள்ளாளர்களில் எருமைகளில் உலகுடையான் எழுத்து இப்படிக்கு எழுமாக்தூர் வெள்ளாளன் பனங்காடர்களில் பெரியண்ண காகுத்தார் எழுத்த இப்படிக்கு இலவமலையில் வெள்ளாளன் சாத்தந்தைகளில் சடையர் எழுத்து இப்படிக்கு மங்களத்து வெள்ளாளர்ன் பில்லர்களில் சூரியதேவன் எழுத்து இப்படிக்கு மொடக்குறிச்சியில் வெள்ளாளன் தூறர்களில் ஆவுடையான் எழுத்து இப்படிக்கு அனுமன்பள்ளியில் வெள்ளாளன் செல்லர்களில் பத்தயன் எழுத்து

7. இப்படிக்கு பாண்டி வேட்டுவரில் புலிகுத்தி தேவன் எழுத்து இப்படிக்கு கிழாம்பாடியில் வெள்ளாளர் கண்ணர்களில் கண்ணப்தேவன் எழுத்த இப்படிக்கு கரைய வேட்டுவரில் குன்னியாடவர் எழுத்து இப்படிக்கு குழாநிலையில் வெள்ளாள வேட்டுவரில் நல்லணன் எழுத்து இப்படிக்கு நசியனூரில் வெள்ளாளன் செம்பர்களில் பச்சையான் எழுத்த இப்படிக்கு முருங்கை பெருந்தொழு நல்ல பெருமாள் எழுத்து

8. இப்படிக்கு பழமங்களத்து வெள்ளாளன் ஆடர்களில் நல்ல பெருமாள் எழுத்து இப்படிக்கு ஆவியூரில் படைத்தலைகளில் பொன்னாண்டான் எழுத்து இப்படிக்கு தையூரில் வெள்ளாளன் தனஞ்சுகளில் தாய்க்கு

நல்லான் எழுத்து இப்படிக்கு பாரியூரில் சேந்த செட்டி கணக்கன் எழுத்து இப்படிக்கு ஈசையூரில் வெள்ளாளன் ஈஞ்சகளில் சிறவப்பன் எழுத்து

9. இப்படிக்கு முப்பத்திரண்டு ஊரவர் சொற்படிக்கும் கையெழுத்துப்படிக்கும் இந்த தர்ம சாதனம் எழுதினேன் பூந்துறை நாட்டு வெள்ளோட்டு தருளக்கினிய கவுசிக கோத்திரத்தில் நாட்டுக் கணக்கு திருமலைநாதர் கோபப்பன் எழுத்து.

மேலே கூறப்பட்டவற்றின் அடிப்படையில் கொங்கு நாட்டுக் கல்வெட்டுகள், அகழாய்வுகள்[19] ஆகியவற்றின் அடிப்படையில் கீழ்கண்ட முடிவுகளைக் கூறலாம். குடி என்பது சமுதாயத்தின் அடிப்படை அங்கம். இது இரத்த உறவை அடிப்படையகக் கொண்டது. இரத்த உறவுடைய குடியிலேயே மணம் முடிப்பது மிருகங்களைப் போன்ற செயல். எனவே வேறு குடிகளுடன் மணவுறவை ஏற்படுத்திக் கொண்டனர். இரத்த உறவு உடைய குடிகளுக்கிடையில் மண உறவை நிறுத்தவதற்கு ஒவ்வொருக் குடிக்கும் அடையாளம் தேவைப்பட்டது. இதற்காக கூட்டச் சின்னங்கள் உருவாக்கப்பட்டன. இக்குலச்சின்னங்களின் அடிப்படையில் ‘பங்காலி கூட்டம்’, ‘மாமன் மச்சான் கூட்டம்’ என்ற உறவு முறையை பிரிக்க முடியும் என்று எண்ணினர். தொல்பழங்கால மக்கள் இக்குறியீடுகளை இயற்கையோடு தொடர்புபடுத்தினர். அக்காலத்தில் பிறப்பு, இறப்பு ஆகியவற்றைப் பற்றித் தெரியாததால் மூதாமையர்களோடு தொடர்புடையவை, அவர்களுடைய குலச்சின்னங்களா வைத்துக் கொண்டனர். உதாரணமாக காடைக் கூட்டததார் கடையை குலதெய்வமாக வழிபடுகின்றனர். அதைக் காடைஈஸ்வரமுடையார் என்று வழிபடுகின்றனர். குலச்சின்னங்கள் இல்லாத ஒருசிலக் குடிகளும் இந்தியாவில் உள்ளன. இக்குடிகள் இறந்தவர்களுக்கு செய்கின்ற ஈமக்காரித்தின் நாட்களை அடிப்படையாகக் கொண்டு எந்த பிரிவைச் சார்ந்தவர்கள் என்று வகைபடுத்திக் கொண்டனர்.

19. புமுனைவர் தி. சுப்பிரமணியன், “தமிழக அகழாய்வுகளின் அடிப்படையில் இனக்குழு சமுதாயம்“ என்ற ஆய்வுக் கட்டுரை, 2014.

Ācārya Sundara Pāṇḍya

Padmavathy
Senior Epigraphist (Rtd)

One of the famous Pāṇḍya kings called Māravarman Arikēsari ruled in the period of 624 to 674 AD.He was the 4th king of the early Pāṇḍyas.

1. Kadunkon 2. Māravarman Avanisulamani

3. Chezhiyan Sēndan 4. Maravarman Arikesari

After him, there were nine Pāṇḍya kings ruled. I inserted the Pāṇḍyan Sadaiyamāran, according to Dr.Vedachalam's yesterday paper, I too accepted the theory even earlier.

The period, which the pāṇḍyas who ruled after declining the kalabhras and before the arising of Chola's power, i.e by Rajaraja Chola I, is called early pāṇḍyas period.

Now our hero is the 4th king Māravarman Arikesari.

Saint Sundaramūrty Nāyanār sung in his Thiruttonda Thogai as *நெல்வேலி வென்ற நின்றசீர் நெடுமாறன்*. In periya puranam, Sekkizhar depicts Pāṇḍyan alais Nadumaran Sundara Pāṇḍyan not as eminent scholar in the Sastra's like Vedantha and Mīmamsa.

The two authorities of Thiruñāna Sambandhar and Sekkizhār giving the pictures of this ruler only as a staunch Jaina in the beginning and later turned to be an ardent Saiva.

One of the Pāṇḍyan copper plates of Sinnamanur big copperplate describs him as *சகல சாஸ்திரக் கடலைக் கடக்கும் மாலுமி போன்ற சுந்தரபாண்டியன்*. He has existed as a scholar in all sastras. The idea intended there seems to be that the king was not only well versed both in the Jaina Sastra and Saiva, along with that he was also well – versed in all sastras.

So our Māravarman Arikēsari was also known as Sundara Pāṇḍya.

In Vaigai -bed inscription of Sēntan Māran i.e Māravarman Arikēsari [Sundara Pāṇḍya] is described as that he created many agraharas and performed numerous Mahādanas such as Hiranya Garbha, gosahasra and tulabhara. The Velvikudi

copperplate also reveals the same performances done by him. From these references we came to know that the Pāṇḍya King Māravarman Arikēsari was well versed in Vedic literatures and ritual activities also along with the knowledge of Jainism and Saivism.

Approximately 25 years before I came to know through a book review in Indian Express, that a Sanskrit work named Needhitvi Sastiga edited by Dr.Jayasree. And she suggests that this author could be identical with the Vedantic Sundara Pāṇḍya quoted by Sri Sankara.

From that moment, I became very curious to know about him more and more.

In this circumstances, when I met Prof.Sankara Narayanan, a well known scholar worked in Asi, University of Thirupathi Devasthanam and theosophical society Adyar, gave me some book - Lets and one of them is "Sundara Pāṇḍya an early Advaita Ācārya"

We know that Sri Sankara Bhagavath bāda Ācārya's Bhashyam on the Sariraka sutra of Batharayana is world famous.

In this treatise, Saman Vayādhi Karana is the most important one.

In this section, while concluding his discussion, which is very lengthy one, the Acarya cites three brilliant verses at the last, by way of silencing once for all his formidable philosphers of the Mimamsa school and the Pro-Mimamsa who is ekadesin of Advaita school. He does not reveal the source of three verses which he used.

Thus the great Ācharya undertakes an all-out effort to refute and vanquish both the formidable opponents of early Mimamsakas. Without mentioning the name of the author of three verses, he stated, "they also say" (api cāhuh).

We heard the words of *என்ப, என்மனார் புலவர், என்றிசினோரே* from *தொல்காப்பியம்* and Nannul. Like that our Ācāryā's api-cāhuh, "they also say" without indicate the name of the earlier authors. Then how can we findout the author of the three verses.

Prof. Sankara Narayanan turned to the other scholarly works.

The great scholar Vāsaspati Misra(AD 900) and other commentators like Anandagiri, Ramananda, Praga Dārtha Kāra etc also followed the same path. None of them mentioned the author of the three verses cited by the great Bhāshyakara (Sri Sankara).

Prakasātman the renowned authors of the commentary Vivarna on the Pañchapādika, skips over this point in his commentary.

At last our Prof. Sankara Narayanan the author of an article "Sundara Pāndya. An early Advaitācārya" find out the author of three verses cited by the Bhagavath pada Ācharya Sri Sankara.

A later commentary on pañchapadika titled Prabōdha Parisōdhani by the commentator Ātmasvarupacārya (AD13) records that in the above passage the pañcapātika-kara attributes these three verses to an author called Sundara-Pāndya.

He also gets a support from an another famous author Madhava Mantrin (AD 1300) who has written a commentary Tātparya Dipika on the Suta Samhita. In this work, Mādhava Mantrin admits that the three verses and calls it as a Vārttika written by Ācārya Sundara Pāṇḍya.

Another new later Drāvidacārya named Abhinava-Drāvidacārya also admits that the Ācarya cites the three verses of an ancient Drāvidacārya-Sundara Pāndya.

"Kathitārtha-parām dravidācārya-krtām api ceti gurur vadati gāthām."

Apart from these, there are some sources which reveals the fact regarding this.

On the basis of all these evidences it is possible to conclude that the author of the three verses cited by Sri Sankara was certainly an early Advaitācārya Sundara Pāndya, who was a Dravidācarya, i.e. a teacher hailing from Dakshinadesa (South India).

It must have been taken from his work Chandogya Vārttika Bhāshya [which] is lost now. That is called Sundara Pāndya Vārttika.

He was the venerated, early tradition of Advaidin's hold, and in high esteem, endows him the unique title of Dravidācārya.

Our Sundara Pāṇḍya's contribution is not only to the Vedāntha Sāstra, but also to the Mimamsa Sāstra.

The highly venerable author of Mimamsa *Varttika, Kumarila* Bhatta (AD 600) in his famous *Tantra Varttika,* conducts a lengthy investigation on his view in *Balabaladhikarana*, a section of *Purva Mimamsa.*

In the course of his discussion, Kumarila Bhatta cites some five brilliant verses in Anustubh metre for substantiating a conclusion of his, on a given point.

He also does not mention the author of the five verses says (āha ca) 'one also says':

'Vriddhānam sloka pañcakam pathati - āha ca iti'

Another commentator Amalananda Yati (13 AD)attributes these five verses to Ācārya Sundara-Pāṇḍya:

'āha cātra nidarśanam

ācarya-Sundara Pāṇḍyah'

In this way we come to know that there were two Sundara Pāṇḍyas-the one was a great Vedantin whose three verses are cited by Sri Sankara and the other was a great Mimamsaka, whose five verses are quoted by Kumarila Bhatta.

Prof. Kuppuswami Sastri in his Thesis after doing his research, identifying Sundara Pāṇḍya the Vedantin and the same Sundara Pāṇḍya the Mimamsaka.

Sekkizhar says that he was an ardent Saivite. But there is no Archaeological evidence. I am searching in the epigraphical evidences. But I could not find out.

After the discovery of Ilaiyan Puththur Copper Plate, I find out the truth, that he supported the Saiva faith also. This copperplate was issued by him also. *சந்திரசேகரனாக விளங்கும் சிவபெருமானுக்கு மகிழ்ச்சியுடன் களக்குடி போன்ற ஊர்களில் அரிகேசரி ஈஸ்வரம் என்ற தன் பெயரால் கோயில்கள் பல செய்தமையைக் குறிக்கின்றான் சுந்தரபாண்டியன் என்ற அரிகேசரி.*

ஹிரண்ய கர்ப்பம் துலாபாரம் போன்ற சடங்குகள் செய்து தானங்கள் அளித்த செய்தியையும் கூறுகின்றான். வைகைக்கரைக் கல்வெட்டிலும் ஏனாதி கல்வெட்டிலும் இதே செய்தியைக் குறிப்பிடுகின்றான். – The Coppar plate editors written these truths.

Though our Sundara Pāṇḍya's work is lost, scholars have successfully traced 8 passages or ideas of this brilliant author, it referred to in various Advaita works.

Skanda-Purana

The author of the Article quotes from an interesting Skanda Purana verses. Our Bhardhavarsa divided into two parts:

(1) The land lying south of the Vindhya mountains. and (2) the land lying north of the Vindhya mountains.

Southern land is divided into five: (1) Karnātaka, (2) Drāvida, (3) Kūrjara,

(4) Maharāstra, (5) Āndra

This is called Dravida pañca i.e. Pañca Drāvida.

Northern land is also divided into five: (1) Sārasvatah, (2) Kanya Kubjah,

(3) Gauḍa, (4) Maithila, (5) Kōsala

This is called Pañca Gauḍa

So our Bharada Varsa divided into two parts.

Southern part of Vindhya - was Pañca dravidạ and Northern part of Vindhya - was Pañca gauda. Now the matter is - Therefore the epithet Dravidācārya was intended to describe Sundara Pāṇḍya as a teacher belonging to the entire Dakshina patha, consisting of the five Draviḍās.

And the title Gauḍapāda was meant to depict Sri Saṅkara's grand preceptor Batharayana as a teacher of the whole Āryavarta comprising the five Gauḍa-s.

Dr. Marxia Gandhi in her yesterday's talk indicated the concept of Pañca drāviḍa in the 12th century work of Rājadaraṅgini.

Even though the *Skanda Purāna,* a later work, tells an interesting verses of the above said concepts.

The Skanda Purāna poem runs like this:

Karnātā drāviḍās caiva

Gūrjara rāshtra vāsināh

Andhrās ca drāviḍa pañca

Vindhya daksina-Vāsinah

Sārasvatah Kanyakubjāh

Gauḍa-maithila-Kosālāh

pañca gauḍhā iti Khyātāh

Vindhyāsyottara-Vāsinah